
இஸ்லாமிய வரலாறு: 6

ஆப்பிரிக்காவில் முஸ்லிம் ஆட்சி



ஸித்தி உக்பா பள்ளிவாசல் கய்ரவான்

வளர்மதி பதிப்பகம், தென்னூர், திருச்சி.

ஆப்பிரிக்காவில் முஸ்லிம் ஆட்சி

ஆசிரியர் :
ஸையித் இப்ராஹீம் எம். ஏ., எல். டி.,
ஜமால் முஹம்மத் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

★

வளர்மதி பதிப்பகம்
தென்னூர், :: திருச்சிராப்பள்ளி.

முதற் பதிப்பு : 1967

விலை ரூ. 3-00

10.9 கி. கி. டபுள் கிரவுன் வெள்ளைத்தாளில்
அச்சிடப்பெற்றது.

★

இம்பீரியல் அச்சகம், 1, பெரியகம்மாளத்தெரு, திருச்சி-8.
போன் : 2251

முன்னுரை

சிலபோது ஆப்பிரிக்கா கண்டத்தின் ஸஹரா பாலையினின் சுடுமணலில் நின்று உன் புனிதப்பெயரை முழக்கினேம்'' என்று அல்லாமா இக்பால் இறைவனிடம் கூறுகின்றான். மேலும், காடுகளில்தான் அலைந்தோமென்றால் கடல்களையுங்கூட நாங்கள் விட்டு வைத்தோமா? அத்லான்திக் பெருங்கடலிலும் நாங்கள் குதிரைகளை ஓட்டிச் சென்றோமே!'' என்று, வரலாற்றுப் புகழ்பெற்ற தளபதி உக்பா என்பவர் வடமேற்கு அப்பிரக்கக் கடற்கரையில் அத்லான்திக் மகாசமுத்திரத்தில் தமது குதிரையை இறக்கி,அதற்கு மேற்கில் பூமி இல்லாமையால் துக்கத்துடன் திரும்பிய நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்டுகிறார்.

இந்த நூலில் பூர்வ ஆப்பிரிக்க சரிதைச் சுருக்கத்துடன் தொடங்கி, இஸ்லாமிய காலத்தில் அ.்க்லபிகள் இத்ரீஸிகள், தூலூனிகள், இக்ஷீதிகள், ஃபத்திமீகள், அய்யூபிகள், அடிமை ஸுல்தான்கள் ஆகியோரின் ஆட்சியும், பிறகு, துருக்கியரின் ஆப்ரிக்க வெற்றி, நெப்போலியன் படையெடுப்பிற்குப் பின்னர், எகிப்து நாடு ஆங்கிலேயரின் ஆதிக்கத்தில் துன்பமடைந்து, இறுதியில் விடுதலைபெற்ற சரிதை கூறப்பட்டுள்ளது.

இதையன்றி, ஆப்பிரிக்காவில் இஸ்லாம் எவ்வாறு பரவியது? இன்று ஆப்பிரிக்கா ஒரு முஸ்லிம் கண்டமாக அமைந்துள்ளது என்னும் அத்தியாயங்களுடன் முடிவடைகின்றது.

இரண்டாண்டு அச்சகத்திலிருந்து இஸ்லாமிய வரலாற்றின் இந்த ஆறும் பாகம் வெளியாகின்றது. எஞ்சியுள்ள பாகங்கள் விரைவில் வெளிவருமாறு இறைவன் அருள் புரிவானாக! ஆமீன்.

ஜமால் முஹம்மத் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.
நவம்பர், 1967.
ஹிஜ்ரி, ஷஃபான் 1387.

ஸையித் இப்ராஹீம்.

உட்பொருள்

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா நிர்ரஹீம்
நஹ்மதுஹு வநுஸல்லி அலா ரஸுலில் கரீம்

ஆப்பிரிக்காவில் முஸ்லிம் ஆட்சி

1. பூர்வகால அரசாங்கங்கள்

உலக வரலாற்றிலே பாபிலோனியா, அஸீரியா, எகிப்து (மிஸ்ர்), திராவிடம் ஆகிய நாடுகளின் சரித்திரங்கள் மிகப் பழமையானவை. ஆப்பிரிக்கா கண்டத்தில் எகிப்து நாட்டு வரலாறு முதலிடம் பெறுகின்றது.

கி. மு. 5004-ம் ஆண்டிலிருந்து எகிப்து நாட்டு வரலாறு தொடங்குகின்றது. மன்னு என்னும் அரசர் அந்த நாட்டில் முதலாவதாக அரசாங்கம் நிறுவினர்.

இந்தப் பூர்வகால வரலாற்றை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. **அஞ்ஞான காலம்**: கி. மு. 5004 முதல் கி. பி. 381 வரை. இக்காலத்தில் எகிப்து நாட்டு மக்கள் தங்கள் புராதன மதத்தை அனுசரித்து வந்தார்கள்.

2. **கிறிஸ்தவ காலம்**: கி. பி. 381 தொடங்கி கி. பி. 640 முடிய, அஃதாவது, எகிப்து நாட்டை முஸ்லிம்கள் வென்ற காலம் வரை. இக்காலத்தில் எகிப்து நாட்டார் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

எகிப்து நாட்டுப் பழங்குடி மக்கள் ஸிரியா (ஷாம்) நாட்டிலிருந்து நீல நதிப் பள்ளத்தாக்கில் குடியேறியவர் ஆவர். இவர்களில் ஐந்து பிரிவுகள் இருந்தன. முதல் பிரிவு அல்லது ஜாதியில் பூஜாரிகள், அஃதாவது மத குருக்கள் இருந்தார்கள். இவர்கள் இட்டதே சட்டம். இரண்டாம் பிரிவு போர்வீரர்களுடையது. இவர்களே பகைவரிடமிருந்து சமுதாயத்தைப் பாதுகாத்து வந்தவர்கள். மற்ற மூன்று பிரிவுகளில் வியாபாரிகள், விவசாயிகள், ஆடுமேய்ப்போர் ஆகியோர் இருந்தனர்.

முதல் இரண்டு பிரிவுகளைச் சேர்ந்தோரே நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக இருந்தார்கள். எனவே, நிலத்தின் பெரும்பாகம் பூஜாரிகளிடமும், சிறு பாகம் போர்வீரர்களிடமும் இருந்தன. ஆகையால், இதர மூன்று பிரிவுகளைச் சார்ந்தோர் பூஜாரிகளிடமும் போர்வீரர் களிடமும் உள்ள நிலங்களைக் குத்தகைக்கு வாங்கி விவசாயம் செய்தார்கள்.

இத்தகைய சமுதாயத்திலே போர்வீரர்களின் பிரிவைச் சேர்ந்த மன்னு என்னும் ஒரு தலைவர் எகிப்து நாட்டில் முதல் முதலாக அரசராகிவிட்டார். இவரது குடும்பத்திலே வெகு காலம் அரசாங்கம் இருந்தது. பிறகு, மற்றொரு குடும்பம் அரசாங்கத்தைக் கைப்பற்றிக்கொண்டது. இவ்வாறு தொடர்ச்சியாக முப்பத்தொன்று அரச வம்சங்கள் எகிப்து நாட்டில் ஆட்சி செய்தன.

பின்னர், கிரீஸ் (யூனன்) நாட்டார் எகிப்தை வென்றூர்கள். அதற்குப் பின்னர், அந்த நாடு ரோம ராஜ்யத்தின் ஒரு மாகாண மாகிவிட்டது.

முற்கால எகிப்து நாட்டு மக்கள் விக்கிரகங்களையே வணங்கினார்கள். இறந்துபோன மக்களின் பிரேதங்களுக்கு அற்புதமான தைலங்கள் தடவிப் பெட்டிகளில் வைத்துப் புதைத்துவந்தார்கள். அதனால் பிணம் அழுகிவிடாமல் வெகுகாலம் இருந்தது. இவ்விதமான பிணங்களை மம்மி (Mummy) என்பார்கள். இத்தகைய மம்மிகள் எகிப்தில் இந்தக் காலத்திலும் கிடைக்கின்றன. அடிப்பாகத்தில் சதுரமும், உச்சியில் குவிந்து ஊசி வடிவமுமுள்ள வான ளாவிய (பிரமிட்-Pyramid) கற்கோபுரங்களில் மன்னர்களின் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுவந்தன.

சரித்திர காலங்கள்: எகிப்து நாட்டின் பூர்வ சரித்திரத்தை ஐந்து பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. முதற்காலம் :—(கி. மு. 5004—கி. மு. 3064) இதில் பத்து அரச குடும்பங்கள் ஒன்றன்பின் ஒன்ருக ஆட்சி பீடத்தில் அமர்ந்தன.

2. இடைக்காலம் :—(கி. மு. 3064—கி. மு. 1703) இதில் 11 முதல் 17-ம் அரச மரபுகள் ஆண்டன.

3. கடைக்காலம் :—(கி. மு. 1703—கி. மு. 332) இதில் 18 முதல் 32-ம் அரச வம்சங்கள் வரை ஆட்சி செய்தன.

4. யூனுனியர் (கிரேக்கர்) காலம் :—(கி. மு. 332—கி. மு. 30) இதில் இரண்டு அரச மரபினர் ஆண்டார்கள்.

5. ரோமர் காலம் :—(கி. மு. 30—கி. பி. 381) இதில் ரோம ராஜ்யத்தின் ஆட்சி நடந்தது.

இதற்குப் பிறகு, கிறிஸ்தவர்களின் ஆட்சி துவங்கி, கி. பி. 381 முதல் கி. பி. 640 வரை இருந்தது. இதிலும், ரோமர்களே ஆட்சி செய்தார்கள். அதற்குப் பின்னர், முஸ்லிம்கள் எகிப்து நாட்டை வென்ருர்கள்.

இனி, இந்தச் சரித்திர காலங்களே விவரமாகக் காண் போம்.

முதற் காலம் : இது கி. மு. 5004 முதல் கி. மு. 3064 வரை நீடித்தது. முதலாம் அரச வம்சத்திற்கு தீனீ என்று பெயர். 305 ஆண்டுகளில் ஒன்பது அரசர்கள் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தார்கள். மன்ஞ என்னும் முதலாம் மன்னர் அறுபத்திரண்டு ஆண்டுகள் ஆட்சி செய்தார் தீன் என்பது அவரது தலைநகர். அந்தத் தலைநகரின் பெயரே பூர்வகால எகிப்து நாட்டு அரச குடும்பத்திற்கு வைக்கப்பட்டது. ஆகையால், அந்தக் குடும்பத்திற்கு தீனீ என்று பெயர். மன்ஞ என்பவர் போர்வீரர்களின் பிரிவைச் சேர்ந்தவர். முதல் பிரிவான பூஜாரிகளுடைய ஆதிக்கம் அளவு கடந்து

இருந்தமையால், இந்த அரசர் எகிப்து நாட்டிலிருந்து பூஜாரிகளைத் துரத்திவிட்டார். மேலும், தங்கள் தலைநகரை மாற்றி மன்ப் (Memphes) என்னுமிடத்தைப் புதிய தலைநகரமாக்கினர். புதிய நகரைச் சுற்றி அகழ் தோண்டி, அந்த அகழைக் கடந்து வருவதற்குப் பாலங்கள் கட்டினர். மேலும், மேற்கில் லிபியா பாலைவனத்தின் திசையில் சென்று கொண்டிருந்த நீலநதியைக் கிழக்குத் திசையில் திருப்பினர். அரசியல் நிர்வாகத்தை சீரமைப்புச் செய்து முடித்தார். இவையன்றி, லிபியா நாட்டுடன் போர் தொடங்கி, அதில் வெற்றியும் கண்டார். இந்த அரசமரபின் இறுதிக்காலத்தில் பல குழப்பங்களும் கலகங்களும் உண்டாயின. அதன் விளைவாக அரசாங்கம் மாறிவிட்டது.

இரண்டாம் அரச குடும்பம் மன்பீ என்பதாகும். இதில். முந்நூற்றிரண்டு ஆண்டுகளாக ஒன்பது மன்னர்கள் ஆட்சி செய்தார்கள். முதலாம் மன்னரின் பெயர் பஸாவ், அவர் முதலாம் அரச குடும்பத்துடன் இரத்தத் தொடர்புள்ளவர். அவரை மக்கள் தெய்வமென வணங்கினர்கள். மூன்றும் மன்னர் தாமே கடவுள் என்று விளம்பரஞ் செய்தார். இத்தகைய கொள்கை எகிப்து நாட்டில் வெகு காலம் இருந்து வந்தது.

மூன்றும் அரச குடும்பத்தின் பெயரும் மன்பீ என்பதே. இதில் இருநூற்றுப்பதினன்கு ஆண்டுகளாக ஒன்பது மன்னர்கள் கோலோச்சினர்கள். முதலாம் மன்னர் நக்ருபீஸ என்பவர் காலத்தில், லிபியா நாட்டார் அரசாங்க எதிர்ப்புக் கிளர்ச்சி செய்தார்கள். லிபியா மக்களை அவர் ஓர் இரவு திடீரென்று தாக்கினர். அன்று சந்திர கிரகணம் உண்டாயிற்று. எனவே, லிபியா மக்கள் தங்கள்மீது தெய்வம் சீற்றங்கொண்டுவிட்டதெனப் பயந்து சரணடைந்துவிட்டார்கள். இந்தக் குடும்பத்தாரின் ஆட்சியில், சிற்பவேலை, எழுதும் கலை, மருத்துவம், முதலான துறைகளில் நாடு முன்னேற்றமடைந்தது, நாட்டில் செல்வம் பெருகியது.

கூர்முனைக் கோபுரங்கள் (Pyramid-அஹ்ராம்) பல கட்டப்பட்டன. பல்வேறு கோவில்களும் தயாரிக்கப்பட்டன. அபுல் ஹவ்ல் (Sphinx) என்னும் விக்ரகமானது ஜிஸா அஹ்ராமுக்கு அருகில் இன்றும் காட்சி அளிக்கின்றது. இது இக்காலத்தில்தான் நிர்மாணிக்கப்பட்டது. இந்த விக்ரகத்தின் உடல் சிங்கத்தைப்போன்றும், அதன் தலை மனிதனுடைய தலையைப்போன்றும் இருக்கின்றது. வலிமையும் அறிவும் இருத்தல் வேண்டும் என்பதை இது வற்புறுத்துகின்றது.

நான்காம் அரச குடும்பமும் **மன்பீ** என்பதே. அது இருநூற்று எண்பத்து நான்கு ஆண்டுகள் இருந்தது. பதினான்கு மன்னர்களைக் கொண்டது. இதில் **கேவ்பஸ்** என்னும் மன்னர் ஜீஸா நகரின் அருகிலுள்ள அஹ்ராமைத் தயாரித்தார். இதன் உயரம் நானூற்றைம்பது அடி. அகலம் எழுநூற்று நாற்பத்தாறு அடி. இதை ஓர் இலட்சம் வேலையாட்கள் முப்பது ஆண்டுகளில் கட்டிமுடித்தார்கள். இது மலையைவிட அதிகக் கடினமானது. அப்பாஸி கலீபா மாமூன் ரஷீத் என்பவர் பக்தாதிலிருந்து எகிப்து நாட்டிற்கு விஜயஞ் செய்தபொழுது, இந்த அஹ்ராமில் கணக்கற்ற செல்வம் இருப்பதாகக் கேள்விப்பட்டு அதைத் தகர்க்கும்படி கட்டளையிட்டார். ஆனால் ஏராளமான பணம் செலவாகியும் ஒரு சிறு பாகமே உடைக்கப்பட்டது. ஆகையால், அம்முயற்சி கைவிடப்பட்டது. **கப்ரா** என்னும் மற்றொரு மன்னர் ஜிஸா நகருக்கு அருகில் இன்னொரு அஹ்ராம் கோபுரம் கட்டினர். இதன் உயரம் 447 அடி. அகலம் 690 அடி. ஜிஸாவிலுள்ள மூன்றும் அஹ்ராமை **மன்கூரா** என்னும்மன்னர் தயாரித்தார். இதன் உயரம் 203 அடி. அகலம் 252 அடி.

ஐந்தாம் அரச குடும்பத்தின் பெயர் **அல்வானீ**. இது இருநூற்றுப் பதினெட்டு ஆண்டுகள் ஆதிக்கம் செய்தது. இதில் ஒன்பது மன்னர்கள் இருந்தார்கள்.

ஆறும் அரச குடும்பமும் அன்வானீ. இதில் இருநூற்று மூன்று ஆண்டுகளாக ஆறு மன்னர்கள் ஆட்சிபீடத்தில் அமர்ந்திருந்தார்கள். மரீரு என்னும் மன்னரது ஆட்சியில் ஸிரியா, நூபியா ஆகிய நாடுகள் வெல்லப்பட்டன. இக் காலத்தில் எகிப்தில் பல உலோகச் சுரங்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. மேலும், போர்க் கப்பல்களும் கட்டப் பட்டன.

ஏழாம், எட்டாம், ஒன்பதாம் அரச வம்சத்தார் நானூற்றுப் பதினறு ஆண்டுகள் அதிபர்களாக இருந்தார்கள். இவர் களைக் குறித்த வரலாறு தெளிவாகக் கிடைக்கவில்லை.

இடைக்காலம் (கி. மு. 3064-கி. மு 1703)

பதினொன்று முதல் பதினெட்டாம் அரச குடும்பங்கள் வரை ஏழு குடும்பங்களின் ஆட்சி இதில் நடந்தது.

பதினென்ரும் அரச குடும்பத்தின் பெயர் தீபீ. அதன் ஆட்சிக் காலம் நாற்பத்து மூன்று ஆண்டுகள்.

பன்னிரண்டாம் அரச குடும்பமும் தீபீ என்பதே. அது இருநூற்றுப் பதின்மூன்று ஆண்டுகள் ஆட்சி செய்தது. எகிப்து நாடு முழுமையும் இந்தக் குடும்பத்தார் ஆதிக்கத்தி லிருந்தது. இதை நிறுவியவர் அம்னுமா என்பவர். இவர் லிபியா, நூபியா, அபிஸீனியா முதலிய நாடுகளை வென்ருர். நீலநதியின் குறுக்கில் ஓர் அணைக்கட்டை கட்டியவரும் இவரே.

பதின்மூன்ரும் அரசகுடும்பமும் தீபீ மரபைச் சேர்ந்ததே. இதன் ஆட்சிக்காலம் நானூற்றைம்பது ஆண்டுகள். இதில் எண்பத்தேழு மன்னர்கள் இருந்தார்கள்.

பதினன்காம் அரச வம்சம் ஸகாவீ எனப்படும். இதில் நானூற்று நாற்பத்தாறு ஆண்டுகளாக எழுபத்தாறு மன்னர்கள் சிம்மாசனத்தில் இருந்தார்கள். தலை நகரின் பெயர் ஸகா.

பதினைந்தாம் அரசாங்கத்தின் பெயர் அவாரீஸி. இதில் இருநூற்று நாற்பத்தொன்பது ஆண்டுகளில் ஆறு மன்னர்களின் ஆட்சி நடந்தது. இக்காலத்தில், ஸிரியா, அரபியா ஆகிய நாடுகளிலிருந்து எகிப்து நாட்டின்மீது படையெழுச்சிகள் நிகழ்ந்தன. அதன் விளைவாக, எகிப்து நாட்டுக்கு மிகுந்த நஷ்டம் ஏற்பட்டது. அதில் பண்டைக் காலக் கட்டிடங்கள் அழிக்கப்பட்டன. இவ்வாறு, படையெடுத்தோர் அமாலிகா என்று அழைக்கப்பட்டார்கள். எகிப்தை அவர்கள் வென்ற பிறகு, அவர்களுடைய தலைவர் அரசராகி, பிர்அவ்ன் (Pharoah–பாரோன்) என்னும் பட்டம் சூட்டிக்கொண்டார்.

அக்காலத்தில்தான் ஹஸ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் (Prophet Abraham - ஆபிரகாம்) எகிப்து நாட்டிற்குச் சென்றார்கள். ஆனால், எந்த மன்னர் காலத்தில் சென்றனர் என்பது வரலாற்று வாயிலாகத் தெரியவில்லை.

பதினாறும் பதினேழாம் அரச மரபின் பெயர் ஸாஸீ. இவர்களும் அமாலிகா குடும்பத்தைச் சேர்ந்தவர்களே. ஆயினும் அவர்களைப்பற்றிய விவரமான விஷயங்கள் தெரியவில்லை.

அக்காலத்தில் ஹஸ்ரத் யூஸுப் அலைஹிஸ்ஸலாம் (Prophet Joseph–யோசேப்பு) கன்ஆன் பிரதேசத்திலிருந்து எகிப்து நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டார்கள். எகிப்து நாட்டு அமைச்சர் கத்பீர் (தோபர்) என்பவரிடம் விற்கப்பட்டார்கள். ஹஸ்ரத் யூஸுப் அலைஹிஸ்ஸலாம் சிறையிலிருந்து, விடுதலை அடைந்த பிறகு, எகிப்து நாட்டு மன்னர் அன்னாரை நிதி மந்திரியாக நியமித்தபொழுது, ஹஸ்ரத்

யூஸுப் அலைஹிஸ்ஸலாமுடைய சகோதரர்கள் தங்கள் தகப்பனுர் யஃகூப் அலைஹிஸ்ஸலாம் (Prophet Jacob–யாக்கோபு) உடன் எகிப்து நாட்டுக்கு வந்தார்கள். அவர்கள் அனைவரும் எகிப்து நாட்டில் குடியேறினுர்கள். இவ்வாறு குடியேறிய பதினுறு ஆண்டுகளுக்குப் பின்னர், ஹஸ்ரத் யஃகூப் அலைஹிஸ்ஸலாம் காலஞ்சென்ருர்கள். இவர்களுடைய பிரேதத்தைப் பதினெட்டு மைல் தூரத்திலுள்ள ஜபல் ஜய்ருன் என்னுமிடத்திற்கு ஹஸ்ரத் யூஸுப் அலைஹிஸ்ஸலாம் கொண்டு போய் நல்லடக்கம் செய்து திரும்பினுர்கள். இந்த இடத்தில் ஹஸ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம், ஹஸ்ரத் இஸ்ஹாக் (Isaac–ஈசாக்) அலைஹிஸ்ஸலாம் இவ்விருவருடைய அடக்கஸ்தலங்கள் இருக்கின்றன.

அதற்கடுத்த ஆண்டில் ஹஸ்ரத் யூஸுப் அலைஹிஸ்ஸலாம் காலஞ்சென்ருர்கள். அவர்களுடைய உடலை எகிப்திலேயே அடக்கம் செய்யப்பட்டது. ஹஸ்ரத் மூஸா (Moses–மோசே) அலைஹிஸ்ஸலாம், பனீ இஸ்ராயீலுடன் எகிப்திலிருந்து வெளியேறியபொழுது, ஹஸ்ரத் யூஸுப் அலைஹிஸ்ஸலாமவர்கள் இறுதி விருப்பம் (வஸீயத்) தெரிவித்ததற்கு இணங்க, அவர்களுடைய உடலைக் கொண்டு வந்து இதே குடும்பத்தாரின் அடக்கஸ்தலத்தில் அடக்கஞ் செய்தார்கள்.

வெளிநாட்டிலிருந்து வந்து குடியேறிய அமாலிகா என்னும் மக்களை அதற்குப்பிறகு துரத்திவிட்டுத் தங்கள் சொந்த ஆட்சியை ஆரம்பித்தார்கள்.

கடைக் காலம்

இதில் கி. மு. 1703 முதல் கி. மு. 332 வரை ஆயிரத்து முந்நூற்றெழுபத்தொன்று ஆண்டுகள், பதினெட்டாம் அரச குடும்பத்திலிருந்து முப்பத்தொன்ரும் அரச குடும்பம் வரை ஆட்சி செய்தன.

பதினெட்டாம் அரச குடும்பத்தின் பெயர் தீபீ. அது இருநூற்று நாற்பத்தொன்று ஆண்டுகள் நீடித்தது. அதை நிறுவியவர் அஹ்மஸ். அவர் அமாலிகா ஜாதியாரைத் தோற்கடித்து, பராத் (யூப்ரதீஸ்) நதி வரையில் அவர்களைத் துரத்தியடித்து, அவர்களை அழித்து, எகிப்து நாட்டிற்கு விடுதலை அளித்தார். பிறகு நூபியா, பர்கா நாடுகளை வென்றார். அவரது பிரேதமும் அவரது இரண்டு புத்திரரின் பிரேதங்களும் எகிப்து நாட்டு அரும் பொருட்காட்சிசாலையில் இன்றும் இருக்கின்றன.

பிறகு, தஹூதமஸ் என்னும் மன்னர் அந்த நாட்டை வென்றார். மூன்றும் தஹூதமஸ் மன்னர் பலஸ்தீன், ஸிரியா, வடக்கு இராக், சின்ன ஆசியா, அர்மீனியா, குர்திஸ்தான், அல்ஜஸிரா (அல்ஜீரியா) தெற்கு இராக், எமன் முதலிய நாடுகளை வென்றார். அதற்குப் பின்னர் கடற்படையின் உதவியால், ஸைப்ரஸ் (கிப்ரஸ்) கிரீத், அர்கபேல் தீவுகள், கிரேக்க நாடு (யூனன்), தெற்கு இத்தாலி ஆகிய நாடுகளை வென்றார். இவ்வாறுன மாபெரும் வெற்றிகளின் காரணமாக, எகிப்து நாட்டின் சிறப்பும் செல்வாக்கும் அதிகரித்தது. இந்த மன்னர் இரண்டு பெரிய கோபுர வடிவமுள்ள வெற்றி ஸ்தூபிகளை நாட்டினர். இவை கிளியோபத்ரா அரசி காலத்தில் அலக்சாந்திரியாவுக்குக் கொண்டுபோகப்பட்டன. இப்பொழுது அவற்றில் ஒன்று லண்டனிலும் மற்றொன்று அமெரிக்காவிலும் இருக்கின்றன.

அக்காலத்தில்தான் நான்காம் அம்னுபீஸ் என்னும் அரசர் சூரியனை வணங்கும்படி மக்களை வற்புறுத்தினர். இதையன்றி, அப்பொழுது அந்த மக்கள் பூஜித்துவந்த ஆமூன் என்னும் தேவதையின் வணக்கத்தையும் தடுத்துவிட்டார்.

பத்தொன்பதாம் அரச குடும்பம் தீபீ. இது நூற்றெழுபத்து நான்கு ஆண்டுகள் ஆட்சி செய்தது. ரம்ஸீஸ் என்பவர் இதை நிறுவினர். ஸீதீ என்னும் மற்றொரு மன்னர் நீல நதியைச் செங்கடலுடன் இணைக்க முதல்முதலாக முயற்சி செய்தார். முதலாம் மன்பத்தாஹ் என்னும் அரசர் பெரிய கட்டிடங்கள் கட்டினர் அக்காலத்தில் லிபியா, சின்ன ஆசியா ஆகிய இரண்டு நாடுகளும் எகிப்து நாட்டைத் தாக்கின. ஆனால், அவற்றை மன்பத்தாஹ் தோற்கடித்து விட்டார். மேலும், இந்த மன்னரே ஹஸ்ரத் மூஸா அலைஹிஸ் ஸலாம் (Moses) காலத்தில் இருந்ததாகவும், இஸ்ராயீலின் சந்ததியை ஹஸ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் விடுவித்துக் கொண்டு வரும்பொழுது, அவர்களை இந்த (பிர்அவ்ன்) மன்னர் பின்தொடர்ந்து வந்து, தமது படைகளுடன் மூழ்கி விட்டதாகவும் வரலாற்று ஆசிரியர்கள் அனைவரும் ஒப்புக் கொள்ளுகின்றார்கள். அப்பொழுது இந்த மன்னரின் வயது எழுபத்தேழு. "நானே கடவுள்!" எனக் கூறிய இந்த மன்னரின் பிணம் கி. பி. 1904-ல் வெளியாயிற்று. அது ஜீஸாவில் காட்சிசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

"எனினும் உனக்குப் பின்னுள்ளவர்களுக்கு, ஓர் அத்தாட்சியாவதற்காக, உன்னுடைய உடலை (அது அழியாமல்) நாம் இன்றைய தினம் பாதுகாத்துக்கொள்வோம்" (குர்ஆன்–யூனுஸ்—10 : 92)

என்பதாக பிர்அவ்னைக் குறித்துத் திருக்குர்ஆன் கூறும் திருவசனத்திற்கேற்ப இவ்வாறு நடந்தது.

இந்த நிகழ்ச்சியில் எகிப்து நாட்டு மந்திரி பிரதானிகள் சேனைத்தலைவர்கள் முதலியோரெல்லாம் தங்கள் மன்னருடன் நீரில் மூழ்கி இறந்துவிட்டமையால், அந்நாடு மிக வலுவின்மை அடைந்துவிட்டது. அதே சமயத்தில் பிற நாட்டார் வன்மை பெற்றார்கள். இறுதியாக, அரீஸு என்னும் தலைவர் எகிப்து நாட்டின் அதிபதியாகிவிட்டார்.

இருபதாம் அரச குடும்பத்தார் **ரஅம்ஸிஸி** எனப்படுகின்றார்கள். நூற்றெழுபத்தெட்டு ஆண்டுகளில் பதின்மூன்று மன்னர்களின் ஆட்சி நடந்தது. ஸீதன்கத் என்பவர் இதை நிறுவியவர். இந்தக் குடும்பத்தில் மூன்றும் ரஅம்ஸிஸ் மன்னரின் வெற்றிகள் மிக முக்கியமானவை. அவரது பிரேதம் இப்பொழுது பாரிஸ் நகரில் பொருட்காட்சியகத்தில் இருக்கின்றது. இக் காலத்தில் எகிப்து மிக முன்னேற்ற மடைந்தது.

இருபத்தோன்றும் அரச வம்சத்தின் பெயர் கஹ்னு. இதில் நூற்று முப்பது ஆண்டுகளாக ஏழு மன்னர்கள் ஆட்சி செய்தார்கள். ஹர்ஹூர் என்பவர் இதன் ஸதாபகர். பூஜாரிகளின் தலைவரான இவர், பழைய அரச குடும்பத்தார்களை எகிப்திலிருந்து வெளியேற்றிவிட்டார்.

இருபத்திரண்டாம் அரச குடும்பம் பஸ்தீ (நம்ருதி) என்பதாகும். அதில் நூற்றெழுபது ஆண்டுகள் ஒன்பது மன்னர்களின் ஆட்சி நடந்தது. ஷஷ்னக் என்பவர் இதை நிறுவினார். ஹஸ்ரத் ஸுலைமான் அலைஹிஸ்ஸலாம் (ஸாலமன்) காலஞ்சென்ற ஐந்தாம் ஆண்டில் இவர் பலஸ்தீன்மீது படை யெடுத்து எருஸலம் (பைத்துல் முகத்தஸ்) நகரை வென்று, மஸ்ஜிதே அக்ஸாவிலிருந்த திரவியங்கள் அனைத்தையும் கொள்ளையடித்தார். அந்த நாட்டை வென்ற பிறகு எகிப்துக்குத் திரும்பிவந்தார்.

இருபத்துமூன்றும் அரச குடும்பம் **தாஸீனீ**. இதில் நான்கு மன்னர்கள் எண்பத்தொன்பது ஆண்டுகள் ஆட்சி செய்தார்கள்.

இருபத்து நான்கம் குடும்பம் ஸாவீ. இதில் ஐந்து மன்னர்களின் ஆட்சி நடந்தது. இக்காலத்தில் பர்கா நாட்டாருடன் போர் நடந்து, அந்த நாட்டார் எகிப்தை வென்று, விட்டார்கள்.

இருபத்தைந்தாம் அரச மரபு அஸ்யூபி. இந்த மன்னர்கள் பர்கா நாட்டார். இதில் ஐந்து மன்னர்கள் ஐம்பத்துமூன்று ஆண்டுகள் கோலோச்சினுர்கள். ஆனல், பற்பல குழப்பங்கள் ஏற்பட்டு இறுதியாக வீழ்ச்சி யடைந்தது.

இருபத்தாறும் அரச வம்சம் ஸாவீ. இதில் நூற்று முப்பத்தெட்டு ஆண்டுகள் ஆறு மன்னர்களின் ஆட்சி நடைபெற்றது. இக்காலத்தில் கிரேக்க நாட்டார் கல்வி கற்க எகிப்துக்கு வந்தார்கள். அவர்கள் ஸோலன், பிஷாகோரஸ் (பிதாகோரஸ்), அப்லாதூன் (பிலாத்தோ), அதோகஸ் ஆகியோர் முக்கியமானவர்கள், இக்குடும்பத்தில் மூன்ரும் நகாவ் மன்னர் நீல நதியிலிருந்து ஒரு கால்வாயைப் பிரித்து செங்கடலுடன் சேர்த்துவிட்டார். முன்னர், பத்தொன்பதாம் அரச குடும்பத்திய ஸீதி மன்னர் ஆரம்பித்த இந்த வேலை இப்பொழுது நிறைவு பெற்றது.

இருபத்தேழாம் குடும்பம் பார்ஸீ. இதில் ஏழு மன்னர்கள் நூற்று இருபத்தொன்பது ஆண்டுகள் ஆட்சிபீடத்தில் இருந்தார்கள். அஃதாவது, பாரசீக (ஈரான்) நாட்டுப் பார்ஸிகள் எகிப்து நாட்டை வென்று ஆட்சி செய்தார்கள்

இருபத்தெட்டாம் அரச வம்சம் ஸாவீ. இதில் அமிர்தீஸ் என்னும் ஒரு மன்னர் திறமையுடன் ஆட்சி செய்தார்.

இருபத்தொன்பதாம் குடும்பம் மந்தீஸீ. இதில் நான்கு மன்னர்கள் இருபத்தொன்று ஆண்டுகள் ஆதிக்கஞ்செலுத்தினுர்கள். முதலாம் நபர்தீஸ் என்னும் மன்னர் கிரேக்க நாட்டில் ஸ்பார்ட்டா அரசாங்கத்துடன் சேர்ந்துகொண்டு ஈரான் மீது படையெடுக்க முயன்ருர். ஆனல், அவர் அதில் வெற்றிபெற முடியவில்லை.

முப்பதாம் குடும்பம் ஸம்னூதீ. முப்பத்தெட்டு ஆண்டுகள் மூன்று மன்னர்களின் ஆட்சி நடந்தது. இக்காலத்திலும் எகிப்துக்கும் ஈரானுக்கு மிடையில் யுத்தம் நடந்துகொண்டே யிருந்தது. இறுதியாக, ஈரானியரே வெற்றி பெற்ருர்கள்.

முப்பத்தோன்றும் குடும்பம் பார்ஸீ. இதில் மூன்று மன்னர்கள் எட்டு ஆண்டுகளாக ஆட்சி செய்தார்கள். அக்காலத்தில் அலக்சாந்தர் (சிகந்தர் அஃலம்—Alexander the Great) என்னும் கிரேக்க மன்னர் ஸிரியா, எகிப்து நாடுகளை வென்றூர். எனவே, கி. மு. 332 முதல் கி. மு. 30 வரை எகிப்தில் கிரேக்க ஆட்சி நடந்தது. இவர்களில் இரண்டு குடும்பங்கள் இருந்தன. (1) மக்தூனீ (மாஸிதூனியா) (2) பத்லிமூஸி (தாலமீ—Ptolemy).

முப்பத்திரண்டாம் குடும்பம் மக்தூனீ (Macedonian) இதன் ஆட்சிகாலம் ஒன்பது ஆண்டுகள். மக்தூனியா நாட்டு மன்னர் அப்லிபஸ் (பிலிப்ஸ்— Philips) உடைய புத்திரரும்) அரிஸ்தாதல் என்னும் ஆசிரியரின் மாணவருமாக இருந்த அலக்சாந்தர் தமது முப்பதாம் வயதில் சிம்மாசனம் ஏறினூர். ஈரானியரை எதிர்க்கும் நோக்கத்துடன் ஒரு பெருஞ் சேனையை தானியால் (டார் டனல்ஸ்) கடல் இடுக்கைக் கடந்து, அனதூலியாவில் கரானிகூல் நதியோரத்தில் ஈரானியரைத் தோற்கடித்தார். பிறகு, அங்கிருந்து புறப்பட்டு வெற்றிமேல் வெற்றியுடன் எகிப்துக்கு வந்து அந்த நாட்டையும் வென்றூர். ஆனூல், நாட்டு நிர்வாகத்திலும்; சமுதாய வாழ்க்கையிலும் அவர் தலையிடவில்லை. கடற்கரை யோரத்தில் தமது பெயரால் அலக்சாந்திரியா என்னும்புதிய நகரை நிர்மாணித்தார். மேற்கில் தராபலஸ் (திரிபோலி) நாட்டை வென்றுவிட்டு ஈரான் சக்ரவர்த்தியான தாரா (டேரியஸ்) என்பவரை யூப்ரதீஸ் நதியோரத்தில் தோற்கடித்தார். அலக்சாந்தர் பிறகு இந்தியாவை வென்று அங்கிருந்து திரும்பி வரும்பொழுது, பாபிலோன் (பாபல்) நகரில் இறந்துபோனூர்.

முப்பத்து மூன்றும் அரச குடும்பம் பத்லீமூசி. இதில் இருநூற்றுத் தொண்ணூற்று மூன்று ஆண்டுகளில் பதிநான்கு மன்னர்கள் ஆட்சி செய்தார்கள்.

அலக்சாந்தர் இறந்தபிறகு, பாபிலோன் பிரதேசத்தில் அவரது ராஜப்பிரதிநிதியாக இருந்த பத்லீமூஸ் என்பவர் எகிப்து நாட்டுக்கு வந்து, அங்கு அதிகாரியாகிவிட்டார். அவரது தலைநகர் அலக்சாந்திரியா. தூனிஸ் நாட்டையும், ஸைப்ரஸ் (கிப்ரஸ்) போன்ற பல மத்தியதரைக்கடல் தீவுகளையும் வென்றார். அலக்சாந்திரியாவில் கப்பல்களுக்காக ஒரு கலங்கரை விளக்கம் தயாரித்தார். இதையன்றி, ஒரு நூல் நிலையத்தையும், ஒரு கல்லூரியையும் நிறுவினார்.

இந்தக் குடும்பத்தில் பன்னிரண்டாம் பத்லிமூஸ் மன்னரின் மனைவியான கிலியோபத்ரா (Cleopatra) என்பவள் சரித்திரப் புகழ்பெற்றவள். இவளை எகிப்து நாட்டார் துரத்திவிட்டார்கள். எனவே, அவள் ஸிரியாவுக்குச் சென்று, அங்கிருந்த ரோமர்களிடம் தஞ்சம் புகுந்து, அக்காலத்தில் ரோம சக்ரவர்த்தி ஜூலியஸ் ஸீஸர் என்பவரின் உதவியால் மறுபடியும் எகிப்து நாட்டு அரசியாகிவிட்டாள். அதிகாரப் பைத்தியங்கொண்ட இந்த மாது, தனது சகோதரன் பதின்மூன்றும் பத்லிமூஸ் (Ptolemy XIII) என்பவரை மணந்து, பிறகு, அவரிடமிருந்து விலகி, ரோம சக்ரவர்த்தியுடன் சேர்ந்து, அதற்குப் பின்னர், அவரையும் விலக்கிவிட்டாள்.

ஜூலியஸ் ஸீஸர் ரோமாபுரியில் புரூட்டஸ் என்பவரால் கொலைசெய்யப்பட்டார். அந்தோனியஸ் (அந்தோனி), அக்தேவியஸ் என்னும் இரண்டு ரோமத் தலைவர்கள் புரூட்டஸுக்கு விரோதமாக வாளேந்திச் சென்று, கீழரோம ராஜ்யத்தில் போர் புரிந்தார்கள். கிலியோபத்ரா அரசி இந்தப் போரில் புரூட்டஸுக்கு உதவி செய்தாள். ஆனால், புரூட்டஸ் தோல்வியடைந்தார். புரூட்டஸைத் தோற்கடித்த பிறகு, இந்த அரசியின்மீது அந்தோனியஸ் குற்றஞ்சாட்டி, அவளைத் தர்ஸுஸ (Tarsus) நகரில் தமது தர்பாருக்கு விசாரணை செய்ய அழைத்திருந்தார். கிலியோபத்ரா ஒரு பேரழகி. தனது

உடலைச் சிங்காரித்துக்கொண்டு அவள் அந்தோனியஸ் முன்னிலையில் வந்து நின்றவுடன், அந்தோனியஸ் ஏமாந்து போனார். அவள் பிரியப்படியே அவர் நடந்தார். பிறகு, அவளுடன் எகிப்து நாட்டுக்குச் சென்றுவிட்டார்.

அச்சமயம், ரோமத் தளபதியாயிருந்த அக்தேவியஸ் என்பவர் அந்தோனியஸை வெல்வதற்காக எகிப்துக்கு வந்தார். இருவருக்கும் நடந்த போரில், அக்தேவியஸுக்கே வெற்றி கிடைக்குமென்று தெரிந்தவுடன், கிலியோபத்ரா அந்த தளபதியுடனும் தொடர்புகொள்ள முயன்றாள். மேலும், அந்தோனியஸிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள ஒரு தந்திரம் செய்தாள். கிலியோபத்ரா அரசி தற்கொலை செய்து இறந்துவிட்டதாக ஒரு வதந்தி கிளம்பியது; இதை உண்மையென்று நம்பிய அந்தோனியஸ் உடனே தற்கொலை செய்து இறந்துவிட்டார். அதற்குப் பிறகு, இந்த கிலியோபத்ரா இன்னொரு தந்திரம் செய்து, அக்தேவியஸ்மீது தனது மாய வலையை வீசினாள். ஆனால், அக்தேவியஸ் அதற்கு உடன்படவில்லை. அதுமட்டுமல்ல, அவளைக் கொன்றுவிடவும் முடிவு செய்தார். அவள் எந்த விதமாக இறக்கவேண்டும் என்பதை அவளே முடிவு செய்து கொள்ளலாமெனவும் அக்தேவியஸ் கட்டளையிட்டார். வேறு வழியின்றி கிலியோபத்ரா விஷத்தைத் தின்று இறந்து போனாள். அவள் இறந்த கி. மு. 30 ஆகஸ்ட் பதினைந்தாம் தேதியோடு எகிப்து நாட்டில் கிரேக்கரின் ஆட்சி முடிவடைந்தது.

முப்பத்து நான்காம் அரசமரபு ரூமி (ரோமர்) எனப்படும். கிலியோபத்ரா இறந்த பிறகு எகிப்து நாடு ரோம சாம்ராஜ்யத்தின் ஒரு மாகாணமாகிவிட்டது. கி. மு. 30 முதல் கி. பி. 640 வரை ரோமர்கள் அறுநூற்று எழுபது ஆண்டுகள் ஆட்சிசெய்தார்கள்.

அக்தேவியஸ் அதற்குப் பிறகு **அகஸ்தஸ்** என்னும் பட்டத்துடன் ரோம சக்ரவர்த்தியானுர். அலெக்சாந்தரைப் போன்றே இவரும் எகிப்து நாட்டு நிர்வாகத்திலும் கலாச் சாரங்களிலும், மத, சமுதாய, பொருளாதார விஷயங் களிலும் தலையிடவில்லை. எகிப்து நாட்டில் ஆட்சி நடத்து வதற்கு ராஜப் பிரதிநிதிகள் ரோமாபுரியிலிருந்து அனுப் பப்பட்டு வந்தார்கள்.

இவர்களில் முதலாம் ராஜப் பிரதிநிதி **கர்னவியூஸ்** என்பவர். இவர் எகிப்து நாட்டின் அரசியல் நிர்வாகத் தில் சீரமைப்புச் செய்தார். குடிமக்களின் நல் வாழ்க்கைக் காக அரும்பாடுபட்டார். ஆயினும், இறுதியில் அவர் அதிக கர்வங்கொண்டு மக்களுக்குத் துன்பம் கொடுக்க ஆரம்பித்தார்.

ஹஸ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் (இயேசுநாதர்) பிறந்த பதினைன்கு ஆண்டுகளுக்குப் பிறகு, அகஸ்தஸ் சக்ரவர்த்தி இறந்துபோனுர்.

ராஜப்பிரிதிநிதி கல்யூத்யுஸ் காலத்தில் ரோம சக்ர வர்த்தியின் ராணி கிறிஸ்தவ மதத்தைத் தழுவினுள். படிப் படியாக கிறிஸ்தவ மதம் பரவி, இறுதியாக எகிப்து நாட்டி லிருந்த ராஜப்பிரதிநிதிகளும் கிறிஸ்தவர்களாகி விட்டார் கள்.

கி. பி. 313-ல் கான்ஸ்தன்தைன் என்னும் ரோமசக்ர வர்த்தி கிறிஸ்தவ மதத்தைத் தழுவினுர். பிறகு, கிறிஸ்தவ மதமே அரசாங்கத்தின் மதம் என்று விளம்பரஞ் செய்தார். கி. பி. 378-ல் பட்டத்திற்கு வந்த தியோதோஸியஸ் என்னும் சக்ரவர்த்தி ரோம ராஜ்யத்திலுள்ள பிரஜைகள் அனைவரையும் பலவந்தமாகக் கிறிஸ்தவ மதத்தில் சேர்க் கும்படி கட்டளையிட்டார்.

இதற்குப் பிறகு இயேசுநாதரிடம் மனிதத் தன்மை இருந்ததா? அல்லது தெய்வீகத் தன்மை இருந்ததா? அல்லது இந்த இரண்டும் கலந்து இருந்தனவா என்னும் பிரச்சினை பிறந்தது. அதன் விளைவாகக் கிறிஸ்துவ உலகில் இரண்டு கட்சிகள் உண்டாகிவிட்டன. மர்கியானூஸ் என்னும் சக்ரவர்த்தி இந்தப் பிளவுகளை நீக்க முயன்றார். ரோமாபுரியிலிருந்து போப் என்னும் கிறிஸ்துவ மதகுருவுடன் கலந்தாலோசித்து கலக்தூனியா என்னுமிடத்தில் ஒரு பேரவை கூட்டுவித்தார். ஆயினும், கிறிஸ்துவர்களுக்கிடையில் கலகங்கள் நடந்துகொண்டே இருந்தன. எகிப்து நாட்டிலிருந்த கிறிஸ்துவர்களை ரோம அதிகாரிகள் பல்வேறு வகைகளில் துன்புறுத்தி வந்தார்கள்.

கி. பி. 395-ல் ரோமராஜ்யம் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. மேற்குப் பிரிவின் தலைநகர் ரோம் நகரம். கிழக்குப் பிரிவின் தலைநகர் கான்ஸ்தான்திநோபில் (குஸ்துன்துன்யா—இஸ்தம்பூல்). ஸிரியா, எகிப்து ஆகிய இரண்டு நாடுகளும் கீழ ரோமராஜ்யத்தில் இருந்தன. கி. பி. 610-ல் ஹெராக்லீஸ் (ஹர்கல்) சக்ரவர்த்தி சிம்மாசனம் ஏறியபொழுது, ஈரானியர் அவர்களை எதிர்த்தார்கள். ஸிரியா, பலஸ்தீன் நாடுகளையும் அவர்கள் வென்றார்கள். பிறகு, கி. பி. 18-ல் எகிப்து நாட்டில் நுழைந்தார்கள். அங்கும் வெற்றிபெற்றார்கள். ஆனால், எகிப்து நாட்டாரின் மதவிஷயங்களில் தலையிடவில்லை. எனவே, பாரசீக ஆட்சிக்காலத்தில் எகிப்தியர் மகிழ்ச்சியுடன் காலங் கழித்தார்கள்.

ஆயினும், கி. பி. 622-ல் ஹர்கல் சக்ரவர்த்தி ஈரானியரை எதிர்த்து அவர்களை ஸிரியா, பலஸ்தீன் நாடுகளிலிருந்து வெளியேற்றியதோடு, கி. பி. 627-ல் எகிப்து நாட்டையும் வென்றுவிட்டார். அதற்குப் பிறகு ரோம அதிகாரிகள் எகிப்தியரைத் துன்புறுத்தத் தொடங்கினார்கள்.

ஆகையால், எகிப்து நாட்டார் ரோம ஆட்சியை வெறுத்தார்கள். எவ்வாருயினும் ரோம ராஜ்யத்தின் கொடுமைகளிலிருந்து விடுதலை பெறவேண்டுமென்று நல்லதொரு வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந் தார்கள். தங்கள் தாய்நாட்டிலிருந்து ரோமரின் ஆட்சி முடிவடைந்து செல்லும் நாள் எந்நாளோ, அந்நாள் என்று வருமோ, என்பதே எகிப்து மக்களின் பெரும் பிரச்சினையாக இருந்தது,

இதற்கிடையில் ஹர்கல் சக்ரவர்த்தி ஒரு பெரு முயற்சி செய்தார். எகிப்து நாட்டிலே பிறந்து வளர்ந்த கிறிஸ்துவரும், கிப்தி (Copt) ஜாதியைச் சேர்ந்தவருமான மகூகஸ் என்பவரைத் தமது தலைநகரான கான்ஸ்தான்திநோபிலுக்கு அழைத்தார். அங்கு அவரை வெகுகாலம் வசிக்கச் செய்தார். தமக்குச் சாதகமான கிறிஸ்துவ மதப்பயிற்சியை மகூகஸுக்கு அளித்தார். இறுதியாக, அவரையே எகிப்துக்கு ராஜப்பிரதிநிதியாக நியமித்தனுப்பினர்.

இந்த ராஜப்பிரதிநிதி மகூகஸ் காலத்தில்தான் கி. பி. 629-ல் நபி பெருமானுர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லமவர்களிடமிருந்து ஹாதிப் இப்னு அபீ பலத்தா என்பவர் மகூகஸுக்கு ஓர் இஸ்லாமிய அழைப்புக் கடிதம் கொண்டு சென்ருர்.

மகூகஸ் அந்தக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார். ஆனல், இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. துல்துல் என்னும் ஒரு கோவேறு கழுதை, இரண்டு கன்னியர், பல அன்பளிப்புகள் ஆகியவற்றை நபிபெருமானுர் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லமவர்களுக்கு அனுப்பினர். இந்த இரண்டு கன்னியரில், மாரியா கிப்தியா என்பவர் ஒருவர். இந்த அம்மையார் வயிற்றிலிருந்து நபிபெருமானுரவர்களின் மைந்தர் இப்ராஹீம் என்பவர் பிறந்தார். இவ்வாருக, திருநபியவர்களுக்கும் எகிப்து நாட்டுக்கும் நவீனமானதொரு தொடர்பு ஏற்பட்டு விட்டது.

2. இஸ்லாமிய காலம்

இரண்டாம் கலீபா ஹஸ்ரத் உமர் பாருக் ரலியல்லாஹு அன்ஹு காலத்திலே, முஸ்லிம்கள் ஹிஜ்ரி. 18 (கி. பி. 639) இல் ஆப்பிரிக்காவில் எகிப்து நாட்டின்மீது படையெடுத்தார்கள். அடுத்த இரண்டு ஆண்டுகளில் ஹஸ்ரத் அம்ரு-பின்-ஆஸ் ரலியல்லாஹு அன்ஹு என்னும் தளபதி எகிப்தையும் அதற்கு மேற்கிலுள்ள பர்கா, தராபலஸ் ஆகிய நாடுகளையும் கைப்பற்றினர். அன்று முதல் இன்று வரை இந்த நாடு முஸ்லிம்களிடமே இருந்து வருகின்றது. இந்த இஸ்லாமிய காலத்தைச் சரித்திராசிரியர்கள் பன்னிரண்டு பிரிவுகளாகப் பிரித்துள்ளார்கள்.

		ஹி.	கி. பி.
1.	கிலாபதே ராஷிதா	18– 41	639– 661
2.	உமய்யாக்கள்	41– 132	661– 750
3.	அப்பாஸிகள் (முதலாவது).	132– 257	750– 870
4.	தூலூனீ வம்சம்	257– 292	870– 905
5.	அப்பாஸிகள்(இரண்டாவது)	292– 323	905– 934
6.	அக்ஷீதி வம்சம்	323– 358	934– 969
7.	பாத்திமீ வம்சம்	358– 567	969–1171
8.	அய்யூபீ வம்சம்	567– 648	1171–1250
9.	பஹ்ரீ அடிமைகள்	648– 784	1250–1382
10.	சர்கஸீ (புர்ஜீ) அடிமைகள்	784– 923	1382–1517
11.	உஸ்மானிகள்	923–1216	1517–1801
12.	கதீவ்கள் (முஹம்மத் அலி)	1216–	1801–

கிலாபதே ராஷிதா

ஹி. 18—41. கி. பி. 639—661

அம்ரு பின் ஆஸ் (ரலி)

கிலாபத் ராஷிதா காலத்தில் எகிப்து நாட்டை முதலாவது வென்றவர் ஹஸ்ரத் அம்ரு பின் ஆஸ் என்பவரே. வெற்றிக்குப் பிறகு அவர் அந்த நாட்டை வெகு திறமையுடன் இஸ்லாமிய சட்டதிட்டங்களுக்கேற்ப தாராள மனப்பான்மையுடன் நிர்வாகஞ் செய்தார். வெகு காலமாக அந்த நாட்டு மக்கள்மீது சுமத்தியிருந்த துன்பங்களை நீக்கி, அவர்கள் வாழ்க்கையில் நிம்மதியுண்டாகும்படி செய்தார். மத விஷயங்களில் அவர்களுக்குப் பூரண உரிமை அளித்தார். அவர்கள் கண்ணியமான வாழ்க்கை வாழ்ந்தார்கள். அவர்களது உடல், பொருள், உயிர், சுதந்திரம் முதலியன பாதுகாக்கப்பட்டன. அந்த மக்களின் மதிப்பிற்குரிய தலைவர் புன்யாமீன் என்பவர் ரோம ஆட்சியில் தலைமறைவாக இருந்தார். கவர்னர் அம்ரு பின் ஆஸ் அவருக்கு அபயப்பத்திரம் அனுப்பினார். அவர் வந்த பிறகு அவரை அலக்சாந்திரியாவுக்கு தலைமைப் பாதிரி (Patriarch) யாக நியமித்தார். மேலும், அவர் கிறிஸ்துவர்கள் மத சம்பந்தமாகச் செய்த விண்ணப்பங்கள் அனைத்தையும் ஒப்புக்கொண்டார். அரசாங்க அலுவலகங்களில் பயிற்சி பெற்றோரை நியமித்தார். வழக்குகளில் தீர்ப்பளிக்க நல்ல நீதிபதிகளை நியமித்தார். தீர்வை வசூல் செய்யும் பணி அந்த நாட்டுக் கிறிஸ்துவர்களான கிப்தி (Copts) களிடம் கொடுக்கப்பட்டது. அரசாங்கக் கணக்குகளும் கிப்தி மொழியிலே தொடர்ந்து வைக்கப்பட்டன. அக்காலத்தில் அந்த நாட்டிலிருந்த யஃகூபிகள், சுதேசிகள், யூதர்கள், கிறிஸ்துவர்கள், விக்ரக வணக்கத்தார், நட்சத்திர வணக்கத்தார் என்னும் பல்வேறு வகையான மக்களை அம்ரு பின் ஆஸ் அனுவள

வும் வேறுபாடின்றி நேசித்தார். எனவே, எல்லோரும் அவரை நேசித்தார்கள். அவரது நீதியையும், சமத்துவ சமரச மனப்பான்மையையும் கண்ட மக்கள் கூட்டங் கூட்டமாக வந்து இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்தார்கள். வெற்றியாளரின் மொழி, உடை, பழக்க வழக்கங்கள், கலாச்சாரம் முதலியவற்றை எகிப்து மக்கள் பின்பற்ற ஆரம்பித்தார்கள். இதன் விளைவாக எகிப்து நாடு, இஸ்லாமியக் கலைகளுக்கும், ஒழுக்கத்திற்கும் நடுநாயகமாக விளங்க ஆரம்பித்தது. கி.பி. 1258ல் தாதாரிகளால் பக்தாக் அழிந்தபிறகு, எகிப்து நாடே இன்றுவரை இஸ்லாமியக் கலைகளுக்கும், அரபிய இலக்கியத்திற்கும் நடுநாயகமாக விளங்கிக்கொண்டிருக்கின்றது.

கலீபா உமரின் கட்டளைக்கேற்ப கவர்னர் அம்ரு பின் ஆஸ் புஸ்தாத் (Fustat) என்னும் நகரை நிர்மாணித்து அதையே தலைநகராக்கினர். அவரால் கட்டப்பட்ட ஜாமிஃ மஸ்ஜித் இன்னும் அவரது நினைவுச் சின்னமாக நிற்கின்றது.

ஹெரோதோதஸ் (Herodotus) என்னும் சரித்திராசிரியர் எகிப்து நாட்டில் இரண்டாயிரம் நகரங்கள் இருந்ததாகக் கூறுகிறார் தியோடோரஸ் என்பவர் அதன் ஜனத்தொகை எழுபது இலட்சம் எனவும், யூஸிபோஸ் என்பவர் எழுபத்தைந்து இலட்சம் எனவும் குறிப்பிடுகின்றார்கள். இஸ்லாமிய காலத்தில் இது இரண்டு கோடி வரை பெருகியிருந்தது. எனினும், பாத்திமீகள், அடிமை அரசர்கள் ஆகியோர் காலத்தில் உட்குழப்பங்கள், படையெடுப்புகள், பஞ்சங்கள், தொத்து நோய்கள் முதலியனவற்றாலும் அரசியல் நிர்வாகத் திறமையின்மையின் காரணமாகவும் முப்பது இலட்சமாகக் குறைந்துவிட்டது. கதிவ் ஆட்சியிலிருந்து மீண்டும் பெருகி வருகிறது. இப்பொழுது இரண்டு கோடி மக்கள் வாழ்கின்றார்கள். அதில் பெரும்பாலோர் முஸ்லிம்களே.

அமீருல் முஃமினீன் கால்வாய்

எகிப்து நாடு முஸ்லிம்களால் வெல்லப்படுவதற்கு ஓராண்டுக்கு முன்னர் அரபுநாட்டில் "ஆமுர் ரிமாதா" என்னும் கொடிய பஞ்சம் உண்டாயிற்று. ஆகையால், வெற்றிக்குப் பிறகு, நீல நதியிலிருந்து செங்கடலுக்கு ஒரு கால்வாய் தோண்டப்பட்டது. இந்தக் கால்வாயின் மூலமாக அரபு நாட்டுக்குத் தானியம் கொண்டுபோகப் பட்டது. பூர்வ காலத்தில் பத்தொன்பதாம் அரசவம்சத்தைச் சேர்ந்த முதலாம் ஸேதீ என்னும் மன்னர் இந்தக் கால்வாயைத் தோண்ட ஆரம்பித்தார். பிறகு, இருபத்தாறும் அரச வம்சத்தைச் சேர்ந்த நிகாவ் என்னும் அரசர் அதை முடித்தார். ஆயினும், அதற்குப் பிறகு ரோம ஆட்சியின் கவனக்குறைவால் அந்தக் கால்வாய் பாழடைந்துவிட்டது.

கவர்னர் அம்ரு பின் ஆஸ் இதை மறுபடியும் புஸ்தாத் நகரின் அருகிலிருந்து தோண்ட ஆரம்பித்தார். பிறகு அய்னுஷ்ஷம்ஸ், தமீலாத் பள்ளத்தாக்கு வரை கொண்டு வந்து குல்ஸும் நகருக்கு அருகில் செங்கடலுடன் சேர்த்து விட்டார். இதன் நீளம் எண்பது மைல். இந்த வேலை ஆறு மாதங்களில் முடிவடைந்துவிட்டது. முதல் ஆண்டிலேயே இந்தக் கால்வாய் வழியாக அறுபதாயிரம் தானிய மூட்டைகள் எகிப்திலிருந்து அரபு நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டன. இந்தக் காலமுதல் வியாபாரக் கப்பல்கள் எகிப்திலிருந்து அரபு நாட்டிற்கு வர ஆரம்பித்தன.

பிறகு, உமய்யாக்கள் காலத்தில், உமர்-பின்-அப்துல் அஜீஸ் என்னும் கலீபாவின் ஆட்சிக்குப் பிறகு, எகிப்து நாட்டிலிருந்த முஸ்லிம் கவர்னர்களின் கவனக்குறைவால் இந்தக் கால்வாய் மராமத்துச் செய்யப்படவில்லை. ஆதலால், இதில் மணல் நிரம்பி இறுதியாக மூடப்பட்டு விட்டது. இதன் அடையாளங்கள் சில இடங்களில் இருந்தன. ஆனால், கி. பி 1897-ல் இவற்றையும் மூடி விடும்படி எகிப்து அரசாங்கம் கட்டளையிட்டது.

ஸூயஸ் கால்வாய்

இதையன்றி, மத்தியதரைக் கடலேயும் செங்கடலேயும் இணேக்க அம்ரு பின் ஆஸ் விரும்பினுர். இவ்விரண்டு கடல் களுக்கு மிடையில் எழுபது மைல் நீளமுள்ள கால்வாய் தோண்ட முயன்ருர். ஆனுல், இவ்வாறு தோண்டப்படும் கால்வாய் வழியாக ரோம ராஜ்யத்தார் இஸ்லாமியக் குடியரசை எதிர்க்கலாமென்று நினேத்து கலீபா உமர் (ரலி) இதைத் தடுத்துவிட்டார். ஏனென்ருல், அச்சமயம் அரபி யரிடம் கடற்படை இல்லே. அந்தச் சூழ்நிலேயில் அவர்கள் ரோமர்களுடன் கடற்போர் செய்யும் நிலேயில் இல்லே.

எகிப்து

எகிப்து நாட்டைக் குறித்து கலீபா உமருக்கு கவர்னர் அம்ரு பின் ஆஸ் ஓர் அறிக்கை சமர்ப்பித்தார். இது இன்று வரை புகழுக்குரியதாகக் கருதப்படுகின்றது. கதா பாஜான் என்னும் பிரஞ்சு ஆசிரியர் இதை உலகமொழி களில் சிறந்ததொரு இலக்கியமாகக் கருதுகின்ருர். மேலும் இதை மாணவர்களுக்குப் பாடமாகக் கற்பிக்க வேண்டு மெனவும் வற்புறுத்துகின்ருர். கிப்பன் போன்ற ஐரோப் பிய சரித்திராசிரியர்களும் இதை மொழிபெயர்த்துள்ளார் கள். அம்ரு பின் ஆஸ் எழுதியதாவது :

“எகிப்து நாடு நிலவளமும் நீர்வளமும் உள்ளது. அங்கு பல்வேறு வர்ணமுள்ள செடிகொடிகளும் பலன் தரக் கூடி இனிய மரங்களும் உண்டாயிருக்கின்றன. இதன் நீளம் ஒருமாதப்பயண தூரமாகும். இதன் அகலம் 10 நாள் பயணத் தூரம். இதன் நடுப்பாகத்தில் பளிங்குபோன்ற நீரோட்டத்தையுடைய நீலநதி நெளிந்து வளேந்தோடு கிறது. வளர்பிறை தேய்பிறை போன்று அதன் பிரவாகம் சிற்சில சமயங்களில் பெருகியும் சில வேளேகளில் குறைந்தும் ஓடுகிறது. பெருக்கெடுத்தோடும் வேளேயில் அதன் அலேகள் துள்ளித் துள்ளி விளேயாடுகின்றன. அச்சமயம்

நாட்டிலுள்ள ஆறு கிளை நதிகள் அனைத்தும் நிரம்பிவிடுகின்றன. ஆற்றைக்கடந்து செல்வதற்காக மக்களுக்கு வேறு வாகனம் இல்லை. வெள்ளம் திடீரென்று குறைந்து அதன் ஆவேசமும் குறையும் பொழுது, ஆற்றின் இருகரைகளிலுமுள்ள நிலங்களில் விவசாயிகள் தானியங்களை விதைக்கின்றார்கள். பிறகு, மகசூலை அறுப்பதற்கு எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். விதைகள் முளைக்கும் பொழுது பூமியிலுள்ள ஈரத்தாலும், வானத்திலிருந்து பெய்யும் மழையின் போஷணையாலும் அவை நாளொரு மேனியாக வளர்ந்து பச்சிளங்குழந்தைகளைப் போன்று காட்சியளிக்கின்றன. நிலத்திற்குள் மறைந்துள்ள செல்வம் அவற்றின் வயிற்றின் வழியாக முதுகிற்குச் சென்றுவிடுகின்றது.

கலீபா அவர்களே! இந்த நாட்டின் நில வளத்தை நான் எவ்வாறு வர்ணிக்கமுடியும்? வெள்ளை நிறமுள்ள புஷ்பராகம், கருநிறமுள்ள அம்பர், பச்சை நிறமுள்ள வைடூரியம் ஆகியவற்றிற்கே இவற்றை ஒப்பிடலாம். மக்களின் ஜீவனோபாயத்திற்கான சாதனங்களை இந்தப் பூமியில் அடக்கி வைத்திருத்தலானது எல்லாம் வல்ல இறைவனுடைய வன்மையை வெளியாக்குகின்றது. இந்த நாட்டிலே மகசூலுக்கு முன்னர் தீர்வை வசூலிக்க முடியாது. வசூலிக்கும் தொகையில் மூன்றிலொரு பாகமேனும் இங்குள்ள ஆறுகள், பாலங்கள் முதலியவற்றின் மராமத்திற்காகச் செலவிடப்படல் அவசியமாகும். இதனால், மக்களின் வாழ்க்கை நலம் பெறும். வருமானமும் அதிகமாகும்''

கலீபா உமர் இதை வாசித்து வியப்படைந்து, "எனது கண்களுக்கு முன்னர், அம்ரு பின் ஆஸ் எகிப்து நாட்டைக் கொண்டுவந்து வைத்துவிட்டார்'' எனப் புகழ்ந்தார்:

நாட்டுப் பாதுகாப்பு

எகிப்தில் பிர்அவ்ன் மன்னர்கள் காலத்திலிருந்து நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஜமாபந்தி— வரி வசூல் தணிக்கை-நடக்கும். நிலத்தீர்வையின் தொகையைத் தீர்மானிக்கும் பொருட்டு சில ஆண்டுகளின் சராசரி விளைச்சலைக் கணக்கெடுத்து ரொக்கமாகவும் தானியமாகவும் வசூலித்து வந்தார்கள், இவ்வாறு வரி வசூல் மூலமாகக் கிடைக்கும் தானியத்தைத் தவிர, சேனையின் பராமரிப்பிற்காக இன்னும் அதிகமான தானியம் விலைக்கு வாங்கப் பட்டது. ஆனால், நீல நதியின் ஏராளமான நீர்ப் பெருக்கின் காரணமாக நிலங்கள் வளமடைந்து விவசாயம் செம்மையாகச் செய்யப்படுவதே எகிப்து நாட்டில் வழக்கமாக இருந்தது. ஆயினும், இந்த நீர்ப் பெருக்கு ஒரே அளவாகக் கிடைக்காமையால், விளைபொருள்களின் ஏற்றத் தாழ்வு ஏற்பட்டிருந்தது. எனவே, எகிப்து நாட்டில் ஒவ்வோர் ஆண்டிலும் நீல நதியின் வெள்ளத்தின் பெருக்கையும் குறைவையும் சார்ந்தே நிலவரி வசூலிக்கப்பட்டு வந்தது. அம்ரு பின் ஆஸ் இவ்விஷயங்களை நன்கு ஆலோசித்து கலீபாவுக்கு எழுதினர். கலீபாவின் இசைவைப் பெற்று ஹல்வான் என்னுமிடத்தில் நீலநதியில் ஓர் அணை கட்டுவித்தார். அது இன்றுவரையும் இருக்கின்றது. பன்னிரண்டாம் அரச வம்சத்தைச் சேர்ந்த மூன்ரும் அம்மான என்னும் மன்னர் காலத்திலே கட்டப்பட்ட அணைக்கட்டை அம்ரு பின் ஆஸ் புதுப்பித்தாரெனவும் சில சரித்திராசிரியர்கள் எழுதுகின்ருர்கள்.

இவ்வாறு கட்டப்பட்ட அணைக்கட்டின் நீர்மட்டத்திற்கேற்ப விளைபொருள்களின் அளவை மதிப்பிட்டுத் தீர்வை விதிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் விவசாயிகளை அழைத்து, அவர்களுடைய நிலங்களின் சாகுபடி, விளைந்த தானிய அளவு ஆகியவற்றை நன்கு விசாரித்த பிறகே தீர்வை விதிக்கப்பட்டது. இந்தக்

கணிப்பின்படியே ஒவ்வொருவரிடமும் வரிவசூல் செய்யப் பட்டது. விவசாயத் தீர்வையுடன் தொழில் வரியும் வசூ லிக்கப்பட்டது. அந்த நாட்டில் ரோமர்களின் ஆட்சியில் வசூலிக்கப்பட்ட இதர தீர்வைகள் முஸ்லிம் ஆட்சியில் வசூலிக்கப்படவில்லை.

ஹஸ்ரத் இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாமுடையவும்' அத்னன் அரபியருடையவும் தாயாரான ஹஸ்ரத் ஹாஜிரா அம்மையாரின் பூர்வத் தொடர்பு காரணமாக எகிப்து நாட் டாருடன் முஸ்லிம்கள் நல்ல விதமாக நடந்துகொள்ளும்படி நமது நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம வர்கள் கூறியிருக்கின்றார்கள். ஆதலால், வரிகளெல்லாம் கடுமையின்றி வசூலிக்கப்பட்டன. தீர்வையின் அளவு குறைக்கப்பட்டது. அதாவது, ஒரு ஜரீப் (நீட்டலளவை) அளவிற்காக ஒரு தீனர் அல்லது மூன்று அருப் (முகத் தலளவை) தானியத்திற்கு அதிகமாக விதிக்கப்படவில்லை. நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி-வ-ஸல்லமவர் களின் புதிய தொடர்பையும் முஸ்லிம்கள் மறந்துவிட வில்லை. அன்ஸஞ பிரதேசத்தைச் சேர்ந்த ஹபன் என்னும் கிராமத்திலிருந்து நபி பெருமானாரவர்களின் பிராட்டியார் மர்யம் (ரலி) வந்தவராதலால், அப் பிரதேசத் தாருக்கு தீர்வை மன்னிக்கப்பட்டது.

இவ்வாறு, ஒவ்வோராண்டிலும் வரிவசூல் செய்யப் பட்டுவந்தமையால் ஒரு குறிப்பான தொகை அரசாங்கத் திற்குக் கிடைக்க முடியாமற்போய்விட்டது. சாகுபடி செய்யப்படாத சில மாவட்டங்களுக்கும், கிராமங்களுக்கும் தீர்வை மன்னிக்கப்படுவது வழக்கம். எனவே, ரோம ஆட்சியில் இருந்ததைவிட முஸ்லிம் ஆட்சியில் வரிவசூல் குறைந்துவிட்டது. இஸ்லாமிய ஆட்சி ஆரம்பித்த ஆண்டில் ஒரு கோடி இருபது இலட்சம் தீனர்கள் வசூ லிக்கப்பட்டன. ஆனல், அதற்கு முந்திய ஆண்டில் ரோம ஆட்சியில் இரண்டு கோடி தீனர் வசூலிக்கப்பட்டது.

முஸ்லிம்கள் இவ்வாறு மெல்லினமாகவே வசூலித்த போதிலும், இந்த வருமானம் சில சமயம் குறைந்து விட்டது. ஒரே ஒரு தடவை, கலீபா உஸ்மான் (ரலி) காலத்தில் அப்துல்லாஹ் பின் ஸஅத் இரண்டு கோடி தீனுர்கள் வசூலித்தார். அமீர் முஆவியா காலத்தில் அரசாங்க நிர்வாகம் செம்மையாக இருந்தபோதிலும், தொண்ணூறு இலட்சத்திற்கு அதிகமாகக் கிடைக்கவில்லை. அதற்குப் பிறகு, உமய்யாக்களும் அப்பாஸிகளும் நாற்பது அல்லது முப்பது இலட்சமே வசூலித்தார்கள். பாத்திமீ கலீபாக்கள் காலத்தில் தீர்வை இரட்டிக்கப்பட்டது. எனினும், முப்பத்து நான்கு இலட்சத்திற்கு அதிகமாக வசூலாகவில்லை.

அப்துல்லாஹ் பின் ஸஅத்

ஹிஜ்ரி. 24-இல் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) கலீபா ஆனுர். அவர் தம்முடன் பால் குடித்துவளர்ந்த அப்துல்லாஹ் பின் ஸஅத் என்பவரை இப்ரிகியாவின் சேனுதிபதியாக நியமித்து, அம்ரு பின் ஆஸை முன்போல் கவர்னராக நிர்வாகம் செய்ய அனுமதித்தார். இதற்கிடையில், அலக்சாந்திரியாவிலிருந்த இரண்டரை இலட்சம் ரோமர்கள் முஸ்லிம்களுடன் செய்திருந்த உடன்படிக்கையை நிராகரித்துவிட்டார்கள். ரோம சக்ரவர்த்தியின் தூண்டுதல் காரணமாகவும், சில கிப்தி தலைவர்களின் ஆலோசனையைக் கேட்டும் அவர்கள் இஸ்லாமிய அரசாங்கத்திற்கு விரோதமாகக் கலகஞ்செய்யத் தயாராஞர்கள். ஹர்கல் சக்ரவர்த்தியின் புத்திரர் கான்ஸ்தன்தைன் என்பவர் அவர்களுக்கு உதவியாக மனுவேல் என்பவர் தலைமையில் ஒரு கடற்படை அனுப்பினுர். இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அலக்சாந்திரியாவிலிருந்து புறப்பட்டார்கள். அம்ரு பின் ஆஸ்ᐢ இதையறிந்து உடனே புறப்பட்டார். கலகக்காரர்கள் நக்யூஸ் என்னுமிடத்தில் எதிர்த்தார்கள். கடற்போரும் நிலப்போரும் நடந்தன. ரோமர்கள் தோல்வி

யடைந்தார்கள். அம்ரு பின் ஆஸ் அவர்களைப் பின் தொடர்ந்து அலக்சாந்திரியாவுக்குச் சென்று அவர்களைத் துரத்தினர். மனுவேல் கொல்லப்பட்டார். அச்சமயம் அம்ரு பின் ஆஸை தளபதியாகவும், அப்துல்லாஹ்பின் ஸஅதை கவர்னராகவும் நியமிக்க கலீபா உஸ்மான் விரும்பினர். ஆனால், அதற்கு அம்ரு பின் ஆஸ் இணங்கவில்லை. ஆகையால், அம்ரு பின் ஆஸ் நீக்கப்பட்டார். அப்துல்லாஹ் பின் ஸஅத் தளபதியாகவும், கவர்னராகவும் (ராணுவ, சிவில் தலைவராகவும்) நியமிக்கப்பட்டார்.

இப்புதிய நியமனம் பெற்றவுடன் அப்துல்லாஹ் பின் ஸஅத் நாற்பதாயிரம் போர்வீரர்களைத் தயாரித்துத் தென் இப்ரிகியா, தூனிஸ், அல்ஜீரியா, மொரோக்கோ, தஞ்சா ஆகிய பிரதேசங்களை வென்றார். ஹி. 31 இல், நூபியா பிரதேச மக்கள் அராஜகக் கலகம் செய்தார்கள். அப்பொழுது அவர்கள் அனைவரையும் அவர் தன்கலா என்னுமிடத்தில் சூழ்ந்துகொண்டார். கலகக்காரர்களின் தலைவர் அக்லீதரூஸ் சமாதானம் கோரவும், அவ்வாறே செய்யப்பட்டது.

ஸபாயீ குழப்பம்

ஹி. 33 இல் கலீபா உஸ்மானுக்கும் அவரது கவர்னர்களுக்கும் விரோதமாக ஸபாயீ கூட்டத்தார் எட்டுத் திக்கிலும் பிரச்சாரஞ்செய்தார்கள். அச்சமயம் ஹஜ் செய்யும் காலம். கலீபா உஸ்மான் எல்லா கவர்னர்களையும் ஹஜ் காலத்தில் மக்காவுக்கு அழைத்திருந்தார். எனவே, அப்துல்லாஹ் பின் ஸஅத் எகிப்தில் தமது பிரதிநிதியாக உக்பா பின் ஆமிர் என்பவரை நியமித்து விட்டுச் சென்றார். ஹஸ்ரத் உஸ்மானுடைய விரோதிகளில் ஒருவரான முஹம்மத் பின் குதைபா என்பவர் உக்பாவை எகிப்திலிருந்து நீக்கிவிட்டார். ஹஸ்ரத் உஸ்மான் இச்செய்தியை அறிந்து காதிஸியா போரில் வெற்றி கொண்ட ஸஅத்

பின் அபீ வக்காஸ் என்பவரை ஸபாயீ கட்சியாரைச் சமாதானப்படுத்தும்படி அனுப்பினுர். ஆனல், அக்கட்சியார் அவரது சொல்லைக் கேளாமல் வெகு இழிவாக நடந்துகொண்டார்கள். மேலும், அப்துல்லாஹ் பின் ஸஅத் எகிப்துக்குத் திரும்பி வந்தபொழுது. அவரை அங்கு வரவிடாமல் தடுத்தும் விட்டார்கள். எனவே, அவர் அஸ்கலான் நகருக்குப் போய்விட்டார்.

இதற்குப் பிறகு, ஸபாயீ கட்சியார் எகிப்து, கூபா, பஸ்ரா ஆகிய பிரதேசங்களிலிருந்து மதீனுவுக்கு வந்து, அங்கு கலீபா ஹஸ்ரத் உஸ்மானைக் கொலை செய்துவிட்டார்கள். இச்செய்தியை அறிந்த உஸ்மான் கட்சியார், அவரது இரத்தத்திற்காக எகிப்து நாட்டில் பழிவாங்க வேண்டுமென்று போர் முழக்கஞ்செய்து, கொடியேந்திப் புறப்பட்டார்கள். இந்தக் கொடி முஆவியா பின் குதைஜ் என்பவரின் கையில் இருந்தது. இவருடன் கார்ஜா பின் குதாபா, முஸ்லிம் பின் முகல்லத், புஸ்ர் பின் அர்தாத் முதலியோர் சேர்ந்திருந்தார்கள். இவர்கள் அனைவரும் தங்கள் கட்சியாரை அழைத்துக்கொண்டு ஸயீத் நகர் சென்ருர்கள். இப்னு அபீ ஹஸீபா இவர்களை எதிர்ப்பதற்காக ஒரு சேனையை அனுப்பினுர். ஹி. 36இல் கரப்தா என்னுமிடத்தில் இருகட்சியாருக்கிடையில் நடந்த போரில், உஸ்மான் கட்சியார் வெற்றியடைந்து அந்த நகரையே தங்கள் தலைமை ஸ்தானமாக அமைத்துக்கொண்டார்கள்.

கய்ஸ் பின் ஸஅத்

ஹஸ்ரத் உஸ்மான் கொலையுண்ட பிறகு, ஹஸ்ரத் அலீ கலீபாவானுர். அவருக்கு விசுவாசப்பிரமாணம் (பையத்) செய்யப்பட்டது. அன்ஸார்களின் தலைவரான ஸஅத் பின் உப்பாதா என்பவரின் வீரமும் திறமையுமுள்ள புதல்வர் கய்ஸ் என்பவரை ஹஸ்ரத் அலீ எகிப்தில் கவர்னராக நியமித்தார். அவர் எகிப்துக்குச் சென்று

அந்த நாட்டு மக்களை இணங்கும்படி செய்தார். ஆனால், கரப்தா மக்கள் மட்டும் அவருக்குக் கீழ்ப்படியச் சம்மதிக்க வில்லை. ஏனென்றால், கய்ஸ் கவர்னராக இருப்பதையும், ஹஸ்ரத் உஸ்மானுடைய கொலைக்குப் பழிவாங்கவில்லை என்னும் காரணத்தால் ஹஸ்ரத் அலீயின் கிலாபத்தை யும் அவர்கள் அங்கீகரிக்கவில்லை. அந்த நிலையில் கய்ஸ் அவர்களை ஒன்றும் செய்யவில்லை. "நான் உங்களை விசு வாசப்பிரமாணம் செய்யும்படி கட்டாயப்படுத்தவும் மாட் டேன். உங்களுக்கு அரசாங்கத்திலிருந்து கிடைக்கும் உபகாரச் சம்பளங்களை நிறுத்தவும் மாட்டேன். ஆனால், நீங்கள் அமைதியுடன் வாழவேண்டும்" என்று அவர் களுக்கு எழுதினார்.

"ஹஸ்ரத் உஸ்மானுடைய இரத்தத்திற்காக நான் பழி வாங்குவேன்!" என்று அமீர் முஆவியா எழுந்து நின்றபொழுது, எகிப்து நாட்டில் கய்ஸ் கவர்னராக இருந்தார். அது அவருக்குப் பெருந்தடையாக இருந் தது. ஒரு புறத்திலிருந்து இராக் சேனையும், மறுபுறத்தி லிருந்து எகிப்து சேனையும் வந்துவிட்டால், இவற்றிற் கிடையில் தாம் நசுக்குண்டு போகலாமென்று அவர் அஞ்சினார். எனவே, கய்ஸைத் தமது கட்சியில் சேர்த்துக் கொள்ள முயன்றார். ஆனால், அவர் அந்த முயற்சியில் வெற்றி பெறவில்லை. அதற்குப் பிறகு, அவர் ஸிரியா மக்களிடம், "நீங்கள் கய்ஸை ஒன்றும் சொல்லவேண்டாம். அவர் நமக்கு உதவி செய்கிறார். நமக்கு அவரிடமிருந்து கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. கரப்தா வாசி களிடம் அவர் கொடுமையாய் நடக்காமலும், அவர் களுடைய உபகாரச் சம்பளங்களை நிறுத்தாமல் இருப்பதும் உங்களுக்குத் தெரியவில்லையா?" என்று விளம்பரஞ் செய்ய ஆரம்பித்தார். முஹம்மத் பின் அபூ பக்ர், முஹம்மத் பின் ஜஃபர் பின் அபீ தாலிப் முதலியோர் இச்செய்தியை ஸிரியாவிலிருந்து ஹஸ்ரத் அலீக்கு எழுதினார்கள். ஹஸ்ரத் அலீ உடனே தமது இரு புதல்வர்களையும் அப்

துல்லா பின் ஜஃபரையும் அழைத்து, இந்தச் செய்தியைத் தெரிவித்து, "நான் கய்ஸை இவ்விதமாக ஒருகாலும் சந்தேகிக்கமாட்டேன்" என்று கூறினர். அதற்கு அவர்கள், "நம்பாவிட்டாலும், இந்த சந்தேக நிலையில் கய்ஸை நீக்கிவிடுதலே நலம்" என்னும் கருத்தைத் தெரிவித்தார்கள்.

இதற்கிடையில் கய்ஸிடமிருந்து கடிதம் வந்து சேர்ந்தது. அதில் அவர் எகிப்து நாட்டார் விசுவாசப் பிரமாணம் செய்ததையும், கரப்தா வாசிகளின் செய்தியையும் தெரிவித்து, "நான் கரப்தா வாசிகளை ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டேன்" என்றும் எழுதியிருந்தார். அச்சமயம், அப்துல்லாஹ் பின் ஜஃபர், "கய்ஸ் இவ்வாறு செய்தமையால், அவர் ஒருகால் எதிர்க்கட்சியில் சேர்ந்திருக்கலாமென்ற ஐயம் உண்டாகின்றது. ஆகையால், கரப்தா வாசிகளுடன் போரிடும்படி அவருக்குக் கட்டளையிடவேண்டும்" எனக் கூறினர். ஹஸ்ரத் அலீயும் அவ்வாறே எழுதினர். கலீபாவின் கடிதம் வந்தது. அதை கய்ஸ் வாசித்தார். பிறகு, கலீபாவுக்கு ஒரு கடிதம் எழுதினர். அதில் "கரப்தா வாசிகளில் பத்தாயிரம் பேர். அவர்களில் பெரும்பாலோர் எகிப்து நாட்டில் முதன்மையானவர்களாகவும், சங்கைக்கு உரியோராகவும் இருக்கின்றனர்கள். நான் அவர்களை எந்த நிலையில் விட்டிருக்கின்றேனோ அதே உசிதமானதாக எனக்குத் தோன்றுகின்றது. போர் ஆரம்பித்துவிட்டால் பொதுமக்களுக்கிடையில் ஒரு பெருங்குழப்பம் உண்டாகிவிடும். ஏனென்றால், இந்த மக்கள் மூங்கிற்காட்டின் வேங்கைகளாக இருக்கின்றனர்கள். இதையன்றி, அவர்களுக்கு அமீர் முஆவியாவின் உதவியும் கிடைத்துவிடும்" என்று எழுதியனுப்பினர்.

இந்த விளக்கத்தை ஹஸ்ரத் அலீ ஏற்றுக்கொள்ளவில்லை. உடனே கய்ஸை நீக்கிவிட்டார். அந்தப் பதவியில் தமது பராமரிப்பிலிருந்த முஹம்மத் பின் அபூ பக்ரை நியமித்தார். புதிய கவர்னர் எகிப்துக்குச் சென்றனர். கரப்தா மக்களுக்கு ஓர் அறிக்கை விடுத்தார். அதில்,

"நீங்கள் கலீபாவுக்கு விசுவாசப் பிரமாணம் செய்ய வேண்டும். இன்றேல், எகிப்திலிருந்து வெளியேறிவிட வேண்டும்" என்றெழுதினர். ஆனல், அவர்கள் அதற்கு இணங்காமல் போருக்குத் தயாரானர்கள். அதே சமயத்தில் ஹஸ்ரத் அலீ, அமீர் முஆவியா இருவருக்கிடையில் ஸிப்பீன் போர் ஆரம்பித்து விட்டது. இருகட்சியாரும் அந்தப் போரின் முடிவை எதிர்பார்த்துக்கொண்டே இருந்தார்கள். ஹஸ்ரத் அலீ ஸிப்பீனிலிருந்து திரும்பி வந்து மறுபடியும் ஆட்சி நடத்துவதை அறிந்தபிறகு கரப்தா வாசிகள் போருக்குத் தயாராகி முஹம்மத் பின் அபூ பக்ரைப் பலமுறை தோற்கடித்தார்கள். அப்பொழுது, ஜஸீரா பிரதேசத்தில் கவர்னராக இருந்த அஷ்தர் என பவரை ஹஸ்ரத் அலீ எகிப்து நாட்டின கவர்னராக நியமித்தனுப்பினர். ஆனல், அவர் வரும் வழியில் குல்ஸும் நகரில் இறந்துபோனர். அமீர் முஆவியாவின் தூண்டுதலின் பேரில் குல்ஸும் நகரக் கொத்துவால் அவருக்கு ஷர்பத்தில் விஷமிட்டுக் கொடுத்து விட்டாரென்று சில சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர்கள். ஆனல், ஹஸ்ரத் இமாம் ஹஸன ரலியல்லாஹு அன்ஹுக்கு அவரது மனைவி ஜஃதாவின் மூலமாக விஷம் கொடுக்கப்பட்டதைப் போன்றே இதுவும் ஓர் ஆதாரமற்ற செய்தியாகும்.

இதற்கிடையில், அமீர் முஆவியா தமது சார்பில் அம்ரு பின் ஆஸை எகிப்து நாட்டு கவர்னராக நியமித்து, ஆறுயிரம் போர்வீரருடன் அனுப்பினர். மேலும், கரப்தா வாசிகளுக்கு, " நீங்கள் அஞ்சவேண்டாம். நான் உங்களுக்கு உதவி அனுப்புகிறேன் " எனவும் எழுதினர். அம்ரு பின் ஆஸ் எகிப்துக்குச் சென்றார். முஹம்மத் பின் அபூ பக்ருக்கு, " நீங்கள் மிஸ்ரைவிட்டுப் போய்விட்டால் நலமாக இருக்கும். என் கையால் உங்களுக்குக் கேடு விளையவேண்டுமென்று நான் விரும்பவில்லை " என்றெழுதியனுப்பினர். ஆனல், முஹம்மத் பின் அபூ பக்ர் ஒரு சேனையுடன் வந்து அவரை எதிர்த்தார். அதில் அவர் உயிர் இழந்தார்.

அம்ரு பின் ஆஸ் (இரண்டாம் முறை)

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் ஹி. 38 இல் தாம் தயாரித்த புஸ்தாத் நகரில் அம்ரு பின் ஆஸ், மறுபடியும் பிரவேசித்தார். பல்வேறு குழப்பங்களாலும் கலகங்களாலும் துன்பப்பட்டுக்கொண்டிருந்த எகிப்து நாட்டாருக்கு நிம்மதியும், திருப்தியும், மகிழ்ச்சியும் ஏற்பட்டது. அந்த நாட்டு மக்களைப் பற்பல துன்பங்களிலிருந்து அவர் காப்பாற்றினர். பல அரசியல் நிர்வாகச் சீர்திருத்தங்கள் செய்தார். சேனைகளைத் தயாரித்து ஷரீக் பின் ஸமீ என்பவர் தலைமையில் பர்பர்களை எதிர்க்க அனுப்பினர். ஷரீக் பின் ஸமீ அவ்வாறே சென்று வெற்றிபெற்று பர்பர்களுடன் உடன்படிக்கை செய்துகொண்டு திரும்பினர். ஆனல், அதற்குப் பிறகு, பர்பர்கள் அந்த உடன்படிக்கையை முறித்துவிட்டார்கள். எனவே, அம்ரு பின் ஆஸ் மறுபடியும் உக்பா பின் நாபிஃ என்பவரை அனுப்பினர், அவர் சென்று பர்பர்களைத் தோற்கடித்தார். ஹவாராவுக்கும் சென்று வெற்றியுடன் திரும்பினர். அச்சமயம் அம்ரு பின் ஆஸ் மரணப்படுக்கையில் இருந்தார்.

3. உமய்யாக்கள் காலம்

ஹி. 41—132. கி. பி. 661—750.

அம்ரு பின் ஆஸ் ஹி. 43-இல் ஈதுல் பித்ர் இரவில் புஸ்தாத் நகரில் காலஞ்சென்ருர். இவரது மரணத்திற்காக எகிப்து நாட்டார் அனைவரும் துக்கங்கொண்டாடினர்கள்.

அலக்சாந்திரியா நூல்நிலையம்

எகிப்து நாட்டில் அலக்சாந்திரியா நகரிலிருந்த பழங்கால நூல்நிலையத்தைத் தீக்கிரையாக்கிவிட்டதாக சில ஐரோப்பிய சரித்திராசிரியர்கள் அம்ரு பின் ஆஸ்மீது குற்றம் சுமத்துகின்றனர்கள். ஆனல், இதை நன்கு

ஆராய்ந்து கிப்பன், டேலர், ஸதியு, கஸ்தாவ், லேபான் போன்ற சிறந்த ஐரோப்பிய சரித்திராசிரியர்களே இவ் விஷயத்தைப் பொய்யென்று நிரூபித்து, இக் குற்றச் சாட்டில் அணுவளவேனும் உண்மையில்லையெனக் கூறு கின்றார்கள். ஏனென்றால், இந்த நூல்நிலையம் ரோம சக்ரவர்த்தி ஜூலியஸ் ஸீஸர் காலத்தில் கி. மு. 47-ல், அதாவது இதற்கு ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்னரே எரிக்கப்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு சேகரிக்கப்பட்ட புத்தகங்கள் இஸ்கப்தூபேல் என்பவர் கட்டளையால், கி. பி. 391-இல் எரிக்கப்பட்டன. எனவே, முஸ்லிம்கள் எகிப்து நாட்டை வென்றபொழுது அலக்சாந்திரியாவில் நூல்நிலையமே இல்லை. காலஞ்சென்ற மௌலானா ஷிப்லி நுஃமானீயும் இதற்கு மறுப்பு எழுதியுள்ளார்.

அம்ரு பின் ஆஸ் இறந்த பிறகு, அமீர் முஆவியா அந்தப் பதவியில் அவரது புதல்வர் அப்துல்லாஹ் என்பவரை நியமித்தார். ஆனால், அதற்குப் பிறகு, சில நன்மைகளை உத்தேசித்துத் தமது சகோதரர் உத்பா பின் அபீ ஸுஃப்யான் என்பவரை நியமித்தனுப்பினார். ஹி. 44-இல் அவர் இறந்துபோகவும் உக்பா பின் ஆமிருக்கு அப் பதவி கிடைத்தது. இவர் மேலான பண்புகள் நிறைந்தவர். ஆயினும், அரசியல் அறிவும் ஆற்றலும் அனுபவமும் அவரிடம் ஒரு சிறிதும் கிடையாது. எனவே, சில மாதங்களுக்குப் பிறகு, மஸ்லமா பின் முகல்லத் என்பவர் கவர்னரானார். மஸ்ஜித்களிஸ் மனாராக்களை முதல் முதலாகக் கட்டுவித்தவர் இவரே. ஹி. 53-இல் பரன்ஸ் என்னுமிடத்தில் ரோமர்கள் தங்கள் கடற்படையைக் கொண்டுவந்து இறங்கியபொழுது, மஸ்லமா அவர்களை எதிர்த்தார். இந்தப் போரில் அம்ரு பின் ஆஸின் அடிமையும், சிறந்த ஊக்கத்துடன் போர் புரிவோரு மான வர்தான் என்பவர் பல முஸ்லிம்களுடன் உயிர் துறந்தார். ஹி. 60-இல் அமீர் முஆவியா இறந்துபோனார். எஜீத் கலீபாவான பிறகு, உக்பா பின் நாபிஃ என்பவர்

இப்ரிகியாவின் தளபதியாக நியமிக்கப்பட்டார். மஸ்லமா மிஸ்ரில் கவர்னராகவே தொடர்ந்திருக்க அனுமதிக்கப் பட்டார். அவர் எகிப்து நாட்டு மக்களை எஜீதின் கிலாபத்தை ஒப்புக்கொள்ளும்படி செய்து விசுவாசப் பிர மாணம் வாங்கினார். அப்துல்லாஹ் பின் அம்ரு பின் ஆஸ் என்பவர் எஜீதுக்கு விசுவாசப் பிரமாணம் செய்ய மறுத்து விட்டார். "நீங்கள் ஜமாஅத்—சமுதாயத்துடன் ஒத்துப் போகாவிட்டால், உங்கள் வீட்டிற்கு நெருப்பு வைத்து விடுவேன்" என்று முஸ்லமா அச்சமூட்டினார். எனவே, அவர் அதற்கு இசைந்துவிட்டார்.

ஹி. 64 ரஜப் 25ல் மஸ்லமா இறந்துபோனார். இவர் எகிப்தில் பதினைந்து ஆண்டுகள் கவர்னராக இருந்தார். அக்காலத்தில் அந்த நாட்டில் அமைதியே குடிகொண் டிருந்தது. அந்தப் பதவிக்கு ஸயீத் பின் எஜீத் பலஸ்தீனி என்பவர் வந்தார். எகிப்து நாட்டார் அவரை எதிர்த்தார் கள். எனினும், அவரது நீதியையும் பரோபகார உள்ளத் தையும் கண்டு அவருக்குப் பணிந்துவிட்டார்கள்.

ஹி. 64இல் அப்துல்லாஹ் பின் ஜுபைர் கலீபா ஆனார். அவர் ஸயீதை நீக்கிவிட்டுத் தமது நம்பிக்கைக்குரிய அப்துர் ரஹ்மான் பின் உத்பாவை அனுப்பினார். அவர் எகிப்துக்குச் சென்று அப்துல்லாஹ் பின் ஜுபைருடைய கிலாபத்திற்காக விசுவாசப்பிரமாணம் வாங்கி, உமய்யா கட்சியாரை அங்கிருந்து துரத்திவிட்டார். உமய்யாக் களுக்கு வெற்றியளித்த மர்ஜ் ராஹத என்னும் போருக்குப் பிறகு மர்வான் தமது சேனைகளைக் கொண்டு எகிப்துக்கு வந்தார். அப்துர் ரஹமான் அவரை எதிர்த்தார். ஆனால், தோல்வியடைந்து திரும்பிவிட்டார். மர்வான் அங்கு இரண்டு மாதகாலம் தங்கியிருந்து, தமது புதல்வர் அப்துல் அஜீஸ் என்பவரை எகிப்தின் கவர்னராக நியமித் துத் திரும்பிவிட எண்ணினார். அச்சமயம் சிறுவயதுள்ள அவர் புதல்வர், "தந்தையே! நான் இந்த நாட்டில் தனி மையாக எவ்வாறிருப்பேன்? இங்கு என்னுடன் பிறந்த

வர்களோ, சுற்றத்தாரோ இல்லையே!'' என்ருர். அதைக் கேட்ட மர்வான், "மகனே! இந்த நாட்டு மக்களுடன் நல்ல விதமாக நடந்துகொள். அவர்களுக்கு உதவி செய். நீ அவ்வாறு செய்தால், அவர்கள் அனைவரும் உன்னுடைய சகோதரர்களாகி விடுவார்கள்'' எனக்கூறினுர். அங்கிருந்து புறப்படும்பொழுது, தெய்வ பக்தி, தொழுகை முதலான சன்மார்க்க முறைகளைக் கடைப்பிடித்து வாழ்க்கை நடத்த வேண்டுமெனவும், வாக்குறுதியின்படி நடக்கவேண்டுமெனவும், தூய்மையான வாழ்க்கை நடத்த வேண்டுமெனவும் மகனுக்கு உபதேசம் செய்தார்.

ஹி. 65இல் மர்வான் காலஞ் சென்ருர். பிறகு, அவரது சகோதரர் அப்துல் மலிக் கலீபா ஆனுர். இந்தப் புதிய கலீபாவின் கட்டளைக்கிணங்க கவர்னர் அப்துல் அஜீஸ், புஸ்தாத் நகரில் ஒரு பெரிய பாலம் கட்டுவித்தார். அம்ரு பின் ஆஸ் கட்டிய ஜாமிஃ மஸ்ஜிதையும் மராமத்துச் செய்தார். கிப்திகளின் பாதிரிகள் அதுவரை செலுத்தாமலிருந்த தீர்வைகளையும் வசூலித்தார். அப்துல் அஜீஸ் இருபது ஆண்டுகள் எகிப்தில் கவர்னராக இருந்தார். அவர் மிகப் பொறுமையுள்ளவர். தரும குணமுள்ளவர். புத்திமான். நற்பண்புகள் நிறைந்தவர். அவரது ஆட்சியில் மக்கள் நல்வாழ்வு வாழ்ந்து நிம்மதியுடன் இருந்தார்கள். அவர் ஹி. 76ல் இறந்துபோனுர். அதற்குப் பிறகு, கலீபா அப்துல் மலிக் தமது புத்திரர் அப்துல்லாஹ் என்பவரை எகிப்து நாட்டு கவர்னராக நியமித்தனுப்பினுர்.

இந்த ஆண்டில் கலீபா அப்துல் மலிக் காலஞ் சென்ருர். வலீத் என்பவர் கலீபா ஆனுர். அப்துல்லாஹ் எகிப்தில் கவர்னராகவே இருந்தார். அக்காலத்தில் அரசாங்க அலுவலகங்களில் தஸ்தாவேஜுகள் கிப்தி மொழியில் கிப்தியரால் எழுதப்பட்டு வந்தன. குமாஸ்தாக்களின் தலைவன் அந்தனுஷ் என்பவரை நம்பமுடியவில்லை. எனவே, ஹம்ஸ் நகரைச் சேர்ந்த இப்னு யர்பு பஸாரீ என்பவரை அழைத்து எல்லா தஸ்தாவேஜுகளையும்

கவர்னர் அப்துல்லாஹ் அரபி மொழியில் மாற்றியமைத்து விட்டார். ஹி. 88இல் அப்துல்லாஹ் அச்சமயம் உமய்யாக்களின் தலைநகராக இருந்த டமஸ்கஸ் நகருக்குச் சென்றார். அச்சமயம், அப்துர் ரஹ்மான் பின் உமர் என்பவரைத் தமது பிரதிநிதியாக நியமித்துச் சென்றார். அப்பொழுது எகிப்தில் பெரும் பஞ்சம் உண்டாகி மக்கள் கஷ்டப்பட்டார்கள்.

ஹி. 90 இல் குர்ரா பின் ஷரீக் கவர்னரானார். அவர் கல்நெஞ்சமுடையவர். எகிப்து நாட்டாரின் மூலக் கொள்கைகளையும், பழக்கவழக்கங்களையும் பரிகாசமாகக் கருதினார். எனவே, அந்த மக்கள் மனம் நொந்து போனார்கள். ஹி. 96 இல் புஸ்தாத் நகரில் அவர் இறந்துபோனார். பிறகு, அப்துல் மலிக் பின் ரிபாஆ என்பவர் கவர்னராக வந்தார். இதே ஆண்டில் கலீபா வலீத் இறந்துபோனார். பிறகு, ஸுலைமான் பின் அப்துல் மலிக் என்பவர் கலீபா ஆனார். அவர் கட்டளைப்படி இந்த கவர்னர் ரவ்லா என்னுமிடத்தில் நீலநதியில் அணை கட்டுவித்தார். அப்பொழுது உஸாமா பின் எஜீத் என்பவர் எகிப்தில் தீர்வை வசூல் அதிகாரியாக இருந்தார். உஸாமா மிகவும் கொடியவர். நீலநதியில் படகுகளில் ஏறுமிடங்களிலும்ம், இறங்குமிடங்களிலும் நபர் ஒன்றுக்கும் பத்து தீனார் வசூல் செய்தார்.

ஒரு சமயம் ஓர் ஏழை மாது தனது புதல்வனுடன் நீலநதியைக் கடக்க எண்ணங்கொண்டாள். இருவருக்கும் இருபது தீனார் கொடுக்கவேண்டும். ஆகையால், அவள் வெகு கஷ்டத்துடன் இருபது தீனார் சேகரித்துக் கொடுத்தாள், இருவரும் படகில் உட்கார்ந்தார்கள். படகு நீலநதியில் செல்லும்பொழுது, அவளுடைய புதல்வன் ஆற்றில் தண்ணீர் மொண்டுகொள்வதற்காகக் குனிந்தான். திடீரென்று அந்தப் பையனை ஒரு முதலை இழுத்துக்கொண்டு சென்றது. படகில் இருந்தவர்கள் பார்த்துக்கொண்டே இருந்தார்கள். பெற்ற தாய் அழுது கொண்டு கரை சேர்ந்தாள். அங்கு அவளிடம் பிரயாணச்

சீட்டு (டிக்கட்) கேட்கப்பட்டது. ஆனால், சீட்டு புதல்வனிடமிருந்தது. அவனை முதலை பிடித்துத் தின்றுவிட்டது. படகிலிருந்தவர்கள் அவள் சீட்டு வாங்கியதற்குச் சாட்சியமும் சொன்னார்கள். ஆனால், அது ஒப்புக்கொள்ளப் படவில்லை. அவள் அழுதாள்; கெஞ்சினாள். ஆனால், சுங்க அதிகாரிகள் கேட்கவில்லை. இறுதியாக, அவள் அணிந்திருந்த நகையை விற்று இருபது தீனார் கொடுக்கும் வரை அவர்கள் அவளை விடவில்லை.

இத்தகைய கொடுஞ்செயல்களின் காரணமாக மக்கள் உஸாமாவை வெறுத்தார்கள். கலகம் செய்யவும் தயாராகி விட்டார்கள். இதற்கிடையில், ஹி. 99இல் கலீபா ஸுலைமான் இறந்துவிட்டார். பிறகு, உமர் பின் அப்துல அஜீஸ் கலீபா ஆனார். அவர் அய்யூப் பின் ஷர்ஜீல் என்பவரை எகிப்துக்குக் கவர்னராக அனுப்பினார். மேலும், உஸாமாவின் கழுத்திலும் கைகளிலும் கால்களிலும் விலங்கிட்டுத் தம்மிடம் அனுப்பும்படி கட்டளையிட்டார். அய்யூப் பின் ஷர்ஜீல் அவ்வாறே செய்தார். ஆனால், வரும் வழியில் உஸாமா இறந்துவிட்டார். இந்தப் புதிய கவர்னர் பளிங்குபோன்ற உள்ளமுடையவர். நீதிமான். இறையச்சம் நிறைந்தவர். புத்திக் கூர்மையுள்ளவர். ஆனால், அதே காலத்தில் எகிப்தில் படைத்தலைவராக இருந்த ஹப்பான் பின் ஷரீஹ் என்பவர் குரூர குணமுள்ளவர். முஸ்லிமாகிவிட்ட மக்களிடம் அவர் ஜிஸ்யா வசூல் செய்து வந்தார். ஆனால், கலீபா உமர் பின் அப்துல் அஜீஸ் அவரைப் பயமுறுத்தி, எச்சரிக்கை செய்து சவுக்கடி கொடுத்தார்.

ஹி. 101இல் எஜீத் பின் அப்துல் மலிக் கலீபா ஆனார். அவர் சிறிது காலம் அய்யூபை கவர்னராக அனுமதித்து, பிறகு பஷர் பின் ஸப்வான் என்பவரை நியமித்தார். இன்

னும், சிலகாலம் சென்று அவரை இப்ரிகியா * வுக்கு அனுப்பிவிட்டு ஹன்ஸலா பின் ஸப்வானை எகிப்து கவர்னராக நியமித்தார். ஹி, 104-இல் ஹன்ஸலாவுக்குப் பதிலாக கலீபாவின் சகோதரர் முஹம்மத் பின் அப்துல் மலிக் நியமிக்கப்பட்டார். ஆனுல், ஹி. 105-இல் ஹிஷாம் என்பவர் கலீபாவான பொழுது, முஹம்மத் பின் அப்துல் மலிகைத் திரும்ப அழைத்துக்கொண்டு ஹுர்ரா பின் யூஸுப் என்பவரை கவர்னராக நியமித்தார். இந்த கவர்னர் காலத்தில் ஹி. 107-இல் கிப்திகள் கலகஞ்செய்தார்கள். உடனே அவர் தாமாகவே பதவியிலிருந்து விலகிவிட்டார். பிறகு, ஹப்ஸ் பின் வலீத கவர்னராக நியமிக்கப்பட்டார். ஆனுல், ஒரே ஆண்டில் அப்துல் மலிக் பின் ரிபாஆ இரண்டாம் முறை கவர்னராக நியமிக்கப்பட்டார். எனினும், அதே ஆண்டில் அவர் இறந்துவிடவே, அவரது சகோதரர் வலீத் பின் ரிபாஆ அந்தப் பதவியைப் பெற்ருர். இவர் நிம்மதியாக ஒன்பது ஆண்டுகள் நிர்வாகம் செய்து ஹி. 117-இல் இறந்துபோனுர். பிறகு, அப்துர் ரஹ்மான பின் காலித் பஹ்மீ நியமிக்கப்பட்டார். அடுத்த ஆண்டில் அவரும் இறந்துபோனுர். பிறகு, இரண்டாம் தடவை ஹன்ஸலா பின் ஸப்வான் வந்து, ஆறு ஆண்டுகள் ஆட்சி செய்தார். இவரது கொடுமைகளை மக்கள் சகிக்கமுடி

நாம் இன்று ஒரு கண்டத்தை ஆப்பிரிக்கா என்கிருேம். ஆனுல் எகிப்துக்கு மேற்கிலுள்ள வட ஆப்பிரிக்காவை அரபியர் **இப்ரிகியா** என்றழைத்தார்கள். இது மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. (1) **மக்ரிபுல்** அக்ஸா—மேற்குக் கடைசி. இதை மவ்ரிதானியா, மராகஷ், (மொரோக்கோ) என்று சொல்லுவார்கள். அது அத்லான்திக் மகாசமுத்திரத்திலிருந்து திலம்ஸான் (தில்மிஸான்) வரையும், தெற்கே ஸஹாரா என்னும் பெரும் பாலைவனம் வரையும் பரவியிருந்தது. (2) மக்ரிபுல் அத்ஞு—சிறிய மேற்கு. இது உரான் தொடங்கி புகியா பிரதேசம் வரையும் இருந்தது. (3) அசல் இப்ரிகியா அல்லது பர்பரீ. இது இப்பொழுதுள்ள அல்ஜீரியாவின் கிழக்கு எல்லையிலிருந்து எகிப்து நாட்டின் மேற்கு எல்லைவரை பரவியிருந்தது. இப்பிரதேசத்தின் தென்பாகத்தில் அஸ் ஸுவ்தான் (**Soudan**) என்னும் கருந்தேசம் இருந்தது.

யாமல் கலீபாவிடம் முறையிட்டார்கள். ஆகையால், அவர் இப்ரிகியாவுக்கு அனுப்பப்பட்டார். ஹப்ஸ் பின் வலீத் என்பவர் இரண்டாம் முறை கவர்னராக நியமனம்பெற்றூர்.

ஹி. 125-இல் வலீத் பின் எஜீத் கலீபா ஆனார். இவர் ஹப்ஸை நீக்கிவிட்டு, ஈஸா பின் அதாவை கவர்னராக நியமித்தார். ஆனால், இவர் ஒழுங்கு தவறி நிர்வாகம் செய்தமையால், ஹப்ஸ் என்பவர் மூன்றும் முறை அப்பதவிக்கு வந்தார்.

ஹி. 127-இல் உமய்யாக்களின் இறுதி கலீபா மர்வான் சிம்மாசனம் ஏறியபொழுது, அவர் ஹப்ஸை நீக்கிவிட்டு, இதாஹியா நஜீபீ என்பவரை நியமித்தார். ஆனால், எகிப்து நாட்டார் அதற்கு உடன்படவில்லை. "எங்களுக்கு ஹப்ஸ் பின் வலீதே கவர்னராக இருக்கவேண்டும். வேறு எவரும் வரவேண்டிய அவசியமில்லை. கலீபா எங்களை பலவந்தப் படுத்தினால், நாங்கள் அவருக்குச் செய்திருக்கும் விசுவாசப் பிரமாணத்தை முறித்துவிடுவோம்" என்றார்கள்.

இவரே உமய்யாக்களின் இறுதி கவர்னர். ஏனென்றால், பிறகு கூபா நகரில் அப்பாஸிகளின் கிலாபத் நிறுவப்பட்டது. உமய்யாக்களின் இறுதி கலீபா மர்வான் தப்பியோடி எகிப்துக்கு வந்தார். ஸாலிஹ் பின் அலீ ஒரு பெருஞ் சேனையுடன் அவரைத் தொடர்ந்து பூஸீர் என்னுமிடத்தில் கைதுசெய்து, கி. பி. 750ல் ஹி. 132 ஜமாதுல் ஆகிர் 27ல் கொலைசெய்துவிட்டார்.

4. அப்பாஸிகள்—ஆரம்ப காலம்

ஹி. 132—257. கி. பி. 750—870

அப்பாஸிகளின் முதலாம் கலீபா ஸப்பாஹ் (Saffah) என்பவரே. மர்வானை வென்ற ஸாலிஹ் பின் அலீ அவரது சிறிய தகப்பனார். அவரே எகிப்தில் கவர்னராக நியமிக்கப் பட்டார். இந்தப் புதிய கவர்னர் எகிப்துக்குச் சென்றூர். மக்களிடம் அப்பாஸிகளுக்காக விசுவாசப் பிரமாணம் வாங்

கினர். அந்த நாட்டிலுள்ள உமய்யாக் கட்சியாரைத் தேடித்தேடிப் பிடித்துக் கொலைசெய்தார். இதே ஆண்டில் அவருக்கு பலஸ்தீன் மாகாண கவர்னர் பதவியும் கிடைத்தது. எனவே, அவர் அபூ அவ்ன் பின் அப்துல் மலிக் பின் எஜீத் ஜுர்ஜானீ என்பவரைத் தமக்குப் பதிலாக எகிப்தில் நியமித்துவிட்டு பலஸ்தீன் சென்றுவிட்டார்.

ஹி. 136இல் ஸப்பாஹ் இறந்துபோனர்- பிறகு, அபூ ஜஃபர் மன்ஸூர் கலீபா பதவி பெற்ருர். அம்ரு பின் ஆஸ் தோண்டிய கால்வாயை மூடிவிடும்படி கலீபா கட்டளையிட்டார். கவர்னர் அபூ அவ்ன் அவ்வாறே அதை மூடிவிட்டார். கலீபா மன்ஸூர் ஒரு நிலையில்லாதவர். எனவே, மிகச் சிறிய சந்தேகம் ஏற்பட்டால், உடனே கவர்னர்களை நீக்கிவிடுவார். ஆகையால், எகிப்து நாட்டில் ஏழு ஆண்டுகளில் ஆறு கவர்னர்களை நியமித்தார். ஹி. 144இல் எஜீத் பின் ஹாதிம் மஹப்லீ என்பவரை அனுப்பினர். இவர் எட்டு ஆண்டுகள் வரை கவர்னராக இருந்தார். அச்சமயம், எகிப்தில் மக்கள் இரகசியமாக அஹ்லுல் பைத்—நபிபெருமானர் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லமவர்களின் குடும்பத்தாரின் இமாம்தலைவரே தங்களுடைய தலைவர் எனக் கூறி அவருக்கு விசுவாசப் பிரமாணம் செய்தார்கள். இராக் நாட்டில் பஸ்ரா நகரில் கிளர்ச்சி செய்த இப்ராஹீம் பின் அப்துல்லாஹ் நப்ஸ் ஜகீயா என்பவரின் சகோதரரின் தலையைக் கொய்து எகிப்துக்கு அனுப்பினர். கதீப்கள் அதைப் பள்ளி வாயில்களில் மிம்பர்—மேடைகளில் வைத்து, அரசியல் புரட்சி செய்வோரின் முடிவு இவ்வாறே ஆகும் என்று தெரிவித்தார்கள். இதே ஆண்டில் பனீ ஹஸன் கோத்திரத்தார் ஹிஜாஸ் மாகாணத்தில் கலகஞ்செய்தார்கள். ஆகையால், எகிப்து மக்களை ஹஜ்ஜுக்குச் செல்லவிடாமல் எஜீத் தடுத்துவிட்டார். ஹி. 148இல் அவர் பர்கா பிரதேசத்தை எகிப்து நாட்டுடன் இணைத்துவிட்டார்.

ஹி. 152இல் எஜீத் இறந்துபோனர். கலீபா மன்ஸூர் அதற்குப் பிறகு, தொடர்ச்சியாக கவர்னர்களை நியமிக்க ஆரம்பித்தார். அதனல், எகிப்தில் நிரந்தரமான நிர்வாகம் நடைபெற முடியவில்லை. இறுதியில் அரசியல் நிர்வாக முறை சீர்கேடுற்றது. புதிதாக நியமிக்கப்பட்ட கவர்னர் ஒவ்வொருவரும் தாம் நிச்சயமாக திடீரென்று நீக்கப்படலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். எனவே, அவர்கள் சுயநலத்துடன் ஆட்சி செய்தார்கள். மக்களின் நலனைக் கருதவில்லை. ஆகையால், மக்கள் கஷ்டப்பட்டார்கள். விலைபொருள்கள் குறைந்துவிட்டன. அதிகாரிகளின் அக்கிரமங்களால் மக்கள் நாட்டிலிருந்து வெளியேற ஆரம்பித்துவிட்டார்கள்.

ஹி. 158இல் மன்ஸூருக்குப் பிறகு, மஹ்தீ கலீபா ஆனர். இவர் காலத்திலும் நிலைமை இவ்வாறே இருந்தது. ஒவ்வோராண்டிலும் இரண்டு மூன்று கவர்னர்கள் நியமிக்கப்பட்டார்கள். எனவே, நாட்டு நிர்வாகம் சின்ன பின்னமாகிவிட்டது. கொலை, களவு, வழிப்பறி முதலியன வெகு சாதாரணமாகிவிட்டன. அமைதியின்மை அதிகரித்தது. எனவே, மஹ்தீ ஹி. 192 துல்ஹஜ் மாதம் அபூ ஸாலிஹ் எஹ்யா என்னும் வீரரை கவர்னராக நியமித்தார். இந்த கவர்னரின் அரிய முயற்சிகளால் மறுபடியும் நாட்டில் நிம்மதி உண்டாயிற்று. இரவில் எல்லோரும் வீடுகளையும் கடைகளையும் திறந்துவைக்கவேண்டுமெனவும், களவு போன பொருளைத் தாமே கொடுப்பதாகவும் அந்தப் புதிய கவர்னர் விளம்பரப்படுத்தினர்.

இவ்வாறு இரண்டு ஆண்டுகள் சென்றன. பிறகு, அவரும் நீக்கப்பட்டார். அதற்குப் பிறகு ஸவாரா தமீமீ வந்தார். அதற்கடுத்த ஆண்டில் ஸாலிஹ் பின் அலீயின் புத்திரர் இப்ராஹீம் அனுப்பப்பட்டார். அவர் காலத்தில் உமய்யா குடும்பத்தைச் சேர்ந்த வஹ்யா பின் முஸ்அப் என்பவர் எகிப்து நாட்டில் தாமே கலீபா என்று விளம்பரப் படுத்தினர். இப்ராஹீம் இதைக் கவனிக்கவில்லை,

எனவே, அவர் கடற்கரையோரமாகவுள்ள பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்டார். இச்செய்தியை அறிந்த கலீபா மஹ்தீ, உடனே இப்ராஹீமை நீக்கிவிட்டு, மூஸா பின் முஸ்அப் என்பவரை அனுப்பினர். மூஸா வந்தார். நிலத் தீர்வையை இரட்டித்தார். கடைகளுக்கும் பிராணிகளுக்கும் தீர்வை விதித்தார். எனவே, மக்கள் அவரை விரும்பவில்லை. ஆகையால், அவர் எஹ்யா பின் முஸ்அபை எதிர்க்கச் சென்றபோது, எகிப்தியர் அவரைத் தனியாக விட்டுவிட்டுத் திரும்பிவிட்டார்கள். ஆகவே, வஹ்யா பின் முஸ்சுப் உடைய செல்வாக்கு அதிகரித்து விட்டது. சேனைத் தலைவர்கள் அவரை எதிர்க்க அஞ்சினர்கள். இறுதியாக ஹி. 169இல் பஸல் பின் ஸாலிஹ் வந்து இவரைத் தோற்கடித்துத் தலையைக் கொய்து, கலீபா மஹ்தீயிடம் அனுப்பி விட்டார்.

இதே ஆண்டில் மஹ்தீ மரணமடைந்தார். பிறகு, ஹாதீ கலீபா ஆனர். இவர் பஸலை நீக்கிவிட்டு, அலீ பின் ஸுலைமானுக்கு கவர்னர் பதவி அளித்தார். அடுத்த ஆண்டில் ஹாரூன் ரஷீத் கலீபாவாகி, அலீ பின் ஸுலைமானையே எகிப்தில் வைத்திருந்தார். நன்மையை ஏவுதலிலும், தீமையை விலக்குவதிலும் அலீ வெகு கண்டிப்பாக இருந்தார். இவரது நேர்மையான நிர்வாகத்தின் விளைவாக மக்கள் மன நிம்மதியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ்ந்தார்கள். எனவே, அவர்கள் இவரையே கலீபாவாக நியமித்துவிடவேண்டுமென்று விரும்பினர்கள். கலீபா ஹாரூன் ரஷீத் இச்செய்தியை அறிந்து, ஹி. 171இல் இவரை நீக்கிவிட்டு, மூஸா பின் ஈஸா அலவீ என்பவரை நியமித்தார்.

ஹி. 176-இல் கலீபா ஹாரூன் ரஷீத் எகிப்து நாட்டில் கவர்னரை நியமிக்கும் பொறுப்பைத் தமது மந்திரி ஜஃபர் பின் எஹ்யா பர்மகீ என்பவரிடம் ஒப்படைத்தார். மந்திரி ஜஃபர் தமது சார்பாக இம்ரான் பின் மிஹ்ரான் என்பவரை அனுப்பினர். மிஹ்ரான் அவலட்சணமான தோற்ற

முள்ளவர். அவர் எகிப்துக்கு வந்து மூஸாவின் தர்பாரில் உட்கார்ந்தார். சபை கலைந்த பின் மூஸா அவரை விசாரித்தார். உடனே தாம் கவர்னராக நியமிக்கப்பட்ட கட்டளையை இம்ரான் அவரிடம் கொடுத்தார். மூஸா அதைப்படித்து விட்டு, "இம்ரான் பின் மிஹ்ரான் இங்கு எப்பொழுது வருவார்?" எனக் கேட்டார். அதற்கு, "நானே இம்ரான்!" என்று விடை கிடைத்தது. மூஸா உடனே, "எகிப்து நாட்டில் "நானே ஆண்டவன்" எனக் கூறிய பிர்அவ்ன்மீது ஆண்டவனுடைய சாபம் உண்டாவதாக !"எனக் கூறினார்.

இம்ரான் பதவியேற்று, இறையச்சத்துடன் நீதி தவறாமல் நிர்வாகஞ் செய்தார். அவர் காலத்தில் எகிப்தில் குறைவின்றித் தீர்வை வசூலிக்கப்பட்டுவந்தது. அவருக்கு மக்கள் சமர்ப்பிக்கும் அன்பளிப்புகளையும் காணிக்கைகளையும் தீர்வையிலிருந்து கழித்துவிடுவார். இவர் தீர்வை வசூலிக்கும் தலைவராகவே இருந்தாரென்றும், முஸ்லமா பின் எஹ்யா கவர்னராக இருந்தாரென்றும், அவருக்குப் பிறகு, முஹம்மத் பின் ஜஹீர் கவர்னர் ஆனாரென்றும் சில சரித்திராசிரியர்கள் கூறுகின்றார்கள். முஹம்மத் ஓராண்டு இந்தப் பதவியில் இருந்தார். பிறகு தாவூத் பின் ஈஸா இரண்டாம் தடவை அனுப்பப்பட்டார். சில மாதங்கள் கழித்து, கலீபா மஹ்தீயின் காலத்தில் கவர்னராக இருந்த இப்ராஹீம் பின் ஸாலிஹ் இப்பதவி பெற்றார். பின்னர், அப்துல்லாஹ் பின் முஸ்அப் வந்தார். இவர் தீர்வையை உயர்த்திவிட்டார். மக்கள் கொடுக்க முடியாமல் கஷ்டப்பட்டார்கள். ஹவ்ப் பிரதேச மக்கள் எதிர்த்துக் கலகஞ்செய்யவும் ஆயத்தமானார்கள். இதில் பல அரசாங்க அலுவலர்கள் கொல்லப்பட்டார்கள். கலீபா இதையறிந்து ஹர்ஸமா பின் அயீன் என்பவரைப் பெருஞ் சேனையுடன் அனுப்பினார். அவர் சென்று கலகத்தை அடக்கினார். இவ்வாறு தொடர்ச்சியாக கவர்னர்கள் மாற்றப்பட்டு வந்தமையால், நாட்டில் குழப்பம் உண்டாயிற்று. கலகங்களும் இரத்தப்பழிகளும் பரவிவிட்டன.

குறிப்பாக. ஹவ்ப் பிரதேசத்தில் ராணுவ வன்மையின்றி வரி வசூலித்தல் அசாத்தியமாகிவிட்டது. கலீபா ஹாரூனுடைய அந்திய காலத்தில் ஞுஸைப் பின் அப்துல் ஹமீத் என்பவர் தீர்வைத் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் பெயரால் மனியா கஸீப் என்னும் நகரம் நிர்மாணிக்கப் பட்டது. ஹாரூன் இறந்த பிறகு, அவரது புத்திரர்களான அமீனும் மாமூனும் தங்களுக்கிடையில் போர்செய்தார்கள். அச்சமயம், எகிப்தில் ஸரீ பின் அல்ஹகம் என்பவர் மாமூனுக்கு உதவிசெய்தார். இவர் ஹி. 196 ஜமாதுல் ஆகிர் 22-இல் அமீன் நீக்கப்பட்டுவிட்டதாகவும், மாமூன் கலீபா ஆகிவிட்டதாகவும் விளம்பரப்படுத்தி எகிப்தியரிடம் மாமூனுக்காக விசுவாசப் பிரமாணம் வாங்கினார். மாமூன் கலீபா ஆனவுடன் இவரையே எகிப்தில் கவர்னராக நியமித்தார். ஹி. 204-இல் புஸ்தாத் நகரில் ஸரீ இறந்து போனார்.

இதே ஆண்டில் இதே இடத்தில் அங்கு சில காலமாக வசித்துவந்த இமாம் ஷாபியீ அவர்களும் காலஞ் சென்றார்கள்.

ஸரீ இறந்த பிறகு, எகிப்திய சேனை அவரது புத்திரர் முஹம்மதிடம் விசுவாசப் பிரமாணம் செய்தது. கலீபாவின் தலைநகரான பக்தாதிலிருந்து வெகுதூரத்தில் இருந்தமையால், அங்கிருந்து வரும் கட்டளைகளை எகிப்தியர் அதிகமாக மதிப்பதில்லை. அன்றியும், நாடு பிற்போக்கான நிலையில் இருந்தமையால் எகிப்து நாட்டின் அரசியல் நிர்வாகம் சின்னபின்னப்பட்டுவிட்டது.

இதற்கிடையில் அந்தலூஸ் (ஸ்பெய்ன்) நாட்டார் வந்து அலக்சாந்திரியாவைக் கைப்பற்றிவிட்டார்கள். கலீபா மாமூன் ஐந்தாண்டுகள் கழித்து அப்துல்லாஹ் பின் தாஹிர் என்பவரின் தலைமையில் ஒரு சேனையை அனுப்பினார். அவர் முஹம்மதைத் தோற்கடித்தார். மேலும், ஸ்பெய்ன் நாட்டாரை அலக்சாந்திரியாவிலிருந்து துரத்தி, எகிப்தில் அமைதி நிலவும்படி செய்தார்.

ஹி. 213-இல் இவரைத் திருப்பி அழைத்துத் தமது சகோதரர் முஃதஸிம் என்பவரை எகிப்து, ஸிரியா ஆகிய இரண்டு நாடுகளின் கவர்னராக நியமித்தார். முஃதஸிம் தமது சார்பாக உமைர் பின் வலீத் என்பவரைத் தமது பிரதிநிதியாக நியமித்து எகிப்துக்கு அனுப்பினார். ஆனால், ஹவ்ப் பிரதேச மக்கள் எதிர்த்துக் கலகஞ்செய்து அவரைக் கொன்றுவிட்டார்கள். எனவே, ஈஸா ஜலூதீ நியமிக்கப் பட்டார். இவரும் தோற்கடிக்கப்பட்டார். ஆதலால், முஃதஸிம் நாலாயிரம் போர்வீரர்களுடன் தாமே வந்தார். கலகத்திற்குக் காரணமாக இருந்த ஹவ்ப் பிரதேசத் தலைவர்களைக் கொன்று, ஈஸா ஜலூதியை நீக்கி ஈஸா பின் மன்ஸூர் என்பவரை நியமித்தார். அவரிடம் அப்ஷின் ஹைதர் பின் காவூஸ் என்பவரின் தலைமையில் ஒரு துருக்கிச் சேனையை விட்டுவிட்டு, ஸிரியாவுக்குச் சென்றார். ஹவ்ப் பிரதேசத்தார் மறுபடியும் கலகஞ்செய்ய முயன்று, தொடர்ச்சியாகப் பல போர்கள் செய்தமையால், நாட்டில் அமைதி குலைந்து நிர்வாகம் இழிநிலையடைந்தது. எனவே, ஹி. 217-இல் ரோமர்களுடன் செய்துகொண்டிருந்த போர் முடிவடைந்தவுடன் கலீபா மாமூன் எகிப்துக்கு வந்து, சகல செய்திகளையும் நேரில் விசாரித்தறிந்தார். நாட்டின் இழிநிலைக்கு ஈஸா பின் மன்ஸூரே பொறுப்பாளியென்று முடிவுசெய்து, உடனே அவரை நீக்கிவிட்டார். பிறகு, கயித் பின் ஸப்தீ என்பவரை முஃதஸிமுடைய பிரதிநியாக நியமித்தார். இவரே ரவ்லா என்னுமிடத்திலிருந்த அணைக் கட்டைச் செப்பனிட்டு, கலீபாவின் கட்டளையின்படி ஒரு ஜாமிஃ மஸ்ஜிதும் தயாரித்தார்.

ஹி. 218இல் மாமூனுக்குப் பிறகு முஃதஸிம் *கலீபா ஆனார். இவர் செய்த எட்டு ஆண்டு ஆட்சியில் எகிப்தில்

---

* கலீபா முஃதஸிமை சரித்திராசிரியர்கள் "முஸம்மின்—எட்டுடையோர்" என்றழைக்கிறார்கள். அதற்குக் காரணம் அவர் அப்பாஸீ கலீபாக்களில் எட்டாம் கலீபா. சந்திரமான ஆண்டில் எட்டாம் மாதமான ஷஃபான் மாதம் பிறந்தார்" அன்றியும், அவர் ஹி 218இல் கலீபா ஆனார் அப்பொழுது அவருக்கு வயது முப்பத்தெட்டு ஆண்டுகள் எட்டு மாதங்கள. மேலும், அவர் எட்டு ஆண்டுகள், எட்டு மாதங்கள், எட்டு நாட்களே ஆட்சி செய்தார். இதையன்றி, அவர் எட்டு போர்க்களங்களுக்குச் சென்றார். ரபீயுல் அவ்வல் மாதம் பதினெட்டாம் நாள், தமது நாற்பத்தெட்டாம் வயதில் மரணமடைந்தார். இறந்த பிறகு. அவருக்கு எட்டு ஆண் மக்களும் எட்டு பெண்மக்களும், எண்பது கோடி தீனார்களும் எண்பது இலட்சம் திர்ஹம்களும் இருந்தன.

ஐந்து கவர்னர்கள் நியமிக்கப்பட்டார்கள். இறுதியில் அபூ ஜஃபர் அஷ்னுஸ் கவர்னராக இருந்தார். முஃதஸிமுக்குப் பிறகு கலீபா வாஸிக் காலத்திலே ஜஃபர் அஷ்னுஸ் இறந்துவிட்டார். பிறகு, அலீ பின் எஹ்யா அர்மனீ வந்தார், அவரும் நீக்கப்பட்டு, ஈஸா பின் மன்ஸூர் மறுமுறை நியமிக்கப்பட்டார். கலீபா முதவக்கில் காலத்தில் ஹி. 234இல் எகிப்தில் ஹாதிம் பின் ஹர்ஸமா என்பவர் கவர்னராக இருந்தபொழுது நூபியா நாட்டார் படையெடுத்துக் கணக்கிலடங்காத யானைகளைக் கொண்டுவந்தார்கள். ஹாதிம் ஒரு தந்திரம் செய்தார்! குதிரைகளின் கழுத்தில் மணிகள் கட்டுவித்தார். அந்த மணியோசையைக் கேட்டதும் யானைகள் அஞ்சி ஓட்டம் பிடித்தன. எதிர்த்துவந்த ஹப்ஷிகள் தோல்வியடைந்தார்கள். நூபியா மன்னர் சமாதானம் கோரினர். எனவே, அவர் பக்தாதுக்கு கலீபாவிடம் அனுப்பப்பட்டார்.

அரசாங்க நிர்வாகத்தில் ஒழுங்கீனம் ஏற்பட்டது. எகிப்தின் கடற்கரைகளில் ரோமர்கள் பிரவேசம் செய்தார்கள். தமியாத், ஃபர்மா (Farma), தானிஸ் இம்மூன்றிடங்களிலும் கோட்டைகள் கட்டி, நாட்டைப் பாதுகாக்கும்படி கலீபா முதவக்கில் கட்டளை பிறப்பித்தார். அவ்வாறே கோட்டைகள் கட்டப்பட்டன. அவை கட்டிமுடியுமுன் ரோமர்கள் இந்த மூன்றிடங்களிலும் சேனைகளை இறக்கினர்கள். அங்குள்ள பொருள்களைச் சூறையாடினர்கள். பெண்டு பிள்ளைகளைத் துன்புறுத்தினர்கள். மக்களைக் கைதுசெய்துகொண்டுபோனர்கள். பள்ளிவாயில்களில் நெருப்பு வைத்துவிட்டார்கள். அம்பஸா பின் இஸ்ஹாக் என்னும் கவர்னர் சகல சிற்றரசர்களையும் சேனையையும் ஈதுப் பெருநாள் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளும்படி ஃஸ்தாத் நகருக்கு அழைத்திருந்தார். ஆகையால், ரோமர்கள் எதிர்ப்பில்லாமல் அட்டூழியங்கள் செய்துகொண்டு இருந்தார்கள்.

முதவக்கிலுக்குப் பிறகு மின்தஸிர், அவருக்குப் பிறகு முஸ்தயீன் காலத்திலும் எஜீத் பின் அப்துல்லாஹ் என்பவர் எகிப்தில் கவர்னராக இருந்தார். கலீபா முஃதஸ் ஹி. 253இல் இவரை நீக்கி முஸாஹிம் பின் காகான் என்பவரை அனுப்பினர். இந்தப் புதிய கவர்னர் ஆடுமாடுகள் மேயுமிடங்களுக்கும், மீன் பிடிப்பதற்கும் தீர்வை விதித்தார். பள்ளிவாயில்களில் ஷாபியீகளின் மார்க்கத்தின்படி "பிஸ்மில்லாஹ்" ஓதுவதை நிறுத்திவிட்டார். மக்கள் இவருக்கு விரோதமாகக் கிளம்ப ஆரம்பித்தார்கள். இதற்கிடையில் அவர் இறந்து போகவே, அவரது புத்திரருக்கு கவர்னர் பதவி அளிக்கப்பட்டது. ஆனல், அவர் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். எனவே, துருக்கித் தலைவர் பாயக்பாக் என்பவர் நியமிக்கப்பட்டார். அவர் தமது சார்பாக அஹ்மத் பின் தூலூன் என்பவரை எகிப்து நாட்டு நிர்வாகத்திற்கும், அஹ்மத பின் மூதப்பிா என்பவரை தீர்வை வசூலிக்கவும் நியமித்தார்.

அச்சமயம், அப்பாஸி கிலாபத் பலவீனமடைந்திருந்தது. இப்னு ஸூபீ என்னும் ஓர் அலவீ தாமே இமாம் என்று பிரகடனப்படுத்தி அக்லீம் அஸ்னுவைக் கைப்பற்றிக் கொண்டார். அஹ்மத் பின் தூலூன் அவரைத் தோற்கடிக்கவும், அவர் அல் வாஹாத் என்னுமிடத்திற்கு ஓடிப்போய் விட்டார்.

5. தூலூன் வம்சம்

ஹி. 257—292. கி. பி. 870—905.

தூலூன் என்பவர் நூஹ் பின் அஸத் ஸாமானீ என்பவரால் ஹி. 200இல் கலீபா மர்மூனிடம் மர்வ் நகரில் காணிக்கையாகக் கொடுக்கப்பட்ட ஒரு துருக்கிய அடிமை. அவரது அரிய அறிவையும் ஆற்றலையும் கண்டு, கலீபா மாமூன் அவரைத் தமது பணியாளர் கோஷ்டியில் சேர்த்துக் கொண்டு தம்முடன் பக்தாதுக்குக் கொண்டுவந்தார்.

ஹி. 220ல் ஸாமிரு நகரில் தூலூனுடைய மைந்தர் அஹ்மத் பிறந்தார். இப்புதல்வருக்கு திருக்குர்ஆன் பாருயணம் செய்யப்பட்டுப் பல கலைகள் கற்பிக்கப்பட்டன. புதல்வருக்கு இருபது வயதானபொழுது தூலூன் இறந்து போக, அமீர் பாயக்பாக் உடைய சேனையில் சேர்க்கப் பட்டார். ஹி. 254ல் பாயக் பாக் வசம் எகிப்து நாட்டு அதிகாரம் கொடுக்கப்பட்ட பொழுது அவர் அஹ்மத் பின் தூலூனுடைய தகுதியையும் நற்குணங்களையும் கண்டு, தமது சார்பாக அவரை அங்கு சேனைத்தலைவராக நியமித் தனுப்பினுர். மேலும், வாஸித் நகரவாசியும், தமது அந்தரங்கச் செயலாளருமான அஹ்மத் பின் முஹம்மத் என்பவரையும் அவருடன் அனுப்பினுர். தீர்வை வசூல் செய்வதற்காக அஹ்மத் பின் முதப்பிர் என்பவரை நியமித்தார்.

அஹ்மத் பின் தூலூன் பக்திமானுகவும் நடுநிலை தவருதவராகவும் இருந்தார். ஆனுல், அஹ்மத் பின் முதப்பிர் அநீதராகவும் சாதுரியமற்றவராகவுமிருந்தார். எனவே, இருவருக்கிடையில் பகை உண்டாயிற்று. இரு வரும் அதிகாரம் பெறமுயன்றுர்கள். இதற்கிடையில் ஹி. 255ல் முஹ்ததீ கலீபா பதவிபெற்று பாயக்பாக்கை கொன்றுவிட்டு, எகிப்து அமீர் அமாஜூர் என்பவருக்குக் கொடுத்தார். இந்த அமாஜூருடைய புதல்வியை அஹ்மத் பின் தூலூன் மணஞ்செய்திருந்தமையால் அஹ்மத் பின் தூலூனுக்கு எகிப்து நாட்டின் முழு அரசாங்க உரிமை யையும் கொடுத்து விட்டார். அஹ்மத் பின் தூலூன், அஹ்மத் பின் முதப்பிரை நீக்கிவிடக் கருதினுர். ஆனுல், அவரது சகோதரர் கலீபாவின் நிதி மந்திரியாக இருந்த மையால் பொறுமையுடனிருந்தார்.

அஹ்மத் பின் முதப்பிர் தமது எதிரியுடன் போராட முடியாதென்பதைக் கண்டுகொண்டார். எனவே, அவர் தமது உத்தியோகத்தை மாற்றிக்கொண்டு ஸிரியா சென்று

விட்டார். மேலும், அஹ்மத் பின் தூலூனுடன் நல்லுற வுடன் இருக்கும் நோக்கத்துடன் தமது மகளை அவரது புத்திரர் குமார்வியா என்பவருக்கு மணஞ்செய்வித்து, எகிப்திலிருந்த தமது சொத்துக்கள் எல்லாவற்றையும் இனு மாகக் கொடுத்துவிட்டு ஸிரியாவுக்குச் சென்றுவிட்டார். இவருக்குத் துணைவராகவும், அஹ்மத் பின் தூலூனுக்கு விரோதியாகவுமிருந்த ஷகீர் காதிம் என்பவரும் இறந்து விட்டார்.

எகிப்து நிர்வாகம் :

அஹ்மத் பின் தூலூனுக்கு இப்பொழுது ஒரு எதிரியும் இல்லை. எனவே, நிர்வாகத்தில் தடையொன்று மின்றி அவர் பணியாற்ற ஆரம்பித்தார். மக்கள் மீது விதிக்கப் பட்டிருந்த நேர்மையற்ற தீர்வைகளை நீக்கிவிட எண்ணினர். தீர்வை அதிகாரி அப்துல்லாஹ் பின் தஸுமா என்பவரை அழைத்துத் தமது விருப்பத்தைத் தெரிவித்தார். ஆனால், அப்துல்லாஹ்வோ உலக இச்சை நிறைந்தவர். பேராசைப் பேய் பிடித்தவர். அவர் கணக்குப் பார்த்தார். இவ்வாறு செய்தால் ஆண்டு தோறும் வசூலில் ஒரு இலட்சம் தீனர் குறைந்துவிடுமென்று விளக்கிக் காட்டினர். அவ்வாறு செய்யலாகாதெனவும் தடுக்க முயன்ருர். பொறுமையுடன் கேட்ட பிறகு, அஹ்மத் பின் தூலுன், ' சரி, கவனிக் கிறேன் " என்று விடையளித்தார்.

அன்றிரவு அஹ்மத் பின் தூலூன் ஒரு கனவு கண்டார். அதில் காலஞ்சென்ற ஒரு நண்பரைக் கண்டார். அவர் தர்ஸுஸ் நகரைச் சேர்ந்தவர். சிறந்த பக்திமான். அவர், " உம்மிடம் கூறப்பட்ட ஆலோசனை சரியன்று, நீர் ஆண்ட வனுக்கு அஞ்சி, இந்த அநீதியான வருமானத்தை இழந்து விட்டீரானல், அதற்குப் பதிலாக ஆண்டவன் உமக்குப் பெரும் புதையல்கள் கொடுப்பான் " எனக் கூறினர்.

மறுநாட்காலையில் அவர் படுக்கையிலிருந்து எழுந்தவுடன் அநீதியான தீர்வைகளை நீக்கிவிட்டார். அப்துல்லாஹ் பின் தஸுமா மறுபடியும் வந்தார். தமது மறுப்பை அழுத்தமாகக் கூறினார். அச்சயம், அஹ்மத் பின் தூலூன் தாம் இரவில் கண்ட கனவை அவரிடம் கூறினார். அதற்கு அவர், "இறந்துபோனவர் சொல்வதை நீங்கள் கேட்டுச் செயலாற்றுகின்றீர்கள். ஆனால், உயிருடன் இருக்கும் நான் சொல்வதை நிராகரிக்கின்றீர்கள். இது வியப்பாக இருக்கிறது" என்றார். அஹ்மத் பின் தூலூன், "நடக்க வேண்டியது நடந்துவிட்டது" எனக் கூறி அந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவுகட்டி விட்டார்.

மறைந்த புதையல்: மறுநாள் அஹமத் பின் தூலூன் தமது பரிவாரங்களுடன் பாலைவனத்தில் செல்லும்பொழுது, தற்செயலாக ஒரு குதிரையின் கால் பூமியின் கீழிருந்ததொரு குழியில் புதைந்துவிட்டது. அதைச் சோதனை செய்யும்பொழுது பூமியின்கீழ் ஒரு நிலவறை இருந்தது. அதில் பத்தாயிரம் தீனார் பெறுமான புதையல் இருந்தது. இந்தச் செய்தி முஸ்லிம் உலகம் முழுமையும் தெரிந்தது. இந்தப் புதையலை எவ்வாறு செலவு செய்யலாமென்று கலீபாவிடம் விசாரிக்க அவர், "சன்மார்க்கத்தில் செலவு செய்யலாம்" என்றெழுதினார். எனவே, ஒரு பங்கு ஏழைகளுக்கும், பாக்கித் தொகையில் ஒரு கோட்டையும், ஒரு மருத்துவ நிலையமும் கட்டினார். பல நெடுஞ்சாலைகளையும் செப்பனிட்டார். புஸ்தாத் நகரில் கட்டப்பட்ட இந்த மருத்துவ நிலையம் எகிப்து நாட்டில் முதலாம் மருத்துவ நிலையமாகும். அங்கு மருத்துவர்களுக்கு வீடுகளும் கட்டினார். பல கடைகள் கட்டுவித்து அவற்றின் வாடகைகளிலிருந்து அதற்குச் செலவு செய்யும்படி ஏற்பாடு செய்தார். மேலும், கால்நடைச் சந்தைகளின் வருமானத்தை இனாமாகக் கொடுத்துவிட்டார். அஹ்மத் பின் தூலூன் மருத்துவர்களைச் சந்திக்கவும், சிகிச்சைகளைக் கவனிக்கவும், நோயாளிகளை விசாரிக்கவும் அங்கு செல்வது வழக்கம். இவ்வாறு

சென்று கொண்டிருக்கையில், ஒருநாள் ஒரு பைத்தியக்காரன் அவரைத் திடீரென்று எதிர்த்தான். ஆனால், அவர் உயிர் தப்பிவிட்டார். எனினும், அதற்குப் பிறகும் அவர் அங்கு சென்றுகொண்டே இருந்தார்.

ரவ்லாவிலிருந்த அணைக்கட்டு பழுதாகிவிட்டது. எனவே, பத்தாயிரம் தீனர் செலவு செய்து அதைப் பழுது பார்த்தார். அநேக பாலங்கள் கட்டினர். அலக்சாந்திரியா கால்வாயில் மணல் நிறைந்துவிட்டதால் அதையும் மராமத்துச் செய்தார். அதன் ஓரங்களில் குளிக்குமிடங்(ஹம்மாம்) களும், தண்ணீர் பந்தல்களும் தயாரித்தார். மனராவையும் புதிதாகக் கட்டினர்.

ஹி. 258இல் அமீர் அமாஜூர் இறந்தார். பிறகு அஹ்மத் பின் தூலூன் எகிப்தில் தனியரசு செய்ய ஆரம்பித்தார். நாட்டு மக்கள் அவரது சிறப்பான நிர்வாகத்தையும், வசீகரமுள்ள குணங்களையும் கண்டு வெகு மகிழ்ச்சியடைந்தார்கள்.

ஜாமிஃ தூலூனி: அதற்குப் பிறகு அவர் தமது வன்மையைப் பெருக்கத் தொடங்கினர். சேனையை அதிகரித்தார். சேனைக்கு புஸ்தாத் நகரில் இடமில்லாமல் போகவே, அந்த நகரின் அருகில் ஒரு தனியான ராணுவத்தளம் ஏற்படுத்தி அதற்கு கதாயீ என்று பெயர் வைத்தார். ஜபல் முகத்தம் என்னும் குன்றின்மீது தனூர் பிர்அவ்ன் என்றொரு இடமுண்டு. அதன் அருகில் லஷ்கர் என்னும் ஓரிடமிருந்தது. அங்கு ஹஸ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் பிரார்த்தனை செய்யச் செல்வது வழக்கமென்று பரம்பரையாகச் சொல்லப்பட்டு வந்தது. அந்த இடத்தில் ஒரு ஜாமிஃ மஸ்ஜித் கட்ட வேண்டுமென்று தோண்டினர்கள். அங்கும் ஒரு புதையல் கிடைத்தது. அது முன்னர் பாலைவனத்தில் கிடைத்ததைவிட மிகப் பெரியது. இரண்டு ஆண்டுகளில் ஹி. 263இல் இந்த ஜாமிஃ மஸ்ஜித் கட்டி முடிவடைந்தது. அதன் திறப்பு விழாவிற்கு மந்திரி பிரதானிகளும், ஆலிம்களும்,

மார்க்கச் சட்ட நிபுணர்களும் அழைக்கப்பட்டார்கள். ஆனால் இந்த மஸ்ஜித் கட்டிய செலவிற்காக புதையலில் கிடைத்த பணத்திலிருந்து ஒரு பைசாவும் செலவிடப்படவில்லை எனவும், முஸ்லிம்களுடைய சம்பாத்தியத்திலிருந்து செல விடப்பட்டதெனவும் நிருபிக்கும் வரையில் அவர்கள் அதில் நுழையவில்லை. இந்த மஸ்ஜிதில் அல்லாமா முஹம்மத் பின் ரபீஃ நாயக வாக்கிய வியாக்கியானப் பாடம் கற்பித்து வந்தார். அஹ்மத் பின் தூலூனும் அவரது மைந்தர்களும் சாதாரண மாணக்கர்களைப் போன்று அங்கு வந்து உட் கார்ந்து பாடங் கேட்பார்கள்.

உமரீ நிகழ்ச்சி: இப்னு ஸூபி அலவீ என்பவர் அல்வாஹாத் பிரதேசத்திற்கு ஓடிவிட்டாரென்று நாம் முன்னர் கூறியுள்ளோம். அவர் அங்கிருந்து ஒரு படையைத் திரட்டிக்கொண்டு அஷ்மோனீன் பக்கமாக வந்தார். அவரை எதிர்க்க அஹ்மத் பின் தூலூன் ஒரு சேனையை அனுப்பினர். ஆனல், அதற்கு முன் ஹஸ்ரத் உமர் (ரலி) குடும்பத்தைச் சேர்ந்த அப்துர் ரஹ்மான் என்பவர் ஒரு பெருங் கோஷ்டியுடன் அவரைத் துரத்தினர். அவர் அங்கிருந்து அஸ்வானுக்குச் சென்று கொள்ளையடிக்க ஆரம் பித்தார். அஹ்மத் பின் தூலூன் அங்கும் ஒரு சேனையை அனுப்பினர். இறையறிந்து இப்னு ஸூபி அச்சங்கொண்டு செங்கடல் பக்கமாக வந்து, அங்கிருந்தும் ஓட்டம்பிடித்து மக்கா நகருக்குச் சென்றுர். ஆனல், மக்கா கவர்னர் அவரைக் கைதுசெய்து எகிப்துக்கு அனுப்பி விட்டார். அஹ்மத் பின் தூலூன் அவரைச் சில காலம் சிறையில் வைத்துப் பிறகு விடுதலைசெய்து விட்டார். இப்னு ஸூபி மதினு சென்று அங்கு இறந்துவிட்டார்.

இதற்கிடையில், அபூ அப்துர் ரஹ்மான் உமரீ என்பவரின் கட்சி பெருகி வன்மையடைந்து விட்டது. அவரை அடக்குவதற்காக, ஷுபா பேகி என்பவரின் தலைமையில் அஹ்மத் பின் தூலூன் ஒரு சேனையை அனுப்பினர்.

அத்தலைவரிடம் உமரீ, "இப்னு தூலூனுக்கு என் விஷயம் தெரியாதிருக்கலாம். நான் அராஜகக் கலகம் செய்யவோ, புரட்சி உண்டாக்கவோ வரவில்லை. என்னுல், முஸ்லிம்களுக்கும் முஸ்லிமல்லாதாருக்கும் துன்பம் விளையவில்லை. முஸ்லிம்களை அடிக்கடி எதிர்த்துத் தாக்கும் நூபியா மக்களுடன் ஜிஹாத் செய்தலே எனது நோக்கம். எனவே, இவ்விஷயத்தை அஹ்மத் பின் தூலூலுக்கு அறிவியும். அவர் உம்மைத் திரும்பியழைத்துக் கொள்வார். "எனக் கூறினர். ஆனல், ஷுபா அதைக் கேட்கவில்லை. போர் தொடங்கியது. அதில் ஷுபா தோல்வியடைந்தார். இங்கு நடந்த விஷயங்கள் அனைத்தும் அஹ்மத் பின் தூலூனுக்குத் தெரிவித்து, அவர் ஷுபா பேகி மீது கடுங்கோபங் கொண்டார். "இதைப் பற்றி நீர் ஏன் எனக்குத் தெரிவிக்கவில்லை. உமது அறிவீனத்தின் காரணமாக உமரீ இப்பொழுது வெற்றி பெற்றுவிட்டார்'' எனக் கூறினர்.

இதற்கிடையில், உமரீயின் இரண்டு அடிமைகள் அவரது தலையைக் கொய்து கொண்டுவந்தார்கள். அதைக் கண்டவுடன் அஹ்மத் பின் தூலூன், "நீங்கள் ஏன் உங்கள் எஜமானைக் கொன்றீர்கள்?" எனக் கேட்டார். அதற்கு அவர்கள், "உங்களை சந்தோஷப்படுத்தவே நாங்கள் அவ்வாறு செய்தோம்" என்று விடையளித்தார்கள். ஆனல், அக்குற்றத்திற்கு அவர்களே பொறுப்பாளிகள் என்று கூறி அஹ்மத் பின் தூலூன் அவ்விருவரையும் தண்டித்தார். பிறகு, உமரீயின் தலையைக்கழுவி மரியாதையுடன் அடக்கஞ்செய்து விட்டார்.

இந்த நிகழ்ச்சி நடந்த அடுத்த ஆண்டில் முஹம்மத் பின் பாராப் பர்ஸஃனீ என்பவர் பர்கா பிரதேசத்தைத் தம் அதிகாரத்தில் சேர்த்துக்கொண்டு அராஜகக் கலகஞ் செய்தார். எனவே, அஹ்மத் பின் தூலூன் தமது அடிமை லூலூ என்பவரின் தலைமையில் பெரியதொரு சேனையை அனுப்பினர். லூலூ அங்கு சென்று கலகத்தை அடக்கி விட்டார்.

முவப்பிக் பங்கமை: அக்காலத்தில் முஃதமித் என்பவர் பத்தாதில் கலீபாவாக இருந்தார். அவரது சகோதரர் முவப்பிக் (Muaffq) சேனுதிபதியாகவும், பெருஞ் செல்வமும் செல்வாக்கும் உடையோராகவும் இருந்தார். அஹ்மத் பின் தூலூன் எகிப்து நாட்டில் ராஜபோகங்கள் அனுபவித்து வருவதாக இவருக்குச் செய்தி கிடைத்தது. எனவே, அஹ்மத் பின் தூலூனை நீக்கிவிடுவதாக முவப்பிக் அச்ச மூட்டினர். அஹ்மத் பின் தூலூனும் கடுமையான பதில் அனுப்பினர். உடனே, மூஸா பின் பகா என்பவரின் தலைமையில் முவப்பிக் ஒரு சேனையை அனுப்பினர். அஹ்மத் பின் தூலூனும் அதை எதிர்க்கத் தயாராகி, புதிதாக ஒரு கோட்டை கட்ட ஆரம்பித்தார். அதில் சிற்றரசர்களும் கூலியாட்களும், போர் வீரர்களும், மந்திரி பிரதானிகளும், அஹ்மத் பின் தூலூனும் இரவு பகலாக வேலை செய்து கொண்டிருந்தார்கள். பக்தாதிலிருந்து புறப்பட்ட சேனை ரக்கா நகர் வரையும் வந்துவிட்டது. ஆனல், அங்கு வந்தவுடன் ராணுவத்தின் உணவுப் பொருட்கள் குறைந்து விட்டன. பத்துமாத காலமாக அந்தச் சேனை அங்கு தங்கியிருந்தது. இறுதியாக, போர் வீரர்களுக்குச் சம்பளமும் கிடைக்கவில்லை. எனவே, சேனை அங்கிருந்து பக்தாதுக்குத் திரும்பிவிட்டது. இவ்விஷயம் அஹ்மத் பின் தூலூனுக்குத் தெரிந்தவுடன், கோட்டை நிர்மாணிப்பதை நிறுத்தி விட்டார். போர் செய்யாமலே பேராபத்திலிருந்து இறைவன் பாதுகாத்து விட்டானென்று, ஆண்டவனுக்கு நன்றி செலுத்தித் தருமங்களும் செய்தார்.

ஸிரியா கவர்னர் பதவி: ஸிரியா நாட்டுக் கடற்கரையில் ரோமர்கள் தொடர்ச்சியாகத் தாக்கிக்கொண்டிருந்தார்கள். ஆனல், அச்சமயம் அவர்களை எதிர்க்க அப்பாஸி கலீபாக்களுக்குச் சக்தி யில்லை. எனவே, வேறு வழியின்றி, ஹி. 263இல் அஹ்மத் பின் தூலூனுக்கு அவர் தர்ஸஸ் மாகாண கவர்னர் பதவி அளித்து, ரோமர்களை எதிர்க்கும்படி அனுப்பினர். அவரும் அவ்வாறே சென்று எல்லைப்

புறங்களைப் பாதுகாத்து, ஸிரியா முழுமையும் கைப்பற்றினர். எனவே, அஹ்மத் பின் தூலூனுடைய அரசாங்கம் ஆப்பிரிக்காவில் பர்காவிலிருந்து ஆசியாவில் யூப்ரதீஸ் நதிக்கரை வரையில் பரவியிருந்தது. அப்பாஸி கலீபாவிடம் இராக், ஜஸீரா, அஹ்வாஸ் என்னும் மூன்று மாகாணங்களே இருந்தன.

முவப்பிக் அச்சமயம் ஹப்ஷிகளுடன் போர் புரிந்து கொண்டிருந்தார். அதைத் தமக்குச் சாதகமான வேளை எனக் கண்டு, அஹ்மத் பின் தூலூன் தமது வன்மையை அதிகரித்தார். முவப்பிக் உடைய ஆக்ரமிப்புகளை கலீபா சகிக்க முடியவில்லை என்பதும் அவருக்குத் தெரியும். எனவே, கலீபாவுக்கு அவர் அன்பளிப்புகள் அனுப்பினர். அவரை எகிப்துக்கு வருமாறு அழைத்தார். கலீபாவும் அதற்கு உடன்பட்டுத் தமது தலைநகர் ஸாமிராவிலிருந்து புறப்பட்டார், ஆனால், இதையறிந்த முவப்பிக் அவரைத் தடுத்து விட்டார். பிறகு, அஹ்மத் பின் தூலூனை அவர் இன்னும் அதிகமாகப் பகைத்து அவரைச் சபிக்கும்படி கலீபாவை வற்புறுத்தினர். கலீபா வேறு வழியின்றி அவ்வாறே சபித்து எழுதினர்.

அப்பாஸ் கலகம்: அஹ்மத் பின் தூலூன் ஸிரியாவுக்குச் சென்றிருந்தபொழுது, எகிப்தில் தமது புதல்வர் அப்பாஸ் என்பவரைத் தமது பிரதிநிதியாக விட்டுச் சென்றார். ஆனால், அவர் திரும்பிவந்த பொழுது அப்பாஸ் கலகஞ் செய்யத் தயாராகி, கஜானவிலிருந்த இருபது லட்சம் தீனரையும் எடுத்துக்கொண்டார். மேலும் மூன்று லட்சம் தீனர் கடன் வாங்கினர். போர் புரியும் எண்ணத்துடன் பர்காவுக்குச் சென்று, சேனைகளைச் சேகரித்துக்கொண்டிருந்ததாகவும் தெரிந்தது. அஹ்மத் பின் தூலூன் தமது புதல்வருக்கு நற்புத்தி கூற முயற்சித்தார். ஆனல், அம்முயற்சியால் அவர் நேர்வழியில் வராமையால், சேனைகளை அனுப்பினர். அப்பாஸ் தமது தோழர்களின்சொற்கேட்டு இப்ரிகியா சென்றார். அங்கு

அக்லப் (Aghlab) கோத்திரத்தாருடனும் அவர்களது தலைவர்களுடனும் போர் புரிந்தார். இறுதியாகத் தோல்வியடைந்து தம்மிடமிருந்த பொருட்களையும் சேனையையும் இழந்து, பர்காவுக்குத் திரும்பினர். அங்கிருந்த கவர்னர் அவரைக் கைது செய்து எகிப்துக்கு அனுப்பிவிட்டார். அப்பாஸுக்கு ஆலோசனை கூறிய தோழர்கள் தண்டிக்கப்பட்டார்கள். அப்பாஸுக்கு நூறு சவுக்கடி கொடுத்தார். அச்சமயம் அன்பின் காரணமாக அவர் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. பிறகு, அப்பாஸைக் காவலில் வைத்து விட்டார்.

மரணம்: ஹி. 270 துல் கஃதா இருபதாம் நாள் ஞாயிற்றுக்கிழமை அஹ்மத் பின் தூலூன் மரணமடைந்தார். வீரத்திலும் விவேகத்திலும் நீதியிலும் நேர்மையிலும் சிறப்புற்று விளங்கினர். எளிய வாழ்க்கை நடத்தினர். தமது ஆட்சியிலிருந்த மக்களையும் அவர்களுடைய தேவைகளையும் அறிந்துகொள்ளும் ஆற்றலுடையவர். கல்வி கேள்விகளில் சிறந்தவர். அறமும் அருளும் நிறைந்த உள்ளமுடையவர். அவர் உணவுகொள்ளும் பொழுது பலருடன் உட்கார்ந்து உண்பார். அன்புளிப்பாகவும், தருமமாகவும் தமது செல்வத்தைப் பிறருக்குக் கொடுப்பார். தினந்தோறும் தருமம் செய்வார். ஒவ்வொரு வாரத்திலும் மூவாயிரம் தீனர் விதவைகளுக்கும், அனுதைகளுக்கும், இரவலர்களுக்கும் பங்கிட்டுக் கொடுப்பார். ஒரு நாள் அறநிலைய அதிகாரி இப்ராஹீம் என்பவர், "தருமம் கொடுக்கும்பொழுது எவர் தருமத்திற்கு உரியோர் என்பதைக் கண்டு பிடித்தல் எளிதல்ல. இந்த நிலையில் முகமூடி அணிந்து அதன் மறைவில் பெண்கள் கைகளை நீட்டுகின்றார்கள். அந்தக் கைகளில் ஜரிகை வேலை செய்த பட்டுச் சட்டைகளின் ஓரங்களும், விலையுயர்ந்த காப்புகளும், விரல்களில் தங்க மோதிரங்களும் இருக்கின்றன" என்ருர். அதைக் கேட்டார் அஹ்மத் பின் தூலூன். "எவரெவர் கையை நீட்டுகின்றார்களோ அவர்களுக்கெல்லாம் கொடுத்து விடுவீராக!" என்று கட்டளையிட்

டார். அவர் திருக் குர்ஆனை நன்ருகப் பாராயணஞ் செய்து செவிக்கினிய குரலில் ஓதுவார். அவருக்குப் பதினேழு ஆண்மக்களும், பதின்மூன்று பெண்மக்களும் இருந்தார்கள்.

குமார்வியா

அஹ்மத் பின் தூலூன் இறந்த பிறகு அவரது புத்திரர் குமார்வியா என்பவர் முடிசூட்டப் பெற்ருர். இவரை எல்லோரும் ஏற்றுக்கொண்டார்கள், ஆனல், டமஸ்கஸ் கவர்னர் மறுத்து விட்டார். எனவே, எகிப்திலிருந்து சேனைகள் சென்று அவரைத் தோற்கடித்தன. அங்கிருந்து அவர் ஷேஜர் நகருக்குப் போய்விட்டார். குமார்வியா முதலில் அலக்சாந்திரியாவிலிருந்த கிறிஸ்தவப் பாதிரியாரை (பத்ரீக்) சிறையிலிருந்து விடுவித்தார். அந்தப் பாதிரி வாக்களித்த பணத்தைக் கொடாமையால் அவரை அஹ்மத் பின் தூலூன் சிறை செய்வித்தார். ஆனல், இப்பொழுது தங்களுடைய மதத்தலைவரை விடுதலைசெய்தவுடன் எகிப்து நாட்டுக் கிறிஸ்தவர்கள் அனைவரும் குமார்வியாவை நேசித்தார்கள்.

குமார்வியா கலீபாவிடம் நல்லுறவுடனிருந்தார். சிம்மாசனம் ஏறியவுடன் கலீபாவுக்கு பொற்காசு மூட்டைகளுடன், இருபது கோவேறு கழுதைகளும், பத்து அடிமைகளும், நகைகள் நிறைந்த இரண்டு பெட்டிகளும், பொன்னல் செய்த குதிரைச் சாமான்களுடன் பதினேழு குதிரைகளும், பொன்னல் அலங்கரிக்கப்பட்ட ஜூல் போடப்பட்ட முப்பத்தேழு ஒட்டகங்களும், சவாரி செய்யக்கூடிய ஐந்து கோவேறு கழுதைகளும், பட்டாடைகளும், தங்க நூல்களால் பின்னப்பட்டு இரத்தினங்கள் பதித்த அரைக்கச்சைகள் அணிந்திருந்த இருபது சவாரியாட்களும், ஒரு கட்டிலும் அனுப்பினர்.

மேலும், கலீபாவுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளும் நோக்கத்துடன் தமது புதல்வி கத்ருந்நதா என்பவளை கலீபா முஃதளிதுக்கு மணஞ் செய்வித்தார். அளவற்றதும் விலை

மதிப்பிட முடியாததுமான சாமான்களை அவளுடைய சீதன மாக அனுப்பி வைத்தார். அத்தகைய சீதனம் அதுவரை எந்த மன்னரும் கொடுத்ததாக வரலாற்றில் காணப்பட வில்லை. உட்காருவதற்காக ஒரு பொற் சிம்மாசனம் தயா ரித்தார். அதன் நான்கு மூலைகளிலும் தங்கம், வைடூரியம் முதலியவற்றால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. சிம்மாசனத் தின் மேற்பாகத்தில் வலையைப் போன்று பின்னப்பட்ட ஒரு தங்கக் கும்மட்டம் (குப்பா) தயாரித்து, வலையின் ஒவ்வொரு கண்ணியிலும் விலையுயர்ந்ததொரு முத்து தொங்கிக்கொண் டிருந்தது. பன்னிரண்டாயிரம் தீனார் செலவு செய்து கால் சராய் கட்டுவதற்கான ஆயிரம் நாடாக்கள் கொடுத்திருந்தா ரென்றால், பொதுவாக மணமகளுக்காகத் தயாரித்திருந்த ஆடையாபரணங்களின் விலைமதிப்பு எவ்வளவு இருக்கு மென்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

மணமகளை அனுப்பும் பொழுது, எகிப்திலிருந்து பக்தாத் நகர் வரையும் தங்குமிடங்களில் தமது அரண்மனையைப் போன்றே ஒவ்வோர் அரண்மனை தயாரித்தார். அந்த அரண்மனை ஒவ்வொன்றிலும் சகல சாமான்களும் வைக்கப் பட்டிருந்தன. துரிதமில்லாமல் மெல்ல மெல்ல வழிநடந்து, இந்த அரண்மனைகளில் மணமகளை இறக்கி விடுவார்கள். இவ்வாறாக, எகிப்திலிருந்து பக்தாத் வரையும் தனது தந்தையின் அரண்மனையில் வசிப்பதைப் போன்றே வசித்து, மணப்பெண் இறுதியில் பக்தாத் நகர் வந்து சேர்ந்தாள். ஹி. 282 முஹர்ரம் மாத ஆரம்பத்தில் வெகு சிறப்புடன் மண மகளுடன் எகிப்தியர் பிரவேசித்தார்கள்.

குமார்வியா விலங்கினங்கள், மரம் செடி கொடிகள் பறவைகள் முதலியன வளர்ப்பதில் அளவு கடந்த ஆர்வ முள்ளவர். தமது அரண்மனையில் ஒருபெரிய மைதானத்தைத் தயாரித்து அதில் பல்வேறு விதமான மரங்களும், ஒவ் வொரு மரத்தில் பல வகைகளும், பற்பல நிறமுள்ள பூங்காக் களும், பூம்படுக்கைகளும் தயாரித்து வெவ்வேறு வர்ணங்க

ளுள்ள இன்னிசை பாடும் பறவைகளைச் சேகரித்து வைத்திருந்தார். இதைப் போன்றே, இன்னொரு பெரிய மைதானத்தில் எல்லா விதமான வனவிலங்குகளும், குறிப்பாக மாமிசபட்சணிகளும் சேகரித்து வளர்த்து வந்தார். சிங்கம், புலி, சிறுத்தை ஆகிய மிருகங்களின் மீது அவருக்கு அதிகப் பிரியம். தமது தர்பாரில் அவற்றைத் தமக்கெதிரில் கட்டி வைத்திருப்பார். அந்த மிருகங்களில் சில அவருடன் நன்ருகப் பழகி, அவரைப் பின்தொடர்ந்து செல்லும்.

அவரது அரண்மனைச் சுவர்கள் பச்சைக் கற்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பொற்சட்டங்களாலான படங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. இரவில் தூங்குவதற்காக ஒரு சிறு குளம்-ஹவ்ல் தயாரித்தார். அதில் பாதரசம் நிறப்பினுர். அதன் ஓரங்களில் வெள்ளி வளையங்களில் ஜரிகைக் கயிறுகள் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. அவற்றின் மீது காற்றடைத்த தோல் மெத்தைகள் போடப்பட்டிருந்தன. குமார்வியாவுக்குத் தூக்கம் வரவில்லையாதலால் இவ்வாறு செய்யப்பட்டது. கை கால்கள் பிடிப்பதாலும் தேய்ப்பதாலும் தூக்கம் வந்துவிடுமென்று மருத்துவர்கள் ஆலோசனை கூறினுர்கள். ஆனுல், அவர் தமது உடலை எவராயினும் தொட்டால் அதைப் பொறுக்க முடியாதெனக் கூறி, இத்தகைய விசித்திரமான முறையை அனுசரித்தார். ஏனென்ருல், பாதரசம் ஆடிக்கொண்டே இருக்கும். ஊஞ்சல் இயக்கத்தைப் போன்ற அதன் இயக்கத்தால் குமார்வியாவுக்குத் தூக்கம் வந்துவிடும்.

ஹி. 283 இல் குமார்வியா கொலையுண்டார். அவரது சொந்தப் பணிமகனுக்கும் அரண்மனையிலிருந்த ஒரு பணிப் பெண்ணுக்கு மிடையில் ஏற்பட்டிருந்த தொடர்பை அவர் அறிந்தார். எனவே, அவ்விருவர்மீது கோபங்கொண்டார். ஆனுல், அவர்கள் தண்டனைக்குப் பயந்து, அவர் இரவில் தூங்கிக்கொண்டிருக்கும் பொழுது அவரைக் கொலைசெய்து விட்டார்கள்.

ஜைஷ் பின் குமார்வியா

பிறகு, அபுல் அஸாகீர் ஜைஷ் என்னும் அவரது புதல்வர் பட்டத்திற்கு வந்தார். ஆனால், அவர் மிகவும் சிறுவயதுடையோராதலால், ஸிரியா கவர்னர் தகஜ் பின் ஜப் என்பவர் விசுவாசப் பிரமாணம் செய்ய மறுத்துவிட்டார். எகிப்து ராணுவத்தாரும் அவ்வாறே செய்து விட்டார்கள். எனவே, அவர்கள், அவரைக் கொலைசெய்து அரண்மனையில் நுழைந்து கொள்ளையடித்தார்கள். நகரில் நெருப்பு வைத்தார்கள். பிறகு, ஹாரூன் என்பவரை சிம்மாசனத்தில் ஏற்றினார்கள்.

ஹாரூன் பின் குமார்வியா :

சேனைத் தலைவர்களே ஹாரூனுக்குப் பட்டம் சூட்டியதால், அவர் தங்களிடம் நன்றியுடன் நடந்துகொள்வார் என்று எதிர்பார்த்தார்கள். எனவே, அவர்கள் அவரது கட்டளைகளை முழுமனதுடன் கீழ்ப்படியவில்லை.

இந்தச் சூழ்நிலையை அப்பாஸி கலீபா முஃதஸித் நன்கு பயன்படுத்திக் கொண்டார். அச்சமயம், அவர் எகிப்தின் மீது படையெடுத்து வந்தார். அவர் ஹமீதா நகர் வந்தபொழுது அந்த நகரத்திலிருந்த கொத்துவால் அவருக்கு விசுவாசப்பிரமாணம் செய்தார். ஹாரூன் அச்சங்கொண்டார். தாம் கலீபாவுக்குக் கீழ்ப்படிவதாகவும், தர்ஸூஸ் மாகாணத்தைக் காணிக்கையாகக் கொடுப்பதாகவும் எழுதினார். கலீபா அதற்கு உடன்பட்டு, தர்ஸூஸ் மாகாணத்தைக் கைப்பற்றிக் கொண்டார். மேலும், ஸரீம், அவாஸிம் என்னும் இரண்டு இடங்களையும் பிடுங்கிக் கொண்டார். ஹாரூனுக்கு எகிப்து, ஸிரியா ஆகிய இரண்டு நாடுகளில் மட்டுமே அதிகாரம் அளித்தார். மேலும், கலீபாவின் கஜானாவுக்கு ஒவ்வோர் ஆண்டிலும் நான்கு இலட்சம் தீனார் அனுப்பவேண்டுமென்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டது.

முஃதஸிதுக்குப் பிறகு. முக்தஃபீ கலீபாவானுர். அவர் ஹி. 292இல் முஹம்மத் பின் ஸுலைமான் என்பவரை அனுப்பி, எகிப்து, ஸிரியா, ஆகிய நாடுகளைக் கைப்பற்றும்படி கட்டளை யிட்டார். முஹம்மத் அவ்வாறே சேனையுடன் சென்றுர். முதலில் ஸிரியாவைக் கைப்பற்றினுர். பிறகு, எகிப்தில் நுழைந்தார். அச்சமயம், எகிப்து சேனையில் ஒற்றுமை இல்லை. ஆகையால், ஹாரூன் பின் குமார்வியா தோல்வி யடைந்தார். அதே ஆண்டு ஸபர் 18இல் அவர் கொலை செய்யப்பட்டார்.

அதற்குப் பிறகு, சில தலைவர்கள் ஹாரூனுடைய சிறிய தந்தை ஷய்பான் பின் அஹ்மத் என்பவருக்கு முடிசூட்டி ஞர்கள். ஆனுல், பொது மக்கள் அதற்கு உடன்படவில்லை. எனவே, தூலூனிய ஆட்சி முப்பத்தேழு ஆண்டுகள், ஏழு மாதங்கள், இருபது நாட்கள் நடந்த பிறகு எகிப்து நாடு அப்பாஸி கிலாபத்தில் சேர்ந்துவிட்டது.

6. அப்பாஸிகளின் இரண்டாம் ஆட்சி

ஹி. 292–323. கி. பி. 905–934

அப்பாஸி கலீபா முக்தபீ என்பவர் ஈஸா நுஷ்ரீ என்ப வரை எகிப்து நாட்டு கவர்னராக நியமித்தார். மூன்ருண்டு களுக்குப் பிறகு கலீபா பதவிக்கு வந்த முக்த்ததி என்பவர் அந்தப் பதவியில் இவரையே தொடர்ந்து வைத்திருந்தார். ஹி. 297இல் ஈஸா இறந்துபோனுர். தக்கீன் கஜ்ரீ என்பவர் கவர்னராக்கப்பட்டார். அச்சமயம் உபைதுல்லாஹ் பாத்திமீ, மஹ்தீ என்பவரின் சார்பாக ஹப்பாஸா பின் யூஸுப் என்பவர் வந்து பர்கா பிரதேசத்தைக் கைப்பற்றினுர். பிறகு, ஓர் இலட்சத்திற்கு அதிகமான போர் வீரர்களுடன் ஹி. 302 முஹர்ரம் (கி. பி. 1004) அலக்சாந்திரியாவைத் தாக் கினுர். தக்கீன் கஜ்ரீக்கு உ த வி ய ா க பக்தாதிலிருந்து சேனைகள் வந்தன. கடும்போர் நடந்தது. இருகட்சியிலும்

ஆயிரக்கணக்கான மக்கள் உயிர் துறந்தார்கள். இறுதியில் ஹப்பான் பின் யூஸுப் தோல்வியடைந்து திரும்ப வேண்டிய தாயிற்று.

பிறகு, ஐக்கா ரூமி என்பவரை பக்தாத் கலீபா தமது கவர்னராக நியமித்தார். அந்த கவர்னர் காலத்தில் ஹி. 307 ஸபர், எட்டாம் நாள் அபுல்காஸிம் என்பவரின் தலைமையில் பாத்திமீ கலீபா மற்றொரு பெருஞ்சேனையை அனுப்பினார். இதற்கிடையில், ஐக்கா ரூமி இறந்துவிட்டார். எனவே, தக்கீன் கஜ்ரீ அந்தச் சேனையை எதிர்க்க ஆயத்தஞ்செய்தார். அவருக்கு உதவியாக பக்தாதிலிருந்து மூன்று இலட்சம் சேனையுடன் மூனிஸ்காதிம் என்பவர் வந்து சேர்ந்தார். அல் பியூம் (Alfium), அலக்சாந்திரியா ஆகிய நகரங்களில் கடும்போர் நடந்தது. ஆனால், அபுல்காஸிம் வெற்றிபெறாமலே திரும்பிவிட்டார். அடுத்த ஆண்டில் தக்கீன் கஜ்ரீயும் இறந்து போனார். அவரது புத்திரர் முஹம்மத் என்பர். கலீபாவின் அனுமதியின்றி கனர்னராகி விட்டார். கலீபா முக்ததிர் இறந்த பிறகு, ஹி. 320 (கி. பி. 932)ல் காஹிர் கலீபா ஆனார். அவர் முஹம்மத் பின் தகஜ் என்பவரை கனர்னராக நியமித்தார். ஆயினும் முஹம்மத் அப்பொழுது எகிப்துக்குச் செல்ல முடியவில்லை. ஆகையால், அஹ்மத் பின் கேகலக் என்பவர் அனுப்பப்பட்டார். ஹி. 322 (கி. பி. 934) இல் கலீபா ராலீ பில்லாஹ் மறுபடியும் முஹம்மத் பின் தகஜை நியமித்தார். அவர் எகிப்துக்கு வந்து சேர்ந்துபொழுது, அஹ்மத் பின் கேகலஜ் அவரை எதிர்த்தார். ஆனால், தோல்வியடைந்து பாத்திமீ கலீபாவிடம் ஓடிவிட்டார். முஹம்மத் பின் தகஜ் கவர்னராக இருந்தபொழுது பாத்திமீ கலீபாவின் சேனை அலக்சாந்திரியாவை வென்றுவிட்டது.

அக்காலத்தில் அப்பாஸி கலீபாக்கள் மிகவும் பலவீனராக இருந்தார்கள். ஆகையால், கராமிதா எனப்படும் கட்சியார் ஸிரியாவையும் அரபு நாட்டின் ஒரு பாகத்தையும்

கைப்பற்றிக் கொண்டார்கள். ஸாமானீ அரச குடும்பத்தைச் சேர்ந்த சிற்றரசுகள் குராஸான் பிரதேசத்தில் சுவாதீனமாகி விட்டன. பூயா அரச வம்சத்தார் பாரஸ் (Faras) பிரதேசத்தில் தனியரசு செய்து கொண்டிருந்தார்கள். ஹமதானீ அரச வம்சத்தார் ஜஸீராவிலும் தியார்பக்ரிலும் சுவாதீனமாக ஆட்சி செய்து கொண்டிருந்தார். இவை அனைத்தையும் கண்ட முஹம்மத் பின் தகஜ் தாமும் எகிப்தில் சுவாதீனராகி விட்டதாக விளம்பரப்படுத்தி விட்டார்

7. அக்ஷீதி அரசாங்கம்

ஹி. 323—358. கி. பி. 934—969

அபூ பக்ர் முஹம்மத் பின் தகஜ் என்பவர் பர்கானு (Farghana) மன்னர்களின் சந்ததியில் தோன்றியவர். கலீபா முஃதஸிம் ஆட்சியிலே துருக்கியர் முதன்முதலாகக் குடியேறத் தொடங்கிய காலத்தில், துருக்கிஸ்தானில் ஜப் என்னும் ஒரு வீரச் சிற்றரசர் இருப்பதாக அவர்கள் மூல்மாக கலீபா தெரிந்துகொண்டார். அவர் அந்த வீரரை அழைத்துத் தமது தர்பாரில் மரியாதையுடன் வைத்துப் பல ஜாகிர்களும் கொடுத்தார்.

ஜப் என்பவர் பக்தாதுக்கு அருகில் ஸாமிரு நகரில் வசித்துவந்தார். அங்கு அவருக்குக் குழந்தைகள் பிறந்தன. ஹி. 247இல் கலீபா முதவக்கில் கொலையுண்ட தினமே, அவர் தமது குடும்பத்துடன் அங்கிருந்து புறப்பட்டு, அச்சமயம் ஜஸீரா பிரதேசத்தில் வசித்த தகஜ் பின் தூலூனுடைய அடிமை லூலூ என்பவரிடம் வந்து சேர்ந்தார். குமார்வியா அவரை அன்புடன் வரவேற்றார். தமது சேனையின் தலைமைப் பதவி அளித்துத் தபரிய்யா மாகாண கவர்னராக்கினர். இவர் கொலையுண்ட பிறகு, தகஜை, கலீபா முக்தபீ தம்மிடம் அழைத்து இனாம்களும் கௌரவ அங்கிகளும் அளித்துத் தமது தர்பாரில் சேர்த்துக்கொண்டார்

அச்சமயம், அப்பாஸ் பின் ஹுஸைன் மந்திரியாக இருந்தார். அவர் தகஜைப் பகைத்தார். தகஜையும் அவரது புதல்வர் முஹம்மதையும் கைதுசெய்தார். தகஜ் சிறையிலேயே இறந்துபோனார். ஆனால், முஹம்மத் விடுதலையடைந்து, தமது சகோதரர் உபைதுல்லாஹ்வின் உதவியால் ஹி. 296 (கி. பி. 909)இல் மந்திரி அப்பாஸின் மீது தமது தகப்பனாரின் கொலைக்காகப் பழிவாங்கினார். பிறகு அங்கிருந்து ஓடி, ஸிரியா வனாந்தரத்தில் தகீன் கஜ்ரீயிடம் வந்துசேர்ந்தார். அங்கு நடந்த சில போர் களில் புகழ்பெற்றார். ஹி. 306இல், மக்கா தலயாத்திரை செல்லும் ஹாஜிகளைக் கொள்ளைக் கூட்டத்தாரிடமிருந்து பாதுகாத்தார். அதையறிந்த கலீபா முக்ததிர் அவர்மீது மகிழ்ச்சியடைந்து அவருக்குப் பரிசுகளும் அங்கிகளும் அனுப்பினார். ஹி. 316இல் தகீனுடன் கருத்துவேற்றுமை ஏற்பட்டது. ஆகையால், அவர் ரம்லா நகருக்குப் போய் விட்டார். இதைக் கேள்விப்பட்ட கலீபா முக்ததிர், ஹி. 318இல் அவரையே ரம்லா நகருக்கு கவர்னராக நிய மித்தார். ஹி. 321இல் கலீபா காஹிர், அவரை எகிப்து கவர்னராக நியமித்தார். ஆனால், அவர் அங்கு செல்ல முடியவில்லை. ஹி. 323இல் கலீபா ராலி பில்லாஹ் அதே பதவியில் அவரை மறுபடியும் நியமித்தார். அச்சமயம் அவர் அங்கு சென்று பதவியேற்று, அதற்குப் பிறகு சுவாதீன விளம்பரம் செய்துவிட்டார். வேறு வழியின்றி கலீபா அவரது சுவாதீனத்தை அங்கீகரிக்க வேண்டிய தாயிற்று. மேலும், ஹி. 327இல் அவருக்கு அக்ஷீத் என்னும் பட்டமும் அளித்தார். ஃபர்கானீ மொழியில் அக்ஷீத் என்றால் சக்ரவர்த்தி என்று பொருள்.

சுவாதீன விளம்பரத்திற்குப் பிறகு அவர் ஸிரியாவை யும் கைப்பற்றிக்கொண்டார். பக்தாதிலிருந்து அமீருல் உமரா முஹ்ம்மத் பின் ராயிக் என்பவர் ஹி. 328இல் இவர் மீது படையெடுத்து வந்தார். ஸிரியாவில் இவரது பிரதி நிதியாக இருந்த பத்ர் என்பவரைத் தோற்கடித்துவிட்டு,

அங்கிருந்து எகிப்து நாட்டை நோக்கி வந்தார். ஃபர்மா (Farma) என்னுமிடத்தில் இருசேனைகளும் கைகலந்தன. சில அமீர்(தலைவர்)கள் தலையிட்டு, எகிப்திலிருந்து ரம்லா வரை அக்ஷீத் ஆட்சி இருக்க வேண்டுமெனவும், டமஸ்கஸ் நகரை விட்டுவிட்டு அதற்குப் பதிலாக ஆண்டுதோறும் பத்தாயிரம் தீனார்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் நிபந்தனைசெய்து சமாதானம் செய்வித்தார்கள். இரு கட்சியாரும் அதற்குச் சம்மதித்தார்கள். ஹி. 330இல் கலீபா ராலி பில்லாஹ் காலஞ்சென்று, அவரது சகோதரர் முத்தகீ என்பவர் கலீபா வானார். இவரும் முன் உடன் படிக்கையின்படியே அக்ஷீதுடன் நடந்துகொண்டார். மூஸல் (மவ்ஸில்) மாகாண கவர்னராக இருந்த நாஸிருத் தௌலாஹ் பின் ஹமதான் என்பவர் தாமே அமீருல் உமரா என்னும் பெரும் பதவியைப் பெறும் எண்ணத்துடன் இப்னு ராயிக் என்பவரைக் கொலை செய்வித்தபொழுது, அக்ஷீத் மறுபடியும் டமஸ்கஸைக் கைப்பற்றிக்கொண்டார். ஹி. 333இல் நாஸிருத்தௌலாவின் சகோதரர் ஸைபுத் தௌலாஹ் என்பவர் ஹலப் (அலப்போ) மாகாணத்தின் மீது படையெடுத்தார். இது அக்ஷீதின் ஆதிக்கத்தி லிருந்தது. ஆகையால், அவர் தமது அடிமை காபூர் (Kafoor) என்பவர் தலைமையில் ஒரு சேனையை அனுப் பினார். ஆனால், ஸைபுத்தௌலாஹ் அவரைத் தோற் கடித்து, ஹலப், ஹம்ஸ், இவ்விரண்டு பிரதேசங்களை யும் கைப்பற்றிக் கொண்டதோடு, டமஸ்கஸ் நகரை எதிர்க்க கவும் வந்தார். கன்ஸரீன் என்னுமிடத்தில் இரு சேனை களும் அணிவகுத்து நின்றன. ஆனால் போரில் ஒருவருக் கும் வெற்றி கிடைக்கவில்லை. இறுதியாக, டமஸ்கஸ் வரை யிலும் அக்ஷீதி அரசாங்கம் இருக்கவேண்டு மெனவும், ஹம்ஸ், ஹலப் ஆகிய பிரதேசங்களில் ஹமதானீயே ஆட்சி செய்யவேண்டு மெனவும் முடிவுசெய்து உடன்படிக்கை செய்யப்பட்டது.

பதினென்று ஆண்டுகள் மூன்று மாதங்கள் ஆட்சி செய்து ஹி. 334 இல் முஹம்மத் பின் தகஜ் அக்ஷீத் காலஞ் சென்ருர். இவர் வீரத்தில் சிறந்தவர். அறிவிலும் ஆற்ற லிலும் நிறைவுள்ளவர். சேனையிலுள்ள வீரர்களைத் தமது சொந்தக் குழந்தைகளைப் போன்று அன்புடன் கண் காணித்து வந்தார். இவர் சேனையில் நான்கு இலட்சம் போர்வீரர்கள் இருந்தார்கள்.

அனூஜூர் பின் அக்ஷீத்

பிறகு, அவரது புதல்வர் அனூஜூர் சிம்மாசனத்தில் அமர்ந்தார். இவர் சிறுவராக இருந்தமையால், அரசாங்க அலுவல்கள் காபூர் என்பவரின் மேற்பார்வையில் இருந் தன. காபூர் மிகக் கூர்மையான அறிவும் ஆற்றலும் உடை யவர். எனவே, அவர் அரசியல் நிர்வாகத்தை ஒழுங்குடன் கண்காணித்து வந்தார். அக்ஷீத் இறந்துவிட்ட செய்தியை பக்தாதிலிருந்த ஸைபுத்தெளலாஹ் அறிந்தவுடன், டமஸ் கஸ் நகருக்கு வந்து அதைக் கைப்பற்றிக்கொண்டார். ஆனல், காபூர் அங்கு சென்று அவரைத் துரத்தி விட்டு, பத்ர் அக்ஷீதீ என்பவரை அந்த நகரின் கவர்னராக நியமித்துவிட்டுத் திரும்பினர், ஹி. 345 இல் நூபியா அரசர் எகிப்தின்மீது படையெடுத்து வந்தார். காபூர் அவரைத் தோற்கடித்துத் துரத்தினர். அந்த அரசர் அஸ்வானி லிருந்து ஓட்டம் பிடித்து நூற்றைம்பது மைல் சென்ற பிறகே, திரும்பிப் பார்த்தார்.

ஹி. 349, துல் கஃதா எட்டாம் நாள் அனூஜூர் இறந்து விட்டார்.

அலீ பின் அக்ஷீத்

அனூஜூருக்குப் பிறகு அவரது சகோதரர் அலீ என் பவர் அரசரானர். அவர் காலத்தில் எகிப்தில் பெரும் பஞ்சம் உண்டாயிற்று. பல உள்நாட்டுச் சச்சரவுகளும் விளைந்தன. சேனையும் பலவீனமடைந்தது. ஹி. 355 இல் அவரும் மாண்டு போனர்.

காபூர் அக்ஷீதீ

காபூர் என்பவர் ஓர் அபிஸீனிய அடிமை. ஹி. 312 இல் எகிப்து நாட்டு ஜமீன்தார் ஒருவரிடம் அக்ஷீத் விலைக்கு வாங்கினார். காபூர் சில போர்களில் புகழ் பெற்றார். ஆகை யால், அவர் அக்ஷீதின் புதல்வர்களின் பாதுகாவலராகவும், அரண்மனை ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டார்.

அலீ இறந்த பிறகு காபூர் அரசரானார். அச்சமயம் பக்தாதில் முதீஃ என்பவர் கலீபாவாக இருந்தார். அவரும் காபூரின் ஆட்சியை அங்கீகரித்தார். காபூரின் சீரும் சிறப்பும், சேனைவன்மையும் படிப்படியாக உயர்ந்தன. எகிப்திலும், ஹிஜாஸிலும், ஸிரியாவிலும் பள்ளிவாயில் களில் கலீபாவின் பெயரோடு காபூரின் பெயரும் ஓதப் பட்டது. இவர் இரண்டாண்டு, நான்கு மாதம் ஆட்சி செய்து, ஹி. 357 ஜமாதுல் அவ்வல் மாதம் பத்தாம் நாள் காலஞ்சென்றார். அவரது சிறப்புப் பெயர் அபுல் மிஸ்க். அவர் உடல் கஸ்தூரி போன்று கருப்பாக இருந்தது. இவர் ஹப்ஷி—நீக்ரோ இனத்தைச் சேர்ந்தவராயினும் மிகவும் மாட்சிமையும் தன்மதிப்பும் உள்ளவர். கல்விமான் களையும், மேன்மக்களையும் ஆதரித்து மரியாதை செய்தார்.

அபூ ஜஃபர் முஸ்லிம் பின் அப்துல்லாஹ் பின் தாஹிர் அலவீ கூறுவதாவது :—

ஒருநாள் நானும் சில நண்பர்களும் சவாரிசெய்து கொண்டு காபூருடன் சென்றோம். வழியில் தற்செயலாக காபூரின் கையிலிருந்த சவுக்கு கீழே விழுந்துவிட்டது. உடனே, நான் கீழே இறங்கினேன். சவுக்கை எடுத்தேன். காபூரிடம் கொடுத்தேன். அப்போது அவர், “அல்லாஹு அக்பர் ! நான் இந்த உயர்நிலை அடைவேனென்று நம்பவே இல்லை. நானோ விலைக்கு வாங்கப்பட்ட ஓர் அடிமை” என்றார். அவ்வாறு அவர் கூறும்பொழுது அவரது கண்களிலிருந்து கண்ணீர் வந்துகொண்டிருந்தது.

பிறகு, நான் அவரிடம் விடைபெற்று வீடு திரும்பும்பொழுது, பல குதிரைகளின் முதுகில் ஏராளமாள சாமான்களை ஏற்றி என்னுடன் அனுப்பினர். அவற்றின் விலை பதினைந்தாயிரம் தீனர்-பொற்காசுகள் இருக்கலாம்.

எகிப்திலுள்ள மார்க்கப் போதகர் ஒருவர் ஒரு நாள் "இந்த உலகின் துர்பாக்கியத்தைப் பாருங்கள், ஆண்டவன் எந்தெந்த மனிதர்களை பூமியின் அதிகாரிகளாக்கி இருக்கின்ருன்? பக்தாதில் முயிஸ்ஸுத்தொலாஹ் தேலமீ இருக்கின்ருர். அவர் கை கால் விழுந்தவர்! எகிப்தில் காபூர் அக்ஷீதி! அவர் விதையடிக்கப்பட்டவர்!" என்ருர்.

இச்செய்தியை காபூர் கேள்விப்பட்டார், சிரித்தார். இந்த மார்க்கப் பிரசங்கியை நான் ஒரு சமயம் கோபித்தேன். அதனுல்தான் அவர் இவ்வாறு சொல்லியிருக்கிருர்'' என்று கூறினர். உடனே, பிரசங்கியை வரவழைத்தார். ஒரு தொகை கொடுத்தார். போற்றினும் போற்றுவர் பொருள் கொடாவிடில் தூற்றினும் தூற்றுவர். அதற்குப் பிறகு, அந்தப் பிரசங்கி தமது சொற்பொழிவில் "ஹாம் உடைய சந்ததிகளில் மூன்று நபர்களே சாலச் சிறந்தவர்கள். முதலாவது ஹகீம் லுக்மான், இரண்டாவது நபிபெருமானர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய பாங்கு சோல்வோரான ஹஸ்ரத் பிலால் ரலியல்லாஹு அன்ஹு. மூன்ருவது காபூர் அக்ஷீதி கல்லதல்லாஹு முல்கஹு வ ஸுல்தானு" என்று காபூரைப் புகழ்ந்தார்.

மூஸல் கவர்னர் ஸைபுத்தௌலாஹ்விடமிருந்த அரபிக் கவிஞர் முப்கனீ என்பவர் அவரது தர்பாரிலிருந்து கோபித்துக் கொண்டு காபூரிடம் வந்து வசித்தார். அவர் காபூரைப் புகழ்ந்து ஒரு பாமாலை பாடியிருக்கின்ருர்.

அஹ்மத் பின் அலீ

காபூருக்குப் பிறகு அக்ஷீதின் பௌத்திரர் அஹ்மத் என்பவர் எகிப்து நாட்டின் அதிபதியானார். அப்பொழுது அவருக்கு வயது பதினொன்று ஆண்டுகளே. ஸிரியா நாட்டார் அவரது ஆதிக்கத்தை ஒப்புக்கொள்ள மறுத்தார்கள். மேலும், ஹஸன் அக்ஷீதி என்பவரைத் தங்கள் தலைவராக்கினார்கள். அக்காலத்தில் கராமிதா கட்சியார் அதிக வலுவடைந்திருந்தார்கள். ஆதலால், அவர்கள் ஹஸனைத் தோற்கடித்து ஸிரியாவைக் கைப்பற்றிக் கொண்டார்கள். ஹஸன் தமது சேனையுடன் எகிப்துக்கு வந்து, அங்கிருந்து அஹ்மதைத் துரத்திவிட முயன்றார். இவ்விருக்குமிடையில் சச்சரவுகள் ஏற்பட்டதைக் கண்ட மந்திரி பிரதானிகள், பாத்திமீ கலீபா முயிஸ் லி தீனில்லாஹ் என்பவருக்கு அழைப்பு விடுத்தார்கள். வந்து எகிப்தைக் கைப்பற்றும்படி கேட்டுக்கொண்டார்கள். இத்தகைய சூழ்நிலையும் வாய்ப்பும் கிடைக்கும் காலத்தை அவர் எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தார். எனவே தமது அடிமை ஜவ்ஹர் ஸக்லீ என்பவரின் தலைமையில் ஒரு சேனையை அனுப்பினார். ஹி. 358இல் எதிர்ப்பொன்றுமின்றி எகிப்து நாட்டை அவர் கைப்பற்றிக் கொண்டார்.

8. பாத்திமீ அரசாங்கம்

ஹி. 358—567. கி. பி. 969—1171.

வடமேற்கு ஆப்பிரிக்காவில், ஹி. 269இல் பாத்திமீ கட்சியாரின் பிரச்சாரம் தொடங்கப்பட்டது. பாஸ் (Fez) நகரின் அருகில் கதாமியா என்னுமிடத்தில் அபூ முஹம்மத் உபைதுல்லாஹ் என்பவர் தாமே மஹ்தீ என்று விளம்பரஞ் செய்தார். மேலும், தாமே இமாம் ஜ:ஃபர் ஸாதிக் உடைய புதல்வர் இஸ்மாயீல் என்பவரின் சந்ததியில் பிறந்தவர் எனவும், ஹஸ்ரத் பாத்திமா (ரலி), ஹஸ்ரத் அலீ (ரலி) இவ்விருவரின் சந்ததியில் தோன்றியவராதலால், தாமே

உண்மையான இமாம் ஆவதற்கு உரியோர் எனவும் கூறினர். இத்ரீஸ் கோத்திரத்தாரும் காலிப் கோத்திரத் தாரும் அவருக்கு உதவிசெய்தார்கள். எனவே, உபை துல்லாஹ் படிப்படியாகச் செல்வாக்கும் அதிகாரமும் பெற ஆரம்பித்து, ஹி. 280இல் இப்ரிகியாவின் தலைநகரான கய்ருவானையும் வென்றுவிட்டார்.

ஹி. 295இல் உபைதுல்லாஹ் வன்மை பெற்றார். தாமே கலீபா* என்று விளம்பரஞ் செய்தார். மஹ்தீயின் நோக்கம் நீர்வளமும் நிலவளமும் நிறைந்த எகிப்து நாட்டின்மீதே இருந்தது. அதையே தமது இருப்பிடமாக்க அவர் விரும் பினர். ஆனால், அதைக் கைப்பற்றும் திறமை அவரிடம் சிறிதளவேனும் கிடையாது. எனவே, கைருவான் நகருக்கு அருகில் மஹ்திய்யா என்னும் நகரை நிர்மாணித்து அங்கி ருந்து எகிப்து நாட்டைக் கைப்பற்றும் வரை அதையே தமது கிலாபத்தின் தற்காலிகமான மத்திய ஸ்தாபனமாக ஏற்படுத்தினர். ஹி. 301 இறுதியில், ஹப்பாஸாவின் தலைமையில் ஒரு சேனையை அவர் எகிப்துக்கு அனுப்பினர். ஆனால், அச்சமயம் எகிப்திலிருந்த கவர்னர் தகீன் கஜ்ரீ என்பவர் பக்தாத் கலீபாவிடமிருந்து ராணுவ உதவிபெற்று ஹப்பாஸாவைத் தோற்கடித்தார். மறுபடியும், ஹி. 307இல் அபுல் காஸிம் தலைமையில் பாத்திமீ கலீபாவின் சேனை எகிப்தைத் தாக்கியது. எனினும், மறுபடியும் தோல்வி யடைந்து திரும்பியது.

---

*பாத்திமீ கலீபா இவ்வாறு விளம்பரப்படுத்தியதையும், அதே சமயம் அப்பாஸி கலீபாக்கள் மிகவும் பலவீனராக இருந்ததையும் கண்டு அந்தலூஸ் (ஸ்பெயின்) நாட்டு ஸுல்தான் அப்துர் ரஹ்மான் நாஸிர், ஹி. 300இல் பட்டத்திற்கு வந்து தாமும் கலீபா என்று விளம்பரப்படுத்தினர். எனவே, அச்சமயம் ஒரேகாலத்தில் இஸ்லாமிய உலகில் மூன்று கலீபாக்கள் இருந்தார்கள். இவர்களுக்கிடையே பகைமை யும் இருந்தது. உலகிற்கு சீரும் சிறப்பும் அளிக்கவேண்டிய கிலாபத், இப்பொது எடுப்பார் கைப்பிள்ளையாகத் தத்தளித்துக்கொண்டிருக் கிறது. இதனல் முஸ்லிம்களின் ஒற்றுமையும் சிதறுண்டு போயிற்று.

ஹி. 322இல் உபைதுல்லாஹ் மஹ்தீ இறந்துபோனார். பிறகு, அவரது புத்திரர் அபுல் காஸிம் முஹம்மத் காயிம் பி அம்ரில்லாஹ் என்பவர் கலீபா ஆனார். எகிப்து நாட்டை வெல்லும் ஆவல் இவருக்குத் தமது தகப்பனாரைக் காட்டிலும் மிகுதியாக இருந்தது.

இதே ஆண்டில், பக்தாதில் ராலி பில்லாஹ் என்பவர் கலீபா ஆகி, முஹம்மத் பின் தகஜ் என்பவரை எகிப்துக்கு கவர்னராக நியமித்தனுப்பினார். அவர் அங்கு சென்று அஹ்மத் கை கலஜ் என்பவரை அகற்றிவிட்டார். ஆகவே, அஹ்மத் அங்கிருந்து ஓட்டம் பிடித்து காயிம் பி அம்ரில்லாஹ் விடம் சென்று எகிப்தை வெல்லுமாறு அவரைத் தூண்டினார். காயிம் பி அம்ரில்லாஹ்வும் அதற்கு உடன்பட்டு, ஒரு பெருஞ் சேனையை அனுப்பினார். அதை எதிர்ப்பதற்காக முஹம்மத் பின் தகஜ் எகிப்தின் மேற்கு எல்லைப்புறத்தில் கோட்டை கொத்தளங்களைத் தயாரித்து, அகழ் தோண்டினார். ஆனால், பாத்திமீ சேனை வந்து, அலக்சாந்திரியாவை வென்றுவிட்டது.

1. முயிஸ் லி தீனில்லாஹ்

ஹி. 358—365. கி.பி. 968—975.

அக்ஷீதி அரசாங்கம் ஹி. 358இல் அஸ்தமித்த பிறகு, காயிம் பி அம்ரில்லாஹ்வின் புதல்வர் அபூ தமீம் முயிஸ் என்பவர் முயிஸ்-லி-தீனில்லாஹ் என்னும் பட்டத்துடன் மஹ்திய்யா நகரில் கலீபாவாக இருந்தார். அவர் வட ஆப்பிரிக்காவில் கிழக்கில் பர்காவிலிருந்து மேற்கே மொரோக்கோ (மராகஷ்) வரையுள்ள பிரதேசத்திற்கும், மால்தா, ஸார்தினியா, ஸக்லியா (ஸிஸிலி) முதலிய பெரும்பாலான மத்திய தரைக்கடல் தீவுகளுக்கும் அதிபராக இருந்தார். பாஸ், ஸல்ஜமாஸா முதலிய இடங்களை வென்று புகழ்பெற்றிருந்த தமது அடிமை ஜவ்ஹர் என்பவரிடம் தகுந்த சூழ்நிலையை யறிந்து, ஓர் இலட்சம் குதிரைவீரரும், கணக்கற்ற சாமான்களும் பணமும் கொடுத்து, எகிப்து நாட்டை வென்றுவருமாறு அனுப்பினார்.

அச்சமயம், எகிப்தில் கொடும்பஞ்சம் நிலவியிருந்தது. அதனால் ஏறத்தாழ ஆறு இலட்சம் மக்கள் மாண்டுபோனார்கள். அரசாங்கத்தின் அடையாளமே இல்லாமல் போய்விட்டது. மேலும், எகிப்தியத் தலைவர்களில் பலர் தமது நாடு பாத்திமீ அரசாங்கத்தில் சேர்ந்துவிட வேண்டுமென்றும் விரும்பினார்கள். ஆகையால், பாத்திமீ சேனையை ஒருவரும் எதிர்க்கவேயில்லை. எனவே, ஜவ்ஹர் வந்தார். எகிப்தை வெகு எளிதில் கைப்பற்றிக்கொண்டார். ஹி. 358 ஷஃபான் 12 இல் அமீர்களும், மந்திரிகளும், ஆலிம்களும், காஜிகளும் புஸ்தாத் நகரக் கோட்டை வரையில் ஜவ்ஹரை எதிர்கொண்டழைத்தார்கள். வெள்ளிக்கிழமையன்று, ஜவ்ஹர், அம்ரு பின் ஆஸ் நிர்மாணித்த பள்ளிவாயிலில் பாத்திமீ கலீபாவின் பெயரால் குத்பா ஓதி சொற்பொழிவாற்றினார். அப்பாஸி கலீபாக்களின் கருப்புக்கொடியை அகற்றிவிட்டு பாத்திமீகளின் வெள்ளைக்கொடியை நாட்டினார். (உமய்யாக்களின் கொடி பச்சை நிறமுடையது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.) மேலும். பாங்கு என்னும் தொழுகை அழைப்பில் "ஹய்யா அலல் கைரில் அமல்" என்று சொல்லும்படி கட்டளையிட்டார்.

பிறகு, பக்தாத் நகர நிலப்படம் (பிளான்) போன்றே காஹிராவில்* அஸ்திவாரம் போட்டார். நகரின் மத்தியில்

---

* காஹிராவின் அஸ்திவார தினத்தில் ஜவ்ஹர் ஒரு ஜோதிடனை ஓர் உயர்ந்த இடத்தில் நிற்கும்படி ஏற்பாடுசெய்து, அஸ்திவாரத்தின் நான்கு பக்கங்களிலும் கயிறுகள் கட்டி, அவற்றில் மணிகள் தொங்கவிட்டிருந்தார். குறித்த நல்ல நாழிகையில் ஜோதிடர் கயிற்றை அசைத்து மணி அடித்தால் அச்சமயம் அஸ்திவாரம் போட வேண்டுமென்று ஏற்பாடு செய்திருந்தார். ஆனால் தற்செயலாகப் பறந்துகொண்டிருந்த ஒரு காகம் கயிறுகளில் சிக்குண்டது. அதனால், மணி அடித்தது. அந்த நிமிடம் அஸ்திவாரம் போடப்பட்டது. இதைக் கண்ட ஜோதிடன் "அல் காஹிர்! அல் காஹிர்! "செவ்வாய்க் கிரகணம் முன்னால் இருக்கிறது" எனக் கூவினான். ஆனால், என்ன செய்ய முடியும்? அந்தப் பெயரே அந்த நகருக்கும் கொடுக்கப்பட்டது.

கலீபாவுக்காக இரண்டு அழகிய அரண்மனைகள் கட்டினர். ஜாமிஃ அஸ்ஹர் * என்னும் பள்ளிவாயிலும் கட்டுவித்தார்.

எகிப்தைக் கைப்பற்றிய பிறகு, ஜஃபர் பின் பலாஹ் கத்தாமி என்பவரை ஒரு சேனையுடன் ஸிரியாவுக்கு அனுப்பினர். அவர் அவ்வாறே சென்று ஸிரியாவை வென்ருர். அவரை எதிர்த்தோர் அனைவரும் கைது செய்யப்பட்டு எகிப்துக்கு அனுப்பப்பட்டார்கள். இந்த வெற்றிகளுக்குப் பிறகு, எகிப்துக்கு வரவேண்டுமென்று முயிஸை ஜவ்ஹர் அழைத்தார். அவரும் ஹி. 362 ஸபர் மாதம் ஐந்தாம் நாள், தமது பரிவாரங்களுடன் மஹ்தியா நகரிலிருந்து புறப்பட்டு, வழியில் வேட்டையாடிக் கொண்டும் இன்பமாகப் பொழுதுபோக்கிக் கொண்டும், பலவிடங்களில் உல்லாசமாகத் தங்கித் தங்கி, ஷஃபான் 24ல் அலக்சாந்திரியா நகருக்கு வந்து சேர்ந்தார். அங்கு பொதுமக்கள் அனைவரும் அவரை எதிர்கொண்டழைத்தார்கள். அப்பொழுது அவர் அங்கு கூடியிருந்த மக்களுக்கு நீண்டதொரு சொற்பொழிவாற்றினர். செல்வத்திற்காகவே, ராஜ்யப் பெருக்கிற்காகவோ தாம் எகிப்து நாட்டைக் கைப்பற்றவில்லை. எனவும், ஆனல், சத்தியப் பிரச்சாரம் செய்யவேண்டும் என்னும் நோக்கத்துடன், ஆண்டவன் பாதையில் ஜிஹாத் செய்யவேண்டும் என்னும் குறிக்கோளுடனும் வந்ததாகவும் கூறினர்.

---

* ஜாமிஃ அஸ்ஹரில் பலகலைகளும் கற்பிக்கப்பட்டு வந்தன. இதில் அஜீஸ் காலத்தில் பல்வேறு கலைகள் சம்பந்தமான நூல்கள் சேர்க்கப்பட்டன. பிற்காலத்தில் இந்தக் கலாசாலை வெகுமுன்னேற்றமடைந்து இந்தப் பல்கலைக் கழகத்திலிருந்து, இஸ்லாமியக் கலைகளும், அரபி மொழியும், இஸ்லாமிய உலகில் பரவின. ஸுல்தான்களும், சிற்றரசர்களும், மந்திரிகளும். செல்வர்களும், ஏராளமான சொத்துக்களை அதற்கு நன்கொடையாக அளித்தார்கள். இது இன்றுவரை நடந்து வருகின்றது. இதுதான் உலகில் முதலாம் பல்கலைக் கழகம். இதில் இருபதாயிரம் மாணவர்கள் கற்கின்ருர்கள், இஸ்லாமிய நாடுகளிலிருந்து ஏராளமான மாணவர்கள் இங்கு வருகின்ருர்கள் ஐநூறு, அறுநூறு பேராசிரியர்கள் உயர்ந்த ஊதியம் பெற்றுப் பணியாற்றுகின்ருர்கள்.

எகிப்து நாட்டு நீதிபதி (காஜி) அபூதாஹிர் கூறுவதாவது :

நான் இந்த தர்பாரிலே முயிஸ் அருகில் உட்கார்ந்திருந்தேன். அப்பொழுது அவர் என்னை நோக்கி, "என்னைப் பார்க்கிலும் சிறந்த கலீபாவை நீர் பார்த்திருக்கிறீரா?" எனக்கேட்டார். அதற்கு நான் "உங்களைத் தவிர வேறு கலீபாவைப் பார்க்கும் நற்பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை" என்றேன். மறுபடியும் அவர், "நீங்கள் ஹஜ்ஜுக்குச் சென்றிருப்பீர்கள், மதீனாவில் அபூபக்ர் உமர், ஆகியோரின் கபர்களைப் பார்த்திருப்பீர்களல்லவா?" எனக்கேட்டார். அதற்கு எத்தகைய மறுமொழி கூறுவதென்று திகைத்துக் கொண்டிருக்கும் பொழுது, என் பார்வை எதிரில் நின்று கொண்டிருந்த அவரது மைந்தர் மீது விழுந்தது. உடனே, "நான் இப்பொழுது உங்களுடன் பேசிக்கொண்டிருக்கும்பொழுது இளவரசருக்கு ஸலாம் சொல்லாமல் இருக்கிறேன். இதைப் போன்றே, அங்கு, நபிபெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லமவர்களின் ஜியாரத்—தரிசனத்திலே, இவ்விரு மகான்களின் நினைவு எனக்கு வரவில்லை" என்றேன். இவ்வாறு கூறினேன். உடனே எழுந்தேன் இளவரசருக்கு ஸலாம் சொன்னேன், எனவே, இந்தச் சங்கடமான உரையாடல் அத்துடன் நின்று விட்டது".

முயிஸ் அதற்குப் பிறகு அலக்சாந்திரியாவிலிருந்து ஜீஸாவுக்கு வந்தார். அங்கு, ஜவ்ஹர் தமது துருப்புக்களுடன் அணிவகுத்து நின்று ஸலாம் செய்து ராணுவ மரியாதைகளுடன் வரவேற்றார். முதலாவதாவது காஹிரா நகரில் முயிஸ், ரமலான் மாதம் ஐந்தாம் தேதி வந்தார். அங்கு அரண்மனையில் ஒரு தர்பார் நடத்தினார். அங்கு மக்கள் கூடி கோலாகலத்துடன் ஆரவாரஞ் செய்து அவருக்கு ஆசிகூறினார்கள். அன்றுமுதல் காஹிரா நகர் கலீபாவின் தலைநகராகிவிட்டது. அரண்மனையின் ஒரு

பாகத்தை கபரஸ்தானுக்காக ஒதுக்கிவைத்து, அதில் தம்முடன் கொண்டுவந்திருந்த தமது மூதாதைகளின் பிரேதப் பெட்டிகளை நல்லடக்கம் செய்தார். அதற்குப் பிறகு, கலீபாவின் குடும்பத்தார் அனைவரையும் அங்கு அடக்கம் செய்தல் வழக்கமாகிவிட்டது. இந்த கபரஸ்தானுக்கு துர்பதே ஜஃபரான் என்று பெயர் வைக்கப்பட்டது.

இவர் எகிப்துக்கு வந்த பிறகு முதலாவது இவரது தர்பாரில் விசாரணை செய்த வழக்கில், காபூர் அக்ஷீதியின் மனைவி, தான் வைத்திருந்த பொற்கம்பிகளால் பின்னப் பட்ட முத்துச் சட்டையொன்றை, ஒரு யூதனிடம் அமானிதமாக வைத்திருந்ததாகவும், ஆனால், அவன் அதைக் கொடுக்க மறுப்பதாகவும் வழக்குத் தொடர்ந்தாள். அந்த யூதன் வீட்டைச் சோதனை செய்யுமாறு முயிஸ் கட்டளையிட்டார். சோதனை செய்யப்பட்டது. யூதன் அந்தச் சட்டையை ஒரு பாத்திரத்தில் வைத்துப் புதைத்துவிட்டான். சர்க்கார் சிப்பந்திகள் அதைத் தோண்டி எடுத்துக்கொண்டார்கள். அம்மாது, தனது பொருள் கிடைத்தவுடன் அதை கலீபாவுக்குக் காணிக்கையாகச் சமர்ப்பித்தாள். ஆனால், அவர், "ஒரு விதவையின் பொருள் எனக்கு வேண்டாம்" எனக் கூறினார். அச்சமயம், தர்பாரில் இருந்தோரனைவரும் அவரது உயர்ந்த ஒழுக்கத்தைக் கண்டு அவரைப் புகழ்ந்து மகிழ்ச்சியடைந்தார்கள்

ஹி. 363இல் கராமிதா கட்சியார் ஹஸன் பின் அஹ்மத் என்பவர் தலைமையில், எகிப்து நாட்டின் மீது படையெடுத்து வந்தார்கள், அப்பொழுது முயிஸ் அவர்களுக்கு "நீங்கள் எங்கள் இமாத்திற்காகத்தானே பிரச்சாரம் செய்துகொண்டிருந்தீர்கள். அதை ஆண்டவன் நிறைவேற்றி, நபிபெருமானாரவர்களின் குடும்பத்தராகிய அஹ்லுல் பைத் (அஹ்லெ பைத்)துக்கு இப்பொழுது கிலாபத்தை அளித்துவிட்டான். அப்படியிருக்கையில், நீங்கள் எங்களுக்கு உதவி செய்யாமல், எங்களை எதிர்க்கும் காரணமென்ன?" என்றெழுதினார்.

ஆனால், கராமிதாக்கள் அதைக் கவனியாமல் போர் புரியத் தயாரானார்கள். முழுவன்மை பெருமல் இளம் பிராயத்திலிருந்த இந்த அரசாங்கத்தை எகிப்திலிருந்து துரத்திவிட்டுத் தாமே ஸுல்தானாகிவிட வேண்டுமென்று கராமிதாக்களின் தலைவர் ஹஸன் என்பவர் திட்டமிட்டிருந்தார். கராமிதாக்களின் பெரிய சேனையைக் கண்டு முயிஸ் அச்சங்கொண்டார். இதற்கிடையில், மந்திரிகள் ஒரு சூழ்ச்சி செய்தார்கள். ஸிரியாவின் ஒரு பாகத்தின் சிற்றரசாக இருந்தவரும், கராமிதாக்களுக்கு உதவியாக ஒரு பெருஞ்சேனையைக் கொண்டுவந்திருந்த அரபித் தலைவர் ஹஸ்ஸான் பின் ஜர்ராஹ் என்பவருக்கு ஓர் இலட்சம் தீனார் கொடுத்து அவரைப் பிரித்து விட்டார்கள். எனவே, அவர் போர்க்களத்திற்கு வரவே இல்லை. இதையறிந்த கராமிதாக்களின் சேனை மனஞ்சோர்ந்து, தோல்யடைந்து ஓட்டம் பிடித்தது. அபூ முஹம்மத் இப்ராஹீம் என்பவர் அவர்களைப் பின்தொடர்ந்து சென்று, பலரைக் கொன்று, ஆயிரத்து ஐந்நூறு சிப்பாய்களைக் கைது செய்து கொண்டு திரும்பினர். அவர்கள் அனைவரும் கொலை செய்யப்பட்டார்கள்.

அதற்குப் பிறகு எகிப்து நாட்டில் பாத்திமீகளின் ஆட்சி வாலிபனைப்போன்று வன்மையுடனிருந்தது. ஆனால், அதேசமயம் பக்தாதில் அப்பாஸி கலீபாக்கள் பலவீனராகி விட்டார்கள். பாத்திமீகளை எதிர்க்கும் சக்தியும் அவர்களுக்கில்லை. ஆனால், பாத்திமீகளின் குடும்பத்தை இழிவாகக் கூறினார்கள். பொதுமக்கள் பாத்திமீ கிலாபத்தை அங்கீகரிக்கக்கூடாதென்று முயற்சிசெய்தார்கள். ஆலிம்களும், அமீர்களும், ஸையித்களும் கையெழுத்திட்ட ஒரு மகஜர் தயார்செய்து, எகிப்தில் ஆட்சிசெய்யும் அரச வம்சத்தார் பாத்திமீ குடும்பத்தைச் சேர்ந்தோர் அல்லர் என்று விளம்பரப்படுத்தினார்கள். ஆனால், அதனால் நல்ல பலன் உண்டாகவில்லை. ஏனென்றால், எகிப்தில் அப்பொழுது ஆட்சி செய்தோர் நபிபெருமானாரவர்களின் குடும்பத்தார் என்று உரிமை கொண்டாடினார்கள். அது மட்டுமன்று.

அந்த அரசாங்கம் வாளின் வன்மையாலும் நிறுவப்பட்டிருந்தது. அதில் வேகமும், விவேகமும் நிறைந்து காணப்பட்டது. காஹிரா நகரில் முயிஸ் பிரவேசித்தபொழுது ஸையித் குடும்பத்தாரின் தலைவராக இருந்த அப்துல்லாஹ் பின் தபாதபா என்பவர் கலீபாவின் குலம், கோத்திரம் முதலியவற்றை விசாரித்தார். அதற்கு முயிஸ், "இதன் விடையை நான் பகிரங்கமான தர்பாரில் அளிப்பேன்! எனக் கூறிவிட்டார். பிறகு ஸையித்களும், மேன்மக்களும் கூடியிருந்த தர்பாரிலே தமது வாளை உருவினார்! இதுவே என் குலமும் கோத்திரமும்!" என்றார். பிறகு தட்டுகள் நிறைந்த பொற்காசுகளை வீசினார். "எடுத்துக்கொள்ளுங்கள்! இதுதான் என் கண்ணியம்!" என்றார். அப்பொழுது அங்கு கூடியிருந்தோர் அனைவரும் ஏகமனதுடன் "நாங்கள் அனைவரும் உங்கள் பணியாளர்கள். நாங்கள் உங்களுடைய அடிமைகள்!" என்று ஆரவாரஞ் செய்தார்கள்.

முயிஸ், ஹி. 365 ரபீயுல் ஆகிர் 11 வெள்ளிக்கிழமை காலஞ்சென்றார். அப்பொழுது அவருக்கு வயது நாற்பத்தைந்து. அன்றே, அவரது புதல்வர் நிஸார் பின் முயிஸ் அபூ மன்ஸூர் என்பவருக்கு விசுவாசப் பிரமாணம் செய்யப்பட்டு அஜீஸ் பி தீனில்லாஹ் என்று பட்டமும் கொடுக்கப்பட்டது.

2. அஜீஸ் பி. தீனில்லாஹ்

(ஹி. 365—386. கி. பி. 975—996)

அஜீஸ் ஹி. 344 முஹர்ரம் 14ல் மஹதிய்யா நகரில் பிறந்தார். தமது இருபத்தொன்றாம் வயதில் கலீபா ஆனார். இவர் காலத்தில் பாத்திமீ அரசாங்கம் விசாலமடைந்தது., மக்கா நகர் வரை சென்று விட்டது. இவர் தமது சேனையின் மேற்பார்வையை ஜவ்ஹரிடம் கொடுத்து விட்டார். அரசியல் விஷயங்களைத் தமது மந்திரி யஃகூப் பின் யூஸுப் வசம் விட்டு விட்டுத் தாம் இன்பங்களில் காலங்கழித்து வந்தார்.

மத்திரி யஃகூப் வெகு சாதுர்யமுள்ளவர். நல்ல நிர்வாகி. சிறந்த கல்விமான். அவர் அரசாங்கக் காரியாலயங்களின் நிர்வாகத்தில் சீரமைப்புச் செய்தார். ஆலீம்கள் (கல்விமான்கள்), பாஸில்கள் (மேன்மக்கள்) முதலியோரின் ஆதரவு பெற்ருர். இஸ்லாமியக் கலைகளின் ஆய்விலும், திருக்குர்ஆன் ஓதுவதிலும் தனிச்சிறப்புள்ளவர். புத்தகங்கள் எழுதி அவற்றை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் உட்கார்ந்து தாமே வாசித்துக் காட்டுவார். ஹி. 380இல் பாத்தீமீ கலீபாக்களின் இந்த முதல் மந்திரி காலஞ் சென்ருர்.

முயிஸ் காலத்திலே முயிஸ்ஸுத் தௌலாஹ் அஹ்மத் பின் பூயா என்பவரின் அடிமையும் பக்தாதிலிருந்து ஸிரியாவுக்கு வந்து ஹமஸ் நகரைக் கைப்பற்றியவருமான ஹப்தகீன் ஷுராபீ என்பவர் பாத்திமீ கலீபாக்களின் பிரதிநிதி ரையான் என்பவரை டமஸ்கஸிலிருந்து துரத்தி விட்டார். அஜீஸ், ஹி. 365ல் கலீபாவான பிறகு ஹப்தகீனை எதிர்க்குமாறு ஜவ்ஹரை அனுப்பினுர். ஹப்தகீன் உடனே கராமிதாக்களேயும் சேர்த்துக் கொண்டு அவரைத் தோற்கடித்து விட்டார். எனவே, ஜவ்ஹர் அங்கிருந்து ஓடி, அஸ்கலான் கோட்டையில் அடைக்கலம் புகுந்துகொள்ள, ஹப்தகீன் அதையும் முற்றுகையிட்டார். வேறுவழியின்றி ஜவ்ஹர் தம்மிடமிருந்த சாமான்கள் அனைத்தையும் ஹப்தகீனிடம் கொடுத்துவிட்டு, உயிர் தப்பி எகிப்துக்கு வந்தார். பிறகு அஜீஸ், தாமே ஒரு பெருஞ்சேனையுடன் சென்று, கடும்போர்கள் புரிந்து இறுதியில் வெற்றி பெற்ருர். ஹப்தகீன் மாறுவேடம் பூண்டு மறைந்து கொண்டார். அவரைக் கண்டுபிடித்துக் கொண்டு வருவோருக்கு இலட்சம் தீனர் இனமாகக் கொடுக்கப்படுமென்று அஜீஸ் விளம்பரஞ் செய்தார். ஹப்தகீன் தமது நண்பர் முப்ரிஜ் பின் தக்பல் தாயீ என்பவரின் வீட்டில் இருந்தார். அந்த நண்பர் பண ஆசையால் அவரைப் பிடித்துக்கொடுத்து இனமும் பெற்றுக் கொண்டார். ஆயினும்,

ஹப்தகீனுடைய வீரத்தை நன்கு மதித்த அஜீஸ், அந்த எதிரியைக் கண்ணியப்படுத்தியதோடு, அவரைத் தம்முடன் எகிப்துக்கு அழைத்துக் கொண்டுவந்து மரியாதையுடன் வைத்திருந்தார். எகிப்தில் ஹி. 372 இல் அவர் காலஞ் சென்ருர்.

யஃகூபுக்குப் பிறகு, இரண்டு மந்திரிகள் நியமிக்கப் பட்டார்கள். ஒருவர் ஈஸா பின் மஸ்தூரஸ் என்னும் ஒரு கிறிஸ்தவர். மற்ருெருவர் மஷியா என்னும் ஒரு யூதர். இவ் விருவரும் தங்கள் மதத்தாருக்கே உதவி செய்ய ஆரம்பித்த தோடு, முஸ்லிம்கள்மீது கொடுமையும் செய்தார்கள். ஆகையால், பொதுமக்கள் முறையிட்டார்கள். எனவே, அவ்விருவரும் நீக்கப்பட்டார்கள். ஈஸாவுக்கு மூன்று இலட்சம் தீனர் அபராதம் விதித்து வசூலிக்கப்பட்டது.

ஹி. 386 ரமலான் 28 இல் அஜீஸ் காலஞ் சென்ருர். இவர் தரும குணமுள்ளவர். வீரவான். கவிபாடும் திறமை யுள்ளவர். இவர் காலத்தில் ஜாமிஃ அஸ்ஹர் பல்கலைக் கழகத்தில் இலக்கிய நூல்கள் ஏறத்தாழ இரண்டு இலட்சம் சேகரிக்கப்பட்டன.

3. ஹாகிம் பி. அம்ரில்லாஹ்

ஹி. 386—411. கி. பி. 996—1020.

அஜிஸ் பி தீனில்லாஹ் காலஞ்சென்ற பிறகு அவரது புதல்வர் அபூ அலீ மன்ஸூர் என்பவர் ஹாகிம் பி அம்ரில் லாஹ் என்னும் பட்டத்துடன் கலீபா ஆனுர். அப்பொழுது அவருக்கு வயது பதினெறரை. எனவே, அர்ஜுன் காதிம் என்பவர் அரசியல் நிர்வாகத்தை நடத்தி வந்தார். அவர் தமது சொந்த மனிதர்களை மாகாண கவர்னர்களாக நியமித் தார். ஆனுல், மூன்று ஆண்டுகள் சென்று அவர் கொலை செய்யப்பட்டார். எனவே, கலீபா ஹாகிம் ராஜ்ய பாரத் தைத் தாமே ஏற்று நடத்திஞர். இவருக்குக் கொஞ்சம் புத்தி சுவாதீனமின்றி இருந்ததெனவும், அந்த நிலை அவர் ஆயுள் முழுவதும் தொடர்ந்திருந்த தெனவும் சரித்திராசிரி யர்கள் எழுதுகிருர்கள். எனவே, அவரது செயல்களும் மூளையின் பலவீனத்தை விளக்குகின்றன.

அஃதாவது, ஹி. 391 இல் எவராயினும் பகலில் வேலை செய்யக் கூடாதெனவும், இரவில் கடைகள் திறந்துவைக்க வேண்டுமெனவும் அவர் கட்டளையிட்டார். மக்களும் அப்படியே செய்ய ஆரம்பித்தார்கள். இரவில் தாமே சென்று தெருக்களில் சுற்றிச் சுற்றிச் சோதனை செய்வார். ஒரு நாள் பகலில் புறப்பட்டார். ஒரு கிழவன் கடை திறந்து வைத்திருந்ததைக் கண்டார். "ஏன் பகலில் திறந்தாய்?" என்று அவனை அவர் கேட்டார். பகலில் வேலை செய்துகொண்டிருந்த காலத்திலும் சிலர் சில சமயம் அதிக அவசியமான பொழுது இரவில் கண்விழித்துக் கொண்டிருப்பார்கள். அதைப் போலவே, இதுவும் ஒரு பகல் விழிப்பாகும்" என்றான். இதைக் கேட்டு கலீபா புன்சிரிப்புடன் சென்றுவிட்டார்.

இவர், கல்வியின் முன்னேற்றத்திற்காகப் பல கல்விச் சாலைகளை நிறுவினார். அவற்றில் ஆலிம்கள், மார்க்கச்சட்ட நிபுணர்கள் முதயோரைப் போதகாசிரியர்களாக நியமித்தார். ஆனால், சிறிது காலஞ் சென்று, அவர்களைக் கொலை செய்து கலாசாலைகளையெல்லாம் மூடிவிட்டார். பெண்கள் வெளியே வரக்கூடாதெனவும், ஜன்னல்களிலிருந்து எட்டிப் பார்க்கலாகாதெனவும், குளிக்கும் வெந்நீர்ப் பொறைகளுக்குச் செல்லலாகாதெனவும் கட்டளையிட்டார். இவ்விஷயத்தில் இவர் மிகவும் இரக்கமின்றி நடந்துகொண்டார். பொது மக்கள் குளிக்கும் ஹம்மாம்—வெந்நீர் பொறைகளில் பெண் மக்களைக் கண்டால், உடனே கதவைத் தாளிட்டுச் சுவர் எழுப்பி விடுவார்! அந்தப் பெண்கள் தங்கள் குழந்தைகளுடன் கதறிக் கதறித் துடிதுடித்து உயிர் விட்டுவிடுவார்கள்! பொதுமக்கள் லாகிரி வஸ்துக்களை உபயோகிப்பதைத் தடுத்துவிட்டார்! மதுபானப் பாத்திரங்களையும் உடைத்துவிட்டார். நகரிலுள்ள நாய்களையெல்லாம் கொன்றுவிடும்படி கட்டளையிட்டார்! குர்பானீ கொடுப்பதைத் தவிர, பசுக்களையும், காளைமாடுகளையும் அறுக்கக் கூடாதென்று கட்டளை பிறப்பித்தார்! மீன் வேட்டையாடுவதைத் தடுத்துவிட்டார்.

அஹ்லுல் பைத்துக்கு விரோதமாக இருந்த அமீர் முஆவியாவுக்கும் அப்பாஸி கலீபா முதவக்கிலுக்கும் பிரியமான காய்கறிகளேயும், கனிவர்க்கங்களேயும் விற்கவும், வாங்கவும் கூடாதென்று உத்தரவிட்டார். இதையன்றி, காஹிரா நகரில் கழுதைகளே நுழையவிடக் கூடாதெனவும், பாபுல் காஹிரா என்னும் கோட்டை வாயில் வழியாக ஒருவரும் நகரில் பிரவேசிக்கலாகா தெனவும் கோட்டை வாயில் காப்பாளருக்குக் கட்டளேயிட்டிருந்தார். தாமே சென்று நகர சோதனே செய்வார். எவராயினும் தமது கட்டளேயை மீறி நடந்தால், தமது நீக்ரோ அடிமை மஸ்வூத் மூலமாக அவர்களே மிகக் கொடுமையாகவும் கேவலமாகவும் நடத்துவார்!

அவர் காலத்தில் கிறிஸ்தவர்கள் முன்னேற்றமடைந்து முஸ்லிம்களேக் கொடுமையாக நடத்த ஆரம்பித்தார்கள். இந்தச் செய்தியை கலீபா அறிந்தார். உடனே, கிறிஸ்தவர்களின் தலேவர்களேப் பிடித்தார். அவர்களேக் கொலே செய்தார். கிறிஸ்தவக் கோயில்களே இடித்தார். பைத்துல் முகத்தஸிலுள்ள கிமாமிய்யா கோவிலேயும் இடித்துவிட்டார். இவ்வாறு அவர் கிறிஸ்தவர்களேக் கொன்றதற்கும், அவர்களுடைய கோவில்களே இடித்ததற்கும் காரணம் அக்காலத்தில் கீழ ரோம ராஜ்யத்தார் ஸிரியா மீது படையெடுத்தார்கள். முஸ்லிம்களேக் கொள்ளே யடித்தார்கள். பள்ளிவாயில்களே இடித்துத் தள்ளினுர்கள். இதற்குப் பழிவாங்கும் எண்ணத்துடன் அவர் கிறிஸ்தவர்களுடன் அவ்வாறு நடந்தார் என்று சில சரித்திராசிரியர்கள் கூறுகின்றுர்கள்

ஹி. 395இல், சங்கைக்குறிய நாயகத்தோழர்கள் மீது வசை மொழி எழுதி, பள்ளிவாயில்களிலும், மக்பிராக்களிலும், பொதுப் பாதைகளிலும் ஒட்டி விளம்பரஞ் செய்தார். அவற்றை ஒவ்வொரு மாகாணத்திற்கும் அனுப்பினுர். ஆனல், பொதுமக்கள் அதை விரும்பவில்லே. அதை எதிர்த்தார்கள். ஆகையால், இரண்டாண்டுகளுக்குப்

பிறகு, அதை நிறுத்திவிட்டார். அஃதுமட்டு மன்று, அவ்வாறு விளம்பரஞ்செய்வோரைத் தண்டிக்கப்படும் என்வும் விளம்பரம் செய்வித்தார்.

அவர் காலத்தில் ஸஙூர் என்னும் ஒருவன் ஒரு புதிய மதத்தை ஆரம்பித்தான். அதில் தொழுகையுமில்லை; நோன்புமில்லை. ஸக்காத்துமில்லை. ஹஜ்ஜுக்குப்பதிலாக, எமன் மாகாணத்திலுள்ள தாலிப் என்னுமிடத்திற்குச் சென்று திரும்பிவிடுவதே போதுமானது. மேலும், தாய், சகோதரி, மகள், முதலிய எவளையும் மனைவியாகக் கொள்ளலாம். ஸஙூர் உடைய மாணுக்கன் ஹமஸா பின் அஹ்மத் என்பவன இந்த மதத்தைப் பிரச்சாரஞ் செய்தான். கலீபா ஹாகிம் அவனுக்கு உதவி செய்தார். பிறகு, தனக்கு அசரீரி வாக்குக்கிடைக்கின்றதெனவும். அவர் சொன்னர் " ஹஸ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாமுடன் பேசியதைப் போன்றே ஆண்டவன் என்னுடனும் பேசுகின்ருன் " எனக் கூறினர். தினந்தோறும் அதிகாலையில் ஜபல் முகத்தம் என்னும் குன்றின்மீது ஏறுவார். பிரார்த்தனை புரிவார்.

இவ்வாறிருக்கையில், பாத்தினீ கொள்கையைச் சேர்ந்த ஒருவன் அவருக்கு ஒரு புத்தகம் எழுதிக்கொடுத்தான். அதில், தெய்வ ஆவி, ஹஸ்ரத் ஆதமுக்கு வந்ததெனவும், அங்கிருந்து ஹஸ்ரத் அலீயிடம் வந்ததெனவும், இப்பொழுது ஹாகிமிடம் தோன்றியுள்ளதெனவும். அதில் எழுதியிருந்தது. அதை ஆதாரமாகக் கொண்டு அவர் தெய்வீக உரிமை கொண்டாடினர். பள்ளிவாயில்களில் குத்பா—மார்க்கச் சொற்பொழிவு செய்யும்பொழுது, தமது பெயர் கூறப்படும்பொழுது, மக்கள் உடனே சிரவணக்கம் (ஸஜ்தா) செய்யவேண்டுமெனவும், தாம் தெருக்களில் போகும் பொழுது, பொதுமக்கள் தரையில் விழுந்து சிரவணக்கம் செய்தல் வேண்டுமெனவும் கட்டளையிட்டார். " ஹாகிம் பி அம்ரில்லாஹ் " என்ற பட்டத்தை மாற்றி " ஹாகிம் பி அம்ரிஹி." என்று புதிய பட்டம் சூட்டிக்கொண்டார். சில பாமர மக்கள் இக்கொள்கையைப் பின்பற்றி நடக்கின்ருர்கள்.

எனவே, இன்றுவரையும், ஜபல் துருஸ் பிரதேச மக்கள் அவருடைய தெய்வீகத் தன்மையை நம்புகின்றார்கள்.

இவ்வாறு, அவர் மார்க்கப் புரட்சி செய்துகொண்டு வந்தமையால், எகிப்து நாட்டார் அவரை விரோதித்தார்கள் பரிகசிக்கவும் ஆரம்பித்தார்கள். இதை யறிந்து ஹாகிம் சீற்றங்கொண்டார். அடிமைகளை அழைத்தார். நகரில் நெருப்பு வைத்துவிடும்படி கட்டளையிட்டார் அந்த அடிமைகள் அவ்வாறே செய்தார்கள் மக்களைக் கொள்ளையடித்தார்கள். கொலை செய்தார்கள். நகர மக்கள் திருக்குர்ஆனை ஏந்திக்கொண்டு பள்ளிவாயில்களில் அடைக்கலம் புகுந்தார்கள். ஆண்டவனிடம் முறையிட்டார்கள். இறுதியாக, நகரின் மூன்றிலொரு பாகம் நெருப்பினால் அழிந்த பிறகு, மூன்றாம் நாள் இந்தத் துன்பம் நீங்கியது.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லமவர்களுடைய திருஉடலத்தை மதீனாவிலிருந்து காஹிரா நகருக்குக் கொண்டு வரவேண்டுமெனவும் அவர் விரும்பியதாக சில சரித்திராசிரியர்கள் எழுதுகின்றார்கள். இவ்வாறு, செய்வதால், தமது தலைநகர் உலக முஸ்லிம்களின் புண்ணிய ஸ்தலமாக மாறிவிடுமென் றெண்ணி, அதற்காக அபுல் பதூஹ் என்பவரை மதீனாவுக்கு அனுப்பினார். ஆனால், மதீனாவில் இதற்குக் கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது! அன்று ஒரு பயங்கரமான புயல் காற்று அடித்தது! ஹாகிமுடைய கெட்ட எண்ணத்தின் காரணமாக அவ்வாறு நடந்ததென்று மக்கள் நினைத்தார்கள். ஆகவே, அபுல் பதூஹ் அச்சங்கொண்டு திரும்பிவிட்டார். மேலும், இவ்வாறு செய்தால் கேடுவிளையுமென்று ஹாகிமுக்கு எச்சரிக்கையும் செய்தார்.

ஹி. 410இல் கஃபாவிலுள்ள ஹஜ்ர் அஸ்வத் என்னும் கருங்கல்லைக் கொண்டுவர முயற்சித்து, அதைச் சம்மட்டியால் அடித்த மனிதனும் இந்த கலீபாவின் தர்பாரைச் சேர்ந்தவனே. இந்தக் கல்லின் ஒரு பாகம் இடிந்து விழுந்து விட்டது. அந்த அடையாளத்தை இன்றுவரையும் காணலாம்.

அக்காலத்தில், உமய்யா அரச குடும்பத்தான் என்று ஒரு மனிதன் தன்னை விளம்பரப்படுத்தினான். அவன் பெயர் அபூ ரக்கூ. அவனுடன் ஒரு பெருங்கூட்டம் சேர்ந்து கொண்டது. கலகங்களும் போர்களும் நடந்தன. கலீபா ஹாகிமுடைய சேனை பலமுறை தோல்வியடைந்தது. அல் பியூம் என்னுமிடமும் எதிரியால் கைப்பற்றப்பட்டது. இறுதியாக, பஸல் பின் ஸாலிஹ் என்பவர் கடும்போர் புரிந்து அவனைக் கைது செய்தார். ஹாகிம் அவனைத் தெருத் தெருவாகச் சுற்றுவித்தார். அப்பொழுது அவன் அருகில் ஒரு குரங்கை நிறுத்தினார். அந்தக் குரங்கு அவன் தலையில் அடித்துக்கொண்டே சென்றது. அடி பொறுக்கமாட்டாமல் அவன் உயிர் துறந்தான்.

இவ்வாறு பஸல் செய்த உதவிக்காக கலீபா ஹாகிம் அவருக்கு நன்றி செலுத்தினார். அவர் நோய்வாய்ப்பட்டிருக்கும்பொழுது, அவரை விசாரிக்கவும் சென்றார். ஆனால் பஸல் நலமடைந்தவுடன் அவரைக் கொன்றுவிட்டார்!

ஹி. 411 ஷவ்வால் மாதம் இறுதியில் கலீபா ஹாகிம் காணமற் போனார். அதைக் குறித்துப் பலர் பலவிதமாகக் கூறுகின்றார்கள். அவர் தமது சகோதரியின் மீது பழி சுமத்தி அவளைக் கொலைசெய்ய நினைத்ததாகவும், இதை அவள் அறிந்துகொண்டு தானே அவரைக் கொலை செய்து விட முந்திக்கொண்டதாகவும், தனது அடிமைகளை ஏவி கலீபாவைக் கொலைசெய்துவிட்டதாகவும் கூறப்படுகின்றது. உண்மை என்னவென்றால், ஹஸன் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு மனிதன் ஹாகிமுடைய நாஸ்திகச் செயல்களைச் சகிக்க முடியாமல், மார்க்க ஆவேசத்திலே, அவர் தினந்தோறும் பிரார்த்தனைக்காகச் சென்று கொண்டிருந்த ஜபல் முகத்தம் என்னுமிடத்தில் பதுங்கியிருந்து அவரைக் கொன்று புதைத்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

கலீபா அஜீஸ் ஒரு பள்ளிவாயிலுக்காக அஸ்திவாரம் போட்டிருந்தார். ஹாகிம் அதைக் கட்டிமுடித்து ஜாமிஃ ஹாகிமீ என்று அதற்குப் பெயர் வைத்தார். இது ஒன்றே அவரது நினைவுச்சின்னமாக இருக்கின்றது.

ஹாகிம் வெறிபிடித்தவரைப் போன்று தோன்றிய போதிலும் கலாபிமானம் நிறைந்துள்ளோராகவும் இருந்தார். பக்தாத் நகரிலிருந்த பைத்துல் ஹிக்மத் (Academy of Science) என்னும் விஞ்ஞான மன்றத்திற்குப் போட்டியாக தமது அரண்மனையின் அருகில் தாருல் ஹிக்மத என்னும் பெயருடன் ஒரு கட்டிடம் தயாரித்து, அதில் கலைகள், தொழில்கள் சம்பந்தமான புத்தகங்களைச் சேகரித்து, பொது மக்கள் அங்கு வந்து அவற்றை வாசிக்கவும், அவற்றின் பிரதிகளை எழுதி வைத்துக்கொள்ளவும் ஏற்பாடு செய்தார். அவ்வாறு வருவோருக்கு தாருல் ஹிக்மத் நிலையத்திலிருந்து காகிதம், பேனு, மை முதலியன கொடுக்கப்பட்டன. இந்தக் கட்டிடத்தின் ஒரு பாகம் கல்விமான்கள் சொற்போர் நடத்துவதற்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. பட்டி மன்றங்களில் கலீபா ஹாகிம் கலந்துகொள்வார், மேலும் தமது சார்பில் உரையாடல் செய்வோருக்கு அவர் அங்கிகளும் இனும்களும் அளிப்பார். இந்தப் பேச்சுப் போட்டிகள் ஹாகிம் இறந்தபிறகும் நடந்து வந்தன. ஆனுல், தர்க்கங்களின் விளைவாக சண்டை சச்சரவுகளும் அடிதடிப் போர்களும் உண்டாகிவிட்டன. மார்க்க விஷயங்களில் பித்அத் என்னும் நவீனத்தை நுழைப்போர் இந்தத் தர்க்க மன்றத்தின் மூலமாகத் தங்கள் கொள்கைகளைப் பிரச்சாரஞ் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். அதனுல், கேடு விளைந்தது. எனவே, ஹிஜ்ரி ஆரும் நூற்ருண்டில், அப்ஸல் பின் அமீருல் ஜுயூஷ் என்பவர் இதை மூடிவிட்டார், எனினும், சின்னுட்கள் சென்று இப்னு பதாஹீ என்பவர் மந்திரியான பொழுது, மறுபடியும் அதைத் திறந்து வைத்தார். ஆனுல், ஸுல்தான் ஸலாஹுத்தீன் தமது காலத்தில் இதை ஷாபியீ கல்லூரியாக மாற்றிவிட்டார். இந்த மன்றத்தில் ஏறத்தாழ ஓர் இலட்சம் நூல்கள் இருந்தன.

4. ஜாஹிர் லி இ:ஜாஸ் தீனில்லாஹ்

ஹி. 411—427

கலீபா ஹாகிம் காணமற் போனர். பல நாட்கள்வரை அவரைக் காணமையால், முப்பத்தைந்தாம் நாள் அவரது சகோதரி ஸித்துல் முலூக் என்பவளிடம் சேனைத் தலைவர்கள் சென்று விசாரித்தார்கள். அதற்கு அவள், "கலீபாவிடமிருந்து எனக்குக் கிடைத்த கடிதத்தில் அவர் நாளை மறுதினம் தர்பார் நடத்துவாரென்று காணப்படுகின்றது" எனக் கூறினள். இதைக் கேட்ட பிறகு, அவர்கள் திரும்பிவிட்டார்கள்.

பிறகு, ஸித்துல் முலூக் தன் பணிபகன் இப்னு தவாஸ் என்பவனிடம் அவர்களுக்கு ஏராளமான பணம் கொடுத்தனுப்பினள். மூன்ரும் நாள் ஹாகிமுடைய பதினறு வயதுள்ள அபுல் ஹஸன் அலீ என்னும் புதல்வருக்கு பாதுஷாவின் ஆடைகள் அணிந்து தர்பாரில் உட்கார வைத்தார்கள். அப்பொழுது, இப்து தவாஸ் என்பவர் ஹாகிம் இறந்துவிட்டதை அறிவித்து, அபுல் ஹஸன் கையில் பைஅத்—விசுவாசப்பிரமாணம் செய்தார். பொற்குவியல்கள் பெற்ற அமீர்கள் அதை ஆமோதித்தார்கள். அதற்குப் பிறகு, பொதுமக்கள் விசுவாசப்பிரமாணம் செய்தார்கள். அபுல் ஹஸனுக்கு ஜாஹிர் லி தீனில்லாஹ் என்னும் பட்டம் அளிக்கப்பட்டது. பின்னர், இச்செய்தி ஒவ்வொரு மாகாணத்திற்கும் அறிவிக்கப்பட்டது. அபுல் காஸிம் அலீ பின் அஹ்மத் என்பவர் மந்திரியாக நியமிக்கப்பட்டார்.

ஜாஹிர் நேர்மையாளர். எனினும், வீண்பொழுது போக்கை விரும்புவோர். திடசித்தமற்றவர். எனவே, மந்திரி பிரதானிகள் அவர்மீது அளவு கடந்த செல்வாக்கைப் பெற்று விட்டார்கள். சில குறிப்பிட்ட அரசாங்க அலுவலர்களையன்றி வேறு எவரும் அவரைச் சந்திக்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. எனவே, அதிகாரிகள் பொது மக்கள்மீது கொடுமை செய்யத் தொடங்கினர்கள். நாடு

அலங்கோலமாகிவிட்டது, பஞ்சமும் தொத்து வியாதிகளும் பரவின. சாமான்களின் விலை உயர்ந்தது. ஆகையால், எங்கு பார்த்தாலும் திருடும் வழிப்பறியும் சாதாரணமாகி விட்டது. இதன் விளைவாகப் பல மக்கள் உயிர் துறந்தார்கள்.

ஹி. 417இல் பசுவோ, காளைமாடோ அறுக்கக்கூடாதென்று கலீபா விளம்பரஞ் செய்தார். இதன் நோக்கம் நாட்டின் விவசாயம் முன்னேற்றமடைய வேண்டுமென்பதே. கிறிஸ்தவர்கள் மீது கலீபா ஹாகிம் விதித்திருந்த நிபந்தனைகளையும் தடைகளையும் அவர் நீக்கிவிட்டார். கிறிஸ்தவக் கோவில்கள் கட்டுவதற்கு அனுமதியும் அளிக்கப்பட்டது. ஜாஹிர் ஹி.427 ரமலான் மாதம் காலமானார்.

5. முஸ்தன்ஸிர் பில்லாஹ்

ஹி. 427—487

கலீபா ஜாஹிர் காலஞ்சென்ற பிறகு, அவரது புதல்வர் அபூ தமீம் மஅத் என்பவர் தமது ஏழாம் வயதில் முஸ்தன்ஸிர் பில்லாஹ் என்னும் பட்டத்துடன் கலீபாவானார். முஸ்லிம் கலீபாக்கள், முஸ்லிம் ஸுல்தான்கள் அனைவரின் ஆட்சி காலத்தைப் பார்க்கிலும் முஸ்தன்ஸிரின் ஆட்சிக்காலம் மிகவும் நீண்டது. அவர் அறுபது ஆண்டுகள் ஆட்சி செய்தார். அந்த ஆட்சிக்காலத்தில் பல மாறுபாடுகளும் கலகங்களும் உண்டாயின.

அச்சமயம், இஸ்லாமிய எல்லைப்புறத்தைக் கீழ ரோம ராஜ்யச் சக்ரவர்த்தி தாக்கிக்கொண்டிருந்தார். அவர் ஹலப் நகரைக் கைப்பற்றி, ஸிரியாவிலும் தமது செல்வாக்கை நிரந்தரமாக்கிக்கொள்ள ஆரம்பித்தார். ஹி. 429இல் அவருடன் முஸ்தன்ஸிர் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார். அதன் விளைவாக ரோம சக்ரவர்த்தி ஹலப் நகரைக் காலிசெய்து விட்டார். பிறகு, அப்பிரதேசத்தில் சமாதானம் நிலவியது.

ஹி. 434 இல் எகிப்து நாட்டில் ஸஂகீன் என்னும் ஒருவன், "மறைந்து போன ஹாகிம் பி அம்ரில்லாஹ் நானே!" எனக் கூறிக்கொண்டு முன்வந்தான். ஹாகிமிடம் தெய்வீக சக்தி இருந்ததாக ஒப்புக்கொண்ட சிலர், அவனைப் பின்பற்றி அவனுக்கு உதவி செய்யவும் ஆரம்பித்தார்கள். அவனுடைய தோற்றம் ஹாகிமைப் போன்றே இருந்தது அவன் பகலிலே தனது உதவியாளருடன் கலீபாவின் அரண்மனையில் பகிரங்கமாக நுழைந்து எதிர்த்தான். இரத்தம் சிந்தப்பட்டது. இறுதியில், அவன் கைதியாக்கப்பட்டுத் தூக்கிலிடப்பட்டான்.

இதற்கிடையில், கலீபாவின் தாயார், அஹ்மத் பின் அலீ அம்பரீ என்பவரைப் புதிய அமைச்சராக நியமித்தாள். பிறகு, அவரையும் நீக்கிவிட்டு ஸத்கா அலாஜீ என்பவரை நியமித்தாள். அவர் கொலையுண்டு போனார். பிறகு, ஹுஸைன் ஜாஜராயீ நியமிக்கப்பட்டார். அவரும் நீக்கப்பட்டார். இறுதியில், காஜி யாஜூரி என்பவர் முஸ்தன்ஸிருடைய உள்ளத்தைக் கவர்ந்து முதல் மந்திரியானார்.

முயிஸுத் தௌலாஹ்:—அக்காலத்தில் ஹலப் பிரதேசத்தில் சில மாற்றங்கள் உண்டாயின. ஹி. 436 இல் கலீபா அங்கு முயிஸுத் தௌலாஹ் என்பவரை கவர்னராக நியமித்தனுப்பினர். முயிஸுத்தௌலாஹ் அங்கு சென்ற பிறகு சுதந்திரப் பிரகடனம் செய்துவிட்டார். கலீபா அவரைத் தேற்கடிக்க பல சேனைகளை அனுப்பினர். ஆனால், அவை தோல்வியடைந்து கொண்டே வந்தன. முயிஸுத் தௌலா தமது மனைவியை கலீபாவிடம் அனுப்பி, சமாதானம் கோரினர். அவள் சென்று, தனது சாமர்த்தியத்தினாலும், செல்வாக்கினாலும் முயிஸுத்தௌலாஹ்வே ஹலப் பிரதேசத்தின் சுவாதீனமான பாதுஷா என்று கலீபாவிடம் எழுதி வாங்கிக்கொண்டாள்.

இப்ரிகியா :—மக்ரிப், கைர்வான் ஆகிய பிரதேசங்களின் கவர்னராக இருந்த முயிஸ் பின் பாதீஸ் என்பவர், மந்திரி யாஜூரியின் கொடுமைகளைச் சகிக்க முடியாமல், பாத்திமீ

கலீபாவுக்கு விரோதமாகக் கலகஞ்செய்து, தமது மாகாணத்தில் குத்பா பிரசங்கங்களில் அப்பாஸி கலீபாக்களின் பெயரைச் சேர்த்துக் கொண்டார். இதைக் கேள்விப்பட்ட பக்தாத் கலீபா காயிம் பி அம்ரில்லாஹ் என்பவர் அவருக்கு அமீர் என்னும் பட்டம் கொடுத்து அதிகார அங்கிகளும் அனுப்பினர். அச்சமயம் எகிப்தில் ஸாபா, பனீரபா என்னும் இரண்டு அரபிக் கோத்திரங்கள் ஒன்ருேடொன்று போரிட்டுக்கொண்டிருந்தன. மந்தி யாஜூரி இரு கட்சியாரையும் ஒற்றுமைப்படுத்தி, முயிஸ் பின் பாதிஸை எதிர்க்குமாறு அனுப்பினர். அவரை வென்று விட்டால், பர்காவையும் தராபலஸையும் கொடுத்து விடுவதாக வாக்களித்தார். இக் கூட்டத்தார் ஏறத்தாழ மூவாயிரம் பேர். எனினும், அவர்கள் சென்று முப்பதினுயிரம் கைர்வான் துருப்புக்களைத் தோற்கடித்தார்கள். பிறகு, முயிஸ் பின் பாதிஸ் மற்ருெரு சேனையுடன் முன்னேறி வந்தார். இவ்வாறு தொடர்ச்சியாக ஆறு ஆண்டுகள் போர் நடந்தது.

பிறகு, நிம்மதியான காலம் வந்தது. அப்பொழுது கலீபா முஸ்தன்ஸிர், ஹி. 441 இல் காஹிரா நகரில் பெரிய கட்டிடங்கள் கட்டுவித்தார். அம்ரு பின் ஆஸ் கட்டிய பள்ளிவாயிலை மராமத்துச் செய்து, அதில் புதிய மிம்பர், மனுரா (பிரசங்கமேடை—ஸ்தூபி) ஆகியவை கட்டினர்.

ஹி. 442இல் கலீபா முயிஸ் உடைய ராஷிதா, அப்தா என்னும் இரண்டு சகோதரிகள் இறந்து போனர்கள். பாத்திமீ கலீபாக்கள் அவ்விருவரின் மரணத்தை வெகு காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில், ராஷிதா இருபத்தெட்டு இலட்சம் தீனர் மதிப்புள்ள சொத்தும், அப்தா ஏறத்தாழ இதே மதிப்புள்ள சொத்தும் விட்டு விட்டு இறந்துபோகவே, அவர்களுடைய செல்வம் அனைத்தும் அதிஷ்ட வசமாக கலீபா முஸ்தன்ஸிருக்குக் கிடைத்தது.

கீழ் நாடுகள் :— ஹி. 444இல் கீழ் நாடுகளிலிருந்து இரண்டு மாறுபட்ட செய்திகள் கிடைத்தன. முதலாவது,

பாத்திமீ கலீபாக்கள் உண்மையான பாத்திமீ குடும்பத்தைச் சேர்ந்தோரல்லர் என்பதாக அப்பாஸி கலீபா விளம்பரப் படுத்தியதோர் அறிக்கையாகும். இரண்டாவது, எமன் பிரதேச கவர்னர் அலீ பின் முஹம்மத் ஸாலிஹ் என்பவர் அப்பாஸி குத்பாவை நீக்கிவிட்டு, பாத்திமீ கலீபாவை அங்கீகரித்து விட்டதாகச் செய்தி கிடைத்தது. முதலாவது வந்த செய்தியால் கலீபா முஸ்தன்ஸிர் கவலையடைந்தார். எனினும், இரண்டாம் செய்தியால் வெகு மகிழ்ச்சியடைந் தார். ஹி. 446 இல் எகிப்தில் கொடிய பஞ்சம் வந்தது. மேலும், பிளேக் நோயும் பரவியது. ஸிரியாவிலிருந்து பக்தாத் வரையும் பரவி விட்டது. அதனால், இலட்சக்கணக் கான மக்கள் இறந்தார்கள். இதற்கிடையில் ரோமர் களுடன் போர் தொடர்ந்து விட்டது. ஆகையால், எகிப்து நாட்டு மக்கள் துன்பத்திற்கு ஆளானார்கள். பூனைகளையும், நாய்களையும் புசிக்க ஆரம்பித்தார்கள். பூனையும், நாயும், ஐந்து அல்லது ஆறு தீனாருக்கு வாங்கப்பட்டது. மந்திரி யின் முயற்சியால், மாகாணங்களிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக உணவுத் தானியங்கள் வந்து சேர்ந்தன. ஆகையால், மக்களின் துன்பம் ஒருவாறு நீங்கியது.

பஸாஸீரீ :- ஹி. 450ல், அப்பாஸி கலீபா காயிம் பி அம்ரில்லாஹ்வின் ஒரு ராணுவ அதிகாரி பஸாஸீரி என் பவர் மிக வன்மையடைந்து, பக்தாத் நகரில், – அதாவது, அப்பாஸி கலீபாவின் தலைநகரில்-எகிப்திலிருந்த பாத்திமீ கலீபாவின் பெயரால் குத்பா (மார்க்கப் பிரசங்கம்) ஓதினார். அப்பாஸிகளின் கருநிறக் கொடியை வீழ்த்தினார். பாத்திமீ களின் வெள்ளைக் கொடியை நாட்டினார். வாஸித், கூபா முதலான நகரங்களிலும் இவ்வாறே செய்யப்பட்டது. அப் பாஸி கலீபா அங்கிருந்து ஓடினார். அரபித்தலைவர் கரீஷ் பின் பத்ரான் அகீலீ என்பவரிடம் அடைக்கலம் புகுந்து கொண்டு, பேராபத்திலிருந்து தம்மைக் காப்பாற்றும்படி ஸுல்தான் தக்ரல் பேக் என்பவருக்கு எழுதினார். அந்த ஸுல்தான் உடனே வந்தார். ஹி. 451 துல் கஃதா 26ல்

பக்தாத் நகரில் மறுபடியும் அப்பாஸி கலீபாவின் அதிகாரத்தை நிலைநாட்டினார்.

இதற்கிடையில், பஸாஸீரிக்கு உதவியாக முஸ்தன்ஸிர் எகிப்திலிருந்து ஐம்பது இலட்சம் தீனார்களும் யுத்த தளவாடங்களும், இதர சாமான்களும் கொடுத்து, ஆயுதந் தரித்த சிறந்த சேனையொன்றை அனுப்பினார். ஆனால் துக்ரல் பேக் பக்தாதுக்கு வந்த செய்தியை அறிந்து, அதற்குப் பிறகு உதவி அனுப்புவதை நிறுத்திக்கொண்டார். எனவே, ஸல்ஜூக் ஸுல்தான் தக்ரல் பேக் உடைய சேனைகள் பஸாஸீரியைத் தோற்கடித்து அவரையும் கொன்று விட்டன. இன்றேல், அப்பொழுது கீழ்நாடுகள் அனைத்தும் பாத்திமீ கலீபாவின் ஆட்சியின் கீழ்வந்திருக்கும்.

ஹலப் கலகம்: ஹலப் மாகாணத்திலே முயிஸுத்தெளலாஹ் ஒரு சுவாதீனச் சிற்றரசராக இருந்தார். எனினும், அவர் அதே நிலையில் வெகுகாலம் இருக்க முடியவில்லை. ஏனென்றால், அங்கிருந்த அரபிக் கோத்திரங்கள் அனைத்தும் அவருக்கு விரோதியாகிவிட்டன. எனவே அவர் கலீபா முஸ்தன்ஸிருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில், ஹலப் பிரதேசத்தை அப்பாஸி கலீபாவுக்கே கொடுத்துவிட வேண்டுமெனவும், தனக்கு அரபிகளின் தொந்தரவே இல்லாத ஒரு மாகாணத்தைக் கொடுக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார், கலீபா முஸ்தன்ஸிரும் அதற்கு இணங்கி அவரை பய்ரூத் மாகாணத்திற்கு கவர்னராக நியமித்தனுப்பி விட்டார். பிறகு, ஹலப் மாகாணத்திற்குத் தனது சேனாதிபதி மகீனுத்தெளலாஹ் என்பவரை நியமித்தார். அவர் அங்கு சென்று அரபியரோடு சமாதானம் செய்து, அமைதி நிலவச் செய்தார். ஆனால், கலாப் என்னும் கோத்திரத்தின் தலைவர் மஹ்மூத் என்பவர் கீழ்ப்படியவில்லை. அவர் மகீனுத் தெளலாஹ்வைச் சூழ்ந்து கொண்டார். கலீபா முஸ்தன்ஸிரிடம் மகீனுத்தெளலாஹ் உதவி கேட்டார். எனவே, அவர் நாஸிருத்தெளலாஹ் ஹமதானீயை அங்கு அனுப்பினார். ஆனால், மஹ்மூத்

அவரையும் தோற்கடித்து ஹலபைக் கைப்பற்றிக்கொண்டார். இந்தச் சூழ்நிலையில் மஹ்மூதை ஹலப் மாகாண கவர்னராக ஒப்புக்கொள்வதே நலமெனக் கருதி, கலீபா முஸ்தன்ஸிர் அவருக்கு அமீருல் உமரா என்னும் பட்டமும் அங்கிகளும், பர்மான் (Farman) என்னும் அதிகாரப் பத்திரமும் அனுப்பினர். தோல்வியடைந்த நாஸிருத்தௌலாஹ் ஹமதானீயை டமஸ்கஸ் கவர்னராக நியமித்தார். ஆனல், சில காலஞ்சென்று அவரை நீக்கி பத்ர் ஜமாலீ என்பவரை நியமித்தனுப்பினர்.

மந்திரிப்பதவி: எகிப்தில் மந்திரி யாஜூரி என்பவர் கிறிஸ்தவர்களைக் கொடுமையாக நடத்தியமையால் பல கலகங்கள் விளைந்தன. எனவே, கலீபா அவரை நீக்கிவிட்டு, அபுல் பரஜ் பாஹிலீ என்பவரை நியமித்தார். இரண்டு மாதங்கள் சென்று அபதுல்லாஹ் பின் யஹ்யா நியமிக்கப்பட்டார். பிறகு, தொடர்ச்சியாக மந்திரிகள் மாறிக்கொண்டே இருந்தார்கள், பன்னிரண்டு ஆண்டுகளில் முப்பத்தைந்து மந்திரிகள் மாற்றப்பட்டார்கள்! எனவே, அரசியல் நிர்வாகத்தில் ஒழுங்கீனங்கள் நிறைந்து விட்டன. அதிகாரிகளைப் பற்றிய முறையீடுகள் தினந்தோறும் கலீபாவுக்கு வந்து கொண்டே இருந்தன. இதைக் கண்டு அவர் திகைத்து விட்டார். மந்திரி பிரதானிகள் இந்த முறையீடுகளுக்குப் பதில் சொல்வதில் காலந்தாழ்த்திக் கொண்டு வந்தார்கள். அவர்களுக்கு அன்றாடம் செய்யும் நிர்வாகத்துறை வேலையைச் செய்யவும் நேரம் கிடைக்கவில்லை. பெரும்பாலோர் உத்தியோகங்களைத் துறந்துவிட்டு வெளிநாடுகளுக்குச்சென்று விட்டார்கள்.

பாத்திமீ ராணுவம்

இச்சமயம், பாத்திமீ கலீபாக்களின் ராணுவ நிலையைச் சுருக்கமாகக் கூறல் அவசியமாகும். உமய்யாக்களின் ஆட்சிக் காலத்தில், அரபியரே அரசாங்க அலுவலர்களாக இருந்தார்கள். கலப்பற்ற இத்தகைய அரபி அரசாங்க நிர்வாகத்திலே அரபியரல்லாதார் அளவு கடந்து துன்பப்பட்டார்

கள். அப்பாஸிகள் இந்தச் சூழ்நிலையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தினார்கள். குராஸான் பிரதேசத்தில் தங்கள் இமாமத்தின் பிரசாரத்தைத் துவக்கினார்கள். அப்பொழுது குராஸான் மக்களின் உதவியால் கிலாபத்தைப் பெற்றார்கள். இதைப் போன்றே, பாத்திமீகளும் பக்தாதிலிருந்து வெகு தூரத்திலிருந்த இப்ரிகியாவைத் தங்கள் பிரச்சராத்தின் மத்தியஸ்தலமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். போரிலும், மார்க்க பக்தியிலும் உச்ச நிலையிலிருந்த பர்பர் குலத்தார் பாத்திமீகளுக்கு உதவி செய்யத் தயாரானார்கள். இந்த பர்பர் குலத்தாரின் உதவியால் மேற்கு இப்ரிகியாவும், மத்தியதரைக் கடலோரமுள்ள இதர பிரதேசங்களும் வெல்லப்பட்டன. எனவே, இந்த பர்பர்கள் உதிக உரிமைகளுக்குப் பாத்திரமானவர்களாகி விட்டார்கள். ஆயினும், பக்தாத் கலீபாக்கள் அவர்களைத் தாழ்ந்த நிலையிலேயே வைத்திருக்க முயன்றார்கள்.

இவ்வாறிருக்கையில், உபைதுல்லாஹ் மஹ்தீ என்பவர் அங்கு சென்று, அப்பாஸிகளுக்குப் போட்டியாக பாத்திமீ கிலாபத்தின் சார்பாகப் பிரச்சாரம் செய்யத் தொடங்கினர். அப்பொழுது, பர்பர் குலத்தார்,—அவர்களில் குறிப்பாக கித்தாமா, ஸன்ஹாஜா, ஹலாரு என்னும் பிரிவுகள்—தங்களுக்கு இலாபம் அளிப்பதாகத் தோன்றிய இப்புரட்சியில் பாத்திமீகளுக்கு உதவி செய்யத் தயாரானார்கள். எனவே. ஹி. 297இல் பாத்திமீ அரசாங்கம் நிறுவப்பட்டபொழுது, உபைதுல்லாஹ் மஹ்தீ தமது மந்திரி பிரதானிகளை பர்பர் குலத்திலிருந்தே பொறுக்கியெடுத்து நியமித்தார். இவரது புத்திரர் காயிம் பி அம்ரில்லாஹ் காலத்திலும், பௌத்திரர்கள் மன்ஸுர் பி நுஸ்ரில்லாஹ், முயிஸ் லி தீனில்லாஹ் காலத்திலும் இவ்வாறே நடந்து வந்தது. பர்பர் குலத்தார் அப்பாஸி அரசாட்சியை இப்ரிகியாவிலிருந்து அடியோடு பெயர்த்தெறிந்து விட்டார்கள். மேலும், மேற்குத் திசையிலிருந்த சகல மாகாணங்களையும், மத்தியதரைக் கடலிலுள்ள எல்லாத் தீவுகளையும் வென்று பாத்திமீ அரசாங்கத்தில்

சேர்த்து விட்டார்கள். பிறகு, முயிஸ் லி தீனில்லாஹ் காலத்தில் எகிப்தையும் ஸிரியாவையும் பாத்திமீகளுக்காக வென்றார்கள்.

பக்தாதில் அப்பாஸிகள் செய்ததைப் போன்றே எகிப்திலும் அஜீஸ் பில்லாஹ் ஹி. 365இல் துருக்கியரையும் தேலமீகளையும் தமது சேனையில் ஏராளமாகச் சேர்த்துக் கொண்டார். அதற்குப் பிறகு சேனையில் இப்புதிய இனத்தாருக்கும் பர்பர்களுக்குமிடையில் பகைமையும் பொறாமையும் ஏற்பட்டது. கலீபா அஜீஸுக்குப் பிறகு, கலீபா ஹாகிம் காலத்திலும் பர்பர்கள் நன்றாகப் பாதுகாக்கப்பட்டு வந்ததோடு, கலீபாவின் நம்பிக்கைக்கு உரியோராகவும் இருந்தார்கள். எனவே, இப்னு அம்மார் கதாமீ என்பவரைத் தமது சொந்த ஆலோசனையாளராகக் கருதி ஹாஜிப்—அரண்மனை அமைச்சர் பதவியை அளித்தார். அஜீஸ் காலத்தில் அதிக உயர்வடைந்திருந்த துருக்கியரும் தேலமீகளும் இதைச் சகிக்காமல், இப்னு அம்மாரை இகழ ஆரம்பித்தார்கள். எனவே, இப்னு அம்மார், வேறுவழியின்றி உத்தியோகத்தை விட்டு நீங்கிவிட்டார். அந்தப் பதவியில் அர்ஜுவான் என்பவர் நியமிக்கப்பட்டார். அவர் கலீபாவின் அரண்மனையிலும் வெளியிலும் பர்பர் துருப்புகளை நீக்கி விட்டுத் துருக்கியரை நியமித்தார். இதையன்றி, மாகாணங்களிலும் துருக்கியரையே கவர்னர்களாக நியமித்தார். யானிஸ் காதிம் என்பவருக்கு பர்கா மாகாணமும், மீஸுர் காதிம் என்பருக்கு தராபலஸ் மாகாணமும், யுமன் காதிம் என்பவருக்கு கஸா (Gaza)வும் அஸ்கலானும் கொடுக்கப்பட்டன. கலீபா ஹாகிமுடைய மனோ நிலையை மாற்றுவது வெகு இலகுவல்லவா? அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பார்கள். " அவரிடம் அடிக்கடி பர்பர்களுக்கு விரோதமாகக் கூறி, அவரையும் பர்பர்களின் விரோதியாக்கி விட்டார்கள். எனவே, இப்னு அம்மார் கதாமீயையும் பர்பர்களின் பெருந்தலைவர்களையும் அவர் கொலை செய்வித்தார். இவ்வாறாக, பர்பர்களுடைய சிறப்பும், வீரமும், விவேகமும்

பாழடைந்து விட்டன. அதே சமயத்தில் துருக்கியர் சீரும் சிறப்புமடைந்து உயர்ந்தார்கள். கலீபா காஹிர் காலத்திலும் இவ்வாறே நடந்தது.

முஸ்தன்ஸிர் கலீபாவான பொழுது, அவரது தாயார் நீக்ரோ—ஹப்ஷி குலத்தைச் சேர்ந்தோராதலால் அந்த அம்மையார் தன் இனத்தாரிலிருந்தே அரண்மனைப் பணி மக்களை நியமித்தாள். சேனையிலும் அவர்களையே பெரும் பாலாகச் சேர்த்தாள். எனவே, துருக்கியருக்கும் இந்த ஹப்ஷிகளுக்குமிடையில் பகைமை ஏற்பட்டது. அதனால், பல கலகங்கள் உண்டாயின.

ஹாஜிகளின் பிரயாணக் கூட்டம் (காபிலா) மக்காவுக்கு ஹஜ் செய்யப் புறப்படும்பொழுது, கலீபா முஸ்தன்ஸிர் அவர்களுடன் சேர்ந்து, ஒரு நாள் பயணஞ் செய்து, பர்கா, உமைரா என்னுமிடத்தில் தங்கி, இரவில் நல்ல ஆகாரங்களும் பானங்களும் உண்டு பருகி இரவைக் கழித்துவிட்டு, மறுநாட் காலையில திரும்பிவிடுவது வழக்கம். ஹி. 454இல் இவ்வாறு சென்றபொழுது, அந்த இடத்தில் கலீபாவின் கோஷ்டியிலிருந்து, மது உண்ட துருக்கியன் ஒருவன் தன் வாளை உருவி, கலீபாவின் மெய்க்காப்பாளரில் ஒருவனை ஹப்ஷி அடிமையின்மீது வீசினன். அப்பொழுது துருக்கியனை அந்த ஹப்ஷியின் நண்பர்கள் கொன்றுவிட்டார்கள். எனவே, துருக்கியர் அனைவரும் சீற்றங்கொண்டு கலீபா முஸ்தன்ஸிரிடம் சென்றார்கள். "இந்தக் கொலை உங்கள் கட்டளையால் நடந்திருந்தால் நாங்கள் பொறுத்துக் கொள்வோம். இன்றேல், இதை நாங்கள் பொறுக்க முடியாது" என்று முறையிட்டாகள். அதைக் கேட்ட கலீபா, "நான் அவ்வாறு கட்டளை இடவுமில்லை. இதில் எனக்கு எத்தகைய தொடர்புமில்லை" எனக் கூறிவிட்டார். உடனே. துருக்கியர் ஹப்ஷிகள்மீது பாய்ந்தார்கள். இருகட்சியாருக்கிடையில் வெகு நேரம் சண்டை நடந்தது. இறுதியில் குற்றவாளிகளை துருக்கியரிடம் கொடுக்கவேண்டுமென்னும் நிபந்தனையுடன் சமாதானம் செய்வித்து எல்லோரும் கெய்ரோ நகருக்குத் திரும்பி விட்டார்கள். ஆனல், இருகட்சியாரின் உள்ளத்தில் துவேஷம் நிறைந்திருந்தது.

நாஸிருத்தௌலாஹ்: மந்திரி நாஸிருத்தௌலாஹ் என்பவர் ஹப்ஷிகளுக்கு உதவி செய்தார். அதே சமயத்தில் துருக்கியர் நாஸிருத்தௌலாஹ் ஹமதானீ என்பவரைத் தங்கள் தலைவராக்கினார்கள். நாஸிருத்தௌலாஹ் ஹமதானீ அரபு குலத்தைச் சேர்ந்தவர். அவர் டமஸ்கஸ் மாகாண கவர்னர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட காலத்திலிருந்து கலீபாவுடையவும், மந்திரி உடையவும் நிரந்தர விரோதியாகிவிட்டார். மேலும், அவர் காஹிரா நகரிலேயே தங்கி அவர்கள்மீது பாய்வதற்கான சூழ்நிலையையும் சந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்துக்கொண்டே இருந்தார். இதற்காகத் தம்முடன் சில அரபிக்கோத்திரங்களையும் சேர்த்துக்கொண்டார். துருக்கியரின் கட்சி அதிக வலுவடைந்து கொண்டு வருவதையும், அவர்களை எதிர்க்க முடியாதென்பதையும் கண்ட ஷைய்திகள் காஹிரா நகரைவிட்டு எகிப்து நாட்டின் தென்பாகத்திற்குச் சென்று அங்குள்ள மக்களில் பெரும்பாலோரைத் தங்கள் கட்சியில் சேர்த்துக்கொண்டார்கள். எனவே, அவர்களின் எண்ணிக்கை ஐம்பதினாயிரம் வரை பெருகிவிட்டது. அதற்குப் பிறகு, அவர்கள் காஹிராவுக்குத் திரும்பிவந்தார்கள். துருக்கியர் வெளிக்கிளம்பி கௌம் ஷரீக் என்னுமிடத்தில் அகழ்தோண்டி அவற்றில் பதுங்கிக் கொண்டிருந்தார்கள். ஷைய்திகளின் கூட்டம் அங்கு வந்தபொழுது, துருக்கியர் மறைவிடங்களிலிருந்து திடீரென்றுகிளம்பி அவர்களை எதிர்த்தார்கள். ஷைய்திகளில் பெரும்பாலோர் கொல்லப்பட்டார்கள். சிலர் மூழ்கிவிட்டார்கள். எஞ்சியோர் உயிர்தப்பி ஓடினார்கள்.

கலீபா முஸ்தன்ஸிருடைய தாய் தன் இனத்தாருக்கு உதவி செய்துகொண்டே இருந்தாள். தன் இனத்தாரின் தோல்வி அவளுக்கு இருதயத்தில் ஈட்டி பாய்ந்ததைப் போன்றிருந்தது. ஆகையால், அவள் அவர்களுக்குப் பல்வேறு வகைகளில் உதவிசெய்தாள். அவர்கள் மறுபடியும் துருக்கியரை எதிர்க்க ஆயத்தங்கள் செய்துகொண்டு வந்தார்கள். பல விடங்களில் இரு கட்சியாருக்கும் சண்டை

கள் நடந்தன. இறுதியாக, இரு கட்சியாரும் களைப் படைந்து விட்டார்கள். ஆனால், மறைமுகமான பகைமை உள்ளத்தை உறைவிடமாக்கிக் கொண்டிருந்தது.

துருக்கியரின் எண்ணிக்கை படிப்படியாகப் பெருகிக் கொண்டே வந்தது. மாகாணங்களில் பெரும்பான்மையான வற்றில் அவர்களே கவர்னர்களாக இருந்தார்கள். அவர்களுடைய சம்பளங்கள் மாதமொன்றுக்கு இருபத்தெட்டாயிரத்திற்குப் பதிலாக நான்கு இலட்சம் தீனர்களாக உயர்ந்துவிட்டது. ஆனால், இப்பெருந் தொகையைக் கொடுக்க கலீபாவுக்குச் சக்தியில்லை. எனவே, தங்கள் சம்பளங்களைக் கொடுக்கும்படி அவர்கள் அவரை வற்புறுத்திக்கொண்டே இருந்தார்கள். ஆனால், கலீபா அதைப் பொறுக்கமுடியாமல், ஹி. 457இல் வெறுங்காலுடன் ஓடி, அம்ரு பின் ஆஸ் பள்ளிவாயிலில் அடைக்கலம் புகுந்து அரசாங்கத்தை விட்டுவிட எண்ணினர். ஆனால், மந்திரி பிரதானிகள் சென்று சமாதானப்படுத்தி அவரை அழைத்துக் கொண்டு வந்தார்கள். அவரது தாய் ஹி. 459இல் துருக்கியரின் தொந்தரவைப் பொறுக்க முடியாமல் தன் இனத்தாரான ஷைய்திகளைத் தூண்டினள். துருக்கியரை எதிர்க்க அவர்களுக்கு உதவியும் செய்தாள். ஜிஸா என்னுமிடத்தில் துருக்கியரும் ஷைய்திகளும் கடும்போர் புரிந்தார்கள். தொடர்ச்சியாகப் பல போர்கள் நடந்தன. இறுதியாக, துருக்கியரே வெற்றிபெற்றுர்கள். நாஸிருத்தௌலாஹ் அவர்களுடன் காஹிரா நகருக்கு வந்தார். கலீபாவுடன் கடுமையாக நடந்துகொண்டார். ஷய்திகள் மறுபடியும், பதினைந்தாயிரம் துருப்புக்களைச் சேகரித்துக்கொண்டு துருக்கியரைத் தாக்க வந்தார்கள். நாஸிருத்தௌலாஹ் வுக்குக்கோபாக்கினி உண்டாகிவிட்டது. அவரும் ஷைய்திகளைத்தாக்கினர். பலவிடங்களில் போர் நடந்தது, இறுதியாக, எகிப்து நாட்டின் தென்பாகம் ஷைய்திகள் வசமாகிவிட்டது. வடபாகம் நாஸிருத் தௌலாஹ்வின் ஆதிக்கத்திலிருந்தது. இந்த நெருக்கடியான நிலையில், தாம் இழந்துவிட்ட அதிகா

ரத்தை மறுபடியும் பெறுவதற்கு கலீபா முஸ்தன்ஸிர் தமது மந்திரி பிரதானிகளுடன் பெரு முயற்சி செய்துகொண் டிருந்தார். ஆனால், அவரை ஒருவரும் மதிக்கவில்லை. அவரை அரசாங்கத்திற்கும் கிலாபத்திற்கும் தகுதியுள்ளோ ராக மக்கள் நினைக்கவில்லை.

தலைநகரிலே இவ்வாறெல்லாம் நடந்து கொண்டிருக் கையில், ஸிரியாவில் பத்ர் ஜமாலி என்பவர் சுவாதீன விளம்பரம் செய்துவிட்டார். எமன் பிரதேச கவர்னர் ஸாலிஹ் என்பவர் பாத்திமீ கலீபாக்களின் ஆதிக்கத்தை அங்கீகரித்த பிறகு, கொலையுண்டு போனார். பிறகு, எமன் நாட்டில் அப்பாஸி கலீபாக்களின் ஆதிக்கம் அங்கீகரிக்கப் பட்டது. கலீபா முஸ்தன்ஸிர், எகிப்துக்கு வந்து துருக்கி யரைத் துரத்திவிடவேண்டு மென்று ஹலப் மாகாண கவர்னர் அமீருல் உமரா மஹ்மூதுக்கு எழுதினார். ஆனால், துருக்கியர் வன்மையுடனிருப்பதால் ஒருகால் தம்மையும் அவர்கள் நீக்கி விடுவார்களென்று அஞ்சுவதாக அவர் பதில் எழுதிவிட்டார். இந்த பதிலைப் பார்த்து முஸ்தன்ஸிர் மிகவும் சினங்கொண்டார். உடனே, ஹலப் நகரைக் கைப் பற்றும்படி பத்ர் ஜமாலிக்குக் கட்டளை பிறப்பித்தார். அவரும் உடனே ஹலப் மீது படையெடுத்து வந்தார்.

இவ்வாறிருக்கையில் ஷைய்திகளை எதிர்க்க நாஸிருத் தௌலாஹ் ஹமதானீ முன்னேறினார். ஆனால், அவர்கள் அவரைப் பலவிடங்களில் தோற்கடித்தார்கள். ஆயினும், இறுதியில் அவர்களே தோல்வியடைந்து சின்னபின்னப் பட்டுப் போனார்கள். நாஸிருத்தௌலாஹ் ஹமதானீ கெய்ரோவுக்கு வந்தார். கலீபா முஸ்தன்ஸிரும் அவர் தாயாரும் ஷைய்திகளுக்கு உதவிசெய்து வந்தமையால் அவர்களை இழிவாக நடத்த ஆரம்பித்தார். துருக்கியர்களுக் குச்சம்பளங்கள் கொடுக்கப்படவில்லை. அரண்மனையிலுள்ள சாமான்களை விற்றாயினும் சம்பளங்களைக் கொடுத்துவிட வேண்டுமென்று அவர்கள் கலீபாவை வற்புறுத்தினார்கள்.

வேறு வழியின்றி அவ்வாறே அரண்மனையிலிருந்த சாமான்களை கலீபா விற்க வேண்டியதாயிற்று. துருக்கியர் சூழ்ச்சி செய்து அந்தச் சாமான்களை யெல்லாம் குறைந்த விலைக்கு வாங்கிக் கொண்டார்கள். நூல் நிலையத்திலிருந்த புத்தகங்களும், பழைய கலீபாக்களின் நினைவுச் சின்னங்களும் கொண்டு போகப்பட்டன. இவ்வாறு விற்கப்பட்ட சாமான்களின் பட்டியலைச் சரித்திராசிரியர்கள் தயாரித்துள்ளார்கள். அவற்றின் விலை கோடிக்கணக்கான தீனார் என்று மதிப்பிடுகின்றார்கள்.

நாஸிருத் தௌலாஹ் ஹமதானீ பிறகு முஸ்தன்ஸிரை கலீபா பதவியிலிருந்து நீக்கிவிட விரும்பினார். எனினும், அவருக்குச் சரியான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஹி. 461 இல் ஒருநாள் மந்திரியின் மாளிகையிலிருந்து அவர் வெளியே வரும்பொழுது ஒருவன் அவர்மீது வாள் வீசினான். காயம் இலேசாகவே உண்டாயிற்று. சில நாட்களில் அவர் குணமடைந்து விட்டார். கலீபா முஸ்தன்ஸிருடைய தூண்டுதலால் தாம் தாக்கப்பட்டதாக அவர் பகிரங்கமாகக் கூறியதோடு, இத்தகைய மனிதர் கிலாபத்திற்குத் தகுதியற்றவர் எனவும் அவர் விளம்பரஞ் செய்தார்.

அக்காலத்தில் ஷரீப் அபூ தாஹிர் அலவீ என்பவர் பத்ர் ஜமாலியால் ஸிரியாவிலிருந்து நீக்கப்பட்டு காஹிராவில் வசித்து வந்தார். அவர் தெய்வ பக்தியுள்ளவர். இறையச்சத்துடன் இஸ்லாமியக் கடமைகளைச் செய்து வந்தார். ஆகையால் அவருக்குப் பொதுமக்களிடம் நல்ல மதிப்பு இருந்தது. நாஸிருத்தௌலாஹ் ஹமதானீ அவருடன் சேர்ந்து சூழ்ச்சி செய்து, "நான் உங்களை கலீபாவாக்கி விடுவேன். ஆனால், பத்ர் ஜமாலியைப் பற்றி எனக்கு அச்சம் இருக்கின்றது. நீங்கள் சென்று எப்படியாயினும் பத்ர் ஜமாலியைக் கொலைசெய்துவிட்டால் கிலாபத் இலேசில் கிடைத்துவிடும்" எனக் கூறினார். அபூ தாஹிரும் அதற்கு உடன்பட்டார். ஸிரியா நாட்டுத்தலைவன் ஒருவனையும் அரபித் தலைவன் ஒருவனையும் தம்முடன் சேர்த்துக்

கொண்டார். நாஸிருத்தெளலாஹ் இம்மூவருக்கும் நாற்பதினுயிரம் தீனுர் கொடுத்து, டமஸ்கஸ் நகருக்கு அனுப்பினுர். அவர்கள் அங்கு சென்று அங்குள்ள பெரும்பாலான மக்களையும் தங்களுடன் சேர்த்துக் கொண்டார்கள். எனினும், பத்ர் ஜமாலி வெகு கவனமாகவே இருந்தார். இறுதியில், அவர் இந்த மூவரையும் பிடித்துக்கொண்டார். ஷரீப் அபூ தாஹிரை உயிருடன் தோலுரித்தார்.

ஆயினும், நாஸிருத் தெளலாஹ் மறுபடியும் முஸ்தன்ஸிரை நீக்கிவிடும் முயற்சியில் கண்ணும் கருத்துமாகவே இருந்தார். ஆனுல், இதில் காரியசித்தி அடையமுடியாதெனக் கண்டு இறுதியாகப் போருக்குத் தயாராஞர். இதையறிந்த கலீபா நாஸிருத்தெளலாவுக்கு ஒரு கடிதம் எழுதினுர். அதில், "நாம் உமக்கு எவ்வளவு உதவி செய்தோமோ அவ்வளவு நீர் நன்றி கெட்டவரும் கலகப் புரட்சி செய்வோரும் ஆகிவிட்டீர். நீர் நமது சேனையை நமக்கு விரோதமாக்கினீர். நம்மைப் பகைப்பதிலும் இழிவாகக் கூறுவதிலும் நீர் சற்றேனும் பின்னடையவில்லை. எனவே, நீர் நமது நகரைவிட்டு வெளியே சென்றுவிடுவீராக! நீர் போகும்பொழுது உமக்கு வேண்டிய பொருள்களை நீர் கொண்டுபோகலாம். நான் உமக்கு அபயம் அளிக்கிறேன். ஆனுல், நீர் வெளியேறிச் செல்லவில்லையானுல் உமக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படும்" என்று எழுதினுர்.

ஏல்த்கஸ் : இதற்கிடையில், நாஸிருத்தெளலாஹ்வின் கடும்பகைவரான அமீர் ஏல்த்கஸ் என்பவரை கலீபா முஸ்தன்ஸிர் தம்முடன் சேர்த்துக்கொண்டார். இதையன்றி, மக்ரிப் பிரதேசத்தாரையும், பர்பர்களையும் இன்னும் சில அரபித்தலைவர்களையும், அவர்களுடைய கோத்திரத்தார்களையும் சேர்த்து ஒரு பெரிய வன்மையுள்ள கூட்டமாக்கிக் கொண்டார். இவர்கள் அனைவரும் கலீபாவுக்கு உதவி செய்வதாகச் சத்தியம்செய்து கொடுத்தார்கள். இத்தகைய பெருங் கூட்டத்தை எதிர்க்க முடியாதெனக் கண்ட

நாஸிருத்தௌலாஹ், காஹிராத் நகரிலிருந்து ஜிஸாவுக்குப் போய்விட்டார். கலீபாவின் கட்சியார் அவர் வீட்டைச் சூறையாடினார்கள். அவரது கட்சியாரைக் கொலைசெய்தார்கள். எட்டுத் திக்கிலும் வெற்றி முழக்கம் செய்தார்கள். எனவே, எஞ்சியிருந்தோர் அனைவரும் கலீபாவுக்கு விசுவாசப் பிரமாணம் செய்தார்கள். அலக்சாந்திரியா நகரில் நாஸிருத் தௌலாஹ் ஹமதானீ அடைக்கலம் புகுந்தார். அங்கிருந்துகொண்டே கலீபா முஸ்தன்ஸிருக்கு விரோதமாகத் தீவிர முயற்சிகள் செய்துகொண்டிருந்தார்.

அக்காலத்தில், எகிப்து நாட்டில் கொடிய பஞ்சம் உண்டாயிற்று. தொடர்ச்சியாக ஐந்தாண்டு காலமாக தானியம் விளையவில்லை. இதனால், ஃபுஸ்தாத், காஹிரா முதலிய நகரங்களில் பசிப்பிணியால் மக்கள் மடிந்தார்கள். அச்சமயம் நாஸிருத் தௌலாஹ் ஹமதானீ எகிப்தின் வட பாகத்தின் விளை பொருட்களைச் சேகரித்து ஒரு பெருஞ் சேனையுடன் காஹிராவை எதிர்த்தார். பஞ்சத்தின் கொடுமையால் கலீபா முஸ்தன்ஸிர் சேனையைச் சேகரிக்க முடியாமல், கோட்டைவாயில்களைத் திறந்துவிட்டார்.

நாஸிருத்தௌலரஹ் ஹமதானீ தலைநகரில் நுழைந்து கலீபாவை நிந்தனைசெய்ய ஆரம்பித்தார். தமது பழைய பாக்கித் தொகையை வசூலித்து வருமாறு ஒரு மனிதனை அனுப்பினார். கொடிய பஞ்சத்தாலும், வறுமையாலும் கலீபாவின் நிலை அதோகதியாக இருந்தது. கஸ்ர் கபீர் என்னும் அரண்மனையில் ஒரு பாயின்மீது கந்தைகந்தையான போர்வையைப் போர்த்திக் கொண்டு அவர் உட்கார்ந்திருந்தார். ஏழத்தாழ நிர்வாண நிலையிலிருந்த மூன்று ஷைய்திகள் அவருக்குப் பணிசெய்வதற்காக இருந்தார்கள். நாஸிருத்தௌலாஹ் ஹமதானீயின் தூதர் அங்கு வந்தார். அவரைப் பார்த்தவுடன் கலீபா, "என்ன? நான் இந்த அரண்மனையில், இந்தப் பாயின்மீது இந்தக் கோலத்தில் இவ்வாறு உட்கார்ந்து உண்ண உணவும், உடுத்த ஆடையுமின்றித் தவிப்பதுங்கூட நாஸிருத்தௌலாவுக்குத்

திருப்தியாக இல்லையா? நான் எங்கிருந்து பணத்தைக் கொண்டு வருவேன்?'' என்றார். வந்த தூதர் கண்ணீர் சொரிந்து விட்டார். அவர் அங்கிருந்து திரும்பிப்போய் நாஸிருத்தௌலாஹ் ஹமதானீயிடம் அரண்மனையில் கண்ட சோகக் காட்சியை வர்ணித்தார். அதைக் கேட்டவுடன் நாஸிருத்தௌலாஹ்வும் மனமுருகியவராக உடனே கலீபா வின் செலவுக்காக ஒரு தொகையை அனுப்பினார்.

ஹி. 465இல், நாஸிருத்தௌலாஹ்வுடன் ஏல்த்கஸ் சமாதானம் செய்துகொண்டார். எனினும், அந்தரங்கத்தில் அவரது நிரந்தரமான விரோதியாகவே இருந்தார். எனவே தனது நம்பிக்கைக்குரிய ஒருவனை இரகசியமாக அழைத்துக் கொண்டு ஒருநாள் நாஸிருத்தௌலாஹ்வின் இருப்பிடத் திற்குச் சென்று சமயம் பார்த்து அவர்மீது வாள்வீசினார்கள். அவர் அங்கிருந்து பயந்தோடிப் பெண்கள் இருக்குமிடம் விரைந்து. ஆனால், காயம் அதிகமாக இருந்தமையால் விழுந்துவிட்டார். இவ்விருவரும் அவரது தலையை வெட்டி விட்டார்கள். ஏல்த்கஸ் பிறகு, ஒரு மனிதனை அனுப்பி நாஸிருத்தௌலாஹ்வின் சகோதரர் பக்ருல் அரப் என்பவரையும் கொலை செய்வித்தார். எனவே, இப்பொழுது ஹமதானிகளின் தீபம் அணைந்து விட்டது. ஆனால், கலீபா முஸ்தன்ஸிருக்கு இந்தக் கொலைகளால் அணுவளவேனும் பலன் உண்டாகவில்லை. ஏனென்றால், நாஸிருத்தௌலாஹ் ஹமதானீயைவிட ஏல்த்கஸ் என்பவரால் மிகுதியான தீமைகளே விளைந்தன. ஆகையால், அச்சமயம் ஸிரியாவில், கவர்னராக இருந்த பத்ர் ஜமாலிக்கு கலீபா ஒரு இரகசியக் கடிதம் எழுதி, எகிப்துக்கு வந்து, தம்மை இந்தத் துன்பங் களிலிருந்து விடுவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

பத்ர் ஜமாலீ: பத்ர் ஜமாலீ என்பவர் அர்மீனியா நாட்டவர். அமீர் ஜமாலுத்தௌலாஹ் என்பவரால் விலைக்கு வாங்கப்பட்ட அடிமை. எனவே அவர் தமது எஜமானுடைய குடும்பப்பெயரையே தாமும் வைத்துக்கொண்டார். பல வேளைகளில் இவர் வெகு விவேகத்துடனும் வீரத்துடனும்,

நடந்து, கலீபாவின் தர்பாரில் உச்சவரம்பை அடைந்து விட்டார். எனவே, கலீபா அவரை ஸிரியாவின் கவர்னராக நியமித்தார். ஆனால், சில காலஞ் சென்று அவர் சுவாதீன விளம்பரம் செய்துவிட்டார். இந்தச் சூழ்நிலையிலிருந்த பத்ர் ஜமாலிக்கு கலீபாவின் கடிதம் வந்தது. அவர் அதைப் பெற்றவுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட தமது போர்வீரர்களுடன் எகிப்துக்கு வந்தார். ஹி. 467 ஜமாதுல் அவ்வல் 27ல் காஹிரா நகரில் நுழைந்தார். துருக்கியத் தலைவர்களைக் கொலை செய்வித்து அவர்களுடைய மாளிகைகளையும் சொத்துக்களையும் கைப்பற்றிக்கொண்டார். அலக்சாந்திரியாவுக்குச் சென்று அங்குள்ள எதிரிகளை அழித்தார். அவர்கள் எங்கெல்லாம் தப்பியோடினார்களோ அங்கெல்லாம் அவர்களைப் பின்தொடர்ந்து தேடிதேடிப் பிடித்தார். இதன் விளைவாக, அவர் பெயரைக் கேட்டவுடன் எல்லோரும் அச்சங்கொண்டார்கள். கலீபா அவரை நாட்டு நிர்வாகத்திற்கும் ராணுவத்திற்கும் தலைவராக்கிப் பெரும் பட்டங்களும் அளித்தார்.

பத்ர் ஜமாலியின் நிர்வாகத்தில் எங்கும் அமைதி நிலவியது. வெகுகாலமாகக் கஷ்டப்பட்ட விவசாயிகளுக்குத் திருப்தி அளித்தார். எங்கும் பாலங்களை மராமத்துச்செய்தார். நீலநதி அணையைப் (மிக்யாஸுந் நீல்) புதுப்பித்தார். வியாபாரத்தை விருத்தி செய்தார். இவ்வாறான பொது நலச்செயல்களால் பொதுமக்களுடைய வாழ்க்கையில் இன்பமும் நலமும் நிறைந்தது. இதுமட்டுமல்ல. பாத்திமீ கலீபாக்களின் மார்க்கக் கீர்த்தியும், உலகச் சிறப்பும் ஓங்கும்படி செய்தார். ஐந்து ஆண்டுகளாக மக்கா நகரில் அப்பாஸி கலீபாவின் பெயரால் குத்பா ஓதப்பட்டு, அவரது ஆதிக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், இப்பொழுது அங்கு பாத்திமீ கலீபாவின் பெயரால் குத்பா ஓதப்பட்டு வந்தது.

பத்ர் ஜமாலீ, டமஸ்கஸ் நகரிலிருந்து வந்துவிட்ட பிறகு துர்க்மான் வர்க்கத்தைச் சேர்ந்த அதஸ் என்பவர் அங்கு தமது சுவாதீன அரசியலை நிறுவிவிட்டார். இஃதுடன்

திருப்தியுருமல், இருபதாயிரம் துருப்புகளுடன் புறப்பட்டு எகிப்து நாட்டின் மீதும் படையெடுத்தார். அணிவகுத்து, முன்னேறி கெய்ரோவின் அருகில் வந்துவிட்டார். ஆனல் பத்ர் ஜமாலீ ஆயுதந்தறித்த போர்வீரர்களுட-ன் திடீரென்று புலிபோல் பாய்ந்து, எதிரியை முறியடித்தார். பிறகு, அதஸிடமிருந்து டமஸ்கஸையும் பிடுங்கிக்கொண்டார்.

பத்ர் ஜமாலியின் நேர்மையான நிர்வாகத்தின் விளைவாக எகிப்தில் மக்கள் எண்ணிக்கை அதிகரித்தது. விவசாயம் விருத்தியடைந்து விளைபொருள்கள் மிகுதியாகக் கிடைத்தன. ஹி 483இல் இவர் நிலத்தீர்வையை சீர்திருத்திச் சீரமைப்புச் செய்தார். பல தீர்வைகளைக் குறைத்தார். எனினும், ஆண்டுதோறும் முப்பத்தொன்று இலட்சம் தீனர் வசூலாயிற்று. அதற்கு முன்னர், பாத்திமீ கலீபாக்கள் இருபத்தெட்டு இலட்சம் தீனருக்கு அதிகமாக வசூலிக்க இயலாதவர்களாக இருந்தார்கள்.

ஹி. 487 துல்ஹஜ் மாத ஆரம்பத்தில், இருபது ஆண்டுகள் நிர்வாகம் செய்த பிறகு பத்ர் ஜமாலீ எகிப்தில் இறந்து போனர். இவர் மிக்க வீரமுள்ளவர். தரும சிந்தனையுள்ளவர். மக்களுடைய நலனுக்காக அரும்பாடுபட்டார். கற்றோரை நேசித்தார். அளவு கடந்த அறிவும் ஆற்றலும் உள்ளவர். எல்லோராலும் விரும்பப்பட்டவர். இத்தகைய மேலான பண்புகள் அவரை மக்கள் எப்பொழுதும் நினைக்கும் படி செய்து விட்டன. மேலும், அவரை அஹ்மத் பின் தூலூன் போன்ற சிறந்த அரசியல் நிர்வாகி என்று மக்கள் நினைத்தார்கள். அலக்சாந்திரியாவில் அத்தாரைன் பள்ளிவாயிலை அவர் கட்டிமுடித்தார். காஹிரா நகரில் கோட்டை மதிலை அவர் புதிதாகக் கட்டுவித்தார். கவி பாடுவதில் பிரியமுள்ளவர். அவரது அவையில் பெரும் புலவர்கள் இருந்தார்கள். அல்கமா என்பவர் அப்புலவர்களில் தனிச்சிறப்புடன் விளங்கினர்.

அவர் இறந்த பிறகு அவரது புதல்வர் ஷஹின்ஷாஹ் அப்ஸல் என்பவர் முதல் மந்திரியாகவும் சேனதிபதியாகவும்

(அமீருல் ஜுயூஷ்) அமர்ந்தார். பிதாவின் பட்டங்கள் அனைத்தும் அவருக்கு அளிக்கப்பட்டன.

முஸ்தன்ஸிர் மரணம்: பத்ர் ஜமாலீ இறந்த சில நாட்களில் ஹி. 487 துல்ஹஜ், 18இல் கலீபா முஸ்தன்ஸிரும் மரணமடைந்தார். இதே ஆண்டின் ஆரம்பத்தில், பக்தாதிலிருந்த இருபத்தேழாம் அப்பாஸி கலீபா முக்ததீ என்பவரும் காலஞ்சென்றார்.

முஸ்தன்ஸிரின் அறுபத்தேழு வயதில் அவர் அறுபது ஆண்டுகள் கலீபாவாக இருந்தார். கிலாபத்தை வகிக்கும் திறமை அவரிடம் சிறிதளவேனும் கிடையாதெனவும், அவர் எந்த வேலைக்கும் தகுதியற்றவரெனவும் சரித்திராசிரியர்கள் கூறுகின்றார்கள். எவர் எதைச் சொன்னாலும் அதை உண்மையென்று நம்பிவிடும் தன்மையுள்ளவர். ஆதலால், அவரது நலத்தை நாடுவோர் ஒரு சிலரே இருந்தார்கள்.

ஸிஸிலி (ஸகீலியா) தீவு: பாத்திமீ அரசாங்கத்தில் சிறப்பானதும், செழிப்புற்ற மாகாணமான ஸிஸிலி தீவு அக்காலத்தில் முஸ்லிம்களிடமிருந்து போய்விட்டது. ஜீயாதத்துல்லாஹ் அக்லபீ என்பவர் ஹிஜ்ரி மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வென்றார். அக்லபீகளிடமிருந்து பாத்திமீகள் கைப்பற்றினார்கள். இத்தாலிக்குத் தெற்கிலிருந்த ஸிஸிலித் தீவு, கலீபாவின் தலைநகரிலிருந்து வெகு தூரத்திலிருந்தது. ஆகையால், அங்கு அனுப்பப்படும் கவர்னர்கள் சுவாதீன விளம்பரஞ் செய்து விடுதல் வழக்கமாகிவிட்டது. அத்தீவிலிருந்த பறங்கிகள் முஸ்லிம்களை எதிர்க்குமாறு தங்கள் நாட்டாரைத் தூண்டிக்கொண்டே இருந்தார்கள். அதே சமயத்தில் முஸ்லிம் கவர்னர்கள் அவர்களை எதிர்க்கும் வன்மையற்றோராக இருந்தார்கள். எனவே, அடிக்கடி அரசியல் கலகங்கள் உண்டாகிக்கொண்டிருந்தன. அப்பொழுது, அங்கிருந்த முஸ்லிம்களுக்கிடையில் ஒற்றுமை இல்லாதிருந்தது. அங்குள்ள முஸ்லிம்கள் இரண்டு கட்சிகளாகித் தங்களுக்கிடையில் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். இவற்றுள் ஒரு கட்சியின் தலைவர் அபூதமாமா.

இவர் எதிர்க்கட்சியாரால் தோற்கடிக்கப்பட்டு, ஹி. 372இல் பறங்கிகள் கைப்பற்றிருந்த காத்தான் என்றுமிடம் சென்று, அவர்களிடம் அடைக்கலம் தேடினர். தமக்கு உதவி செய்யும்படியும் அவர்களைக் கேட்டுக்கொண்டார். இத்தகைய அரிய வாய்ப்பு எப்பொழுது கிடைக்கும் என்று அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். எனவே, அவர்கள் எதிர்ப்பிற்கு ஆயத்தமானார்கள்.

அப்பொழுது, அடுத்த கட்சியார், கைருவான் கவர்னர் முயிஸ் பின் பாதிஸ் என்பவரிடம் உதவி தேடினர்கள். அவர் அதற்கு உடன்பட்டுச் சேனையை அனுப்பினர். போரில் அபூ தமாமா வெற்றிபெற்றார். ஆனல், இந்த வெற்றி உண்மையில் அவருக்கு உதவிசெய்த பறங்கிச் சேனாதிபதி முதலாம் ரோஜர் உடையதாகும். ஏனெனில், ஸிஸிலித் தீவு முழுவதையும் ரோஜர் கைப்பற்றி, ஹி. 453இல் தமது அதிகாரத்தை நிறுவி, இஸ்லாமிய அரசாங்கத்தை அகற்றிவிட்டார்.

6. முஸ்தஃலி பில்லாஹ்
ஹி. 487—495

முஸ்தன்ஸிருக்கு நிஸார், அஹ்மத், இஸ்மாயீல் என்னும் மூன்று புதல்வர்கள் இருந்தார்கள். முதல் புதல்வரான நிஸார் அம்மூவரில் வீரமும் வன்மையுமுள்ளவர். அவருக்கு ஆதரவாக மந்திரி பிரதானிகளில் ஒரு கட்சி இருந்தது. ஆனல், அவருக்கும் முதல் மந்திரி அப்ஸலுக்கும் மனக் கசப்பு ஏற்பட்டிருந்தது. நிஸார் ஒரு நாள் கோட்டைவாயில் வழியாகச் சென்றுகொண்டிருக்கையில் அப்ஸல் எதிரில் வந்தார். நிஸார் அவரைப் பயமுறுத்தி, “அர்மீனியனே! குதிரையிலிருந்து இறங்கு!” என்றார். ஆகையால், முஸ்தன்ஸிர் இறந்த பிறகு, மந்திரி அப்ஸல் கலீபாவின் இரண்டாம் புதல்வர் அபுல் காஸிம் அஹ்மத் என்பவரை சிம்மாசனத்தில் ஏற்றி, மந்திரி பிரதானிகளிடம் விசுவாசப்பிரமாணம் பெற்று அவருக்கு முஸ்தஃலி பில்லாஹ் என்னும்

பட்டமும் அளித்தார். நிஸாரும் விசுவாசப் பிரமாணம் செய்ய அழைக்கப்பட்டார். ஆனால், அவர் மறுத்து, "என் கையை வெட்டிவிட்டாலும் நான் இதற்கு உடன்படமாட்டேன். நானே பட்டத்திற்கு உரியவனென்று கலீபா எழுதிய கட்டளை என்னிடம் இருக்கின்றது" எனக் கூறி அதைக்கொண்டு வரச் சென்றார். அச்சமயம், அவரது தோழர்கள், 'கலீபாவின் கட்டளையைக்காட்டினாலும் எவ்வித மான நற்பலனும் ஏற்படப் போவதில்லை. இந்தப் பிரச்சினை வாள் ஒன்றினால்தான் முடிவு செய்யப்படவேண்டும். நாம் அலக்சாந்திரியாவுக்குச் சென்று, அங்கிருந்து தயாராகி வந்து கிலாபத்தைப் பெறுவோம்' என்று ஆலோசனை கூறினார்கள். எனவே, அமீர் இப்னு மஸால் என்பவரைத் துணையாகக் கொண்டு, மாறுவேடம் பூண்டு எல்லோரும் அலக்சாந்திரியாவுக்குச் சென்றார்கள். பத்ர் ஜமாலீயின் உதவியால் கவர்னர் பதவி யடைத்திருந்த நுஸ்ருத் தௌலாஹ் அப்தகீன் என்பவர் அங்கு கவர்னராக இருந்தார். நிஸார் இரவில் அவரிடம் சென்று, அவருக்கு மந்திரிப் பதவி கொடுப்பதாக வாக்களித்து, அவரையும் தம்முடன் சேர்த்துக்கொண்டார்.

மந்திரி அப்ஸல் சேனையுடன் வந்து எதிர்த்தார். அலக்சாந்திரியா அருகில் ஹி. 488 முஹர்ரம் மாதம் போர் நடந்தது அதில் மந்திரி அப்ஸல் தோல்வியடைந்து ஓடி விட்டார். நிஸார் கடற்கரைப் பிரதேசத்தைக் கைப்பற்றினார். அப்ஸல் மீண்டும் ஒரு சேனையுடன் வந்து நிஸாரை அலக்சாந்திரியாவில் சூழ்ந்துகொண்டார். கடுமையான முற்றுகையிடப்பட்டது. இப்னு மஸால் வேறு வழியின்றித் தமது சாமான்களுடன் மக்ரிப் நாட்டிற்கு ஓடிவிட்டார். நிஸாரும் நுஸ்ருத்தௌலாஹ் அப்தகீனும் கைதுசெய்யப்பட்டுக் காஹிரா நகருக்குக் கொண்டுவரப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்கள்.

ஹி. 495 ஸபர் 17இல் காஹிரா நகரில் கலீபா முஃதஸீ காலஞ் சென்றார், இவர் காலத்தில் ஐரோப்பியர் சிலுவை

யுத்தங்களை ஆரம்பித்துக் கூட்டம் கூட்டமாக வந்து, அல்ஜீரியாவையும், ஸிரியாவையும் கைப்பற்றினார்கள். எருஸலம் (பைத்துல் முகத்தஸ்) நகரம் பாத்தீமீ அரசாங்கத்தில் இருந்தது. நாற்பது நாட்கள் முற்றுகையிட்டு, ஹி. 492 ஷஃபான் 22இல் சிலுவை வீரர்கள் அந்த நகரில் நுழைந்தார்கள். அங்குள்ள முஸ்லிம்கள் அனைவரையும் இரக்கமின்றிக் கொன்று குவித்தார்கள். பிறகு, அவர்கள் எகிப்து நாட்டை நோக்கி முன்னேறி வந்தார்கள். முதல் மந்திரி ஸஅதுத் தொலாஹ் என்பவரின் தலைமையில் ஒரு சேனை அனுப்பப்பட்டது. அது அஸ்கலான் நகரின் அருகில் அவர்களைத் தோற்கடித்து, எகிப்துக்கு வரவிடாமல் தடுத்துவிட்டது.

சிலுவை யுத்தங்கள் எகிப்து நாட்டு வரலாற்றுடன் இருநூறு ஆண்டுகள் தொடர்பு கொண்டுள்ளன. ஆகையால், அதைச் சுருக்கமாகக் கூறி, இனி வரும் நிகழ்ச்சிகளைத் தெளிவாக அறிந்துகொள்ளல் அவசியமாகின்றது.

சிலுவை யுத்தங்கள்

ஸல்ஜூகியர் கோனியாவில தங்கள் அரசியலை நிறுவி, அர்ஸரூமிலிருந்து கிறிஸ்தவர்களின் ஆட்சியை அகற்றிவிட்டார்கள். அப்பொழுது, பீற்றர் என்னும் ஓர் ஐரோப்பியப் பாதிரி, ஆசியாவில் பலஸ்தீன் நாட்டிலுள்ள கிறிஸ்தவ புண்ணிய தலங்களைத் தரிசித்துவிட்டு, அக்காலக் கிறிஸ்தவ உலகின் தலைவரான போப் உரியானஸ் என்பவரிடம் சென்று முறையிட்டார். ஐரோப்பிய மதவெறியர்கள் கிறிஸ்தவப் புண்ணிய பூமியையும், கிறிஸ்தவச் சின்னங்களையும் பாதுகாக்க வந்ததாகக் கூறிக்கொண்டார்கள். ஆனால், மதப் பகைமையும் பொறாமையும் அவர்களிடம் நிறைந்திருந்தது. அவர்கள் முஸ்லிம்களுடன் இந்த சிலுவை யுத்தங்களை ஆரம்பித்து, ஹி. 490 முதல் ஹி. 690 வரை இருநூறு ஆண்டுகள் போர்புரிந்தார்கள். இதில் சிலுவைக் கட்சியார் எட்டு தடவை படையெடுத்து வந்தார்கள்.

(1) முதலாம் சிலுவைப் படையெடுப்பு :—ஹி. 489-கி.பி. 1096 ஆகஸ்தில் முதலாம் சிலுவைச் சேனை ஐரோப்பாவிலிருந்து புறப்பட்டது. வரும்வழியில் ஐரோப்பாவில் அவர்கள் கொலையும் களவும் செய்துகொண்டு வந்தார்கள். ஹங்கேரி, பல்காரியா நாடுகளின் மக்களுடன் போர் செய்தார்கள். இறுதியாக, அந்தச் சேனை சின்னுசியாவில் வந்து சேர்ந்தது. அங்கு ஸுல்தான் கலீஜ் அர்ஸலான் என்னும் ஸல்ஜூகி பாதுஷாவின் சேனை அவர்களை அழித்து விட்டது. இதையறிந்த ஐரோப்பியர் மனமுடைந்து துக்கப்பட்டார்கள். போப் மறுபடியும் முயற்சி செய்தார். இதர பாதிரிமார்களும் முயற்சிசெய்தார்கள். அதன் விளைவாக, பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளின் சிற்றரசர்கள், இளவரசர்கள் ஆகியோரின் தலைமையில் பல சேனைகள் புறப்பட்டன. அவர்களின் எண்ணிக்கை ஏழு இலட்சம். அவர்கள் வந்து ரிஹா, அன்தாகீர், எருஸலம், ஆகிய மூன்று நகரங்களை வென்று மூன்று சிற்றரசுகளை நிறுவினார்கள்.

(2) இரண்டாம் சிலுவைப் படையெழுச்சி: இது ஹி. 542இல் நிகழ்ந்தது. அச்சமயம், ஸுல்தான் நூருத்தீன் ஜங்கி என்பவர் சிலுவைச் சேனையுடன் கடும்போர் புரிந்து, அவர்களுடைய இருப்பிடமான ரிஹா நகரை வென்று விட்டார். நூருத்தீனுடைய பெயரைக் கேட்டவுடன், சிலுவை வீரர்கள் திகிலடைந்து விடுவார்கள். அவரை எதிர்க்க அவர்களுக்கு தைரியமில்லாமல் போய்விட்டது. தங்களுக்கு ஐரோப்பாவிலிருந்து உதவி அனுப்ப வேண்டுமென்று போப் அவ்ஜான்யூஸ் என்பவரிடம் முறையிட்டார்கள். அவரும் அதற்கு உடன்பட்டு, ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிலும் மதப் போருக்குத் தயாராகும்படி விளம்பரஞ் செய்தார். அக்கட்டளைக்குக் கீழ்ப்படிந்து இத்தாலி, பிரான்ஸ், ஜர்மனி, ஆஸ்திரியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து கோஷ்டி கோஷ்டியாகச் சிலுவைத் தொண்டர்கள் புறப்பட்டார்கள். பிரஞ்சு மன்னர் ஏழாம் லூயி

ஜர்மன் அரசர் கான்ருட் ஆகியோரும் வந்தார்கள். வழியில் பல்வேறு கஷ்ட நஷ்டங்களை அனுபவித்து, இறுதியில் இந்தப் பெருங் கோஷ்டியார் எருஸலமுக்கு வந்தார்கள். அங்கு தரிசனம் செய்துவிட்டு, டமஸ்கஸ் நகரை நோக்கிச் சென்றார்கள். ஆனால், ஸுல்தான் நூருத்தீன் ஜங்கீயை எதிர்க்கச் சக்தியற்றிருந்தார்கள். அவர் அவர்களைப் பல போர்களில் தொடர்ச்சியாகத் தோற்கடித்தார்.

(3) மூன்றாம் சிலுவைப் படையெழுச்சி: மாவீரர், மார்க்கத்தியாகி ஸுல்தான் நூருத்தீன் ஜங்கீ ஹி. 569இல் காலஞ்சென்றார். அதற்குப் பிறகு ஸுல்தான் ஸலாஹுத்தீன் முழு வன்மையுடன் சிலுவைக் கட்சியாரோடு போரிடத் தயாரானார். ஹி. 583இல் எருஸலம் நகரைக் கைப்பற்றிக் கொண்டார். அதை அறிந்தவுடன், போப் மூன்றாம் உரியானஸ் மறுபடியும் எருஸலம் நகரை வெல்வதற்காக ஐரோப்பியரை ஆயத்தஞ் செய்தார். அச்சமயம் தங்களுக்கிடையில் நடந்த போரை பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய இரு நாடுகளும் நிறுத்தி, சமாதானம் செய்து, சிலுவைப் போருக்கு ஆயத்தமாயின. பிலிப் அகஸ்தஸ் என்னும் பிரெஞ்சு மன்னரும், சிங்க இருதயர் முதலாம் ரிச்சர்ட் என்னும் இங்கிலாந்து மன்னரும், தங்கள் சேனைகளுடன் புறப்பட்டார்கள். ஆஸ்திரிய மன்னர் பிரடரிக் என்பவர் இரண்டாம் படையெழுச்சியில் கலந்து கொண்டதைப் போன்று, இதிலும் தமது சிற்றரசர்களுடன் வந்து சேர்ந்துகொண்டார். கடல் வழியாக எல்லோரும் பலஸ்தீன் வந்து சேர்ந்தார்கள். ஆனால், அவர்கள் ஸுல்தான் ஸலாஹுத்தீனை எளிதில் வென்றுவிட முடியவில்லை. எனவே, இறுதியில், வேறுவழியின்றி, ஹி. 588இல் அவருடன் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டு ஐரோப்பாவுக்குத் திரும்பிவிட்டார்கள்.

(4) நான்காம் படையெழுச்சி: பிறகு, ஸுல்தான் ஸலாஹுத்தீன் காலஞ்சென்ற செய்தியும், அவரது அரசு மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டுவிட்டதும் ஐரோப்பியருக்குத் தெரிந்தது. உடனே மூன்றாம் ஸலீதினூஸ் என்னும்

போப் மறுபடியும் ஐரோப்பியரைச் சிலுவைப்போர் செய்யும் படி அழைத்தார். இங்கிலாந்து மன்னர் இதில் கலந்து கொள்ள முடியவில்லை. ஆனால், பிரடரிக் மன்னரின் புத்திரரும், ஆஸ்திரியா அரசருமான ஹென்றி என்பவர் தமது சேனையுடன் புறப்பட்டுவரும் வழியில் ஸிஸிலித் தீவை வென்றார். அவர் அங்கு தங்கியிருந்துகொண்டு, தமது சேனையை எருஸலம் நகருக்கு அனுப்பினார்.

இங்கு, ஸுல்தான் ஸலாஹுத்தீனுடைய புதல்வர் மலிக் அஜீஸ், அவரது சகோதரர் ஸைபுதீன் ஆதில் ஆகிய இருவரும் சிலுவைச் சேனையைத் தோற்கடித்தார்கள். ஹி. 594இல் ஹென்றி இறந்துவிட்டதாகச் செய்தி கிடைத்தது. எனவே, சிலுவைச்சேனை ஐரோப்பாவுக்குத் திரும்பிச்சென்றுவிட்டது.

(5) ஐந்தாம் படையெழுச்சி: ஹி. 598இல் மூன்றும் இன்னஸன்ட் என்னும் முப்பத்துமூன்று வயதுள்ளவர் போப் பதவி பெற்றார். இவரும் மதப்போருக்கான ஆவேசத்தை உண்டாக்கினார். பல ஐரோப்பிய அரசர்களுக்குத் தூதனுப்பினார். எருஸலம் நகரை முஸ்லிம்களிடமிருந்து விடுவிக்க முயன்றார். பிரான்ஸிலிருந்து, அந்த நாட்டு மன்னரின் சகோதரருடைய புதல்வர் தியோபல் கௌன்ட் - தி - ஷம்பானியா என்பவர் தம்முடன் பல சிற்றரசர்களையும் சேனையையும் சேர்த்துக்கொண்டு புறப்பட்டார். வழியில் இவர்கள், ஜாரு (Zara), இஸ்தம்பூல் ஆகிய நகரங்களை வென்று ரோமர்களுடன் போர்புரிந்து கொண்டிருந்தார்கள். ஆகையால், அவர்கள் முஸ்லிம்களை எதிர்க்கவில்லை. எனவே, போப் அவர்கள்மீது கடுமையான சாபமிட்டார்.

(6) ஆறும் படையெழுச்சி: ஹி. 606இல் ஸிரியாவில் சிலுவைக் கட்சியாரின் அரசர் அமரி (அம்வரி) என்பவர் இறந்துபோனார். ஆகையால், சிலுவைக் கட்சியார் பிரெஞ்சு மன்னர் அகஸ்தஸிடம் உதவிகேட்டார்கள். உடனே, அவர் யூஹன்னா பர்யானா என்பவரை அரசராக நியமித்து பலஸ்தீனுக்கு அனுப்பினார். மேலும், ஒரு

பெரிய கிறிஸ்தவ மகாநாட்டைக் கூட்டி, அதில் பலஸ்தீனிலுள்ள சிலுவை வீரர்களுக்கு உதவிசெய்ய வேண்டுமெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. உடனே, ஐரோப்பிய வாலிபர்களின் ஒரு பெருங்கூட்டம் சிலுவைப் போருக்குச் செல்லத் தயாராகிநின்றது. போப் உடைய ஆசீர்வாதம் பெற்று, மார்பில் சிலுவை தரித்து அவர்கள் கப்பலேறினர்கள். கடலில் பெரும்புயல் உண்டாயிற்று. அதனல், அவர்களில் பெரும்பாலோர் கடலில் மூழ்கி விட்டார்கள். எஞ்சியிருந்தோர் தங்கள் தாய்நாடுகளுக்குத் திரும்பிச்சென்றூர்கள். சிலர் இதாலியில் தங்கி, அங்கு விவசாயஞ்செய்ய ஆரம்பித்தார்கள். ஹி. 613இல் மீண்டும் கிறிஸ்தவ மதத்தின் சார்பாகப் போர்ப் பிரகடனம் செய்யப்பட்டது. அதன்விளைவாக, ஹங்கேரி அரசர் மூன்றும் ஆந்திரூஸ் என்பவருடன் ஒரு பெருங்கூட்டம் பலஸ்தீனுக்கு வந்தது. அவர்களுடன் ஸிஸிலி அரசர் முதலாம் ரோஜர் என்பவரும் சேனையுடன் வந்தார்.

மலிக் ஆதில் அவர்களை எதிர்க்க நாப்லுஸ் நகரில் அகழ் தோண்டியிருந்தார். ஆனல், அவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தமையால் அவர்களை எதிர்க்க முடியவில்லை. ஆகையால், சிலுவைக் கட்சியார் பல நகரங்களை வென்று எகிப்துக்கு வந்தார்கள். அங்கு தமியாத் நகரை முற்றுகையிட்டார்கள். எழுபதாயிரம் குதிரைப் படையும் நான்கு லட்சம் தரைப்படையும் கொண்ட அவர்களின் சேனை, ஆறு மாதம் இருபத்திரண்டு நாட்களுக்குப் பிறகு, அந்த நகரில் பிரவேசித்தது. இதற்கிடையில், மலிக் ஆதில் இறந்துபோனர். அவரது புதல்வர் மலிக் காமில் பட்டத்திற்கு வந்து அவர்களை தமியாத் நகரிலிருந்து துரத்தினர். இதற்குள் அய்யூப் குடும்பச் சிற்றரசர்களுக்கிடையில், உட்கலகங்கள் விளைந்தன. ஆகையால், சிலுவைக் கட்சியார் எருஸலமைக் கைப்பற்றிக் கொண்டார்கள். ஹி. 637இல் கர்க் பிரதேச கவர்னர் மலிக் நாஸிர் வந்து மறுபடியும் அவர்களை அங்கிருந்து துரத்திவிட்டார்.

7. ஏழாம் படையெழுச்சி: எருஸலம் நகர் முஸ்லிம்கள் வசமாகிவிட்டதை அறிந்த ஐரோப்பியர் மீண்டும் மார்பு தட்டி நின்றார்கள். ஆனால், அக்காலத்தில் சங்கேஸ்கான் என்னும் தாதாரிகளின் தளபதி மத்திய ஆசியாவிலிருந்து படையெடுத்து வந்து ஐரோப்பாவில் ஆஸ்திரியா, ஹங்கேரி நாடுகள் வரை வந்துவிட்டார். எனவே, ஐரோப்பிய மன்னர்கள் அனைவரும் தங்கள் நாடுகளின் பாதுகாவலி லேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். அந்த அச்சம் நீங்கிய பிறகு, ஹி. 643இல் ஒன்பதாவது லூயி என்னும் பிரஞ்சு மன்னர் தமது சிற்றரசர்களுடன் ஒரு பெருஞ்சேனை யோடு புறப்பட்டார். ஸைப்ரஸ் (கிப்ரஸ்) தீவின் வழியாக எகிப்து கடற்கரையிலுள்ள தமியாத் (Damietta) நகருக்கு வந்து அதை வென்றுவிட்டார். அப்பொழுது நோய்வாய்ப் பட்டிருந்த மலிக் ஸாலிஹ் நஜ்முத்தீன் என்பவர் எதிரிகளை எதிர்க்க வந்தார். ஆனால், அவர் போர்க்களத்தில் இறந்து போனார். அவர் மனைவி ஷஜ்ருத்துர் என்பவள் ஹஸன் கைபாவிலிருந்த மலிக் முஅஸ்ஸம் என்னும் தன் புதல்வர் வந்து சிம்மாசனம் ஏறும்வரை அவரது மரணத்தை மறைத்து வைத்திருந்தாள். பிறகு, மலிக் முஅஸ்ஸம் சிலுவைக் கட்சி யாரை தமியாத்திலிருந்து துரத்திவிட்டார். இந்தப் போரில் பஹ்ரீ அடிமைகள் ஆவேசத்துடன் போர்புரிந்து மூவாயிரம் சிலுவை வீரர்களைக் கொன்று, லூயி மன்னரையும் கைது செய்துகொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு, ஷஜ்ருத்துர் அரசியானாள். லூயி அரசரிடம் எட்டு லட்சம் தீனார் வாங்கிக் கொண்டு அவரை அவள் விடுதலைசெய்துவிட்டாள். லூயி விடுதலையடைந்த பிறகு அக்கா நகருக்குச் சென்றுவிட்டார்.

ஹி. 649இல் டமஸ்கஸ் கவர்னர் நாஸிருத்தீன் யூஸுப் அய்யூபீ என்பவரும், எகிப்து ஸுல்தான் முயிஸ் ஜாஷ்ன கீர் என்பவரும் ஓர் உடன்படிக்கை செய்து, சிலுவைக் கட்சி யாரை எதிர்க்கத் திட்டமிட்டார்கள். அச்சமயம், லூயி அரசர் தமக்கு உதவிசெய்யும்படி ஐரோப்பியரை வேண்டிக்கொண் டார். ஆனால் அவருக்கு ஐரோப்பாவிலிருந்து உதவி

கிடைக்கவில்லை, இதற்கிடையில், பிரான்ஸில் அவருக்குப் பதிலாக ஆட்சிசெய்து கொண்டிருந்த அவரது தாயார் இறந்துவிட்டாள். அதை அறிந்து அவர் உடனே பிரான்ஸுக்குத் தமது சேனையுடன் சென்றுவிட்டார்.

8. எட்டாம் படையெழுச்சி: ஹி. 659இல் ஒரு புறம் ஐந்தாம் சிலுவை யுத்தத்தில் இஸ்தம்பூலைக் கைப்பற்றிக் கொண்ட சிலுவை வீரர்களைத், தங்கள் தலைவர் மீகாயீல் என்பவர் தலைமையில் ரோமர்கள் துரத்தியடித்தார்கள், மறுபுறம், ஸுல்தான் பய்பர்ஸ் பந்துகதாரீ என்பவரின் தொடர்ச்சியான தாக்குதல்களால், பலஸ்தீனிலிருந்த சிலுவைக் கட்சியார் பலங்குன்றித் தோற்கடிக்கப்பட்டார்கள். அவர்களிடமிருந்த பெரும்பாலான நகரங்களை முஸ்லிம்கள் வென்றார்கள். அச்சமயம், பிரஞ்சு மன்னர் ஒன்பதாம் லூயி ஒரு சேனையுடன் வந்தார். ஆனால், பலஸ்தீனுக்கு வராமல் ஆப்ரிக்காவுக்குச் சென்று, தூனிஸ் நகரை முற்றுகையிட்டு, அந்த முற்றுகையில் உயிரிழந்தார். ஸிஸிலி அரசர் கார்லூன்ஸ என்பவர் லூயிக்கு உதவியாக தூனிஸ் வந்தார். ஆனால், தூனிஸ் ஸுல்தான் அவருக்கு ஒரு தொகை கொடுத்து அவருடன் சமாதானம் செய்துகொண்டார். ஆகையால், அவர் திரும்பிவிட்டார். ஸிரியா நாட்டிலிருந்த சிலுவைக்கட்சியார் ஸுல்தான் பைபர்ஸின் வாளுக்குத் தப்பியிருந்தார்கள். அவர்களில், ஸிரியா நாட்டில் தராபலஸ் நகரில் இருந்தோரையெல்லாம், மலிக் மன்ஸூர் கலாவூன் அல்பீ என்பவர் ஹி. 688இல் துரத்திவிட்டார். இறுதியாக, அக்கா நகரிலிருந்த சிலுவைக் கட்சியாரை அவரது புத்திரர் மலிக் அஷ்ரப் கலீல், ஹி. 690இல் துரத்திவிட்டார். இவ்வாறாக, இருநூறு ஆண்டுகளுக்குப் பிறகு, பலஸ்தீனிலிருந்த சிலுவைக்கட்சியாரை முஸ்லிம்கள் அகற்றிவிட்டார்கள்.

7. ஆமிர் பி அஹ்காமில்லாஹ்
ஹி. 495—524. கி. பி. 1101—1130.

முஸ்தஃலி காலஞ்சென்ற பிறகு, அவரது புதல்வர் அபூ அலீ மன்ஸூர் என்பவர் ஆமிர் என்னும் பட்டத்துடன் கலீபா ஆனார், அந்த ஆண்டில் சிலுவைக்கட்சியார் அக்கா நகரைக் கைப்பற்றி ஸிரியாவிலுள்ள தராபலஸ் நகரையும் முஸ்லிம்களிடமிருந்து பிடுங்கிக்கொண்டார்கள். இதற்குப் பிறகு தொடர்ச்சியாக ஏழு ஆண்டுகள் பலஸ்தீன், ஸிரியா நாடுகளின் நகரங்களை ஒவ்வொன்ருக வென்றுகொண்டே இருந்தார்கள். ரிஹா, அன்தாக்கியா, எருஸலம் ஆகிய மூன்றிடங்களிலும் மூன்று நிரந்தரமான கிறிஸ்தவச் சிற்ற ரசுகளை நிறுவினர்கள். அப்பாஸி கலீபாக்களைப் போன்றே பாத்திமீ கலீபாக்களும் எத்தகைய உதவியும் செய்யாமல் முஸ்லிம்கள் அழிவதைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஒன்று அல்லது இரண்டு தடவை, அதுவும் எகிப்து நாட்டின் பாதுகாவலுக்காகச் செய்த முயற்சியையன்றி, அவர்கள் சிலுவைச் கட்சியாரை எதிர்க்க எப்பொழுதேனும் எண்ணியதேயில்லை.

ஹி. 511 இறுதியில் பால்ட்வின் மன்னர் எருஸலமிலிருந்து ஒரு பெருஞ்சேனையுடன் எகிப்தை வெல்லப் புறப்பட்டார். ஃபர்மா (Farma)வுக்கு வந்து, அங்குள்ள மக்கள் அனைவரையும் கொலைசெய்து, வீடுகளைக் கொள்ளையடித்துப் பள்ளிவாயில்களில் நெருப்புவைத்து விட்டார். எகிப்தில் அச்சமயம் கலீபா ஆமிர் தமது சுகபோகங்களில் மூழ்கிக் கிடந்தார். ஆதலால், கிறிஸ்தவர்களை ஒருவரும் எதிர்க்கவில்லை. ஆனல், தற்செயலாக பாலட்வின் மன்னர் நோய் வாய்ப்பட்டுத் திரும்பிவிட்டார். திரும்பிச் செல்லும்பொழுது அவர் இறந்துவிட்டார்.

ஹி. 515 ரமலானில் கலீபா ஆமிர், தமது முதல் மந்திரி அப்ஸலைக் கொலைசெய்வித்து, அவர் வீட்டைக் கொள்ளையிட்டு, அங்குள்ள பொருட்களைத் தமது அரண்மனைக்குக்

கொண்டுவந்தார். அப்ஸலுடைய புத்திரர்களும் கைது செய்யப்பட்டார்கள். பிறகு இப்னு பதாஹீ என்பவர் மந்திரியானுர்.

இந்த வேளையில், பாத்தினீ கூட்டத்தார் அதை ஓர் அரிய வாய்ப்பெனக் கருதி, தங்கள் செல்வாக்கையும் வன்மையையும் பெருக்க ஆரம்பித்தார்கள். ஸிரியாவில் பல கோட்டைகள் கட்டினுர்கள். மாகாண கவர்னரோ, மாவட்ட அதிகாரியோ அவர்களுக்கு விரோதமாக ஏதாயினும் செய்யத் துணிந்தால், பாத்தினீ தொண்டர்கள் அவர்களிடம் சென்று, சற்றேனும் இரக்கமின்றி அவர்களைக் கொன்று விடுவார்கள். எனவே, வேறு வழியின்றி, மக்களெல்லாம் பாத்தினீகளை சந்தோஷப்படுத்த முயற்சிசெய்து வந்தார்கள். இந்தக் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவன் ஹி. 524 துல் கஃதா 2இல் கலீபா ஆமிரைக் கொலைசெய்து விட்டான்.

ஆமிர் எதையும் ஆராய்ந்து அறியும் திறமையற்றவர். சுகபோகங்களை விரும்புவோர். அரசியல் நிர்வாக அறிவும், ஒரு விஷயத்தை ஒழுங்குபடச் செய்துமுடிக்கும் திறமையும் அவரிடம் கிடையாது. அக்காலத்தில் அப்ஸல் முதல் மந்திரியாக இராவிட்டால், சிலுவைக் கட்சியார் எகிப்தை வென்றே இருப்பார்கள். ஆனுல், அந்த கலீபா அறிவிழந்து அரண்மனைப் பணியாளர் சொற்கேட்டு அவரையும் கொன்று விட்டார்.

8. ஹாபிஸ் லி தீனில்லாஹ்
ஹி. 524—544. கி. பி. 1130—1149.

ஆமிருக்கு ஆண் வாரிஸ் கிடையாது. ஆனுல், அச்சமயம் அவர் மனைவி கற்பவதியாக இருந்தமையால், ஒரு வேளை ஆண்குழந்தை பிறக்கலாமென்று எதிர்பார்க்கப் பட்டது. ஆனுல், குழந்தை பெண்ணுகப் பிறந்தது. எனவே, பாத்திமீ குடும்பத்தில் இவருடைய சிறிய தந்தையின் புதலவர் அப்துல் மஜீத் என்பவரை ஹாபிஸ் லி தீனில லாஹ் என்னும் பட்டத்துடன் முடிசூட்டினுர்கள். மந்திரி

அப்ஸலுடைய புத்திரர் அஹ்மத் என்பவர் மந்திரியாக நியமிக்கப்பட்டார். ஆனால், விரோதிகள் அவனரக் கொலை செய்துவிட்டார்கள் ஆதலால், பஹ்ராம் என்பவரை மந்திரியாக்கினர். அவரும் ஹி. 543இல் கொலையுண்டார்.

இக்காலத்தில், சிலுவைக் கட்சியாரால்எகிப்து தாக்கப் படவில்லை. ஸுல்தான் நூருத்தீன் ஜங்கி உடைய தொடர்ச்சியான போர்களின் காரணமாக அவர்களுக்கு எகிப்தில் எட்டிப்பார்க்கவும் அவகாசம் கிடைக்கவில்லை. ஆனல், இதைவிடப் பெரியதோர் ஆபத்து மேற்கிலிருந்து உண்டாயிற்று. அஃதாவது, ஸிஸிலி மன்னர் இரண்டாம் ரோஜர் இருநூற்றைம்பது யுத்தக்கப்பல்களுடன் இப்ரிகியாவைத் தாக்கினர். முதலில் பர்காவில் சேனைகளை இறக்கினர். அங்குள்ள முஸ்லிம்களைக் கொலைசெய்தார். அவர்களுடைய பெண்டு பிள்ளைகளையும் பிடித்துக்கொண்டார். 541இல் மேற்கு திருப்போலியையும் பிடித்துக்கொண்டார். இன்னும் இரண்டாண்டுகள் சென்று பாத்திமீ கிலாபாத்தின் பிறப்பிடமான மஹ்தியாவைக் கைப்பற்றிக்கொண்டு, அங்கிருந்து அலக்சாந்திரியாவுக்கு வந்தார். இந்தச் செய்திகள் எகிப்து நாட்டாரைத் திடுக்கிடச்செய்தன. அவர்கள் அதிக அச்சங்கொண்டார்கள். ஆனல். இதற்கிடையில் ரோமர்கள் ஸிஸிலித் தீவைத் தாக்கினர்கள் ஆகையால், இரண்டாம் ரோஜர் தமது அரசைப் பாதுகாக்க உடனே எகிப்திலிருந்து திரும்பிவிட்டார்.

ஹி. 544இல் தமது எண்பத்தொன்றும் வயதில் ஹாபிஸ் லி தினில்லாஹ் காலஞ்சென்றார். அவர் கலீபாவான பொழுது அவருக்கு வயது அறுபது. கையெழுத்திடுவதை யன்றி அவருக்கு வேறெந்தத் திறமையும் கிடையாது. அவர் மூத்திரகோச நோயால் கஷ்டப்பட்டு வந்தார். மூஸா என்னும் ஹகீம் ஏழு உலோகங்களைச் சேர்த்து ஒரு மத்தளம் தயாரித்தார். அதன்மீது ஏழு கிரகங்களையும் சித்தரித்தார். கையால் மத்தளத்தைத் தட்டியவுடன் அவர் வயிற்றிலிருந்து காற்று வெளியாகிவிடும். அதனல் நோய் நீங்கிவிடும்.

இந்த மத்தளம் கலீபாவின் கஜானுவில் பாதுகாக்கப் பட்டு வந்தது. ஸுல்தான் ஸலாஹுத்தீன் காலத்தில் குர்து குலத்தைச் சேர்ந்த ஒரு சிப்பாய், மத்தளத்தின்மேல் தனது கையை வைத்தான். உடனே, அவன் வயிற்றி லிருந்து காற்று வெளியாகிவிட்டது. அவன் மிகவும் வெட்க மடைந்து மத்தளத்தை உடைத்து விட்டான். இதை மக்கள் அறிந்து அதிக வருத்தப்பட்டார்கள். ஏனென்றல் அந்த மத்தளம் மருத்துவத் தொழிலின் அதிசயமானதொரு நினைவுச்சின்னமாக இருந்தது.

9. ஸாபிர் பி அம்ரில்லாஹ்

ஹி. 544—549. கி. பி. 1149—1154.

ஹாபிஸுக்குப் பிறகு அவரது கடைசிப் புதல்வர் அபூ மன்ஸூர் இஸ்மாயீல் என்பவர் ஸாபிர் பி அம்ரில்லாஹ் என்னும் பட்டத்துடன் தமது பதினேழாம் வயதில் கலீபா ஆனர். அரசியல் என்றல் என்ன என்பதே அவருக்குத் தெரியாது. இரவும் பகலும் கேளிக்கைகளில் மூழ்கிக் கிடந் தார். அவரது ஆட்சியின் ஆரம்பத்திலேயே அமைச்சரும் இறந்துபோனர். அடுத்த மந்திரியும் நியமிக்கப்படவில்லை. எனவே, அரசியல் நிர்வாகம் சீர்கேடுற்றது.

ஹி. 548இல் சிலுவைக் கட்சியார் முன்னேறி வந்தார் கள். அஸ்கலான் நகரை வென்றூர்கள். ஸிஸிலி மன்னர் இரண்டாம் ரோஜர் தமது போர்க்கப்பல்களுடன் வந்து தானீஸ் நகரை நெருங்கி விட்டார். பர்மா (Farma) நகரை யும் அழித்துக் கணக்கில்லாத கொள்ளைப்பொருளும் எண் ணற்ற கைதிகளும் கொண்டுசென்றூர்.

பிறகு, அப்பாஸ் என்பவர் மந்திரியாக நியமிக்கப்பட் டார். ஹி. 549 முஹர்ரம் மாதம் ஸாபிரை அந்த மந்திரியின் மகன் நஸ்ர் என்பவன் இரகசியமாகத் தன் வீட்டில் விருந் திற்கு அழைத்துக் கொலைசெய்து அங்கே புதைத்துவிட் டான். தன் சொந்தக் காரணத்தால் அவன் அவ்வாறு செய்ததாகக் கூறப்படுகின்றது.

மந்திரி அப்பாஸ் மறுநாள் வழக்கம்போல் கலீபாவுக்கு ஸலாம் செய்ய அரண்மனைக்குச் சென்றார். கலீபாவைக் காணுமல் தேட ஆரம்பித்தார். ஜிப்ரயீல், யூஸுப் என்னும் கலீபாவின் இரண்டு சகோதரர்களையும் அழைத்து விசாரித்தார். அவர்கள் அதைப்பற்றி ஒன்றும் தெரியாதெனக் கூறினர்கள். தன் புத்திரன் செய்த குற்றத்தை மறைக்கும் நோக்கத்துடன் மந்திரி அப்பாஸ், அவ்விருவர்மீதும் குற்றஞ் சாட்டி அவர்களைக் கொலைசெய்துவிட்டார்.

10. ஃபாயிஸ் பி நஸ்ரில்லாஹ்

ஹி. 549—556. கி. பி. 1154—1160.

அச்சமயம் ஐந்து வயதுப் பாலகனுயிருந்த ஸாம்பிருடைய புதல்வர் ஃபாயிஸ் என்பவரை, மந்திரி அப்பாஸ் தமது தோளின்மீது உட்காரவைத்துக்கொண்டு, அரண்மனை அலுவலர்களை நோக்கி, கலீபாவை அவரது இரண்டு சகோதரர்களும் கொலைசெய்துவிட்டார்கள். ஆகையால், அதற்காக அவர்களை நான் கொன்றுவிட்டேன். இப்பொழுது நாம் நமது எஜமானுடைய குழந்தையை நமது தலைவராக ஏற்றுக்கொண்டு தூய்மையான உள்ளத்துடன் இவரைப் பின்பற்றி நடப்பது நமது கடமையாகும்." என்று கூறினர். உடனே, "அப்படியே செய்வோம்" அப்படியே செய்வோம்!" என்று அங்கிருந்தோர் அனைவரும் இடி முழக்கம் செய்தார்கள். அந்தப் பாலகன் அச்சங்கொண்டு நடுக்கத்தால் மந்திரியின் தோளை நனைத்துவிட்டான். அவன் மனதிலும் மூளையிலும் மாறுபாடு உண்டாகி, முகமும் வெளுத்துவிட்டது. அன்றுமுதல் அந்தப் பாலகன் நோய் வாய்ப்பட்டுவிட்டான்.

மந்திரி அப்பாஸ் இவ்வாறு ஒரு குழந்தையைச் சிம்மாசனத்தில் உட்காரவைத்து விட்டார், பிறகு, நாமே தனியரசு நடத்தி இன்பக்கடலில் மூழ்கியிருந்தார். ஆனல், அரண்மனையில் உண்மை வெளியாகிவிட்டது. எனவே, பழி வாங்கும் முயற்சிகள் செய்யப்பட்டன. மனியத்துல் கஸீப்

பிரதேச கவர்னராகவும், மிக வைராக்கியமுள்ள ஷியாவாக வும், கலீபா ஸாஃபிருடைய நம்பிக்கையாளராகவுமிருந்த ஸாலிஹ் தலாயீ பின் ஸுரீக் அர்மனீ என்பவர் அச்சமயம் நஜப், கர்பலா முதலிய இடங்களுக்குத் தலயாத்திரை செய்யச் சென்றிருந்தார். அவருக்கு இவ்விஷயம் தெரி விக்கப்பட்டது. மேலும், அவரிடம் உதவி கேட்கப்பட்டது. அவர் உடனே, தம்மைச் சேர்ந்தோரின் ஆலோசனைப்படி காட்டரபிகளின் ஒரு கோஷ்டியைச் சேர்த்துக் கொண்டார். துக்கத்தின் அறிகுறியாகக் கருநிற ஆடைகளை அணிந்து கொண்டு எகிப்துக்கு வந்தார். தலைவர்கள் பலர் சென்று அவரை எதிர்கொண்டழைத்தார்கள். ஆனால், மந்திரி அப்பாஸ் தமது குடும்பத்தாருடன் அஸ்கலானுக்கு ஓடிப் போய்விட்டார். ஸாலிஹ் தலாயீ உடனே கெய்ரோ நகரில் நுழைந்து, மந்திரியின் வீட்டிலிருந்து கலீபா ஸாஃபிரு டையவும் அவருடனிருந்தோருடையவும் பிணங்களைத் தோண்டியெடுத்துத் துர்பதே ஜஃஃபரான் என்னும் கபரஸ் தானில் அடக்கம் செய்வித்தார். பிறகு, தாமே மந்திரியாகி அரசாங்கத்தை நடத்தினர். கலீபா ஸாஃபிருடைய சகோதரி, அஸ்கலானிலிருந்த சிலுவைக் கட்சியாருக்கு ஒரு பெருந்தொகை கொடுப்பதாக வாக்களித்து, எவ்வா ருயினும், அப்பாஸையும், அவர் மகனையும் பிடித்துக் கொடுக் கும்படி வேண்டிக்கொண்டாள். சிலுவைக்கட்சியார் உடனே அப்பாஸைப் பிடித்துக் கொலைசெய்தார்கள். நஸ்ரைப் பிடித்து எகிப்துக்குக் கொண்டுவந்து, வாக்களிக்கப்பட்ட தொகையைப் பெற்றுக்கொண்டு, அவனைக் கொடுத்து விட்டார்கள். நஸ்ர் பலவிதமாகச் சித்திரவதை செய்யப்பட்டு இறுதியில் கொல்லப்பட்டான். அவனது பிரேதத்தைக் கழுவிலேற்றி, ஹி. 551இல் ஆஷுரா தினத்தில் எலும்புகள் எரிக்கப்பட்டன.

ஃபாயிஸ் 556இல் மரணமடைந்தார். அவர் காலத் தில் எகிப்து மிகவும் தாழ்ந்த நிலைக்கு வந்துவிட்டது. ஆகையால், ஒவ்வோராண்டிலும் சிலுவைக்கட்சியாருக்கு அஞ்சி, அவர்களுக்கு ஒரு பெருந்தொகை அனுப்பப்பட்டு வந்தது.

11. ஆஸித் லி தீனில்லாஹ்

ஹி. 556—567 கி. பி. 1160—1171.

கலீபா ஃபாயிஸுக்குப் பிறகு, பாத்திமீ குடும்பத்தைச் சேர்ந்த வயது முதிர்ந்த ஒருவரை கலீபா பதவிக்குத் தகுதியுள்ளோர் எனக் கருதி அவரை நியமனம் செய்யலாமென்று மந்திரி ஸாலிஹ் எண்ணங்கொண்டார். ஆனால், அவரது நண்பர்களில் ஒருவர் அவரிடம் வந்து, இரகசியமாக, "உமக்கு முன் இருந்த மந்திரிகள் உம்மைவிட அறிவுள்ளவர்கள். சிறுகுழந்தைகளை கலீபாக்களாக நியமித்துவிட்டுத், தாங்களே சர்வாதிகாரம் செலுத்தினார்கள்" என்று ஆலோசனை கூறினார்கள். அதைக்கேட்டு அவர் அவ்வாறே செயலாற்ற முடிவுசெய்தார். ஹாபிஸ்-லி-தீனில்லாஹ்வின் சிறு வயதுள்ள ஒரு பௌத்திரர், அப்துல்லாஹ் என்பவரை ஆஸித் என்னும் பட்டம் கொடுத்துக் கலீபாவாக்கினார். பிறகு, அரசியல் நிர்வாகத்தைத் தாமே நடத்தினார். மேலும், கலீபாவுடன் நெருங்கிய தொடர்புகொள்ளும் எண்ணத்துடன், அவருக்குத் தமது புதல்வியை மணஞ் செய்வித்துப் பல இனாம்களும் கொடுத்தார்.

ஸாலிஹ் கொலை: ஆனால், பிறகு ஸாலிஹ் அதிக கொடுமைகள் செய்யத் தொடங்கினார். அவற்றை மக்கள் பொறுக்க முடியவில்லை. குறிப்பாக, கலீபாவின் தந்தையின் சகோதரி அவரால் துன்புறுத்தப்பட்டமையால், அவள் தனது அடிமைகளில் சிலரை அனுப்பினாள். அவர்கள் சென்று, அரண்மனை வாயிலில் பதுங்கியிருந்து, மந்திரி ஸாலிஹ் வெளியே வந்துகொண்டிருக்கும்பொழுது வாள் வீசி, அவரது வயிற்றைப் பிளந்துவிட்டார்கள். அதற்குப் பிறகு அவர் தமது வீட்டிற்குக் கொண்டுபோகப் பட்டார். அங்கு, ஹி. 556 ரமலான் பத்தொன்பதாம் நாள் அவர் இறந்துபோனார். ஆனால், இறக்குமுன் கலீபாவிடம் அனுமதி பெற்றுத் தமது கொலைக்குக் காரணமாக இருந்த மாதின்மீது பழிவாங்கினார்.

மந்திரி ஸாலிஹ் தருமசிந்தையுடையவர், நற்பண்புகள் நிறைந்தவர். மார்க்கச் சட்டங்களின்படியே வாழ்க்கை நடத்தினுர். ஆனுல், அவர் ஷியா பிரிவில் அளவு கடந்த பற்றும், பித்தும் உள்ளவர். ஹஸ்ரத் அலீயின் கிலாபத்தைப் பற்றி ஆலிம்களோடும், மார்க்கச் சட்ட நிபுணர்களோடும் தர்க்கம் செய்வார். காவியம் எழுதுவார், ஒரு புத்தகமும் தயாரித்துள்ளார்.

ஹுஸைன் மஷ்ஹத்: இவர் காலத்தில் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) உடைய மஷ்ஹத் (ஷஹீதான நினைவுக் கட்டிடம்) கட்டப்பட்டது. மந்திரி அப்ஸல் ஸிரியாவுக்குச் சென்றிருந்தபொழுது, அங்கு அஸ்கலான் நகரில் இமாம் ஹுஸைன் (ரலி) உடைய தலை அடக்கஞ்செய்யப்பட்டிருந்த தாக அவருக்குத் தெரிந்தது. ஆகையால், அங்கு ஒரு கோரி கட்டினுர். மந்திரி ஸாலிஹ், தமது காலத்தில் இதை எகிப்துக்குக் கொண்டுவர வேண்டுமென்று முடிவு செய்தார். கெய்ரோ நகரில் கோட்டை மதிலுக்கு வெளியில் ஓர் அடக்கஸ்தலமும் ஜாமிஃ மஸ்ஜிதும் தயாரித்தார். ஆனுல், இந்தப் புனிதமான நினைவுச்சின்னத்தை நகருக்கு வெளியில் வைக்க கலீபா விரும்பவில்லை. ஆகையால், அவர் தமது ஜம்ருத் அரண்மனையில் இதற்காக ஓரிடத்தை ஒதுக்கி வைத்தார். அதில் மஷ்ஹத் தயாரிக்கப்பட்டு அஸ்கலான் நகரிலிருந்து மண்மாற்றப்பட்டது.

ஷாவிர்: மந்திரி ஸாலிஹ் தலாயீ இறந்த பிறகு அவரது புதல்வர் முஹியுத்தீன் மந்திரியானுர். கலீபா அவருக்கு மலிக் ஆதில் என்னும் பட்டம் அளித்தார். ஆயினும் அவர் அந்தப் பதவியில் வெகுகாலம் இருக்கவில்லை. ஏனென்ருல், அந்தப் பதவியை ஷாவிர் என்பவர் ஏற்றுக் கொண்டார். மந்திரி ஸாலிஹால் ஆதரிக்கப்பட்டோரில் ஒரு கோஷ்டியார் ஜிர்காம என்பவரின் தலைமையில் ஷாவிரைத் துரத்திவிட முயற்சிசெய்தார்கள். ஜிர்காம், ஹி. 588 ரமலான் மாதம் ஷாவிரை அவரது அரண்மனையி லேயே தாக்கினுர். இதில் ஷாவிரின் மூத்த குமாரன்

இறந்து போனார். ஷாவிர் உயிர்தப்பி, அங்கிருந்து ஸிரியாவுக்குச் சென்றுவிட்டார். எனவே, ஜிர்காம் மந்திரிப் பதவியை ஏற்றுக்கொண்டார்.

ஜிர்காம்: ஜிர்காம் சிறந்த அறிவாளி. அறிவுடன் ஆற்றலும் உள்ளவர். இரக்க சித்தமுள்ளவர். இன்பமாகப் பேசுவார். அழகான தோற்றமுடையவர். இவரிடம் இத்தகைய சிறந்த பண்புகள் இருந்தபோதிலும் ஒரே ஒரு துர்க்குணமும் இருந்தது. எவராயினும் கோள் சொன்னால் உடனே செவிசாய்த்து, நம்பி விடுவார். இவர் மந்திரியாக இருக்கையில், அரசியல் தலைவர்கள் மீண்டும் ஷாவிரை மந்திரியாக்கிவிட நினைத்துக் கொண்டிருப்பதாக ஓரிடத்திலிருந்து செய்தி கிடைத்தது. இந்தச் செய்தியை உண்மையென்று நம்பி அவர் அதில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்பட்ட எழுபது தலைவர்களைத் தமது வீட்டிற்கு அழைத்து, அவர்கள் அனைவரையும் கொன்றுவிட்டார். தலைவர்களின் கொலையால் நாட்டு நிர்வாகம் நலிவுற்றது. எனவே, சிலுவைக் கட்சியார் படையெடுத்து வந்தார்கள். அச்சமயம், அவர்களை எதிர்க்கும்படி ஜிர்காம் தமது சகோதரர் ஹிமாம என்பவரை அனுப்பினார். ஆனால், ஹிமாம் தோல்வியடைந்து கெய்ரோவுக்குத் திரும்பிவந்தார். சிலுவைக் கட்சியார் பல்பீஸ் நகரக்கோட்டையைக் கைப்பற்றினார்கள்.

அஸதுத்தீன் ஷேர்கோஹ்: எகிப்திலிருந்து ஸுல்தான் நூருத்தீன் ஜங்கீயிடம் ஷாவிர் வந்தார். ஸுல்தான் நூருத்தீன் அச்சமயம் சிலுவைக் கட்சியாருடன் கடும்போர் புரிந்துகொண்டிருந்தார். அக்காலத்தில் இஸ்லாமிய உலகிலிருந்த ஸுல்தான்கள் அனைவரிலும் அவரே வன்மையிலும் சிறப்பிலும் உச்சநிலை அடைந்திருந்தார். அந்த நிலையில் ஷாவிர் எகிப்திலிருந்து அவரிடம் சென்றார். தனக்கு உதவி செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். அச்சமயம் ஐரோப்பியரின் தாக்குதல்கள் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும்பொழுது, முஸ்லிம் நாடாகிய எகிப்திலிருந்தும் தமக்கு உதவி கிடைத்தால் நலமென்று ஸுல்தான் நூருத்

தீன் வெகுகாலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். எனவே, ஷாவிரின் வேண்டுகோள் அச்சமயம் பழம் நழுவிப் பாலில் விழுந்ததைப் போன்றிருந்தது. ஆதலால், அந்த வாய்ப்பைப் பெற்றவுடன் தமது நம்பிக்கைக்குரிய அஸதுத்தீன் ஷேர்கோஹ் என்பவரை ஷாவிருக்கு உதவியாக ஒரு சேனையுடன் எகிப்துக்கு அனுப்பினர். ஷாவிர் என்பவர் ரவாதிய்யாஹ் என்னும் குர்துகுலத்தைச் சேர்ந்தவர். இக்குலத்தவர் ஆஜர்பைஜானில் இருந்தார்கள்.

ஷேர்கோஹ்வும், அவரது சகோதரர் நஜ்முத்தீன் அய்யூப் என்பவரும் ஸுல்தான் நூருத்தீனுடன் சிலுவைப் போர்களில் வீராவேசத்துடன் சமர்செய்து வெற்றிபெற்றுச் சிறப்புடன் விளங்கினர்கள். எனவே, அவ்விருவரையும் ஸுல்தான் வெகு கண்ணியத்துடன் வைத்திருந்தார்.

ஸலாஹுத்தீன் : நஜ்முத்தீன் அய்யூப் உடைய புத்திரர் யூஸுப் ஸலாஹுத்தீன் என்பவர் தமது சிறிய தந்தை ஷேர்கோஹ்வுடன் எகிப்துக்கு வந்திருந்தார். ஸலாஹுத்தீனுக்கு இளம்பிராயமாக இருந்தமையால் அவரை எகிப்துக்கு அனுப்ப நஜ்முத்தீனுக்கு விருப்பமில்லை. ஆனல், விதியின் வேகம் முன்னொரு காலம் ஹஸ்ரத் யூஸுப் அலைஹிஸ்ஸலாமவர்களை பலஸ்தீனிலிருந்து எகிப்துக்குக் கொண்டுசென்றதைப் போன்றே, ஸலாஹுத்தீனையும் இழுத்துக்கொண்டுபோய் எகிப்து நாட்டின் அதிபதி ஆக்கியது.

ஸலாஹுத்தீன் திக்ரீத் கோட்டையில் பிறந்தார். அந்த வாலிபரே பின்னர் சிலுவைப் போர்களில் வெற்றி மேல் வெற்றிபெற்றுக் கீர்த்தியடைந்த ஸுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி என்பவர். அவரது வீரச்செயல்களால் இஸ்லாமிய உலகிற்குப் பெற்றி யளித்தவர். அவரது வீரச்செயல்கள் இஸ்லாமிய வரலாற்று ஏடுகளின் பக்கங்களில் பொன் எழுத்துக்களில் எழுதற்குரியன. அவர் ஸுல்தான் நூருத்தீன் ஜங்கீயைப் போன்று, ஐரோப்பாவிலிருந்து

வந்தெதிர்த்த சிலுவைக் கட்சியார் அனைவரையும் தனியாக நின்று எதிர்த்து வெற்றிபெற்ருர்.

ஹி. 559 ஜமாதுல் அவ்வல் 29இல் அஸதுத்தீன் ஷேர் கோஹ்வும் ஸலாஹுத்தீனும் ஷாவிருடன் எகிப்தில் பிரவேசித்தார்கள். ஜிர்காமுடன் போர் நடந்தது. போரில் ஜிர்காம் மாண்டுபோனுர். எனவே, ஷாவிர் மறுபடியும் மந்திரியானுர். அவர் எகிப்தில் வசூலித்த தீர்வையில் மூன்றிலொரு பாகம் ஸுல்தான் நூருத்தீனுக்கு நன்றியாக அனுப்பினுர். ஆனல், நூருத்தீனுடைய நோக்கம் பணம் பெறுவதன்று. அச்சமயம் எகிப்தில் மிகவும் பலங்குன்றியிருந்த பாத்திமீ அரசாங்கத்தைக் கைப்பற்ற அவர் விரும்பினுர். இதைப்பற்றி ஷேர்கோஹ்வுக்கும் எழுதினுர். ஷேர் கோஹ் உடனே ஷாவிரைக் கலந்தாலோசித்தார். இறுதியாக, இருவரும் ஒருமனப்பட்டு, ஸுல்தான் நூருத்தீனே எகிப்து நாட்டின் ஆட்சியாளர் என்று விளம்பரஞ் செய்து விடலாமென்று முடிவுசெய்தார்கள்.

எனினும், ஷாவிரின் மனதில் ஓர் எண்ணம் உண்டாயிற்று. நூருத்தீன் வெகு தூரத்திலிருக்கிருர். ஷேர்கோஹ்வுடன் ஒரு சிறிய படை இருந்தது. எனவே, அதை எகிப்திலிருந்து துரத்திவிட்டுத் தாமே எகிப்துக்கு அதிகாரியாகி விடலாமென்னும் ஒரு புதிய திட்டம் ஷாவிர் உள்ளத்தில் உருவெடுத்தது. அதைச் செயலாற்ற அவர் முற்பட்டார், கிறிஸ்தவர்களான சிலுவைக்கோஷ்டியாரின் உதவியைக் கோரினுர். அவர்களுக்கு அவர், "நீங்கள் சேனையுடன் வந்து, ஷேர்கோஹ்வை எகிப்திலிருந்து துரத்துவதில் எனக்கு உதவிசெய்யுங்கள். நூருத்தீனிடம் எகிப்து சென்றுவிட்டால், உங்களுக்குப் பேராபத்து" என்றெழுதியதோடு, அவர்களுக்குப் பணமும் பொருளும் கொடுப்பதாக வாக்களித்தார்.

சிலுவைக் கட்சியார் கூட்டம் கூட்டமாகப் புறப்பட்டார்கள். இதையறிந்தார் ஸுல்தான் நூருத்தீன். உடனே, அவர்களுடைய நகரங்களைத் தாக்கி, அவர்கள்

எகிப்துக்குச் செல்லவிடாமல் தடுக்க முயற்சித்தார். எனினும், சிலுவைக் கட்சியார் முன்னேறிக்கொண்டே சென்றார்கள். ஏனென்றால், நூருத்தீன் எகிப்தை வென்று விட்டால் தங்களுக்குப் பேராபத்து உண்டாகிவிடுமெனவும், அதற்குள் தாங்களே எகிப்தை வென்றுவிடவேண்டுமென வும், அத்தகைய அரிய வாய்ப்பைக் கைவிடலாகாதெனவும் அவர்கள் நினைத்தார்கள். இவ்விஷயங்களையெல்லாம் ஷேர்கோஹ் அறிந்து, நன்கு ஆலோசித்து, தாம் முன்னர் சிலுவைக் கட்சியாரை வெளியேற்றிய பல்பீஸ் கோட்டை யில் நுழைந்துகொண்டார். ஷாவிர் அச்சமயம் சிலுவைக் கட்சியாரையும் உடன்கொண்டு பல்பீஸ் கோட்டையை முற்றுகையிட்டார். கோட்டை மதில்கள் உயரமானவை யல்ல. எனினும், ஷேர்கோஹ் தினந்தோறும் வெளிக் கிளம்பிப் பகைவர்களைத் தாக்கிக்கொண்டே இருந்தார். இவ்வாறு மூன்று மாதங்கள் சென்றன, ஆனால், எதிரிகள் ஷேர்கோஹ்வைத் தோற்கடிக்க முடியவில்லை.

இதற்கிடையில், நூருத்தீன் ஸிரியாவில் சிலுவைக் கட்சியாரைப் பலவிடங்களில் தோற்கடித்தார். அவர் களுடைய தலைமைப் பீடமாகிய ஹாரம் கோட்டையையும் கைப்பற்றிக்கொண்டார். உடனே, சிலுவைக் கட்சியார் திகிலடைந்துவிட்டார்கள். தங்கள் உறைவிடங்களைப் பாது காப்பதற்காக அவர்கள் எகிப்திலிருந்து ஸிரியாவுக்குத் திரும்பிவிட எண்ணினார்கள். ஆயினும், ஒரு பெருமுயற்சி செய்தார்கள். ஷேர்கோஹ்வுக்கு, "நீர் எகிப்திலிருந்து போய்விட்டால் நாங்கள் முற்றுகையை நிறுத்திவிடுகிறோம்" என்றெழுதினார்கள். அப்பொழுது, வெளியுலகில் நடக்கும் செய்தி ஷேர்கோஹ்வுக்கு எட்டவில்லை. அவரிடமிருந்த உணவுப்பொருள்களும் குறைந்துவிட்டன. எனவே, அவர் அதற்கு உடன்பட்டு, எகிப்திலிருந்து புறப்பட்டு ஸுல்தான் நூருத்தீனிடம் வந்துசேர்ந்தார்.

அங்கு, ஹி. 562 வரை இருந்தார். ஆனால், எகிப்து சம்பந்தமான எண்ணம் அவர் மனதில் குடிகொண்டு

விட்டமையால் மன நிம்மதி யற்றிருந்தார். இறுதியாக, பொறுக்கி எடுக்கப்பட்ட வீரர்களைக் கொண்டதொரு பெருஞ் சேனையைத் தயாரித்தார். மீண்டும் தாம் எகிப்துக்கு செல்ல ஸுல்தான் நூருத்தீனிடம் அனுமதி கோரினர். ஆனல் அவர் அதற்கு உடன்படவில்லை. எனினும், ஷேர்கோஹ் வின் அளவு கடந்த ஆவேசத்தைக் கண்ணுல் கண்டு, இறுதி யில் ஸுல்தானும் அதற்கு உடன்பட்டார். சில அமீர்களை யும் ஷேர்கோஹ்வுடன் அனுப்பினர். ஷேர்கோஹ்வின் சேனையில் இரண்டாயிரம் குதிரை வீரர்கள் இருந்தார்கள். ஆப்நீல் வழியாக எகிப்து நாட்டின் தென்பாகத்திற்கு ஷேர்கோஹ் வந்து சேர்ந்தார். அதே சமயத்தில் எகிப்து சேனையும், சிலுவைக் கட்சியாரின் சேனையும் அவரைப் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன.

ஷேர்கோஹ் திகில் கொண்டார்! அவரிடம் ஒரு சிறு தொகையுள்ள சேனையே இருந்தது! சொந்த நாடு வெகு தூரத்திலிருந்தது! எனவே, சிப்பாய்கள் தைரியமிழந்துவிட் டால் என்ன செய்வதென்றெண்ணினர். ஆகையால், அவர்களையெல்லாம் ஒன்றுசேர்த்துக் கலந்தாலோசித்தார். அப்பொழுது அவருடன் இருந்தோரில் சிலர் 'நாம் தோல்வி யடைந்து, நமது பகைவர் வெற்றி பெற்றால், நமக்கு அடைக்கல ஸ்தலம் எங்குமில்லையே! இந்த எகிப்து நாட்டி லுள்ள பொதுமக்களும், சிப்பாய்களும், விவசாயிகளும், வியாபாரிகளும், நம்மைத் தேடித்தேடிக் கொலைசெய்து விடுவார்களே! நம்மில் ஒருவரும் தப்ப முடியாதே!" என்று துக்கத்துடன் கூறினர்கள். இதைக் கேட்டு, ஸுல்தான் நூருத்தீனுடைய அடிமைகளில் ஒருவரான ஷாபுத்தீன் பர் கஷ் என்பவர் எழுந்து நின்றார். "கொலைக்கும் சிறைக் கும் அஞ்சி நடுங்கும் மனிதர்கள் ஏன் சேனையில் சேர்ந்து கொண்டார்கள்? மனைவியின் அருகில் வீட்டில் இருந்து கொள்ளலாமே! நாம் போர் புரியாமலும் ஜெய பேரிகை கொட்டாமலும் திரும்பினேமானல், ஸுல்தான் நூருத்தீன் நமது சம்பளங்களை நிறுத்தி விடுவார். ஜாகீர்களை ஜப்தி

செய்து பிடுங்கி கொள்வார். "நீங்கள் முஸ்லிம்களுடைய பணத்தைச் சாப்பிடுகிறீர்கள். ஆனால், முஸ்லிம்களின் பகைவர்களைக் கண்டு அஞ்சி ஓடுகின்றீர்கள். எகிப்து நாட்டை காபிர்களின் கையில் கொடுத்துவிட்டு, நீங்கள் இங்கு ஏன் வந்தீர்கள்?" எனக்கேட்டால், அந்த வினாவிற்கு நம்மிடம் எத்தகைய விடை இருக்கின்றது?" எனக் கேட்டார். ஸலாஹுத்தீனும் அவரை ஆமோதித்துப் பேசினார். மேலும், ஸலாஹுத்தீன், "இப்பொழுது போர் புரிவதையன்றி வேறு வழியில்லை" எனவும் கூறிமுடித்தார். இந்த முடிவே சரியானதென்று ஷேர்கோஹ் கூறிவிட்டுப் பகைவரை எதிர்ப்பதற்காகச் சேனையை அணிவகுத்து நிறுத்தினார். அன்று கடும்போர் நடந்தது. ஷேர்கோஹ் தமது ராணுவத் திறமையையும் அனுபவத்தையும், அறிவையும் வெகு தாராளமாகப் பிரயோகித்தார். உயிரை மதியாமல் வெகு சாமர்த்தியத்துடனும் ஒழுங்குடனும் கடும்போர் புரிந்தார். இரண்டு எதிரிகளின் சேனைகளையும் தோற்கடித்து அவற்றைச் சின்னபின்னமாக்கினார். தமது சேனையின் இடது அணியின் தலைவராக ஷேர்கோஹ் இருந்தார். மத்திய அணிக்கு ஸலாஹுத்தீனைத் தலைவராக நியமித்திருந்தார். இது ஓர் அற்புதமான வெற்றி. தமது இரண்டாயிரம் குதிரை வீரருடன் அவர் எகிப்து நாட்டுச் சேனையையும், சிலுவைக் கட்சியாரின் சேனையையும் ஒரு சில மணி நேரத்தில் தவிடுபொடியாக்கிவிட்ட செய்தியின் இரகசியம் சரித்திராசிரியர்களுக்கே விளங்காத புதிராக இருக்கின்றது.

இந்த வெற்றியின் விளைவாக, ஸயீத் நகரிலிருந்து அலக்சாந்திரியா நகர்வரை ஷேர்கோஹ்வின் அதிகாரத்தில் வந்துவிட்டது. அந்தப் பிரதேசத்தில் ஸலாஹுத்தீனை அதிகாரியாக நியமித்துவிட்டு, வரி வசூலிப்பதற்காக எகிப்தின் தென்பாகத்திற்கு ஷேர்கோஹ் சென்றுவிட்டார்.

இதற்கிடையில், தோல்வியடைந்த கட்சியார், மீண்டும் தங்கள் வன்மையைப் பெருக்கிக்கொண்டு, அலக்சாந்திரியாவைத் தாக்கி, ஸலாஹுத்தீனைச் சூழ்ந்துகொண்டார்

கள். அந்த முற்றுகையில் அளவுகடந்த கஷ்டம் ஏற்பட்டது. உணவுப் பொருள்களும் குறைந்து விட்டன. ஆகையால், தமது ஆயுள் முழுதும் ஸலாஹுத்தீன் இதை மறக்கவேயில்லை. பிறகு, ஷேர்கோஹ் தமது சேனையுடன் அங்கு வந்தார். சமாதானப் பேச்சுகள் ஆரம்ப மாயின. ஷேர் கோஹ் எகிப்து நாட்டைக் காலிசெய்து போய்விட வேண்டுமென்று சிலுவைக்கட்சியார் கூறினார்கள். சிலுவைக் கட்சியாரும் போய்விடவேண்டுமென்று ஷேர்கோஹ் கூறினர். இறுதியில், அலக்சாந்திரியாவை எகிப்தியரிடம் ஒப்படைத்து விட்டு, ஹி. 562 துல் கஃதாவில் அவர் திரும்பிவிட்டார். ஆனால் சிலுவைக்கட்சியார், கெய்ரோ நகரில் ஒரு கொத்துவாலையும் ஒரு குதிரைப் படையையும் விட்டுச்சென்றார்கள். இந்தக் கொத்துவாலும், குதிரைப்படையும் கெய்ரோ மக்கள் மீது பல கொடுமைகள் செய்தார்கள். இவ்வாறு இரண்டு ஆண்டுகள் சென்றன. எகிப்து பலவீனமாகிவிட்டது.

இந்தச் சூழ்நிலையில், சிலுவைக்கட்சியார், ஸிரியாவிலிருந்த தங்கள் அரசர் அமரி என்பவரை எகிப்து நாட்டைக் கைப்பற்றும்படி அழைத்தார்கள். கிறிஸ்தவர்கள் அனைவரும் மகிழ்ச்சியடைந்தார்கள். அமரி அரசர் அஞ்சா நெஞ்சர். கொலை செய்ய பின்வாங்க மாட்டார். எனினும் அவர் சிறந்த ராணுவ ராஜதந்திரி. ஆகையால், அவர், "இப்பொழுது நாம் எகிப்தை வெல்ல விரும்புவது ஒழுங்கல்ல. ஏனென்றால், அந்த நாட்டு மக்கள் நம்மிடம் இலேசில் கெய்ரோ நகரைக் கொடுத்துவிட மாட்டார்கள். நிச்சயமாகப் போர் செய்யத் தயாராவார்கள். ஸுல்தான் நூருத்தீனையும் உதவிக்கு அழைப்பார்கள். அந்த நிலை ஏற்பட்டால், நூருத்தீன் மறுபடியும் ஷேர்கோஹ்வை எகிப்துக்கு அனுப்புவார். அதே சமயத்தில் அவர் ஸிரியாமீது படையெடுப்பார். அந்தச் சூழ்நிலை ஏற்படும்பொழுது நாம் இங்கிருந்து ஓடுவதையன்றி வேறு வழியில்லை" எனக்கூறினர். ஆனால், சிலுவைக் கட்சியிலிருந்த தலைவர்கள் அமரி அரசரின் ஆலோசனையைக் கேட்கவில்லை. "நூருத்தீன் போருக்குத் தயாராகி வருவதற்குள் நாம் எகிப்தை வென்றுவிடலாமே" என்று அலட்சியமாகக் கூறினார்கள்.

இதற்கிடையில், எகிப்து நாட்டுத் தலைவர்களில் சிலர், அமரி அரசருக்கு உதவி செய்வதாக அவருக்கு எழுதினர்கள். எனவே, அவர் தைரியங்கொண்டு புறப்பட்டார். எகிப்திற்கு ஹி. 564 ஸபர் மாதம் வந்தார். சிலுவைக் கட்சியார் பல்பீஸ் நகரைத் தாக்கி, மக்களைக் கொள்ளையடித்துக் கொலை செய்து, பிறகு கெய்ரோ நகருக்கு வந்தார்கள். பல்பீஸ் நகரில் நடந்த கொலைகளைப் பற்றிக் கேள்விப்பட்ட கெய்ரோ மக்கள் அச்சங்கொண்டு கோட்டை வாயிலைத் தாளிட்டு எதிர்த்தார்கள். உடனே, கலீபா ஆஸித் அந்த ஆபத்திலிருந்து தம்மைக் காப்பாற்றும்படி ஸுல்தான் நூருத்தீனுக்கு எழுதினர். மேலும், அவருக்கு இரக்கம் உண்டாவதற்காகத் தமது ராணியின் தலைமயிரையும் அக்கடிதத்தில் வைத்து அனுப்பினர். நூருத்தீனும் உடனே ஆயிரம் குதிரை வீரரை ஷேர்கோஹ்வின் தலைமையில் அனுப்பினர். அவரைக் கண்டவுடன் சிலுவைக் கட்சியார் ஸிரியாவுக்குத் திரும்பிவிட்டார்கள். இந்தக் குழப்பங்களின் விளைவாக, மூவாயிரத்துக்கு அதிகமான பள்ளிவாயில்கள் நிறைந்த புஸ்தாத் போன்ற சிறந்த நகரமும் முற்றிலும் பாழாகி விட்டதாகச் சரித்திராசிரிகள் கூறுகின்றார்கள்.

ஷேர்கோஹ் எகிப்துக்கு வந்த பிறகு அந்த நாட்டுக்கு நிம்மதி கிடைத்தது. அந்த நாட்டு மக்கள் மகிழ்ச்சியுடன் ஷேர்கோஹ்வை எதிர்கொண்டழைத்து, அவரது சிப்பாய்களுக்கு விருந்தளித்தார்கள். கலீபாவும் ஷேர்கோஹ்வுக்கு கௌரவ அங்கிகள் கொடுத்தார். மேலும், அவரது சிப்பாய்களுக்கு இனம்களும் கொடுத்து மகிழ்வித்தார். ஆனால், இதை மந்திரி ஷாவிர் விரும்பவில்லை. ஷேர்கோஹ்வை விருந்துக்கு அழைக்கும் பாவனையில் அவரைக் கொலை செய்துவிடத் திட்டமிட்டார். ஆனல் ஷாவிரின் புதல்வர் காமில் என்பவர் அதைத் தடுத்து, "நீங்கள் அவ்வாறு செய்தால் நானே அவரிடம் சென்று எச்சரித்து விடுவேன்" எனக் கூறினர். அதைக் கேட்ட ஷாவிர், "மகனே! நாம் அவரைக் கொலைசெய்யாவிட்டால், அவர் நம்மைக்

கொன்றுவிடுவார்!" என்று அச்சமூட்டினர். எனினும் காமில் "நாம் கொல்லப்பட்டு விட்டாலும், நம் தாய்நாடு முஸ்லிம்களிடமே இருக்கும். ஆனால், ஷேர்கோஹ் கொல்லப்பட்டால், அன்றே சிலுவைக் கட்சியார் நம் நாட்டைக் கைப்பற்றி விடுவார்கள் என்பது உறுதி. அச்சமயம், ஸுல்தான் நூருத்தீனிடம் சென்று நம்முடைய கலீபா ஆஸித் கெஞ்சினாலும் ஸுல்தான் நூருத்தீன் ஒரு போர் வீரனையேனும் உதவிக்கு அனுப்பமாட்டார்" எனக் கூறினர். தமது மைந்தனுடைய அரிய ஆலோசனையைக் கேட்டு ஷாவிர் மனம்திரும்பி, வேறுவழி யொன்றுமின்றி, தாம் முன்னர் திட்டமிட்டபடி செய்யாமல் இருந்துவிட்டார்.

சிலுவைக் கட்சியாருடன் இவ்வாறு ஷாவிர் சூட்சி செய்து கொண்டிருப்பதாக ஸலாஹுத்தீன் அறிந்தார். உடனே மிகத் துணிவுடன் திடீரென்று அவரைக் கைது செய்துவிட்டார். இச்செய்தியை அறிந்த கலீபா உடனே ஷாவிரைக் கொலைசெய்யும்படி கட்டளையிட்டார். மக்கள் ஷாவிரின் வீட்டைச் சூறையாடினார்கள். இதில் ஷாவிரும் அவர் மகனும் கொல்லப்பட்டார்கள். இந்தச் செய்தி ஷேர் கோஹ்வுக்குத் தெரிந்தது. அவர் மனவருத்தப்பட்டு, "காமில் என் உயிரைக் காப்பாற்றியதற்கு அவர் பிழைத் திருந்தால் நான் அவருக்கு நன்றியறிதலாக ஏதாயினும் நன்மை செய்திருப்பேன்" என்றார். ஷாவிர் இறந்த பிறகு கலீபா ஷேர்கோஹ்வை அழைத்தார். அவருக்கு அமைச்சர் பதவி அளித்தார். ஆனால், அவர் இரண்டு மாதம் ஐந்து நாள் இப்பதவியில் அமர்ந்து, ஹி. 564 ஜமாதுல் ஆகிர் 22ல் இறந்துபோனார்.

அதற்குப்பிறகு, கலீபா ஆஸித் மந்திரிப்பதவியை ஸலாஹுத்தீனுக்கு அளித்தார்.

கலீபாவின் செயலாளர்: ஸலாஹுத்தீனுடைய நற்பண்புகளின் காரணமாக எகிப்து நாட்டு மக்கள் அவரை முழுமனதுடன் நேசித்தார்கள். ஆனால், இதைக் கண்டு ஒரு சிலர் அவர்மீது பொறாமை கொண்டார்கள். அவர்

களில் முதன்மையானவர் கலீபாவின் அரண்மனை நிர்வாகியே. அவர் எகிப்தியத் தலைவர்கள் சிலரையும் தம்முடன் சேர்த்துக்கொண்டு, ஸலாஹுத்தீனை எகிப்திலிருந்து துரத்துவதில் உதவிசெய்யும்படி சிலுவைக்கட்சியாருக்கு எழுதினர். அந்தக் கடிதத்தை ஒரு போர் வீரனுடைய செருப்பில் தைத்து இரகசியமாகக் கொண்டுபோகும் படி அவனுக்குக் கட்டளையிட்டிருந்தார். அந்தப் போர் வீரன் செல்லும்பொழுது செருப்பைத் தன் கையில் வைத்துக்கொண்டு சென்றான். ஸலாஹுத்தீன் கட்சியைச் சேர்ந்த ஒரு மனிதன் அவன்மீது ஐயமுற்று அவனை நிறுத்தி, அந்தக் கடிதத்தையும் பிடுங்கிக் கொண்டான். தீர விசாரித்ததில் இரகசியம் வெளியாயிற்று. எனவே, கலீபாவின் செயலாளர் அச்சங்கொண்டு, அரண்மனையிலிருந்து வெளியே வரவில்லை. ஸலாஹுத்தீனே அவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. அந்தச் செயலாளர் அச்சம் தீர்ந்து வெளியே வர ஆரம்பித்தார். அச்சமயம், ஸலாஹுத்தீன் அவரைப் பிடித்துக் கொலை செய்வித்தார். இதையறிந்த ஷைதிகள் சீற்றங்கொண்டார்கள். கலகம் செய்து ஐம்பதினாயிரம்பேர் கூட்டமாக வந்து ஸலாஹுத்தீனை எதிர்த்தார்கள். அப்பொழுது கலீபா தமது அரண்மனையில் ஒரு ஜன்னலில் உட்கார்ந்து கொண்டு அவர்களுக்கு உதவி செய்ய ஆரம்பித்தார். ஸலாஹுத்தீன் அதை அறிந்து, அந்த ஜன்னலுக்கு நெருப்பு வைத்து, அதை நோக்கித் தீப்பந்தங்கள் வீசும்படியாக தமது போர் வீரர்களுக்குக் கட்டளையிட்டார். கலீபா அங்கிருந்து ஓடிப்போனார். ஷைதிகள் மனந்தளர்ந்து விட்டார்கள். ஸலாஹுத்தீனுடைய சகோதரர் ஷம்ஸுத்தெளலாஹ் அவர்கள் அனைவரையும் தோற்கடித்து அழித்துவிட்டார். அன்றோடு அவர்களுடைய ஆதிக்கம் அழிந்தது. கலீபா ஆஜிதும் உதவியற்றவரானார். மக்களும் அவரை மறந்துவிட்டார்கள். அதில் ஒரு வியப்பான விஷயம் என்னவென்றால், பாத்திமீ கலீபாக்களுக்காக எகிப்தை வென்ற அடிமையின் பெயரும் ஜவ்ஹர். அதைப் போன்றே எகிப்து நாடு பாத்திமீகளின் அதிகாரத்திலிருந்து

நழுவி விட்டதற்குக் காரணமாக இருந்த கலீபாவின் செயலாளர் பெயரும் ஜவ்ஹர்.

அதற்குப் பிறகு ஸலாஹுத்தீனுக்கு அச்சமில்லாத நிலை ஏற்பட்டது. எனவே, அவர் நிம்மதியாக அரசியல் நிர்வாகத்தில் கவனஞ் செலுத்தத் தொடங்கினர். ஒருபுறம் ஸுல்தான் நூருத்தீனும், மற்றொருபுறம் ஸலாஹுத்தீனும் இருந்தமையால், இவ்விருவருக்கிடையில் இருந்த சிலுவைக் கட்சியார் அச்சங்கொண்டார்கள். அவர்களுடைய அரசர் அமரி ஹி. 565-இல் ஒரு பெரும்படையுடன் எகிப்தின் மீது படையெடுத்து தம்யாத் நகரை முற்றுகையிட்டார். ஆனால் அதில் !அவர் அதிக நஷ்டமடைந்து திரும்பிவிட்டார். அதற்கடுத்த ஆண்டில் ஸலாஹுத்தீன் சிலுவைக் கட்சியாரைத் தாக்கி அவர்களைத் தோற்கடித்து அஸ்கலான், ரம்லா, கஸா ஆகிய நகரங்களை வென்றார். பிறகு, எகிப்துக்குத் திரும்பி, கப்பல்களைத் தயாரித்துத் தரை மார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும் சேனைகளைக் கொண்டு சென்று ஏலா நகரைக் கைப்பற்றிக்கொண்டார்.

அப்பாஸி கலீபாவின் குத்பா: ஸலாஹுத்தீனுடைய ஆதிக்கம் எகிப்து நாட்டில் நிரந்தரமாகி விட்டது. கலீபாவின் அரண்மனை நிர்வாகமும் அவர் கையில் வந்துவிட்டது. பிறகு, அவர் கராகோஷ் என்பவரை அரண்மனைச் செயலாளராக நியமித்தார். கலீபா ஆஸித் மறைமுகமாகக் காலங் கழித்தார். அச்சமயம், எகிப்து நாட்டுப் பள்ளிவாயில்களில் பாத்திமீ கலீபாக்களின் பெயர் குத்பா உபதேசத்தில் ஓதப்பட்டு வந்தது. ஆனால், அவ்வாறு செய்வதை நிறுத்திவிட்டு, அப்பாஸி கலீபாக்களின் பெயர் ஓதப்படவேண்டுமென்று ஸுல்தான் நூருத்தீன் கட்டளையிட்டார். ஆனால், பாத்திமீ கலீபாக்கள் காலத்தில் அநேகர் ஷியாக்களாகிவிட்டதால், அவ்வாறு கட்டளையிட்டால் காஹிரு மக்கள் தம்மை எதிர்ப்பார்கள் என்று ஸலாஹுத்தீன் அஞ்சினர். ஆனால், அமீர் ஆலம் என்னும் ஒரு கீழ் நாட்டார், ஹி. 567 முஹிர்ரம் மாதம் முதலாம் வெள்ளிக்கிழமை குத்பாவில் காஹிரு நகா

ஜாமிஃ பள்ளிவாயிலில் வெகு தைரியத்துடன் அப்பாஸி கலீபா முஸ்தஸி பில்லாஹ் பெயரை குத்பாவில் ஓதிவிட்டார். ஒருவரும் அவரை எதிர்க்கவில்லை, அன்றுமுதல் பாத்திமீ குத்பா நிறுத்தப்பட்டது. எகிப்திலும் ஸிரியாவிலும் அப்பாஸி குத்பாவே ஓதப்பட்டு வந்தது.

இந்தச் செய்தி பக்தாதுக்கு எட்டியபொழுது அங்கு சந்தோஷ ஆரவாரங்கள் செய்யப்பட்டன. பெரிய கொண் டாட்டங்கள் நடந்தன. ஸுல்தான் நூருத்தீனுக்கு அப்பாஸி கலீபா, எகிப்து, ஸிரியா நாடுகளின் அதிகாரப் பத்திரம் (பர்மான்) அனுப்பினார். ஸலாஹுத்தீனுக்கு அங்கி களும் கருப்பு அப்பாஸிக் கொடியும் அனுப்பினார். அச்சமயம், பாத்திமீ கலீபா ஆஜித் மரணப்படுக்கையில் இருந்தார். அந்த நிலையில் அவருக்குத் துக்கம் தரும் இச்செய்தியைத் தெரிவிக்க ஸுலாஹுத்தீன் விரும்பவில்லை. எனவே, ஆஜித் இவ்விஷயத்தைத் தெரிந்துகொள்ளாமலே ஆஷுரா தினம் காலஞ் சென்றுவிட்டார். அவரது மரணத்துடன் பாத்திமீ கிலாபத்தும் முடிவடைந்துவிட்டது. கலீபா ஆஸித் ஷியா பிரிவில் அதிகப்பற்றுள்ளவர். ஸுன்னிகளின் இரத்தம் சிந்துவதில் பின்வாங்கமாட்டார்.

பாத்திமீ கலீபாக்கள்

உமய்யாக்களைப் போன்றே பாத்திமீகளின் கலீபாக்கள் பதினன்கு பேர். அவர்களில், மஹ்தீ, காயிம், மன்ஸுர் இம் மூவரும் இப்ரிகியாவில் காலஞ் சென்றூர்கள். மீதியா யிருந்த பதினென்று பேர் எகிப்தில் இறந்தார்கள். ஆனல் பாத்திமிகளின் ஆட்சிக் காலம் உமய்யாக்களின் காலத்திலும் மூன்று பங்கு அதிகமாகும். அதாவது, ஹி, 295 முதல் ஹி. 567 வரை இருநூற்றெழுபத்திரண்டு ஆண்டுகள் பாத்திமீகள் ஆட்சிசெய்தார்கள்.

சரித்திராசிரியர்கள் பொதுவாக பாத்திமீகளைக் குறித்து சிறந்த கருத்தைத் தெரிவிக்கவில்லை. ஏனென்ருல், அரசியல் நிர்வாகத்திலும் உலக விஷயங்களிலும் அவர்கள் பங்கெடுத்

துக்கொள்ளவில்லை. அதிகாரத்தை மந்திரிகளிடம் விட்டு விட்டு, அரண்மனையில் வீண் பொழுதுபோக்கில் தங்கள் அருமையான காலத்தை வீணாக்கினார்கள். எனவே, இவர்கள் காலத்தில் எகிப்துநாட்டு நிர்வாகம் இழிநிலை அடைந்துவிட்டது. கலீபா முஸ்தன்ஸிர் காலத்திலிருந்து அடிமைகளின் ஆதிக்கம் வலுவடைந்து விட்டது. எனவே, பாத்திமீகள் பெயரளவில்தான் கலீபாக்களாக இருந்தார்கள். ஸிஸிலி தீவு இழக்கப்பட்டது. சிலுவைக் கட்சியார் வந்து ஸிரியாவைக் கைப்பற்றினார்கள். மேலும், அவர்களுடைய ஆதிக்கம் அங்கு நிரந்தரமாகிவிட்டது. ரோஜர் என்னும் ஸிஸிலி அரசர் இரண்டு தடவை எகிப்தின் மீது படையெடுத்து வந்து, அங்கு பற்பல விதமான அட்டூழியங்கள் செய்தார். தமது நாட்டில் கலகம் உண்டாகியதால் அவர் உடனே ஸிஸிலிக்குச் சென்றுவிட்டார். இன்றேல் அவர் ஒருகால் எகிப்துநாடு முழுமையும் கைப்பற்றி இருக்கலாம்.

அப்பாஸி கிலாபத்தைப் போன்றே, பாத்திமீகளின் கிலாபத் நபிபெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லமவர்களுடைய குடும்பத்தார் என்று உரிமை கொண்டாடியே நிறுவப்பட்டது. மேலும், உபைதுஸ்லாஹ் என்பவர், தாம் ஹஸ்ரத் பாத்திமா நாயகி, ஹஸ்ரத் அலீ(ரலி) இவ்விருவரின் சந்ததியாகையால், தாமே மஹதீ எனவும், இமாம் எனவும் பிரச்சாரஞ் செய்தார். எனவே, அவர் மிகவும் பற்றுள்ள ஷியா ஆவர். அவரைப் போன்றே, பாத்திமீ கலீபாக்கள் அனைவரும் ஷியா பற்றுள்ளவராக இருந்தார்கள். மேலும், பொதுமக்களிடம் இந்தக் கொள்கையைத் தான் பிரச்சாரம் செய்து வந்தார்கள்.

இவர்கள் எகிப்து நாட்டை வென்ற பிறகு, ஹஸ்ரத் பாத்திமா நாயகியின் குடும்பத்தைச் சேர்ந்த பாத்திமீ இமாம்களின் விசுவாசிக்கும் கொள்கையையே சிறந்ததாகக் கொண்டிருந்த இஸ்மாயீலி கோஷ்டியாரின் பிரசாரத்தைச் செய்தார்கள். அதற்காக, ஒரு நிறுவனத்தையும் ஏற்படுத்

தினர்கள். அந்த ஸ்தாபனத்தின் தலைவர் தாயி-உத்-துஆத் (பிரதமப் பிரசாரகர்) என்னும் பட்டம் பெற்றவர். அவரது பதவி பிரதம நீதிபதியின் பதவியிலும் உயர்ந்ததாகக் கருதப் பட்டது. கலீபா முஸ்தன்ஸிர் உடைய தனி அன்புக்குரிய மந்திரி காஜி யாஸுரீ என்பவர் முதலில் இந்தப் பதவியில் இருந்தார். இந்த மத்திய ஸ்தானத்திலிருந்து, பிரச்சாரத் தின் கொள்கைகளும் இமாமத்தின் இரகசியங்களும் கற்பிக் கப்பட்டன. இக்கொள்கைகளைப் பொதுமக்களுக்கு இரகசிய மாகக் கற்பிக்கும்படி பிரச்சாரகர்கள் எட்டுத்திக்கிலும் அனுப் பப்பட்டார்கள். ஷியா பிரிவின் இருப்பிடமான ஈரான், குராஸான் ஆகிய பிரதேசங்கள்மீது பாத்திமீ கலீபாக்கள் கண்ணேட்டமாயிருந்தார்கள். ஆகையால், அந்த நாடு களுக்கு அளவுகடந்த பிரச்சாரகர்கள் அனுப்பப்பட்டார்கள். இதன் விளைவாக ஸல்மியாவின் சிறந்ததொரு பாத்தினி கோஷ்டி உண்டாக்கப்பட்டது. இந்த பாத்தினீகள் ஹஷீஷ் என்னும் கஞ்சாவை உபயோகித்தமையால் ஹஷீஷீன் என்று அழைக்கப்பட்டார்கள். இராக் மாகாணத்தில் கராமிதாக்கள் மிகவும் செல்வாக்கடைந்திருந்தார்கள். இவ்விரு கோஷ்டி யாரின் பெருக்கத்தால் கலகங்களும், கொலைகளும், புரட்சி களும் ஏற்பட்டு அப்பாஸிகளின் நாட்டிலும், சகல கீழ்நாடு களிலும் மக்களது வாழ்க்கையில் நிம்மதியில்லாமல் போய் விட்டது.

பாத்திமீகளின் பிரச்சாரம் வடக்கில் இஸ்பஹான், மர்வ் வரையில் வெகுதூரம் சென்றுவிட்டது. இந்தக் கோஷ்டி யின் பிரச்சரர சம்பந்தமான அறிவையும் போதனை முறை யையும் எகிப்து நாட்டில் பயின்றுவிட்டு, கலீபா முன்தன்ஸி ரைச் சந்தித்து, அதற்குப் பிறகு, கீழ்நாடுகளுக்குச் சென்ற ஹஸன் பின் ஸபாஹ் என்பவர் கஸ்வீன் கடற்கரையோரத் தில், கஸ்பியன் கடலுக்கும் ஜீலானுக்குமிடையிலுள்ள அல்மூத் என்னும் கோட்டையைத் தனது மத்திய ஸ்தான மாக ஏற்படுத்திக்கொண்டார். இக்கோஷ்டியார் இரவு பகலாகச் சூழ்ச்சி செய்து, கலீபாக்களையும், ஸுல்தான்களை

யும், சிற்றரசர்களையும், மந்திரிகளையும், ஆலிம்களையும் கொலைசெய்து கொண்டிருந்தார்கள். இதன் விளைவாகக் கீழ்நாடுகள் அனைத்தும் வன்மை இழந்து குற்றுயிராகக் கிடந்தன. அப்பாஸி கலீபாக்களின் தாழ்ந்த நிலையைக் கண்டு அவர்களின் அடிமையாயிருந்த பஸாஸீரி என்பவர் பக்தாத் நகரில் பாத்திமீ குத்பாவை ஆரம்பித்தபொழுது அந்த நகரைத் தலைநகராகக் கொண்ட அப்பாஸி கலீபாக் கள் அஃதற்கு எதிராக ஒன்றும் செய்யமுடியவில்லை. அச் சமயம் ஸல்ஜூகி ஸுல்தான்கள் உதவி செய்யாதிருந்தால் கீழ்நாடுகள் அனைத்தும் பாத்திமீ ஆட்சியில் வந்திருக்கும்.

ஸுன்னி பிரிவைச் சேர்ந்த ஆலிம்கள் இந்தப் பிரச்சா ரத்தை எதிர்த்து வந்தார்கள். ஆகையால், அவர்கள் பாத்திமீ பிரச்சாரகர்களால் துன்புறுத்தப்பட்டார்கள், கொலை செய்யப்பட்டார்கள். இவ்வாறு, எதிர்த்ததற்காக மூன்றும் கலீபா மன்ஸூர் தமது சொந்த சகோதரர் அபூ யஜீத் முகலலத் என்பவரைத் தூக்கிலிட்டார். கலீபா முயிஸ் அநேகரை அந்தரங்கமாகக் கொலை செய்து விட்டார். ஸிரியாவில் மார்க்க நிபுணராயிருந்த இப்னு நாப்லஸீ என் பவரை ஒரு கூட்டில் அடைத்துக்கொண்டுவரும்படி கட்டளை யிட்டு, அவரை உயிருடன் தோலுரித்து விட்டார் மேலும் சங்கைக்குரிய நாயகத்தோழர்களின் மீது, பகிரங்கமாக வசைமொழி எழுதிக் கற்களில் தீட்டிப் பள்ளிவாயில்களிலும் இதர இடங்களிலும் வைக்கும்படி கலீபா ஹாகிம் கட்டளை யிட்டார்.

பாத்திமீ அரசாங்கச் சிற்றரசர்களும் கவர்னர்களும் இந்தக் கொடிய முறையையே பின்பற்றி வந்தார்கள். ஸிரியா கவர்னர் ஒரு சமயம் மேல்நாட்டு ஸுன்னி ஒரு வரை வீதிகளில் சுற்றுவித்துத் தூக்கிலிட்டு விட்டார். இதையன்றி, ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரைப் புகழ்ந்தோருக்கு இம்மாதிரியான தண்டனையே கொடுக்கப்படுமென்று விளம்பரப்படுத்தினர். வாஸித் நகரைச் சேர்ந்த ஒரு பெரும் பக்திமான் அபுல்

காஸிம் என்பவர் எருஸலம் நகரில் பாங்கு சொன்னபொழுது "ஹய்யா அலல் கைரில் அமல்!" என்று சொல்லாமல் "ஹய்யா அலல் பலாஹ்!" என்று கூறியதற்காக அங்குள்ள கவர்னர் வந்து அந்த மகானுடைய நாவை அறுத்து விட்டார்.

பாத்திமீகளின் நாஸ்திகம், துர்ச் செயல்கள், கர்வம், கொடுஞ்செயல்கள் முதலியவற்றைக் குறித்து பெரிய உலமாக்கள் விரிவான புத்தகங்கள் எழுதி வைத்திருக்கின்ருர்கள். அவற்றுள் காஜி அபூ பக்ர் பாகலானீ எழுதிய கஷ்புல அஸ்ரார், அப்துல் ஜப்பார் பஸரீ முஃதஸிலி என்பவர் எழுதிய தஸ்பியத்துந் நுபூவத், அபூ ஷாமா, ஹாபிஸ் அபுல் காஸிம் ஆகியோர் எழுதிய சரித்திரங்கள் முக்கியமானவை.

அப்பாஸி கலீபாக்களும் ஒரு வெளியீடு தயாரித்து, அதில் அக்காலத்திய மேன்மக்களுடையவும் ஆலிம்களுடைய வும் சாட்சியங்களைச் சேர்த்து, பாத்திமீ கலீபாக்கள் உண்மையில் ஹஸ்ரத் பாத்திமா நாயகியின் குடும்பத்தா ரல்லர் எனவும், ஆனல் ஒரு தாழ்ந்த நாஸ்திக அக்கினி வணக்கத்தானன மைமூன் பின் கதாஜ் என்பவனுடைய சந்ததியில் தோன்றியோர் எனவும், உபைதுல்லாஹ் மஹ்தீயின் பெயர் ஸயீத எனவும், அவரது தகப்பனர் ஸல்மியாவில் கொல்வேலை செய்து கொண்டிருந்தார் எனவும், இந்த ஸயீத் பிறகு மக்ரிப் நாட்டிற்குச் சென்று உபைதுல்லாஹ் என்று பெயரை மாற்றி வைத்துக்கொண் டார் எனவும், அதற்குப் பிறகே தாம் அல்வீ எனவும், மஹதீ எனவும் உரிமைகொண்டாடினர் எனவும் வெளியிட்டார்கள்.

பாத்திமீ கலீபாக்களும் தங்களை அப்பாஸி கலீபாக் களின் எதிரிகள் என்று நினைத்தார்கள். ஆகையால் தர்பார் அலங்காரங்களிலும், ஆடை ஆபரணங்களிலும் ஐசுவரியங் களிலும், இதர சிறப்புக்களிலும் அப்பாஸி கலீபாக்களைவிட அதிகமாகச் சிறப்புற்றுக் காணப்படவேண்டுமென்று முயற்சி செய்து வந்தார்கள்.

எகிப்து நாட்டில் ஏராளமான ஐசுவரியம் இருந்தது. ஆகையால், அம்முயற்சியில் அவர்கள் ஒருவாறு வெற்றி பெற்ருர்கள். எனவே, கலீபா ஆஸித் உடைய அரண் மனையை ஸலாஹுத்தீன் கைப்பற்றிய பொழுது கணக்கில்லாத ஆயுதங்களும், சாமான்களும், வைரக் கற்களும், பொற்குவியல்களும் ரொக்கப் பணமும் கிடைத்தன. இதையன்றி, அதில் இரண்டு இலட்சம் புத்தகங்கள் இருந்தன. இவற்றில் பெரும்பாலானவை இப்பொழுது ஜர்மனியில் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

அத்தியாயம் 9

அய்யூபீ அரசாங்கம்

ஹி. 567–648 கி. பி. 1171–1251

கலீபாவின் மாளிகையை ஸலாஹுத்தீன் கைப்பற்றினர். அரண்மனைச் சீமாட்டிகள் வசிப்பதற்காக ஒரு தனி மாளிகையைக் கொடுத்துவிட்டு, பாத்திமீ குடும்பத்தாரைக் காவலில் வைத்துவிட்டார். பிறகு, ராப்ஜி, ஷியா பிரிவுகளை நீக்குவதிலும், ஷாபியீ மார்க்கத்தைப் பரப்புவதிலும் தீவிர முயற்சி செய்தார். பாங்கு சொல்லும் பொழுது, "ஹய்யா அலல் அமல்!" என்பதற்குப் பதிலாக, "ஹய்யா அலல் பலாஹ்!" என்று குரல் எழும்பும்படி கட்டளையிட்டார். ஜாமிஃ அஸ்ஹர் பல்கலைக் கழகத்தில், இஸ்மாயீலிகளின் கல்வித்திட்டத்தை அகற்றிவிட்டு, ஸுன்னத் வல் ஜமாஅத் உடைய—அஃதாவது, ஹனபீ, ஷாபியீ, ஹம்பலி, மாலிகி பிரிவுகளைச் சேர்ந்த போதகாசிரியர்களை அங்கு பாடங் கற்பிக்க நியமித்தார். படிப்படியாக இவ்வாறு இஸ்மாயீலிக் கொள்கைகளை எகிப்து நாட்டிலிருந்து அடியோடு அகற்றி விட்டார். பாத்திமீகள் காலத்தில் விதிக்கப்பட்டிருந்த நேர்மையற்ற தீர்வைகளை நீக்கினர். தீர்வை கொடுக்கச் சக்தியற்ரேரை மன்னித்தார். இத்தகைய செயல்களால் நாட்டு நிலையைச் சீர்திருத்திச் செம்மையாக்கினர். மக்கள்

நலத்திலும், வேளாண்மையின் அபிவிருத்தியிலும் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

தாயி யுத் துஆத் என்னும் பிரதமப் பிரசாரகரும் அம்மாரா எமனீயும் பாத்திமீகளை ஆதரித்தார்கள். அவர்கள் பெருஞ் சதிசெய்து ஸலாஹுத்தீனைக் கொன்றுவிட முயன்றார்கள். ஆயினும், இரகசியம் வெளியாகிவிட்டது. எனவே, ஸலாஹுத்தீன் அந்தத் தலைவர்களைத் தூக்கிலிட்டு பாத்திமீகளைக் கடுங்காவலில் வைத்தார்.

ஸுல்தான் நூருத்தீன் மஹ்மூத் ஜங்கீ: எகிப்து நாட்டிலே ஸுல்தான் நூருத்தீன் மஹ்மூத் ஜங்கீயின் பிரதிநிதியாக ஸலாஹுத்தீன் பணியாற்றிக்கொண்டிருந்தார். ஆயினும், அவர் சுவாதீனமடைய விருப்பங்கொண்டார். படிப்படியாக, அந்த எண்ணத்தை நிறைவேற்ற முயற்சி செய்துகொண்டு சேனையையும் செல்வத்தையும் பெருக்கிக்கொண்டே இருந்தார். முதலில் தமது சகோதரரை அஸ்வான் பிரதேச கவர்னராக நியமித்தார். பிறகு, நூபியாவையும் அதற்கு அடுத்த ஆண்டில் எமன் நாட்டையும் கைப்பற்றிக் கொண்டார்.

இதையறிந்த நூருத்தீன் அவரைத் தம்மிடம் அழைத்துக்கொள்ள விரும்பினார். தாம் சிலுவைக் கட்சியாரைத் தாக்க வருவதாகவும் அச்சமயம் ஸலாஹுத்தீன் எகிப்திலிருந்து சேனைகளைக் கொண்டு வந்து, கர்க் என்னுமிடத்தில் தம்முடன் சேர்ந்துகொள்ள வேண்டுமெனவும் எழுதினார். ஆனால், ஸலாஹுத்தீன் போகவில்லை. சில அவசர வேலைகள் இருப்பதால், எகிப்திலிருந்து வரமுடியாதென்று எழுதினார். ஆகவே, நூருத்தீனுக்கு முழுமையாகச் சந்தேகம் வந்துவிட்டது. "நீர் வரவேண்டும்! நீர் வராவிட்டால் நானே வருவேன்!" என்று எழுதினார். உடனே, ஸலாஹுத்தீன் தமது நண்பர்களிடம் கலந்தாலோசித்தார். அவரது சகோதரரின் புதல்வரான தகீயுத்தீன் என்பவர், "அவர் வரட்டும்! நாம் எதிர்ப்போம்!" என்றார்.

நஜ்முத்தீன் அய்யூப்: இவ்வாறு கூட்டப்பட்ட ஆலோசனைக் குழுவில் ஸலாஹுத்தீனுடைய தந்தை நஜ்முத்தீனும் இருந்தார். அவர், "இது பெரும் பிழையான ஆலோசனை. நாம் அனைவரும் நமது ஸுல்தான் நூருத்தீனுடைய விசுவாசமுள்ள வேலையாட்களே. அவர் நமக்கு எதிரில் வந்துவிட்டால், நாம் குதிரையிலிருந்து இறங்கி ஸலாம் செய்யாமலிருக்க முடியுமா? ஆகையால், அவருக்கு ஒரு கடிதம் எழுத வேண்டும். அதில், "தாங்கள் ஏன் கஷ்டப்பட்டு இங்கு வரவேண்டும்? தாங்கள் என்னைக் கைதுசெய்ய விரும்பினால், ஒரு காலாட்படை சேவகனை அனுப்புங்கள். அவன் என் கழுத்தில் கயிற்றைச் சுற்றி என்னை இழுத்துக்கொண்டு போவான். தங்களுக்கு விரோதமாக இங்கு எவர் நாவசைக்க முடியும்?" என்று எழுதுவதே சாலச்சிறந்த செயலாகும்" என்று ஆலோசனை கூறினர்.

பிறகு, அங்கு வந்திருந்த அமீர்கள் அனைவரும் சென்றுவிட்டார்கள். அதற்குப் பின்னர் நஜ்முத்தீன் தமது புத்திரர் ஸலாஹுத்தீனை அழைத்து அவரிடம், "ஸுல்தான் நூருத்தீனுக்கு விரோதமாகக் கலகம் செய்தல் மிகவும் மதியீனமாகும். ஏனென்றால், நாம் அவ்வாறு செய்தோமானால், அவர் தமது முழுவன்மையுடன் படையெடுத்து வருவார், அந்த நிலையில் நாம் அவரை எதிர்க்க முடியாது. நாம் அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்தால், அவர் நம்மை மறந்து, வேறு வேலைகளில் மனஞ் செலுத்திவிடுவார். அதற்குப் பிறகு, விதி தன் வேலையைச் செய்துகொண்டிருக்கும். அவர் இங்கிருந்து ஒரு கடுகளவு பூமியும் பெற்றுக்கொள்ள விரும்புவாராயின், நானே முதலில் போருக்குச் செல்வேன். ஆனால், விஷத்திற்குப் பிரதியாகத் தேனைப் பிரயோகிப்பதே மேலான முறையாகும்" என்றார்.

ஸலாஹுத்தீன் தமது தந்தையின் நற்புத்தியைக் கேட்டார். அவ்வாறே செய்தார். ஸுல்தான் நூருத்தீனுக்கு அவ்வாறே கடிதம் எழுதினர். அந்தக் கடிதத்தைக் கண்டு நூருத்தீன் திருப்தி அடைந்துவிட்டார். இன்னும் சில

காலம் சென்று, ஹி. 569 ஷவ்வால் மாதம் டமஸ்கஸ் நகரில் தமது அறுபதாம் வயதில் நூருத்தீன் இறந்துபோனூர்.

நூருத்தீன்—பண்பு நலன்கள்: ஸுல்தான் நூருத்தீன் முதலில் ஹலப் மாகாண கவர்னராக இருந்தார். ஆனுல் சிலுவைப் போர்களில் அவர் அதிசயமான வெற்றிகள் பெற்றூர். அதனுல், அவரது புகழ் பொங்கி எழுந்தது. அவரது வீரத்தின் பேச்சுக்கள் எங்கும் எதிரொலித்தன. அவரது அரசாங்கமும் விரிவடைந்தது. எகிப்து, ஸிரியா, எமன் ஆகிய நாடுகளில் அவரது ஆதிக்கம் ஏற்பட்டு, அவர் பெயரால் குத்பா ஓதப்பட்டது. அவர் சிறந்த பக்திமான். மேலான கல்விமான். கற்ருேரை ஆதரிப்பவர். அரசாங்கப் பொக்கிஷத்திலிருந்து தமது செலவுக்காக, எப்பொழுதாயினும் ஒரு பைசாவும் எடுக்க மாட்டார். தமது சொந்த முயற்சியால் சம்பாதித்த பணத்திலிருந்து விலைக்கு வாங்கிய ஒரு சொத்திலிருந்து குடும்பச் செலவு செய்து வந்தார்.

அவர் ஆலிம்களையும் மேன்மக்களையும் கண்ணியப்படுத்தும் குணமுள்ளவர். எங்கும் பாடசாலைகளும், பள்ளிவாயில்களும், மருத்துவ மன்றங்களும், சத்திரங்களும் கட்டுவித்து அவற்றின் பராமரிப்பிற்காக ஏராளமான சொத்துக்களை இனுமாகக் கொடுத்தார். ஸிரியாவில் அநேக நகரங்களில் கோட்டை மதில்கள் கட்டி, பறங்கிகளின் எதிர்ப்பிலிருந்து அவற்றைக் காப்பாற்றினூர். ஜிஹாத் என்னும் மார்க்க யுத்தத்தில் தாமும் சாதாரண சிப்பாயைப் போன்று இரண்டிரண்டு வில்லுடன் போர் புரிவார். ஒரு சமயம், குத்தூப் மஸலி என்னும் மார்க்க நிபுணர், நீங்கள் உங்கள் உயிரை ஆபத்திற்கு இலக்காக்குகின்றீர்கள். ஏனெனில், ஏதாவது விபத்து நேர்ந்துவிட்டால், அதற்குப் பிறகு முஸ்லிம்களுக்குப் பேராபத்து விளைந்துவிடும்'' என்று கூறினூர். அதைக் கேட்ட ஸுல்தான், "மஹ்மூதுக்கு முந்திய காலத்தில் முஸ்லிம்களைக் காப்பாற்றியது யார்? இந்த வேலை ஆண்டவனைச் சேர்ந்தது'' என்று மறுமொழி கூறினூர். இரவில் வெகு நேரம் பிரார்த்தனை செய்து

கொண்டிருப்பார். நியாயம் செய்வதில் அவருக்கு இணையில்லை. சிறியோர், பெரியோர் அனைவரையும் சற்றேனும் வேறுபாடின்றி நடத்துவர்.

அகன்ற நெற்றியும், வசீகரமுள்ள வடிவமும், பாதம் நிறமுள்ள கண்களும் உள்ளவர். இவர் முகத்தில் கம்பீரமே நிறைந்திருந்தது. அதைக் கண்டோர் அச்சங் கொள்வார்கள்.

இவர் காலத்தில், கிறிஸ்தவப் பாதிரிகள் இருவர் மாறுவேடம் பூண்டு மதீனாவுக்கு வந்து, நபிபெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லமவர்களின் திருமேனியை எடுத்துக்கொண்டுபோக முயன்றார்கள். இந்தச் செய்தி அவருக்கு நபிபெருமானாரவர்கள் கனவில் தெரிவித்தார்கள். கனவில் காட்டப்பட்ட அடையாளமுள்ள மனிதர்களை அவர் மதீனா சென்று கண்டுபிடித்தார்.

இஸ்லாமிய ஸுல்தான்கள் இவரே தலைசிறந்தோர் என்று சரித்திராசிரியர்கள் முடிவு செய்திருக்கின்றார்கள். அவரது அரசாங்கம் பரந்து விரிந்திருந்தது. அவர் பெரும்பாலும் சிலுவைக் கட்சியாருடன் போர்புரிந்து கொண்டிருந்தமையால் ஓரிடத்திலிருந்து வேறிடத்திற்குப் புருக்கள் மூலமாகத் தபால் அனுப்புவித்தார். இந்த வேலைக்காகப் புருக்கள் பயிற்சியளிக்கப்பட்டன. இவரது ராணுவத் திறமை, அரசியல் தந்திரம், வீரச்செயல்கள், அறிவுத்திறன் முதலியவற்றைக் குறித்து பல்வேறு அறிஞர்கள் அநேக புத்தகங்கள் எழுதியுள்ளார்கள்.

ஸுல்தான் ஸலாஹுத்தீன்

ஹி. 532—589 கி. பி. 1138—1193

ஸுல்தான் நூருத்தீன் மஹ்மூத் ஜங்கீ காலஞ்சென்ற பிறகு எகிப்தும் ஸிரியாவும் ஸலாஹுத்தீனுடைய ஆதிக்கத்தில் வந்துவிட்டன. ஹி. 571இல் ஸுல்தான் நூருத்தீனுடைய புதல்வர் இஸ்மாயீல் என்பவரிடமிருந்த ஹலப், ரிஹா, சஞ்சார், மவ்லிஸ் முதலிய பிரதேசங்களும் அவ

ருக்கே கிடைத்துவிட்டன. அந்த நிலையில் அவர் ஸுல்தான் என்னும் பட்டப் பெயருடன் விளங்கினர். பக்தாதிலிருந்த அப்பாஸி கலீபா முஸ்தஸீ என்பவர் அவருக்கு, முயிஸ் அமீருல் முஃமினீன் என்னும் பட்டம் அளித்தார். பிறகு, நாஸிருத் தீனில்லாஹ், கலீபா ஆனபொழுது, மலிக் நாஸிர் என்னும் பட்டம் அளித்தார். ஆனல், ஸலாஹுத்தீன் அவற்றை ஏற்றுக்கொள்ளாமல், கலீபாவின் பட்டங்களைத் தம்மைப் போன்ற ஊழியர்கள் மேற்கொள்ளல் மரியாதைக் குறைவாகும் என்றெண்ணினர்.

ஸலாஹுத்தீன் ஒரு சமயம் ஹலப் பிரதேசத்திற்குச் சென்றிருந்தபொழுது சிலுவைக் கட்சியார் அதை ஒரு நல்ல வாய்ப்பெனக் கருதி ஸிரியாவின் மேற்குப் பகுதியிலுள்ள நகரங்களைக் கொள்ளையடிக்கவும் அழிக்கவும் ஆரம்பித்தார்கள். அவரது சகோதரர் தூரான ஷாஹ் ஒரு சேனையுடன் சென்றுர். எனினும், எதிரிகளை எதிர்க்கும் வன்மை அவரிடம் இல்லை. இதையறிந்த ஸலாஹுத்தீன் தம்மிடமிருந்த எகிப்து சேனை யொன்றை அவரது உதவிக்காக அனுப்பினர். அது சென்று சிலுவைக் கட்சியாரைத் தோற்கடித்தது.

ஸைபுத்தீன் காஜி, மலிக் ஸாலிஹ் இவ்விருவருடனும் ஸுல்தான் ஸலாஹுத்தீன் உடன்படிக்கை செய்துவிட்டுத் திரும்பி வரும்பொழுது, அப்ராஸ் என்னும் நகரில் அவரைக் கொலைசெய்ய வந்த இரண்டு பாத்தினீகள் பிடிக்கப்பட்டார்கள். அந்தக் கொலைபாதகர்களை ஸுல்தான் தமது கையால் கொன்றுவிட்டார்.

மந்திரி பஹாவுத்தீன் சிறந்த அறிவுடனும் ஆற்றலுடனும் தமது பணியைச் செய்தார். பாத்திமீ அரசாங்கத்தில் ஏற்பட்டிருந்த தீமைகளை நீக்கியதோடு, பல சீர்திருத்தங்களையும் செய்தார். கால்வாய்களும், பாலங்களும் மராமத்துச் செய்தார். நெடுஞ்சாலைகளைத் தயாரித்தார். வியாபாரத்தையும், விவசாயத்தையும் விருத்தி செய்தார். எனவே, மக்களுடைய வாழ்க்கை நலம் பெற்றது. அரசாங்க கஜானுவும்

நிறைந்து விட்டது. இத்தகைய நிர்வாகத் திறமையுள்ள மந்திரியின் செயல்களால் ஸுல்தான் ஸலாஹுத்தீன் அளவிலா ஆனந்த மடைந்தார்.

ஹி. 574-இல் சிலுவைக் கட்சியாருடன் ஸுல்தான் ஸலாஹுத்தீன் புனித மார்க்கப் போர்—ஜிஹாத் செய்தார். அதிலிருந்து தொடர்ச்சியாகப் பதினான்கு ஆண்டுகள்வரை போர் புரிந்தார். ஸிரியா நாட்டின் ஒவ்வொரு நகரையும் அவர்களிடமிருந்து பிடுங்கிக்கொண்டார். எதிரிகள் தங்கள் முழுவன்மையுடன் போர்புரிந்தார்கள். எனினும், இறுதியில் அவர் எருஸலம் நகரை அவர்களிடமிருந்து கைப்பற்றிக் கொண்டார். சரித்திர ஏடுகளின் பக்கங்கள் அவரது வீர வரலாற்றை விளக்குகின்றன. இறுதியில், வேறு வழியின்றிச் சிலுவைக்கட்சியார் ஹி. 588, ஷஃபான் 22-இல் அவருடன் யுத்த நிறுத்த உடன்படிக்கை செய்தார்கள். முஸ்லிம் நாட்டில் கிறிஸ்தவர்களும், அதைப்போன்று கிறிஸ்தவர் ஆட்சி செய்துகொண்டிருந்த பிரதேசத்தில் முஸ்லிம்களும், தாராளமாகச் செல்லலாம் என்பதாக முடிவு செய்யப்பட்டது.

அதற்குப் பிறகு ஸுல்தான் டமஸ்கஸ் சென்று, அங்கு தமது குடும்பத்துடன் வசித்தார். கர்க் நகரிலிருந்த அவரது சகோதரர் மலிக் ஆதிலும் அங்கு வந்து சேர்ந்தார். குடும்பத்தாரெல்லாம் மகிழ்ச்சியுடன் அங்கு வசித்தார்கள். ஸுல்தான் ஸலாஹுத்தீன் டமஸ்கஸ் நகரில் வசிக்க விரும்பினார். அங்கிருந்து எகிப்துக்குச் செல்ல வேண்டுமென்ற எண்ணம் அவருக்கு உண்டாகவில்லை.

இறுதியாக, ஹி. 589 ஸபர் 27 இல் தமது ஐம்பத்தேழாவது வயதில் டமஸ்கஸ் நகரில் காலஞ் சென்றார், அவருக்குப் பதினேழு புத்திரரும், மூனிஸா காத்தூன் என்னும் ஒரு புத்திரியும் இருந்தார்கள்.

பண்பு நலன்கள்: ஸுல்தான் ஸலாஹுத்தீன் வீரத்திலும், நீதியிலும், இறையச்சத்திலும், இரக்க சித்தத்திலும்

ஸுல்தான் நூருத்தீனைப் போன்றே இருந்தார். தாராள மாகக் கொடை கொடுக்கும் வள்ளல். இணையில்லா இளகிய உள்ளமுள்ளவர். கடும் பகைவரிடம் இரக்கம் காட்டுவார் என்றால், இவரது இரக்கத்தின் தன்மையை நாம் எவ்வாறு அளவிட முடியும்: சிலுவைப் போர்களில் ஒரு சமயம் அவரது சிப்பாய்களில் ஒருவன் பால்குடிக்கும் குழந்தையொன்றைப் பறங்கிகளின் படையிலிருந்து கொண்டுவந்துவிட்டான். குழந்தையை இழந்த தாய் மனமுடைந்து தன் தலைவர் களிடம் சென்று முறையிட்டாள். அவளிடம் அவர்கள், "ஸலாஹுத்தீன் மிகுந்த இரக்கச் சித்தமுள்ளவர். எனவே அவரிடம் சென்று முறையிடும்படி ஆலோசனை கூறினர்கள். அவ்வாறே அவள் ஸுல்தானிடம் வந்தாள். அழுது கொண்டு முறையிட்டாள். அதைக் கேட்டு ஸுல்தான் மனம் நொந்து உடனே எழுந்தார். சேனையில் விசாரித் தார். குழந்தை விற்கப்பட்டு விட்டதென்று அறிந்தார். உடனே, பணத்தை அனுப்பி அந்தக் குழந்தையை விடுதலை செய்வித்தார். குழந்தை வந்தவுடன் அதைத் தாயிடம் கொடுத்து, அவளுக்கு ஒரு குதிரையும் கொடுத்து, அதன் மீது அவளை உட்காரவைத்து, மரியாதையுடன் அனுப்பி விட்டார்.

ரம்லா நகரின் அருகில் ஒரு சமயம் போர் நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது, இங்கிலாந்தரசர் ரிச்சர்ட் நோய்வாய்ப்பட்டார். பிரெஞ்சுக்காரர் தங்கள் தாய்நாட் டுக்குச் சென்றுவிட்டார்கள். ரிச்சர்டுடன் இருநூறு முந் நூறு சிப்பாய்களே இருந்தார்கள். அப்படியே அவர்கள் அனைவரையும் பிடித்து கைதிகளாகக் கொண்டுவருமாறு ஸுல்தான் தமது தளபதிகளில் ஒருவருக்குக் கட்டளை யிட்டிருக்கலாம். ஆனால், ஸுல்தான் அதற்கு மாற்றமாகச் செய்தார். அதாவது, வியாதியாயிருந்த ஆங்கில மன்ன ருக்குத் தினந்தோறும் பழவகைகளும், ஐஸ் கட்டிகளும் அனுப்பிக்கொண்டிருந்தார். சிலசமயம் தாமே மாறுவேடம் பூண்டு சென்று, ரிச்சர்டுக்கு மருத்துவம் செய்து வந்ததாக வும் சில சரித்திராசிரியர்கள் கூறுகின்றார்கள்.

இன்னோர் எடுத்துக்காட்டு. எருஸலம் நகரை ஸுல்தான் ஸலாஹுத்தீன் கடுமையாக முற்றுகையிட்டார். அப்பொழுது, பறங்கிகள் அபயம் கோரினார்கள். அச்சூழ் நிலையில் அவர் அவர்களுக்கு, “ நீங்கள் ஹி. 492 இல் இந்த நகரில் பிரவேசிக்கும் பொழுது, நீங்கள் முஸ்லிம்களுக்கு அடைக்கலம் கொடுக்கவில்லையல்லவா? ஆகையால், நானும் இப்பொழுது உங்களுக்கு அடைக்கலம் கொடுக்கமாட்டேன். அன்றியும், நீங்கள் அன்று முஸ்லிம் களுடன் எத்தன்மையில் நடந்துகொண்டீர்களோ, அதே விதமாக நானும் இப்பொழுது உங்களுடன் நடந்துகொள் வேன் ” எனக் கூறினார். இறுதியில், அஸ்கப் பால்யானும் மற்றத் தலைவர்களும் விண்ணப்பம் செய்தார்கள். எனவே, ஓர் ஆணுக்குப் பத்து தீனார்—தங்கக்காசு, ஒரு பெண்ணுக்கு ஐந்து தீனார், ஒரு குழந்தைக்கு இரண்டு தீனார் வீதம் கொடுத்துவிட்டுத் தங்கள் தட்டுமுட்டுச் சாமான்களையும் சகல ஐஸ்வரியங்களையும் எடுத்துக்கொண்டு, நாற்பது நாளைக்குள் நகரைக் காலி செய்துவிடவேண்டுமென்ற நிபந் தனையில் அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தார். முஸ்லிம் சேனை எருஸலம் நகரில் பிரவேசித்த பொழுது, பறங்கிகள் பேழைகளிலும் பெட்டிகளிலும் பொற்குவியல்களைக் கொண்டு செல்வதை முஸ்லிம் சிப்பாய்கள் கண்டார்கள். உடனே அவர்கள் ஸுல்தானிடம் சென்று, “ நாம் இன்று இவர்களைத் தோற்கடித்தோம். எனவே, இந்தப் பொருட் களுக்கு நாமே உரிமையாளர். இவற்றை நாம் ஏன் எடுக்க லாகாது ? ” என்று முறையிட்டார்கள். ஆனால், அவர், “ ஒரு தடவை வாக்களித்துவிட்டால், பிறகு, அதற்கு மாற்ற மாகச் செய்தல் நமது வழக்கமன்று ” எனக் கூறி அவர்களை அனுப்பிவிட்டார்.

மேலும், கர்க் பிரதேச அதிபதியான ரானூடுவி என்ற இளவரசர் முஸ்லிம்களுடன் உடன்படிக்கை செய்திருந்தார். ஆனால், அதற்குப் பிறகு, காரணமொன்றுமில்லாமல் முஸ் லிம்களுடைய ஒரு கோஷ்டியைக் கொலை செய்துவிட்டார்.

அச்சமயம், "எனது எதிர்ப்பில் முஹம்மதின் உதவி செய்வோர் எவர்?'' எனவும் அகங்காரத்துடன் கூறினார். ஸுல்தான் இதைக் கேள்விப்பட்டார். உடனே, "அந்த இளவரசர் என் கையில் அகப்பட்டால் என் கையாலேயே அவரைக் கொல்வேன்'' என்று சத்தியஞ்செய்தார். சிலுவைப் போர்களில் மிகவும் முக்கியமான ஹித்தீன் போர்க்களத்தில் ஹி. 583 ரபீயுல் ஆகிர் மாதத்தில் சிலுவைக்கட்சியாரின் பெரிய அரசர் ஜாஃப்ரே, மேற்கூறிய தமது சகோதரருடன் கைது செய்யப்பட்டார். இவ்விருவரும் ஸுல்தான் முன்னிலையில் கொண்டு வரப்பட்டார்கள். அப்பொழுது ஜாஃப்ரே தாகத்துடனிருந்தார். ஸுல்தான் அவருக்காக ஐஸ் கலந்த ஷர்பத்தைத் தருவித்துக் கொடுத்தார். ஜாஃப்ரே கொடுத்துவிட்டுத் தமது சகோதரரான இளவரசர் ரானூடுவிக்கும் கொடுத்தார். அப்பொழுது ஸுல்தான் அந்த இளவரசரிடம், "உமக்கு உமது சகோதரரே பானம் கொடுக்கிறார். நான் என் கையால் கொடுக்கவில்லை," எனக்கூறினார். ஏனென்றால், உண்ண உணவும், பருக நீரும் கொடுத்துவிட்டு, அந்த மனிதனைக் கொல்லல் ஒரு போர்வீரனுக்கு இழுக்காகுமென்று நினைத்தார். பிறகு எழுந்தார். வாளை உருவினார், "பார்! நான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய உதவிக்குத் தயாராக இருக்கிறேன். இந்த விநாடியிலும் நீ இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டால் நான் விட்டுவிடுகிறேன்.'' என்றார். ஆனால், அந்த இறையருட்பேறு அந்த மனிதனுக்குக் கிடைக்கவில்லை. தமது சகோதரர் கொலையுண்டதைக் கண்டு, ஜாப்ஃரே நடுங்கிக்கொண்டிருந்தார். ஸுல்தான் அவருக்கு சமாதானம் சொல்லி, "நான் உம்மைக் கொல்லமாட்டேன். உமது சகோதரர் கலகக்காரர், மார்க்கமில்லாதவர். நபிமார்களின் மேன்மையை மறந்து அவர்களை இழிவாகக் கூறுவதில் தமது நாவை உபயோகித்தார்'' எனக்கூறினார்.

ஸுல்தான் நூற்றுக்கணக்கான பாடசாலைகளைக் கட்டுவித்தார். புலமையுள்ளோரை ஆதரித்தார். ஆலிம்களுக்

கும், மேன்மக்களுக்கும் உபகாரச் சம்பளங்கள் கொடுத்துத விஞர். அஜீஸ், அஃப்ஸல் என்னும் தமது இரண்டு புதல் வர்களுடன் இமாம் ஸலபீ என்னும் மார்க்க மேதையிடம் சென்று ஹதீஸ்-நாயகவாக்கியப் பாடங்கேட்க அலக்சாந் திரியாவுக்குச் சென்ருர்.

ஹி. 574-இல் அஸ்கலான் போரில் ஒரு நிகழ்ச்சி. எப் பொழுதும் அவருடன் வசிக்கும் இஸ்லாமியச் சட்டமேதை ஈஸா என்பவர் சிலுவைக்கட்சியாரால் கைது செய்யப்பட் டார். உடனே அவருக்காக ஆறு இலட்சம் தீஞர் கொடுத்து அவரை விடுவித்துக் கொண்டு வந்து விட்டார்!

அவரது சேனையிலுள்ள சிப்பாய்கள் அவரை முழுமன துடன் நேசித்தார்கள். கீழ்ப்படிந்தார்கள். மரியாதை செலுத்திஞர்கள், புகழ்ந்தார்கள். அவருக்காகத் தங்கள் உயிரையும் அர்ப்பணம் செய்யத் தயாராக இருந்தார்கள். அவரது கம்பீரத் தோற்றத்தைக் கண்டு எல்லோரும் அச்சத் துடன் மரியாதை செலுத்துவார்கள். அவரது சேனையில் எவரேனும் எப்பொழுதேனும் கலகம் செய்யவேயில்லை.

ஸலாஹுத்தீன் துறந்த மெஞ்ஞானியைப் போன்றவர். தாமரை இலையில் நீர் நிற்பதைப் போன்று உலகத்தில் ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்க்கை நடத்திஞர். அவரிட மிருந்த பொன்னும் பொருளும் கணக்கிலடங்காதன. எனி னும், அவர் இறந்த பிறகு அவரது சொந்தப் பேழையில் ஒரே யொரு தீஞர் பொற்காசும், இருபத்தேழு தீஞர் வெள்ளிக் காசுகளுமே இருந்தன. ராஜரிஷி-அஃதாவது, அரசப் பேறு கள் இருந்தபோதிலும் துறவியாகவே வாழ்க்கை நடத்தி ஞர். அமீராக இருந்தும் பகீர் வாழ்க்கையை மேற்கொண் டார். செல்வம் இருந்தும் பரம ஏழையாகவே இருந்தார். நபிபெருமாஞர் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லமவர்களைப் போன்றும், நாயகத்தோழர்களைப் போன்றும் அவர் நடந்து கொண்டார். தமது வாழ்க்கையை இறைநெறியில் அர்ப் பணித்தார். நபிபெருமாஞரவர்களின் வாழ்க்கை வழியைப் பின்பற்றி நடந்தார். அத்தகைய நெறியை உமய்யாக்கள்

காலத்திலும், அப்பாஸிகள் காலத்திலும் முஸ்லிம்கள் மறந்து விட்டனர். இமாம் கஸ்ஸாலி என்னும் மாமேதை குர்ஆனையும், ஸுன்னத்தையும் பின்பற்றி நடக்க வேண்டு மென்று போதித்தார். அதன் விளைவாக ஸுல்தான் நூருத்தீன், ஸுல்தான் ஸலாஹுத்தீன் இவ்விருவருடைய வாழ்க்கை அதியற்புதமாக அமையப்பட்டுள்ளது.

எகிப்து, ஸிரியா இவ்விரு நாடுகளிலும் ஸுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபியின் நினைவுச் சின்னங்கள் பல உள்ளன. காஹிராவின் அருகில் ஜபல் முகத்தம் என்னும் கோட்டையானது, எகிப்து நாட்டுக் கோட்டைகளில் இன்று வரையும் முக்கியமானதாக விளங்குகின்றது.

மலிக் அஜீஸ்

ஸுல்தான் ஸலாஹுத்தீன் தமது வாழ்நாட்களில் மந்திரி பிரதானிகளுடன் கலந்தாலோசித்து, தமது மூன்று புதல்வர்களுக்கும் தமது அரசாங்கத்தை மூன்று பங்குகளா கப் பிரித்துக் கொடுத்து விட்டார். இமாதுத்தீன் உஸ்மான் என்பவருக்கு மலிக் அஜீஸ் என்னும் பட்டத்துடன் எகிப்து நாட்டைக் கொடுத்தார். நூருத்தீன் என்பவருக்கு மலிக் அப்ஸல் என்னும் பட்டமும் டமஸ்கஸ் பிரதேசமும் கொடுத் தார். கியாஸுத்தீன் அபுல் பத்தாஹ் காஜீ என்பவருக்கு மலிக் ஜாஹிர் என்னும் பட்டமும், இராகே அஜம் பிரதேசமும் கொடுத்தார். வேறு புத்திரர்களுக்கு சிறுசிறு பாகங்கள் கொடுத்தார்.

மலிக் அஜீஸ் நல்லவர். வீரவான், தரும குண முள்ளவர். மேன்மக்களை நேசித்து அவர்களுக்கு ஆதரவு தந்தார். ஆயினும், அவருக்கு அரசியல் அறிவு கொஞ்ச மேனும் கிடையாது. இஸ்லாமியச் சட்டத்திற்கு விரோத மானவை யென்று ஸுல்தான் ஸலாஹுத்தீன் நீக்கிவிட்ட தீர்வைகளை இவர் மறுபடியும் புதுப்பித்தார். பஞ்சமும் ஏற்பட்டது. ஹி. 595 முஹர்ரம் 20 இல் இவர் இறந்து போனர்.

மலிக் மன்ஸூர்

அஜீஸுக்குப் பிறகு, எட்டு வயதுள்ள அவரது புத்திரர் மன்ஸூர் என்பவர், எகிப்து நாட்டிற்கு பாதுஷாவானுர். மலிக் ஆதில் ஸைபுத்தீன் அபூ பக்ர் பின் அய்யூப் என்பவர் கர்க் நகரிலிருந்து சேனையுடன் வந்து தாம் மன்ஸூரின் பாட்டனென்று கூறி, அரசியல் நிர்வாகத்தைத் தமது கையில் வைத்துக் கொண்டார். அதற்குப் பிறகு, ஹி. 596 ஷவ்வால் மாதம் உலமாக்களின் பத்வா பெற்று மன்ஸூரை நீக்கிவிட்டுத் தாமே சிம்மாசனத்தில் அமர்ந்துகொண்டார்.

மலிக் ஆதில்

மலிக் ஆதில் சிம்மாசனம் ஏறியவுடன் ஸுல்தான் ஸலாஹுத்தீனுடைய பொற்காலம் மறுபடியும் வந்துவிட்டதைப் போல் தோன்றியது. ஏனென்றுல், இவர் ஸுல்தான் ஸலாஹுத்தீனுடைய இரண்டாம் புதல்வர் அப்ஸல் என்பவரிடமிருந்து ஸிரியா நாட்டைப் பெற்றுக்கொண்டார். ஹலப் பிரதேசத்தையும் கைப்பற்றிஞர். இவ்வாருக, ஸுல்தான் ஸலாஹுத்தீன் பங்கிட்ட அரசாங்கம் மறுபடியும் ஒரே அரசரின் கீழ் வந்துவிட்டது. மலிக் ஆதில் காலத்தில் ஹி. 597 இல் மனிதன் மனிதனேப் பிடித்துத் தின்ன வேண்டிய பஞ்சமொன்று எகிப்து நாட்டில் வந்தது. இதனுல் ஏற்பட்ட துன்பங்களேக் கண்கூடாகக் கண்டு, அவ் விஷயங்களே அப்துல் லதீப் பக்தாதீ என்பவர், ஸபர் நாமா என்னும் பிரயாணக் குறிப்பில் எழுதியுள்ளார்.

ஸுல்தான் ஸலாஹுத்தீன் இறந்த பிறகு அவரது ராஜ்யம் துண்டு துண்டாக்கப்பட்டுவிட்டதல்லவா? இதை யறிந்த சிலுவைக் கட்சியார் ஐரோப்பாவிலிருந்து உதவி கேட்டார்கள். அவர்களும் ராணுவ வன்மையைப் பெருக்கிஞர்கள். முன்னர் அவர்கள் இழந்துவிட்ட நாட்டையும் புகழையும் மீண்டும்பெற முயற்சித்தார்கள். ஆனுல், அவர்களுக்கு உதவி கிடைப்பதற்கு முன்னரே மலிக் ஆதில் பிரிந்

திருந்த பகுதிகளை யெல்லாம் ஒன்ருக்கிவிட்டார் எனவே, சிலுவைக் கட்சியார் மலிக் ஆதிலைத் தோற்கடிக்க முடிய வில்லை.

ஹி. 613 இல் ஆரும் சிலுவை யுத்தத்திலே சிலுவைக் கட்சியார் பெருந் திரளாக வந்தார்கள். ஸிரியாவில் பெரும் பாலான நகரங்களைக் கைப்பற்றிஞர்கள். பிறகு ஹி. 615 இல் எகிப்து நாட்டை நோக்கிச் சென்று தமியாத் நகரை வென்ருர்கள். இதற்கிடையில் மலிக் ஆதில் காலஞ்சென்று விட்டார்.

இவர் ஸுல்தான் ஸலாஹுத்தீனுடைய சகோதரர். அவரைப் போன்றே அறிவிலும் ஆற்றலிலும் சிறந்தவர். பொறுமையுள்ளவர். கம்பீரமுள்ளவர் போர்களில் சிலு வைக் கட்சியார் இவரை ஸலாஹுத்தீனை விட அதிகமாக அஞ்சிஞர்கள். அச்சமயம் இங்கிலாந்து அரசர் ஒரு முயற்சி செய்தார். அதாவது, ஸிஸிலி மன்னரின் விதவையும் தமது சகோதரியுமான ஜோன் என்பவளை மலிக் ஆதிலுக்கு மணஞ் செய்துவிட வேண்டுமென்று அவர் முயன்ருர். சிலுவைக் கட்சியாரின் "ஜமீஅத் ஹைகல்," "ஜமிஅத் யூஹன்ன" என்னும் இரு கோஷ்டியாரின் ஆலோசனைக் கேற்ப அடிக்கடி தூதர்களை அனுப்பிக் கொண்டிருந்தார். எருஸலம் நகரையும், அப்பொழுது முஸ்லிம்களிடமிருந்த பிரதேசங்களையும் மலிக் ஆதிலுக்கே கொடுத்துவிடவேண்டு மெனவும், நிபந்தனை செய்யப்பட்டது. இந்தத் திட்டத்தின் வாயிலாக முஸ்லிம்களுக்கு நலமுண்டாகு மென்றெண்ணி மலிக் ஆதில் அதற்கு உடன்பட்டார். ஸுல்தான் ஸலா ஹுத்தீனும் அவ்வாறே செய்ய அனுமதி அளித்தார். ஆனல், பாதிரிமார்கள் அடிக்கடி ஜோன் என்னும் மாதிடம் சென்று, "அவ்வாறு ஒரு முஸ்லிமை மணமுடித்துக் கொண் டால் இயேசுநாதரின் சாபத்திற்கும் கோபத்திற்கும் ஆளாவாய். நீ பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமுடியாது" என்று அழுத்தமாகக் கூறிஞர்கள். ஆகையால், அவள் பின்வாங்கிவிட்டாள்.

மலிக் காமில்

மலிக் ஆதிலுக்குப் பிறகு அவருடைய புத்திரர் காமில் என்பவர் தமியாத் நகர முற்றுகை காலத்திலே பட்டத்திற்கு வந்தார். ஹி. 615 ரஜப் 9 இல் இவர் அந்த நகரிலிருந்து சிலுவைக் கட்சியாரைத் துரத்திவிட்டார். பிறகு, கெய்ரோ நகருக்கு வந்து வெற்றிக்கொண்டாட்டங்கள் நடத்தினர்.

அவர் எகிப்து நாட்டில் பல கட்டிடங்கள் கட்டினர். இமாம் ஷாபியீ அவர்களின் அடக்கத்தலத்தின் மீது, பக்தியுடன் ஒரு குப்பா—வில்மச்சு மண்டபம் கட்டினர். ஹதீதுப் பாடம் கற்பிக்க ஒரு பிரமாண்டமான கலாசாலை—மத்ரஸா தயாரித்து அதற்கு நிலங்களை இனுமாகக் கொடுத்தார். பிறகு, அது மத்ரஸயே காமிலியா என்னும் பெயருடன் சிறந்து விளங்கியது.

ஒரு சமயம் பிரதம நீதிபதி—காஜியுல் குஜ்ஜாத்—ஷர்புத்தீன் பின் அய்னுத்தெளலாஹ் என்பவர் முந்நிலையில் ஒரு வழக்கில் மலிக் ஆதில் சாட்சி சொல்லவேண்டியதாயிற்று. அவர் தினந்தோறும் அஜியா என்னும் ஒரு பாடகியை அழைத்து சங்கீதம் கேட்டு வந்தார் என்னும் காரணத்தால், அவரது சாட்சியம் நம்பத்தக்கதன்றென நீதிபதி கூறிவிட்டார். அதைக் கேட்டவுடன் மலிக் காமில் நீதிபதிமீது கடுங்கோபம் கொண்டார். மேலும், கடுமையான சுடுசொற்களையும் தாராளமாகப் பிரயோகித்தார். இவ்வாறு பாதுஷா செய்தமையால், அச்செயல் நீதிமன்றத்தின் நிந்தனையாகிவிட்டதெனவும், எனவே, அதற்குப் பிறகு தாம் அந்தப் பீடத்தில் உட்கார முடியாதெனவும் கூறிப் பிரதம நீதிபதி ஷர்புத்தீன் உடனே தமது உத்தியோகத்தை வேண்டா வெறுப்பாகத் துறந்து தமது வீட்டிற்குத் திரும்பிவிட்டார். மலிக் காமில் நீதிபதியிடம் சென்றார். அவரைச் சமாதானப் படுத்தினர். நீதிபதியின் செயலின் விளைவாக இஸ்லாமிய உலகில் தமக்கு இழிவு ஏற்படுமென்று அஞ்சினர். இறுதியாக, நீதிபதியை அவரது பதவியில் அமரும்படி கேட்டுக் கொண்டார். பிறகு, நீதிபதியும் அவ்வாறே செய்தார்.

மலிக் காமில், ஹி. 635 இல் டமஸ்கஸ் நகரில் வியாதி யுற்று அங்கு ரஜப் மாதம் 23இல் காலமானுர். அவர் முப்பது ஆண்டுகள் இரண்டு மாதங்கள் ஆட்சி செய்தார். அவர் காலத்திலும் அரசியல் வெகு சிறப்புடன் நடந்தது.

இரண்டாம் ஆதில்

காமில் இறந்த பிறகு அவரது புதல்வர் ஸைபுத்தீன் அபூபக்ர் ஆதில் என்பவர் ஸுல்தானுனர். எனினும், இரண்டுஆண்டுகளுக்கு அதிகமாக அவர் ஆட்சிசெய்ய முடிய வில்லை. ஏனென்ருல், அவரது சகோதரர் மலிக் ஸாலிஹ் நஜ்முத்தீன் என்பவர் ஜஸீராவின் அதிகாரியாக இருந்தார். அமீர் மூனிஸ் ஸிரியாவில் அதிகாரியாக இருந்தார். மலிக் ஸாலிஹ் நஜ்முத்தீனும் அமீர் மூனிஸும் தங்கள் ராஜ்யங் களை மாற்றிக் கொண்டார்கள். அஃதாவது, மலிக் ஸாலிஹ் நஜ்முத்தீன் என்பவர் ஸிரியாவின் அரசராகிவிட்டார். எகிப்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் இவ்வாறு செய்யப் பட்டது. எனவே, மலிக் ஸாலிஹ் ஒரு பெருஞ் சேனையுடன் படையெடுத்து வந்தார். மலிக் ஆதில் அவரை எதிர்க்கச் சென்ருர். ஆனுல், பல்பீஸ் என்னுமிடத்தில் மலிக் ஸாலி ஹுக்கு அந்தரங்கமாக உதவி செய்து வந்த அமீர்களெல் லாம் மலிக் ஆதிலைக் கைது செய்து விட்டார்கள். எனவே, மலிக் ஸாலிஹ் மிக எளிதில் எகிப்து நாட்டைக் கைப்பற்றிக் கொண்டார்.

மலிக் ஸாலிஹ்

ஹி. 637 துல்ஹஜ் எட்டாம் நாள் இவர் ஸுல்தானுனர். பிறகு, அமீர் மூனிஸ் என்பவரை ஜஸீராவிலிருந்து நீக்கி விட்டு, அவரை உடனே எகிப்துக்கு வரவேண்டுமென்று கட்டளையிட்டார். ஆனுல், அவர் அச்சங்கொண்டு, சிலு வைக்கட்சியாரிடம் அடைக்கலம் தேடினுர். டமஸ்கஸ் கவர்னர் இஸ்மாயீல், ஹம்ஸ் கவர்னர் இப்ராஹீம், கர்க் கவர்னர் ஆகிய மூவரும் அவருடன் சேர்ந்துகொண்டார்கள்.

அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து படையெடுத்தார்கள். பிரெஞ்சு அரசர் ஒன்பதாம் லூயி வந்து அவர்களுடன் சேர்ந்துகொண்டார். ஹி. 647 ஸபர், 22ல் அவர்கள் தமியாத் நகரைக் கைப்பற்றினார்கள். பிறகு, பார்ஸகூர் நகருக்கு வந்தார்கள். அச்சமயம் மலிக் ஸாலிஹ் வியாதியாக இருந்தார். எனினும் பதினான்கு மாத காலம் இவர்களுடன் போர்புரிந்துகொண்டே இருந்தார். இறுதியில், அதே ஆண்டில் ஷஃபான் மாதம் 14ல் இறந்துபோனார். அவரது மனைவி ஷஜ்ருத்துர் என்னும் மாது, அவரது மரணத்தை மறைமுகமாக வைத்துத் தமது புதல்வர் மலிக் முஅஜ்ஜம் தூரான்ஷாஹ் என்பவர் ஹஸன் கைபா என்னுமிடத்திலிருந்து வந்து சிம்மாசனம் ஏறும்வரை இரகசியமாக வைத்திருந்தார். மலிக் முஅஜ்ஜம் தூரான்ஷாஹ் சிலுவைக்கட்சியாரைத் தோற்கடித்துத் துரத்திவிட்டார்.

காஜீ இஜ்ஜுத்தீன்

மலிக் ஸாலிஹ் காலத்திலே அல்லாமா இஜ்ஜுத்தீன் பின் அப்துஸ்ஸலாம் என்பவர் எகிப்துக்கு வந்தார். முதலில் அவர் டமஸ்கஸ் நகரில் நீதிபதியாக இருந்தார். அப்பொழுது அங்கிருந்த கவர்னர் இஸ்மாயீல் என்பவர் ஸைதா நகரையும் ஷக்கீக் கோட்டையையும் சிலுவைக் கட்சியாருக்குக் கொடுப்பதாக வாக்களித்து, அவர்களைத் தம்முடன் சேர்த்துக்கொண்டார். எனவே இஸ்மாயீலின் பெயரை குத்பா—பிரார்த்தனையிலிருந்து நீக்கிவிடவேண்டுமென்று காஜி இஜ்ஜுத்தீன் விளம்பரஞ் செய்தார். கவர்னர் இஸ்மாயீல் இதைக் கேட்டுக் கடுங்கோபம் கொண்டார். எனவே, காஜி இஜ்ஜுத்தீன் அங்கிருந்து எகிப்துக்குச் சென்றுவிட்டார். அப்பெரியார் மேலான சங்கைக்கு உரியவர். ஆதலால், மந்திரி பிரதானிகளும் இதர தலைவர்களும் அவரைத் தடுக்க முயற்சித்தார்கள். "நாங்கள் கவர்னர் இஸ்மாயீலை சமாதானப்படுத்திவிடுகிறோம். நீங்கள் எங்களுடன் வந்து அவர் கையை முத்தமிட்டால் போதும்" என்று விண்ணப்பம் செய்தார்கள். அதற்கு, அப்பெரியார்,

"உங்களுடைய மன்னர் என் கையை முத்தமிடவும் நான் சம்மதிக்கமாட்டேன். அவ்வாறிருக்க, நான் எவ்வாறு சென்று அவர் கையைப் பிடித்து முத்தமிடுவேன்?'' நீங்கள் மூழ்கிக் கிடக்கும் இந்த ஆபத்திலிருந்து என்னைக் காப்பாற்றிய ஆண்டவனுக்கு நான் நன்றி செலுத்துகின்றேன் போங்கள்! நீங்கள் இருக்கும் உலகம் வேறு. நான் இருக்கும் உலகம் வேறு என்றார். பிறகு, அவர் அங்கிருந்து எகிப்து நாட்டிற்கு வந்து சேர்ந்தார். அவ்வாறு, அவர் எகிப்துக்கு வந்தபொழுது, எகிப்து மன்னர் மலிக் ஸாலிஹ் அவரை சகல மரியாதைகளுடன் வரவேற்றதோடு, நீதிபதிப் பதவியிலும் நியமனம் செய்தார்.

அக்காலத்தில், பக்ருத்தீன் என்பவர் ஸுல்தானுடைய அரண்மனைச் செயலாளராக இருந்தார். அரசியல் நிர்வாகமே அவர் கையில் இருந்தது. அத்தகைய தலைவர் பள்ளிவாயிலின் தலைவாயிலின்மீது மேல்மாடி கட்டி, அதில் நௌபத் என்னும் மேளவாத்தியம் வாசிக்கும்படி கட்டளையிட்டிருந்தார். இதையறிந்த காஜி இஜ்ஜுத்தீன் அந்தக் கட்டிடத்தை இடித்துத் தள்ளும்படி கட்டளையிட்டார். மேலும், அமீர் பக்ருத்தீனுடைய சாட்சியம் ஒப்புக்கொள்ளப் படாதெனவும் விளம்பரஞ் செய்வித்தார். இந்தச் சூழ்நிலையில் பக்ருத்தீனுடைய பகைமையால் தமது நீதிபதி வேலையை ஒழுங்காகச் செய்ய முடியாதென்று, ராஜிநாமா செய்து விட்டு நீதிமன்றத்திலிருந்து வந்துவிட்டார். இதையறிந்த மலிக் ஸாலிஹ் தாமே நீதிபதியிடம் சென்றார். அந்த மேல் மாடியை இடித்துத் தள்ளினார். நீதிபதியைச் சமாதானப்படுத்தினார். அவரை மீண்டும் நீதிமன்றத்திற்கு அழைத்துக் கொண்டுவந்தார்.

'இந்த நீதிபதியின் விளம்பரத்தால் நமக்கு என்ன கேடு நேரப்போகின்றது?'' என்று பக்ருத்தீனும் அவரது தோழர்களும் நினைத்தார்கள். ஆனால், இதற்கிடையில், ஒரு நிகழ்ச்சி! பக்தாத் கலீபா முஸ்தஃஸிமிடம் மலிக் ஸாலிஹ் ஒரு தூதுக்கோஷ்டியை அனுப்பினார். தூதர்

அங்கு சென்று கலீபாவுக்குச் செய்தியைக் கூறினர். அப்பொழுது அவர், "இந்தச் செய்தியை உமக்கு ஸுல்தான் சொல்லியனுப்பினரா? அல்லது வேறு எவரேனும் சொல்லியனுப்பினர்களா?" எனக் கேட்டார். அதற்கு, "அமீர் பக்ருத்தீன் அனுப்பினர்" என்று தூதர் விடை தந்தார். அதைக் கேட்டவுடன், கலீபா, "காஜி இஜ்ஜுத்தீன் இந்த அமீர் பக்ருத்தீனுடைய வார்த்தைகளை நம்பக்கூடாதென்று முடிவு செய்திருக்கின்றூர். எனவே, அவர் மூலமாக வந்த செய்தியை நாம் ஒப்புக்கொள்ள மாட்டோம்" எனக் கூறிவிட்டார். வேறு வழியின்றி அந்தத் தூதர் எகிப்துக்குத் திரும்பிவிட்டார். பிறகு, ஸுல்தான் நாவால் மறுமுறை அந்தச் செய்தியைக் கேட்டு, மறுபடியும் பக்தாத் கலீபாவிடம் சென்று, பதில் கொண்டுவந்தார்.

ஸுல்தானல் விலைக்கு வாங்கப்பட்ட மமாலிக் பஹ்ரிய்யா எனப்படும் அடிமைகள் சுவாதீனப்படவில்லை. இதை காஜி இஜ்ஜுத்தீன் நன்கு விசாரித்தறிந்துகொண்டார். எனவே, அந்த அடிமைகள், அடிமைகளாக இருக்கும் நிலையில், அவர்களுடைய கொடுக்கல், வாங்கல், திருமணஞ் செய்தல், திருமண விலக்கு ஆகியவை (ஹறும்) சட்ட விரோதமானவையென்று விளம்பரப்படுத்தினர். மேலும், அந்த அடிமைகள் அனைவரும் அரசாங்கத்தின் சொத்து எனவும், ஆகையால் தாம் அவர்களை விற்கப்போவதாகவும், எனவே, அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டுமெனவும், கட்டளை பிறப்பித்தார். இதைக் கேட்ட அடிமைகள் எதிர்க் கிளர்ச்சி செய்தார்கள். பேரிரைச்சல் முழக்கினர்கள். ஏனென்றல், அவர்களே மந்திரிகளாகவும், சிற்றரசர்களாகவும், சேனைத் தலைவர்களாகவும் அரசாங்கத்தில் பெரும் பதவிகளில் அமர்ந்திருந்தார்கள். நீதிபதியின் நண்பர்கள் அவரிடம் சென்று அத்தகைய அவரது செயலால் அவருக்கே பேராபத்து விளையுமென்று எச்சரித்தார்கள். ஆனல், அவரோ முன்வைத்த காலைப் பின்வாங்காமல், எல்லோரும் மார்க்கச் சட்டத்தைக் கீழ்ப்படிந்தே ஆகவேண்டுமென்று

வற்புறுத்தினர். அரசாங்கக் காரியதரிசி, கடுங்கோபங் கொண்டு, " நாங்கள் பூமியின் அதிகாரிகளாக இருக்கின் ருேம்! ஆகையால், இந்த நீதிபதி எங்கள் முன்னிலையில் நாவசைக்க முடியுமா ? " சத்தியமாகச் சொல்லுகிறேன்! என் கையாலேயே நான் அருடைய கழுத்தை வெட்டு வேன்!" என்று ஆவேச உணர்ச்சியுடன் கூறினர். பிறகு, தம்மைச் சேர்ந்தோரின் கூட்டத்தைச் சேகரித்துக்கொண்டு புறப்பட்டார். அனைவரும் கடுஞ்சினத்துடனும், உறுவிய வாட்களுடனும் புறப்பட்டுச் சென்றார்கள். நீதிபதியின் வீட்டின் அருகில் வந்தார்கள். இந்த ஆரவாரத்தைக் கேட்டு, நீதிபதியின் புதல்வர் வெளியே வந்து பார்த்தார். பெருங்கூட்டத்தையும், அந்தச் சூழ்நிலையும் கண்டு, ஆவேச உணர்ச்சியையும், அதன் வேகத்தையும் அறிந்து அச்சங் கொண்டார். அங்கிருந்து வீட்டிற்குள் ஓடோடி வந்தார். நெருக்கடியான நிலையைத் தந்தையாருக்கு அறிவித்தார். ஆனல், நீதிபதி இஜ்ஜுத்தீன் சற்றேனும் அஞ்சவில்லை. மகனை நோக்கி, "உன் தகப்பன் நேரான பாதையில் கொலை யுண்டு எவ்வாறு மேன்மை பெறமுடியும்?" என்று கூறிக் கொண்டே, வெளியே வந்தார்! நின்றார்! பார்த்தார்!

அந்தக் கூட்டத்திற்குத் தலைவராக வந்திருந்த அரசாங் கச் செயலாளர் நீதிபதியைப் பார்த்தார். கண்கள் கண் களைச் சந்தித்தன. நீதிபதியின் தூய்மையான முகத்தில் தோன்றிய சத்திய ஜோதியைக் கண்டு, நடுநடுங்க ஆரம் பித்தார். இறைநெறியில் செல்வோரை எதிர்க்க வல்லார் எவர்? எதிர்க்க வந்தவரின் கையிலிருந்த வாள் நழுவிக் கீழே விழுந்து விட்டது. அவர் கண்களில் நீர்ததும்பிற்று. அழுதுகொண்டே, "எஜமானே! தாங்கள் என்ன செய்ய விரும்புகின்றீர்கள்?" எனக் கேட்டார். அதற்கு காஜியார், "உங்கள் அனைவரையும் விற்றுவிடுவேன்" என்றார். "எவர் விலைகொடுத்து வாங்குவார்?" எனக் கேட்ட கேள்விக்கு, 'நானே வாங்குவேன் அந்தப் பணத்தை முஸ்லிம்களின் நலனுக்கான விஷயங்களில் செலவு செய்வேன்" என்று

மறுமொழி கூறினர். பிறகு, சொன்ன சொற்படியே செயலளவில் செய்தும் முடித்தார். இவ்வாறாக, அந்தச் சிறந்த உத்தியோகஸ்தர்களை யெல்லாம் உயர்ந்த விலைக்கு விற்று விட்டார்.

காஜி இஸ்ஸுத்தீன் ஸுல்தானுல் உலமா என்னும் பட்டம் பெற்றவர். ஹிஜ்ரி ஏழாம் நூற்றாண்டின் முஜத்தித் மதச்சீர்திருத்தக்காரர் என்று எகிப்து நாட்டில் புகழ்பெற்ற ஷெய்க் தகீயுத்தீன் இப்னு தகீக் என்பவர் இப்பெரியாரின் மாணக்கர்.

மலிக் முஅஜ்ஜம்

மலிக் ஸாலிஹ் நஜ்முத்தீனுடைய புதல்வர் கியாஸுத்தீன் தூரான் ஷாஹ் என்பவர் மலிக் முஅஜ்ஜம் என்னும் பட்டத்துடன் சிம்மாசனம் ஏறினர். பழைய மந்திரி பிரதானிகளை நீக்கிவிட்டார். ஹஸன் கைபாவிலிருந்து தம்முடன் வந்திருந்தோரை நியமித்தார். எனவே, அவர்கள் கோபங்கொண்டு இரண்டு மாதங்களில் ஹி. 648 முஹர்ரம் ஏழாம் நாள் இவரைக் கொன்றுவிட்டார்கள்.

ஷஜ்ருத்துர்

மலிக் முஅஜ்ஜமுக்கு ஆண் சந்ததி இல்லை. எனவே, சிம்மாசனத்தில் யாரை ஏற்றலாம் என்று மந்திரி பிரதானிகள் விவாதஞ் செய்து கொண்டிருந்தார்கள். இதன் விளைவாகக் கருத்து வேற்றுமைகள் உண்டாகி, உள்நாட்டுக் கலகங்கள் விளையக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.

அச்சமயம் ஒரு நிகழ்ச்சி! தன் பேரழகாலும், நுண்ணறிவாலும், விவேகத்தாலும், மலிக் ஸாலிஹை மணந்து அவரது அரசியாகிவிட்ட ஷஜ்ருத்துர் என்னும் மாது முன் வந்தாள். அச்சமயம், அடிமைகளின் செல்வாக்கு மிகுந்திருப்பதைக் கண்டாள். அவர்களுடைய தலைவர் இஜ்ஜுத்தீன் அய்பய்க் என்பவரைத் தன்னுடன் சேர்த்துக்

கொண்டாள். ஹி 648 ஸபர் மாதம், பத்தாம் நாள் தானே சிம்மாசனத்தில் ஏறினாள். மேலும், இஜ்ஜுத்தீனைத் தன் மந்திரியாகவும் நியமித்தாள்.

பக்தாதிலிருந்த அப்பாஸி கலீபா முஸ்தஃஸிம் என்பவர் ஷஜ்ருத்துர் ஒரு பெண்ணானபடியால், அவளது ஆட்சி சிறந்த ஆட்சியாக இருக்கமுடியாதென்று எண்ணினார். ஷஜ்ருத்துர் மூன்று மாத காலத்தில் சிம்மாசனத்தை இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. ஏனென்றால், மந்திரி இஜ்ஜுத்தீன் அந்த அரசியை மணந்து கொண்டார். அதன் விளைவாக இஜ்ஜுத்தீனே சிம்மாசனம் ஏறிவிட்டார். ஆகவே, அன்று அய்யூபி அரசாங்கம் அஸ்தமித்துவிட்டது.

அரசி ஷஜ்ருத்துர் உடைய நினைவுச் சின்னம் இன்று வரை நிலைத்திருக்கின்றது. அதாவது, அந்த அரசி காலத்தில்தான் எகிப்திலிருந்து மக்கா நகருக்கு மஹ்மல் என்னும் போர்வை, கஃபத்துல்லாஹ் என்னும் புனிதப் பள்ளியில் ஹஜ் காலத்தில் போர்த்துவதற்காக அனுப்பப்பட்டது. அதற்குப் பிறகு, அது ஆண்டுதோறும் அனுப்பப்பட்டு வருகின்றது.

10. பஹ்ரீ அடிமை அரசாங்கம்

ஹி. 648–784, கி. பி.1250–1382

கலீபா முஃதஸிம் காலத்திலிருந்தும், பிறகு, அஹ்மத் பின் தூலூன் காலத்திலிருந்தும் துருக்கி இனத்தைச் சேர்ந்த அடிமைகள், எகிப்து நாட்டில் வந்து குடியேறினார்கள். அதற்குப் பிறகு, பாத்திமீ கலீபாக்கள் காலத்தில் இன்னும் அதிகமாகப் பெருகிவிட்டார்கள். ஆனால், இவர்கள் தங்கள் பூர்வ பூமியான ருஷ்யாவிலுள்ள கப்சாக் பாலைவனம், கஸ்வீன், காஃப் மலை, ஆகிய பிரதேசங்களில் தாதாரிகள் படையெடுத்து வந்தபொழுது அங்கிருந்து தப்பியோடி இஸ்லாமிய நாடுகளுக்கு வந்து விட்டார்கள். அந்த நாடுகளிலிருந்த மக்கள் அவர்களைப் பிடித்துக் கொண்டுபோய்

எகிப்து நாட்டில் விற்றுவிட்டார்கள். மலிக் ஸாலிஹ் நஜ்முத்தீன் அய்யூபீ அவர்களை விலைக்கு வாங்கினார். அவர்களை மந்திரிகளாகவும், கவர்னர்களாகவும் உயர்ந்த அலுவல்களில் நியமனம் செய்தார். அவர்கள் குடியிருப்பதற்காக ரவ்லா தீவுக்கு அருகில் நிலங்கள் கொடுத்தார். அங்கு அவர்கள் உயர்ந்த மாளிகைகளும் கோட்டைகளும் கட்டிக்கொண்டார்கள். அந்த இடத்தில் நீல நதியின் இரண்டு கிளைகள் சேருவதால் அந்த இடம் பஹ்ர் அல்லது கடல் என்று கூறப்படுகின்றது. ஆகையால், அவர்கள் பஹ்ரீ மம்லூக் = கடலோர அடிமைகள் என்று அழைக்கப்பட்டார்கள். அய்யூபீ அரசாங்கம் பலவீனப்பட்டு, படிப்படியாக இவர்களது செல்வாக்கும் வன்மையும் அதிகரித்து, இறுதியாக எகிப்துநாட்டின் சிம்மாசனத்தையே அவர்கள் கைப்பற்றிக்கொண்டார்கள்.

முயிஸ் ஜாஷ்னகீர்

இஜ்ஜுத்தீன் அய்பக் ஹி. 648 ஜமாதுல் அவ்வல் மாதம் முயிஸ் ஜாஷ்னகீர் என்னும் பட்டத்துடன் சிம்மாசனம் ஏறினார். அவர் அடிமையாதலால் எகிப்துநாட்டார் அவரது ஆட்சியை விரும்பவில்லை. ஆயினும், ஜாஷ்னகீர் நயத்தினாலும் பயத்தினாலும் சேனையைத் தமது உள்ளங்கையில் வைத்திருந்தார்.

நாஸிருத்தீன் யூஸுப் அய்யூபீ என்பவர் டமஸ்கஸ் பிரதேசத்தைக் கைப்பற்றிய பிறகு, மலிக் முஅஜ்ஜம் என்பவர் மீது பழிவாங்கும் நோக்கத்துடன், சிலுவைக் கட்சியாருடன் சேர்ந்துகொண்டு எகிப்தின்மீது படையெடுக்க விரும்பினார். முயிஸ் ஜாஷ்னகீர் இதை யறிந்து சிலுவைக் கட்சியாருக்குப் பணங் கொடுத்து அவர்களைத் தம்முடன் சேர்த்துக் கொண்டார். நாஸிருத்தீன் அனுப்பிய இருபதினாயிரம் துருப்புகள் எகிப்து மக்களால் கஸா நகரில் தோற்கடிக்கப்பட்டன, பிறகு, நாஸிருத்தீன் டமஸ்கஸிலிருந்து ஒரு பெரும் படையுடன் வந்தார். ஆயினும், முயிஸ்

ஜாஷ்னகீரும் அவரது சேனுதிபதி பார்ஸுத்தீன் அக்தாயீ என்பவரும் சேர்ந்து நாஸிருத்தீனைத் தோற்கடித்து விட்டார்கள். எனவே, வேறுவழியின்றி, எகிப்தை அடிமைகளிடம விடவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனுல், சிலுவைக் கட்சியாரை எதிர்ப்பதில் இருவரும் சேர்ந்துகொள்ள வேண்டுமென்று நாஸிருத்தீன் அவர்களோடு ஓர் உடன் படிக்கை செய்துகொண்டார். இவ்வுடன்படிக்கை முடிந்த பிறகு முயிஸ் ஜாஷ்னகீர் கெய்ரோ நகருக்குச் சென்ருர். மவ்ஸில் பிரதேச கவர்னரின் புத்திரியை மணஞ்செய்ய விரும்பி அவரிடம் ஒரு தூதுகோஷ்டியை அனுப்பினுர். அரசி ஷஜ்ருத்துர் இதைக் கேட்டுப் பொருமை கொண்டு தனது வேலைக்காரிகள் மூலமாக, ஹி. 655 ரபீயுல் அவ்வல் மாதம் குளிக்கும் அறையில் அவரைக் கொலை செய்வித்தாள். முயிஸ் ஜாஷ்னகீரின் அடிமைகள் இதைக் கேள்விப்பட்டு அரசி ஷஜ்ருத்துரையும் கொன்று, கோட்டை மதிலுக்கு வெளியே அகழில் எறிந்துவிட்டார்கள்.

முயிஸ் ஜாஷ்னகீர், நீலநதிக்கரை யோரத்தில் ஒரு பெரிய மத்ரஸா—கல்லூரி தயாரித்தார். அதற்குப் பல இனும்களும் கொடுத்தார்.

மலிக் மன்ஸூர் நூருத்தீன்

முயிஸ் ஜாஷ்னகீருக்குப் பிறகு மந்திரி பிரதானிகள் பதினைந்து வயதுள்ள அவரது புதல்வர் நூருத்தீன் அலீ அய்பக் என்பவரைச் சிம்மாசனத்தில் ஏற்றினுர்கள். காரிஜிம் ஷாஹ்வின் சகோதரியின் புதல்வரும், தாதாரிகளுக்குப் பயந்து எகிப்துக்கு வந்து முயிஸ் ஜாஷ்னகீருடைய சொந்தச் செயலாளராக இருந்த ஸைபுத்தீன் மஹ்மூத கதூஸியின் மவ்தூத் என்பவருக்கு அதாபக் – இளவரசுப் பாதுகாவலராக நியமித்தார்கள். மன்ஸூர் சிம்மாசனம் ஏறிய இரண்டாம் ஆண்டில் ஹி. 606 (கி. பி. 1258)இல் ஹுலாகு கான், பக்தாத் நகரை அழித்துவிட்டார். அதனுல், எகிப்து மக்களும் அச்சங்கொண்டார்கள்.

கதூஸி அப்பொழுது மந்திரி பிரதானிகளையும் ஆலிம் களையும் ஒன்று சேர்த்து, "இப்பொழுது வெகு நெருக்கடி யான வேளை. எல்லா முஸ்லிம் நாடுகளுக்கும் பேராபத்து விளைந்திருக்கிறது. இஸ்லாத்தின் மத்திய ஸ்தாபனமான கிலாபத்தை தாதாரிகள் அழித்துவிட்டார்கள். இப்பொழுது, அவர்கள் அங்கிருந்து முன்னேறி ஸிரியா வுக்கு வந்திருக்கலாம். அதற்குப் பிறகு, நிச்சயமாக, அவர்கள் எகிப்தின்மீது படையெடுத்து வருவார்கள். எனவே, இவ்வாறான நெருக்கடியான சூழ்நிலையில் ஆற்ற லும் அறிவும் நிறைந்த, அனுபவம் முதிர்ந்த ஒருவர் சிம்மா சனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். ஆனால், பகலெல்லாம் அடிமைகளோடு புருக்களுடன் விளையாடிக்கொண்டிருப்பதை யன்றி வேறொன்றும் அறியாத பாலகன் என்ன செய்ய முடியும்?" என்று கவலையுடன் கூறினார். அவர் கூறுவதே உண்மை யென்று மக்கள் ஒப்புக்கொண்டார்கள். ஹி. 657 துல்கஃதா நான்காம்நாள் மன்ஸூர் சிம்மாசனத்திலிருந்து இறக்கப்பட்டார். வீரத்திலும் விவேகத்திலும், ராஜதந்திரத் திலும் மிகைத்திருந்த அவருக்கு முடிசூட்டி, முஜப்பர் என்னும் பட்டம் கொடுத்தார்கள்.

மலிக் முஜப்பர் ஸைபுத்தீன்

இதற்கிடையில் தாதாரிகள் ஸிரியாவில் நுழைந்து விட்டார்கள். அவர்களுடைய தலைவன் ஹலாகுகான், டமஸ் கஸ் பிரதேசத்தையும், ஸிரியா கடற்கரையையும், பிறகு எகிப்தையும் வென்றுவிட நினைத்தார். முஜப்பருக்கு ஹலாகுகான் ஒரு கடித மெழுதினார். அதில், "போரின்றி நாட்டை என்னிடம் கொடுத்துவிடும். இன்றேல் பக்தாத் வாசிகளின் கதியே உமக்கும் வந்து சேரும்" என்று அச்சு றுத்தினார்.

முஜப்பர் பயந்துவிட்டார். ஆனால், சிலுவைக்கட்சியா ருடன் சமர்செய்து வெற்றி யடைந்திருந்த எகிப்து நாட்டுப் போர்வீரர்கள் ஹலாகுகானுக்கு அஞ்சவில்லை. அஞ்சா

நெஞ்சத்துடன் அவர்கள் போர்புரியத் தயாரானுர்கள். எனவே, அவர்களை முஜப்பர் அழைத்துக்கொண்டு போர் புரியச் சென்ருர். அதற்குள் ஹலாகுகானுடைய தந்தை இறந்துவிட்டதாகச் செய்தி கிடைத்தது. ஆகையால், கித்புகா என்பவரை ஹலாகுகான் தமது பிரதிநிதியாக ஸிரியாவில் நியமித்து விட்டுத் தமது நாட்டுக்குத் திரும்பிச் சென்று விட்டார். மேலும், எகிப்து நாட்டின்மீது படையெடுத்துச் செல்லும்படி கித்புகா என்பவருக்குக் கட்டளையிட்டார். ஹி. 658 ஷிவ்வால் மாதம் அய்ன் ஜாலூத் என்னுமிடத்தில் இரு கட்சியாருக்கும் போர் நடந்தது. அதில் தாதாரிகள் தோல்வியடைந்தார்கள். கித்புகா கொல்லப்பட்டார். அவருடைய மகனும் கைதியானுர். எகிப்து நாட்டுச் சேனைக்கு ஏராளமான சாமான்களும் கணக்கற்ற ராணுவத்தளவாடங்களும் கிடைத்தன.

முஜப்பர் அதற்குப் பிறகு பய்பர்ஸ் பந்துகதாரீ என்பவரை தாதாரிகளைப் பின்தொடர்ந்து செல்லுமாறு அனுப்பினுர். மேலும், தாதாரிகளை அவர் ஸிரியாவிலிருந்து துரத்திவிட்டால் அவருக்கு ஹலப் மாகாண கவர்னர் பதவி அளிப்பதாகவும் வாக்களித்தார். பைபர்ஸ் பந்துகதாரீ அவ்வாறே சென்று, தாதாரிகளை ஸிரியாவிலிருந்து துரத்திவிட்டார். ஆனல், முஜப்பர் தமது வாக்கின்படி நடக்கவில்லை. மவ்ஸில் கவர்னரின் புதல்வர் அலாவுத்தீன் என்பவரை ஹலப் கவர்னராக அவர் நியமித்தார். பைபர்ஸ் இதையறிந்து மம்லூக் குழுவின் ஒரு கோஷ்டியைச் சேகரித்துத் திரும்பி வரும்பொழுது கெய்ரோ நகர் அருகில் மலிக் முஜப்பர் ஸைபுத்தீனைக் கொன்றுவிட்டார். அதற்குப் பிறகு இந்தக் கோஷ்டியார் திடீரென்று ஸுல்தானுடைய அரண்மனைக்குள் வந்தார்கள். அங்கு மன்ஸூரின் பாதுகாவலராகவும் மம்லூக் குழுவின் தலைவராகவுமிருந்த பார்ஸுத்தீன் அக்தாரீ என்பவர், "முதலில் வாள்வீசியவர் எவர்?" எனக் கேட்டார். அதற்கு விடையாக, முதலில் நானே வாள்வீசினேன்" என்று பைபர்ஸ் கூறினுர். அவர்

அதைக்கேட்டு, "அப்படியானால், நீங்களே சிம்மாசனத்தில் அமருங்கள்!" என்று முடிவுசெய்தார். அப்பொழுதே பைபர்ஸ் ஸுல்தானாகிவிட்டதாக விளம்பரம் செய்யப்பட்டது.

மலிக் ஜாஹிர் பைபர்ஸ்

ஹி. 658–676 கி. பி. 1259–1277

ருக்னுத்தீன் பைபர்ஸ் பந்துகதாரி ஹி. 658 துல் கஃதா பதினேழாம் நாள் சிம்மாசனம் ஏறினார். பஹாவுத்தீனை மந்திரியாகவும், பேலி மலிக் என்பவரை நிதிமந்திரியாகவும் நியமித்தார். மலிக் மன்ஸூரைச் சேர்ந்தோரைச் சமாதானப் படுத்தி அவர்களைத் திருப்திசெய்து, அவரவர் வகித்திருந்த உத்தியோகங்களில் அவர்களையே தொடர்ந்து பணியாற்றும் படி செய்தார்.

அப்பாஸி கிலாபத்

பக்தாத் அழிந்தது. அப்பொழுது, இறுதி அப்பாஸி கலீபா முஸ்தஃஸிம் கொலையுண்டார். பிறகு. ஹி. 659இல் அப்பாஸி குடும்பத்தைச் சேர்ந்த அபுல் காஸிம் அஹ்மத் என்பவர் தாம் கலீபா ஸாஹிர் பி. அம்ரில்லாஹ்வின் புதல்வர் என்று உரிமை கொண்டாடிக்கொண்டு. எகிப்துக்கு வந்து சேர்ந்தார். பைபர்ஸ் அவரை ஆடம்பரத்துடன் வரவேற்று, மேதை மரியாதைகளுடன் கெய்ரோ நகருக்கு அழைத்துக்கொண்டு சென்றார். இறுதி அப்பாஸி கலீபா முஃதஸிமுக்குப் பிறகு கலீபாவின் பீடம் மூன்றரை ஆண்டு களாகக் காலியாகவே இருந்தது. எனவே, பய்பர்ஸ் அதை மீண்டும் நிறுவும் நோக்கத்துடன், ஆலிம்களையும் (காஜி) நீதிபதிகளையும் ஒன்று சேர்த்தார். இந்த அஹமத் என்பவரின் குடும்ப உரிமைகளை விசாரித்து, அவை உண்மையென்று அறிந்த பிறகு, முஸ்தன்ஸிர் என்னும் பட்டத்துடன் அவரை கலீபாவாகப் பிரகடனம் செய்தார். எல்லோரும் பைஅத்–விசுவாசப் பிரமாணம் செய்தார்கள். அன்றுமுதல் அப்பாஸி கிலாபத் எகிப்து நாட்டில் கெய்ரோ நகரில் வந்துவிட்டது.

வெற்றிகள்

ஸுல்தான் பய்பர்ஸ் உள்நாட்டு நிர்வாக விஷயங்களை ஒருவாறு சீரமைப்புச் செய்தார். அதற்குப் பிறகு, ராணுவத் தளவாடங்களைத் தயாரித்துக்கொண்டு, சிலுவைக் கட்சி யாரைத் தாக்கச்சென்ருர். ஹி. 663இல் தொடங்கி இரண்டாண்டுகளாக போர்கள் நடந்துகொண்டே இருந்தன. இறுதியாக, அவர், ஸிரியாவின் ஒவ்வொரு நகரிலிருந்தும் சிலுவைக் கட்சியாரைத் துரத்தியடித்தார். பிறகு, வடக்கில் அர்மீனியாவை வென்ருர். அதற்குப் பிறகு அனதூலியா வரை சென்ருர். அங்கு ஹலாகு கானுடைய மகன் ரிகா கான் அவரை எதிர்க்க வந்தார். ஆனல், அவரையும் தோற்கடித்துவிட்டார்.

ஹி. 665இல் பைபர்ஸ் எகிப்துக்குத் திரும்பினர். சிலகாலம் அரசியல் நிர்வாகத்தில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தார். பிறகு, மறுபடியும் யுத்தத்திற்குத் தயாரானர். ஹி. 666இல் பலஸ்தீனில் இருந்த சிலுவைக் கட்சியாரைத் தாக்கினர். அங்கிருந்து அன்தாக்கியாவையும் இன்னும் முன்னேறிச்சென்று மர்கியா என்னுமிடம் வரை வென்றுகொண்டே சென்ருர். அங்கிருந்து அதே ஆண்டில் பக்தாதுக்குத் திரும்பினர்.

பாதினீ கூட்டத்தாரை ஹலாகு கான் அழித்துவிட்டார். எனினும், அந்தப் பாதகர்களில் சிலர் உலகில் உயிருடன் இருந்தார்கள். ஹி. 670இல் அவர்கள் மறுபடியும் குழப்பஞ் செய்ய ஆரம்பித்தார்கள். ஸுல்தான் பைபர்ஸ் ஒரு சேனையுடன் புறப்பட்டார். பாதினிகளை எதிர்த்தார். அவர்களுடைய கோட்டைகளை வென்ருர். இறுதியாக, அவர்கள் அனைவரையும் கொலைசெய்து அவர்களை உலகில் இல்லாமலேயே செய்துவிட்டார்.

தாதாரிகள் மறுபடியும் ஸிரியா நாட்டின்மீது படையெடுத்துவந்தார்கள். அவர்களை எதிர்க்க கலாவூன் என்பவர் அனுப்பப்பட்டார். கலாவூன் சென்ருர். தாதாரி

களைப் பலவிடங்களில் தோற்கடித்தார். கலாவூனுடைய வெற்றியால் ஸுல்தான் பைபர்ஸ் மகிழ்ச்சியடைந்து, தமது புதல்வனுக்கு கலாவூனுடைய புதல்வியை மணமுடித்தார். மேலும், கலாவூனுக்குத் தமது புதல்வரின் பாதுகாவலர் (அதாபக்) என்னும் பதவியையும் அளித்தார்.

ஹி. 674 இல் அமீர் ஆக்ஸன்கர் என்பவரை நூபியா நாட்டுக்கு அனுப்பி அப்பிரதேசம் முழுவதையும் வென்றார்.

ஹி. 675 இல் ஹலாகுகானுடைய புதல்வர், அபாகா கான் தலைமையில் கிழக்குத் தாதாரிகள் இராகே அஜம் பிரதேசத்தில் படையெடுத்துவந்தார்கள். ஸுல்தான் பைபர்ஸ் அவர்களை எதிர்த்துக் கடும்போர் புரிந்தார். அந்தப் போரில் இரு கட்சியிலும் ஏறத்தாழ ஓர் இலட்சம் போர் வீரர்கள் இறந்துபோனார்கள். இறுதியில் தாதாரிகள் தோல்வியடைந்து ஓட்டம் பிடித்தார்கள். இதற்கிடையில் தாதாரிகள் வருவதை அறிந்த சிலுவைக் கட்சியார் அதைத் தங்களது நல்ல வாய்ப்பாக நினைத்து உடனே முஸ்லிம்களைத் தாக்கினார்கள். கய்ஸாரியா நகரைக் கைப்பற்றினார்கள். ஸுல்தான் பய்பர்ஸ் உடனே சென்று சிலுவைக் கட்சியாரைத் தோற்கடித்து, பிறகு கய்ஸாரியா நகரில் பிரவேசித்தார். அதற்குப் பிறகு அவர் டமஸ்கஸ் நகருக்கு வந்தார். அங்கு வியாதியுற்று ஹி. 676 முஹரம் 27ல் காலஞ்சென்றார்.

பண்புகள் :

ஸுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபியைப் போன்றே ஸுல்தான் பய்பர்ஸ் பெருந்தியாகி. அஞ்சா நெஞ்சமுள்ளவர். வெற்றிவீரர். தலைசிறந்த அரசியல் நிர்வாகி. அவரைப் போன்றே இவரும் சிலுவைக்கட்சியாரைப் பல தடவை தோற்கடித்து, அக்கா, ஸிரியா நாட்டு தராபலஸ், இவ்விரு நகரங்களைத் தவிர, அவர்கள் அதுவரை கைப்பற்றியிருந்த எல்லா நகரங்களையும் பிடுங்கிக் கொண்டார். மறுபுறம் அவர் பக்தாதைப் பெற்றுக்கொண்டு தாதாரிகளைக் கடுமையாகத் தோற்கடித்தமையால் அவர்கள் எகிப்து,

ஸிரியா ஆகிய இரண்டு நாடுகளையும் வெல்ல முடியாமல் திரும்பிவிட்டார்கள். உடனிருந்து கொல்லும் வியாதியைப் போன்று முஸ்லிம்களுடன் பிறந்து வளர்ந்து முஸ்லிம் மேதைகளை அழிக்க முற்பட்ட பாத்தினி கூட்டத்தாரை முற்றிலும் உலகத்திலிருந்தே அழித்துவிட்டார்.

இவர் நடுத்தரமான உயரமுள்ளவர். அழகான உடல் அமைப்பும், சந்திரன் போன்ற சுந்தர வதனமுமுள்ளவர். கம்பீரமான தோற்றமுள்ளவர். இணையில்லாத ராணுவ வீரர். குதிரைச் சவாரியில் ஒப்புவமை இல்லாதவர். இராணுவத்தில் அவருக்கு அளவுக்கதிகமான கவர்ச்சியும், ஆர்வமும், இருந்தது. சிற்றரசர், இளவரசர், போர்வீரர் ஆகியோரை உடன்கொண்டு மைதானத்தில் நின்று அம் பெய்தல், வாள்வீசல், ஈட்டி எறிதல், குதிரைச் சவாரி செய்தல் முதலிய பயிற்சிகளைத் தினந்தோறும் செய்வார். அனைவரும் அவ்வாறே செய்யவேண்டுமென்றும் கூறுவார். எந்த காரியத்தைச் செய்தாலும், அதன் பலாபலன்களைக் குறித்து நன்கு ஆராய்ந்த பிறகே அதைச் செய்வார். அவ்வாறு எண்ணித் துணிந்த கருமத்தை முடித்த பிறகே மறுவேலை பார்ப்பார். ஜிஹாத் என்னும் மார்க்கப் போரில் அளவுகடந்த பாசமுள்ளவர். இஸ்லாமிய மார்க்கச் சட்டங் களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பார். மக்கள் மீது விதிக்கப்பட் டிருந்த கடுமையான தீர்வைகளை நீக்கிவிட்டார். மக்கள் மதுபானம் செய்யலாகாதெனவும், இதர லாகிரி வஸ்துக்களை உபயோகிக்கலாகாதெனவும் கட்டளையிட்டார். தீமை விளை விக்கும் செயல்களை முற்றிலும் அகற்றினர். எப்பொழுதும் இஸ்லாமியக் கொள்கைகளுக்குத் தலைசாய்ப்பார்.

ஹஜ் காலத்தில் மக்காவுக்கு அனுப்பப்படும் மஹ்மல் போர்வை இவர் காலத்திலிருந்தே முதலில் கெய்ரோ நகரின் வீதிகளில் பவனிவந்து, அவ்வாறு ஊர்வலம் செல்லும்பொழுது அடிமைகளின் சிலம்பு விளையாட்டுகளும், ஈட்டிகள், வாட்கள் வீசும் விளையாட்டுகள் முதலியன பல

விடங்களில் நின்று நின்று, அதற்குப் பிறகு அங்கிருந்து புறப்பட்டு மக்கா நகருக்குச் செல்லும் வழக்கம் உண்டாயிற்று.

ஹி. 667 இல் ஸுல்தான் பைபர்ஸ் இஸ்லாத்தின் ஐந்தாம் கடமையான ஹஜ் செய்யச் சென்ருர். அப்பொழுது புனித கஃபத்துல்லாஹ்வைத் தமது கரங்களால் பன்னீர் தேய்த்துத் தேய்த்துக் கழுவுவார். பட்டினுல் செய்த உறையை ஏற்றினுர். மதீனு நகரில் நபிபெருமானுர் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லமவர்களின் சங்கையான அடக்கஸ்தலத்தின் அருகில் மக்கள் போய் நிற்பதைக் கண்டார். அதை மரியாதைக் குறைவாக நினைத்தார். மக்கள் கொஞ்ச தூரத்தில்நிற்பதே நலமென்று எண்ணினுர். ஆகையால், ஒரு கிராதி கட்டினுர்.

மஸ்ஜிதே நபவீ என்னும் மதீனு பள்ளிவாயிலில் நெருப்புப் பிடித்து மராமத்துச் செய்யும் தேவை இருந்தது. கலீபா முஸ்தஃஸிம் கட்டிட வேலையை ஆரம்பித்தார். ஆனுல், அதற்கிடையில் அவர் தாதாரிகளால் கொலையுண்டு போனுர். ஆகையால், ஸுல்தான் பைபர்ஸ் அந்த மஸ்ஜிதைக் கட்டி முடித்தார்.

தருமம் செய்வதில் ஸுல்தான் பைபர்ஸ் ஒப்பற்றவர். ஆயிரமாயிரம் மூட்டைத் தானியம் ஏழை மக்களுக்கும் தர்வேஷ்–துறவிகளுக்கும் கொடுத்து உதவி செய்வார். ரம்லான் மாதத்தில் அரண்மனை அன்னதானச் சாவடியிலிருந்து. கேட்போருக்கெல்லாம் கணக்கில்லாமல் உணவு கொடுப்பார். மக்கா மதீனு நகரங்களில் மேன் மக்களுக்கு, முஜாவிர்–திருப்பணி செய்வோருக்கும் உபகாரச் சம்பளங்கள் அனுப்பி வந்தார். அனுதைகளை அடக்கம் செய்வதற்காகத் தமது சொந்த நிலங்களை இனுமாகக் கொடுத்தார்.

நான்கு நீதிபதிகள்

எகிப்து நாட்டில் ஸுல்தான் பைபர்ஸ் ஆயிரமாயிரம் பொதுநலப்பணிகள் செய்தார், பணிசெய்வதில் ஆர்வம் மிகுந்தவர். மேலும், வண்ணப் பகட்டுள்ள சிறந்த ஜாமிஃ

மஸ்ஜிதும் நீதிமன்றமும் கட்டுவித்தார். அந்த மன்றத்தில் அவர் வாரத்தில் ஒருநாள் வருவார். நீதிபதிகளுடன் உட்கார்ந்து விசாரணைத் தீர்ப்புகளில் கலந்து கொள்வார். எகிப்திலும் ஸிரியாவிலும் வெகு காலமாக ஷாபியீ மார்க்க முறையே செல்வாக்கு அடைந்திருந்தது. எனவே, அங்கு ஷாபியீ மார்க்கத்தைச் சேர்ந்த நீதிபதிகளே நியமிக்கப் பட்டிருந்தார்கள். எப்பொழுதாயினும் அவசியம் நேர்ந்த பொழுது நீதிபதிகளே தங்கள் சார்பாக இதர மார்க்கங்களைச் சேர்ந்த ஆலிம்களைத் தங்கள் பிரதிநிதியாக நியமித்து வந்தார்கள். பாத்திமீ கலீபாக்களின் ஆட்சியில் ஷிஆ மார்க்கமும் இஸ்மாயீலி கொள்கைளும் பரவிவிட்டன, அச்சமயம் மந்திரி அப்ஸலுடைய புத்திரர் அஹ்மத் என்பவர் மந்திரியாயிருந்த பொழுது ஹி. 525ல் நான்கு மார்க்கங்களைச் சேர்ந்த நீதிபதிகளை நிரந்தரமாக நியமித்தார். ஸுல்தான் பின் ரிஷா என்பர் ஷாபியீ பிரிவுக்கும், அபூ முஹம்மத் அப்துல் மௌலா என்பவர் மாலிகி பிரிவுக்கும், அப்ஸல் பின் அஸ்ரக் என்பவர் இஸ்மாயீலிகளுக்காகவும், இப்னு அபீ காமில் என்பவர் அஸ்ன அஷ்அரிகளுக்காகவும் நியமிக்கப்பட் டார்கள். பாத்திமீகள் காலத்திற்குப் பிறகு, ஸுல்தான், நூருத்தீன், ஸுல்தான் ஸலாஹுத்தீன் முதலியோர் ஷாபியீ மார்க்கத்தைப் பின்பற்றியவர்கள். எனவே, அவர் கள் ஷாபியீ நீதிபதிகளையே நியமித்தார்கள். ஸுல்தான் பைபர்ஸ் காலத்தில் கெய்ரோ நகரில் ஜாமிஃ ஹாமிகி என்னும் ஒரு பள்ளிவாயிலில் ஜும்ஆ தொழுகை ஷாபியீ மார்க்கத்தை அனுசரித்து நடந்து வந்தது. ஜாமிஃ அஸ்ஹரிலும் ஜும்ஆ தொழுகை நடக்கவேண்டுமென்று ஸுல்தான் பைபர்ஸ் விரும்பினர். ஆனால், நீதிபதி தாஜுத்தீன் அனுமதிகொடுக்க மறுத்துவிட்டார். எனவே, ஹனபீ மார்க்கத்தைச் சேர்ந்த காஜி ஸத்ருதீன் ஸுலைமான் என்பவரை நியமித்து அவரிடம் பத்வா-மர்ர்க்கத்தீர்ப்பு வாங்கி, அதற்குப் பிறகு ஷர்புத்தீன் உமர் என்னும் மாலிகி காஜியையும் ஷம்ஸுத்தீன் முஹம்மத் என்னும் ஹம்பலி காஜியையும் நியமித்தார். அன்றுமுதல் எகிப்து நாட்டில்

ஸுன்னத் வல் ஜமாஅத்தின் நான்கு பிரிவுகளின் நீதிபதிகளும் நியமிக்கப்பட்டு வந்தார்கள்.

இமாம் நூதி

ஸுல்தான் பைபர்ஸ், டமஸ்கஸ் நகரில் இருந்த பொழுது ஜிஹாத் என்னும் மார்க்கப் போரின் செலவுக்காக முஸ்லிம்களிடம் பணம் வசூலிக்க வேண்டுமென்று எண்ணி ஞர். இவ்வாறு செய்ய ஸிரியா நாட்டு ஆலிம்கள் அனுமதி அளித்தார்கள். ஸஹீஹ் முஸ்லிம் எனப்படும் ஹதீஸ் கிரந்தத் தின் விரிவுரையாளரான அல்லாமா முஹியுத்தீன் நூதி என்னும் மார்க்கமேதையும் அழைக்கப்பட்டார். அவரிடமும் கையெழுத்திடும்படி ஸுல்தான் விண்ணப்பம் செய்தார். ஆனல், அவர் மறுத்துவிட்டார். மேலும், அவர் அப்பொழுது ஸுல்தான் பைபர்ஸிடம், "நீர் அமீர் பந்துகதாரீ என்பவ ரால் விலைக்கு வாங்கப்பட்ட அடிமை. உம்மிடம் ஒரு பைசா வும் கிடையாது. இதை நான் அறிவேன். இப்பொழுது, ஆண்டவன் உமக்கு ஸுல்தான் என்னும் உயர்பதவி அளித் திருக்கின்ருன். நீர் ஆயிரக்கணக்கான அடிமைகளை விலைக்கு வாங்கி இருக்கிறீர். அந்த அடிமைகளிடமுள்ள பொருட்கள் பொன்னலானவை. மேலும், உம்முடைய அரண்மனையில் பொன்னலும் இரத்தினங்களாலும் செய்த நகைகளை அணிந்துகொண்டு நூறு அடிமைப் பெண்கள் இருக்கின் ருர்கள். இவ்விதமான விலையுயர்ந்த பொருட்கள் அனைத் தையும் நீர் இராணுவத்தின் அவசியத்திற்காக எடுத்துச் செலவு செய்தீரென்று எனக்குத் தெரியாத வரையில், நீர் ஏழை முஸ்லிம்களிடம் வசூலிக்கலாம் என்று நான் எவ்வாறு கையெழுத்திடுவேன்?" என்ருர்.

இத்தகைய கடுஞ்சொற்கள் நிறைந்த மறுமொழியைக் கேட்ட ஸுல்தான் பைபர்ஸ் சினங்கொண்டார். பிறகு, இமாம் நூதியை நாட்டிலிருந்து வெளியேற்றிவிட்டார். எனவே, இமாம் அங்கிருந்து நூதீ என்னும் தமது சொந்த ஊருக்குச் சென்றுவிட்டார். இதை யறிந்த ஆலிம்கள் அனைவரும் ஸுல்தானிடம் சென்ருர்கள். ஸுல்தானிடம்,

"நூதி எங்களுடைய தலைவர். எங்கள் இமாம். நீங்கள் அவரை இங்கிருந்து விலக்கி யிருக்கக்கூடாது" என்றுர்கள். உடனே, ஸுல்தான் தமது கட்டளையை வாபஸ் வாங்கிக்கொண்டார். இமாம் நூதி, டமஸ்கஸ் நகரில் வசிக்கலாமெனவும் அனுமதி தந்தார். ஆனல், இமாம் நூதி, "முடியாது, முடியாது. பைபர்ஸ் உயிருடன் இருக்கும்வரை நான் அங்கு வரமாட்டேன்" எனக் கூறிவிட்டார். மறு மாதமே, பைபர்ஸ் காலஞ்சென்றுவிட்டார்.

சரித்திராசிரியர்கள் பொதுவாக இமாம் நூதியின் செயலை ஆதரித்து அவரது வாக்கு உண்மையானதென்று நினைக்கிருர்கள். ஆனல், கையெழுத்திட்ட உலமாக்கள் அனைவரும் அறிவீனர்களாகவும், உலக இச்சையே நிறைந்தோராகவும் இருந்தார்கள் என்று நாம் கூறிவிட முடியாது. ஸுல்தான் பைபர்ஸ் தமது அரண்மனையிலிருந்து ஜிஹாதுக்காக இந்தச் சந்தா வசூலை ஆரம்பியாதிருந்தால் அவர்மீது குற்றம் சாட்டலாம். ஆனல், முஸ்லிம்களை, காபிர்கள் எதிர்த்து அவர்களுடைய உயிரையும் சொத்தையும் அழித்து விடுவதை அனுமதிப்பதைக் காட்டிலும், முஸ்லிம் பாதுஷாவுக்குப் பணம் மட்டும் கொடுத்து விடல் வெகு இலேசான வேலையல்லவா? அஃதாவது, உடல் பொருள் ஆவியை அர்ப்பணிக்க முன்வரல் மேலானதா? அல்லது பணம்மட்டும் கொடுத்துவிட்டு இருந்துவிடல் மேலானதா ? என்பதே இங்கு எழுந்த பிரச்சினை.

அதனல்தான் சுல்தான் பைபர்ஸ், இமாம் நூதியுடன் கோபித்துக்கொண்டார். இன்றேல் அவர் எப்பொழுதும் ஆலிம்களைக் கண்ணியப்படுத்துவார். அது அவரது சிறந்த பண்பாக இருந்தது. அவரது ஆட்சியின் தொடக்கத்தில் எகிப்து நாட்டில் அல்லாமா இஜ்ஜுத்தீன் பின் அப்துஸ்ஸலாம் என்பவருடைய செல்வாக்கு அதிகரித்து, அவர் சொல்வதை யெல்லாம் ஸுல்தான் பைபர்ஸ் செய்தல் வழக்கமாக இருந்தது. அவருக்கு விரோதமாக ஏதாயினும் செய்ய ஸுல்தான் பைபர்ஸ மனம் துணியமாட்டார். அவர்

இறந்தபொழுது, ஸுல்தான் பைபர்ஸ், " இன்றுவரை ஷெய்க் (அல்லாமா இஜ்ஜுத்தீன்) ஆட்சி செய்தார். இப்பொழுது எனது ஆட்சி ஆரம்பமாகின்றது " என்றார்.

மலிக் ஸயீத் பரகா கான்
ஹி. 676 கி. பி. 1277

ஸுல்தான் பைபர்ஸ் இறந்த பிறகு, அவரது தலைமகன் நாஸிருத்தீன் பரகா கான் சிம்மாஸனம் ஏறினார். இவர் தமது தகப்பனாரால் விலைக்கு வாங்கப்பட்ட அடிமையான பல்பாயீ என்பவரை மந்திரியாக நியமித்தார். இந்த மந்திரி அரசியல் நிர்வாகத்தில் சிறந்தவர். எனவே, அவர் காலத்தில் மக்கள் இன்புற்று வாழ்ந்தார்கள். ஆனால், அவர் வெகு சீக்கிரம் இறந்துவிட்டார். மந்திரி பிரதானிகள் வேண்டுமென்றே அவரைக் கொன்றுவிட்டார்கள் என்று நினைத்து ஸுல்தான் அவர்கள்மீது சந்தேகிக்க ஆரம்பித்தார். இறுதியாக, நூபியாவை வென்ற ஆக் சன்கர் என்பவரைத் தமது மந்திரியாக நியமித்தார். ஆனால், அந்த மந்திரியும் அவருக்குத் திருப்தி அளிக்கவில்லை. எனவே, அலக்சாந்திரிய கோட்டைக் கோபுரத்தில்கழுத்தை நெறித்துக் கொன்றுவிட்டார். எனவே மந்திரிபிரதானிகள் அவருக்கு விரோதமாகக் கிளம்பிச் சதிசெய்ய ஆரம்பித்தார்கள். இதற்கிடையில் டமஸ்கஸ் கவர்னர் ஷர்புத்தீன் ஸஞ்சர் என்பவர் சுவாதீன விளம்பரம் செய்து விட்டாரென்று பஹிரங்கமாகக் கூறப்பட்டது. மலிக் ஸயீத் சேனைகளுடன் அங்கு சென்றார். ஆனால், அங்கு சென்ற பிறகே, அச்செய்தி உண்மையில்லை எனவும், அது எகிப்து நாட்டுத் தலைவர்கள் செய்த ஒரு சூழ்ச்சி எனவும் தெரிந்து கொண்டார். திரும்பிவந்து அவர்களைத் தண்டிக்க எண்ணினார். ஆனால் அவர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து இவரைச் சூழ்ந்துகொண்டார்கள். அவர்கள் அவரைக் கொலை செய்ய முயன்றபொழுது கலீபா ஹாகிம் பி அம்ரில்லாஹ் தடுத்துவிட்டார். இறுதியாக, அவர்கள் அவரைச் சிம்மாசனத்திலிருந்து இறக்கி கோட்டையில்

காவலில் வைத்துவிட்டார்கள். பிறகு, அவரது சகோதரர் ஸலாமிஷ் என்பவரை மலிக் ஆதில் என்னும் பட்டத்துடன் ஸுல்தானுக நியமித்தார்கள்.

மலிக் ஆதில்-ஸலாமிஷ்

இவர் தமது ஏழாம் வயதில் ஹி. 680 ரபீயுல் அவ்வல் மாதம் சிம்மாசனத்தில் அமர்ந்தார். அதாபக் எனப்படும் இளவரசுப் பாதுகாவலராக ஸைபுத்தீன் கலாவூன் நியமிக்கப்பட்டார். அவர் ஆறு மாதம் கழித்து ஸலாமிஷை சிம்மாசனத்திலிருந்து இறக்கிவிட்டு, கோட்டையில் காவலில் வைத்துவிட்டார். பிறகு, தாமே சிம்மாசனம் ஏறினுர். மக்கள் அவருக்கு மலிக் மன்ஸுர் என்னும் பட்டம் கொடுத்தார்கள்.

மலிக் மன்ஸுர்-கலாவூன் அல்ஃபீ

ஸைபுத்தீன் கலாவூன் என்னும் இவர் ஆக் ஸன்கர் என்பவரால் ஆயிரம் தீனுருக்கு வாங்கப்பட்டவராதலால், அல்ஃபீ என்னும் பெயரும் இவருக்கு வழங்கிவந்தது. இவரது திறமையைக் கண்ட மலிக் ஸாலிஹ் ஹி. 647இல் அவருக்கு விடுதலையளித்துவிட்டார். அன்றுமுதல் முன்னேற்றமடைந்து, இறுதியாக, ஹி. 678ல் சிம்மாசனத்தில் அமர்ந்தார். பிறகு, தம்மைச் சேர்ந்தோருக்கு உயர்ந்த உத்தியோகங்கள் கொடுத்தார். தமது சொந்தச் செயலாளர் பக்ருத்தீன் என்பவரை மந்திரியாக நியமித்தார்.

டமஸ்கஸ் கவர்னர் ஷர்புத்தீன் ஸன்ஜர் என்பவர் இப்பொழுது உண்மையாகவே சுவாதீன விளம்பரம் செய்துவிட்டார். மேலும், மலிக் ஆதில் என்னும் பட்டமும் சூட்டிக்கொண்டார். ஸிரியா நாட்டாரும் அவருக்கு விசுவாசப் பிரமாணம் செய்தார்கள். இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட ஸுல்தான் மலிக் மன்ஸுர், உடனே தமது தளபதி அமீர் தரன்தாயீ என்பவரை அனுப்பினுர். அவர் சென்று கடும்போர் புரிந்தார். இறுதியாக, மலிக் ஆதில் கைது

செய்யப்பட்டு, காஹிராவுக்குக் கொண்டுவரப்பட்டு இருட்டறையில் வைக்கப்பட்டார். பின்னர் ஹிஸாமுத்தீன் லாச்சீன் என்பவர் டமஸ்கஸ் கவர்னராக நியமிக்கப்பட்டார். ஹி. 680இல் ஹலாகுகான் உடைய இரண்டு புத்திரர்கள் ஸிரியாமீது படையெடுத்தார்கள். ஒரு படை அபாகா கான் தலைமையிலும்,மற்றொன்று எண்பதினாயிரம் குதிரைவீரருடன் அவர் சகோதரர் மஞ்சூ தைமூர் தலைமையிலும் இருந்தது. மலிக் மன்ஸூர் தமது சேனைகள் அனைத்தையும் தயார் செய்துகொண்டு சென்றார். ஹம்ஸ் நகரின் அருகில் ரஜப் 14ம் நாள் சேனைகள் அணிவகுத்து நின்று கடும்போர் புரிந்தன. இறுதியில், மன்ஜூர் தைமூர் கொல்லப்பட்டார். அபாகா கான் தோல்வியடைந்த சேனையுடன் ஓட்டம் பிடித்து ஹமதானுக்குச் சென்றார். அங்கு அவரது சகோதரர் தேக்கூதார் அவ்கலான் என்பவர் அவருக்கு விஷமிட்டுக் கொன்றுவிட்டுத் தாமே அரசராகிவிட்டார்.

அதற்குப் பிறகு, இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டு அஹ்மத் கான் என்று பெயர் வைத்துக்கொண்டார். அதன் விளைவாக, அவருக்கும் எகிப்து நாட்டாருக்கு மிடையில் இஸ்லாமிய சகோதரத் தொடர்பு உண்டாகிவிட்டது. எனவே, இருகட்சியாரும் நேச உடன்படிக்கை செய்துகொண்டார்கள்.

தாதாரிகளும் இஸ்லாமும்

தாதாரிகள் கல்வியில்லாதவர்கள். காட்டுமிராண்டிகள். கொலைபாதகர். மனித இரத்தத்தின் தாகமுடையோர். எனினும், அவர்களிடம் சில மேலான பண்புகள் இருந்தன. சமூகக்கட்டுப்பாடு, கட்டளைக்குக் கீழ்ப்படிதல், உண்மை பேசல், ஒருவரை ஒருவர் நேசித்தல், நேர்மை, ஆகியவை அவர்களுடைய சிறப்பான பண்புகள். அவர்கள் எப்பொழுதும் பிறருடைய கொள்கைகளை கண்ணியப்படுத்துவார்கள். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசமாட்டார்கள். இத்தகைய பண்பு நலன்கள் காரணமாக ஆண்ட

வன் அவர்களுடைய உள்ளங்களைத் திறந்துவிட்டான் போலும். இன்றேல், இந்த விலைமதிப்பில்லா இஸ்லாம் என்னும் அருஞ் செல்வம் அவர்களுக்கு அருளப்பட மாட்டாது.

சங்கேஸ்கானுடன் இருந்த தாதாரிகள் இஸ்லாமிய நாடுகளில் நுழைந்து முஸ்லிம்களுடன் கலந்து நெருங்கிய தொடர்புகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆகையால், அவர்களில் அநேகர், படிப்படியாக இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், இவ்வாறு முஸ்லிமாகி விட்டவர்கள் தங்கள் தலைவர்களுக்கு அஞ்சினார்கள். ஆகையால், அவர்கள் இஸ்லாமிய நாடுகளுக்குச் சென்று அங்கு வசித்தார்கள். குறிப்பாக எகிப்து நாட்டுக்கு பெரும் பாலோர் சென்றார்கள். ஹி. 680இல் அவர்களுடைய தலைவர் அஹ்மத் கான் மேற் கூறியவாறு இஸ்லாம் மார்க்கத்தை ஒப்புக்கொண்டபொழுது, தாதாரிகளெல்லாம் முஸ்லிமாகிவிட்டார்கள். கத்தா பிரதேச அதிகாரியாக இருந்த குப்லாயீ கானுடைய பௌத்திரர் அந்த்ஸா ஸுல்தான் என்பவரே தமது ஒன்றரை இலட்சம் போர் வீரர்களுடன் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவி, இரவும் பகலும் ஆண்டவன் வணக்கத்திலும் திருக்குர்ஆன் ஓதுவதிலும் காலங்கழிக்க ஆரம்பித்தார். காக்கான் ஆஜம் என்னும் பெருந்தலைவர் அவரை அழைத்துப் புத்திமதி கூறி, இஸ்லாம் மார்க்கத்திலிருந்து அவரை விலக்கிவிடப் பெரு முயற்சி செய்தார். ஆனால், அவருக்கு இவர் கூறிய மறு மொழிகள் காக்கான் ஆஜமையே இஸ்லாம் மார்க்கத்தை நேசிக்கும்படி செய்துவிட்டன. எனவே, கத்தா பிரதேச மக்களில் பெரும்பாலோர் முஸ்லிமாகிவிட்டார்கள்.

இஸ்லாமின் இந்த விரோதிகள்—இஸ்லாமியக் கலைகளின் உறைவிடமான பக்தாத் நகரை அழித்தவர்கள்—முஸ்லிம்களின் கலீபாவையும் மார்க்க அறிஞர்களையும் வெட்டிக் குவித்தவர்கள்—இப்பொழுது முஸ்லிம்களாகிவிட்டார்கள்! இஸ்லாத்தின் கடும்பகைவர் இப்பொழுது அதன்

அடிமைகளாகி, இஸ்லாமிய சேவை செய்தார்கள்! பிறகு அவர்களில் ஒரு கிளையாரான உஸ்மானியத் துருக்கியர் முஸ்லிம் உலகின் கலீபாக்களாகவும், மக்கா, மதீனு என்னும் இஸ்லாமியப் புனித நகரங்களின் மேற்பார்வையாளராகவும் விளங்கினுர்கள்! இதைக் குறித்தே, அல்லாமா முஹம்மத் இக்பால் தமது ஷிக்வா—ஜவாபே ஷிக்வா என்னும் உர்து கவிதையில், முஸ்லிம்களுக்கு அவர்களுடைய பொறுப்பை உணர்த்தும் வாயிலாக, "தாதாரிகளின் படையெடுப்பின் வரலாறு உனக்குப் படிப்பினை கற்பிக்கவில்லையா? விக்கிரக ஆலயங்களிலிருந்து கஃபாவுக்குப் பாதுகாவலர் கிடைத்து விடவில்லையா?" எனக் கூறுகின்றுர்.

இங்கு இவ்வாருக, ஹி. 688இல் ஸிரியாவில் தராபலஸ் நகரிலிருந்து சிலுவைக் கட்சியார் இயக்கம் செய்ய ஆரம்பித்தார்கள். மலிக் மன்ஸூர் அங்கு சென்று அவர்களைத் தோற்கடித்து நூற்றெண்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு அந்த நாட்டை அவர்களிடமிருந்து விடுவித்தார். அங்கிருந்து திரும்பிவந்த பிறகு, ஹி. 689 துல் கஃதா பதினுரும் நாள் கெய்ரோ நகரில் காலஞ் சென்ருர்.

மலிக் மன்ஸூர் அழகான வடிவமுள்ளவர். புத்திமான். வீரவான். சுருங்கக் கூறுவோர். அரசியல் நிர்வாகத்தில் சிறப்புடையவர். எனவே, மக்கள் நிம்மதியும் நலமும் பெற்று வாழ்க்கை நடத்தினுர்கள். இவர் கட்டிய மன்ஸூரி மஸ்ஜித், ஒரு பெரிய மருத்துவசாலை இவ்விரண்டும் இவரது நினைவுச் சின்னங்களாக இருக்கின்றன. தகுதியுள்ள தமது புதல்வர் அலீ என்பவரை பட்டத்திற்குரிய இளவரசராக இவர் நியமித்தார். மேலும், அவருக்கு அரசியல் கல்வியும் பயிற்சியும் அளித்தார். ஆனுல், அந்த இளவரசர், ஹி. 687இல் திடீரென்று இறந்துபோனுர். தமது புதல்வரை இழந்த துக்கம் இவரை மரணம் வரையும் விட வில்லை.

மலிக் அஷ்ரப் கலீல்

மலிக் மன்ஸூரின் புதல்வர் கலீல் என்பவர் பிறகு பட்டத்திற்கு வந்தார். அச்சமயம் அக்கா நகரம் ஒன்றே சிலுவைக் கட்சியாரின் கையிலிருந்தது. ஹி. 690இல் கலீல் அங்கிருந்தும் அவர்களைத் துரத்திவிட்டார். எனவே, இப்பொழுது பலஸ்தீன் முழுவதும் முஸ்லிம் ஆட்சியில் வந்துவிட்டது. ஹி. 691 (1291)இல் அர்மீனியாவின்மீது படையெடுத்து அர்ஸரூமை வென்றார். அங்கிருந்து திரும்பி வரும்பொழுது ஹி. 693இல் அடிமைகள் அவரைக் கொலை செய்துவிட்டார்கள். மலிக் அஷ்ரபும் அவரது தகப்பனாரும் சர்கஸீ அடிமைகளை அதிகமாகக் கண்ணியப்படுத்தினார்கள். எனவே, ஆயிரமாயிரமாக அவர்களை விலைக்கு வாங்கி, தங்கள் நம்பிக்கைக்கு உரியோராக்கிவிட்டார்கள். பழைய அடிமைகளுக்கு இதனால் பொறாமை உண்டாகிவிட்டது. எனவே, அவர்கள் ஒரு மனப்பட்டு அவரைக் கொலைசெய்து விட்டார்கள். அடிமைகளின் தலைவர் பேத்ரா என்பவரும் ஷய்திகளின் வீரத்தலைவரும் இந்தச் சதியில் கலந்திருந்தார்கள்.

மலிக் அஷ்ரப் இறந்த பிறகு பேத்ரா என்பவர் தலையில் கிரீடம் வைக்கப்பட்டது. ஆனால், க்ஷர்கஸி அடிமைகள் அன்றே அவரது தலையைக் கொய்து ஈட்டியில் வைத்து, நகரில் தெருத்தெருவாகச் சுற்றி வந்தார்கள். லாச்சீன் முதலியோர் அச்சங்கொண்டு மாறுவேடம்பூண்டு ஓடிவிட்டார்கள்.

மலிக் நாஸிர் முஹம்மத் பின் கலாவூன்

(முதல் தடவை)

மலிக் அஷ்ரப் உடைய இரண்டாம் சகோதரர் முஹம்மத் என்பவரை ஒன்பதாவது வயதில் க்ஷர்கஸி அடிமைகள் சிம்மாசனத்தில் ஏற்றினார்கள். மலிக் மன்ஸூருடைய அடிமைகளில் ஜைனுத்தீன் கித்புகா என்பவர் அரசாங்கப்

பிரதிநிதியாக்கப்பட்டு நிர்வாகத்தை ஏற்று, இல்முத்தீன் ஸன்கா என்பவரை மந்திரியாக நியமித்தார். இவ்விருவரும் சிம்மாசனத்தைப் பெற முயற்சித்தார்கள். இறுதியில், ஸன்கர் கொல்லப்பட்டார். எனவே, கித்புகாவை எதிர்ப்பார் ஒருவருமின்றி, ஹி.694 (கி.பி 1294) முஹர்ரம் ஒன்பதாம்நாள் மலிக் நாஸிரை சிம்மாசனத்திலிருந்து இறக்கி, ஸுல்தான் களைக் காவலில் வைக்குமிடமான கர்க் கோட்டைக்கு அவரை அனுப்பிவிட்டுத் தாமே சிம்மாசனத்தில் அமர்ந்து கொண்டார்.

மலிக் ஆதில், கித்புகா

கித்புகாவுக்கு மலிக் ஆதில் என்னும் பட்டஞ்சூட்டினுர் கள். ஸுல்தான் பய்பர்ஸ் உடைய புதல்வர் ஸ்லாமிஷ் என்பவரும் இதே மலிக் ஆதில் என்னும் பட்டம் வகித்திருந் தார். அமீர் ஹிஸாமுத்தீன் லாச்சீன் மந்திரியாக நியமிக்கப் பட்டார். அவர் காலத்தில் எகிப்து நாட்டில் பிளேக் நோயும் பஞ்சமும் ஒரே காலத்தில் பரவி, மக்கள் இறந்துபோனுர்கள். ஹி. 685இல் தாதாரிகளின் ஒரு பெருங் கூட்டம் ஹலாகு கானுடைய புத்திரர் மன்ஜுு தைமூருடைய மருமகன் தர்காயீ என்பவரின் தலைமையில் எகிப்துக்கு வந்தது. இவர்கள் அலீ ராத்தீய கோத்திரத்தைச் சேர்ந்த முஸ்லிமல்லாதார். ஸுல்தான் காஸான் மஹ்மூத் பின் அர்கூன் என்பவரின் அச்சத்தால் ஓடிவந்தவர்கள். இவர்கள் தமது கோத்திரத்தைச் சேர்ந்தோராதலால், மலிக் ஆதில் அவர்களை வரவேற்று அன்புடன் ஆதரித்தார். கடற்கரையோரத்தில் குடியிருக்க நிலங்களும் கொடுத்தார். அவர்களுடைய முந்நூறு தலைவர்களுக்கும் பெரிய உத்தி யோகங்கள் கொடுத்தார்.

ஆனுல், மந்திரி பிரதானிகள் இதை விரும்பவில்லை. எனவே, அவர்கள் கித்புகாவைச் சிம்மாசனத்திலிருந்து இறக்கிவிட்டு, அமீர் லாச்சீன் என்பவருக்கு மலிக் மன்ஸுர் என்னும் பட்டம் கொடுத்து முடிசூட்டினுர்கள்.

மலிக் மன்ஸூர் லாச்சீன்

ஹி. 696 (கி. பி. 1296) முஹர்ரம்மாதம் லாச்சீன் என்பவருக்கு மக்கள் விசுவாசப்பிரமாணஞ்செய்தார்கள். அச்சமயம் அர்மீனியாவில் அராஜகக் கலகம் உண்டாகிவிட்டதாகச் செய்தி கிடைத்தது. லாச்சீன் அங்கு சென்று அதை அடக்கினர். திரும்பி வந்த பிறகு, க்ஷர்கஸிகள் அவர் மீதிருந்த பகைமையால் ஹி. 698இல் அவரைக் கொலை செய்துவிட்டார்கள். பிறகு, தங்கள் எஜமானுடைய பதினைந்து வயதுள்ள புத்திரர் மலிக் நாஸிக் என்பவரைக் கர்க் கோட்டையிலிருந்து கொண்டுவந்து சிம்மாசனமேற்றினர்கள்.

மலிக் நாஸிர்

இரண்டாம் தடவை

இவரையும் கொலை செய்துவிட லாச்சீனுடைய கட்சியார் முயன்றார்கள். ஆனால், அம்முயற்சி கைகூடவில்லை, ஹி. 700இல் ஸுல்தான் காஜான் மஹ்மூத் ஒரு பெரும் படையுடன் ஸிரியாமீது படையெடுத்தார். நாஸிர் அங்கு சென்று அவரைத் தோற்கடித்துத் துரத்தினர். தாதாரிகளின் எதிர்ப்பின் காரணமாக அர்மீனியா பிரதேசத்தார் கலகஞ் செய்தார்கள், அதை அடக்குவதற்காக அய்பக் காஸன்தார் என்பவரையும், பத்ருத்தீன் பக்தாஷ் என்பவரையும் மலிக் நாஸிர் அனுப்பினர். சிம்மாசனத்திலிருந்து நீக்கப்பட்ட பிறகு, ஹலப் மாகாண கவர்னராக நியமிக்கப்பட்ட கித்புகாவையும் உடன் செல்லுமாறு கட்டளையிட்டார். இவர்கள் அங்கு சென்று கலகத்தை அடக்கி அமைதி நிலவச் செய்தார்கள். அர்தாத் என்னும் தீவில் பறங்கிகளின் ஒரு கூட்டம் முற்றுகையிட்டுக் கொண்டிருந்தது. அவர்களை அடக்குமாறு ஹி. 702 (1302) இல் மலிக் நாஸிர் கடற்படையை அனுப்பி அதைக் கைப்பற்றினர்.

ஹி. 704இல் மக்ரிப் நாட்டு ஸுல்தான் அபுல் யஃகூப் யூஸுப் என்பவர் ஐநூறு குதிரைகளும் கோவேறு கழுதைகளும் அவற்றின் சவாரிக்குரிய தங்கச் சாமான்களும், விலையுயர்ந்த அன்பளிப்புகளும் அனுப்பினர். இதனல், எகிப்துக்கும் மக்ரிப் நாட்டுக்குமிடையில் நேச உறவு ஏற்பட்டது. அபிஸீனியா அரசர் அபாபீ என்பவர் பற்பல விதமான மிருகங்களும் இனங்களும் கொண்டுவந்து கொடுத்துத் தமது எதிரிகளை எதிர்ப்பதில் தமக்கு உதவி செய்யவேண்டுமென்று விண்ணப்பம் செய்தார். ஆகையால், மலிக் நாஸிர் அவருடன் ஒரு சேனையை அனுப்பினர்.

இவ்வாறு சிறந்த புகழ் பெற்றிருந்தும், தமது தகப்பனரின் அடிமைகளான ஜாஷ்னகீர், ஸிலார் இவ்விருவரின் நிர்ப்பந்தங்களாலும், கேடுகளாலும் மலிக் நாஸிர் துன்பப்பட்டார். இறுதியாக, சிம்மாசனத்தில் இருப்பதும் துன்பமாகிவிட்டது. எனவே ஹி. 707இல் ஹஜ் செய்யும் பாவனையில் கர்க் கோட்டைக்கு ஓடிப்போனர். அங்கிருந்துகொண்டு அரசாங்கத்தைத் துறந்துவிட்டதாக விளம்பரஞ் செய்துவிட்டார். அதற்குப் பிறகு, அடிமைகள் ஒன்றுகூடிக் கலந்தாலோசித்து ருக்னுத்தீன் பைபர்ஸ் ஜாஷ்னகீர் என்பவருக்கு மலிக் முஜப்பர் என்னும் பட்டம் கொடுத்து முடிசூட்டினர்கள்.

மலிக் முஜப்பர்—இரண்டாம் பைபர்ஸ்

இரண்டாம் பைபர்ஸ் ஹி. 808 ஷவ்வால் இருபத்து மூன்றும் நாள் சிம்மாசனம் ஏறினர்; முதலில் மலிக் நாஸிர் மீது அன்பு செலுத்தி அவருக்கு கர்க் மாகாண கவர்னர் பதவியைக் கொடுத்தார். அதனல், அவர் மகிழ்ச்சியடைந்து பைபர்ஸ் பெயரால் கர்க் பிரதேசத்தில் குத்பா ஓதவும் ஆரம்பித்துவிட்டார். இவ்வாறு சில காலம் சென்றது. பிறகு, மலிக் முஜப்பர் தமக்கு சில அடிமைகளும், சவாரிக் குதிரைகளும் பணமும் வேண்டுமென்று மலிக் நாஸிருக்கு எழுதினர். மலிக் நாஸிர் இதை விரும்பாமல், ஸிரியா

நாட்டுச் சிற்றரசர்களிடம் முறையிட்டார் அவர்களும் அவருக்கு உதவி செய்வதாக வாக்களித்தார்கள். எனவே கர்க் நகரில் தமது அடிமை அர்கூன் என்பவரைத் தமது பிரதிநிதியாக நியமித்துவிட்டு, மலிக் நாஸிர் ஸிரியாவுக்குச் சென்றார். அடிமைகளின் தலைவரும், முஜப்பரின் பகைவருமான ஸிரியா கவர்னர் அமீர் பர்லக் என்பவர் ஒரு பெரும் படையைக் கொண்டுவந்து மலிக் நாஸிருடன் சேர்ந்து கொண்டார். இருவரும் எகிப்துக்கு வந்தார்கள். இவர்கள் கஸா நகருக்கு வந்தபொழுது, எகிப்து நாட்டு அமீர்களில் பெரும்பாலோர் வந்து இவர்களுடன் சேர்ந்துகொள்வதாக வாக்களித்தார்கள். அந்தச் சூழ்நிலையில், வேறு வழியின்றி முஜப்பர் சரணடைந்துவிட்டார். மலிக் நாஸிர் அவரைக் கைது செய்து, ஹி. 709 (கி. பி. 1309) ஈதுப் பெருநாளில் சிம்மாசனம் ஏறினார்.

மலிக் நாஸிர்

மூன்றும் தடவை

இப்பொழுது எகிப்தில் தம்மை எதிர்ப்பார் ஒருவருமின்றி மலிக் நாஸிர் தமது அரசியல் நிர்வாகத்தை நிம்மதியுடன் நடத்த ஆரம்பித்தார். நேர்மையற்ற தீர்வைகளை நீக்கினார். நீதிமன்றங்களை நிறுவினார். எங்கும் பாலங்கள் கட்டினார், தோட்டங்கள் தயாரித்தார். அரண்மனைகளும் மாளிகைகளும் கட்டினார். வானிலை ஆய்வுக் கூடங்கள் தயாரித்தார். மருத்துவ நிலையங்கள் பல கட்டினார். இவற்றைப் பராமரிக்கும் செலவுக்காக ஏராளமான சொத்துக்களையும் இனமாகக் கொடுத்தார்.

எகிப்திலும் ஸிரியாவிலும் அவர்காலத்தில் தான் அநேக கட்டிடங்கள் கட்டப்பட்டன. அவற்றில் பெரும்பாலானவை பள்ளிவாயில்களும், குத்பா பள்ளிகளுமாகும். இந்த மூன்றும் தடவை அவர் முப்பத்திரண்டு ஆண்டுகள் ஆட்சிசெய்து, ஹி. 741 துல்ஹஜ் பத்தொன்பதாம் நாள் மரணமடைந்தார். அக்காலத்தில் அமைதி நிலவி இருந்தது.

எனவே, அவர் ஆட்சியின் புகழ் எட்டுத்திக்கிலும் பரவி விட்டது. அவர் கல்விமான்களை ஆதரித்தார். பிரதம நீதிபதி அல்லாமா பத்ருத்தீனிடம் அவர் ஹதீதுப் பாடம் கேட்கச் செல்வது வழக்கம். அராஜகச் சதிகளிலிருந்து தப்பிக்கொள்ளும் எண்ணத்துடன் அவர் அப்பாஸி கலீபாக்களின் பெயரை குத்பாக்களிலிருந்து நீக்கிவிட்டார்.

சந்ததிகள்

மலிக் நாஸிர் தமது மக்களில் சிறந்தவரான அநூக் என்பவரைத் தமக்குப் பிறகு ஸுல்தான் ஆவதற்கான பயிற்சி அளித்து இளவரசர் பட்டமளித்தார். ஆனால், ஹி. 740இல் அநூக் இறந்துபோனார். அந்தத் துக்கத்தில் மலிக் நாஸிர் அடுத்த ஆண்டில் காலஞ்சென்றார்.

மலிக் நாஸிருக்கு எட்டு புத்திரர் இருந்தார்கள். அவர்கள் ஒருவர்பின் ஒருவராகப் பட்டத்திற்கு வந்தார்கள். ஆனால், அக்காலத்தில் பல புரட்சிகளும் கலகங்களும் உண்டாயின. ஆகையால், அவர்களில் ஒருவரேனும் நீண்ட காலம் ஆட்சிசெய்ய முடியவில்லை, முதலாவது மலிக் நாஸிரின் மூத்த புத்திரர் ஸைபுத்தீன் அபூ பக்ர் என்பவர் ஸுல்தான் ஆனார். அவருக்கு நான்காம் மலிக் மன்ஸூர் என்னும் பட்டம் அளிக்கப்பட்டது. ஆனால், நாற்பது நாட்களில் அவர் நீக்கப்பட்டு எகிப்தின் தென்பாகத்தில் கூஸ் நகருக்கு அனுப்பப்பட்டு, அங்கு, ஹி. 712இல் இறந்து போனார். அந்த ஸ்தானத்தில் அலாவுத்தீன் கோச்சக் என்பவரை மலிக் அஷ்ரப் என்னும் பட்டத்துடன் ஸுல்தானாக்கினார்கள். அப்பொழுது அவருக்கு வயது ஆறு, ஐந்துமாதம் கழித்து நீக்கப்பட்டு, பிறகு, கர்க் கோட்டையில் காவலில் வைக்கப்பட்டிருந்த ஷிஹாபுத்தீன் அஹ்மத் என்பவர் இரண்டாம் மலிக் நாஸிர் என்னும் பட்டத்துடன் சிம்மாசனம் ஏறினார். ஹி. 742 முஹர்ரம் பன்னிரண்டாம் நாள் அடிமைகள் அவரை நீக்கி மறுபடியும் கர்க் கோட்டைக்கு அனுப்பிவிட்டார்கள். பிறகு, இமாதுத்தீன்

இஸ்மாயிலை மலிக் ஸாலிஹ் என்னும் பட்டத்துடன் சிம்மாசனம் ஏற்றினர்கள். இவர் மூன்ருண்டு இரண்டரை மாதம் ஆட்சி செய்து, ஹி. 746 ரபீயுல் ஆகிர் நான்காம் நாள் இறந்துபோனர். பின்னர், ஜைனுத்தீன் ஷஃபான் என்பவர் மலிக் காமில் என்னும் பட்டத்துடன் ஸுல்தான் ஆனர். அவர் அரசியல் நிர்வாகத்திற்குத் தகுதியுடையோ ராகத் தோன்றவில்லை. ஆகையால், அமீர்கான் அவரை ஜையினுத்தீன் ஹாஜி என்பவருக்கு முஜப்பர் என்னும் பட்டம் கொடுத்து முடிசூட்டினர். இவரோ இன்னும் அதிகமான தகுதியற்றவர் எனத் தோன்றியது. எனவே, பதினைந்து மாதங்கள் கழித்து ஹி. 748இல் கொலைசெய்யப் பட்டார். அந்த இடத்தில் ஹஸன் என்பவர் மூன்ரும் மலிக் நாஸிர் என்பவர் கொண்டுவரப்பட்டு ஆறு ஆண்டு ஏழு மாதம் அரசுபுரிந்து, இறுதியாக அவரது அடிமை யல்புகா கரஸ்கி என்பவனல் கொலைசெய்யப்பட்டார்.

ஐந்தாம் மலிக் மன்ஸூர்

ஹஸன் இறந்த பிறகு அவர் சகோதரரின் புதல்வர் முஹம்மத் பின் ஹாஜி என்பவர் ஐந்தாம் மலிக் மன்ஸூர் என்னும் பட்டத்துடன் அரியணையில் அமர்ந்தார். ஹி 764 ஷஃபான் மாதம் மம்லூக் கோஷ்டியார் அவரை நீக்கிவிட்டு, அவரது சிறிய தகப்பனரின் புதல்வர் ஷஃபான் பின் ஹஸன் பின் முஹம்மத் பின் கலாவூன் என்பவரைக் கொண்டு வந்தார்கள்.

மூன்ரும் மலிக் அஷ்ரப்

ஷஃபான் என்பவர் மூன்ரும் மலிக் அஷ்ரப் என்னும் பட்டத்துடன் ஸுல்தான் பதவி ஏற்ருர். இவர் காலத்தில் பறங்கிகள் அலக்சாந்திரியா நகரைக் கொள்ளையடித்துப் பெண்டு பிள்ளைகளைச் சிறைபிடித்துக்கொண்டு போய் விட்டார்கள். மலிக் அஷ்ரப் அவர்களை எதிர்க்கச் சென்ற பொழுது அவர்கள் ஓடிவிட்டார்கள்.

அவரது தகப்பனாரின் அடிமை யல்புகா என்பவர் அரசாங்கப் பிரதிநிதியாக இருந்து அடிமைகளை அதிக கஷ்டப்படுத்தினார். எனவே, அவர்கள் அவரைக் கொன்று விட்டு, ஸுல்தானுடைய அரண்மனைக்கு வந்துவிட்டார்கள். சேனை அவர்களைத் தடுத்துத் தோற்கடித்துப் பின் தொடர்ந்து சென்றது. எதிரிகளில் அனைவரும் கொல்லப் பட்டார்கள். இன்னும் பலர் ஓடியோடி ஆற்றில் விழுந்து மடிந்தார்கள். எஞ்சியோர் நாடு கடத்தப்பட்டார்கள். ஹி. 776-இல் மலிக் அஷ்ரப் மக்காவுக்கு ஹஜ் செய்ய எண்ணங்கொண்டார். செல்லும் வழியில் அடிமைகளின் தலைவன் தஸ்தமீர் தவாதார் என்பவரும் அவரது கோஷ்டி யாரும் ஸுல்தானைக் கொன்றுவிட விரும்பினார்கள். அவர் இதை அறிந்தவுடன் கெய்ரோ நகருக்குத் திரும்பிவிட்டார். ஆனால், அதற்கிடையில் தமது புதல்வர் அலீ என்பவரை நான்காம் மலிக் மன்ஸூர் என்னும் பட்டத்துடன் மந்திரி பிரதானிகள் சிம்மாசனத்தில் அமர்த்திவிட்டதைக் கண்டார்! எனவே, குப்பா நஸ்ர் என்னுமிடம் சென்று அங்கு மறைந்து கொண்டார். ஆயினும், அடிமைகள் அங்கு போய் ஹி. 778 துலஹஜ் பதினைந்தாம் நாள் கழுத்தை நெறித்து அவரைக் கொன்றுவிட்டார்கள்.

ஆறாம் மலிக் மன்ஸூர்

அலீ அப்பொழுது ஏழு வயதுள்ளவர். அமீர் லாயின் என்பவர் இளவரசுப் பாதுகாவலர் (அதாபக்) பதவியில் நியமிக்கப்பட்டார். பிறகு, அந்தப் பதவிக்கு அமீர் கர்தாயி என்பவரும், அதற்குப் பிறகு பர்கூக் என்பவரும் வந்தார்கள். இந்த பர்கூக் என்பவரே ஷர்கஸி அரசாங்கத்தை நிறுவியவர். இவர் கவர்னராக நியமிக்கப்பட்ட காலத்தி லிருந்தே தாமும் ஸுல்தான் ஆகவேண்டுமென்ற ஆர்வ முள்ளவராக இருந்தார். ஆனால், தமது எஜமானிடம் விசுவாசமாக இருந்தார். பல்லாண்டு பொறுமையுடன் கழித்தார். இதற்கிடையில் ஹி 783-இல் மலிக் மன்ஸூர் காலஞ் சென்றார்.

மலிக் ஸாலிஹ் ஹாஜி

மன்ஸூர் இறந்த தினமே ஹாஜி பின் ஷஃபான் என்பவர் ஸுல்தான் ஆனார். ஒன்றரை ஆண்டு சென்ற பிறகு, ஹி. 784 ரமலான் பத்தொன்பதாம் நாள் பர்கூக அவரைச் சிம்மாசனத்திலிருந்து இறக்கி அந்தப் பதவியில் தாமே அமர்ந்துகொண்டார். எனவே, மலிக் ஸாலிஹ் ஹாஜி என்பவர் பஹ்ரி (கடல்) அடிமைகளின் ஸுல்தான்களில் இறுதி ஸுல்தானவார்.

11. ஜர்கஸி (புர்ஜி) அடிமைகள் அரசு

(ஹி. 784 — 923 கி. பி.)

ஜர்கஸி அடிமைகளின் பூர்வநாடு ஸைபிரியாவில் பைகல் ஏரிக்கு அருகில் ஜர்கஸ் — கர்கஸ் — என்னும் பிரதேசமாகும். கி. பி. ஆறும் நூற்றுண்டில் அவர்களுடைய மூதாதைகள் மத்திய ஆசியாவுக்கு வந்து கஸ்பியன் (கஸ்வீன்) கடற்கரையில் குடியேறினர்கள். அவர்களுடைய சந்ததிகளில் பெரும்பாலாரை பஹ்ரி அடிமை அரசர்களான மன்ஸூரும் அஷ்ரபும் விலைக்கு வாங்கினர்கள். இந்தப் புதிய அடிமைகள் அறிவிலும் உடல் வலிமையிலும் முன்னர் இருந்த அடிமைகளைக் காட்டிலும் சிறந்தோராக இருந்தார்கள். ஆகையால், கோட்டைகளின் பாதுகாவல், இராணுவத் தலைமை, முதலான பொறுப்புள்ள உயர் பதவிகளில் அமர்த்தப்பட்டார்கள். அரண்மனையின் மேற்பார்வையும் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது.

படிப்படியாக, அவர்களின் எண்ணிக்கையும் வன்மையும் பெருகியது. எகிப்து அரசாங்கத்தில் அவர்களுடைய செல்வாக்கு மிகைத்துவிட்டது. அந்தச் சூழ்நிலையில் சிம்மாசனத்தையும் கைப்பற்றிவிடலாமென்ற ஓர் எண்ணம் அவர்களது உள்ளத்தில் உதித்தது. எனவே, பர்கூக் என்னும் அவர்களது தலைவர், மலிக் ஸாலிஹ் என்னும்

ஸுல்தானை சிம்மாசனத்திலிருந்து இறக்கிவிட்டுத் தாமே ஸுல்தான் என்று விளம்பரஞ் செய்துவிட்டார்.

பர்கூக் உடைய தகப்பனர் அனஸ் என்பவர் கஸா என்னும் கோத்திரத்தைச் சேர்ந்தவர். அவரை ஒரு வியாபாரி க்ஷர்கஸியா நாட்டிலிருந்து கரம் என்னுமிடத்திற்குக் கொண்டு போனுர். அங்கு உஸ்மான் என்னும் ஒரு முஸ்லிம் அவரை விலைக்குவாங்கிக்கொண்டார். ஹி. 762 இல் அவர் அவரை எகிப்துக்குக் கொண்டுவந்து அமீர் யல்புகா என்பவருக்கு விற்றுவிட்டார். யல்புகா தமது அடிமைகளின் கோஷ்டியில் அனஸைச் சேர்த்துக்கொண்டார். அந்த அனஸின் புத்திரர் பர்கூக் என்பவர் சிறு பிராயத்திலிருந்தே, அழகிலும் புத்தி நுட்பத்திலும், கம்பீரத்திலும், தன்மதிப்பிலும் மிகச் சிறந்து விளங்கினுர். எனவே, யல்புகா தமது அந்தரங்கக் குழுவில் பல்கூகையும் சேர்த்துக்கொண்டார்.

பர்கூக் நல்ல கல்வி கற்று, இஸ்லாமியக் கலைகளில் சிறந்த தேர்ச்சி யடைந்தார். ஆகையால், அவருக்கு நல்ல மதிப்பு ஏற்பட்டது, அவரை ஷெய்க் என்று யல்புகா அழைப்பார். அமீர் பதவியும் அளித்தார்.

யல்புகா பகைவர்களால் கொலையுண்டபொழுது, பர்கூக் என்பவரும், மற்ருெரு அடிமை அமீர் பர்கா என்பவரும் சிறையில் இருந்தார்கள். அங்கிருந்து விடுதலையடைந்த பிறகு, டமஸ்கஸ் கவர்னர் அமீர் மன்ஸூக் என்பவரிடம் சென்று, அவரது சேனையில் சேர்ந்துகொண்டார்கள். மலிக் அஷ்ரப் ஷஃபான் என்பவர் பர்கூகை எகிப்துக்கு அழைத்து, இராணுவத்தில் ஆயிரம் போர்வீரர்களுக்குத் தலைவராக நியமித்தார். அன்று முதல் பர்கூக் உடைய உள்ளத்திலே அரசாங்கத்தைக் கைப்பற்றவேண்டுமென்ற ஆசை பிறந்தது. எனவே, அவர் அதற்காகப் பெருமுயற்சிகள் செய்தார். மலிக் மன்ஸூர் என்னும் ஸுல்தான் காலத்திலே, (அதாபக்) இளவரசரின் பாதுகாவலர் பதவிக்கு உயர்ந்துவிட்டார். இறுதியாக, மலிக்

ஸாலிஹ் பட்டத்திற்கு வந்த பிறகு, தமது கோஷ்டியாரின் உதவியால் சிம்மாசனத்தைப் பெற்றுக்கொண்டார்.

மலிக் ஜாஹிர் பர்கூக்

அக்காலத்திலிருந்த கலீபாவிடம் தமக்காக பர்மான் என்னும் அதிகாரப் பத்திரமொன்றை பர்கூக் பெற்றுக் கொண்டார். ஆலிம்கள், அமீர்கள், காஜிகள் ஆகியோ ரிடம் தமக்காக விசுவாசப்பிரமாணத்தையும் வாங்கிக் கொண்டார். எகிப்து நாட்டில் எல்லோரிலும் பெரிய இறுதி ஸுல்தானைச் சிறப்புற்று விளங்கிய பைபர்ஸ் பந்து கதாரி உடைய மலிக் ஜாஹிர் என்னும் பட்டத்தையும் வகித்துக்கொண்டார். தேச நிர்வாகத்தைச் சீர்திருத்தி அமைத்து பஹ்ரி அடிமை ஸுல்தான்களின் ஆட்சியில் ஏற்பட்ட ஒழுங்கீனமான சடங்குகளையும், தீர்வைகளையும் நிறுத்தினார். மேலும், குடிமக்களின் செல்வத்தைப் பெருக்குவதிலும், ஒழுக்கத்தை உயர்த்துவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

அக்காலத்தில் மத்திய ஆசியாவிலிருந்து தைமூர் படையெடுத்து வந்தார். அந்தப் படையெழுச்சியின் விளைவாகப் பல நாடுகளில் அமைதியின்மையும் கலக்கமும குழப்பமும் உண்டாகிவிட்டது. ஹி. 781 இல் தைமூர் ஸிரியா மீது படையெடுத்து வந்தார். அப்பொழுது எகிப்திலும் பேரதிர்ச்சி உண்டாகி விட்டது. பர்கூக் உடனே. சேனைகளைச் சேகரித்தார், புறப்பட்டார், ஸிரியா எல்லையிலிருந்து தைமூரைத் தடுத்தார். அப்பொழுதிருந்த கலீபா முதவக்கில் என்பவர் எகிப்தில் பர்கூகை நீக்கி விட்டதாக விளம்பரஞ் செய்தார். பர்கூக் திரும்பி வந்தார். நிலை மாறுபட்டிருப்பதை அறிந்தார். அமீர்களுடனும், காஜி களுடனும் கலந்தாலோசனை செய்தார். அரிய பெரிய முயற்சிகள் செய்தார். இறுதியாகக் கலீபாவைக்கைதுசெய்து அந்தப் பதவியில் உமர்-பின் இப்ராஹீம் என்பவரை வாஸிக் பில்லாஹ் என்னும் பட்டம் கொடுத்து கலீபாவாக நியமித்

தார். ஆனால், அவர் ஹி. 788 ஷவ்வால் மாதம் இறந்து போகவே அவருடைய புத்திரர் ஜகரியா என்பவர் கலீபாவாக நியமிக்கப்பட்டார். இந்த கலீபாவும் தமக்கு எதிரியென்று பர்கூக் அறிந்தார். எனவே, அவரை நீக்கிவிட்டு, ஹி. 791-இல் மறுபடியும் முதவக்கிலை கலீபாவாக்கினர். ஆனால், முதவக்கில் மீண்டும் பர்கூகை நீக்க முயன்றார். அமீருல் உமரா மன்தாஷ் என்பவரும் இதர மந்திரிப் பிரதானிகளும் கலீபாவுடன் சேர்ந்து சதி செய்துகொண்டிருந்தார்கள். ஆகையால், பர்கூக் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருந்தார். அவரைக் கர்க் கோட்டையில் காவலில் வைத்துவிட்டு ஹாஜி பின் ஷஃபான் மலிக் ஸாலிஹ் என்பவரை மறுபடியும் சிம்மாசன மேற்றினர்கள். ஆனால், ஓர் ஆண்டிற்குள் அவரும் நீக்கப்பட்டு ஹி. 792 ஸபர் நான்காம் நாள் பர்கூக் மறுபடியும் அழைக்கப்பட்டார். பர்கூக் வந்தவுடன் மலிக் ஸாலிஹையும் அவரைச் சேர்ந்தோரையும் கொன்றுவிட்டார்.

ஹி. 794-இல், பாரஸ் பிரதேச கவர்னர் கர்ரா யூஸுப் என்பவர் தப்ரேஸ் நகரைக் காணிக்கையாகக் கொடுத்தார். பர்கூக் அவருக்குக் கௌரவ அங்கிகள் அனுப்பி, "நாம் உம்மை தப்ரேஸுக்கும், நீர் உமது வாளால் வெல்லக்கூடிய அதைச் சேர்ந்த பிரதேசங்களுக்கும், எகிப்து அரசாங்கத்தின் சார்பில் உம்மைக் கவர்னராக நியமிக்கிறோம்" என்று எழுதியனுப்பினர். இதற்கிடையில், அங்கு தைமூர் படையெடுத்து வந்துவிட்டார். கர்ரா யூஸுப் தமது நேச அரசர் அஹமத் பின் உவைஸ் என்பவருடன் ஓடி, இஸ்தம்பூலி லிருந்த கீழரோம ராஜ்யச் சக்ரவர்த்தி மனுவேல் என்பவரிடம் அடைக்கலம் புகுந்துவிட விரும்பினர். ஆனால், மனுவேல் அப்பொழுது ஒரு சங்கடத்தில் இருந்தார். தன் அதிர்ஷ்டத்தின் அதிகாலையிலிருந்த ஒரு புதிய அரசாங்கமான உஸ்மானிய ராஜ்யத்துடன் அவர் போரிட்டுக்கொண்டிருந்தார். எனவே, அடைக்கலம் கொடுக்க மறுத்துவிட்டார். எனவே, இவ்விருவரும் எகிப்துக்கு வந்து

சேர்ந்தார்கள். பர்கூக் அவ்விருவரையும் மரியாதையுடன் வரவேற்று உபசரித்தார்.

ஹி 797-இல் உஸ்மானிய துருக்கியர்களில், ஸுல்தான் முராத் என்பவரின் புதல்வரான ஸுல்தான் பாயஜீத் என்பவர், உடன்படிக்கை செய்யும் பொருட்டு எகிப்துக்கு ஒரு தூதுக்கோஷ்டியை அனுப்பினர். அஃதாவது, அனதூலியா, வெல்லப்பட்ட அதைச் சார்ந்த பிரதேசங்கள் ஆகியவற்றிற்கு அவரே அதிகாரி என்று பர்மான்-அதிகாரப் பத்திரம் கொடுக்குமாறு எகிப்திலிருந்த அப்பாஸி கலீபாவிடம் விண்ணப்பம் செய்தார். அவ்வாறே உடன்படிக்கை செய்யப்பட்டது. ஸனத்-அதிகாரப் பத்திரமும் கொடுக்கப் பட்டது.

இதற்கிடையில், ஸுல்தான் தைமூரிடமிருந்து எகிப்துக்குத் தூதர்கள் வந்தார்கள். கர்ரா யூஸுபைத் தங்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கோரினர்கள். பர்கூக் வெகு மெல்லினமாகவே அவ்வாறு செய்ய முடியாதென மறுத்து விட்டார். தூதர்கள் கடுமையான வார்த்தைகளைப் பிரயோகித்தார்கள். அதைப் பொறுக்க முடியாமல் பர்கூக் அவர்களைக் கொன்றுவிட்டார். இதை யறிந்தார் தைமூர். அவருக்குக் கோபாக்கினி பொங்கி எழுந்தது. ஸிரியா நாட்டின்மீது பாய்ந்தார். இந்தப் படையெழுச்சியில் ரிஹா என்னுமிடத்திலிருந்து ஹலப் வரை இரத்த வெள்ளத்தை ஓட்டிக் களைப்படைந்து நின்றுவிட்டார்.

இதற்கிடையில், பர்கூக் எகிப்து நாட்டில் தமது ராணுவத்தை சேகரித்தார். பெருஞ் சேனையுடன் பகைவரை எதிர்க்கத் தயாரானர். ஆனால், திடீரென்று ஹி. 801-இல் ஷவ்வால் பதினைந்தில் இறந்து போனர். எகிப்தில், ஜாமிஃ பர்கூக் என்பதும், மத்ரஸா ஜாஹிர் என்பதுமே இவரது நினைவுச் சின்னங்களாக இருக்கின்றன. பர்கூக் மிகவும் இரக்கமுள்ளவர். கல்விமான்களை ஆதரிப்பவர்.

மலிக் நாஸிர் ஜைனுத்தீன்

பர்கூக்உடைய முதல்புதல்வர்ஜைனுத்தீன்பரஜ் என்பவர் தமது தகப்பனுரின் சிம்மாசனத்தில் அமர்ந்தார். அதாபக் லத்மீஷ் என்பவர் டமஸ்கஸ் கவர்னராக இருந்த தனம் பர்ஸ னீ என்பவரையும், ஹலப் கவர்னராக இருந்த யல்புகா என்பவரையும் சேர்த்துக்கொண்டு கலகஞ் செய்தார். நாஸிர் அவர்களை பலஸ்தீனில் எதிர்த்துப் போர்புரிந்து தோற்கடித்துத் தண்டித்தார்.

பிறகு, தைமூர் ஹி. 803-இல் இந்தியா ஈரான் நாடுகள் வழியாக, பக்தாத், மலாதியா பிரதேசங்களை வென்ருர். அங்கிருந்து ஸிரியாவுக்கு வந்தார். அக்காலத்திலே ஆசியா கண்டமானது இரண்டு வெற்றி வேந்தர்களின் விளையாட்டு மைதானமாகக் காட்சி அளித்தது. ஒருவர் தைமூர் கோல்கானீ, மற்ருெருவர் பாயஜீத் உஸ்மானீ. அக்கால அவப்பேறு என்னவென்ருல் இந்த இரண்டு முஸ்லிம் ஸுல்தான்களும் ஒருவரை ஒருவர் எதிர்க்க ஆரம்பித்து, ஹி 804-இல் ஸுல்தான் பாயஜீதுடைய தலைநகரான அன்கரா (அங்கோரா)வை வென்று, பாயஜீதைக் கைது செய்துவிட்டார்.

எகிப்து நாட்டார் சிலகாலம் தைமூரின் அச்சம் நீங்கி இருந்தார்கள். ஆனுல், பாயஜீத் தோல்வியடைந்த பிறகு கலக்கமடைந்தார்கள். ஏனென்ருல், ஹி. 805-இல் எகிப்து நாட்டு ஸுல்தானிடம் தைமூர் அன்பளிப்புகளுடன் ஓர் இந்தியத் தூதரையும் அனுப்பினுர். தம்மை சக்ரவர்த்தி என்று மிஸ்ர் ஸுல்தான் அங்கீகரிக்க வேண்டுமென்றும் கட்டளையிட்டார். வேறு வழியின்றி, மலிக் நாஸிர் அவ்வாறே செய்ய வேண்டியதாயிற்று. ஆனுல், அதே ஆண்டில் தைமூர் இறந்துபோனுர். அவர் ராஜ்யத்தில் அதற்குப் பிறகு, அவருடைய புத்திரர்களுக்கிடையில் உள் நாட்டுப் போர்கள் உண்டாகி விட்டன ஆகையால், எகிப்து சுவாதீன நாடாக இருந்தது.

ஹி. 808-இல் கலீபா முதவக்கிலுக்குப் பிறகு அவர் புத்திரர் அபுல் பஜல் முஸ்தஈன் பில்லாஹ் என்பவர் கலீபா ஆனார். அவர் மலிக் நாஸிரை மறைமுகமாக விரோதித்து வந்தார். மந்திரி பிரதானிகளையும், ஷெய்க் மஹ்மூதியையும் தமது கட்சியில் சேர்த்துக்கொண்டு, மலிக் நாஸிரை நீக்கி விட்டதாக விளம்பரஞ் செய்தார். தமக்கு உதவி செய்வோர் ஒரு சிலரே என்றெண்ணி, மலிக் நாஸிர் அங்கிருந்து ஓடிப் போக நினைத்தார். ஆனால், அவரைக் கைது செய்து விட்டார்கள். கலீபா முஸ்தஈன் பில்லாஹ் பிறகு ஸுல்தானுடைய சிம்மாசனத்தில் அமர்ந்து விட்டார். அதற்குப் பிறகு மலிக் நாஸிர் கொலை செய்யப்பட்டார்.

மலிக் ஆதில் முஸ்தஈன் பில்லாஹ் (அப்பாஸீ)

முஸ்தஈன் பில்லாஹ் எனப்படும் கலீபா ஹி. 815 முஹர்ரம் இருபத்தைந்தாம் நாள் மலிக் ஆதில் என்னும் பட்டத்துடன் ஸுல்தானாகவும் உயர்ந்துவிட்டார். கலீபா முஸ்தஃஸிமுடைய ஆட்சிக்குப் பிறகு, அப்பாஸி கலீபாவின் தலைமீது இன்னொரு முறை கிலாபத்தின் கிரீடத்தோடு, அரசியல் கிரீடமும் வைக்கப்பட்டது. அஃதாவது, அவர் மார்க்கத் தலைவராக இருந்ததோடு அரசாங்கத் தலைவருமானார். ஷெய்க் மஹ்மூதி மந்திரியாகவும் சேனாபதியாகவும் நியமிக்கப்பட்டார். கலீபா மந்தபுத்தியுடையோர் என்பதை அறிந்த ஷெய்க் மஹ்மூதி தனக்கும் அரசியலில் பங்கு கொடுக்க வேண்டுமெனக் கேட்டார். கலீபா அதற்கு உடன்பட்டார். அஃதாவது ஒரே அரியணையில் இரண்டு அரசர்களின் ஆட்சி நடந்தது. ஆனால், இந்த நிலை வெகு காலம் நீடிக்கவில்லை. ஹி. 815 ரபீயுல் அவ்வல் எட்டாம் நாள் ஷெய்க் மஹ்மூதி என்பவர் கலீபாவை இறக்கிவிட்டுத் தாமே ஸுல்தானாகிவிட்டார்.

ஷெய்க் மஹ்மூதி

பர்கூக் உடைய அடிமைகளில் ஷெய்க் மஹ்மூதி வீரத்திலும் அறிவிலும் மிகச் சிறந்தவர். குதிரைச் சவாரியில் இணையற்றவர். கல்விமான். இஸ்லாமியப் பற்றுள்ளவர். எனவே, பொதுமக்கள் அவரை நேசித்தார்கள்.

கலீபா முஸ்தயீன் நீக்கப்பட்ட பிறகு ஷெய்க் மஹ்மூதிக்கு விரோதமாகச் சதிசெய்ய ஆரம்பித்தார். தமது காலத்தில் ஸிரியாவில் கவர்னராக நியமித்திருந்த நவ்ரோஸ் என்னும் தமது நண்பர் ஒருவருக்கு இரகசியமாகத் தமது எண்ணத்தை எழுதி யனுப்பி அவரிடம் உதவி கேட்டார். அதற்கு அவர், "நான் சேனையுடன் வருகிறேன். ஆனல், அதற்கிடையில் நீங்கள் உங்கள் மார்க்கச் செல்வாக்கைப் பிரயோகித்து, ஷெய்க் மஹ்மூதியை நீக்கிவிட்டதாக விளம்பரம் செய்துவிடுங்கள்" என்று தெரிவித்தார். கலீபாவும் அவ்வாறே செய்தார். ஆனல், மஹ்மூதி நீக்கப்படவில்லை. அதற்கு மாற்றமாக, கலீபா முஸ்தஈனையே மஹ்மூதி நீக்கிவிட்டு, அவரது சகோதரர் தாவூத் என்பவரை முஃதஸித் என்னும் பட்டம் கொடுத்து கலீபாவாக நியமித்துவிட்டார்.

ஷெய்க் மஹ்மூதி நீதியுள்ளவர். அரசியல் நிர்வாகத்தில் சிறந்தவர். அவர் காலத்தில் எகிப்து நாட்டாருக்கு அமைதியும் நலமும் நிறைந்த வாழ்க்கை கிடைத்தது. அவர் எட்டாண்டு ஆட்சி செய்து ஹி. 824 முஹர்ரம் ஒன்பதாம் நாள் இறந்துபோனர். இவர் ஜாமிஃ முவைய்யத், மத்ரஸா மஹ்மூதி இவ்விரண்டையும் கட்டினர். மத்ரஸா—கல்லூரியில். அக்காலத்து ஹதீஸ் வியாக்கியானப் பேராசிரியர் ஷெய்க்ஷம்ஸ்பின் முதப்பிரிஎன்பவர் சொற்பொழிவாற்றுவார். அவரது பாடங்களைக் கேட்க மஹ்மூதியும் அவரது புதல்வர் இப்ராஹீமும் செல்வார்கள். பேராசிரியருக்காக மஹ்மூதி ஆசனம் விடுப்பார். அவர் உட்காரும் ஆசனத்தையும் எடுத்துக்கொண்டு வந்து வைப்பார்.

1. அஹ்மத் பின் மஹ்மூதி 2. ஸைபுத்தீன் ததர்.
3. முஹம்மத் பின் ததர்.

மஹ்மூதி இறந்த பிறகு, அவரது பால்குடிக்கும் பாலகன் அஹ்மத் என்பவரை ஸுல்தானுக்கி, ஸைபுத்தீன் ததர் என்பவரை இளவரசுப் பாதுகாவலராக நியமித்தார்கள். ஹி. 824 ஷவ்வால் மாதம் ஸைபுத்தீனே ஸுல்தானுகி விட்டார். ஆனால், அவர் மூன்று மாதங்கள் சென்று இறந்து போனுர். எனவே, அவரது புத்திரர் முஹம்மத் என்பவர் ஸுல்தான் ஆனுர். ஸைபுத்தீன் பரஸ்பாய் என்பவர் இளவரசுப் பாதுகாவலரானுர். இவரும் வழக்கம் போல் முஹம்மதை சிம்மாசனத்திலிருந்து துரத்திவிட்டார். மம்லூக்-அடிமைகள் கோஷ்டியில் கலகம் விளைந்து விட்டது. பரஸ்பாய் ஒன்றும் செய்யாமலிருந்தார். இந்தக் கலகங்களின் விளைவாக மம்லூக் கோஷ்டியின் பலங் குன்றி விட்டது. எனவே, அந்தச் சூழ்நிலையில் அவரை ஒருவரும் எதிர்க்க முடியவில்லை. ஆகையால், பரஸ்பாய் சிம்மாசனம் ஏறிவிட்டார்.

மலிக் அஷ்ரப் பரஸ்பாய்

ஸைபுத்தீன் ததர் விலைக்கு வாங்கிய அடிமையே இந்த பரஸ்பாய். ஹி. 825 ரபியுல் அவ்வல் மாதம் இவர் ஸுல்தான் ஆனுர். இவர் காலத்தில், ஹி. 827-இல் ஸிரியா கவர்னர் நஜாஷி என்பவரால் கலகம் விளைந்து உடனே அடக்கப்பட்டு விட்டது. இதையன்றி, பொதுவாக சமாதானமே நிலவி இருந்தது. பஞ்சமும், பிளேக் நோயும் உண்டாகவில்லை. எனவே குடிமக்கள் நலமாக வாழ்ந்தார்கள்.

பரஸ்பாய் ராஜதந்திரங்களிலும், அறிவிலும், ஆற்றலிலும் கம்பீரத்திலும் ஷெய்க் மஹ்மூதியைக் காட்டிலும் மிகச் சிறந்தவர். வீரத்திலும் புத்திகூர்மையிலும் மேலானவர். அந்திய காலத்தில் ஹாகிம் பில்லாஹ்வைப்

போன்று இவரும் விசித்திரமான கட்டளைகள் பிறப்பித்தாரென்று சரித்திராசிரியர்கள் எழுதுகின்றார்கள். கெய்ரோ நகரிலிருந்து நாய்களையெல்லாம் அப்புறப்படுத்திவிட்டார். மங்கையர் வெளியே செல்லலாகாதென்று தடுத்தார்.

பதினொன்று ஆண்டுகள், எட்டு மாதங்கள் ஆட்சி செய்து தமது அறுபதாம் வயதில், ஹி. 841 துல்ஹஜ் பதி மூன்றாம் நாள் இவர் இறந்து போனார். க்ஷர்கஸி மரபைச் சேர்ந்த ஸுல்தான்களில் இவரே மிகச் சிறந்தவரெனக் கருதப்படுகின்றார்.

மலிக் அஜீஸ் யூஸுப்

பரஸ்பாய் காலஞ்சென்ற பிறகு அவரது புதல்வர் ஜமாலுத்தீன் யூஸுப் ஸுல்தான் ஆனார். ஸைபுத்தீன் சக்மக் என்பவர் அரசியல் பாதுகாவலராக நியமிக்கப் பட்டார். மூன்று மாதங்கள் சென்றன. வழக்கம்போல் அந்தப் பாதுகாவலர் யூஸுபை நீக்கிவிட்டு தாமே ஸுல்தானாகிவிட்டார். ஹி. 842 ரபீயுல் அவ்வல் பத்தொன்பதாம் நாள் அவருக்கு மக்கள் விசுவாசப் பிரமாணம் செய்தார்கள்.

மலிக் ஜாஹிர் சக்மக்

இவர் தமது அறுபத்தொன்பதாம் வயதில் அரியணையில் அமர்ந்தார். அவர் காலத்தில் கலீபா முஃதஸித் பில்லாஹ் காலஞ் சென்றார். அவர் மிகவும் மார்க்கப் பற்றுள்ளவர். பிறகு, அந்தப் பதவியில் அவரது சகோதரர் முஸ்தக்பி பில்லாஹ் என்பவர் கலீபா ஆனார். அவரும் ஹி. 854-இல் இறந்து போனார். பிறகு, காயிம்-பி-அம்ரில்லாஹ் கலிபா ஆனார். இவர் சக்மக்கை விரோதித்து சதி செய்யவும் ஆரம்பித்தார். அச்சமயம் சக்மக் உடைய வயது எண்பதிற்கு அதிகமாயிருந்தது. கலீபாவை விரோதித்தல் நலமல்ல என்றறிந்த சக்மக், உடனே தமது

புதல்வர் உஸ்மான் என்பவரைச் சிம்மாசனத்தில் ஏற்றினர். இவ்வாறு நடந்து சிலநாட்கள் செல்லவும், ஹி. 857-இல் இஸ்தம்பூலை வென்ற ஸுல்தான் இரண்டாம் முஹமத் என்பவர் இறந்து போனர்.

சக்மக் ஆடம்பரம் விரும்பாதவர். எப்பொழுதும் எளிய வாழ்க்கை விரும்புவார். தர்வேஷ்-ஞானிகளை நேசிப்பார். ஏழைகளுக்கு ஏராளமாக உதவி செய்வார். இவர் காலத்தில் எகிப்தில் பெரும்பாலான மஸ்ஜித்களும், இதர கட்டிடங்களும் கட்டப்பட்டன. அவர் காலத்தில் எகிப்து நாட்டில் பிளேக் நோய் பரவியது. அதனல் மக்கள் பலர் இறந்து போனர்கள்.

மலிக் மன்ஸூர் உஸ்மான்

பக்ருத்தீன் உஸ்மான் சிம்மாசனம் ஏறினர். ஆனல் கலீபா காயிம் என்பவர் மந்திரி பிரதானிகளுடன் கலந்தாலோசித்து அவரை நீக்கிவிட்டதாக விளம்பரஞ் செய்து விட்டார். எனவே ஹி. 857 ரபியுல் அவ்வல் முதல் தேதியில் அவர் அரசைத் துறந்தார். கலீபா முஸ்தஈனைப் போன்று தாமும் ஸுல்தானுடைய ஆசனத்தில் அமர்ந்துவிடலாமென்று கலீபா காயிம் எண்ணங்கொண்டார். ஆயினும், அந்த முயற்சி கைகூடவில்லை. மம்லூக் கோஷ்டியார் தங்களில் ஒருவரான வயதுமுதிர்ந்த அபூநஸ்ர் யனல் என்பவரை சிம்மாசனம் ஏற்றினர்கள்.

மலிக் அஷ்ரப் யனல்

யனல் ஸுல்தான் பதவியேற்றார். ஆயினும், தமது ஆவலை நிறைவேற்றும் எண்ணத்தைக் கைவிடவில்லை. அந்தக் கிழவர் வெகு சீக்கிரம் இறந்துவிடுவார் எனவும், பிறகு தாமே ஆட்சிசெய்யலாம்எனவும் மனப்பால் குடித்துக் கொண்டிருந்தார். இவ்வாறு மாதங்கள் பல கடந்தன. ஆண்டுகள் சென்றன. இறுதியாக, ஆறு ஆண்டுகள்

உருண்டோடி விட்டன. கலீபா காயிம் பொறுமையை இழந்தார். சதித் திட்டம் தீட்டத் தொடங்கினர். ஆனால், ஸுல்தானுக்கு இந்தச் செய்தி எட்டியவுடன், அவர் கலீபாவை பதவியிலிருந்து விலக்கியதோடு அவரை அலக்சாந்திரியாவுக்கு அனுப்பிவிட்டார். பிறகு, அவரது சகோதரர் யூஸுப் என்பவரை முஸ்தன்ஜித் என்னும் பட்டத்துடன கலீபா ஆக்கினர்

யனல் எட்டாண்டுகள், இரண்டரை மாதம் ஆட்சி செய்து, ஹி. 865 ஜமாதுல் அவ்வல் பதினைந்தில் இறந்தார்.

மலிக் முவய்யத் அஹ்மத்

யனல் இறந்த பிறகு அவர் புதல்வர் ஷஹாபுத்தீன் அஹ்மத் என்பவர் ஸுல்தான் ஆனர். அவர் தமது தகப்பனர் காலத்திலேயே அரசியல் நிர்வாகத்தில் நன்கு பயிற்சி பெற்றார். எனினும், மந்திரி பிரதானிகள் அவருக்கு விரோதியாகி விட்டார்கள். ஆகையால், நான்கு மாதங்கள் சென்று நீக்கப்பட்டார்.

மலிக் ஜாகிர் குஷ்கதம்

இவர் ஒரு கிரேக்க குடும்பத்தைச் சேர்ந்தவர். மலிக் நாஸிர் என்பவரால் விலைக்கு வாங்கப்பட்ட அடிமை. எனவே, இவர் நாஸிரீ எனவும், யூனனி (கிரேக்கர்) எனவும் அழைக்கப்படுகிறார். இவர் காலத்தில் நாட்டு நிர்வாகம் நன்றாக நடந்தது. ஹி. 872 ரபியுல் அவ்வல் பத்தாம் நாள் காலஞ் சென்றார்.

மலிக் ஜாஹிர் பில்பாய்

மலிக் ஜாஹிர் திமுர் பூகா

அபூ ஸயீத் பில்பாய் என்பவர் குஷ்கதம் இறந்த பிறகு ஸுல்தான் ஆனர். இவர் மிகப் பலகொடுமைகள் செய்தார். எனவே, இரண்டு மாதங்களில் நீக்கப்பட்டு, மலிக் ஜாஹிர் திமுர் பூகா என்பவர் ஸுல்தானனர். இவரும் இரண்டு மாதங்களில் ரஜப் ஆரும் நாள் நீக்கப்பட்டார்.

மலீக் அஷ்ரப் காயித் பாய்

காயித் பாய் என்பவர் சக்மக் விடுதலை செய்வித்த ஓர் அடிமை. ஹி. 872-இல் திமுர் பூமா நீக்கப்பட்ட பிறகு இவர் ஸுல்தான் ஆனார். அவர் வெகு சாதுர்யத்துடன் பல கட்சிகளையும் ஒன்று சேர்த்து; நாட்டு நிர்வாகத்தில் சீரமைப்புச் செய்தார்.

அக்காலத்தில் உஸ்மானிய துருக்கி ஸுல்தான்கள் தங்கள் ராஜ்யத்தை விஸ்தரித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்டு அஞ்சிய ஈரான் மன்னர்கள் எகிப்து அரசாங்கத்துடன் நேச உடன்படிக்கை செய்துகொண்டார்கள். பாரஸ் பிரதேசத் தலைவர் அவ்ஜூன் ஹஸன் என்பவரை உஸ்மானியர் தோற்கடித்த பொழுது அவர்கள் ஸிரியா மீது படையெடுப்பார்களென்று காயித் பாய் அஞ்சி, ஸிரியாவின் எல்லைப்புரத்திற்கு ஒரு பெருஞ் சேனையை அனுப்பினார். அது சென்று துருக்கி ஸுல்தானுக்குச் சொந்தமான அதர்ளு தர்ஸூஸ் ஆகிய இரு நகரங்களையும் கைப்பற்றிக் கொண்டது.

அச்சமயம், உஸ்மானியர் ஐரோப்பியருடன் போர் புரிந்து கொண்டிருந்தார்கள். எனவே, இதை அவர்கள் கவனிக்க முடியவில்லை. ஹி. 885-இல் அவர்களுக்கு ஐரோப்பாவில் வெற்றிகள் கிடைத்தன. இதற்கிடையில் வெற்றி வேந்தர் ஸுல்தான் முஹமத் இறந்து போனார். உடனே, அவரது புத்திரர்களுக்கிடையில் சிம்மாசனத்திற்காகக் கலகங்கள் விளைந்துவிட்டன. இறுதியில் அஸ்கிஷஹர் என்னுமிடத்தில் போர் நடந்தது. அதில் பாயஜீத் வெற்றியடைந்தார். அவரது சகோதரர் ஜம் என்பவர் அங்கிருந்து தப்பியோடி எகிப்து நாட்டில் அடைக்கலம் புகுந்தார்.

காயித் பாய் இதை ஒரு நல்ல வாய்ப்பாகக் கருதினார். ஜம் இளவரசரைத் தம்முடன் கண்ணியமாக வைத்துக் கொண்டார். அவருக்கு உதவி செய்வதாக நம்பிக்கை அளித்துக்கொண்டே இருந்தார். மேலும், உஸ்மானியர்

மீது படையெடுக்கவும் ஆரம்பித்துவிட்டார். இதற்கிடையில், ஸுல்தான் பாயஜீத், ஸிரியாமீது படையெடுக்க எண்ணங் கொண்டார். ஆயினும், உலக வழக்கிற்காக எகிப்துக்குத் தூதனுப்பினர். அதாவது, நர்ஸூஸ் நகரங்களைத் தமக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்றும், நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்றும் கோரினர். ஆனல், காயித் பாய் அந்த தூதுகோஷ்டியைத் திருப்பி அனுப்பிவிட்டார். ஆகையால், உஸ்மானியச் சேனை முன்னேறிச் சென்றது. இழந்த நகரங்களைக் கைப்பற்றிக்கொண்டது.

காயித் பாய் உடனே அமீர் அஸ்பகீ என்பவரை அனுப்பி அந்த நகரங்களை மறுபடியும் கைப்பற்றிக்கொண்டார். இந்தியாவிலிருந்து ஸுல்தான் பாயஜீதிடம் சென்றுகொண்டிருந்த ஓர் அரசுத் தூது கோஷ்டியையும் பிடித்துக்கொண்டார். இதைக் கேள்வியுற்று ஸுல்தான் பாயஜீத் கடுங்கோபங்கொண்டார். ஹி. 893 ரபியுல் அவ்வல் மூன்றும் நாள் தாமே இஸ்தம்பூரிலிருந்து சேனையுடன் புறப்பட்டார். மேலும், காயித் பாய்க்கு, “நீர் இந்தச் சச்சரவில் தலையிடாமல் ஒதுங்கி நின்றுவிடும். இன்றேல், நான் உஸ்மானியர் அனைவரையும் ஒன்று சேர்த்துப் படையெடுப்பேன். எகிப்தையும் வென்றுவிடுவேன்” என்று பயமுறுத்தி எழுதினர். இந்தச் சங்கடமான சூழ்நிலையில் இவ்விரு நகரங்களையும் உஸ்மானியருக்குக் கொடுத்துவிட்டு அவர்களுடன் சமாதானம் செய்துகொள்ளலே உசிதமெனக் கண்டு, காயித் பாய் அவ்வாறே செய்தார். இந்த நிகழ்ச்சி நடந்து ஐந்து ஆண்டுகள் கழிந்தன. இறுதியாக, இருபத்தொன்பது ஆண்டுகள் நான்கு மாதங்கள் இருபது நாட்கள் ஆட்சி செய்து, ஹி. 901 துல் கஃதா இருபத்திரண்டாம் நாள் காயித் பாய் இறந்து போனர்.

மலிக் நாஸிர் முஹம்மத் பின் காயித் பாய்

(முதல் தடவை)

காயித் பாய் இறந்த பிறகு அவரது புதல்வர் முஹம்மத் ஆட்சி பீடத்தில் அமர்ந்தார். ஆனல், ஆறு மாதங்கள்

சென்று, ஹி. 902 ஜமாதுல் அவ்வல் பதினெட்டில் நீக்கப் பட்டார்.

மலிக் அஷ்ரப் கான்ஸூ கஸ்மாயா

கான்ஸூ என்பவர் ஒரு காலத்தில் ஐ நூறு தீனர் களுக்கு வாங்கப்பட்ட ஓர் அடிமை. முஹம்மத் நீக்கப்பட்ட பிறகு, மந்திரி பிரதானிகள் இவரைச் சிம்மாசனத்தில் ஏற்றினர்கள். ஆனால், அரசியல் நிர்வாகத்தை ஒழுங் காகச் செய்ய முடியாதெனக் கண்டு அவர் தாமாகவே நீங்கி விட்டார்.

மலிக் நாஸிர்

(இரண்டாம் தடவை)

முஹம்மத் பின் காயித் பாய் மறுபடியும் ஆட்சி பீடத் திற்குக் கொண்டு வரப்பட்டார். ஆனல், அவர் கல்வி அறிவில்லாதவர். மனிதத் தன்மை இல்லாதவர். ஒரு சமயம் ஒரு இளவயதுள்ள அடிமைப் பெண்ணை உயிருடன் தோலுரித்தார். இவ்விதமாகப் பல்வேறு கொடுமைகள் செய்து, ஒன்றரைஆண்டு கழித்து, ஹி. 904 ரபீயுல் அவ்வல் பதினரும் நாள் கொலையுண்டார்.

மலிக் ஜாகிர் கான்ஸூ அஷ்ரபீ

நாஸிர் கொலையுண்ட மறுநாள் இவர் பட்டத்திற்கு வந்தார். ஓர் ஆண்டு எட்டு மாதங்கள் கழிந்தவுடன் நீக்கப்பட்டார்.

மலிக் அஸ்ரப் கான்ஸூ ஜான் பலத்

மூன்ரும் கான்ஸூ எனப்படும் இவர், ஹி. 905 துல் கஃதா மாதம் ஸுல்தானுக நியமனம் பெற்ருர். ஏழு மாதம் சென்ற பிறகு ஜமாதுல் அவ்வல் பதினெட்டில் நீக்கப் பட்டார்.

மலிக் ஆதில் தூமான் பாய் I

பிறகு, காயித் பாம் உடைய அடிமைகளில் ஒருவரான தூமான் பாய் என்பவருக்கு விசுவாசப் பிரமாணம் செய்யப் பட்டது. நாலரை மாதங்கள் சென்று ஹி. 906 துல்கஃதா வில் கொலை செய்யப்பட்டார்.

மலிக் அஸ்ரப் கான்ஸூ கோரி

இவரும் காயித் பாய் உடைய அடிமைகளில் ஒருவரே. ஆண்டவனுடைய வணக்கத்தில் காலம் கழிப்பார். இஸ்லா மியப் பற்றுள்ளவர். மம்லூக் கோஷ்டியாருக் கிடையில் காணப்பட்ட அரசியல் பிணக்குகள் கருத்து வேற்றுமைகள் முதலான சிக்கல்களிலிருந்து ஒதுங்கி இருந்தார். மந்திரி பிரதானிகள் இவரை அரசுக்கு உரியவர் என்று தெரிந் தெடுத்தார்கள். ஆனால், அவர் தாம் அந்தச் சுமையைத் தாங்க முடியாதென்று தெரிவித்தார். ஆனால், அவர்க ளெல்லாம் அவரை வற்புறுத்தினார்கள். “நாட்டு மக்க ளெல்லாம் உங்கள் மீது நம்பிக்கை கொண்டிருப்பதி லிருந்தே நீங்கள் தகுதியுள்ளோரெனத் தெரிகின்றது” என்று கூறினார்கள். அதற்குப் பிறகு அவர், முழுமன மின்றி அரச பாரத்தை ஏற்றுக்கொண்டார். அச்சமயம், அவர் மந்திரி பிரதானிகளை நோக்கி, “ராஜ்ய பாரம் என்னும் இந்தச் சிறையிலிருந்து நீங்கள் என்னை விடுவித்து விட்டதாக நீங்கள் என்று நற்செய்தி கூறுவீர்களோ, நான் சிம்மாசனத்தைத் துறந்து ஏன்னுடைய இந்தப் பாயில் என்று மறுபடியும் உட்காருவேனோ, அன்று எனக்கு நலமான நாளாகும்” என்று கூறினார்.

அரசாங்க பாரத்தை ஏற்றார் நீதி வழுவாமல் நிர்வாகம் செய்தார். நாட்டில் ஒவ்வொரு பாகத்திலும் சமாதானமே நிலவி இருந்தது.

அக்காலத்தில் தென் மேற்கு ஐரோப்பாவிலுள்ள போர்த்துகல் நாட்டார் இந்து மகாசமுத்திரத்தில் கடல்

ஆதிக்கம் பெற முயற்சித்தார்கள். அவர்கள் இந்தியாவில் கைப்பற்றி யிருந்த கோவா போன்ற நகரங்களிலிருந்து புறப்பட்டு வந்து இந்திய சமுத்திரத்தில் கடற்கொள்ளை யடிக்க ஆரம்பித்தார்கள். குறிப்பாக, அவர்கள் முஸ்லிம்களை அழிக்க முயன்றார்கள். அக்காலத்தில் அவர்கள் இஸ்லாத் திற்கும் முஸ்லிம்களுக்கும் விரோதமாக ஐரோப்பாவிலும், ஆப்பிரிக்காவிலும், ஆசியாவிலும் செய்த கொடுமைகள் ஒன்றிரண்டல்ல. அக்காலத்தில் மேற்கில் எகிப்து, ஈரான், அரபியா ஆகிய முஸ்லிம் நாடுகள் இந்தியாவுடன் வியா பாரம் செய்தன. இதைப் போன்று, கிழக்கில் மலாயா, ஜாவா முதலிய முஸ்லிம் நாடுகள் இந்தியாவுடன் கடல் வாணிபம் செய்து வந்தன. அத்தகைய முஸ்லிம் கடல் வியாபாரத்தை போர்த்துகல் நாட்டார் அழித்தார்கள். கிழக்கிந்தியத் தீவுகளில் முஸ்லிம்களின் ஆட்சியை அழித் துத் தங்கள் ஆட்சியை நிறுவினார்கள். எகிப்து நாட்டார் இந்தியாவுடன் செய்துவந்த வியாபாரம் நின்றுவிட்டது.

போர்த்துகல் கடற்கொள்ளைக்காரரை அடக்குவதற் காக கௌரீ ஒரு கடற்படையை அனுப்பினார். ஆனால், எதிரிகள் அதை செங்கடலில் அழித்துவிட்டார்கள். ஹி. 918-இல் உஸ்மானிய ஸுல்தான் முதலாம் ஸலீம் என்பவருடைய சகோதரர் கர்கூத் என்பவர் அவருடன் சிம்மாசனத்திற்காகப் போர் புரிந்து தோல்வியடைந்து ஓட்டம் பிடித்து எகிப்துக்கு வந்தார். கௌரீ அவரது உதவிக்காக ஒரு கடற்படையைக் கொடுத்து குஸ்துன் துன்யாவை வெல்லுமாறு அனுப்பினார். இதை யறிந்து ஸுல்தான் ஸலீம் கோபங்கொண்டு, ஸிரியா மீது படை யெடுத்தார். அச்சமயம், ஸலீமுக்கு விரோதியாயிருந்த ஈரான் பாதுஷா இஸ்மாயில் என்பவருடன் எகிப்து சேனைகள் சேர்ந்துகொண்டு, துருக்கி சேனையை எதிர்த்தன. ஆனால், துருக்கியர் இரண்டு சேனைகளையும் ஒரே வேளையில் தோற்கடித்தார்கள். அச்சமயம், கௌரீ சமாதானம் செய்துகொள்வதாகத் தூதனுப்பினார். அதற்கு

ஸுல்தான் ஸலீம், "இனிமேல் நான் உம்முடைய சூழ்ச்சியில் சிக்கிக்கொள்ளமாட்டேன்" என்று விடை தந்துவிட்டார்.

எகிப்தின் சேனைகள் மறுபடியும் போருக்குத் தயாராகி, மர்ஜ் தாயிக் என்னும் நகருக்கு அருகில் அணிவகுத்து நின்றன. கௌரீயும் அவரது போர்வீரர்களும் உயிரை மதியாமல் கடும்போர் புரிந்தார்கள். ஆனால், துருக்கியரின் பீரங்கிகளுக்கு எதிரில் அவர்களுடைய ஆவேசமும் வீரமும் வீணாகிவிட்டது. ஏனென்றால், அவர்கள் அன்றுவரை ஈட்டிகளையும் வாட்களையும் உபயோகித்துப் போர் புரிந்தார்கள். அவர்களிடம் பீரங்கிகளும் துப்பாக்கிகளும் கிடையாது.

ஹி. 922 ரஜப் இருபத்தைந்தில் எகிப்து சேனையின் இடது வலது அணிகளின் தளபதிகள் துருக்கிச்சேனையுடன் கலந்துகொண்டார்கள். கௌரீ தமது சேனையின் மத்திய அணியிலிருந்து உடனே குதிரை ஏறி உயிர் தப்பி ஓடினார். செல்லும் வழியில் குதிரையிலிருந்து விழுந்து உயிர் துறந்தார்.

மலிக் அஸ்ரப் தூமான் பாய் II

கௌரீ போருக்குச் செல்லும்பொழுது தமது சகோதரரின் புதல்வர் தூமான்பாய் என்பவரைத்தமது பிரதிநிதியாக நியமித்து விட்டுச் சென்றிருந்தார். எனவே, அவருக்காகப் பொதுமக்கள் விசுவாசப்பிரமாணம் செய்தார்கள். இதற்குள் ஸுல்தான் ஸலீம் சேனைகளுடன் எகிப்து நாட்டில் நுழைந்து விட்டார். தூமான் பாய் தோல்வியடைந்து அங்கிருந்து அலெக்சாந்திரியாவுக்குச் சென்றார். வழியில் ஒரு சிற்றூரான் அவரைப் பிடித்துத் துருக்கியரிடம் கொடுத்துவிட்டான்.

ஸுல்தான் ஸலீம் பத்து நாட்கள் வரை தூமான் பாயைத் தம்முடன் வைத்திருந்தார். எகிப்து நாட்டைப் பற்றி அவரிடமிருந்து அறியக்கூடிய எல்லா செய்திகளையும் அறிந்துகொண்ட பிறகு, ஹி. 923 ரபீயுல் அவ்வல்

பத்தொன்பதாம் நாள் அவரைத் தூக்கிலிட்டு விட்டார். அன்று க்ஷர்கஸி அடிமை அரசாங்கம் முடிவடைந்தது. மேலும், அன்றுமுதல் எகிப்து நாடானது உஸ்மானிய சாம்ராஜ்யத்தின் ஒரு மாகாணமாகி விட்டது.

ஸுல்தான் ஸலீம் அலக்சாந்திரியாவில் ஒரு சேனையை நிறுத்தி, கௌரீயின் சேனாதிபதியாயிருந்த கைர்பேக் என்பவரை எகிப்தில் தமது பிரதிநிதியாக நியமித்தார். இதையன்றி, அச்சமயம் கலீபாவாக இருந்த முதவக்கிலிடம் கிலாபத்தையும் பெற்றுக்கொண்டு, அவரைத் தம்முடன் இஸ்தம்பூலுக்குக் கொண்டு சென்றார். இந்த முதவக்கில் இறுதியான அப்பாஸி கலீபா அவரிடமிருந்தே உஸ்மானித் துருக்கியருக்கு கிலாபத் கிடைத்தது.

(1) முஸ்தன் ஸிர் பில்லாஹ். ஹி. 659

பாக்தாத் வீழ்ச்சிக்குப் பிறகு, அப்பாஸி குடும்பத்தைச் சேர்ந்த இருவர் அங்கிருந்து தப்பியோடினார்கள். ஒருவர் அபுல் காஸிம் அஹ்மத் பின் ஜாஹிர் பி அப்ரில்லாஹ். மற்றொருவர் அபுல் அப்பாஸ் அஹ்மத் பின் ஹஸன் பின் அலி பின் அபூபக்கர் பின் முஸ்தர் ஷித் பில்லாஹ். நாம் முற் கூறியவாறு அபுல் காஸிம் அஹ்மத் என்பவர், ஹி. 659 ரஜப் மாதம் எகிப்து நாட்டிற்கு வந்தபொழுது மலிக் ஜாஹிர் பைபர்ஸ் பந்துகாதாரி அவரை எதிர்கொண் டழைத்து ஊர்வலம் செய்து, பிரம்மாண்டமான தர்பார் நடத்தி, அதில் அமீர்களையும், ஆலிம்களையும், காஜி-நீதிபதிகளையும் ஒன்று சேர்த்தார். அச்சமயம் காஜி தாஜுத்தீன் என்பவர் அபுல் காஸிம் அஹ்மத் உடைய அசல் குடும்பத்தைப்பற்றி நன்கு விசாரித்து, அதை உண்மை என்றறிந்து முடிவு செய்த பிறகே அபுல் காஸிம் அஹ்மதின் கையில் பையத்-விசுவாசப் பிரமாணம் செய்யப்பட்டது. அவருக்கு முஸ்தன் ஸிர் பில்லாஹ் என்னும் பட்டமும் அளிக்கப்பட்டது.

அன்றிருந்த சூழ்நிலையில், தாதாரிகளை பாக்தாத் நகரிலிருந்து துரத்திவிடுவதே கலீபாவின் முதற்கடமை

யாகக் கருதப்பட்டது. எனவே, ஸுல்தான் பைபர்ஸ் பெருஞ்சேனையொன்றை கலீபா அபுல் காஸிம் அஹ்மதிடம் கொடுத்து தாமும் அவருடன் டமஸ்கஸ் நகரம் வரை வந்தார்.

அபுல் அப்பாஸ் அஹ்மத் என்பவர் ஹலப் நகரில் கலீபாவாக நியமிக்கப்பட்டிருந்தார். அவரும் பிறகு டமஸ்கஸ் நகருக்கு வந்து முஸதன்ஸிருடைய கிலாபத்தை ஒப்புக்கொண்டதோடு அவருடன் சேர்ந்தும் வசித்தார். ஸிரியா, ஹலப் பிரதேசங்களைச் சேர்ந்த இதர சிற்றரசர் களும் இந்த மார்க்கப் போரில் கலந்துகொண்டார்கள். ஸுல்தான் பைபர்ஸ் பத்து இலட்சம் தீனர் செலவு செய்து சேனையைத் தயாரித்து, சிப்பாய்களுக்கு ஆயுதங்கள் தந்து அனுப்பினர். ஹி. 660 முஹர்ரம் முப்பதில் ஹீத் என்னு மிடத்தைக் கடந்த பிறகு தாதாரிகளுடன் போர் நடந்தது. ஆனால், தாதாரிகள் வெற்றியடைந்தார்கள். பெரும்பா லான முஸ்லிம்கள் கொலையுண்டார்கள். ஒருவேளை கலீபா முஸ்தன்ஸிரும் இதில் கொலையுண்டிருக்கலாமென்று யூகிக் கப்படுகின்றது. ஏனென்றால், அதற்குப் பிறகு, அவரை ஒருவரும் காணவில்லை. அவரது கிலாபத் ஆறு மாதங் களுக்குக் குறைவாகவே இருந்தது.

2. ஹாகிம் பி அம்ரில்லாஹ் I

ஹி. 660 — 701

முஸ்தன்ஸிருக்குப் பிறகு ஹலப் நகரில் கலீபாவாக நியமிக்கப்பட்டிருந்த அபுல் அப்பாஸ் அஹ்மத் என்பவர் எகிப்துக்கு அழைக்கப்பட்டு, ஹி. 660 முஹர்ரம் எட்டாம் நாள் அவர் கையில் பைஅத்-விசுவாசப் பிரமாணம் செய்யப் பட்டது. ஸுல்தான் பைபர்ஸ் அவருக்காக கஸ்ரா கபீர் என்னும் தமது அரண்மனையின் ஒரு பாகத்தை அவர் வசிப் பதற்காக ஒதுக்கி, அவரது ஜீவனத்திற்காகவும், வேறு தேவைகளுக்காகவும் ஏற்பாடுகள் செய்தார். ஹாகிம் இந்தப் பதவியில் நாற்பத்தொன்று ஆண்டுகள் அமர்ந்து

ஹி. 701 ஜமாதுல் அவ்வல் பன்னிரண்டாம் நாள் வெள்ளிக் கிழமை முஹம்மத் பின் கலாவூன் காலத்தில் இறந்தார். ஸையிதா நபீஸா என்னும் அடக்க ஸ்தலத்தின் அருகில் அவரை நல்லடக்கம் செய்தார்கள். அவருடைய ஜனஸா-பிரேத ஊர்வலத்தில் மந்திரி பிரதானிகள் அனைவரும் வெறுங் காலுடன் நடந்து சென்றார்கள்.

3. முஸ்தக்பீ பில்லாஹ் I

ஹி. 701 — 740

தமது புதல்வர் அபூ ரபீ ஸுலைமான் என்பவரைத் தமது காலத்திலேயே கிலாபத்திற்கு உரியவர் என்று கலீபா ஹாகிம் நியமனம் செய்திருந்தார். இவர் காலத்தில், ஹி. 709-இல் தாதாரிகளின் அரசர் கோபந்தா என்பவர் ராப்ஜி மார்க்கத்தைப் பின்பற்றித் தமது ராஜ்யத்தில் முதல் மூன்று இஸ்லாமிய கலீபாக்களின் பெயரை நீக்கிவிட்டார். எனவே, அங்கு கலகமும் குழப்பமும் ஏற்பட்டது. இதற்கிடையில், அவர் காலஞ் சென்றுவிட்டார். தாதாரிகளின் இறுதி அரசர் அபூ ஸயீத் என்பவர் சிம்மாசனம் ஏறினார். இவர் ஸுன்னத் வல் ஜமாஅத்தைச் சேர்ந்தவர். ஆகையால், கோபந்தாயின் கட்டளைகளைத் தள்ளுபடி செய்துவிட்டார்.

எகிப்திலிருந்த (முஸ்லிமல்லாத) ஜிம்மிகள் அதற்கு முன் தங்கள் மீது விதித்திருந்த நிபந்தனைகளை நீக்கி விட்டால், அதற்குப் பதிலாக சர்க்காருக்கு ஆண்டுதோறும் ஏழு லட்சம் தீனார் கொடுப்பதாக மந்திரியிடம் விண்ணப்பம் செய்தார்கள். மந்திரியும் ஸுல்தானும் உடன்படுவதாகவே இருந்தார்கள். ஆனால், இமாம் தகீவுத்தீன் அஹ்மத் பின் தமீயா என்பவர், மார்க்கக் கட்டளைகளை விலைக்கு விற்க முடியாதென்று தடுத்து விட்டார். கலீபாவும் இதை ஆதரித்தார். ஆகையால், ஜிம்மிகளுடைய கோரிக்கைகள் நிறைவேறவில்லை.

எகிப்தில், ஸுல்தான் முஹம்மத் பின் கலாயூனும் கலீபாவும் ஒருமனப்பட்டிருந்தார்கள். இருவரும் வேட்டையாடவும், உலாவவும், குதிரை மீதே உட்கார்ந்து பந்தாடும் சௌகான் (போலோ) பந்தாடவும் ஒன்ருகவே செல்வார்கள். இருவரும் ஒரே தாயின் குழந்தைகளைப் போல நடந்து வந்தார்கள். ஆனால், ஹி 736-இல் விரோதியின் குரோதத்தால் இவர்களுக்கிடையில் மனக்கசப்பு ஏற்பட்டு விட்டது. இதன் விளைவாக, ஸுல்தான் தமது அரண்மனையின் மேற்கோபுரத்தில் கலீபாவை மெய்க்காவலில் வைத்து அவரை ஒருவரும் சந்திக்கலாகாதெனவும் தடுத்து விட்டார். பிறகு, ஹி. 737 துல்ஹஜ் மாதம் அவரை குடும்பத்தோடும் பரிவாரத்தோடும், கூஸ் நகருக்கு அனுப்பி விட்டார். குத்பாவிலிருந்து அவர் பெயரை நீக்கிவிடுமாறு கட்டளையிட்டார். ஆனல், அவரது ஜீவனம்சத்திற்கு வேண்டிய உபகரணங்களை அதிகரித்துக் கொடுத்துதவினுர்.

ஹி. 740 ஷஃபான் மாதம் கூஸ் நகரில் கலீபா முஸ்தக்பீ இறந்து போனுர். அச்சமயம், அவருக்கு வயது ஐம்பதிற்கு அதிகமாயிருந்தது. முஸ்தக்பீ தயாள குணமுள்ளவர், வீரமுள்ளவர். போரில் சிறந்தவர். எப்பொழுதும் கற்ருேருடனும் மேன்மக்களுடனும் கலந்துறவாடுவார். அவருடைய எழுத்து மிகவும் சுத்தமானது. இவ்வாறு, ஹாபிஸ் இப்னு ஹஜர் எழுதுகின்ருர்.

4. வாஸிக் பில்லாஹ்

ஹி. 740 — 741

ஹாகிம் பி அம்ரில்லாஹ் தமது புதல்வர் அபூ அப்துல்லாஹ் முஹம்மத் என்பவரை கிலாபத்திற்கு உரியோர் என்று நியமித்திருந்தார். ஆனல், அவர் ஆயுள் காலத்தில் முஹம்மத் இறந்துவிட்டார். எனவே, அவரது புதல்வர் இப்ரஹீம் பின் முஹம்மத் என்பவரை அந்தப் பதவிக்கு நியமித்தார். ஆனல், இப்ராஹீம் கீழோரின் தொடர்புள்ளவரெனவும் அதனல் ஒழுக்கம் கெட்டவரெனவும், அறிந்

தவர். எனவே, தமது இரண்டாம் புதல்வர் முஸ்தக்பீ (?) என்பவரை நியமித்தார். முஸ்தக்பீ கலீபா ஆனார். பிறகு இந்த மலிக் நாஸிர் முஹம்மத் பின் கலாவூன் என்பவரை இப்ராஹீம் இவருடைய ஜன்ம விரோதியாக்கி விட்டார்.

கலீபா முஸ்தக் பீ இறக்கும்பொழுது, தமக்குப் பிறகு தமது புதல்வர் அஹ்மத் கலீபா ஆகவேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார். ஆனால், ஸுல்தான் அதை நிராகரித்து விட்டு இப்ராஹீம் என்பவரை வாஸிக் பில்லாஹ் என்னும் பட்டம் கொடுத்து கலீபா பதவிக்கு உயர்த்தினர். இந்த ஒழுங்கற்ற செயலை ஆலிம்களும் காஜி-நீதிபதிகளும் எதிர்த்து நின்றார்கள் ஆனால், ஸுல்தான் அவரை நீக்காமல், குத்பாவிலிருந்து அவர் பெயரை நீக்கிவிட்டார். அவர் இறக்கும்பொழுது கலீபா முஸ்தக்பியின் புதல்வர் அஹ்மதை கலீபாவாக நியமிக்குமாறு குறிப்பிட்டார்.

5. ஹாகிம் பி அம்ரில்லாஹ் II

ஹி. 741 — 753

முஹம்மத் பின் கலாவூன் குறிப்பிட்டதற்கேற்ப அவரது புதல்வர் ஸைபுத்தீன் அபூ பக்ர் சிம்மாசனம் ஏறிய பிறகு, ஹி. 741 துல்ஹஜ் மாதத்தில் பிரதம நீதிபதியை அழைத்து பகிரங்க தர்பாரில் கலீபா வாஸிக் நீக்கிவிடப்பட்டதாக அறிவித்து கலீபா முஸ்தக்பியின் புதல்வர் அபுல் அப்பாஸ் அஹ்மத் என்பவரை கலீபாவாக்கினர். இவர் இரண்டாம் கலீபாவின் பெயரும் குடும்பப் பெயரும் உள்ளவராதலால் இவருக்கும் அந்தப்பட்டமே கொடுக்கப்பட்டது. ஹி. 753 இல் இவர் பிளேக் நோயால் இறந்து போனர்.

6. முஃதஸித் பில்லாஹ் I

ஹி. 753 — 763

ஹாகிம் பி அம்ரில்லாஹ்வின் சகோதரரான அபுல் பதஹ் முஃதஜித் என்பவர் பிறகு கலீபா ஆனர். ஹி. 763

ஜமாதுல் அவ்வல் மாதம் அவர் இறந்து போனார். அவர் சிறந்த கல்விமான். எல்லோருடனும் நன்றாகப் பழகுவோர்.

7. முதலாம் முதவக்கில் அலல்லாஹ்

ஹி. 763 — 808

தமது தகப்பனார் குறிப்பிட்டதற்கேற்ப அபூ அப்துல்லாஹ் முஹம்மத் பின் முஃதஜித் ஹி.763இல் கலீபா ஆனார். இவர் வெகுகாலம் கலீபாவாக இருந்தார். ஹி. 779-இல் அஷ்ரப் கொலையுண்டதைத் தொடர்ந்து அதாபக் லாயன் ஒரு விஷயத்தில் இவருடன் கோபங்கொண்டார். எனவே, இவரைக் காவலில் வைத்துவிட்டு ஜகரிய்யா பின் வாஸிக் என்பவரை முஃதஜிம் என்னும் பட்டங் கொடுத்து கலீபாவாக்கினார். ஆனால், விசுவாசப் பிரமாணம் நடக்கவில்லை. ஆனால், பதினைந்து நாட்கள் கழித்து முதவக்கில் மறுபடியும் கிலாபத்திற்கு அழைக்கப்பட்டார்.

ஹி. 787-இல் பர்கூக் நீக்கப்பட்டு விட்டதாக கலீபா முதவக்கில் விளம்பரஞ் செய்தார். ஆனால், பர்கூக் உடனே முதவக்கிலை கிலாபத்திலிருந்து நீக்கி, உமர் பின் இப்ராஹீம் என்பவரை கலீபாவாக்கினார். ஹி.788-இல் உமர் இறந்து போனார். எனவே, மந்திரி பிரதானிகள் முதவக்கிலை மறுபடியும் கலீபாவாக நியமிக்கும்படி ஆலோசனை கூறியும் ஸுல்தான் அதற்கு உடன்படாமல், அதாபக் லாயன் காலத்தில் கலீபாவாக இருந்த ஜகரிய்யா பின் வாஸிக் என்பவரை கலீபாவாக்கினார். ஆனால், அவரும் விரோதியாகிவிடவே, அவரையும் நீக்கி, மீண்டும் முதவக்கிலை கலீபாவாக்கினார். முதவக்கில் மறுமுறையும் பர்கூக் என்பவனை நீக்க முயன்று அதில் வெற்றியும் அடைந்தார்.

ஹி. 808 ரஜப் மாதம் முதவக்கில் காலஞ் சென்றார். இவருக்கு நூறு குழந்தைகள் இருந்தார்கள். அவர்களில் ஐந்து பேர் கலீபா பதவி பெற்றார்கள்.

8. முஸ்தயீன் பில்லாஹ்

ஹி. 808 — 815

அபுல் பஜல் அப்பாஸ் பின் முதவக்கில் என்னும் இவர் ஹி. 809 ரஜப் மாதம் பர்கூக் என்பவரின் புதல்வர் தலிக் நாஸிர் காலத்தில் கலீபா ஆனர். ஷெய்க் மஹ்மூதி என்பவர் நாஸிரைக் கைது செய்தபொழுது முஸ்தயீன் அவரைக் கொலை செய்து அரசாங்கத்தைக் கைப்பற்றிக் கொண்டார்.

வெகு காலத்திற்குப் பிறகு, அப்பாஸி கலீபாவுக்கு இகலோக அரசாங்கம் கிடைத்தமையால் முஸ்லிம்களெல் லாம் பெருமகிழ்ச்சியடைந்து பல கொண்டாட்டங்கள் நடத்தினர்கள். ஆனல், இது வெகுகாலம் நீடித்திருக்க வில்லை. ஷெய்க் மஹ்மூதி இவரை வெகு சீக்கிரம் கிலாபத் திலிருந்து அரசாங்கத்திலிருந்து நீக்கிக் கோட்டையில் அடைத்துக் காவல் செய்து தாமே ஸுல்தானகி விட்டார். பிறகு, முதவக்கிலின் புதல்வர் தாவூதை கலீபாவாக நியமித் தார். அதற்குப் பிறகு, முஸ்தஈனை அலக்சாந்திரியாவுக்கு அனுப்பிவிட்டார். அங்கு அவர் ஹி. 838-இல் இறந்து போனர்.

9. முஃதஜித் பில்லாஹ் ||

ஹி. 845 — 845

தாவூதுக்கு முஃதஜித் பில்லாஹ் என்னும் பட்டம் கொடுக்கப்பட்டது. அவர் ஹி. 815 இல் கலீபாவாகித் தமது அறுபத்து மூன்றும் வயதில் ஹி. 845-இல் ரபீயுல் அவ்வல் நாலாம் நாள் இறந்து போனர். இந்த கலீபா அறநெறியில் நடந்தார். அறிவுள்ள கல்விமான்.

10. முஸ்தக்பீ பில்லாஹ் II

ஹி. 845 — 854

கலீபா முஃதஸிதுக்குப் பிறகு அவரது விருப்பத்திற் கிணங்க அபூ ரபீ ஸுலைமான் பின் முதவக்கில் என்பவர் கலீபா ஆனார். அவர் சிறந்த பக்திமான். வணக்கத்தி லேயே காலங் கழிப்பவர். அல்லாமா ஜலாலுத்தீன் ஸுயூதியின் தகப்பனார் கலீபாவின் பாதுகாவலில் மாளிகை யில் வளர்ந்து வந்தார். மலிக் ஜாஹிர் சக்மக் என்பவர் இவ ரை அதிக அன்புடனும் கண்ணியத்துடனும் நேசித்து வந் தார். இவர் தமது அறுபத்து மூன்றாம் வயதில் வெள்ளிக் கிழமை, ஹி. 854 துல்ஹஜ் இருபத்தொன்பதாம் நாள் காலஞ் சென்றார். மந்திரி பிரதானிகளும், ஷைகுகளும் துக்கத் துடனும் அவரது ஜனாஸா – பிரேதப் பேழைக்குப் பின்னால் நடந்து சென்றார்கள். ஸுல்தான் சக்மக் தோள்கொடுத்து ஜனாஸாவைச் சுமந்தார்.

11. காயிம் பி அம்ரில்லாஹ்

ஹி. 854 — 859

அபுல் பகா ஹம்ஸா பின் முதவக்கில் கிலாபத்திற்கு உரியோரெனக் குறிப்பிடப்படாமலே அப்பதவி ஏற்றார். அவரது சூட்சிகளின் அச்சத்தால் ஸுல்தான் சக்மக் தமது புத்திரர் உஸ்மானிடம் அரசாங்கத்தைக் கொடுத்துவிட்டார். காயிம், அவர் நீக்கப்பட்டு விட்டதாக விளம்பரஞ் செய்து, கலீபா முஸ்தயீன் செய்ததைப் போன்றே தாமும் அரசாங் கத்தைக் கைப்பற்றி விடலாமென்று எண்ணினார். எனினும், அவரது முயற்சி கைகூடவில்லை. மலிக் அஷ்ரப் யனால் என்பவர் சிம்மாசனம் ஏறினார். கலீபா அவருக்கு விரோத மாகச் சதி செய்தார். எனவே, ஹி. 859-இல் அலக்சாந் திரியாவுக்கு அனுப்பப்பட்டார். அங்கு ஹி. 863-இல் மரண மடைந்து, அவரது சகோதரர் முஸ்தயீனுக்கு அருகில் அடக்கம் செய்யப்பட்டார்.

12. முஸ்தன்ஜித் பில்லாஹ்

ஹி. 859 — 884

அபுல் முஹாஸின் யூஸுப் பின் முதவக்கில் ஹி. 859-இல் கலீபா பீடத்தில் அமர்ந்தார். அவர் காலத்தில் அரசாட்சி மாறிக்கொண்டே இருந்தது. இறுதியில், மலிக் அஷ்ரப் காயித் பாய் என்பவரிடம் வந்தது. ஜாஹிர் குஷ் கதம் என்பவர் அவருடைய சூட்சிகளுக்குப் பயந்து அவரைக் காவலில் வைத்து விட்டார். அங்கு, ஹி. 884 முஹர்ரம் இருபத்துநான்காம் நாள் அவர் உயிர் துறந்தார்.

13. முதவக்கில் அலல்லாஹ் II

ஹி. 884 — 903

அப்துல் அஜீஸ் பின் யஃகூப் பின் முதவக்கில் ஹி. 884 முஹர்ரம் பதினைரும் நாள் கலீபாவானுர். அவர் இஸ்லாமிய மார்க்கச் சட்ட திட்டங்களை ஒழுங்காகப் பின்பற்றுவோர். நல்ல பண்பு நலன்கள் நிறைந்தவர். ஹி. 903 ஸபர் இரண்டாம் நாள் காலஞ் சென்ருர்.

14. முஸ்தமஸ்க் பில்லாஹ்

ஹி. 903 — 920

யஃகூப் பின் அப்துல் அஜீஸ் என்பது இவர் பெயர். தகப்பனுர் இறந்த பிறகு இவருக்த விசுவாசப் பிரமாணம் செய்யப்பட்டது. ஆனுல். ஹி. 920-இல் இறந்து போனுர்.

15. முதவக்கில் அலல்லாஹ் III

ஹி. 920 — 923

மும்மத் என்னும் இவர் முஸ்தமக் இறந்த பிறகு கிலாபத்தைப் பெற்ருர். இவர் காலத்தில், ஹி. 923-இல் துருக்கி ஸுல்தான் முதலாம் ஸலீம் என்பவர் எகிப்து நாட்டை வென்ருர்.

கலீபாவின் அதிகாரம் ஸுல்தானுடைய அதிகாரத்தைவிட அதிக கண்ணியமுள்ளதாக இருந்தமையாலும், கலீபாவின் கட்டளைகளுக்கு ஸுல்தான் கீழ்ப்படிந்து நடக்க வேண்டு மாதலாலும் ஸுல்தான் ஸலீம் விஷயங்களை நன்கு ஆராய்ந்து பார்த்தார். அவர் எகிப்தின் அரசியலைக் கைப் பற்றிய பொழுது, அதேசமயம் கிலாபத்தின் அதிகாரம் பிறர்கையிற் செல்வதை விரும்பாமல் அவரே கிலாபத் தையும் கைப்பற்றிக்கொண்டார். அன்று முதல், பெயரள விலிருந்த இந்த கிலாபத்தும் அப்பாஸிகளின் கையிலிருந்து சென்றுவிட்டது.

மேலும் ஸுல்தான் ஸலீம், கலீபா முதவக்கிலைத் தம்முடன் இஸ்தம்பூலுக்கு அழைத்துக்கொண்டு சென்று, அங்கு அவருக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து வந்தார். இறுதியாக, முதவக்கில் ஹி. 945ல் அங்கு மரணமடைந்தார்.

பதின்மூன்றும் அத்தியாயம்

அப்பாஸி கிலாபத்

பக்தாதிலிருந்த அப்பாஸிகளின் கிலாபத்தானது இஸ் லாமிய உலகம் முழுமைக்கும் பிரதிநிதி ஸ்தானமாக இருக்க வில்லை. ஏனென்றால், ஐரோப்பாவில் அந்தலூஸ் (ஸ்பெயின்) நாடும் ஆதியிலிருந்தே இந்தகிலாபத்தி லிருந்து விலகிவிட்டது. காலச் சக்கரம் சுழலச்சுழல பெரும் பாலான இஸ்லாமிய நாடுகள் சிறிது சிறிதாக இதன் ஆதிக்கத்திலிருந்து நழுவிக்கொண்டே இருந்தன. இறுதி யாக, தேலமிகளும், ஸல்ஜூகிகளும், அப்பாஸி கிலாபத்தின் தலைநகரையும் கைப்பற்றிக்கொண்டார்கள். அச்சமயம் கிலாபத்தின் ராஜ்யாதிகாரம் பெயரளவில் மட்டுமே இருந்தது. இவ்வாறிருந்தும் நேர்வழி நடந்த நான்கு கலீபாக்களுக்கும் உமய்யாக்களுக்கும் வாரிஸாக அப்பாஸி கிலாபத் அமைந்திருந்தமையால், பொதுவாக முஸ்லிம்கள் இதை ஒரு மத்யஸ்தானமாகவே கருதிவந்தார்கள். மேற்கி

லிருந்து கிழக்கு வரையிலும் சகல முஸ்லிம் ஸுல்தான்களும் சிற்றரசர்களும் இந்த அப்பாஸி கலீபாக்களையே நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லமவர்களின் பிரதிநிதிகள் எனவும், இஸ்லாமிய உலகின் அதிபர்கள் எனவும் ஒப்புக்கொண்டதோடு, தங்களுடைய அரசுரிமைகளை வன்மைப் படுத்துவதற்காக அந்த கலீபாக்களிடமே ஃபர்மான் (Farman) என்னும் அதிகாரப் பத்திரம் பெற்றுக்கொண்டார்கள். மேலும், தங்களை அந்த கலீபாக்களின் பிரதிநிதிகளாகப் பாவித்தார்கள். அந்த கலீபாக்களின் பெயரை பள்ளிவாசல்களில் குத்பாக்களில் ஓதி, அதனால் தங்களுக்கு உயர்வுண்டாகுமென்று கருதினார்கள்.

ஆனால், அந்தலுஸ் (ஸ்பெய்ன்), மொரோக்கோ (மராகஷ்) நாடுகளிலிருந்த கலீபாக்களையும், பாத்திமீ கலீபாக்களையும், அந்தந்த அரசாங்கப் பிரஜைகளையும், ஆதரவாளர்களையும் தவிர—வேறு எவரேனும் எந்தக்காலத்திலும், எந்த நாட்டிலும் அப்பாஸி கலீபாக்களை இஸ்லாமிய உலகின் கலீபா என்று ஏற்றுக்கொண்டதைப் போன்று இந்தப் புதிய கலீபாக்களை அங்கீகரிக்கவில்லை. பொதுவாக, இந்தப் புதிய கிலாபத் நிறுவனங்களெல்லாம் உலக முஸ்லிம்களால் ஒப்புக்கொள்ளப்படாமலும் சட்டவிரோதமானவை எனவும் கருதப்பட்டு வந்தன. அகன்று பரவியிருந்த காரிஜிம்ஷாஹ்க்களுடைய அரசாங்கமும், வேறு பல இஸ்லாமிய ராஜ்யங்களும், அழிந்தபொழுது முஸ்லிம்கள் வருத்தமடைந்தது உண்மையே. ஆனால் மூன்று மாகாணங்களுக்கு அதிகமாக பக்தாத் கலீபாவுக்குச் சொந்தமாக இல்லாதிருந்த நெருக்கடியான வேளையிலே, அதாவது, பக்தாத் அழிந்த சமயத்திலே, முஸ்லிம்கள் அதைவிட அதிகமாகத் துக்கக்கடலில் ஆழ்ந்தார்கள். ஏனென்றால், பக்தாதிலிருந்த இஸ்லாமிய கிலாபத் அழிந்தவுடன், இஸ்லாமின் மத்தியஸ்தானமும் அழிந்துவிட்டது. மேலும், தனது தலைசிறந்த பதவியின் காரணமாக உலகப் பெருமையும், மார்க்கச்சிறப்பும் அடைந்திருந்ததொரு மகோன்னத

ஸ்தாபனமானது முஸ்லிம்களிடமிருந்து மறைந்து விட்டது. எனவே, இதை மறுபடியும் நிறுவுதல் மிகமிக அவசியமெனக் கருதப்பட்டது.

இவ்வுணர்ச்சியும் பேராவலும் சாதாரண முஸ்லிம்களிடம் இருந்ததைவிட ஆலிம்களுடைய இருதயத்தில் அதிகமாகக் குடிகொண்டிருந்தது. மேலும், கிலாபத்தின் வரலாற்றை நன்கு ஆராய்ந்து இப்பதவிக்கு உரியோர் அப்பாஸி குடும்பத்தாரே என்னும் விஷயமும் அவர்கள் உள்ளத்தில் ஊன்றிவிட்டது. இவ்வெண்ணத்தை அடிப்படையாகக்கொண்டே பக்தாதிலிருந்து உயிர் தப்பி, ஹலப்—அலப்போ நகருக்கு வந்த அபுல் அப்பாஸ் அஹ்மத் என்பவருக்கு, "ஹாகிம் - பி - அம்ரில்லாஹ்" என்னும் பட்டம் கொடுத்து, இமாம் இப்னு தமீயாவின் சங்கைக்குரிய தகப்பனார் அப்துல் ஹலீம்-பின்-தமீயா அவரை கலீபாவாக்கி, மக்கள் அனைவரிடமும் பைஅத் என்னும் விசுவாசப் பிரமாணம் வாங்கி, கிலாபத் ஸ்தாபனத்தை நிறுவினார். அபுல் காஸிம் அஹ்மத் என்பவர் எகிப்துக்கு வந்தபொழுது அல்லாமா இஜ்ஜுத்தீனும், காஜி தாஜுத்தீனும் முயற்சிசெய்து அவரை கலீபாவாக்கி அவர் கையில் பைஅத் செய்து, பக்தாதில் அழிந்துவிட்ட மத்தியஸ்தாபனத்தை கெய்ரோ (காஹிரா) வில் மறுபடியும் நிறுவினார்கள்.

மார்க்க பக்தியின் மேலீட்டாலும், கிலாபத்தின் உதவியாலும் அதன் சாயலாலும் தமது அரசாங்கம், பொது மக்களால் நன்கு மதிக்கப்படுவதோடு சிறப்பும் பெருகும் எண்ணத்துடனும், எகிப்து நாட்டு ஸுல்தான் பய்பர்ஸ் பந்துக்தாரி என்பவரும் பைஅத் விசுவாச பிரமாணம் செய்துகொண்டார். இதற்குப் பிறகு வெள்ளிக் கிழமையன்று கலீபாவின் பெயர் குத்பாவில் ஓதப்பட்டது. ஸுல்தான் பய்பர்ஸுக்கு, எகிப்து, ஸிரியா, முதலிய நாடுகளின் அரசாங்க அதிகாரப் பத்திரமும் இந்த கலீபாவால் அளிக்கப்பட்டது.

இனி, ஸுல்தான் பய்பர்ஸ், கலீபாவுக்காக ஒரு தனியான அரண்மனை தயாரித்து, அவருக்காக செயலாளர்களும் அரண்மனை மேற்பார்வை உத்தியோகஸ்தரும், கஜானு மந்திரியும், இன்னும், இதர அலுவலர்களும் நியமித்தார். ஆண், பெண், பணிமக்களும் சேவகர்களும், சவாரிக்காக நூறு குதிரைகளும் அனுப்பினுர். மேலும், ஆகாராதிகளின் செலவுக்கு ஆவன செய்தார். குத்பாக்களிலும் நாணயங்களிலும் கலீபாவின் பெயரைச் சேர்த்து மரியாதை செய்தார்.

ஆலிம்கள் இவ்வாறு அப்பாஸிகிலாபத்தை முஸ்லிம்களின் நன்மையைக் கருதி நல்லெண்ணத்துடன் புதுப்பித்தார்கள் என்பதில் அணுவளவும் ஐயமில்லை. முஸ்லிம்களின் ஒற்றுமையும், இஸ்லாமிய மத்தியஸ்தாபனமும் ஸ்திரப்பட்டு விடுமென்பதே அவர்களது நன்னோக்கமாகும். ஆயினும், இந்த கிலாபத்தின் பழைய, ஆத்மீக, புனிதத் தொடர்பைப் பின்பற்றி முஸ்லிம்கள் ஒற்றுமைப் பட்டு புத்துயிர் பெறும் காலம் வெகுதூரம் சென்றுவிட்டது. எனவே, லௌகீகராஜ்ய சம்பந்தமான பலன்கள் இந்த கிலாபத்தினுல் இப்பொழுது ஏற்படாமற் போயிற்று. எகிப்து நாட்டிற்கு இந்த கிலாபத்தால் பெரிய நஷ்டமே ஏற்பட்டது. ஏனென்றுல், ஒரே சமயத்தில் இரண்டு நிரந்தரமான, சுவாதீன அதிகாரங்கள் அந்த நாட்டில், செயலாற்றப் பட்டன. இறுதியாக, ஸுல்தான்கள் சிறிதுகாலத்திற்குப் பிறகு கலீபாவை கோட்டையில் தங்கள் பார்வையில் வைக்க ஆரம்பித்து மந்திரி பிரதானிகள் கலீபாவைச் சந்திக்கலாகா தெனவும் தடுத்துவிட்டார்கள். அதற்குப் பின்னர் நாணயங்களிலிருந்தும், குத்பாக்களிலிருந்தும் கலீபாவின் பெயரை நீக்கிவிட்டார்கள். மார்க்க சம்பந்தமான கூட்டங்களில் கலீபா சடங்குக்காகவும், சிறப்புக்காகவும் அழைக்கப்பட்டு ஒரு புனிதப்பொருள் (தப்ருக்) போன்று நடத்தப்பட்டு வந்தார். கலீபா என்னும் பெயரை மாற்றி இமாம் என்றழைக்கப்பட்டார். இவர் அரசியல் விஷயங்களில் தலையிட முடியாது.

கலீபாக்களில் எவராயினும் இதற்கு மாறுபட்டு நடக்க முயன்றால், உடனே அவர்கள் கைது செய்யப்பட்டும், நீக்கப்பட்டும் வந்தார்கள்.

ஆனால், கலீபா முஸ்தயீன் பில்லாஹ் என்பவர் வெகு தைரியத்துடன் இந்த ஆபத்தான பாதையில் அடியெடுத்து வைக்கத் துணிந்து அரசாங்கத்தையும் கைப்பற்றிக்கொண்டார். அதைக்கண்டு ஆலிம்கள் அளவிலா ஆனந்தமடைந்தார்கள். ஷெய்குல் இஸ்லாம், ஹாபிஸ்-பின்-ஹஜர்- என்பவர் ஆனந்த ஆவேசத்தின் காரணமாக ஒரு பாமாலை எழுதினார். ஆனால், சுயநலமிகளான மந்திரி பிரதானிகளின் காரணமாக நாற்பதே நாட்கள் சிம்மாசனத்தில் உட்கார்ந்த பிறகு அவர் கைது செய்யப்பட்டார்.

எகிப்து நாட்டில் கலீபாக்களின் கதி இவ்வாறானால், இதர சுல்தான்களும், சிற்றரசர்களும் இவர்களை எவ்வாறு மதிப்பார்கள்? துருக்கி சுல்தான் பாயஜீத் என்பவர் பழைய சம்பிரதாயத்தை யொட்டி, கலீபாவிடமிருந்து அதிகாரப்பத்திரம் பெற்றுக் கொண்டார். ஆயினும், அதே துருக்கி அரச பரம்பரையைச்சேர்ந்த ஸுல்தான் ஸலீம் என்பவரோ இந்த கலீபாக்களிடமிருந்து கிலாபத்தையும் பிடுங்கிக்கொண்டார். எனவே, அப்பாஸிகளிடமிருந்தும், குறைஷிகளிடமிருந்தும், அரபியரிடமிருந்தும் இந்த பெரும் பதவியானது அகன்று அரபியரல்லாதாரிடம் சென்று விட்டது.

ஆனால், இந்த கிலாபத்தின் காரணமாக எகிப்து நாட்டிற்கு ஒரு நன்மை உண்டாயிற்று. அதாவது முஸ்லிம்கள் எகிப்து நாட்டை வென்ற நாள்முதல் அங்கு இஸ்லாமியக் கலைகள் விதைத்து, வளர்ந்து, பூத்துக்காய்க்க ஆரம்பித்தன. பெரும்பாலான ஆலிம்களும் பேராசிரியர்களும், நூலாசிரியர்களும் எகிப்து நாட்டில் ஏராளமாக வசித்துவந்தார்கள். எகிப்து நாட்டில் கிலாபத்

ஸ்தாபிக்கப்பட்டபின்னரே அங்கு கலைகளும் மார்க்கமும் நன்கு வளர்ந்தன. பக்தாதிற்குப் பதிலாக கெய்ரோ காஹிரா நகரமே ‘இஸ்லாமியக் கல்விக்களஞ்சியமாகவும் மத்தியஸ்தானமாயும் விளங்கலாயிற்று.

உஸ்மானிய ஸுல்தான்கள் இஸ்லாமிய கிலாபத்தை இஸ்தம்பூலுக்குக் கொண்டு சென்றார்கள். ஆனால் இஸ்லாமிய கலாஞானங்களை எகிப்திலேயே விட்டுச் சென்றார்கள். எகிப்து நாடு தொடர்ச்சியாக இஸ்லாமியக் கலாபீடமாகவே வந்துகொண்டிருக்கிறது. மேலும், இன்று வரை இதன் கலைச் சுவாலைகள் இஸ்லாமிய உலகில் பிரகாசித்துக்கொண்டே இருக்கின்றன.

அத்தியாயம் 1

எகிப்தின் மறுவிழிப்பு

19ம் நூற்றாண்டு முஸ்லிம் உலகம் இருண்டகால மாகவே தோன்றியது. சிலுவையுத்தங்கள் நடந்தகாலத் திலிருந்து — ஐரோப்பாவுக்கும் இஸ்லாமிய உலகிற்குமி டையில் நடந்தபோராட்டத்தில் இறுதியாக கி. பி. பத் தொன்பதாம் – இருபதாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய நாடுகளுக்கே வெற்றிகிடைத்தது. இந்த இருள் மேற்கே அட்லாண்டிக் மகாசமுத்திரத்தின் கரையிலுள்ள மொரோக்கோ நாட்டிலிருந்து கிழக்கே இந்தியா, மலாயா, இந்தோனேஸியா நாடுகள் வரை சூழ்ந்துகொண்டது.

இதற்குக் காரணமென்ன? முஸ்லிம்களுக்கிடையில் ஒற்றுமையின்மை, சுயநலம், இஸ்லாமியக் கொள்கை களை விட்டுவிடல் முதலான அடிப்படைக்காரணங்கள் இருந்தன. எனினும் பல நூற்றாண்டுகளாக பிற்போக்கி லிருந்த ஐரோப்பிய நாடுகள் கி. பி. பதினெட்டாம் நூற் றாண்டிலிருந்து முன்னேற்றமடைந்து அமெரிக்கா, ஆப்பி ரிக்கா, ஆசியா கண்டங்களில் தங்கள் வியாபாரத்தைப்

பெருக்கிக் கொண்டன. பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதியில் ருஷ்யா நாடும் இதர ஐரோப்பிய நாடுகளும் வலிமை பெற்றன. அதே சமயத்தில், அப்பொழுது ஒரே ஒரு முஸ்லிம் ராஜ்யமாக இருந்த துருக்கி சாம்ராஜ்யம் சின்ன பின்னமாகிக் கொண்டும், பலவீனமடைந்து கொண்டும் வந்தது. எகிப்து ஸிரியா ஆகிய நாடுகள் பிற் போக்கடைந்திருந்தன. ஈரானிலும் அவ்வாறே நடந்தது. இந்தியாவில் முகல் ராஜ்யம் மறைந்து மராட்டியரும் ஆங்கிலக்கிழக்கிந்தியக் கம்பெனியாரும் அந்த இடத்தில் வன்மை பெற்று, இறுதியாக ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவுக்கு அதிகாரியாக உருவாகிக்கொண்டு வந்தது. அரபு நாட்டின் மத்திய பாகத்தில் மட்டும்தான் ஒரு புதிய இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கம் வஹாபிகளால் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறு மேலநாடுகள் இஸ்லாமிய உலகை ஆக்கிரமிக்க ஆரம்பித்து விட்டன. அதில் ஒரு நூற்றுண்டு வரை வெற்றியும் கண்டன.

துருக்கியின் ஒரு மாகாணமாக எகிப்து மாறிய பிறகு அதன் நிர்வாக அதிகாரி ஒரு துருக்கி கவர்னராகவே இருந்தார். மேலும் ஐயாயிரம் போர்வீரர்கள் கொண்ட துருக்கிய சேனை ஒன்று அங்கு நிரந்தரமாக வைக்கப்பட்டது. ஆனல், அரசியல் நிர்வாக முறையோ பழைய மம்லூக் அமீர் -பிரபுக்கள் கையிலே இருந்தது. வட ஆப்பிரிக்காவில் தூனிஸ், அல்ஜீரியா, திரிப்போலி ஆகிய நாடுகளைப் போன்று எகிப்தும், ஸிரியாவும் துருக்கி ஸுல்தானுக்குக் கப்பம் கட்டிக்கொண்டு வந்தன. இவ் வாறு இருநூற்று எண்பது ஆண்டுகள் கழிந்தன. இதற் கிடையில், எகிப்து நாடு நல்ல நிலைமையில் இருந்தது என்று கூறமுடியாது. கி. பி. 1877-ல் அலீபே (Ali Bey) என்பவர் மம்லூக் இனத்தாருக்காக எகிப்து நாட்டிலே துருக்கி ஸுல்தானுக்கு விரோதமாக கிளர்ச்சி செய்து தன்னை எகிப்து ஸுல்தான் என்று பிரகடனம் செய்து கொண்டார். ஆனல், தோல்வியடைந்து விட்டார்.

இந்த நிலையில்தான் இந்தியாவில் தனது ஆதிக்கத்தை பெருக்கிக் கொண்டுவரும் இங்கிலாந்தை தோற்கடிக்கவேண்டுமானால் எகிப்து நாட்டை வென்று அங்கிருந்து கிழக்கு நோக்கிச்சென்று மத்திய கிழக்கு நாடுகளை பிரெஞ்சு சாம்ராஜ்யத்தில் சேர்த்துவிட வேண்டுமென்ற ஒரு திட்டம் அக்காலத்தில் ஐரோப்பிய வெற்றி வீரராக இருந்த நெப்போலியன் என்பவரின் உள்ளத்தில் உதித்தது.

முஹமத் அலீயின் மரபு

1. முஹம்மத் அலீ பாஷா
1805 — 1848

2. இப்ராஹிம் பாஷா. 1832-1840.	3. அஹ்மத் தூஸூன்.	4. முஹம்மத் ஸயீத் பாஷா 1854-1863
5. இஸ்மாயீல் கதீவ். *1863-1879*	அப்பாஸ் ஹில்மி பாஷா. *1848--1854*	
6. முஹம்மத் தவ்ஃபீக் கதீவ் *1879--1892*	8. ஹுஸைன் கமால் ஸுல்தான் 1914-1917	9. ஃபுஆத் ஸுல்தான் 1919-1922 அரசர் 1922-1936
7. அப்பாஸ் ஹஸ்மி கதீவ். 1892--1914	முஹம்மத் அலி.	10. ஃபாருக் 1936—1954

முதலாம் ஸலீம் என்னும் துருக்கி ஸுல்தான் ஹி. 923 (கி. பி. 1517) இல் எகிப்து நாட்டைத் தமது சாம்ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார். மேலும், அங்கிருந்த அப்

பாஸி கலீபாவிடமிருந்து கிலாபத் பதவியையும் பெற்றுக் கொண்டார். அதுவரை குரைஷிகளிடமிருந்த கிலாபத் அதற்குப் பிறகு உதுமானியத் துருக்கி ஸுல்தான்களிடம் சென்றுவிட்டது. எகிப்து நாடும் துருக்கி சாம்ராஜ்யத்தின் ஒரு மாகாணமாகிவிட்டது. பிறகு, துருக்கி ஸுல்தானுல் நியமிக்கப்பட்டவரே எகிப்தின் கவர்னராக ஆட்சி செய்து வந்தார்.

கி பி. பதினூரும் நூற்ருண்டில் ஸுலேமான் அஃலம் என்னும் துருக்கி ஸுல்தான் வெற்றிக்கோலத்துடன் மத்திய ஐரோப்பாவில் ஆஸ்திரியா நாட்டில் வீயன்னு நகர்வரை சென்ருர். இதைக் கண்டு ஐரோப்பிய நாடுகள் திகிலடைந்து விட்டன. ஸ்பெயின் நாட்டிலே எட்டு நூற்ருண்டுகளாக நடந்த முஸ்லிம்களின் ஆட்சி முடிவடைந்து விட்டது. ஐரோப்பியர் கடல்மார்க்கமாக ஆப்பிரிக்கா கண்டத்தின் தெற்குக் கடற்கரையைச் சுற்றிக் கொண்டு ஆசியா கண்டத்தின் நாடுகளுக்கு வந்தார்கள். வியாபாரத் தொடர்பு கொண்டார்கள். காலனி ஆட்சியை ஆரம்பித்தார்கள். ஐரோப்பிய நாடுகள் துருக்கியுடன் பகைமைபூண்டு அந்த சாம்ராஜ்யத்தை பலவீனப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

கி. பி. 1798-ஆு ஜுலே மாதம் நெப்போலியன் என்னும் பிரெஞ்சுச் சக்ரவர்த்தி ஒரு பெருஞ்சேனேயுடன் மத்தியதரைக் கடலேக் கடந்து எகிப்துக்கு வந்து, அலெக்சாந்திரியா துறைமுகத்தில் இறங்கினுர். அவர் ஐரோப்பாவை வென்றபிறகு, கீழ் நாடுகளேயும் வெல்லத் திட்டமிட்டுப் புறப்பட்டார். இந்தியாவில் மைசூர் மன்னர் திப்புவுடன் தொடர்புகொண்டார். அவரது எகிப்தியப்படையெடுப்பானது மத்திய கிழக்கு நாடுகளின் வரலாற்றை இரண்டு நூற்ருண்டுகள் வரை மாற்றியமைத்து விட்டது. அரபிய உலகையும் பாதித்தது. இங்கிலாந்தும் பிரான்ஸும் மத்திய கிழக்கு நாடுகளில் தலேயிட ஆரம்பித்தன.

அதற்கு ஆறு நூற்றூண்டுகளுக்கு முன்னர் சிலுவை யுத்தங்கள் என்னும் பெயருடன் ஐரோப்பிய சேனு வெள்ளம் இந்தப்பகுதியில் படையெடுத்து வந்ததைப்போன்று, பத்தொன்பதாம் நூற்றூண்டில் ஐரோப்பிய வல்லரசுகள், இப்பகுதிகளைத் தாக்கவும், வெல்லவும் தொடங்கினூர்கள்.

"ஒவ்வொரு கர்பலாவுக்குப் பிறகும் இஸ்லாம் புத்துயிர் பெறுகின்றது" என்றூர் மௌலானு முஹம்மத் அலி ஜவ்ஹர். "ரப்பர் பந்தை பூமியில் அடித்தால் அது அடிபட்டு உயரத்தில் செல்லுகின்றது. எவ்வளவு ஓங்கி அடிக்கிறூமோ அவ்வளவு தூரம் அந்தப் பந்து உயர்ந்து செல்லும். அதைப்போன்று முஸ்லிம் சமுதாயம் தாக்குதலுக்கு ஆளானுல் அது மறுமலர்ச்சி பெறுகின்றது" என்கின்றூர் அல்லாமா முஹம்மத் இக்பால். அன்று சிலுவை யுத்தங்களில் ஒரு ஸுல்தான் ஸலாஹுத்தினும், ஒரு ஸுல்தான் பய்பர்ஸும் எகிப்தில் தோன்றி முஸ்லிம்களுக்குப் புத்துணர்ச்சி அளித்தார்கள். அதைப்போன்று பத்தொன்பதாம் நூற்றூண்டில் ஒரு முஹம்மத் அலி பாஷா எகிப்து மக்களுக்கு தேசீய உணர்ச்சியையும் இஸ்லாமியப் பற்றையும் உண்டாக்கினுர். அவர் தொடங்கிய சேவையானது எகிப்து நாட்டை சர்வதேச அரங்கிற்குக் கொண்டு வந்து, நூற்றைம்பது ஆண்டுகளுக்குப் பிறகு அதை ஒரு சுவாதீனக் குடியரசாக்கிவிட்டது.

நெப்போலியன் வந்தார். கோபுரப்போரில் எகிப்து சேனையைத் தோற்கடித்தது. அவருக்கு எப்பொழுதும் நிலப்போர்களில் வெற்றி கிடைத்துக்கொண்டே வந்தது. ஆனுல் அவருக்கு பகைமை நாடாக இருந்த இங்கிலாந்துக்கு அக்காலத்திலே கடல் ஆதிக்கம் இருந்தது. ஆங்கிலேய கடற்படைத் தளபதி நெல்ஸன் என்பவர் வெகு துணிவுடன் வந்து, அலெக்சாந்திரியா துறைமுகத்திலிருந்த பிரெஞ்சுக் கடற் படையை அழித்து விட்டார், எனவே, நெப்போலியன் எகிப்திலிருந்து இரகசியமாக

பிரான்ஸுக்கு தப்பியோடிவிட்டார். இந்தப் படையெடுப்பினல் ஐரோப்பாவுக்கு எகிப்து நாட்டின் முக்கியத்துவமும் அதன் கேந்திர நிலைமையும் தெளிவாகத் தெரிந்தது.

19-ம் நூற்ருண்டில்

இவ்வாறு துருக்கி சாம்ராஜ்யத்தின் பாகமாக எகிப்து இருக்கும்பொழுது, அந்த நாட்டில் துருக்கி ஸுல்தானுக்கு எதிராக ஒரு சக்தி தோன்றியது. கிரேக்க நாட்டில் 1769இல் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்து படிப்படியாக ராணுவத் தலைவராகி 1798இல் எகிப்துக்கு வந்த முஹம்மத் அலி என்பவரே அந்தச் சக்தி. அவர் பிரெஞ்சுப் படைகளை எதிர்த்து, எகிப்திலிருந்த அல்பேனியா சேனையின் உதவித் தளபதியாக உயர்ந்தார். 1805-ல் எகிப்தின் கவர்னராக நியமிக்கப்பட்டார். ஆனல், பிரெஞ்சுக்காரர் அங்கிருந்து சென்றபிறகு, முஹம்மத் அலீ சுவாதீனமாகிவிடக்கூடாதென்னும் நோக்கத்துடன் எகிப்து நாட்டு நிர்வாகத்தில் இங்கிலாந்து தலையிடத் தொடங்கியது. ஏனென்ருல், ஆசியாவிலிருந்த தனது சாம்ராஜ்யத்திற்கு செல்லும் வழியில் எகிப்து இருந்தது. அதனல், தனக்கு அபாயம் உண்டாகுமென்று அஞ்சியது. எனவே, 1807ல் ஓர் ஆங்கிலப் படை எகிப்தில் வந்திறங்கியது. ஆனல், முஹம்மத் அலீ அதைத் தோற்கடித்து விட்டார்.

வஹ்ஹாபிகள் :

பிறகு, முஹம்மத் அலீ, அரபுநாட்டில் நஜ்த் பிரதேசத்தில் போர்தொடுத்தார். அங்கு வஹ்ஹாபிகள் என்னும் சீர்திருத்தவாதிகள் தோன்றினர்கள்.

முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் என்பவர் அந்த இயக்கத்தின் தலைவர். நஜ்த் பிரதேசத்தின் தலைவர்களில் ஒருவரான முஹம்மத் இப்னு ஸஊத் என்பவர் அந்த இயக்கத்திற்குத் துணைபுரிந்தார். 1801 இல் வஹ்ஹாபிகள் இராக் நாட்டில் கர்பலாவை முற்றுகையிட்டார்கள். மக்காவையும் மதீனவையும் கைப்பற்ற முயன்ருர்கள். 1805 இல்

ஸிரியா, இராக் நாடுகள்மீது படையெடுத்தார்கள். இறுதியில், அரபு நாட்டின் ஒரு பகுதியில் ஆட்சியாளராகியும் விட்டார்கள்.

இந்தச் சூழ்நிலையில் அந்த வஹ்ஹாபிகளை அங்கிருந்து வெளியேற்றுமாறு முஹம்மத் அலீக்கு துருக்கி ஸுல்தானிடமிருந்து கட்டளை பிறந்தது. அப்பொழுது தமது அதிகாரத்தைப் பெருக்குவதற்கானதொரு நல்ல வாய்ப்பு முஹம்மத் அலீக்குக் கிடைத்தது. 1818இல் மக்கா, மதீனு நகரங்கள் கைப்பற்றப்பட்டன. முஹம்மத் அலீயின் புதல்வர் இப்ராஹீம் என்பவர் நஜ்த் பிரதேசத்தை வென்ருர். இதனுல் முஹம்மத் அலீயின் புகழ் பரவியது.

ஸூதான்.

பிறகு, 1819இல் அவர் எகிப்துக்குத் தெற்கிலுள்ள ஸூதான் நாட்டிலே நூபியா பிரதேசத்தை வெல்லப் புறப்பட்டார். அங்கு தங்கச் சுரங்கங்கள் இருப்பதாக அறிந்து அவற்றைக் கைப்பற்றவும் விரும்பினுர். இறுதியாக, ஸூதானின் வட பாகத்தை வென்ருர். எனவே அவரது புகழ் ஓங்கியது.

கிரீத் தீவு (Crete)

1822இல் மத்தியதரைக் கடலில் கிரீத் தீவிலுள்ள மக்கள் புரட்சி செய்தார்கள். ஸுல்தானிடமிருந்து கட்டளை வந்தவுடன் முஹம்மத் அலீ அங்கு சென்று புரட்சியை அடக்கினுர். ஆகையால், அந்தத் தீவு அவருக்குக் கொடுக்கப்பட்டது.

1824இல் கிரேக்க நாட்டின் தென் பகுதியில் மொரியாவில் நடந்த புரட்சியை அடக்கும்படி முஹம்மத் அலீ கட்டளையிடப்பட்டார். வெற்றி பெற்ருல் மொரியாவையும் ஸிரியாவையும் அவருக்குக் கொடுக்க ஸுல்தான் சம்மதித்

தார். எனவே, அவர் தமது புதல்வர் இப்ராஹீம் பாஷாவை ஒரு சேனையுடன் அனுப்பினர்.

ஆனல், அச்சமயம் இங்கிலாந்து, பிரான்ஸ், ருஷியா, இம்மூன்று நாடுகளும் தலையிட்டன. 1827இல் ஆங்கில பிரஞ்சுக்கடற்படைகள் நவரினே என்னும் துருக்கியத் துறைமுகத்தில் நுழைந்து அங்கிருந்த துருக்கிய எகிப்தியக் கடற்படையை அழித்துவிட்டன. துருக்கியின் 782 கப்பல்களில் 29 கப்பல்களே எஞ்சியிருந்தன. அன்றுமுதல் ஐரோப்பாவில் துருக்கியின் கடற்படையின் செல்வாக்கும் சிறப்பும் குன்றிவிட்டது.

1831இல் அவர் தமது புதல்வர் இப்ராஹீமை ஸிரியாவுக்கு அனுப்பி அதை வெல்லுமாறு கட்டளையிட்டார். இப்ராஹீமுக்கு லப்னன் (Lebanon) தலைவர் உதவி செய்தார். எருஸலம், யாப்பா, அக்கா, டமஸ்கஸ் ஆகிய நகரங்களை இப்ராஹீம் வென்றூர். இதைக்கண்டு திகிலடைந்த ஸுல்தான் அங்கு ஒரு சேனையை அனுப்பினர். ஆனல், அதையும் இப்ராஹீம் தோற்கடித்துவிட்டார். பிறகு, ஸிரியா, லப்னன், பாலஸ்தீன் முதலிய பிரதேசங்களை இப்ராஹீம் வென்று சின்னசியாவில் (Asia Minor) பிரவேசித்தார். அதாவது, துருக்கி ஸுல்தானுடைய தலைநகரான இஸ்தம்பூலை நோக்கி நின்றூர். அவர் அப்பொழுதே முன்னேறியிருந்தால் வரலாறு வேறு விதமாக மாறி இருக்கும். மேலும், முஹம்மத் அலீ, ருஷ்யாவின் உதவி பெற்றுத் துருக்கி சாம்ராஜ்யத்தின் ஸுல்தாஞகியும் இருக்கலாம். ஆனல், அச்சமயம் ருஷ்யாவின் ஆதிக்கம் மத்தியதரைக் கடலில் வந்துவிடுமென்று அஞ்சிய இங்கிலாந்தும் பிரான்ஸும் முஹம்மத் அலீக்கு எச்சரிக்கை செய்து, எகிப்திய சேனையைத் திரும்பிவரும்படி செய்துவிட்டன. முஹம்மத் அலீயை எகிப்தின் அதிபதியாக துருக்கி ஸுல்தான் அங்கீகரித்ததோடு அவர் வென்று விட்ட ஸிரியாவும் அவருக்கே எனப் பிரகடனஞ் செய்தார்.

ஸிரியாவில் இப்ராஹீம் ஏழாண்டுகள் ராஜப்பிரதிநிதி யாக ஆட்சி செய்தார். அவரது ஆட்சியில் மக்களுக்கு நலம் உண்டாயிற்று. ஆனல், முஹம்மத் அலீக்கு ஸிரியா கொடுக்கப்பட்டதை இங்கிலாந்து எதிர்த்தது. செங்கடலின் தென் பாகத்தில் அதன் (Aden) துறைமுகத்தைக் கைப் பற்றியது. 1838இல் தாம் துருக்கி சாம்ராஜ்யத்திலிருந்து சுவாதீனமாகி விட்டதாக முஹம்மத் அலீ பிரகடனம் செய் தார். ஆனல், இதை ஐரோப்பிய நாடுகள் எதிர்த்தன. 1839இல் ஸிரியாவிலே துருக்கிய சேனையை இப்ராஹீம் தோற்கடித்தார். 1844இல் ஐரோப்பிய நாடுகள்-குறிப்பாக இங்கிலாந்து-முஹம்மத் அலீயுடன் போர் தொடுப்பதாக அச்சமூட்டி, அவர் ஸிரியாவைக் காலிசெய்து வெளியேற வேண்டுமென்று எச்சரித்தன. அவருக்குக் கொடுக்கப்பட்ட இருபது நாட்களும் கழிந்தன. ஆங்கில-துருக்கிக் கடற் படையும் தரைப்படையும் சேர்ந்து ஸிரியாவுக்கு வந்தன. இறுதியில், இப்ராஹீம் ஸிரியாவைக் காலிசெய்து திரும் பினர். அதற்குள், ஆங்கிலேயக் கடற்படை எகிப்து நாட்டை முற்றுகையிட்டது.

1840இல் முஹம்மத் அலீ தம்மிடமிருந்த துருக்கிக் கடற் படையை ஆங்கிலேயரின் விருப்பத்திற்கிணங்கி துருக்கிக்கு அனுப்பிவிட்டார். பிறகு, அவர் எகிப்தின் கவர்னர்-பாஷா — (Pasha) — என்று துருக்கி ஸுல்தான் மறுபடியும் அங்கீ கரித்தார். மேலும், அவருடைய வாரிசுகள் எகிப்தில் ஆட்சி யாளராக இருக்கும் உரிமையையும் அவர் பெற்றுக்கொண் டார். வெகு காலமாகத் தூங்கிக் கொண்டிருந்த எகிப்தியர் களைத் தட்டியெழுப்பி, அரபு உலக அரங்கிலே அந்த நாட்டிற்குத் தலைசிறந்த இடமளித்த பெருமை அவருக்கே உரியது.

1849இல் தமது எண்பதாம் வயதில் முஹம்மத் அலீ காலஞ்சென்ருர். அவர் காலத்திலிருந்து அரபிய உலகில் எகிப்து நாடே மத்தியஸ்தானம் வகித்து வருகின்றது. ஒரு காலத்தில் ஸுல்தான் ஸலாஹுத்தீனும் இப்னு தூலூனும்

எகிப்தின் உயர்விற்காகப் பாடுபட்டதைப் போன்று இவரும் அரும்பாடுபட்டு இறந்தார்.

முஹம்மத் அலீ சிறந்த அறிவாளி. தொலைநோக்குள்ளவர். மக்கள் பணியில் ஆர்வமுள்ளவர். தலைசிறந்த ஆட்சியாளர். அவரே தற்கால எகிப்து நாட்டின் ஸ்தாபகர் எனக் கூறலாம். உள்நாட்டில் தம்மை எதிர்த்தோரைத் தோற்கடித்தார். ஓர் ஆங்கிலேய சேனையையும் தோற்கடித்தார், பெயரளவில் அவர் துருக்கியின் கவர்னராக இருந்தார். அதிகாரங்கள் அத்தனையும் அவர் கையிலேயே இருந்தன. எகிப்திலிருந்த விவசாயிகள் (ஃபல்லாஹீன் — Fallaheen) கொண்ட ஒரு சேனையைத் தயாரித்தார். பல கால்வாய்கள் தோண்டினார். ஸூதான் நாட்டிலிருந்து பருத்தி விதைகளைக் கொண்டுவந்து பருத்தி விளைச்சலை விருத்திசெய்தார். அதன் விளைவாக அந்த நாடு பருத்திக் கைதொழிலில் முன்னேற்றம் கண்டது. கல்வித் துறையில் புதிய பாடத் திட்டங்கள் தீட்டினார். புதிய அச்சகங்கள் நிறுவினார். பாடசாலைகளையும் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளையும் மருத்துவக் கல்லூரிகளையும் திறந்தார்.

ஐரோப்பாவிலிருந்து விஞ்ஞானிகளையும் தொழில் நுட்ப வல்லுநர்களையும் அழைத்தார். நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்தினார். விவசாயத்தில் முன்னேற்றம் கண்டார். விவசாயிகளை விஞ்ஞான முறையில் வேளாண்மை செய்யும்படி தூண்டினார். 1820இல் ஸூதானை வென்று கர்தூம் நகரை நிர்மாணித்தார். அலக்ஸாந்திரியா துறைமுகத்தைப் புதிதாகத் தயாரித்து, அதை ஒரு கால்வாய் மூலமாக நீலநதியுடன் இணைத்தார்.

அவர் சிறந்த நீதிமான். எகிப்திலும் ஸிரியாவிலும் சீரிய முறையில் நீதி வழங்கினார். கிறிஸ்தவர்களுடனும் யூதர்களுடனும் வெகு தாராள மனப்பான்மையுடன் நடந்துகொண்டார். நாட்டிற்கு ஏராளமான வருமானம் கிடைத்தது. பொருளாதாரக் கஷ்டங்கள் நீங்கிவிட்டன.

ஸிரியாவில் இப்ராஹீம் பாஷாவின் ஆட்சியில் பொருளியல், மருத்துவம், வேளாண்மை, இசைக்கலை முதலான துறைகளில் கல்லூரிகள் உருவாயின. முஸ்லிம், கிறிஸ்தவர், யூதர் அனைவரும் அரசாங்க அலுவல்கள் பெற்றார்கள். அமெரிக்கரும், ஐரோப்பியரும் அவர்களுடைய சொந்தக் கல்லூரிகளை அமைக்கும்படி ஊக்குவித்தார். அதனால், பய்ருத் நகரில் அமெரிக்கப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது.

ஒரு சமயம், அவர் ஸிரியாவில் போரிடும்பொழுது ஒரு நகரத்தைக் கைப்பற்றினார். அப்பொழுது அங்கிருந்த பள்ளிவாசலைத் தமது ராணுவத் தளவாடச் சாமான்கள் வைப்பதற்கு உபயோகித்தார். அருகிலிருந்த கிறிஸ்தவக் கோவிலை அப்படியே விட்டுவிட்டார். "என்னுடைய முஸ்லிம்கள் வெளியே தொழுது கொள்வார்கள். ஆனால், கிறிஸ்தவக் கோவிலில் நான் என் சாமான்களை வைக்க மாட்டேன்" எனக்கூறிப் பிற மதத்தாரின் வணக்க ஸ்தலங்களுக்கு மரியாதை செய்தார்.

ஆனால், இப்ராஹீம் அகால மரணமடைந்தார். அவருக்குப் பிறகு ஆட்சிபீடத்திற்கு வந்த கவர்னர்கள் பலவீனராக இருந்தார்கள். பொதுவாக ஐரோப்பிய லேவாதேவிக்காரர்கள்—குறிப்பாக ஆங்கிலேய, பிரெஞ்சு மூலதனக்காரர்கள் – எகிப்து கவர்னர்களுக்கு ஏராளமாக -- இந்தியாவில் கிழக்கிந்திய கம்பெனியார் சுதேச மன்னர்களுக்குக் கடன் கொடுத்ததைப் போன்று — கடன் கொடுப்பார்கள். வட்டி வசூலிப்பார்கள். ஐரோப்பிய அரசாங்கங்கள் தங்கள் போர்க் கப்பல்களைக் கொண்டுவந்து நிறுத்திப் பயமுறுத்திப் பணம் வசூலிப்பார்கள். ஒரு நாட்டைக் கைப்பற்ற வேண்டுமானால், ஐரோப்பிய அரசுகள் இத்தகைய முறைகளையே கையாண்டன. சில சமயம் மதப் பிரச்சாரத்தின் பெயரால் பாதிரிகளை அனுப்பி, ஏதாயினும் கலகங்கள் விளையும்படி செய்து, அந்த நாட்டின் நிர்வாகத்தில் தலையிடுவார்கள். அந்நாடுகளில் வசிக்கும் ஐரோப்பியருக்குத் தனியான சலுகைகள் கொடுக்கும்படி வற்புறுத்தி வாங்கிக் கொள்வார்கள்.

இங்கிலாந்தும் பிரான்ஸும் மத்திய கிழக்கு நாடுகளின் ஆதிக்கத்திற்காக பத்தொன்பதாம் நூற்றுண்டில் போட்டியிட்டுக் கொண்டிருந்தன. எகிப்து நாட்டைக் கைப்பற்றவும் திட்டமிட்டன. பத்தொன்பதாம் நூற்றுண்டில் எகிப்து முன்னேற்றமடைந்துகொண்டே வந்தது. எனினும், அதன பொருளாதார நிலைமை கெட்டுவிட்டதென்று இங்கிலாந்தும் பிரான்ஸும் குற்றம் சாட்டி, நாட்டு நிர்வாகத்தில் தலையிட முயற்சி செய்தன.

கதீவ் இஸ்மாயீல் 1863—1879.

ஆசியா, ஆப்பிரிகா, ஐரோப்பா இம்மூன்று கண்டங்களையும் இணைக்கும் நாடாகவும், சூயஸ் கால்வாய் தோண்டப் பட்ட பிறகு மேல்நாடுகளையும் கீழ்நாடுகளையும் சேர்க்கும் கடல் மார்க்கமாகவும், சர்வதேச அரங்கில் முக்கியத்துவம் பெறும் வாய்ப்புள்ளதாகவும், அரபு நாடுகளுக்குத் தலைமை வகிக்கும் பொறுப்புள்ளதாகவும் எகிப்து நாடே அமைந்து விட்டது. மக்கள் தேசீய உணர்ச்சி பெற ஆரம்பித்தார்கள்.

இரயில்வே, சூயஸ் கால்வாய், நீர்ப்பாசனக் கால்வாய்கள், தந்தி, துறைமுகங்கள், பாலங்கள், பள்ளிக்கூடங்கள் ஆகிய நாட்டு முன்னேற்றச் செயல்களில் நிர்மாண வேலை செய்வதற்காக ஐரோப்பிய நாடுகளிலிருந்து கதீவ் இஸ்மாயில் கடன் வாங்கினுர். மேலும், 1869இல் கதீவ் இஸ்மாயீல் (1863—1879) காலத்தில் சூயஸ்கால்வாய் திறக்கப்பட்டது. இந்தக் கடனைத் தீர்ப்பதற்காக கி. பி. 1875இல் ஆங்கில முதல் மந்திரி டிஸ்ரலி என்பவர் எகிப்து (கதீவ்) கவர்னரிடமிருந்த சூயஸ்கால்வாய் பங்குகள் அனைத்தையும் இங்கிலாந்துக்காக வாங்கிக்கொண்டார். பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அதன் பங்குகளின் மூலதனத்தைப் பார்க்கிலும் அதிக தொகை ஒவ்வோர் ஆண்டிலும் வருமானமாகக் கிடைத்துக் கொண்டிருந்தது. மேலும், கீழ்நாடுகளிலிருந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குச் செல்லும் இலகுவான கடல்

மார்க்கமும் கிடைத்தது. இதையன்றி, எகிப்தைத் தங்கள் ஆதிக்கத்தில் வைத்துக்கொள்ளும் வாய்ப்பும் கிடைத்தது.

கி. பி. 1879இல் ஆங்கிலேயத் தலையீடு தொடங்கியது. அந்த நாட்டின் பொருளாதார நிலை சீர்கேடுற்று இருந்த தெனக் கூறி, அதன் உள்நாட்டு நிர்வாகத்தில் தங்கள் பொருளாதார நிபுணர்களையே எகிப்து அரசாங்கம் ஆலோசகர்களாக நியமிக்க வேண்டுமென்று ஆங்கிலேயர் வற்புறுத்தினர்கள். இதில் பிரான்ஸும் சேர்ந்து கொண்டது.

எகிப்து நாட்டில் கதீவ் இஸ்மாயீல் முன்னேற்றத் திற்காக முயன்றார். ஆனால், ஐரோப்பாவில் அவர் கடன் வாங்கியதால் அதன் விளைவாக இங்கிலாந்தும் பிரான்ஸும் எகிப்தின் அரசியல் வருமானப் பொருளாதார நிலையைக் கவனிப்பதற்காகத் தங்கள் சார்பாக இரண்டு கண்காணிப் பாளர்களை நியமித்து, அந்தக் கண்காணிப்பாளர்கள் நிரந்தரமாகத் தங்கிவிட்டார்கள். நாடு அன்னியர்களின் கண்காணிப்பில் செல்வதைக் கண்டு எகிப்திய சேனையில் பரபரப்பு ஏற்பட்டது.

அக்காலத்தில் ஸையித் ஜமாலுத்தீன் அப்கானீ என்பவர் முஸ்லிம் நாடுகளுக்குச் சென்று, உலக முஸ்லிம்களின் ஒற்றுமைக்காகப் பாடுபட்டார். முஸ்லிம் நாடுகளில் மேல் நாட்டார் தலையிடுவதைத் தடுக்க முயன்றார். அவர் எகிப் துக்கு வந்து அங்கு மேல்நாட்டாரைத் தடுக்க மேல்நாட்டு அரசியல் முறைகளையே முஸ்லிம்களும் கையாள வேண்டு மென்று உபதேசித்தார். ராணுவப் பயிற்சிக் கல்லூரிகளில் தற்கால முறையில் ராணுவப் பயிற்சி அளிக்கவேண்டும் என்றார். மக்கள் அனைவருக்கும் கல்வி கற்பிக்கவேண்டும் எனவும், மக்கள் விருப்பப்படியே அரசியல் நடக்க வேண்டும் எனவும் போதித்தார். இதன் விளைவாக எகிப்தில் உருவான தேசியக் கட்சியும், அதன் தலைவர் அஹமத் அஃராபீயும், ஜனநாயக முறையிலே எகிப்து நாட்டின் அரசியல் நடத்தப் படவேண்டுமென்று கூறினர்கள். இறுதியாக முஹம்மத்

ஸமீ என்பவரின் தலைமையில் தேசீய மந்திரி சபை ஒன்று அமைந்தது. ஆனால், இங்கிலாந்தும், பிரான்ஸும் இதை விரும்பாமல் தங்கள் கடற்படைகளை அலக்ஸாந்திரியாவுக்கு அனுப்பி, அதைக் குண்டுகளால் தகர்த்து, உல்ஸ்லி என்னும் ஆங்கிலேயத் தளபதியின் தலைமையில் சேனைகளை இறக்கி தல் அல்கபீர் என்னுமிடத்தில் எகிப்திய சேனையைத் தோற்கடித்தார்கள். 1882 செப்டம்பர் 15ஆம் நாள் ஆங்கில சேனை கெய்ரோவைக் கைப்பற்றி எகிப்தின் சுதந்திரத்தை அழித்துவிட்டது.

எகிப்து தேசியக் கட்சி: அஃராபி பாஷா

வெளிநாட்டார் இவ்வாறு தங்கள் நாட்டு நிர்வாகத்தில் தலையிடுவதை எகிப்தியர் விரும்பவில்லை. தேசியக்கட்சி ஒன்று உதயமாயிற்று. அதன் தலைவர் அஃராபி பாஷா அவர் எகிப்திய சேனையில் ஒரு சிப்பாயாக இருந்தார். ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்த அவர் தமது அறிவாலும், திறமையாலும், செல்வாக்காலும் எகிப்து அரசாங்கத்தின் ராணுவ அமைச்சராகி விட்டார். ஆங்கிலேய, பிரெஞ்சுக் கட்டுப்பாட்டுக் கட்டளைகளை நிராகரித்து, 1882இல் அவர் புரட்சி செய்தார். அதன் விளைவாக நடந்த தேசியப் புரட்சியின் விளைவாகவே ஆங்கிலேயர் எகிப்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள்.

இந்தியாவிலே இங்கிலாந்து தனது ராஜப்பிரதிநிதியை நியமித்ததைப் போன்று கிலாட் ஸ்டன் என்னும் ஆங்கில முதலமைச்சர் காலத்தில் எகிப்திலும் ராஜப்பிரதிநிதி நியமிக்கப்பட்டார். அவ்வாறு நியமிக்கப்பட்ட குரோமர் பிரபு என்பவர் 1883 முதல் 1907 வரை எகிப்தில் ஆங்கிலேய சேனையின் உதவியால் சர்வாதிகார நிர்வாகம் நடத்தினர். எகிப்திலிருந்த இரண்டாம் அப்பாஸ் ஹில்மீ (1892 — 1914) என்னும் கதீவுக்கும் அவருடைய மந்திரிகளுக்கும்

அதிகாரமேயில்லாமல் அவர் செய்து விட்டார். பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதியில் இவ்வாறு எகிப்து அடிமை நாடாகத் தோற்றமளித்தது.

இருபதாம் நூற்ருண்டு

1904இல் இங்கிலாந்தும், பிரான்ஸும் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டன. எகிப்தைக் காலிசெய்து விடுவதாக இங்கிலாந்து பன்முறை விளம்பரஞ்செய்து உலகை ஏமாற்றிக்கொண்டு வந்தது. பிரெஞ்சு அரசாங்கம் இங்கிலாந்து எகிப்தைக் கைப்பற்றுவதை விரும்பவில்லை. இறுதியாக மொரோக்கோ நாட்டை பிரான்ஸ் கைப்பற்றலாமெனவும், எகிப்தை இங்கிலாந்து வைத்துக்கொள்ளலாம் எனவும் இருநாடுகளும் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டன. இதில் எகிப்திய மக்களோ, துருக்கி அரசாங்கமோ கலந்து கொள்ளப்படவில்லை.

அக்காலத்தில் ஐரோப்பியர்கள் ஆப்பிரிக்காக் கண்டத்தின் கடற்கரை நாடுகளில் பலவந்தமாக நுழைந்து, நீக்ரோ ஜாதியாரைப் பிடித்து அமெரிக்காவிற்குக் கொண்டு போய் அங்கு அடிமைகளாக அவர்களை விற்று விடுவார்கள். பத்தொன்பதாம் நூற்ருண்டில் ஐரோப்பிய நாடுகள் ஆப்பிரிக்காவில் தங்கள் காலனி ஆட்சியைப் பல நாடுகளில் அமைத்துக் கொண்டன. அதில் அவர்களுக்குள் சச்சரவுகளும் மனக்கசப்பும் உண்டாயிற்று. ஸூடான் நாட்டில் இங்கிலாந்து, பிரான்ஸ் இவ்விரு நாடுகளும் ஆதிக்கம் செய்யப் போட்டியிட்டன. இறுதியில் பிரான்ஸ் ஒதுங்கி விட்டது.

மஹ்தி புரட்சி

ஸூடான் நாடு எகிப்துக்குத் தெற்கில் இருக்கின்றது. அந்த நாட்டை 1870—74இல் வெல்வதற்கு ஆங்கிலேயர் எகிப்துக்கு உதவி செய்தார்கள். ஆகையால், ஜெனரல்

கார்டன் (Gordon) என்னும் ஆங்கிலேயர் ஸூடானில் ராஜப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். ஸூடான் நாட்டை கார்டன் வெகு திறமையுடன் ஆட்சிசெய்தார். தமக்கு உதவிசெய்ய ஆங்கிலேயரையே மாகாண கவர்னர்களாக நியமித்தார். ஆனால், ஆங்கிலேய அரசாங்கம் எகிப்து நிர்வாகத்தில் தலையிட்டு துருக்கி ஸுல்தான் மூலமாக கதீவ் இஸ்மாயீலை நீக்கிவிட்டு, அவரது புத்திரர் தவ்ஃபீக் (Tawfeek) என்பவரை நியமித்து எகிப்தின் நிர்வாகத்தை க்ரோமர் ஏற்றுக்கொண்டு சர்வாதிகாரம் செய்ய ஆரம்பித்தபொழுது கார்டன் வருத்தமடைந்துத் தமது பதவியிலிருந்து விலகி விட்டார்.

பிறகு ரவூஃப் பாஷா (Rauf Pasha) என்பவர் ஸூடானில் ஆட்சிசெய்தார். ஆனால், அந்த நாட்டில் மறுபடியும் மக்களுக்குத் துன்பங்கள் ஏற்பட்டன. எங்கும் லஞ்ச ஊழல்கள். தீர்வைகள் கடுமையாக வசூலிக்கப்பட்டன. எனவே. அந்த ஆட்சிக்கு விரோதமாக மக்கள் கொதித்தெழுந்தார்கள்.

அச்சமயம் முஹம்மத் அஹ்மத் இப்னு ஸையித் அப்துல்லாஹ் என்பவர் அந்தப் புரட்சிக்குத் தலைவரானார். நீல நதியோரத்தில் எகிப்திய எல்லைக்கும் கர்தூம் நகருக்கும் இடையிலிருந்த கிறிஸ்தவ நூபியாவின் தலை நகர் டங்கோலாவில் 1848ல் ஒரு ஏழைக் குடும்பத்தில் அவர் பிறந்தவர். சிறு வயதிலிருந்தே இஸ்லாமியக் கலைகளைக் கற்றார். மன வலிமையும், உடல் வலிமையும் கொண்டவர். புன்முறுவலுள்ள தோற்றமுள்ளவராகவும் விளங்கினார். இருபத்து மூன்றும் வயதில் அவர் ஒரு சிறந்த மதக்கலை நிபுணர் (ஆலிம்) ஆகிவிட்டார். ஒரு குகையில் தங்கி, இறையச்ச வாழ்க்கை நடத்தி மக்களுக்கு உபதேசம்செய்து வந்தார். இறுதியாக, அவரது சொற்படி நடக்க ஸூடான் மக்கள் தயாராக இருந்தார்கள். வெளிநாட்டார் ஸூடானில் ஆட்சிசெய்வதையும், திருக் குர்ஆனின் கட்டளைகளுக்கு அவர்கள் கீழ்ப்படியாததையும் அவர் எதிர்த்தார். நாட்டின் பல பாகங்களில் சுற்றுப்பிரயாணம் செய்தார்.

உலகில் அநியாயம் பெருகிவிட்டால் மஹ்தீ அலைஹிஸ் ஸலாம் வருவார் என்று முஸ்லிம்கள் நம்புகிறார்கள். 1880இல் ஒரு நாள் முஹம்மத் அஹ்மத் சொற்பொழிவாற் றும்பொழுது, "நானே அந்த மஹ்தீ" என்று விளம்பரப் படுத்தினார். மக்கள் சமுதாயம் சீர்திருத்தமடையவேண்டு மெனவும், வாழ்க்கையில் ஆத்மீக மறுமலர்ச்சி உண்டாக வேண்டுமெனவும் உபதேசித்தார். ரவூஃப் பாஷா முதலில் இந்த இயக்கத்தைக் கவனிக்க வில்லை. பிறகு, அதை அடக்க முயன்றார். அந்த முயற்சியில் அவர் தோல்வியடைந் தார். அதனால், மஹ்தீயின் செல்வாக்கு அதிகரித்தது. புகழ் ஓங்கியது. எகிப்திய சேனை அவரைத் தேடியலைந்தது. ஆனால், அவர் மறைவாக வாழ்ந்தார்.

1861இல் அங்குள்ள அந்நிய நாட்டார்மீது மஹ்தி ஜிஹாத் (புனிதப்) போர்ப் பிரகடனம் செய்தார். பல இடங் களில் அவருக்கு வெற்றி கிடைத்தது. 1882இல் ஃபஷோதா (Fashoda) என்னுமிடத்தில் அரசாங்க சேனையைத் தோற் கடித்தார்.

கர்னல் ஹிக்ஸ் என்னும் இந்தியச் சேனைத் தளபதியின் தலைமையில் கெய்ரோவிலிருந்து பத்தாயிரம் சிப்பாய்களைக் கொண்ட ஒரு சேனை அவரைத் தோற்கடிப்பதற்காக அனுப் பப்பட்டது. ஆனால், வனாந்தரப் போரில் அது வெற்றிகாண முடியவில்லை. பிறகு, போரில் கர்னல் ஹிக்ஸ் கொல்லப் பட்டார். ஸூதானின் மத்திய பாகத்தில் ஐம்பதாயிரம் சதுர மைல் பிரதேசத்திற்கு மஹ்தி அதிபதியாகி விட்டார்.

உடனே, ஆங்கிலேய அரசாங்கம் தனக்கு எகிப்தில் பேராபத்து விளைந்துவிடுமென்று அஞ்சி, 1883இல் முன்னர் ஸூதானில் இராஜப் பிரதிநிதியாக இருந்த ஜெனரல் கார்டன் என்பவரை அனுப்பியது. அச்சமயம் கர்தூம் நகரை மஹ்தீ முற்றுகையிட்டுக் கொண்டிருந்தார். எங்கும் மஹ்திக்கு வெற்றியே கிடைத்தது. எகிப்திய சேனையுடன் கார்டனும் சேர்ந்துகொண்டார். ஆனால், அதைத் திரும்பக் கொண்டுபோகவும் அவரால் முடியவில்லை.

மஹ்தி தமது சேனையுடன் வந்தார். கர்தூம், உம்தர்மான் என்னும் இரண்டு நகரங்கள் நீலநதியின் இரு கரைகளிலும் எதிராக இருந்தன. 1885இல் இரண்டையும் மஹ்தி முற்றுகையிட்டு வென்றூர். ஜெனரல் கார்டன் கொல்லப் பட்டார்.

இரண்டு நாட்கள் சென்ற பிறகு ஜெனரல் உல்ஸ்லி தமது ஆங்கிலச் சேனையுடன் கர்தூமுக்கு வந்தார். ஆனால், கர்தூம் தோல்வியடைந்ததை யறிந்து உடனே திரும்பி விட்டார். ஆகவே, மஹ்தீயின் செல்வாக்கு இன்னும் அதிகரித்து விட்டது. ஆனால், 1885 ஜூன் மாதம் அவர் உம்தர்மான் நகரில் இறந்துவிட்டார்.

அவரது கலீபா — பிரதிநிதியாக அப்துல்லாஹ் என்பவர் பதின்முன்று ஆண்டுகள்வரை எகிப்தையும் இங்கிலாந்தை யும் தடுத்துக்கொண்டு ஸூதானில் நல்லாட்சி செய்தார்.

1898இல் ஆங்கிலத் தளபதி கிச்சனர் என்பவர் தகுந்த ராணுவத் தயாரிப்புகளுடன் வடக்கிலிருந்து ஒரு ரயில்வே பாதையை நிர்மானித்துக்கொண்டே ஸூதான் வந்தார். பன்னிரண்டாயிரம் ஆங்கிலேய தரைப்படை, குதிரைப் படை, பீரங்கிப் படையுடன் வெகு கவனமாக வந்து இறுதியில் உம்தர்மானில் மஹ்தீயின் படைகளைத் தோற் கடித்தார். 1889இல் கலீபா அப்துல்லாஹ் கொல்லப் பட்டார். இந்தப்படையில் சர்ச்சில் போன்ற ஆங்கில ராணுவ அரசியல் மேதைகளும் இருந்தார்கள்.

பிறகு, ஸூதான் நாட்டில் இங்கிலாந்தும், எகிப்தும் சேர்ந்து கூட்டாட்சி நடத்தின. ஆங்கிலேய கவர்னர் ஜெனரல் ஸூதானில் ஆட்சிசெய்ய நியமிக்கப்பட்டார். பத்தொன்பது ஆண்டுகளாக நடந்த மஹ்தி இயக்கம் இவ்வாறு முடிவடைந்தது. "முஹம்மத் அஹ்மத்" என்னும் மஹ்தீயின் பெயர் ஸூதான் மக்களின் கல்விக்காகவும், நலத்திற்காகவும் முயற்சி செய்த வீரர்களின் பெயர்களின்

பட்டியலிலே முதலிடம் பெறும்" என்று மஹ்தீ கட்சியாரை இறுதியாகத் தோற்கடித்த கிச்சனரின் சேனையிலிருந்த வின்ஸ்டன் சர்ச்சில் கூறுகிறார்.

1898இல் உம்தர்மானில் நடந்த போரில், ராணுவத் தளவாடங்களே இல்லாத வனாந்தர முஸ்லிம்கள் அனைவரும் பிரிட்டிஷ் சேனையால், கசாப்புக்கடையில் இறைச்சி, கண்டம் துண்டமாக வெட்டப்படுவதைப் போன்று இரக்கமின்றிக் கொல்லப்பட்டார்கள். அதனால், கிச்சனருக்கு "எகிப்தியரை வெட்டிய கசாப்புக் கடைக்காரன்" என்னும் ஒரு பெயரும் உண்டாயிற்று.

அதற்குப் பிறகு, ஸூதானில் இங்கிலாந்து — எகிப்து அரசாங்கங்களின் கூட்டாட்சி நடந்தது.

ஸஅத் ஜக்லூல் பாஷா (Zaghlul Pasha)

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எகிப்தில் இங்கிலாந்தே சர்வாதிகாரம் செய்துகொண்டிருந்தது. அந்தச் சர்வாதிகார ஆட்சியில் எகிப்து நாட்டு மக்களுக்கு ஜனநாயக ஆட்சியும், கல்விச் செல்வமும் நிம்மதியான வாழ்க்கையும் கிடைக்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் தேசியக் கட்சித் தலைவராக ஸஅத் ஜக்லூல் பாஷா (Saad Zaghlul Pasha) என்பவர் தோன்றினார். அவரே எகிப்தின் தலைவர்களில் மிகச் சிறந்தவர். நல்லவர். நாட்டுப் பற்றுள்ளவர். பெரும் பேச்சாளர். நல்ல நிர்வாகி. இவர் அக்காலத்தில் ஐரோப்பிய நாடுகளிலும் முஸ்லிம் நாடுகளிலும் பிரயாணம் செய்து இஸ்லாமிய மறுமலர்ச்சிக்காகச் சலியாமல் பாடுபட்ட ஸையித் ஜமாலுத்தீன் அஃப்கானீ என்னும் மாமேதையின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடந்தார். எகிப்தில் இன்னொரு பெரியார் முஹம்மத் அப்துஹூ என்பவரும் அவ்வாறே செய்தார். அவர் கெய்ரோ நகரில் அஸ்ஹர் (Azhar) பல்கலைக்கழகத்தின் தலைவர்.

1894இல் பிரான்ஸில் உயர்தரக் கல்விகற்றுத் திரும்பிய முஸ்தபா காமில்பாஷா என்பவர் ஹிஸ்புல் வதன் (Hisbul Watan) என்னும் முன்னேற்ற இயக்கத்தைத் தொடங்கி, 1900இல் அல் லிவா என்னும் ஓர் பத்திரிகை நடத்த ஆரம்பித்தார். அவர் செய்த கிளர்ச்சியின் விளைவாக குரோமர் பிரபு இங்கிலாந்துக்குத்திரும்ப அழைக்கப்பட்டு கோர்ஸ் என்பவர் எகிப்துக்கு வந்தார். அவருடைய நிர்வாகச் செயல்களையும் முஸ்தபா காமில் விரும்பவில்லை. எனவே, 1907 ல் தேசிய காங்கிரஸைக் கூட்டுவித்தார். அதிலே "எகிப்து எகிப்திய ருக்கே" என்று அவர் முழக்கம் செய்தார். அவரே அந்தக் காங்கிரஸின் தலைவருமானார். ஆனால், அவர் அகால மரண மடைந்துவிட்டார். எகிப்து நாட்டில் காப்த் (கிப்தீ) இனத் தைச்சேர்ந்த கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். அந்த கிறிஸ் தவர்களைப் பிரித்துஆள ஆங்கிலேயர் முயன்றார்கள். ஆனால், ஜக்லூல் பாஷா அந்தக் கிறிஸ்தவர்களுடன் அன்பாக நடந்தார். எனவே, அவர்கள் ஆங்கிலேயரின் வலையில் சிக்கிக்கொள்ளவில்லை.

1906இல் ஜக்லூல் பாஷாவை குரோமர் பிரபு கல்வி அமைச்சராகவும், பிறகு நிதி அமைச்சராகவும், பிறகு நீதி அமைச்சராகவும் நியமித்தார். முதலாம் உலக யுத்தத்திற்கு முன்னர், கிச்சனர் பிரபு மறுபடியும் இங்கிலாந்திலிருந்து எகிப்துக்கு அனுப்பப்பட்டார். ஆனால், அவருடைய நிர்வா கத்தால் எகிப்து மக்கள் திருப்தியுறவில்லை. ஜக்லூல் பாஷா கிச்சனரை எதிர்த்துத் தமது பதவியை ராஜினமா செய்துவிட்டுத் தாய்நாட்டின் ஜனநாயக ஆட்சிக்கான இயக்கத்தில் ஈடுபட்டார். ஆங்கிலேயர்கள் அங்கிருந்து வெளியேறிவிடவேண்டுமெனவும் கூறினர். ஆனால், கிச்சனர் வெகு கொடுமையுடன் தேசீய இயக்கத்தை அடக்கினர். கிச்சனரையும் கதீவையும் எதிர்த்து மக்கள் கிளர்ச்சி செய்துகொண்டேயிருந்தார்கள். 1911 இல் வட ஆப்பிரிக்காவிலுள்ள திரிபோலிமீது இத்தாலி திடீரென்று படையெடுத்து அதை வென்றது. சர்வதேச சட்டப்படி

அந்த நாடு துருக்கியைச் சேர்ந்தது. ஆனால், துருக்கிப் படைகள் எகிப்து வழியாக திரிபோலிக்குச் செல்லக்கூடாதென்று இங்கிலாந்து தடுத்துவிட்டது.

முதலாம் உலக மகாயுத்தம்

இந்தச் சூழ்நிலையில் 1914 ஆகஸ்டு மாதம் முதலாம் உலக மகாயுத்தம் ஆரம்பமாயிற்று. இங்கிலாந்தும், பிரான்ஸும் நேசநாடுகள் கட்சியில் இருந்தன. எதிர்க்கட்சியில் ஜெர்மனி, ஹங்கேரி ஆகியவை இருந்தன. ஜெர்மனியுடன் துருக்கி சேர்ந்துகொண்டது. உடனே, இங்கிலாந்து எகிப்து நாட்டைத் தனது பாதுகாவலில் (Protectorate) சேர்த்துக்கொண்டு யுத்தக் காலத்திலே ராணுவ ஆட்சி நடத்தியது. எங்கு பார்த்தாலும் ஆங்கிலேயத் துருப்புக்களே அந்த நாட்டில் நிறைந்திருந்தன. கெய்ரோவிலிருந்த பிரிட்டிஷ் ஹைகமிஷனரே சர்வாதிகாரியாக இருந்தார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே ஐரோப்பிய அரசாங்கங்கள் ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் தங்கள் ஆதிக்கத்தையும் ஆட்சியையும் செல்வாக்கையும் நிரந்தரமாக நிறுவுதற்காகக் கணக்கிலடங்காத கொடுமைகளையும் கொலைகளையும் செய்தன. நேர்மை என்பதே அந்த அரசாங்கங்களிடம் இருந்ததாகத் தெரியவில்லை. வஞ்சகம், பொய், ஆக்ரமிப்பு படையெடுப்பு, பலவந்தம் முதலியவற்றின் மூலமாகக் குற்றமற்ற மக்களை அடிமைகளாக்கிக் காலனி ஆட்சியை நிறுவினார்கள்.

உலகில் விஞ்ஞானமும், நாகரீகமும் வளர்ந்தன. மேல்நாடுகளில் தனி மனிதர்கள் ஆராய்ச்சிகளிலும், தத்துவத்திலும், கலாச்சாரங்களிலும் ஒழுக்க நெறியிலும் இருந்தார்கள். ஆனால், அரசாங்கங்கள் தங்கள் சாணக்கிய முறையைப் பின்பற்றிக்கொண்டே இருந்தன. எனவே, அந்த 'நாகரீக' அரசுகளில் ஒன்றான இங்கிலாந்துகூட எகிப்திலும் இந்தியாவிலும் இவ்வாறு நேர்மையற்ற பாதையில் சென்றுகொண்டிருந்தது. பொய், களவு,

கொலை, சுயநலம், பேராசை, கர்வம் முதலியவை தனி நபரிடம் இருந்தால் பெருங் குற்றங்களாகவும், பாவமாகவும் கருதப்பட்டன. ஆனால், பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய அரசாங்கங்களால் இவை அனைத்தும் நற்பண்புகளாகக் கருதப்பட்டன. அத்தகைய பண்புகள் நாட்டுப்பற்று எனப் போற்றப்பட்டன.

எனவே, எகிப்தில் சுவாதீன இயக்கம் தொடர்ந்து நடந்தது. 1881இல் அஃராபீ பாஷாவின் தலைமையில் நடந்த தேசீய இயக்கத்தையும் பூரண சுவாதீனக் கிளர்ச்சியையும் இங்கிலாந்து நசுக்கிவிட்டது. ஜமாலுத்தீன் அப்கானீயின் செல்வாக்கையும் எகிப்திலிருந்து தடுக்க இங்கிலாந்து முயன்றது.

1881இல் அஃராபீ பாஷா ஆங்கிலேயரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய மறுத்தபொழுது, வாலிபராக இருந்த ஸக்லூல் பாஷா என்பவர் அவரிடமே அலுவல் பார்த்துக் கொண்டிருந்தார். ஸக்லூல் பாஷா எகிப்தில் மத்திய பொருளாதார வகுப்பைச் சேர்ந்தவர். அவர் நாற்பத்தைந்து ஆண்டுகளாக, அஃதாவது, 1882 முதல் அவர் மரணமடைந்த 1927 வரை, எகிப்தின் விடுதலைக்காகப் பாடுபட்டார். எகிப்திய விவசாயிகளும், மத்திய வகுப்பாரும் அவரை நேசித்தார்கள். ஆனால், நிலச்சுவான்கள் (மிராசுதார்கள், ஜமீன்தார்கள்) அவரை விரும்பவில்லை. ஆங்கிலேயர் இந்தப் பிளவை அதிகரித்து அதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டார்கள். அதைப் போன்றே எகிப்திலுள்ள காப்த் (கிப்தீ) இனத்துக் கிறிஸ்தவர்களை முஸ்லிம்களிடமிருந்து பிரிக்க முயன்றார்கள். வாய் திறக்க முடியாத இலட்சக்கணக்கான ஏழைகளைத் தாங்கள் பாதுகாக்க வந்ததாகவும், உலகிலுள்ள கருப்பு மனிதர்களை நாகரீகமாக்கி முன்னேற்றமடைவிக்கும் பெருஞ்சுமையைத் தாங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் வெள்ளையர்கள் பிரச்சாரம் செய்தார்கள்.




ஸனூஸி இயக்க ஸ்தாபகர் ஸையித் அஹமத்

ஆ. 16



லிபியா வீரர் உமர் முக்தார் (1860—1931)




லிபியா ஸுல்தான் முதலாம் இத்ரீஸ்

வஃப்த் கட்சி (Wafd Party)

1918இல் முதலாம் உலகப்போர் முடிந்தது. எகிப்தில் மறுபடியும் தேசீய இயக்கம் ஆரம்பித்தது. ஐரோப்பாவில் நேசதேசத்தார் பாரிஸ் நகரில் கூட்டிய சமாதான மகா நாட்டிற்கு ஜக்லூல் பாஷாவின் தலைமையில் ஒரு தூதுக் கோஷ்டி அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டது. தூதுக்கோஷ்டிக்கு அரபி மொழியில் வஃப்த் (Wafd) என்று பெயர். அந்த வஃப்த் கட்சியே எகிப்தில் முதன்மையான ஒரே கட்சியாக இயங்கியது. ஆனால், ஸக்லூல் பாஷாவையும் இதர தலைவர்களையும் போகவிடாமல் ஆங்கிலேய அரசாங்கம் தடுத்து அவர்களை 1919 மார்ச் மாதம் கைதுசெய்து மால்டா தீவுக்கு அனுப்பியது. அதனால், எகிப்து மக்கள் கிளர்ச்சி செய்தார்கள். சில கொலைகள் நடந்தன. ஆங்கிலேய அரசாங்கம் அந்தக் கிளர்ச்சியை — நாட்டுமக்கள் தங்கள் நாட்டின் அதிகாரம் தங்களிடம் இருக்கவேண்டும் என்ற விருப்பத்தை — தளபதி அல்லன்பீ மூலமாக நசுக்கியது. ஆயினும், அந்த இயக்கம் மறுபடியும், மற்றொரு விதத்தில் தோன்றியது. இந்தியாவின் விடுதலை இயக்கத்தில் சத்யாக்கிரகம், (Passive Resistance) என்னும் சாத்வீகப் போர் நடந்ததைப் போன்று எகிப்தியரும் செய்தார்கள். அதன் விளைவாக இங்கிலாந்து ஒரு சிறிது மனம் மாறியது.

மில்னர் தூது 1920-இல் எகிப்தின் சுவாதீனம்

மில்னர் பிரபு (Lord Milner) என்பவரின் தலைமையில் ஒரு விசாரணைக் குழுவை எகிப்துக்கு அனுப்பப்பட்டது. ஆனால், இந்தியாவில் 1927 — 1928இல் ஸைமன் கமிஷனுடன் இந்தியர்கள் ஒத்துழையாமல் இருந்ததைப் போன்று எகிப்திய தேசீயக் கட்சியாரும் மில்னர் விசாரணைக் குழுவுடன் ஒத்துழைக்கவில்லை. அந்த விசாரணைக் குழுவின் முற்போக்கான சிபார்சுகளையும் ஆங்கில அரசாங்கம் புறக்கணித்து விட்டது. எனவே, மறுபடியும் 1922 வரை இயக்கம் கடுமையாக நடந்தது. பூர்ண சுவாதீனமே தங்கள் குறிக்கோள் என்று எகிப்தியர்கள் வற்புறுத்தினர்கள்.



அம்ரு பள்ளிவாசல். புஸ்தாத். (கெய்ரோ)

1921இல் ஸக்லூல் பாஷா விடுதலை பெற்று, மறுபடியும் கைது செய்யப்பட்டு அவரும் அவரது கட்சித்தலைவர்களும் நாடு கடத்தப்பட்டார்கள். நாட்டில் தொடர்ந்து போராட்டம் நடந்தது. எனவே, 1922 பெப்ரவரி 28இல் எகிப்தை ஒரு சுவாதீனத் தனி அரசாங்கம் (Independent Sovereugn State) என்று ஒப்புக்கொள்வதாக ஆங்கில அரசாங்கம் அறிக்கை வெளியிட்டது. ஆனல் (இந்த ஆனல் என்பதில்தான் எகிப்தின் உயிர் நாடிகள் இருந்தன.) நான்கு விஷயங்கள் மட்டும் பிந்திய முடிவுக்காக ஒதுக்கி ஒத்திவைக்கப்பட்டன. அவையாவன :—

(1) எகிப்தில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் போக்குவரத்தின் பாதுகாப்பு. (முதல் உலக மகாயுத்தத்திற்குப் பிறகு ஆப்பிரிக்காவின் தெற்கு முனையிலிருந்து வடக்குக் கடற்கரையில் கெய்ரோ, அலக்சாந்திரியா வரையும்–அதைப்போன்று ஆசியாவில் துருக்கியிலிருந்து தரைமார்க்கமாக சிங்கப்பூர் வரையும் — ஆங்கில சாம்ராஜ்யத்தின் சிவப்பு வர்ணத்தைத் தீட்டவேண்டுமென்று ஆங்கிலேயர் திட்டமிட்டிருந்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.)

(2) நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ எகிப்தின் மீது வெளிநாட்டாரின் ஆக்ரமிப்போ அல்லது தலையீடோ இல்லாதபடி ஆங்கிலேயரின் பாதுகாப்பு.

(3) வெளி (மேல்) நாட்டாரின் உரிமைகளை எகிப்தில் பாதுகாத்தலும், சிறுபான்மையினரைப் பாதுகாத்தலும்.

(4) ஸூதான் நாட்டின் எதிர்காலப் பிரச்சினை, இவ்வாறு, ஒதுக்கி வைக்கப்பட்ட விஷயங்கள் (Reservations) இந்திய — இங்கிலாந்து உறவிலும் பாதுகாப்புகள் என்னும் பெயரால் வற்புறுத்தப்பட்டன. ஆனல், இவற்றை எகிப்தியர் ஒப்புக்கொள்ளவில்லை.

எகிப்துக்கு இங்கிலாந்து "சுவாதீனம்" அளித்தது. ஆனல், அங்கு ஆங்கிலேயரின் ராணுவ ஆட்சியே தொடர்ந்து நடந்தது. பிறகு, அது தளர்த்தப்பட்டு எகிப்

துக்கு ஒரு (Constitution) அரசியல் அமைப்பு வழங்கப்பட்டது. ஃபுஆத் (Fuad) என்னும் பொம்மை ஸுல்தான் அந்த எகிப்து அரசாங்கத்தின் மன்னராக ஆங்கிலேயரால் ஏற்படுத்தப்பட்டார். ஆனால், ஃபுஆத் அரசரும் ஆங்கிலேயரும் நேசமாக இருந்துகொண்டு, தேசீயவாதிகளை வெறுத்தார்கள். பார்லிமெண்டு ஆட்சியையும் அந்த அரசர் விரும்பவில்லை. பிரிட்டிஷாரின் ராணுவ உதவியால் அவர் எகிப்திய பார்லிமெண்டைப் பலமுறை கலைத்துவிட்டு, சர்வாதிகாரியாக ஆட்சிசெய்து, இன்ப வாழ்க்கை நடத்திக் கொண்டும், ஆங்கிலேயருக்கு உதவிசெய்துகொண்டு மிருந்தார்.

ஸக்லூல் பிரதமர். ஜனவரி 1924

முதலாவது, இந்தப் புதிய பார்லிமெண்டுக்கு 1923இல் தேர்தல்கள் நடந்தன. ஸக்லூல் பாஷாவின் வஃப்த் கட்சியே அதில் தொண்ணூறு சதவிகிதம் வெற்றிபெற்றது. ஸக்லூல் முதல் மந்திரியானார். லண்டனுக்குச் சென்று சமரசப் பேச்சு நடத்தினார். ஆனால், நான்காம் நிபந்தனையான ஸுதான் நாட்டு பிரச்சினையில் உடன்பாடு ஏற்படவில்லை. அதாவது—பாலைவனத்தைப் போன்றுள்ள எகிப்து நாட்டிற்கு அபிஸீனியாவிலிருந்தும், ஸுதானிலிருந்தும் நீலநதி கொண்டுவரும் வெள்ளங்களின் நீரே உயிராக அமைந்துள்ளது. ஸுதானைத் தன் ஆதிக்கத்தில் வைத்துக் கொள்ள இங்கிலாந்து விரும்பியது. அதனால் அபாயம் ஏற்படலாமென்று எகிப்தியர்கள் அஞ்சினார்கள். 1924இல் ஸக்லூல் பாஷா லண்டனில் பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கும்பொழுது, ஸுதான் நாட்டு மக்கள் எகிப்தியருக்குச் சாதகமாக இருந்ததற்காக பிரிட்டிஷாரால் தண்டனையிடப்பட்டார்கள்.

எகிப்தில் "சுதந்திரத்திற்கு" முன்னர் நேரடியான பிரிட்டிஷ் ஆட்சி நடந்தபொழுது, அந்த நாட்டு மக்களின் ஆரம்பக்கல்வி, சுகாதாரம், கிராம முன்னேற்றம் முதலிய

வற்றில் ஆங்கிலேயர் உதவி செய்யவில்லை. 'சுதந்திரம்' கிடைத்த பிறகு, இந்தத் துறைகளில் செயலாற்றுவதற்கு ஏராளமான பணம் தேவையா யிருந்தது. ஆனால், அப்பொழுது இருந்த நிலையில் ஐரோப்பியர்களுக்கு தனிச் சலுகைகள் கீழ்நாடுகளில் இருந்தன. அவர்களுடைய குற்றவாளிகளை அவர்களுடைய சொந்த நாட்டு நீதிபதிகளே விசாரணை செய்தார்கள். மேலும், அயல்நாட்டு மூலதனக்காரர்கள் எகிப்தில் தீர்வை கொடாமல் இருந்தார்கள். இதையன்றி, 'சுவாதீனப்' பிரகடனத்தில் மற்றொரு நிபந்தனை, "சிறு பான்மையரைப் பாதுகாத்தல்" என்பதாகும். இவ்வாறு செய்து எகிப்து நாட்டுக் கிறிஸ்தவர்களைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு பிளவுகளை உண்டாக்க இங்கிலாந்து முயன்றது. ஆனால், காப்த் கிறிஸ்தவர்கள் ஸக்லூல் பாஷாவுடன் இணைந்து, தங்களுக்குப் பாதுகாப்பு வேண்டாம் என்று கூறிவிட்டார்கள். எனவே, 1924இல் பிரிட்டிஷாரும், ஸக்லூல் பாஷாவும் ஒன்றுபட முடியவில்லை. எகிப்திய பார்லிமெண்ட், வஃப்த் கட்சி, ஸக்லூல் பாஷா ஆகிய மூன்று பெயர்களும் இங்கிலாந்தினால் விரும்பத்தகாத பெயர்களாகிவிட்டன.

இன்னொரு விந்தை! எகிப்து சுவாதீன நாடான பிறகும் அங்கு ஆங்கில ராணுவம் இருந்தது! எகிப்திய ராணுவத்தின் தலைவரும் ஆங்கிலேயரே! உள்நாட்டுத்துறை, நீதித்துறை, நிதித்துறை இம்மூன்றையும் ஐரோப்பிய முதலாளிகளின் பாதுகாவலன் என்னும் நிலையில் இங்கிலாந்து தன் பிடியில் வைத்துக்கொண்டிருந்தது. இவற்றைவிட்டு விலகிவிட வேண்டுமென்று வஃப்த் கட்சியார் இங்கிலாந்தை வற்புறுத்தினார்கள்.

திடீரென்று, 1924 நவம்பர் 19இல் ஸூடான் கவர்னர் ஜனரலும், எகிப்து சேனையின் தலைவருமாக இருந்த ஸர். லீ. ஸ்டேக் என்னும் ஆங்கிலேயர் சில எகிப்தியர்களால் கொலை செய்யப்பட்டார். 'அப்பொழுது, எகிப்தில் ஆங்கிலேய ஏஜெண்டாக இருந்த அல்லன்பீ பிரபு என்ப

வர் எகிப்து அரசாங்கத்திற்கு யுத்தப் பிரகடனம் போன்ற எச்சரிக்கை விடுத்து ஏழு நிபந்தனைகளை ஒப்புக்கொள்ள வேண்டுமென்றார். அதன் பொருள் என்னவென்றால், ஒரு எகிப்தியன் செய்த குற்றத்திற்காக, எகிப்து அரசாங்கம் பொறுப்பேற்றுத் தன் உரிமைகளை இழக்க ஒப்புக்கொள்ள வேண்டுமென்று இங்கிலாந்து வற்புறுத்தியது. அந்த நெருக்கடியான நிலையில், ஸக்லூல் பாஷா வெகு நிதானத்துடன் ஐநூறாயிரம் பவுன்கள் நஷ்டஈடு கொடுத்தார். மற்ற நிபந்தனைகளை—அதாவது, அவர் லண்டன் பேச்சுவார்த்தைகளில் ஒப்புக்கொள்ள மறுத்துத் திரும்பி வந்த நிபந்தனைகளையும் ஒப்புக்கொண்டார். ஆனால், ஸுதான் மீதுள்ள உரிமைகளை விட்டுவிட முடியாது என்றார். எனினும் ஸுதான் நாடு தன்னுடைய காலனி ஆட்சி நாடே என்று இங்கிலாந்து விளம்பரப்படுத்தியது.

இந்த அநீதியைப் பொறுக்கமுடியாமல் ஸக்லூல் பாஷாவின் மந்திரிசபை ராஜிநாமா செய்தது. 1924 நவம்பரில் ஃபுஆத் மன்னர் பார்லிமெண்டைக் கலைத்துவிட்டார். அதற்குப் பிறகு, பிரிட்டிஷ் ஹைகமிஷனரின் உதவியாலும், கொடுக்கல்வாங்கல் செய்யும் வெள்ளையர்களின் உதவியாலும் அவர் மனம்போன போக்கில் ஆட்சி செய்தார். அதாவது, இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியில் சுதேச மன்னர்கள் ரெஸிடன்ட் (Resident) என்பவரால் அடக்கப்பட்டுவந்ததைப் போன்று, ஃபுஆத் மன்னர் அடக்கப்பட்டார். எகிப்திய பார்லிமெண்ட் கூட்டப்பட்டபொழுது ஸக்லூல் பாஷாவும் அவரது வஃப்த் கட்சியுமே பெரும்பான்மையில் இருந்தது. எனவே, அரசியல் அமைப்பை மாற்றி அந்தக்கட்சியை வெளியேற்ற முயற்சிகள் செய்தார். ஆனால், பிறகும் ஸக்லூல் கட்சியே வெற்றியடைந்தது. எனினும், ஸக்லூல் பாஷா பிரதமராக வரக்கூடாதென்று அப்பொழுது பிரிட்டிஷ் ஹைகமிஷனராக இருந்த லாயிட் பிரபு (Lord Lloyd) தடுத்துவிட்டார். எனவே, மிதவாதியான ஒருவரை பிரதமராக்கினார்கள். 1927 இல் லண்டனில்

வாதத்திற்கிடமான பிரச்சினைகளை அவர் தீர்க்க முயன்றார். ஆனால், அந்த மிதவாதியும் ஆங்கிலேயரின் நிபந்தனைகளை ஒப்புக்கொள்ள மறுத்தார். இந்தச் சூழ்நிலையில் தமது எழுபதாம் வயதில் (1927 ஆகஸ்ட் 23) ஸஅத் ஸக்லூல் பாஷா இறந்துபோனார்.

முஸ்தபா நஹஸ் பாஷா

ஸக்லூல் இறந்த பிறகு, முஸ்தபா நஹஸ் பாஷா என்பவர் வஃப்த் கட்சியின் தலைவராகி, 1928 மார்ச் மாதம் அவரே எகிப்தில் முதல் மந்திரியானார். அவர் காலத்திலே அவர் செய்த உள்நாட்டுச் சீர்திருத்தங்களையும் ஆங்கிலேய ஹை கமிஷனர் லாயிட் பிரபு எதிர்த்தார். ஆங்கில யுத்தக் கப்பல்கள் அலக்சாந்திரியா துறைமுகத்திற்கு வந்து பயமுறுத்தின. எனவே, அந்தச் சீர்திருத்தங்களைச் சில மாதங்களுக்கு அடுத்த பார்லிமெண்ட் கூடும்வரை ஒத்திப் போடுவதாக நஹஸ் பாஷா ஒப்புக்கொண்டார், ஆனால், ஃபுஆத் மன்னரும் ஆங்கிலேயரும் அடுத்த பார்லிமெண்ட் கூடவிடாமல் சதி செய்தார்கள். அதாவது, லஞ்சம் வாங்கியதாக நஹஸ் பாஷா மீது குற்றம் சாட்டப்பட்டது. அதன் அடிப்படையில் ராஜிநாமா செய்யும்படி ஃபுஆத் மன்னர் அவரை வற்புறுத்தினார். அது பொய்க்குற்றச்சாட்டு. ஆகையால், நஹஸ் ராஜிநாமா செய்ய மறுத்துவிட்டார். எனவே, ஃபுஆத் அவரை நீக்கிவிட்டார். பிறகு, பார்லிமெண்டும் கலைக்கப்பட்டது. ஃபுஆத் மன்னர் சர்வாதிகாரியைப் போன்று ஆங்கிலேயரின் உதவியால் ஆட்சி செய்தார்! மேலும், வஃத் கட்சியைக் கலைக்கவும் முயற்சி செய்யப்பட்டது. பத்திரிகைகள் மீது தடைகள் விதிக்கப்பட்டன. எனினும், 1928ல் எகிப்து நாட்டில் இந்த சர்வாதிகாரத்தை எதிர்த்துக் கிளர்ச்சிகள் செய்யப்பட்டன. வேலை நிறுத்தங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடந்தன.

1928ல் இங்கிலாந்தில் தொழில்கட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. லாயிட் பிரபு திருப்பி அழைக்கப்பட்

டார். எகிப்தில் தேர்தல் நடந்தன. வஃப்த் கட்சி மறுபடியும் பதவியேற்றது. 1929இல் நஹஸ் பாஷா லண்டன் சென்ருர். பேச்சு வார்த்தைகள் நடந்தன. 1922ல் எகிப்துக்கு 'பூரண சுவாதீனம்' அளித்தபொழுது அதனுடன் இணைத்திருந்த நான்கு நிபந்தனைகளில் முதல் மூன்று நிபந்தனைகளை நீக்கி விடத் தொழில்கட்சி அரசாங்கம் சம்மதித்தது. ஆயினும், நான்காம் நிபந்தனையில் ஸுதான் விஷயத்தில் ஒற்றுமை ஏற்படவில்லை. எனினும், நஹஸ் பாஷா வெறுப்பில்லாமல் திரும்பினர். ஆனல், 1930இல் எகிப்திய பார்லிமெண்டுக்கும் ஃபுஆத் மன்னருக்குமிடையில் சச்சரவு ஏற்பட்டது. அதனல், நஹஸ் பாஷா தமது பதவியை ராஜிநாமா செய்து விட்டார். ஃபுஆத் மன்னரின் சர்வாதிகாரம் மீண்டும் ஆரம்பமாயிற்று. மக்களுக்கு அதனல் துன்பம் ஏற்பட்டது. எல்லாக் கட்சிகளும் சர்வாதிகார ஆட்சியைக் கண்டனம் செய்தன.

1922 முதல் 1935 வரை எகிப்து "பூரண சுதந்திரம்" பெற்ற வரலாறு இதுதான். அதாவது, ஆங்கிலேய சேனையின் உதவியால் ஒரு பொம்மை ராஜா—ஃபுஆதை - உட்கார வைத்து சர்வாதிகாரம் நடந்தது. பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களும், சேனைகளும், அலக்சாந்திரியாவிலும் கெய்ரோவிலும் இருந்தன. ஸுயஸ் கால்வாயும் ஸுதான் நாடும் ஆங்கிலேயரின் நிர்வாகத்தில் இருந்தன. எனவே, எகிப்து நாடு 1922இல் கிடைத்த பூரண சுவாதீனத்தில் இங்கிலாந்தின் காலனி நாடாகவே இருந்தது.

அபிஸீனியாவில் இத்தாலி படையெடுப்பு: 1935இல் எகிப்தின் அண்டை நாடான அபிஸீனியா மீது இத்தாலி படையெடுத்தது. இதனல், இங்கிலாந்துக்கும், எகிப்துக்கும் ஒருவாறு அபாயம் ஏற்பட்டது.

1936 ஒப்பந்தம்: புதிய பார்லிமெண்ட் தேர்தலில் வஃப்த் கட்சியே வெற்றிபெற்றது. நஹஸ் பாஷா முதல் மந்திரியானர். 1936இல் அவர் இங்கிலாந்துடன் சமரசப் பேச்சுகள் நடத்தி ஓர் உடன்படிக்கையும் செய்தார். ஆங்கி

லேயச் சேனைகள் அலக்சாந்திரியாவிலிருந்தும் கெய்ரோ விலிருந்தும் திரும்பி அழைக்கப்பட்டன. ஸுயஸ் கால்வா யின் பாதுகாவலுக்கு பத்தாயிரம் ஆங்கில வீரர்கள் நிறுத்தி வைக்கப்பட்டார்கள். வெளிநாட்டாருக்குக் கிடைத்துவந்த அநீதமான சலுகைகளும் ஒருவாறு நீக்கப்பட்டன. சர்வ தேச சங்கத்தில் (League of Nations) எகிப்து ஒரு அங்க நாடாகச் சேர்வதில் இங்கிலாந்து உதவிசெய்யச் சம்மதித் தது. எகிப்து அரசாங்கமும் சில விஷயங்களில் சமாதா னத்தை விரும்பிச் விட்டுக்கொடுத்தது. இவ்வாறு 1936இல் எகிப்து சுவாதீனம் பெற்றது. மக்கள் மகிழ்ச்சியடைந் தார்கள்.

ஃபாரூக் 1936—1952

ஃபுஆத் இறந்தார். ஃபாரூக் சிம்மாசனம் ஏறினர். அவரும் பெரிய நிலச்சுவான்களும் வஃப்த் கட்சியை வெறுத்தார்கள். மன்னருக்கும் பார்லிமெண்டுக்குமிடையில் கருத்து வேற்றுமைகளும் எதிர்ப்புக்களும் ஏற்பட்டன. பிரதமர் நஹஸ் பாஷாவை எகிப்து மன்னர் நீக்கியதோடு பார்லி மெண்டையும் கலைத்துவிட்டார்.

இரண்டாம் உலக யுத்தம் 1938—1945

1938இல் இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பமாயிற்று. அதில் தனக்கு விரோதமாக ஜெர்மனி ஒருகால் எகிப்தையும் ஸுயஸ் கால்வாயையும் தாக்கலாம் என்று இங்கிலாந்து அஞ்சியது. எனவே, 1936ஆம் ஆண்டில் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு விரோதமாக, எகிப்தில், குறிப்பாக கெய்ரோவில், பிரிட்டிஷ் சேனைகள் நடமாட ஆரம்பித்தன. அச்சமயம் கெய்ரோவில் பிரிட்டிஷ் தூதராக இருந்த மைல்ஸ் லாம்ப்ஸன் (Miles Lampson) என்பவர் இளவயதுள்ள பாரூக் மன்னரைக் கைதியைப் போன்று நடத்தினர்.

இரண்டாம் உலகப் போரில் ஜெர்மன் தளபதி ரோமல் என்பவர் வட ஆப்ரிக்காவை ஆக்ரமிக்கவிடாமல் தடுக்க ஆங்கிலத் தளபதிகளான வேவல், மான்ட்காமரி ஆகியோர் எகிப்தையே தங்கள் தளமாக அமைத்துக்கொண்டிருந் தார்கள். அப்பொழுது ஜெர்மனிக்குத் துணைவராயிருந்த இத்தாலியின் சர்வாதிகாரி மஸோலனி என்பவர் எகிப்தைத் தாக்கலாமென்ற அச்சமும் இருந்தது. இந்தியாவிலிருந்து எகிப்துக்கு உதவிச் சேனைகள் சென்றன. எகிப்தில் ஆங்கிலேயரின் போர்வீரர்களும், டான்க்குகளும், ஆகாய விமானங்களும், கப்பல்களுமே காணப்பட்டன. அந்தப் போரில் தளமாக அமைக்கப்பட்ட எகிப்து நாட்டிலிருந்து மால்டா தீவுக்கும் கிரேக்க நாட்டிற்கும் சேனைகள் அனுப்பப் பட்டன.

இந்த உலகப் போர் முடிந்த பிறகு இங்கிலாந்தில் தொழிற்கட்சியாருக்கு பார்லிமெண்டில் பெரும்பாலான ஸ்தானங்கள் கிடைத்து மந்திரி சபை அமைக்கப்பட்டது. அட்லி (Atlee) என்பவர் தொழில்கட்சிப் பிரதம ராஜர். அப்பொழுது அவர் எகிப்தின் வேண்டுகோளுக்கு இணங்கி ஸூயஸ் கால்வாய் உடன்படிக்கையை மாற்றியமைக்க உடன்பட்டார்.

ஜமால் அப்துந் நாஸிர்

இந்தச் சூழ்நிலையில் எகிப்திய பீரங்கிப் படையிலிருந்த ஒரு வாலிபர் ஜமால் அப்துந் நாஸிர் தமது நாட்டிற்கும் மன்னருக்கும் ஏற்பட்ட இழிவை அகற்ற முன்வந்தார். இரண்டாம் உலகப் போர் முடிந்த பிறகும், கெய்ரோவி லிருந்து ஆங்கிலேயச் சேனைகள் வெளியேறவில்லை. மேலும், ஸூயஸ் கால்வாய் பிரதேசத்தில் 1936ஆம் ஆண்டில் உடன் படிக்கையில் குறிப்பிடப்பட்ட சேனையை விட எட்டு மடங்கு பிரிட்டிஷ் சேனை இருந்தது. இதை ஃபாரூக் மன்னர் தடுக்க வில்லை என்பதையும் நாஸிர் அறிந்தார். அரபு நாடுகளின் ஒற்றுமைக்காக அரப் லீக் என்னும் ஒரு ஸ்தாபனம் 1945

ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. எகிப்து, இராக், ஸிரியா, லப்ஞன், ஸவூதி அரபியா, எமன், ஜார்டன் ஆகிய அரபு நாடுகள் அதில் சேர்ந்துகொண்டன.

பலஸ்தீனில் யூதர்களுக்காக "இஸ்ராயீல்" என்னும் ஒரு தனி அரசாங்கம் 1948இல் அமைக்கப்பட்டது. இதில் அமெரிக்காவும் இங்கிலாந்தும் அதிக பங்கெடுத்துக்கொண்டன. சிறிது காலத்தில் எகிப்துக்கும் இஸ்ராயீலுக்கும் போர் நடந்தது. அந்தப் போரில் பாரூக் மன்னர் உண்மையான அனுதாபம் காட்டவில்லை. உதவி செய்யவுமில்லை. எனவே, ஆங்கிலேயரையும் பாரூக் மன்னரையும் எகிப்து நாட்டிலிருந்து நீக்கிவிட நாஸிர் முடிவு செய்தார்.

இங்கிலாந்து தனது சேனைகளைக் கெய்ரோவிலிருந்து 1946இல் திரும்பி அழைத்துக் கொண்டு அடுத்த ஆண்டில் மற்ற இடங்களிலிருந்த சேனைகளையும் அழைத்துக்கொள்வதாக வழக்கம்போல் கூறிக்கொண்டிருந்தது. எனினும், அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. 1951இல் இங்கிலாந்து மறுபடியும் ஒரு பாதுகாப்பு உடன்படிக்கையைச் சமர்ப்பித்தது. அதாவது, ஸுயஸ் கால்வாய் பிரதேசத்திலிருந்த பிரிட்டிஷ் சேனைக்குப் பதிலாக, இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், துருக்கி, எகிப்து ஆகிய நாடுகளின் சேனைகள் கூட்டாகப் பாதுகாவல் செய்யும் என்று புதிய ஒப்பந்தமொன்றை இங்கிலாந்து சமர்ப்பித்தது, ஆனல், எகிப்து நாட்டார் அதை விரும்பவில்லை. முன்னூறு ஆண்டுகளாகத் தங்களை அடிமைப்படுத்திய துருக்கியரை அவர்கள் விரும்பவில்லை. அதைப் போன்றே, வட ஆப்பிரிக்காவில் அல்ஜீரியா, மொரோக்கோ, தூனிஸியா ஆகிய அரபு நாடுகளைப் பலவந்தமாக ஆட்சிசெய்த பிரெஞ்சு அரசாங்கத்தையும் அவர்கள் விரும்பவில்லை. மேலும், மத்திய கிழக்குப் பிரதேசத்தில் அரபு நாடுகளுக்கு மத்தியில்—அவர்களைத் துண்டிக்கும் நோக்கத்துடன்—யூதர்களுக்காக பலஸ்தீனில் இஸ்ராயீல் அரசாங்கம் அமைக்க உதவி செய்த அமெரிக்கர்களையும் அவர்கள் வெறுத்தார்கள். இறுதியாக, இரண்டு

உலகப் போர்களிலும் எகிப்து நாட்டைத் தனது போர்த்தள மாக உபயோகித்ததும் அரபு நாடுகளை அடக்கும் நோக்கத் துடன் பலஸ்தீனில் யூத அரசாங்கம் அமைத்ததுமான இங்கிலாந்தின்மீது எகிப்தியர் கடுஞ்சீற்றங்கொண்டார்கள்.

1951இல் எகிப்துக்கு மேற்கிலுள்ள திரிப்போலி (லிபியா) என்னும் அரப் முஸ்லிம் நாடு சுவாதீன மடைந்தது.

ஸூதான் நாட்டிற்கும் பாரூக் மன்னரே அரசர் என்று பிரதமர் நஹஸ் பாஷா பிரகடனம் செய்தார். மேலும் 1936இல் நடந்த ஆங்கிலேய—எகிப்திய உடன்படிக்கையை நிராகரித்தும் விட்டார். ஸூயஸ் கால்வாய் பகுதியிலிருந்த பிரிட்டிஷ் துருப்புகளை எகிப்து மக்கள் தாக்கினார்கள்.

ஆனால், ஸூதான் நாடு 1924 முதல் தனது பாதுகாவ லில் இருப்பதாக இங்கிலாந்து கூறியது. ஃபாரூக் மன்னர் அச்சங் கொண்டார். அவர் ஆங்கிலேயரின் பாதுகாவலைத் தேடுவதாகத் தெரிந்தது.

எகிப்து — குடியரசு — 1953

அச் சூழ்நிலையில்தான் நாஸிர் தோன்றினார். அரப்— இஸ்ராயீல் போரில் வெற்றிகொண்ட முஹம்மத் நஜீப் (Najeeb) என்பவரைத் தலைவராக்கி 1952 ஜூலை மாதம் இருபத்து மூன்றும் நாள் நஜீபும் நாஸிரும் எகிப்திய சேனையின் சார்பில் பெரிய அரசியல் புரட்சியுண்டாக்கினார்கள். ஃபாரூக் மன்னரை சிம்மாசனத்திலிருந்து இறக்கி அவரை நாடு கடத்தினார்கள்.

1953 ஜூன் மாதம் எகிப்து நாடு ஒரு குடியரசு என்று பிரகடனம் செய்யப்பட்டது. நஜீப் அதன் தலைவரானார். நாஸிர் உதவித் தலைவராக அமர்ந்தார். அதற்கு பிறகு, நஜீபை அகற்றிவிட்டு நாஸிரே குடியரசின் தலைவரானார்.

ஸூயஸ்கால்வாய் செங்கடலையும் மத்தியதரைக் கடலை யும் நீர் மார்க்கமாக இணைக்கின்றது. நீல நதியின் நீரைப்

போன்றே, ஸூயஸ் கால்வாயின் வருமானம் எகிப்து நாட்டிற்குப் பெரும்பாக்கியமாக அமைந்துள்ளது. ஏறத்தாழ நூறு கோடி ரூபாய் ஆண்டொன்றுக்குக் கிடைக்கின்றது.

நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் எகிப்து நாட்டில் ஆட்சி செய்த மூன்றும் ஸனௌஸரத் என்னும் மன்னரால் இது தோண்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஆனால், பிறகு அது உபயோகிக்கப்படாமல் மண் மூடிவிட்டது. இஸ்லாமியக் காலத்தில் இரண்டாம் கலீபா ஹஸ்ரத் உமர் காலத்தில் அதைத் தோண்டவேண்டுமென்று ஆலோசனை கூறப்பட்டது. ஆயினும், அவர் அதற்கு இணங்க வில்லை. செங்கடல் மார்க்கமாக மேல் நாடுகளுக்குச் செல்லும் வியாபாரச் சாமான்கள் அங்கிருந்து எகிப்திலுள்ள அலக் சாந்திரியா துறைமுகத்திற்குத் தரை மார்க்கமாகக் கொண்டு போகப்பட்டு, பிறகு கடல் மார்க்கமாகச் சென்றன. ஆனால், ஒரு பிரெஞ்சுப் பொரியாளர் லெஸ்ஸப்ஸ் என்பவரின் முயற்சியால் அது 1859ஆம் ஆண்டில் தோண்டப்பட்டது. அதைத் தோண்டும்பொழுது ஒன்றேகால் லட்சம் எகிப் தியத் தொழிலாளர் இறந்துவிட்டதாகக் கூறப்படுகின்றது. 1869ஆம் ஆண்டில், கதீவ் இஸ்மாயீல் காலத்தில் அதில் கப்பல் போக்கு வரத்து ஆரம்பமாயிற்று. அவர் அதை ஒரு பிரெஞ்சுக் கம்பெனிக்கு தொண்ணூற்றென்பது ஆண்டு களுக்குக் குத்தகைக்கு விட்டுவிட்டார்.

அக்காலத்தில் பிரான்ஸூம் இங்கிலாந்தும் வியாபார— அரசியல் போட்டியிட்டுக்கொண்டிருந்தன. கீழ் நாடு களுடன் தொடர்புகொள்ள ஸூயஸ் கால்வாயையும் எகிப்தையும் வியாபாரப் பாதையாகத் தங்கள் ஆதிக்கத்தில் கொண்டுவர இங்கிலாந்தும் பிரான்ஸூம் தனியாக முயன்றன. இறுதியில், இங்கிலாந்தே அதில் வெற்றி பெற்றது. இரண்டு உலக மகா யுத்தங்களிலும் அந்த நாட்டை யுத்த தளமாகவும் இங்கிலாந்து பயன்படுத்தியது.

1956இல் எகிப்துக் குடியரசுத் தலைவர் நாஸிர் நீலநதி யில் அஸ்வன் அணைக்கட்டைத் தயாரிக்கத் திட்டமிட்டார்.

முதலில் இங்கிலாந்தும் அமெரிக்காவும் உதவிசெய்ய உடன்பட்டுப் பிறகு, மறுத்து விட்டன. உடனே, அவர் ஸூயஸ் கால்வாய் கம்பெனியை தேசீய மயமாக்கிவிட்டார்.

அதை, பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா இம்மூன்று நாடுகளும் எதிர்த்தன. பலஸ்தீன் நாட்டில் இஸ்ராயீல் அரசாங்கம் அவர்களுக்கு உதவிசெய்தது. அவர்களின் விமானங்கள் எகிப்தைத் தாக்கின. ஸயீத் துறைமுகத்தில் குண்டுமாரி பொழிந்தன. ஆனால், தோல்வியடைந்தன. அதனால், நாஸிருடைய செல்வாக்கு இன்னும் அதிகரித்தது. 1958 பெப்ரவரி 21ல் ஸிரியா நாடு எகிப்துடன் சேர்ந்து ஐக்கிய அரபுக் குடியரசு என்று பிரகடனம் செய்யப்பட்டது. 1958 மார்ச் மாதம் எமன் நாடும் இதில் சேர்ந்து கொண்டது. இன்று அரபிய உலகில் நாஸிரே தலைவராக விளங்குகின்றார்.

அத்தியாயம் 2

இதர ஆப்பிரிக்க முஸ்லிம் நாடுகள்

இஸ்லாமிய வரலாற்றிலே வட ஆப்பிரிக்க நாடுகளில் மிஸ்ர் எனப்படும் எகிப்து நாடே முதலிடம் பெற்று விளங்குகின்றது. அந்த நாடு ஆப்பிரிக்கா கண்டத்தைச் சேர்ந்ததாயினும் அதன் வரலாறு தென்மேற்கு ஆசிய இஸ்லாமிய நாடுகளுடன் தொடர்பு கொண்டுள்ளது. எகிப்து நாட்டிற்கு மேற்கில் அத்லான்டிதிக் பெருங்கடல் வரை திரிபோலி (லிபியா), அல்ஜீரியா (அல் ஜஸாயிர்), தூனிஸ் (தூனீஸியா), மொரோக்கோ (மராக்கஷ்) போன்ற முஸ்லிம் நாடுகள் உள்ளன. இந்த நாடுகளுக்குத் தெற்கில் உலகிலேயே மிகப்பெரிய ஸஹாரா என்னும் பாலைவனம் இருக்கின்றது. இன்று அந்தப் பாலைப்பிரதேசம் நீல நதியிலிருந்து அத்லான்திக் மகாசமுத்திரம்வரையும், மத்தியதரைக் கடலிலிருந்து மத்திய ஆப்பிரிக்காவிலுள்ள ஸாவன்ன புல்வெளி வரையும் பரந்திருக்கின்றது. ஆஸ்திரேலியா கண்டத்தை


இன்றைய முஸ்லிம் உலகம்
ருஷியா
ஐரோப்பா
மங்கோலியா
ஜப்பான்
துருக்கி
ஈரான்
பாகிஸ்தான்
அரப் உலகம்
இந்தியா
தெ.கி.ஆசியா
மலேசியா
இந்தோனேசியா
ஆப்ரிக்கா
இந்து மஹாசமுத்திரம்
ஆஸ்திரேலியா
முஸ்லிம் பெரும்பான்மை நாடுகள்
முஸ்லிம் சிறுபான்மை நாடுகள்

விட ஒன்றரை மடங்கு பெரியது. எங்கும் ஒரே மணல். தண்ணீரும் மரஞ்செடிகொடிகளும் இல்லாமல், மனித வாழ்க்கைக்கும் மனித சஞ்சாரத்திற்கும் தகுதியில்லாத தொரு காட்சியளிக்கின்றது.

இந்தப் பாலைவனப் பிரதேசம் எதிர்காலத்தில் ஒரு நல்ல வளமான பிரதேசமாக மாறிவிடக் கூடுமென்று விஞ்ஞானிகள் எதிர்பார்க்கின்றூர்கள். இதில் இரண்டாயிரம் அடிகளின்கீழ், ஏறத்தாழ அறுநூற்றைம்பது மைல் நீளத் தில் ஏராளமான தண்ணீர் கிடைக்கின்றதாகவும், அந்தத் தண்ணீரின் உதவியால் மரஞ்செடிகொடிகள் வளர்க்கவும் மக்கள் குடியிருப்பதற்கான வசதிகள் செய்யவும் கூடு மென்று எதிர்பார்க்கப்படுகின்றது. திரிபோலி போன்ற நாடுகளில் மணல்வெளியில் பல புல்வகைகள் முளைக்க வைத்துள்ளார்கள். இப்பொழுது (1966) திரிபோலி நாட்டில் பயிரிட்ட வெங்காயம் மலிவான விலையில் இலங்கைக்கு ஏற்றுமதி செய்கின்றது. இதையன்றி வடஆப்பிரிக்க நாட்டு மணல்வெளிகளில் ஏராளமான பெட்ரோலியம் எண்ணெய்ச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாலும், அந்தப் பிரதே சத்தில் வறுமை நீங்கி, செல்வப்பெருக்குண்டாகி, பாலை வனம் சோலைவனமாகி, பாழாகத்தோற்றமளிக்கும் வறண்ட சமவெளிகளெல்லாம் புத்துயிர்பெற்றுப் பூத்துக்குலுங்கும் பூஞ்சோலையாகவும், பழத்தோட்டமாகவும் மாறிவிடலா மெனவும் நம்பப்படுகின்றது. மேலும், இதில் பத்துகோடி மக்கள் குடியேறலாம் எனவும், அவர்களுக்குத் தேவையான வாழ்க்கை வசதிகள் அந்தப் பகுதியிலேயே கிடைக்கக் கூடு மெனவும் சொல்லப்படுகின்றது.

ஸஹாரா பாலைவனத்தின் மத்திய பாகத்திலே பல நகரங் களும் நல்ல நாகரீக மக்களும் பழங்காலத்தில் இருந்ததாக புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித் துள்ளார்கள்.

நபிபெருமானாரவர்கள் அரபு நாட்டில் இஸ்லாமியப் பிரச்சாரஞ்செய்த காலத்திலிருந்து முஸ்லிம்களுக்கு வட

ஆப்பிரிக்காவுடன் தொடர்பு இருந்தது. இதுமட்டு மன்று, மேற்கு ஆப்பிரிக்காவிலும், மத்திய ஆப்பிரிக்காவிலும் முஸ்லிம்கள் தொடர்புகொண்டிருந்தார்கள். குறிப்பாக, இந்தப் பிரதேசத்தில்தான் இரண்டு முஸ்லிம் அரசுகள் தோன்றி மறைந்தன.

இந்தப் பிரதேசத்தை ஐந்து பகுதிகளாகப் பிரிக்கலாம்:-

(1) ஸஹரா.

(2) ஸாவன்னு (வெப்பமண்டலப் புல்வெளி).

(3) ஸெனீகல் கேம்பியா நதிகளுக்கு மேற்கிலுள்ள பாகம்.

(4) தெற்கில் காடுகள் நிறைந்த கடற்கரையோரப் பகுதி.

(5) சாட் (Chad) ஏரியைச் சூழ்ந்துள்ள கிழக்குப்பாகம்.

இதை அரபியர் பிலாதுஸ் ஸூதான் (Bilad-ul-Sudan) — கறுநிற மக்களின் நாடுகள் — என்றழைத்தார்கள்.

இதில் நீக்ரோ மக்கள் வசித்தார்கள். மத்தியதரைக் கடலிலிருந்து தொளாயிரம் மைல் தெற்கில் ஸஹரா பாலைவனத்தின் நடுப்பாகத்தில் பதினைந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒரு செழிப்பான சமவெளி இருந்ததாகப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்கள். கி. மு. ஏழாம் நூற்றாண்டுவரை இந்த மக்கள் வட நாடுகளிலிருந்த பர்பர் (Berber) இனத்தாரால் தாக்கப்படாமல் இருந்தார்கள். பொதுவாக, இந்தப் பிரதேசங்களிலிருந்த நீக்ரோக்கள் சிறுசிறு கூட்டங்களாக வசித்தார்கள். அந்தப் பகுதியில் தங்கமும் இரும்பும் கிடைத்தது. ஆனால், அவர்களுக்கு பருத்தி வேளாண்மை தெரியாமையால், மரப்பட்டைகளிலிருந்து ஆடைகள் தயாரித்தார்கள். அவர்களுடைய விவசாயப் பொருள்களை பர்பர் இனத்தாருக்கு விற்பார்கள். பிறகு, பர்பர்களிடமிருந்து உப்பு வாங்கிக்கொள்வார்கள். மேலும், பித்தளை, சோழி, ஆகியவை வாங்கி நாணயங்

களாக உபயோகித்தார்கள். இதையன்றி, ஆடைகள், அத்திப் பழங்கள், பேரீச்சம் பழங்கள், குதிரைகள், கால் நடைகள், உப்பு ஆகியவையும் விலைக்கு வாங்கப்பட்டு, அதற்குப் பிரதியாகத் தங்கம், அடிமைகள் முதலானவற்றைக் கொடுத்தார்கள்.

பிறகு இந்தப் பகுதியில் வெள்ளையர்கள் வந்தார்கள். அதாவது பர்பர், யூதர், அரபியர் ஆகிய மூன்று இனத்தாரும் அக்காலத்தில் வெள்ளையர்கள் என்று நீக்ரோக்களால் அழைக்கப்பட்டார்கள். கி. பி. நான்காம் நூற்றாண்டில் யூதர் அல்லது பர்பர் இனத்தார்கள் காஞ (Ghana) என்னும் அரசை நிறுவினார்கள். அந்த ராஜ்யம் அத்லான்திக் மகா சமுத்திரத்தின் கரையிலிருந்து திம்பக்தூ நகர்வரை பரந்திருந்தது. இதிலிருந்த மக்களில் பெரும்பாலோர் நீக்ரோக்களே. நீக்ரோக்களுக்கும் பர்பர் — யூதர்களுக்குமிடையில் விவாகங்கள் நடந்தன. கி. பி. 770இல் இந்தப் பிரதேசம் நீக்ரோக்களால் வெல்லப்பட்டது. ஆனால், கி. பி. 1240இல் மாலீ எனப்படும் ஒரு முஸ்லிம ராஜ்யத்தை ஸ்தாபித்தவர் இதை வென்றுவிட்டார். கி. பி. பத்தாம் நூற்றாண்டில் இந்தப் பிரதேச மக்கள் உயர்ந்த கலாச்சாரமுள்ளோராக இருந்தார்கள் எனவும், ஸஹரா பாலைவனத்தின் மூலமாக மொரோக்கோ நாட்டுடன் இவர்கள் வியாபாரத் தொடர்பு கொண்டிருந்தார்கள் எனவும் தெரிகின்றது. வட ஆப்பிரிக்காவிலிருந்து முஸ்லிம் வியாபாரிகள் காஞவுக்கு வந்து, அங்கு தனியான ஒரு நகரைக் கற்களால் கட்டிமுடித்து அதில் வசித்தார்கள்.

முஸ்லிம்கள் வட ஆப்பிரிக்காவை ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டில் வென்றபொழுது அங்கிருந்த பர்பர் இனத்தாரில் பெரும்பாலோர் இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்து கொண்டார்கள். அதை விரும்பாத சிலர் தெற்கு நோக்கி வந்து விட்டார்கள். நீக்ரோக்களுடன் அவர்கள் வசித்து, விவாகத் தொடர்புகளும் செய்துகொண்டார்கள். கி. பி. 1000இல் அவர்களுக்கிடையில் சச்சரவுகள் ஏற்பட்டன.

அந்தப் பிரதேசத்தில் ஸெனீகல் நதிப் பகுதியில் ஆரம்பித்த முராபிதா (Murabita) என்னும் இஸ்லாமிய இயக்கத்தின் விளைவாக, இந்த பர்பர் இனத்தாரில் ஒரு பெரும் பகுதி இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டது. படிப்படியாக இந்தப் புதிய முஸ்லிம்கள் இஸ்லாமியப் பிரச்சாரகர்களாக வும் வெற்றியாளர்களாகவும் மாறிவிட்டார்கள். அவர்களில் ஒரு பிரிவு வடக்கே சென்று மொரோக்கோ நாட்டை வென்று அதில் குடியேறினார்கள். இன்னொரு பிரிவு அபூ பக்ர் என்பவர் தலைமையில் கானா ராஜ்யத்தில் நுழைந்து, கி. பி. 1076இல் கும்பி நகரைக் கைப்பற்றியது. ஆனால், 1087இல் கானா ராஜ்யம் சுவாதீனமடைந்துவிட்டது.

இன்னும் சில ஆண்டுகள் சென்று கானாவிலிருந்து எட்டாம் நூற்றாண்டில் வெளியேற்றப்பட்ட யூதர்கள், பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் கானாவை வென்றார்கள். ஆனால், கானாவிலிருந்த முஸ்லிம்கள் இதை விரும்பவில்லை. அவர்கள் அங்கிருந்து வெளியேறி வலதா (Walata) என்னும் ஒரு புதிய நகரை நிர்மாணித்து வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள். ஆயினும், கானா அரசர் அதற்குத் தெற்கிலுள்ள முஸ்லிம் ராஜ்யத்தின் மீது படையெடுத்தார். எனினும் ஹி. 633—கி. பி. 1235இல், கிரினா போரில் அவர் தோல்வியடைந்து கொல்லப்பட்டார். இதன் விளைவாக கானா ராஜ்யம் அழிந்தது. மாலி என்னும் புதிய முஸ்லிம் ராஜ்யம் தோன்றியது.

மாலி ராஜ்யம்

இந்தப் புதிய ராஜ்யத்தின் தலைநகர் மாலீ. இது படிப்படியாக உயர்ந்து மேற்கு ஆப்பிரிக்காவிலே வியாபாரத்தில் நடுநாயகமாக விளங்கியது. இந்த ராஜ்யத்தில் மன்ஸா மூஸா (ஹி. 707—733. கி. பி. 1307—1332) என்னும் மன்னர் மிகச் சிறந்தவர். மன்ஸா என்றால் ஸுல்தான் என்று பொருள். இவர் காலத்தில் அண்டை நாடுகள் வெல்லப்

பட்டன. மாலி ராஜ்யத்திலிருந்து வடக்கில் மொரோக்கோ விலுள்ள ஃபாஸ் (Fez) நகருக்கும் திரிபோலி, எகிப்து நாடு களுக்கும் வியாபாரத்தொடர்பு இருந்தது. மாலியை ஆண்ட முஸ்லிம் ஸுல்தான்கள் மக்கா நகருக்கு ஹஜ் தலயாத் திரை செய்யச்செல்வார்கள். ஆனால், ஸுல்தான் மன்ஸா மூஸா செய்த புனித ஹஜ் யாத்திரை சரித்திரப் புகழ் பெற்றது. அவர் தம்முடன் ஐம்பதாயிரம் அவுன்ஸ் தங்கமும் ஐநூறு அடிமைகளும் கொண்டுசென்றார். தங்கத்தைத் தான தருமங்களிலும் அன்பளிப்புக்களிலும் மக்காவில் கொடுத்தார். திரும்பிவரும்பொழுது இஸ்லாமிய மார்க்க மேதைகளை மக்காவிலிருந்து தம்முடன் அழைத்துக் கொண்டுவந்தார். அவர்கள் மாலி, திம்பக்தூ, நகரங் களில் குடியேறி, இஸ்லாமிய மார்க்கக் கல்வியறிவைப் பரப்பினார்கள். மேலும், அக்காலம்வரை அந்த நாட்டில் மண்ணால் செய்யப்பட்ட செங்கல்லுக்குப் பதிலாக காள வாயில் வைத்து எரித்த செங்கல்லால் கட்டடம்கட்ட அவர் களே அந்த நாட்டு மக்களுக்குக் கற்பித்தார்கள். அன்றியும், மாலிநகரில் பெரிய பள்ளிவாசல் கட்டப்பட்டது ஸுல்தான் மன்ஸா மூஸாவுக்குச் சிறந்த அரண்மனையொன்றும் தயாரிக் கப்பட்டது. வியாபாரத்திலும் கலாச்சாரத்திலும் திம்பக்தூ நகரமே மத்திய ஸ்தானமாக விளங்கியது. ஹி. 753 கி. பி. 1352இல் இப்னு பதூததா (Ibn Batuta) என்னும் மொரோக்கோ நாட்டு முஸ்லிம் லோகசஞ்சாரி இந்தப் பிரதேசங்களில் சுற்றுப்பிரயாணம் செய்தார். மாலி ராஜ்யம் முழுமையும் அவர் பிரயாணம் செய்து, இரண்டாண்டு களுக்குப் பிறகு மொரோக்கோ திரும்பினார். அவர் காலத்தில் மன்ஸா ஸுலைமான் என்பவர் மாலி ராஜ்யத்தில் ஆட்சி செய்தார். இப்னு பதூத்தா அந்த நாட்டு மக்களின் மார்க்கம், பொருளாதாரம், பழக்கவழக்கங்கள், கலாச்சாரம் முதலானவற்றின் நிலைமைகளை நன்கு விளக்குகின்றார்.

ஆனால், பிறகு இந்த மாலி ராஜ்யம் எட்டுத்திக்கி லிருந்தும் தாக்கப்பட்டு, இறுதியாக, கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் மறைந்துபோகும் நிலைக்கு வந்துவிட்டது.

சொங்காய் ராஜ்யம்

நைஜர்நதிப் பிரதேசத்தில் சொங்காய் பிரிவைச் சேர்ந்த நீக்ரோக்கள் வசித்தார்கள். விவசாயமே அவர்களது தொழில். கி. பி. பதினொன்றும் நூற்றாண்டில் இந்த நாட்டு மன்னர்கள் முஸ்லிமானார்கள். இந்த ராஜ்யத்திலும் மிகுதியான வியாபாரம் நடந்தது. அதாவது, வடக்கில் எகிப்து, திரிபோலி, தூனிஸ் நாடுகளுடனும், மேற்கில் கானாவுடனும் நெருங்கிய வியாபாரத் தொடர்பு இருந்தது. காவ் (Gao) என்னும் நகரே சொங்காய் ராஜ்யத்தின் புதிய தலைநகர். இது பலவிதத்திலும் சிறப்புற்று விளங்கியது. ஸுல்தான் ஸோனி அலீ (கி. பி. 1464—1492) (ஹி. 869-898) என்பவர் காலத்திலே அந்த ராஜ்யம் உச்சநிலை அடைந்தது. ஆனால், அவர் இஸ்லாமியச் சட்டதிட்டங்களையும் பழக்க வழக்கங்களையும் கௌரவிக்கவில்லை. ஆகையால், திம்பக்தூ நகரிலிருந்த இஸ்லாம் மார்க்க அறிஞர்கள் அனைவரும் அங்கிருந்து வெளியேறிவிட்டார்கள். பிறகு, அஸ்கியா முஹம்மத் (கி. பி. 1493—1529. ஹி. 899—936) என்பவர் ஸுல்தானானார். அவர் ஒரு நல்ல முஸ்லிம். அவர் காலத்தில் சொங்காய் ராஜ்யத்தில் அமைதியும் வளமும் உண்டாயிற்று. மத்திய அரசாங்கத்தையும் மாகாண அரசாங்கங்களையும் அவர் சீர்திருத்தி ஒழுங்குபெற அமைத்தார். ஸுல்தான் மன்ஸா மூஸாவைப்போன்று அவரும் சரித்திரப் புகழ்பெற்ற ஹஜ் யாத்திரை செய்தார். திம்பக்தூ நகரம் அவர் காலத்தில் மறுபடியும் இஸ்லாமிய கலாச்சாரத்தின் உறைவிடமாகத் திகழ்ந்தது. அவர் காலத்தில் பல அண்டை நாடுகள் வெல்லப்பட்டன. சொங்காய் ராஜ்யம் உச்சநிலையடைந்தது. ஆனால், பிறகு அரசுரிமைக்காகக் கலகங்கள் விளைந்தன. எனவே, அந்த பலவீனமான நிலையில் மொரோக்கோ நாட்டு ஸுல்தான் படையெடுத்து வந்து கி. பி. 1585 ஹி. 994இல் ஸஹராவின் மத்திய பாகத்தில் தகாசா என்னுமிடத்திற்கு அருகிலுள்ள உப்புச் சுரங்கங்களைக் கைப்பற்றிக்கொண்டார். பிறகு,

அல் மன்ஸுர் என்னும் மொரோக்கோ ஸுல்தான் அங்கு படையெடுக்கும் எண்ணங்கொண்டு கி. பி. 1590 ஹி. 999இல் ஒரு சேனையை அனுப்பினார். அந்தச் சேனையில் போர்வீரர்கள் துப்பாக்கிகளை உபயோகித்தார்கள். ஆகையால், நீக்ரோக்கள் இலேசில் வெல்லப்பட்டார்கள். இரண்டாம் அஸ்கியா இஸ்ஹாக் என்னும் ஸுல்தான் காலத்திலே, காவ் என்னும் அவரது தலைநகருக்கருகில் அவர் தோற்கடிக்கப்பட்டார். அதன் விளைவாக சொங்காய் ராஜ்யத்தின் முடிவு ஆரம்பமாயிற்று.

இதற்கிடையில், மொரோக்கோ ஸுல்தான்கள் மேற்கு ஆப்பிரிக்காவை வெல்லத்திட்டமிட்டார்கள். ஆனால் அதில் அவர்களுக்கு முழுமையும் வெற்றிகிடைக்கவில்லை. எனினும், திம்பக்தூ, ஜென்னி, காவ் என்னும் நகரங்களில் மொரோக்கோ கவர்னர்கள் தங்கி சுற்றுப் பிரதேசத்தில் தீர்வைவசூலித்து மொரோக்கோ ஸுல்தானுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். மேலும், மொரோக்கோ நாட்டார் நீக்ரோக்களுடன் விவாக சம்பந்தங்களும் செய்துகொண்டார்கள். பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் இந்த கவர்னர் (பாஷா, அமீர், காயித்)கள் மிகப் பலவீனராகி விட்டார்கள். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் மொரோக்கோ நாட்டு கவர்னர்கள் ஒருவாறு மறைந்துவிட்டதைப் போன்றே தோன்றுகின்றது. சொங்காய் ராஜ்யம் இவ்வாறாக மொரோக்கா நாட்டாரால் அழிக்கப்பட்டபோதிலும், அந்த வெற்றியாளர்கள் அங்கு நிரந்தரமாக மொரோக்கோ ராஜ்யத்தின் அதிகாரத்தை நிரந்தரமாக செலுத்த முடியவில்லை.

ஹவ்ஸா–போர்னூ

பர்பர்கள் சொங்காய் ராஜ்யத்தை நிறுவிக்கொண்டிருந்தபொழுது, மற்றொரு பர்பர் கிளையார், கிழக்கு நோக்கிச்சென்று சாட் ஏரியைச் சுற்றியுள்ள நாட்டை வென்றார்கள். இந்தப் பிரதேசத்தின் கிழக்குப் பகுதியில்

கி. பி. பத்தாம் நூற்றுண்டில் வதாயி என்னும் ஒரு பர்பர் ராஜ்யமும், மேற்கில் போர்னூ என்னும் மற்றொரு ராஜ்யமும் தோன்றின. கி. பி. பதினுன்காம் நூற்றுண்டில் போர்னூவிலுள்ள பர்பர்கள் முஸ்லிமாகிவிட்டார்கள்.

நைஜர் நதியின் சமவெளிக்குக் கிழக்கிலும் போர்னூவுக்கு மேற்கிலும், ஹவ்ஸா பிரதேசம் இருந்தது. இதில் ஏழு சிற்றரசுகள் இருந்தன. அவற்றில் நல்லாட்சி நடந்தது. மாலி ராஜ்யம் உச்சநிலையிலிருந்த கி.பி. பதினுன்காம் நூற்றுண்டில் இந்தச் சிற்றரசுகள் முஸ்லிமாகிவிட்டன. இதற்கிடையில், ஃபுலானீ (Fulani) என்னும் கிளையார் ஹவ்ஸா நாட்டில் குடியேறி முஸ்லிம்களாகி அந்தப் பிரதேச மக்களுடன் விவாகத்தொடர்பு கொண்டார்கள். பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதியில், உஸ்மான் என்னும் ஃபுலானீ தலைவர், ஹவ்ஸா மக்களின் அனுச்சாரங்களை எதிர்த்தார். அவர்கள் முஸ்லிம்களாக இருந்தபோதிலும், இஸ்லாமியக் கோட்பாடுகளை ஒழுங்காகப் பின்பற்றவில்லை. ஆகையால், அவர்களுக்கு விரோதமாக அவர் ஜிஹாத் — புனிதப்போர் தொடர்ந்தார். கி. பி. பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஹவ்ஸா சிற்றரசர்களை வென்றூர். பிறகு, கிழக்கே சென்று போர்னூ பிரதேசத்தைத் தாக்கி அதை வென்று சிலகாலம் அங்கும் ஆட்சிசெய்தார். மேலும், அவர் அமீருல் மூமினீன்—முஸ்லிம்களின் தலைவர் என்று தம்மை விளம்பரப்படுத்திக்கொண்டார். ஸோகோதோ நகரைத் தமக்குத் தலைநகராக்கினுர். ஆனல், பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் மாகாணங்களெல்லாம் சுவாதீனமாகிவிட்டன.

காடுகள் அடர்ந்த நாடுகள்

மேற்கு ஆப்பிரிக்காவில் காமரூன் பிரதேசத்திலிருந்து கேம்பியா வரை கடற்கரையிலிருந்து வடக்கே இருநூறு மைல் வரை அடர்ந்த காடுகள் உள்ள பிரதேசம். இதை பூமத்தியரேகைக் காடுகள் என்பார்கள். ஏராளமான மழை

பெய்து மனிதன் ஊடுருவிச் செல்லமுடியாத காடுகளும் சதுப்பு நிலங்களும் உண்டு. விஷப் பூச்சிகள் நிறைந்த பாகம்.

வடக்கிலிருந்துவந்த மொரோக்கோ நாட்டாரும் அரபியர்களும் இந்த அடர்ந்த காடுகளைக் கடந்து தெற்கே வரவில்லை. அதனால்தான் இந்தப் பிரதேச மக்கள் இஸ்லாம் மார்க்கத்தின் சிறப்பை அறிய முடியாமலிருந்தார்கள். எனினும், அவர்களும் கானு, மாலி, சொங்காய் ராஜ்யங்களைப் போன்று, அஷாந்தீ (Ashaante), தஹோமி (Dahomi) என்னும் ராஜ்யங்களை நிறுவினார்கள். இந்தப் பிரதேசத்திலிருந்த தங்கச் சுரங்கங்களின் காரணமாக வட நாட்டாருடன் வியாபாரத் தொடர்பும், அதன் விளைவாக இதரத் தொடர்புகளும் உண்டாயின.

ஐரோப்பியர்—குறிப்பாக போர்த்துக்கல் நாட்டார்—மேற்கு ஆப்பிரிக்கா கடற்கரை நாடுகளுடன் வியாபாரத் தொடர்புகொள்ள ஆரம்பித்தார்கள். பிறகு, ஸ்பெயின் நாட்டாரும் முஸ்லிம்களுடன் போர்செய்யும் நோக்கத்துடன் புறப்பட்டார்கள். கி.பி. பதினாறும், ஹி. ஒன்பதாம் நூற்றாண்டில், ஹாலந்து நாட்டு டச்சுக்காரர்கள் கினீ கடற்கரைக்கு வந்தார்கள். ஹி. 1036 — 1626-இல் பிரெஞ்சுக்காரர் ஸெனிகல் நதியின் முகத்துவாரத்தில் வியாபார ஸ்தலங்களை அமைத்துக்கொண்டார்கள். இறுதியாக, 1662-இல் ஆங்கிலேயர் கேம்பியா நதியின் முகத்துவாரத்தில் வந்து இறங்கி ஒரு கோட்டை கட்டிக்கொண்டார்கள். இவ்வாறு மேற்கு ஐரோப்பிய நாடுகளெல்லாம் மேற்கு ஆப்பிரிக்காவுடன் வியாபாரத் தொடர்புகொண்டன.

மேற்கு ஆப்பிரிக்காவிலும் மத்திய ஆப்பிரிக்காவிலும் இஸ்லாம்

ஸெனிகல் பிரதேசத்திலிருந்து சாட் ஏரி வரை உள்ள நாட்டில் பல ஸுல்தான்கள் சுவாதீனமாக ஆட்சி செய்

தார்கள். சாட் ஏரிக்குக் கிழக்கேயுள்ள பாகத்திலும், பத்தொன்பதாம் நூற்றுண்டில் பதாய் ஸுல்தான்கள் ஆட்சி செய்தார்கள். அது இப்பொழுது ஸூதான் குடியரசில் இருக்கின்றது. இந்த நாடுகளிலுள்ள மக்கள் பெரும் பாலோர் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டு நிம்மதி யான வாழ்க்கை நடத்துகிறுர்கள்.

ஐரோப்பியரும் அமெரிக்கரும் கோடிக்கணக்கான பணம் செலவு செய்து தங்களுடைய மதப்பிரச்சார மன்றங்கள் மூலமாகக் கிறிஸ்தவப் பாதிரிகளைப் பிற நாடுகளுக்கு அனுப்பி கிறிஸ்து மார்க்கத்தைப் பரப்பப் பெரு முயற்சி செய்கின்றுர்கள். ஆப்பிரிக்கா கண்டத்தில் அவர்கள் முயற்சி செய்து ஒரு நீக்ரோவை கிறிஸ்து மார்க்கத்தில் சேர்த்துக்கொண்டால், அதே சமயத்தில் அத்தகைய முயற்சியே இல்லாமல் ஒன்பது நீக்ரோக்கள் தாமாகவே இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்துவிடுகின்றுர்கள் என்று கிறிஸ்தவ மார்க்கத் தலைவர்களே ஒப்புக்கொள்ளுகிறுர்கள்.

முஸ்லிம்களில் பிரச்சாரத்திற்காக புரோகிதர்கள், உப தேசிகள் சம்பளம்கொடுத்து ஒதுக்கிவைக்கப்படவில்லை. அதற்காகப் பணமும் செலவு செய்யப்படவில்லை. ஆப்பிரிக் காவிலே ஒவ்வொரு முஸ்லிமும் செயல்முறையில் இஸ்லா மியப் பிரச்சாரகராக அமைந்துவிடுகின்றுர். கோவேறு கழுதைகளின்மீது வியாபாரப் பொருள்களை ஏற்றிக் கொண்டு ஊர் ஊராகச் செல்லுகின்றுர். தொழுகை நேரம் வந்துவிட்டால், ஒரு துணியைத் தரைமீது விரித்து மக்காவை நோக்கி நின்று நிம்மதியாக இறைவனை நினைத்துத் தொழுகின்றுர். அப்பொழுது நெற்றியைப் பூமியின்மீது வைக்கின்றுர். இரண்டு கைகளையும் தோளுக்கு நேராக உயர்த்தி, விரித்து, இறைவனிடம் பிரார்த்தனை செய்கின்றுர். இந்தப் புதுமையைப் பார்ப்பதற்காக ஆண், பெண், சிறியோர், முதியோர்—அத்தனை நீக்ரோ மக்களும் அங்கு கூடிவிடுகிறுர்கள். அந்த முஸ்லிம் தனது தொழு கையை முடித்தவுடன் அங்கு கூடி வேடிக்கை பார்ப்போர்

அவரிடம் அடுக்கடுக்கான கேள்விகளைக் கேட்கின்றார்கள். சந்தேகங்களை நீக்கித் தெளிவு பெறுகிறார்கள். அவர் இஸ்லாம் என்ன? என்பதை விளக்குகின்றார். "பொய் சொல்லலாகாது! மது குடிக்கக் கூடாது! திருடக் கூடாது! விபசாரம் செய்யலாகாது! ஆண்டவன் ஒருவனே. அவனுக்கு பெற்றோர் மனைவி மக்கள் இல்லை. அவன் தேவையற்றவன் அவனையன்றி அவனால் படைக்கப்பட்ட சூரியன், சந்திரன், நட்சத்திரம், நீர், நெருப்பு, காற்று, மண், கல், பறவை, மரம் ஆகியவற்றை நாம் வணங்கலாகாது! நாம் இவ்வுலகில் செய்யும் பாவ புண்ணியங்களுக்கு மறு உலகில் சென்று அந்த ஆண்டவனிடம் கணக்குக் கொடுக்க வேண்டும்! நற்செயல் செய்தோருக்கு சொர்க்கம் கிடைக்கும்! தீமை செய்தோருக்கு நரகம் கிடைக்கும்! ஆகையால் தினந்தோறும் ஐந்து வேளை அவனை நினைத்துத் தொழ வேண்டும்! நம்மைப்போன்ற மக்களுக்கு எல்லா வகையிலும் உதவி செய்தல் வேண்டும்!" என்றெல்லாம் சுருக்கமாக இஸ்லாம் மார்க்கத்தை விளக்குகின்றார்.

இதைக்கேட்டு அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளுகின்றார்கள். ஒரு சிறிய பள்ளிவாசல் கட்டப்படுகின்றது. அந்தப் பள்ளிவாசலில் எஜமானும் பணியாளனும், வெள்ளையனும், கருப்பனும் ஒரே வரிசையில் தோளோடு தோள் சேர்த்துநின்று தொழுகிறார்கள். எல்லோரும் ஒரே இடத்தில் சமபந்தியில் உட்கார்ந்து சாப்பிடுகிறார்கள். ஆனால், கிறிஸ்து மதத்தில் சேர்ந்த கருப்பு நிறமுள்ள நீக்ரோவுக்கு ஐரோப்பியருடன் மாதா கோவிலில் சேர்ந்து நின்று வணக்கம் செய்ய முடியாது. அவர்களுடன் உட்கார்ந்து சாப்பிட முடியாது.

இவ்வாறு பணச்செலவின்றி, பிரச்சாரக் குழுவுமின்றி அநுதாபமும் செல்வாக்குமின்றி, இஸ்லாம் மார்க்கம் ஆப்பிரிக்காவிலும் அமெரிக்காவிலும் வெகு விரைவாகப் பரவி வருகின்றது. இதுவும் இறைவனுடைய அற்புதமே!

உலகினில் பெரும் பாலைவனமான ஸஹாரா பிரதேசம் ஹி. 1ம் கி. பி. 7-ம் நூற்றாண்டில், பர்பர், திப்பு, (Tibbu) மரபினர்களால் குடியேறப்பட்டு, அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்துகொண்டார்கள். அவர்களில் ஒரு பகுதியார் இஸ்லாமிய ஆட்சியில் வந்துவிட்டார்கள். ஹி. 2ம் கி. பி. 8ம் நூற்றாண்டில் இதே நிலைமையிலிருந்தது. ஹி. 3ம், கி. பி. 9ஆம் நூற்றாண்டில் இந்தவட பகுதி இத்ரீசி, ஆட்சியிலும், அக்லபி ஸுல்தான்களின் ஆட்சியிலும் இருந்தது. ஹி. 4ம், கி. பி. 10ஆம் நூற்றாண்டில் இந்த ஆட்சி தளர்ந்து விட்டது. ஹி. 5ம் கி. பி. 11ம் நூற்றாண்டில் ஸஹாராவின் மேற்கு பாகம் முஸ்லிம் பர்பர்களாலும் முஸ்லிமல்லாத கானா நீக்ரோக்களாலும் தவாரிக் என்னும் ஓர் இனத்தாலும் ஆட்சி செய்யப்பட்டது. ஹி. 448, கி. பி. 1056-க்கு பிறகு முராபிதாகள் இந்தப் பாகத்தை வென்றார்கள். அதே காலத்தில் அரபிய நாடோடிகள் ஸஹாராவின் வடகிழக்குப் பாகத்தில் நுழைந்தார்கள்.

ஹி. 6ம், கி. பி. 12ம் நூற்றாண்டில் வட பாகம் முஸ்லிம் நாடோடிகளின் கையிலிருந்தது. தென்மேற்குப் பாகத்தை மாலி பிரதேசத்தைச் சேர்ந்த நீக்ரோக்கள் கைப்பற்றியிருந்தார்கள். ஹி. 7ம், கி. பி. 13ம் நூற்றாண்டிலும் வட பாகம் முஸ்லிம் நாடோடிகளாலும், தென்மேற்குப் பாகம் மாலி பிரதேச நீக்ரோக்களாலும், தென்கிழக்குப் பாகம் முஸ்லிமல்லாத மக்களாலும், கைப்பற்றப்பட்டிருந்தது. ஹி. 8ம், கி. பி. 14ம் நூற்றாண்டில் இதே நிலைமை தொடர்ந்தது. ஆனால், ஹி. 9-ம், கி. பி. 15ம் நூற்றாண்டிலே தென்மேற்குப் பாகம் சொங்காய் நீக்ரோக்களாலும், வடபாகம் முஸ்லிம் நாடோடிகளாலும், மீதிப்பாகம் முஸ்லிமல்லாத மக்களாலும் குடியேறப்பட்டிருந்தது. அதற்குப் பிறகு ஹி. 10, கி. பி. 16-ம் நூற்றாண்டில் ஸஹதி மரபைச் சேர்ந்த ஷரீஃப்—தலைவர்கள் ஹி. 989, கி. பி. 1581-க்கு பிறகு மேற்கு பாகத்தை வென்று, பத்தாண்டுகளுக்கு பிறகு திம்பக்தூ நகரைக் கைப்பற்றிக் கொண்டார்கள். ஹி. 11, கி. பி. 17-ம்

நூற்றுண்டில் முஸ்லிம்களுடைய செல்வாக்கு அதிகரித்தது. இஸ்லாமியப் பிரசாரம் நடந்தது ராணுவ, வியாபார ஊடுருவல்களும் நடந்தன. ஹி. 1021, கி. பி. 1612 வரை மேற்குப் பாகம் ஸஹதி ஷரீஃப்களின் ஆட்சியில் இருந்தது. ஹி. 12ம், கி. பி. 18ம் நூற்றுண்டில் பற்பல முஸ்லிம் நாடோடிக்கோத்திரங்கள் ஆதிக்கம் செய்தார்கள். மேற்குப் பாகத்தில் அந்தநாட்டு மக்கள் திம்பக்தூவைத் தலைநகராகக் கொண்டு ஹி. 1195, கி. பி. 1781 வரை ஆட்சி செய்தார்கள். ஹி. 13ம், கி. பி. 19ம் நூற்றுண்டில் முஸ்லிம் நாடோடிகளே இந்தப் பிரதேசங்களைக் கைப்பற்றியிருந்தார்கள். இந்த நூற்றுண்டில் ஐரோப்பிய நாடுகள் ஆப்பிரிக்காவின் பல பாகங்களைக் கைப்பற்ற ஆரம்பித்தன. எனவே, படிப்படியாக இந்தப் பாகங்களில் ஆங்கிலேயரும், பிரஞ்சுக்காரரும் தங்கள் ஆதிக்கத்தைப் புகுத்த ஆரம்பித்தார்கள். மேலும் இதே நூற்றுண்டில் இந்தப் பிரதேச மக்களில் பெரும்பான்மையோர் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

அதற்குப் பின்னர் ஹி. 14ம், கி. பி. 20ம் நூற்றுண்டில் ஸஹரா பிரதேசத்தை பிரான்ஸ், ஸ்பெய்ன், இங்கிலாந்து, இங்கிலாந்தின் கைப்பாவையாக இருந்த எகிப்து அரசாங்கம் ஆகியவை தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டன. ஆனால், ஸஹரா பிரதேசத்தில் 90 சதவிகிதம் பிரான்ஸ் அரசாங்கத்தின் ஆதிக்கத்தில் இருந்தது.

இங்கு ஒரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட வேண்டும். இஸ்லாம் மார்க்கம் உலகில் பரவிய உண்மையை விளக்கும் அவசியம் ஏற்படுகின்றது. இன்றைய உலகில் ஏறத்தாழ எண்பது கோடி முஸ்லிம்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அவர்கள் கிழக்கே இந்தோநேசியாவிலிருந்து மேற்கே மொரோக்கோ வரையிலும், வடக்கே ஸைபீரியாவிலிருந்து தென்கிழக்கு ஆப்பிரிக்காவிலே ஸான்ஸிபர் வரையிலும், இன்னும் பரவலாக உலகின் மற்றப் பாகங்களிலும் வாழ்கின்றார்கள்.

ஆப்பிரிக்காவில் குறிப்பாக ஸஹரா பிரதேசத்தில் இஸ்லாம் மார்க்கம் அந்தந்தப் பிரதேச மக்களால் பலவந்தம் இல்லாமல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதர பாகங்களில் முஸ்லிம் வெற்றியாளர்கள் அந்த நாடுகளின் மக்களை இஸ்லாத்தில் சேரும்படி வற்புறுத்தவில்லை எனவும் சில காலம் சென்ற பிறகு அந்த நாட்டுமக்கள் தாங்களாகவே இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள் எனவும் ஹிற்றி போன்ற மேல்நாட்டு இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். எகிப்து, ஸிரியா நாடுகளில் பல நூற்றாண்டுகள் இஸ்லாமிய ஆட்சி நடந்த பிறகு இன்றும் ஏராளமான கிறிஸ்தவர்கள் இருக்கின்றனர். துருக்கி சாம்ராஜ்ஜியத்தில் ஐரோப்பிய நாடுகளில் இஸ்லாமியப் பிரச்சாரம் நடக்கவே இல்லை. கிறிஸ்தவர்களாகவே இருந்த அந்த நாடுகளின் மக்கள் இப்பொழுது சுவாதீனம் பெற்று வாழ்கின்றார்கள். ஈரான் நாட்டிலிருந்த அக்கினி வணக்க பாரசீகர்களும் இஸ்லாத்தை தாங்களாகவே ஏற்று கொண்டார்கள். வட ஆப்பிரிக்காவில் பர்பர்களும், யூதர்களும், அதைப்போன்று ஸ்பெய்ன் நாட்டில் கிறிஸ்தவர்களும் யூதர்களும் இஸ்லாத்தில் சேரும்படி பலவந்தப்படுத்தவில்லை. அவர்கள் தாங்களாகவே இஸ்லாத்தில் சேர்ந்தார்கள். சேராதவர்களை முஸ்லிம் அரசாங்கங்கள் துன்புறுத்தவில்லை.

அதைப் போன்று மத்திய ஆசியாவில் துருக்கிஸ்தானிலும், ஆக்ஸஸ் (ஜைய்ஹூன்) நதியின் வடபாகத்திலும் இருந்த மக்கள் தாங்களாகவே இஸ்லாத்தில் சேர்ந்தார்கள். அங்கிருந்த துருக்கி இனத்தார்கள் கி. பி. 19-ம் நூற்றாண்டு வரை தங்கள் பழைய கொள்கைகளைப் பின்பற்றி அதற்குப் பிறகு தாங்களாகவே முஸ்லிமானார்கள். இந்தியாவில் மத்திய ஆசியா, ஈரான், அரபியா, நாடுகளிலிருந்து வந்த முஸ்லிம் முனிவர்—வலிமார்கள் மூலமாக இஸ்லாம் மார்க்கம் பரவியது. மத்திய ஆப்பிரிக்காவிலும் மக்கள் தாமாகவே முஸ்லிமானார்கள். கிழக்கு ஆப்பிரிக்கா

விலும், சீனுவிலும், அங்குக் குடியேறிய முஸ்லிம்கள் மூலமாக இஸ்லாம் மார்க்கம் பரவியது. மத்திய ஆப்பிரிக்கா, மேற்கு ஆப்பிரிக்கா, கிழக்கு ஆப்பிரிக்கா ஆகிய பிரதேசங்களில் ஏராளமான மக்கள் முஸ்லிமானுர்கள். தென் ஆப்பிரிக்கா வில் மலாயாவிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் கூலி ஆட்க ளாக சென்ற முஸ்லிம்களால் இஸ்லாம் பரவியது. மலாயா விலும், இந்தோனேசியாவிலும் முஸ்லிம் வியாபாரிகள் மூலமாக இஸ்லாம் பரவியது.

ஐரோப்பாவில் பல்கான் நாடுகளிலும், ஹங்கேரியிலும், துருக்கி சாம்ராஜ்யம் பரவியபொழுது அந்த நாட்டு மக்களை முஸ்லிம்களாக்க முயற்சி செய்யப்படவேயில்லை. ஆனுல் அல்பானியா, பாஸ்னியா, தப்ருஜா, வடக்கு மாஸிதோ னியா, திரேஸ் ஆகிய பாகங்களிலுள்ள மக்கள் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டார்கள்.

ருஷ்யாவில் காகஸஸ் மலைக்கு வடபாகத்தில் இங்கு மங்கும் முஸ்லிம்கள் இருக்கின்றுர்கள். ஆனுல், பொதுவாக மத்திய ஆசியாவிலுள்ள அதாவது சோவியத் அரசாங்கத்தி லுள்ள குடியரசுகளில் பெருப்பான்மையோர் முஸ்லிம்களே.

வட அமெரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும் நீக் ரோக்கள் இப்பொழுது ஏராளமாக இஸ்லாத்தில் சேருகின் றுர்கள். இது அங்குக் குடியேறிய முஸ்லிம்களால் ஏற்பட்ட பலன். இதைப்போன்றே, மேற்கு இந்தியத் தீவுகளிலும் ஜப்பானிலும் ஹவாயீ தீவுகளிலும் நடக்கின்றது.

கிழக்கு ஆப்பிரிக்கா

கிழக்கு ஆப்பிரிக்காவில் இஸ்லாமிய காலத்தில் ஹஸ்ரத் அலீயின் சந்ததியைச் சேர்ந்த ஜைதிகள் (Zaidis) கடற்கரையோரத்தில் குடியேறினுர்கள். பிறகு, மூன்று கப்பல்களில் தென்கிழக்கு பஹ்ரைன் பிரதேசித்திலிருந்து முஸ்லிம்கள் வந்து மகநக்ஸோ என்னும் நகரை நிர்மா

ணித்து அங்கிருந்த முஸ்லிம்களுக்கு அரசியல் தலைவரானர்கள். இவ்வாறு முஸ்லிம்கள் குடியேறி வியாபாரம் வளர்ந்தது. பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் இந்த முஸ்லிம்களின் உதவியால், வாஸ்கோடகாமா என்னும் கடல் தளபதி இந்தியாவுக்குக் கடல் மார்க்கமாக வருவதற்கு உதவி கிடைத்தது. பதினேழாம் நூற்றாண்டில் அரபு நாட்டின் வடகிழக்குக் கரையில் மஸ்கத் பிரதேச ஸுல்தான் ஆப்பிரிக்காவின் கிழக்குக் கரையை வென்றார். பிறகு அம்பாஸா (Ambasa) நகரிலும், ஸன்ஸிபர் (Zanzibar) நகரிலும் தமது ராஜப்பிரதிநிதியை அனுப்பி ஆட்சி செய்தார். அக்காலத்தில் அடிமை வியாபாரம் நடந்தது. எனவே, இந்த அரபியர் ஆப்பிரிக்காவிலுள்ள ஏரிகள் வரை உள்நாட்டில் பிரவேசித்துச் சென்றார்கள்.

இதற்கிடையில், ஐரோப்பியர் பதினேழாம் நூற்றாண்டில் மேற்கு ஆப்பிரிக்காவில் முஸ்லிம்களின் வியாபாரத்தை அழித்துவிட்டு 18—19-ம் நூற்றாண்டில் கிழக்கு ஆப்பிரிக்கக் கடற்கரையிலும் முஸ்லிம்களுடைய வியாபாரத்தை அழித்துத் தங்களுடைய சொந்த வியாபாரத்தை ஆரம்பித்தார்கள். இறுதியாக, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகள். கிழக்கு ஆப்பிரிக்காவைத் தங்களுக்கிடையில் பங்கிட்டுக்கொண்டன. "ஸன்ஸிபர் ஸுல்தான்" என்னும் ஒருவரைப் பெயரளவில் ஆங்கிலேயர் தங்கள் கண்காணிப்பில் வைத்துக்கொண்டார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேயரும் ஜெர்மானியரும் கிழக்குக் கடற்கரையிலும் அதைச் சேர்ந்த பிரதேசங்களிலும் ஆட்சியாளராகிவிட்டார்கள். முதலாம் உலக மகா யுத்தத்தில் (1914—1918) ஜெர்மனி தோல்வியடைந்தது. ஆகையால், அதன் ஆட்சியிலிருந்த நாடுகளை பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் எடுத்துக்கொண்டது. இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பிறகு இந்தப் பிரதேசத்திலுள்ள நாடுகள் பிரிட்டிஷாரின் பிடியிலிருந்து விடுதலை பெற்று வருகின்றன.

மேற்கு ஐரோப்பிய வல்லரசுகள் இவ்வாறு ஆப்பிரிக்காவில் நடந்து கொண்டன. 1918-ல் நடந்தருஷ்யப் புரட்சியின் விளைவாக ருஷ்யாவில் ஸோவியத் ஆட்சி ஆரம்பமாயிற்று. ஸோவியத் ஆட்சியாளர் மத்தியாசியாவிலிருந்த முஸ்லிம்களை அடக்கி அவர்கள்மீது தங்கள் அதிகாரத்தைச் செலுத்துகின்றனர்கள்.

தென்கிழக்கு ஆசியாவில் மலாயா, ஸுமாத்ரா, ஜாவா, போர்னியோ முதலிய பிரதேசங்களில் முஸ்லிம்களின் ஆட்சி நடந்துகொண்டிருந்தது. ஆனால், போர்த்துக்கல், ஹாலந்து, இங்கிலாந்து முதலிய நாடுகள் அங்கு வியாபாரத்திற்காக வந்து—இந்தியாவில் செய்ததைப் போன்று—அங்கு தங்கள் ஆட்சியை நிறுவிக்கொண்டார்கள். ஆயினும், இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பிறகு மலாயா, இந்தோனேசியா அரசாங்கங்கள் தோன்றி, சுவாதீன முஸ்லிம் ராஜ்யங்களாக இப்பொழுது இருக்கின்றன.

இனி, கிழக்கு ஆப்பிரிக்காவுக்கும், முஸ்லிம்களுக்குமிடையில் உண்டான தொடர்புகளை ஒவ்வொரு நூற்றாண்டுகளாக விமர்சனம் செய்வோம். ஹி. முதலாம் (கி. பி.) 7-ம் நூற்றாண்டில் ஸஹராவின் கிழக்குப் பாகத்திலுள்ள நூபியா பிரதேசம் எகிப்திலிருந்து ஊடுருவப்பட்டது. ஹி. 32 (கி. பி. 652)ல் இரு நாடுகளுக்குமிடையில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டு எகிப்துக்கு ஆண்டுதோறும் அது கப்பம் கட்டிவந்தது. ஹி. 2ஆம் நூற்றாண்டில் நீலநதிக்கரையிலுள்ள நூபியா மக்களும், கடற்கரையோரமாக உள்ள எதியோபியர்களும் அரபு வியாபாரிகளுடன் தொடர்பு கொண்டார்கள். ஹி. 4-ம் நூற்றாண்டில் நீல நதிப்பிரதேசமும் கடற்கரையோரங்களும் அரபியர்கள் வசமாயின. ஹி. 5-ம் நூற்றாண்டில் மடகாஸ்கருக்குத் தெற்கேயுள்ள கடற்கரைப் பிரதேசம் அரபியர்களாலும், பாரசீகர்களாலும் கைப்பற்றப்பட்டது. ஹி. 6-ம் நூற்றாண்டில் கடற்கரையோரமாக உள்ள முஸ்லிமல்லாத கோத்திரத்தார்கள் வெல்லப்பட்டு இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்தார்கள். ஸன்ஸிபர் (Zanzibar) வரையிலும்

இஸ்லாம் பரவியது. மேலும், நீல நதிப்பிரதேசத்திலுள்ள நூபியர்கள் அரபியரால் தெற்கே தள்ளப்பட்டார்கள். ஹி. 7ஆம் நூற்றாண்டில் கிழக்குக் கடற்கரைப் பிரதேசங்கள் முஸ்லிம்கள் வசமே இருந்தன. மேலும், வடக்கு நூபியா மம்லூக் ஸுல்தான்களால் வெல்லப்பட்டது. ஹி. 8ஆம் நூற்றாண்டில் முஸ்லிமல்லாத சோமாலிகள் வடகிழக்குக் கடற்கரைப் பிரதேசத்தைக் கைப்பற்றினார்கள். ஆனால், நீல நதியின் தெற்குப் பிரதேசங்களில் ஏராளமான கோத்திரங்கள் இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்துகொண்டன. ஹி. 9ம் நூற்றாண்டில் இதே சோமாலிகள் இஸ்லாத்தில் சேர்ந்துகொண்டார்கள். எனவே, கடற்கரைப்பிரதேசங்களெல்லாம் இருபதாம் அட்சரேகை வரை தெற்கில் ஸோஃபாலா வரையும் இஸ்லாமியர்களின் கையில் சென்றுவிட்டது. இந்தச் சூழ்நிலையில் திடீரென்று போர்த்துக்கல் கப்பல்களில் வாஸ்கோடகாமா என்பவர் ஹி. 904, (கி. பி. 1498)ல் அங்கு வந்து சேர்ந்தார். அங்கிருந்து அவர் முஸ்லிம்களின் உதவியால் இந்தியாவுக்குச்சென்றார்.

ஹி. 10, (கி. பி. 16ம்) நூற்றாண்டில் கிழக்குக் கடற்கரையிலிருந்த அரபியரையும், சோமாலிகளையும் போர்த்துக்கல் நாட்டார் தாக்கினார்கள். இதற்கடுத்த ஹி. 11ஆம் நூற்றாண்டில் அரபுகளும், சோமாலி முஸ்லிம்களும் கடற்கரையிலிருந்து உள்நாட்டில் குறிப்பாக அபிஸீனியாவில் நுழைந்தார்கள். அபிஸீனியா நாடு ஒரு கிறிஸ்தவ நாடு, அந்த நாட்டிலும் இஸ்லாம் பரவி இப்பொழுது ஏறத்தாழ பாதி ஜனத்தொகை முஸ்லிம்களாக இருப்பதாகக் கூறப்படுகின்றது. ஹி. 1110, கி. பி. 1698க்குப் பிறகு போர்த்துக்கல் நாட்டார், கிழக்குக் கடற்கரைப் பிரதேசங்களிலிருந்து படிப்படியாகத் துரத்தப்பட்டார்கள். ஹி. 12ம் நூற்றாண்டில் கடற்கரைப்பிரதேசமெல்லாம் ஸோஃபாலா (Sofala) வரையும் முஸ்லிம்களிடமே இருந்தது. தென்கிழக்கு அரபியாவிலுள்ள மஸ்கத் ஸுல்தானுடைய ராஜப்பிரதிநிதி இங்கு ஆட்சி செய்தார். இந்த நூற்றாண்டில் நீல நதியின் தென்

பிரதேசத்தில் அங்குள்ள மக்கள் முழுமையாக இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்துகொண்டார்கள். ஹி. 13ஆம் நூற்றுண்டில் இந்தப் பிரதேச முஸ்லிம்களை ஐரோப்பியர்கள் வென்றூர்கள். இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி ஆகிய மூன்று நாடுகளும் இதைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டன. இதற்குத் தெற்கிலுள்ள பிரதேசத்தை ஜெர்மனியும், போர்த்துகலும் பங்கிட்டுக்கொண்டன. ஸூதான் நாட்டைக் கைப்பற்றுவதில் இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும் போட்டி ஏற்பட்டுப் போர் மூண்டுவிடும் சூழ்நிலை உண்டாயிற்று. இறுதியில், ஸூதானை ஆங்கிலேயரிடம் விட்டுவிட்டு பிரான்ஸ் ஒதுங்கிக்கொண்டது. இந்த கி.பி. 19ஆம் நூற்றுண்டில்உள்நாடுகளிலுள்ள நீக்ரோக்கள் ஏராளமாக இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்தார்கள். அக்காலத்திலிருந்து இப்பிரதேசங்களில் இஸ்லாம் மார்க்கம் பரவிக்கொண்டு வருகின்றது.

ஹி. 14, (கி பி.20)ஆம் நூற்றுண்டில் இந்தப் பிரதேசத்தை ஐரோப்பிய வல்லரசுகளும் எதியோபியர்களும் ஆண்டார்கள். முதலாம் உலக மகாயுத்தத்தில் (1914–1918) ஆப்பிரிக்காவிலுள்ள ஜெர்மன் நாடுகளை இங்கிலாந்து முதலிய நேச தேச நாடுகள் கைப்பற்றிக்கொண்டன. இரண்டாம் உலகமகாயுத்தத்தில் (1938–1945) இத்தாலிநாட்டின் ஆட்சியிலிருந்த ஸோமாலி போன்ற பிரதேசத்தை 1940ல் இங்கிலாந்து கைப்பற்றிக்கொண்டது.

இனி, வட ஆப்பிரிக்காவிலுள்ள மொரொக்கோ, தூனிஸ், அல்ஜீரியா, திரிப்போலி ஆகிய நாடுகளின் வரலாற்றின் சுருக்கத்தையும், அந்த நாடுகளின் மக்கள் இன்று எவ்வாறு சுவாதீனம் பெற்று வாழ்கின்றூர்கள் என்பதையும் ஆராய்வோம்.

மொரோக்கோ வரலாறு

கி. பி. 661–750 ஹி. 41–133

உமய்யா கலீபாக்கள் காலத்தில்தான் முஸ்லிம்களுக்கு மொரோக்கோ நாட்டுடன்தொடர்பு எறபட்டது. அதற்குமுன் மொரோக்கோ, அல்ஜீரியா நாட்டுக் கடற்கரைப் பகுதிகள் கீழ ரோம ராஜ்யத்திலிருந்தன. உமய்யா, அரசாங்க ஸ்தாபகரான அமீர் முஆவியா (ஹி. 41–61 (கி. பி. 661–680) காலத்தில் அவரது தளபதிகள் வடக்கே குராஸரன், புகாரா நாடுகள் வரையிலும், கிழக்கே காபூல் வரையிலும் சென்றூர்கள். அவர் ஸிரியாவில் தயாரித்த கடற்படையானது எகிப்தியக் கடற்படையுடன் கூட்டணியாகச் சேர்ந்து, கீழரோம ராஜ்யத்தின் கடற் படையை எதிர்த்து அதைத் தோற்கடித்தது.

உக்பா பின் நாஃபீ (Ukba bin Naafee) என்னும் தளபதி வட ஆப்பிரிக்காவுக்கு ஹி 63. (கி. பி. 682)ல் அனுப்பப் பட்டார். எகிப்துக்கு மேற்கேயுள்ள பிரதேசம் இப்ரிகிய்யா எனவும், மொரோக்கோ நாடு மக்ரிப் (Maghrib) எனவும் முஸ்லிம்களால் அழைக்கப்பட்டது. உக்பா ஹி. 50 (கி. பி. 670இல் முதலில் தூனிஸ்வரை சென்று அங்கு கைரவான் என்னும் நகரை நிர்மாணித்தார். அதில் பெரிய பள்ளிவாசல் கட்டினூர். பிறகு, அவர் மேற்கு நோக்கி, அத்லான்திக் மகாசமுத்திரம் வரை சென்று, அதில் தமது குதிரையைச் செலுத்தி நின்று கொண்டு, அதற்கும் மேற்கே நிலப்பாகம் இல்லாததைக் கண்டு, " இறைவனே ! இனி நான் முன் னேறிச் சென்று உன் திருப்பெயரை—ஏக தெய்வக் கொள் கையை —உலகில் பரப்புவதற்கு என்னுல் இயலாதே என்று மனம் வருந்துகிறேன். ஆகையால், திரும்பிச் செல்லுகின்றேன்" என்றூர். உமய்யா கவர்னர்களில் ஒருவ ரான மூஸா பின் நுஸைர் என்பவர் காலத்திலே வாலிபத் தளபதி தாரிக் பின் ஜியாத் ஸ்பெய்ன் நாட்டை வென்றூர்.

உமய்யாக்களுக்குப் பிறகு, பக்தாத் நகரில் ஆட்சிசெய்த அப்பாஸி கலீபாக்கள் காலத்தில் ஸ்பெய்ன் நாட்டில் உமய்யா மரபினரின் ஆட்சி நடந்தது. அவர்களில் புகழ் பெற்ற மூன்ரும் அப்துர் ரஹ்மான் என்பவர் மொரோக்கோ நாட்டைத் தமது ஆதிக்கத்தில் கொண்டுவந்தார். அக் காலத்தில் தூனிஸியாவிலே பாத்திமீ (Fatimi) என்னும் புதியதொரு அரசாங்கம் இருந்தது. இருநூறு ஆண்டுகள் (ஹி. 172-364. கி. பி. 788-974) ஆட்சி செய்த இத்ரீஸி அரசாங்கத்தின் வீழ்ச்சிக்குப்பிறகு, பாத்திமீ அரசாங்கத் துடன் போரிட்டு ஸ்பெய்ன் ஸுல்தான்கள் மொரோக்கோ வில் ஆட்சி செய்தார்கள்.

சில காலஞ்சென்று தூனிஸியாவிலிருந்த பாத்திமீ ஸுல் தான்கள் எகிப்து நாட்டை வென்று அங்கு சென்று விட்டார்கள். தூனிஸியாவிலிருந்த அவர்களுடைய கவர் னர்கள் சுவாதீனமாகி ஜீரி (Zeeree) அரசாங்கத்தை நிறுவி னர்கள். அச்சமயம் கி. பி. பதினொன்ரும் நூற்ருண்டில் மராபிதா (Murabita-Almoravids) என்னும் இஸ்லாமிய ராணுவச் சகோதரத்துவ இயக்கம் மேற்கு ஆப்பிரிக்காவில் ஸெனிகல் நதியோரத்திலிருந்த ஒரு தீவிலே ரிபாத் (Ribat) என்னும் முஸ்லிம் பக்தர்களின் ஆசிரமத்திலே ஒரு பக்தரால் ஆரம்பமாயிற்று. அவர்கள் இஸ்லாமியப் பிரச்சாரஞ் செய்து மக்களை இஸ்லாம் மார்க்கத்தில் சேர்த்தார்கள். சில ஆண்டு களில் அவர்கள் வடமேற்கு ஆப்பிரிக்காவுக்கும் ஸ்பெய் னுக்கும் அதிபர்களாஞர்கள். அப்துல்லாஹ் பின் யாஸீன் என்பவர் அந்த இயக்கத்தின் தலைவர். மராபிதாக்கள் ஸெனிகல் நதிப்பிரதேசத்திலிருந்து மொரோக்கோ, அல் ஜீரியா நாடுகளை (ஹி. 448—477 கி. பி. 1056—1084) வென்று விட்டார்கள். அவர்களில் யூஸுஃப் பின் தாஷ்ஃபீன் (Yusuf bin Tashfeen) ஹி. 453—500 கி. பி. 1061 - 1106) என்னும் ஸுல்தான் வன்மைபெற்றிருந்தார். அக் காலத்தில் ஸ்பெய்ன் நாட்டின் வடபாகத்திலுள்ள கிறிஸ்த

வர்கள் அங்குள்ள முஸ்லிம் சிற்றரசுகளை எதிர்த்தார்கள். அத்தகைய சிற்றரசுகளின் அழைப்பை ஏற்று யூஸுஃப்பின் தாஷ்ஃபீன் சென்று ஆறும் அல்பான்ஸோ என்னும் கிறிஸ் தவ மன்னரை ஜல்லகா (Jallaka) என்னுமிடத்தில் ஹி. 479 கி. பி. — 1086இல் தோற்கடித்துத் திரும்பினார். மறுபடியும் அழைப்பு வந்தது. இறுதியாக, ஸ்பெய்னிலிருந்த முஸ்லிம் ராஜ்யத்தை அவர் தமது ஆப்பிரிக்க ராஜ்யத்தில் இணைத்துக்கொண்டார். ஹி. 454. கி. பி. 1062இல் அவர் மராக்கஷ் என்னும் நகரை நிர்மாணித்து அதைத் தமது தலை நகரமாக்கினார். அந்த நகரின் பெயரே அந்த நாட்டுக்கும் வழங்கலாயிற்று. மராக்கஷ் என்பதை ஐரோப்பியர் மொரோக்கா என்று அழைத்தார்கள். ஸ்பெய்னிலும் மொரோக்கோவிலும் அவர் காலத்தில் மக்கள் நிம்மதியாக இன்ப வாழ்க்கை நடத்தினார்கள். யூஸுப் இறந்த பிறகு அவரது மைந்தர் அலீ என்பவர் ஸுல்தான் ஆனார். அவருக்குப் பிறகு மராபிதா அரசாங்கம் வீழ்ச்சியடைந்தது.

மராபிதாக்கள் மரபு

தாஷ்ஃபீன்
|
1. யூஸுஃ (1090-1106)
|
2. அலீ (1106—43)
|
3. தாஷ்ஃபீன் (1143—6)   5. இஸ்ஹாக் (1146-7)
|
4. இப்ராஹீம் (1146)

முவஹ்ஹிதீன்

(ஹி. 525 — 668. கி. பி. 1130 — 1269)

பிறகு, அந்த நாடு முவஹ்ஹிதீன்களால் ஆட்சி செய்யப்பட்டது. முவஹ்ஹிதீன் இயக்கம் முஹம்மத் பின் தூமார்த்

என்னும் மதப்பிரச்சாரத் தலைவரால் தோற்றுவிக்கப்பட்டது. மராபிதாவைப் போன்று முவஹ்ஹிதீன் இயக்கமும் பார்பர்களின் இயக்கமே. இறைவன் ஒருவன் என்னும் இஸ்லாமிய அடிப்படைக் கோட்பாட்டில் இந்த இயக்கம் பிறந்தது. இவர்கள் மொரோக்கோவையும் ஸ்பெய்னையும் வென்றார்கள். கிழக்கில் எகிப்திய எல்லை வரை சென்றார்கள். ஆனால், அவர்கள் பெரும்பாலும் ஸ்பெய்ன் நாட்டுக் கிறிஸ்தவர்களுடன் போர்புரிந்து கொண்டிருந்தார்கள். ஹி. 671 கி. பி. 1212இல் கிறிஸ்தவ மன்னர்களின் கூட்டணி முவஹ்ஹிதீன்களைத் தோற்கடித்து ஸ்பெய்னிலிருந்து அவர்களை வெளியேற்றிவிட்டது.

முஹம்மத் பின் தூமார்த் இறந்த பிறகு அப்துல் மூமின் (ஹி. 525—558. கி. பி. 1130—1163) ஆட்சி செய்தார். அவர் ஹி. 540. கி. பி. 1145இல் திலிம் ஸான் என்னுமிடத்தில் மராபிதாக்களின் சேனையைத் தோற்கடித்து, மராக்கஷ் நகரை முற்றுகையிட்டு, முராபிதாக்களின் சக்தியை அழித்துவிட்டார். பிறகு, (அந்தலுஸ்) ஸ்பெய்ன் நாட்டை வென்றார். மராக்கஷைத் தமது தலைநகராக்கினார். அதற்குப் பிறகு ஹி. 547. கி. பி. 1152இல் அல்ஜீரியாவையும், கி. பி. 1158இல் தூனிஸையும், 1160இல் திரிப்போலியையும் வென்றார். அத்லான்திக் மகாசமுத்திரத்திலிருந்து எகிப்து எல்லை வரையும் அந்தலுஸ் நாடும் சேர்ந்து ஒரே குடையின் கீழ் முதலாவதாக இஸ்லாமிய காலத்தில் ஆட்சி நடந்தது. மராபிதாக்கள் பக்தாதிலிருந்த அப்பாஸி கலீபாக்களின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டிருந்தார்கள். ஆனால், முவஹ்ஹிதீன்கள் அவ்வாறு செய்யவில்லை. எனினும் ஸ்பெய்னில் முஸ்லிம் ஆதிக்கத்தை ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு வரை அழியவிடாமல் பாதுகாத்த பெருமை இவர்களுக்கே உரியது. அப்துல் மூமின் பெரிய ராணுவ வீரர். அவரது பெயரைக் கேட்டவுடன் அக்காலத்தில் தென் மேற்கு ஐரோப்பாவிலிருந்த மக்கள் நடுக்கங் கொள்வார்கள்.

அதற்குப் பின்னர், அந்த மரபில் அபூ யூஸுஃப் யாகூப் அல் மன்ஸூர் (ஹி. 580–596. கி. பி. 1184–1199) என்பவர் சிறந்தவராகப் புகழ்பெற்றார். அக்காலத்தில் ஸுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபீ என்பவர் தென்மேற்கு ஆசியா முஸ்லிம்களை ஐரோப்பாவிலிருந்து அழிக்க வந்த ஐரோப்பிய சிலுவைப் போர் வீரர்களைத் தடுப்பதற்காக அவரிடம் உதவி கேட்டார். அல் மன்ஸூர் உடனே நூற்றெண்பது கப்பல்களை உதவிக்கு அனுப்பினார். ஸ்பெய்னில் அவருடைய தலைநகரான ஸெவில் என்னும் நகரில் பெரிய பள்ளிவாசலும் மினாராவும் கட்டினார். மராகஷ் நகரில் அவர் நிர்மாணித்த மருத்துவ நிலையம் அக்கால உலகில் தனிப் புகழ் பெற்றிருந்தது. ஏனென்றால், அதன் பராமரிப்பும் அதில் அலுவல் பார்த்த தலைசிறந்த மருத்துவர்களும், கவனமான சிகிச்சை முறையும் அக்காலத்தில் தனிச்சிறப்பிற்குரியது. ஆனால், அவருடைய மைந்தர் முஹம்மத் அந் நாஸிர் காலத்தில் ஹி. 609. கி. பி. 1212இல் கிறிஸ்தவ மன்னர்களின் கூட்டுச் சேனைகள் அவரைத் தோற்கடித்து விட்டன. எனவே, அவர் மொரோக்கோ சென்று, இரண்டு ஆண்டுகளில் காலஞ்சென்றார். பிறகு, ஐம்பது ஆண்டுகள்வரை மொரோக்கோவில் முவஹ்ஹிதீன்களின் ஆட்சி ஒருவாறு நடந்துகொண்டே இருந்தது. இறுதியில், பர்பர்களின் சிற்றரசுகள் ஒன்றுசேர்ந்து அவர்களைத் தோற்கடித்து விட்டன. ஹி. 626–941. கி. பி. 1228 முதல் 1534 வரை ஹஃப்ஷீதிகள் (Hafsheedis) தூனிஸில் ஓர் அரசாங்கத்தை நிறுவினார்கள். 1235இல் அல்ஜிரியாவில் ஜியானிகள் (Ziyanis) தங்கள் ஆட்சியை ஆரம்பித்து, 1339 வரை ஆண்டார்கள். மொரோக்கோவில் ஹி. 592. கி. பி. 1195இல் மரீனீ மரபினர் தோன்றி ஹி. 674 கி. பி. 1275இல் முவஹ்ஹிதீன் ராஜ்யத்தை அழித்துவிட்டார்கள். மராகஷ் நகரே அவர்களுடைய தலைநகர். கி. பி. 1465 வரை அவர்களது ஆட்சி நடந்தது.

முவஹ்ஹிதீன் ஸுல்தான்கள் காலத்திலும், மரீனி ஸுல்தான்கள் காலத்திலும் கிறிஸ்தவ மதப் பிரச்சாரத் தளங்கள் அமைக்க பிரான்ஸிஸ்கன், டாமினிகன் (Franciscan & Dominican) என்னும் இரண்டு கிறிஸ்தவப் பிரச்சாரக் குழுக்கள் அனுமதிக்கப்பட்டன.

ஹி. 9, கி. பி. 15ம் நூற்ருண்டில் போர்த்துக்கல், ஸ்பெய்ன் நாடுகள் வட ஆப்பிரிக்காவிலுள்ள முஸ்லிம் நாடுகளின் கடற்கரையைத் தாக்கி அதைக் கைப்பற்ற ஆரம்பித்தன. மொரொக்கோவின் வடக்கிலிருந்த மத்தியதரைக்கடல் கரையோரமாக இருந்த பட்டணங்களை இந்த இரு நாடுகளும் கைப்பற்றி ஒன்றரை நூற்ருண்டுவரை ஆக்ரமித்துக் கொண்டிருந்தன. ஆனால், உள்நாட்டில் வத்தாசிகள் ஹி. 916 கி. பி. 1610 வரை மொரோகோவில் ஆட்சி செய்தார்கள். பிறகு, ஷரீப் களின் – குறிப்பாக ஸஅதி ஷரீப்களின்-ஆட்சி நடந்தது. இவர்கள் மராகஷ் நகரில் ஹி. 1069 கி. பி. 1658 வரை ஆட்சி செய்தார்கள். அதற்குப் பிறகு ஆட்சி செய்த ஹலாவி ஷரீப்கள் அங்கிருந்து போர்த்துக்கல் நாட்டாரைத் துரத்திவிட்டார்கள். இவர்கள் இரண்டு நூற்ருண்டுவரை ஆட்சி செய்து, இறுதியாக, ஹி. 1260, கி.பி. 1846ல் பிரான்ஸ் அரசாங்கத்தாரால் தாக்கப்பட்டார்கள். ஸியூதா என்னும் துறைமுகப் பட்டினத்தை ஸ்பெய்ன் பிடித்துக்கொண்டது. இந்தச் சூழ்நிலையில், ரிஃப் (Riff) பகுதியிலிருந்த முஸ்லிம்கள் சுவாதீனப் புரட்சி செய்ய ஆரம்பித்தார்கள்.

பத்தொன்பதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் மொரோக்கோ நாடு துருக்கி சாம்ராஜ்யத்தில் இருந்தது. ஆனல், அங்கிருந்த கவர்னர் ஒருவாறு சுவாதீனமுள்ளவராகவே இருந்தார். நாட்டு நிர்வாகம் பலவீனமாக இருந்தது. அங்கு சமுதாயக் கட்டுப்பாடு, அரசியல் உணர்ச்சி, ஜனநாயகக் கொள்கை, பழங்கால இஸ்லாமியச் சிறப்பின் நினைவு இவையெல்லாம் காணப்படவில்லை. ஐரோப்பிய வல்லரசுகள் கழுகுகளைப் போன்று அந்த நாட்டையும் இதர நாடுகளையும் கைப்பற்றுவதற்காக வட்டமிட்டுக்கொண்டிருந்தன.

ஹி. 1312. கி. பி. 1894இல் அப்துல் அஜீஸ் என்னும் பதின்மூன்று வயதுப்பாலகர் மொரோக்கோவில் ஸுல்தான் ஆனார். அரசியல் நிர்வாகிகளுக்கிடையில் ஒற்றுமையில்லே. ஆகையால், ஐரோப்பிய வல்லரசுகள் அந்த நாட்டை அபகரிக்க முயன்றனர். 1900 இல் மொரோக்கோவின் தென்பாகத்தை பிரான்ஸ் அபகரித்துக்கொண்டது. 1904இல் இங்கிலாந்தும் பிரான்ஸும் ஓர் உடன்படிக்கை செய்து பிரான்ஸுக்கு மொரோக்கோவைக் கைப்பற்ற முழு உரிமை கிடைத்துவிட்டது. மேலும், மொரோக்கோவின் வடக்குக் கடற்கரையோரத்தை ஸ்பெய்ன் அரசாங்கத்தின் செல்வாக்குப் பிரதேசமாக (Sphere of Influence) பிரான்ஸ் ஒப்புக்கொண்டது. அதாவது, அதிகாரம் முழுமையும் பிரான்ஸுக்குச் சென்றுவிட்டது. ஸுல்தான் என்பவர் பிரான்ஸின் கைப்பாவையாக இருந்தார்.

1905இல் ஜெர்மன் சக்ரவர்த்தி இரண்டாம் வில்லியம் தலைமையில் ஜெர்மனி முன்னேறியது. ஆப்பிரிக்கா கண்டத்தை இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெய்ன் போர்த்துகல், பெல்ஜியம், முதலான நாடுகளெல்லாம் பங்கு போட்டுக்கொள்வதைக் கண்டு, அவர் திடீரென்று வந்து மொரோக்கோ ஸுல்தானை தஞ்சியர் (தஞ்சா) நகரில் சந்தித்தார். மேலும், "சிறுநாடுகள் சுவாதீனமாக இருக்கவேண்டுமெனவும், வெளிநாடுகளில் ஐரோப்பிய அரசுகளுக்குச் சமமான பொருளாதார வாய்ப்புக்கள் இருக்க வேண்டுமெனவும் பிரகடனம் செய்தார். அன்று முதல் ஐரோப்பிய காலனி நாடுகளை—குறிப்பாக இங்கிலாந்து பிரான்ஸு நாடுகளை—ஜெர்மனி பகைக்க ஆரம்பித்தது.

ரிஃப் எழுச்சி (Riff Rising)

ஆனால் மொரோக்கோ மக்கள் பிரெஞ்சுத் தலையீட்டை வெறுத்துக் கொண்டிருந்தார்கள். மொரோக்கோவில் ரிஃப் பிரதேச மக்கள் ஸ்பெய்ன் அரசாங்கத்தின் ஆதிக்

கத்திற்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்தார்கள். பர்பர்கள், பாஸ் (Fez) நகரைத் தாக்கினர்கள். இதற்குள் 1911இல் திரிப்போலியில் இத்தாலி காரணமொன்றுமின்றிப் படையெடுத்தது. திரிப்போலி துருக்கிய சாம்ராஜ்யத்திலிருந்தது. எனவே, துருக்கிக்கும் இத்தாலிக்கும் நிலப்போர், கடல்போர் மூண்டது. அந்தச் சூழ்நிலையை பிரான்ஸ் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டது. ஆப்பிரிக்காவில் காங்கோ பகுதியில் தனக்கிருந்த பிரதேசத்தின் ஒரு பாகத்தை பிரான்ஸ், ஜெர்மனிக்குக் கொடுத்துவிட்டு, மொரோக்கோ நாட்டில் தனக்கு முழு அதிகாரம் இருப்பதாக ஜெர்மனியோடு உடன்படிக்கை செய்துகொண்டது. ஹி. 1331. கி. பி. 1912 இறுதியில் செங்கடலிலிருந்து அத்லான்திக் சமுத்திரம் வரை எல்லா முஸ்லிம் நாடுகளும் சுவாதீனத்தை இழந்துவிட்டன. இவ்வாறு இஸ்லாம் மார்க்கம் இவ்வுலகினில் தோன்றி ஒன்று தெய்வம் ஒன்று குலம் என்னும் பேருண்மைகளை உபதேசித்து முஸ்லிம் சகோதரத்துவத்தை உண்டாக்கிப், பதின்மூன்று நூற்றுண்டுகள்வரை பாதுகாத்த பெரும்பலன் இப்பொழுது மறைந்துவிட்டது.

முதலாம் உலக மகா யுத்தத்திற்குப் பிறகு, ஸ்பெய்ன் நாட்டில் ரிஃப் மக்களின் போராட்டம் அப்துல் கரீம் என்னும் தேசீயத் தலைவரால் ஆரம்பிக்கப்பட்டது. அவர் பிரான்ஸ், ஸ்பெய்ன் இவ்விரு நாடுகளின் சேனைகளைத் தோற்கடித்தார். இறுதியில், இந்த இரண்டு நாடுகளும் சேர்ந்து ஒன்றரை லட்சம் சேனையொன்றைத் தயாரித்து அவரை எதிர்த்தன. ஐரோப்பியப் பீரங்கிகளும் விமானக் குண்டுகளும் நாசவேலை செய்தன. கிணறுகள் (நீர் நிலையங்கள்) அழிக்கப்பட்டன. வயல்கள் அழிக்கப்பட்டன. வீடுகளிலும் குகைகளிலும் குண்டுமாரி பெய்தது. இறுதியில், 1926 மே மாதம் அப்துல் கரீம் சரணடைந்து மதகாஸ்கர் (Madagascar) தீவுக்கு அனுப்பப்பட்டார்.

பால்ய மொரோக்கா இயக்கம்.

ஹி. 1353 கி. பி. 1934

ஐரோப்பாவில் கல்விகற்றுத் திரும்பிய மொரோக்கோ வாலிபர்கள், பால்யத் துருக்கி இயக்கத்தைப்போன்று ஓர் இயக்கத்தை ஆரம்பித்து, அரசியல் சீர்திருத்தத்திட்ட மொன்றைத் தயாரித்தார்கள். மொரோக்கோ தேசீய இயக்கத்தில் இது ஒரு நிர்மாணத் திட்டமாக இருந்தது. அந்த நாட்டு மக்கள் ஸ்பெய்ன் புரட்சியில் தளபதி பிரான் கோவுக்கு (General-Franco) உதவி செய்தார்கள். அவரும் மொரோக்கோவுக்கு சீர்திருத்தம் வழங்குவதாக வாக்களித் தார். ஆனால், வெற்றி பெற்ற பிறகு அவர் அவ்வாறு நடக்கவில்லை. அதற்குப் பிரதியாக மொரோக்கோ மக்க ளுக்குத் துன்பமே கிடைத்தது.

இரண்டாம் உலக மகா யுத்தத்திலே ரோமல் என்னும் ஜெர்மன் தளபதி வட ஆப்பிரிக்கா முழுமையும் வென்று விட்டார். ஆனால், பிறகு அவர் ஹி. 1362-1943-இல் தோற் கடிக்கப்பட்டு வட ஆப்பிரிக்க நாடுகள் ஸ்பெய்னுக்கும் பிரான்ஸுக்கும் திரும்பக் கொடுக்கப்பட்டன. ஆனால், அந்த நாடுகளின் முஸ்லிம்கள் பூரண சுவாதீனம் விரும்பினார்கள். ஹி. 1373. கி. பி. 1953இல் நாடுகடத்தப்பட் டிருந்த ஸுல்தான் முஹம்மத் பின் யூஸுப் என்பவரை பிரெஞ்சு அரசாங்கம் 1955ல் திரும்பி அழைத்தது. ஹி. 1376 கி. பி. 1956இல் மொரோக்கோ சுவாதீன நாடாகிவிட்டது.

தூனிஸ் வரலாறு

தூனிஸ் நாடு ஹி. 50 கி. பி. 670 வரை கீழ ரோமராஜ் யத்திலிருந்தது. பிறகு, மூஸா பின் நுஸைர் என்பவர் மொரொக்கோ, அல்ஜீரியா, தூனிஸ் முதலான வட ஆப்பிரிக்க நாடுகளுக்கு ராஜப் பிரதி நிதியாக இருந்தார். உள்நாட்டில் பர்பர் தலைவர்கள் ஆட்சி செய்து

கொண்டிருந்தார்கள். அவர்கள் சில காலத்தில் முஸ்லிம்களிடமிருந்து அந்தப் பாகத்தை வென்றுவிட்டார்கள். இஸ்லாமிய வரலாற்றுக் காலத்திலே அப்துல்லாஹ் பின் ஸஅத் எனப்படும் எகிப்து கவர்னரால் மூன்றும் கலீபா ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) காலத்தில் வெல்லப்பட்டது.

உமய்யா மரபினரின் முதலாம் கலீபாவான அமீர் முஆவியா (ரலி) காலத்தில் உக்பா பின் நா∴பீ (Ukba bin Nafi) என்னும் தளபதியை இப்ரிகியாவை வெல்லும்படி அவர் அனுப்பினர். அந்தத் தளபதி ஹி. 50. கி பி. 670ல் தூனிஸ் வரையும் வென்று, அங்கு வடக்குக் கடற்கரை யோரத்தில் கய்ரவான் என்னும் நகரை நிர்மாணித்து, அதில் பெரிய அழகான பள்ளிவாசல் கட்டினர். பிறகு, மூஸா பின் நுஸைர் என்பவர் மொராக்கோ அல்ஜிரியா, தூனிஸ் முதலான வட ஆப்பிரிக்க நாடுகளுக்கு ராஜப் பிரதிநிதியாக இருந்தார். உள் நாட்டில் பர்பர் தலைவர்கள் ஆட்சிசெய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் சில காலத்தில் முஸ்லிம்களிடமிருந்து அந்தப் பாகத்தை வென்றுவிட்டார்கள்.

பிறகு, மறுபடியும் ஹஸ்ஸான் பின் நவ்மான் என்பவர் (693—698) இதை வென்று உமய்யா அரசாங்கத்தில் சேர்த்துவிட்டார். கி. பி. 909 வரை அக்லபிகள் கய்ரவானில் ஆண்டார்கள். 972 வரை பாத்திமீகள் ஆண்டார்கள். பிறகு, ஜீரி (Zeeri) மரபினர் பாத்திமீகளின் பிரதிநிதிகளாக ஆட்சிநடத்தினர்கள்.

ஸ்பெய்ன் நாட்டில் ஆட்சிசெய்த மூன்றும் அப்துர் ரஹ்மானுடைய புத்திரர் இரண்டாம் ஹகம் (கி. பி. 961–976. ஹி. 351–366) காலத்தில் தூனிஸில் ஆட்சி செய்த பாத்திமி அரசாங்கத்தாருடன் ஹி. 363 கி. பி. 973ல் போர்செய்தார்.

வட ஆப்பிரிக்காவில் முவஹ்ஹிதீன் (ஹி. 525-668). கி. பி. 1130-1269) அரசாங்கம்நடந்தபொழுது, அவர்கள்எகிப்திலிருந்து மொரோக்கோ வரையிலும் ஒரு குடையின்கீழ்

ஆட்சிசெய்தார்கள். அப்துல் மூமின் (ஹி. 525–559 ஹி. 1130–1163) என்னும் ஸுல்தான் ஹி. 553. கி. பி. 1158இல் தூனிஸியாவை வென்றார்.

ஆனால், முவஹ்ஹித் அரசாங்கம் பலவீனமாகிய பொழுது, ஹஃப்ஷீதீ (Hafsheedi) என்னும் குடும்பத்தார் தூனிஸில் சுவாதீன இயக்கம் செய்து ஓர் அரசாங்கத்தை நிறுவினார்கள். (கி பி. 1228–1534 ஹி. 626–941) அக்காலத்தில் சிலுவை யுத்தங்கள் ஆரம்பித்தன. ஹி. 628 கி. பி. 1230 வரை முவஹ்ஹித் அரசாங்கம் நடந்தது.

கி. பி. 1270இல் எட்டாம் சிலுவை யுத்தம் நடந்த பொழுது ஒன்பதாம் லூயி என்னும் பிரஞ்சு மன்னர் வந்தார். அவருடன் முதலாம் எட்வர்ட் என்னும் இங்கிலாந்து அரசரும் தூனிஸிலுள்ள கார்தேஜ் நகருக்கு வந்து இறங்கி முஸ்லிம்களைத் தோற்கடிக்க விரும்பினார். ஆனால், சிலநாட்களில் லூயி வியாதியால் பீடிக்கப்பட்டு இறந்து போனார். எனவே, வந்தவர்களெல்லாம் தூனிஸிலிருந்து திரும்பிவிட்டார்கள். அக்காலத்தில் வட ஆப்பிரிக்காவில் மக்ரிப் பிரதேசத்தில் முவஹ்ஹிதீன் அரசாங்கம் முடிவடைந்து விட்டது. மொரோக்கோவிலும், அல்ஜீரியாவிலும், தூனிஸிலும், மூன்று சுவாதீனச் சிற்றரசுகளும் தங்களுக்கிடையில் போரிட்டுக்கொண்டிருந்தார்கள்.

அக்காலத்தில் ஹி. 667. கி. பி. 1258இல் முஸ்லிமல்லாதவனும் தாதாரிகளின் தலைவனுமான ஹயாகுகான் பெரும் படையுடன் வந்து இஸ்லாமிய நாடுகளை வென்று, அப்பாஸி கலீபாக்களின் தலைநகரமும், இஸ்லாமியக் கலைகளின் மத்தியஸ்தானமுமாக இருந்த பக்தாத் நகரை அழித்து இஸ்லாமையே அழித்துவிட்டதாக மார்புதட்டிக் கொக்கரித்தான்.

1500இல் தூனிஸில் ஹஃப்ஷீதி குடும்பத்தார் மூன்று நூற்றாண்டுகளாக ஹி.1534வரை ஆட்சிசெய்துகொண்டிருந்

தார்கள். ஆனல், இப்பாகத்தில் ஜியானிகள், துருக்கியர், ஸ்பானியர் ஆகியோரும் ஆதிக்கத்திற்காகத் தங்களுக்குள் போரிட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஹி. 10-ம், கி. பி. 16-ம் நூற்ருண்டில் ஹஃப்ஷிதிகள் துருக்கியர், ஸ்பானியர், இம்மூவருக்கிடையில் இங்கு போராட்டம் நடந்தது. இறுதியாக, ஹி. 982, கி. பி. 1574க்குப் பிறகு இது துருக்கி சாம்ராஜ்யத்திற்குக் கப்பம் கட்டும் நாடாக ஏறத்தாழ இரண்டு நூற்ருண்டுகளாக இருந்தது.

கைருத்தீன் பர்பரோஸா என்னும் கடல் தளபதி தூனிஸ் ஸுல்தானிடம் அலுவல் பார்த்து வந்தார். பிறகு, துருக்கி ஸுல்தான் ஸுலைமான் அஃலம் ஹி 927 974. கி. பி. 1520-1566) காலத்தில் அவர் துருக்கிக்கடற்படையின் தலைவராக நியமிக்கப்பட்டார். அக்காலத்திலே மத்தியதரைக்கடலோரமாக உள்ள நாடுகளின் மக்கள் அவரது பெயரைக் கேட்டு நடுக்கங் கொள்வார்கள். ஹி. 941 (கி. பி. 1534)இல் இந்தத் தளபதி தூனிஸ் நாட்டை வென்று, அதைத் துருக்கி சாம்ராஜ்யத்தில் சேர்த்துவிட்டார். இதைத் தொடர்ந்து வடஆப்பிரிக்காவின் ஏனைய பாகங்கள் துருக்கியரால் வெல்லப்பட்டன.

ஹி. 981. கி பி. 1573இல் ஆஸ்திரியாவைச் சேர்ந்த டான் ஜான் என்னும் கடற்படைத் தலைவர் தூனிஸ் நாட்டைக் கைப்பற்றினர். ஆனல் 1574இல் துருக்கியர் அதை மறுபடியும் கைப்பற்றிக்கொண்டார்கள். இறுதியாக, 1714இல் துருக்கியின் கவர்னராக தூனிஸ் நாட்டிலிருந்த அஹ்மத் பே என்பவர் அங்கு சுவாதினப் பிரகடனம் செய்து அவருடைய கரமானி குடும்பம் ஹி. 1251. கி. பி. 1835 வரை ஆட்சி செய்தது கி.பி. 1835இல் தூனிஸை மறுபடியும் துருக்கி கைப்பற்றிக் கொண்டது

தூனிஸ் நாட்டு அதிபர் பே (Bey) என்று அழைக்கப்பட்டார். எகிப்திலும், ஈரானிலும், மொரோக்கோவிலும் நடந்ததைப்போன்று இவரும் தமது நாட்டின் பொருளாதார

நிலையை உயர்த்துவதற்காக ஐரோப்பிய நாடுகளில் ஏராள மாகக் கடன் வாங்கினர். அதன் விளைவாகப் பெரிய கடனாளி யாகிவிட்டார். எனவே, 1869இல் இந்த நாட்டைசர்வதேசப் பொருளாதார மேற்பார்வையின்கீழ் ஐரோப்பியர் கொண்டுவந்துவிட்டார்கள். 1878இல் பர்லின் காங்கிரஸ் உடன்படிக்கைப் பிரகாரம் இங்கிலாந்து மத்தியதரைக் கடலிலுள்ள சைப்ரஸ்(கிப்ரஸ்) தீவை தானே எடுத்துக் கொண்டு, தூனிஸை பிரான்ஸ் எடுத்துக்கொள்ள உடன் பட்டது. எனினும், இத்தாலியும் இதில் பங்குபெற விரும் பியது. 1881இல் தூனிஸ் நாடு பிரெஞ்சுப் பாதுகாவலின் கீழுள்ள நாடு என்று பிரகடனப்படுத்தப்பட்டது. துருக் கியும் இங்கிலாந்தும் இத்தாலியும் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தபோதிலும், அவைகளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. பிறகு, தெற்கு தூனிஸையும் பிரான்ஸ் வென்றுவிட்டது. இவ்வாறு தூனிஸியா முழு மையும் பிரெஞ்சு ஆதிக்கத்தில் வந்துவிட்டது.

வட ஆப்பிரிக்க முஸ்லிம்கள் ஐரோப்பிய ஆதிக்கத் திற்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்துகொண்டே இருந்தார் கள். இதற்கிடையில், இரண்டாம் உலக மகாயுத்தம் ஆரம்பித்தது. அதில் தூனிஸ் நாடு ஜெர்மானியரால் வெல்லப்பட்டுப் பிறகு நேச தேசத்தாரால் வெல்லப்பட்டு, மறுபடியும் பிரான்ஸுக்கே கொடுக்கப்பட்டது.

ஆனால், தேசீய இயக்கம் வலுவடைந்தது. ஹபீப் பூர்ஜிபா என்பவரின் தலைமையில் தஸ்தூர் கட்சி வன்மை பெற்றது. எனவே, 1956இல் தூனிஸ் சுவாதீன மடைந்தது.

அல்ஜீரியா வரலாறு.

இந்த நாட்டின் கடற்கரைப் பாகம் கீழ ரோம ராஜ் யத்தின்இதர வட ஆப்பிரிக்க நாடுகளைப் போன்றே இஸ்லாமிய வெற்றிக்குமுன்னர் கீழ ரோம ராஜ்ஜியத்தி லிருந்தது.

கி. பி. ஏழாம் (ஹிஜ்ரி முதலாம்) நூற்றுண்டின் இறுதியில் உமய்யாக்கள் ஆட்சி காலத்திலே எகிப்துக்கு மேற்கிலுள்ள நாடுகள் வெல்லப்பட்டன. உக்பா பின் நாஃபீ என்னும் பெருந்தளபதியை இந்தப் பகுதிகளை வெல்லும்படி அமீர் முஆவியா அனுப்பினுர். அவரும் அவ்வாறே செய்து கய்ரவான் நகரை ஹி 50, கி. பி. 670இல் நிர்மாணித்தார். உமய்யாக்கள் காலத்தில் வட ஆப்பிரிக்க கடற்கரை நாடுகள் ராஜப்பிரதிநிதிகளாலும், கவர்னர்களாலும் ஆளப்பட்டு வந்தன. உள்நாட்டில் பர்பர் தலைவர்கள் ஆண்டார்கள். மூஸா பின் நுஸைர் என்னும் ராஜப்பிரதிநிதி காலத்தில் ஸ்பெய்ன் வெல்லப்பட்டது, அதன் விளைவாக ஆப்பிரிக்க முஸ்லிம் நாடுகளுக்கும் ஸ்பெய்னுக்கும் தொடர்பு ஏற்பட்டது.

ஆப்பிரிக்காவில் (1130–1269) முவஹ்ஹிதீன் என்னும் இயக்கம் தோன்றியது. அது முஸ்லிம்களில் பரிசுத்தமான வாழ்க்கை நடத்தி, அனுசாரங்களை நீக்கி, ஒரே தெய்வம் (தவ்ஹீத்) என்னும் கொள்கையை வற்புறுத்தியது. ஆனல், நாளாரப்பத்தில் அது அரசியல் இயக்கமாகி, வட ஆப்பிரிக்காவையும், ஸ்பெய்னையும் வென்றது. அப்துல் மூமின் (ஹி. 525 – 559: கி. பி. 1130-1163) என்னும் முவஹ்ஹிதீன் ஸுல்தான் 1152இல் அல்ஜீரியாவை வென்றார். ஆனல், 1212இல், முவஹ்ஹிதீன்கள் ஸ்பெய்ன் நாட்டில் லாஸ் நவாஸ் என்னுமிடத்தில் கிறிஸ்தவ மன்னர்களின் கூட்டணியால் தோற்கடிக்கப்பட்டார்கள். ஐம்பது ஆண்டுகள் சென்று முவஹ்ஹித் ராஜ்யம் அழிந்துவிட்டது. 1235இல் அல்ஜீரியாவில் ஜியானீ மரபினருடைய ஆட்சி வந்தது. அவர்கள் 1339 வரை திலிம்ஸான் நகரில் ஆட்சி செய்தார்கள். மொரொக்கோவில் மரனீகளும், அல்ஜீரியாவில் ஜியானிகளும், தூனிஸியாவில் ஹஃப்ஸிகளும் தங்களுக்கிடையில் போரிட்டுக் கொண்டிருந்தார்கள். அல்ஜீரியா இதர வட ஆப்பிரிக்க நாடுகளைப்போன்று அப்பாஸி கலீபாக்களின் ஆட்சியில் இருந்தது. ஆனல், 1518இல் கைருத்தீன்

பர்பரோஸா என்னும் கடற்படைத் தளபதி இந்த நாட்டை வென்று துருக்கி சாம்ராஜ்யத்துடன் அதைச் சேர்த்து விட்டார்.

ஹி. 8. கி. பி. 14ம் நூற்றாண்டில் ஜியானிகள் (Ziyani) திலிம்ஸான் நகரில் ஆட்சிசெய்து கொண்டிருக்கும் பொழுது அவர்களை மரனி மரபினர் எதிர்த்தார்கள். பிறகு, அவர்களை ஹஃப்ஸிகள் (Habsi) எதிர்த்தார்கள். இறுதியில் ஜியானிகளுக்கும், ஹஃப்ஸிகளுக்குமிடையில் நாடு பங்கிடப்பட்டது. பிறகு, ஹி 10, கி பி 16-ஆம் நூற்றாண்டில் ஸ்பெய்ன் நாட்டுக் கிறிஸ்தவர்கள் அல்ஜீரியா கரையில் நுழைந்தார்கள். ஆனால், துருக்கியின் கடற்படை அவர்களைத் தோற்கடித்து, அந்த நாடு துருக்கி சாம்ராஜ்யத்தின் ஒரு மாகாணமாகிவிட்டது. 1531-இல் கைருத்தீன் பர்பரோஸா என்பவர் தூனிஸையும் இல்வாறே வென்றார். ஸினான் பாஷா, பீரி ரயீஸ என்றும் இரண்டு துருக்கிய நிலப்படை, கடற்படைத் தளபதிகளும் மத்திய தரைக்கடல், செங்கடல் அரபிக்கடலோரமாக உள்ள நாடுகளையும் முக்கியமான துறைமுகங்களையும் தளங்களையும் கைப்பற்றினார்கள். பீரி ரயீஸ் உபயோகித்த ஒரு தரைப் படத்தில் அத்லாந்திக் மகாசமுத்திரமும் அமெரிக்காவும் வரையப்பட்டுள்ளது.

1500-இல் எகிப்கிது நாட்டில் புர்ஜி மம்லூக் அடிமை ஸுல்தான்களுடைய பலவீனமான ஆட்சி நடந்து கொண்டிருந்தது. மொரோக்கோவில் வத்தஸிகள் 1465 முதல் 1510 வரை ஆட்சிசெய்து ஸஅதீ ஷரீஃப்களால் தோற்கடிக்கப்பட்டார்கள். அல்ஜீரியா நாட்டில் ஹப்ஸிகளுக்குப் பிறகு ஜியானிகள் ஆட்சி செய்தார்கள். ஆனால், ஸ்பானியரும், துருக்கியரும் அவர்களைத் தோற்கடிக்க முயன்றார்கள். அல்ஜீரியாவுக்குத் தெற்கிலுள்ள ஸஹரா பாலைவனத்தில் ஸஅதி ஷரீஃப்கள் ஆட்சிசெய்து திம்பக்தூ வரையிலும் சென்றுவிட்டார்கள்.

பிறகு, அந்தப் பிரதேச மக்கள் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டார்கள். பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில், வட ஆப்ரிக்கா முழுமையும் துருக்கி சாம்ராஜ்யத்தின் ஆதிக்கத்திலிருந்தது. ஆனுல், மொரோக்கோவிலிருந்து எகிப்து வரையிலும் இந்த நாடுகளின் ஆட்சியாளர்கள் ஏறத்தாழ சுவாதீனமாகவே இருந்தார்கள். எனினும், பலவீனர்களாகவே இருந்தார்கள். துருக்கி சாம்ராஜ்யமும் வலிமை இழந்துகொண்டே வந்தது. இதைக்கண்ட ஐரோப்பிய வல்லரசுகள் இந்த வட ஆப்பிரிக்க நாடுகளில் தலையிட்டு, அவற்றை வென்று, தங்கள் வியாபாரங்களைப் பெருக்கத் திட்டமிட்டார்கள்.

அல்ஜீரியாவில் பிராஞ்சுத் தலையீடு அதிகரித்துக் கொண்டே சென்றது. நேர்மையற்ற காரணங்களைக் கூறி, 1830இல், அல்ஜீரியாவை ஆண்ட அதிபரை பிரான்ஸ் நீக்கிவிட்டது. இந்த நாட்டு மக்கள் தொடர்ந்து கிளர்ச்சி செய்துகொண்டே இருந்தார்கள்.

இந்த இரண்டு நூற்றுண்டுகளுக்கு முன்னரே ஹி. 1096, கி. பி. 1684இல் பிரெஞ்சுக்காரர் அல்ஜியர்ஸ்-நகரைத் தாக்கிக் குண்டுமாறி பொழிந்தார்கள். ஹி. 13 கி. பி. 19ம் நூற்றுண்டின் பிற்பகுதியில் பிரான்ஸ், அந்த நாட்டின் கடற்கரைப் பகுதியை மட்டுமே கைப்பற்ற முடிந்தது. ஆனுல், உள்நாட்டுப் பாகம் வழக்கம்போல் சுவாதீனக் கிளர்ச்சி செய்துகொண்டிருந்தது. ஆனுல், பிரஞ்சு ராணுவ சக்தி அந்த மக்களை அடக்கிக்கொண்டே இருந்தது. இறுதியாக, 1898இல் அல்ஜீரியா தனது ஆதிக்கத்தில் இருப்பதாக பிரான்ஸ் பிரகடனம் செய்தது. 1905இல் ஜெர்மன் சக்ரவர்த்தி இரண்டாம் வில்லியம் தமக்கும் ஆப்பிரிக்காவில் பங்கு கிடைக்க வேண்டுமென்று முயன்ருர். அதனுல், ஜெர்மனிக்கு மொரோக்கோவில் சில பொருளாதாரச் சலுகைகள் கிடைத்தன. பிரெஞ்சு அரசாங்கம் ஸஹரா பாலைவனம் உள்பட ஆப்பிரிக்காவின் வடபாகம் தனக்கே சொந்தமென்று உரிமைகொண்டாடியது,

1931இல் அல்ஜீரியாவில் கான்ஸ்தன்த்தைன் நகரில் முஸ்லிம் உலமாக்கள்—மார்க்க அறிஞர்கள் மகாநாடு ஒன்று கூட்டப்பட்டது. அதில் அரசியல் சீர்திருத்தங்களும் சுவாதீனமும் பெறுவதற்கான முயற்சிகள் செய்தார்கள். இந்த இயக்கத்தில், ஐரோப்பாவிலிருந்து கல்வி கற்றுத் திரும்பிய முஸ்லிம் வாலிபர்களும் சேர்ந்துகொண்டு- ஐரோப்பியரின் அரசியல் ஆதிக்கத்தையும் பொருளாதார ஆதிக்கத்தையும் எதிர்த்தார்கள். இத்தகைய இயக்கங்கள் அதற்கு முன் எகிப்திலும் துருக்கியிலும் ஈரானிலும் தோன்றியிருந்தன.

இரண்டாம் உலக மகாயுத்தத்தில் ஜெர்மனி போன்ற அச்சு நாடுகளும், இங்கிலாந்து அமெரிக்கா போன்ற நேச நாடுகளும் வட ஆப்பிரிக்காவைத் தங்கள் யுத்தத் தளமாக உபயோகித்தன. அங்கு 1943இல் ஜெர்மனியின் ஆப்பிரிக்கச் சேனை தோல்வியடைந்தது. யுத்தம் முடிந்தது. அல்ஜீரியா நாடு மறுபடியும் பிரான்ஸுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால், அந்தப் பிரதேச மக்கள் கிளர்ச்சி செய்து, சுவாதீனப்போர் தொடுத்தார்கள். அல்ஜீரியாவில் தஸ்தூர் கட்சி எனப்படும் ஒரு புதிய கட்சி தோன்றியது. அதன் தலைவர் ஹபீப் பூர்ஜிபா என்பவர் செய்த கிளர்ச்சியின் விளைவாக அல்ஜீரியாவுக்கு சுவாதீனம் கிடைத்தது.

சுவாதீனம், சமத்துவம், சகோதரத்துவம் ஜனநாயகம் எனப்படும் உண்மைகளை உலகினுக்குப் போதிக்கும் இங்கிலாந்தும், பிரான்ஸும் இவ்வாறு அநீதியாக நடந்ததும் இலட்சக்கணக்கான மக்களைக் கொன்றுக் குவித்ததும் நமக்கு வியப்பை உண்டாக்குகிறது.

திரிப்போலி வரலாறு.

மூன்றும் கலீபா உஸ்மான் (ரலி) (ஹி. 24—36. கி. பி. 644-656) காலத்திலே எகிப்துக்கு மேற்கிலுள்ள திரிப்போலி (லிபியா) நாடு முஸ்லிம்களால் வெல்லப்பட்டது.

அமீர் மூஆவியா காலத்தில் உக்பா பின் நாஃபிஅந்த நாட்டைக் கடந்து மேற்கே அத்லாந்திக் மகா சமுத்திரம் வரை சென்றார். பிறகு மூஸா-பின்-நுஸைர் உமய்யாக்களின் ராஜப்பிரதிநிதியாக இஃப்ரிகியாவை ஆண்ட பொழுது பொதுவாக உமய்யாக்களின் ஆட்சி கடற்கரையோரத்திலேயே இருந்தது. உள்நாட்டில் பர்பர்களின் அதிகாரம் நடந்தது. ஹி. 133, கி. பி. 750 வரை உமய்யாக்களின் ஆட்சியிலும், அதற்கடுத்த 40 ஆண்டுகள் அப்பாஸிகளின் ஆட்சியிலும் இந்த நாடு இருந்தது. இந்தப்பாகத்தில் இரண்டு நூற்றாண்டுகள் வரை இதரிஸிகளின் செல்வாக்கு அதிகமாயிருந்தது. இந்த நாட்டின்மீதும் எகிப்தின்மீதும் தூனிஸிலிருந்த பாத்திமீகள் கண்ணோட்டமாயிருந்தார்கள். ஸ்பெய்ன் நாட்டை ஆண்ட உமய்யா ஸுல்தான்களும், வட ஆப்பிரிக்கா முழுமையும் வெல்ல ஆசைப்பட்டிருக்கலாம். இதே சமயத்தில் உள்நாட்டிலிருந்த பர்பர் தலைவர்களும் சில பாகங்களை ஆண்டார்கள். ஹி. 5ம், கி. பி 11-ம் நூற்றாண்டில் இங்கு பாத்திமிகளின் ஆதிக்கம் இருந்தது. ஹி. 585, கி. பி. 1160இல் முவஹ்ஹித் ஸுல்தான்களின் ஆட்சி இங்கு நடந்தது.

அப்துல் மூமின் என்னும் முவஹ்ஹிதீன் மரபைச் சேர்ந்த ஸுல்தான், மக்ரிப் (Maghrib) எனப்படும் மொரோக்கோ நாட்டை வென்ற பிறகு இப்ரிகியாவின் கிழக்குப் பாகத்தை வெல்லப் புறப்பட்டு, அல்ஜீரியா (1152), தூனிஸ் (1185) நாடுகளை வென்று, பிறகு 1160இல் திரிப்போலியைக் கைப்பற்றினார். முவஹ்ஹிதீன் ராஜ்யத்தின் வீழ்ச்சியடைந்ததற்குப் பிறகு, துருக்கி சாம்ராஜ்யத்தில் எகிப்து சேர்க்கப்பட்ட பிறகு, அந்த நாடு துருக்கி சாம்ராஜ்யத்தின் ஒரு மாகாணமாக மாறிவிட்டது.

ஹி. 1126, கி.பி. 1714இல் திரிப்போலி கவர்னர் அஹ்மத் என்பவர் துருக்கி ராஜ்யத்திலிருந்து விலகி சுவாதீன விளம்பரஞ் செய்து புதிய கரமானீ ராஜ்யத்தை ஸ்தாபித்

தார். அது ஒரு நூற்றுண்டுக்கு அதிகமாக நீடித்தது, 1836இல் மறுபடியும் திரிப்போலி துருக்கியின் மாகாணமாகி விட்டது.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் ஆப்பிரிக்க நாடுகளைக் கைப்பற்றுவதில். ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையில் மனக்கசப்பும், எதிர்ப்பும், பகைமையும், போட்டியும் ஏற்பட்டன. பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி, ஸ்பெயின், இந்த நான்கு நாடுகளும் வட ஆப்பிரிக்காவில் மத்தியதரைக்கடலோரமுள்ள முஸ்லிம் நாடுகளை விழுங்கி விடத் திட்டங்கள் தீட்டின.

திரிப்போலி நாட்டில் நுழைய இத்தாலி விரும்பியது. அதற்கு மேற்கிலுள்ள அல்ஜீரியா, தூனிஸ் நாடுகளை பிரெஞ்சு குடியேற்றப் பிரதேசமாக அமைத்துவிட வேண்டுமென்று, பிரான்ஸ் முயற்சித்தது. எகிப்தையும், ஸூயஸ் கால்வாயையும் தன் கீழை நாடுகளின் வியாபாரத்தையும், சாம்ராஜ்யத்தையும் பாதுகாப்பதற்காக இங்கிலாந்து விரும்பியது. ஜெர்மன் சக்ரவர்த்தி இரண்டாம் வில்லியம் திடீரென்று வட ஆப்பிரிக்காவில் மொரொக்கோ நாட்டு ஸுல்தானைச் சந்தித்தார். பிரான்ஸை எதிர்த்தார். பொதுவாக, எல்லா ஐரோப்பிய நாடுகளைப் போன்று ஆப்பிரிக்காவில் ஜெர்மனிக்கும் பங்குண்டு என்றார்.

இந்தச் சூழ்நிலையில் 1900 டிஸம்பர் மாதம் பிரான்ஸும் இத்தாலியும் ஒரு இரகசிய உடன்படிக்கை செய்து கொண்டன. அதன் பிரகாரம் பிரான்ஸுக்கு மோரோக்கோ நாட்டில் முழு அதிகாரம் உண்டென்றும், அதைப் போன்று இத்தாலிக்கு திரிப்போலியில் முழுஅதிகாரம் உண்டென்றும் முடிவு செய்யப்பட்டது. எனவே, ஹி. 1321, கி. பி. 1911இல் இத்தாலி தனது சேனையுடன் திரிப்போலியில் இறங்கியது. துருக்கி தலையிட்டது. ஆனால், துருக்கி சேனை எகிப்து வழியாக செல்வதை இங்கிலாந்து தடுத்துவிட்டது. ஆகையால்,

இத்தாலி எளிதில் திரிப்போலியை வென்றுவிட்டது. எனினும், கடற்கரைப் பிரதேசத்தையே ஆக்ரமிக்க அதனால் முடிந்தது.

இரண்டாம் உலக மகாயுத்தத்திற்குப்பிறகு, திரிப்போலியில் ஹி. 1371. கி. பி. 1951யின் இறுதியில் ஸனூஸி குடும்பத்தைச் சேர்ந்த ஸையித் இதரீஸ் என்பவர் ஸுல்தான் ஆனார். இவ்வாறு திரிப்போலி சுவாதீனமடைந்தது.

தூனிஸ்.

1863இல் துனீஸியா நாடு துருக்கி சாம்ராஜ்யத்தின் ஒரு மாகாணமாக இருந்தது. ஆனால், 1881இல் பிரான்ஸ் அரசாங்கம் அந்த நாடு தன் பாதுகாப்பில் இருப்பதாக விளம்பரம் செய்து, கடற்கரைப் பிரதேசங்களைக் கைப்பற்றிய காலம் முதல் அந்த நாட்டு முஸ்லிம்கள் பிரெஞ்சு அதிகாரத்தை எதிர்த்துச் சுவாதீனக்கிளர்ச்சி செய்துகொண்டேயிருந்தார்கள். மொரோக்கோ, அல்ஜீரியா, திரிப்போலி, எகிப்து, ஸூதான் நாடுகளில் நடந்ததைப் போன்றே இங்கும் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் இரக்கமின்றி ஐரோப்பிய ஆதிக்க வெறியரால் கொல்லப்பட்டார்கள். இறுதியாக, 1956 மார்ச் மாதம் தூனிஸியா பிரெஞ்சுப் பிடியிலிருந்து சுவாதீனம் அடைந்தது. ஹபீப் பூர்ஜிபா என்பவர் அதன் முதலாம் ஜனாதிபதியானார்.

அல்ஜீரியா.

1951 ஆகஸ்ட் ஐந்தாம் நாள் தேசீய விடுதலை முன்னணி நிறுவப்பட்டது. அது 1954 நவம்பர் ஐந்தாம் நாள் பிரெஞ்சு நிர்வாகத்திற்கும் பிரெஞ்சு சேனைகளுக்கும் விரோதமாக பகிரங்கமான போர் தொடுத்தது. 1958 ஜூன் மாதம் எகிப்து நாட்டில் கெய்ரோ நகரில் பின் கத்தா என்பவர் தலைமையில் தற்காலிகமான அல்ஜீரிய அரசாங்

கம் நிறுவப்பட்டது. இறுதியாக, பிரெஞ்சு ஜனாதிபதி டி காலி என்பவர் 1962 ஏப்ரல்மாதம் அல்ஜீரியாவில் ஒரு வாக்கெடுப்பிற்கான ஏற்பாடு செய்தார். அங்கு குடியேறியுள்ள பத்து இலட்சம் பிரெஞ்சுக்காரர்கள் பிரான்ஸுக்குத் திரும்ப நேரிட்டாலும் அல்ஜீரியாவின் சுதந்திரத்தைத் தடுக்க முடியாது என்று கண்டுகொண்டார். அதன் விளைவாக அல்ஜீரியா நாடு 1962 ஜூலைமாதம் சுவாதீனமடைந்தது. பென்பெல்லா முதல் மந்திரியானார்.

ஸோமாலியா

இதுவும் ஒரு துர்லபமான முஸ்லிம் நாடு இது ஆப்பிரிக்காவின் வடகிழக்குப் பாகத்தில் இருக்கின்றது. இதன் வடக்கே செங்கடலும், கிழக்கே இந்துமகாசமுத்திரமும், மேற்கில் அபிஸீனியாவும் இருக்கின்றன. இந்த நாடும் ஐரோப்பியர்களால் கைப்பற்றப்பட்டது. இது பிரிட்டிஷ் சோமாலி எனவும், இத்தாலி சோமாலி எனவும், பிரெஞ்சு சோமாலி எனவும், மூன்று பகுதிகளாக இங்கிலாந்து, இத்தாலி, பிரான்ஸ் ஆகிய மூன்று ஏகாதிபத்திய நாடுகளால் பங்கு போடப்பட்டு இருந்தது. இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிறகு, 1960 ஜூலை மாதத்திலிருந்து இரண்டு பகுதிகளும் சுதந்திரம் அடைந்து குடியரசாகி விட்டன. அதன் முதலாம் ஜனாதிபதி ஆதம் அப்துல்லா உஸ்மான் என்பவர் ஆனார். இதுவரை, பிராஞ்சு, சோமாலி தனது சுவாதீனத்திற்காகக் கிளர்ச்சிசெய்து கொண்டே இருக்கிறது. இன்னும் சிறிது காலத்தில் இந்தப் பகுதியும் சுவாதீனம் பெற்று விடும் என்பதில் ஐயம் இல்லை. இந்தப் பகுதியின் சுதந்திர இயக்கத்தின் தலைவர் அப்துல்லாஹ் முபாரக் என்பவர். இதையடுத்து செங்கடல் ஓரமாக உள்ள எரித்திரியா என்னும் நாடு முழுமையும் முஸ்லிம்களே இருக்கின்றார்கள். இரண்டாம் உலக மகாயுத்தத்திற்குப் பிறகு அதை ஐரோப்பிய வல்லரசுகள் எதியோபியா எனப்படும் அபிஸீனியா நாட்டிற்குத் தானம்செய்துவிட்டார்கள். அந்த நாடும் கிளர்ச்சிசெய்து சுவாதீனம் அடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனென்றால், அந்த நாட்டு மக்கள் கிளர்ச்சி செய்து கொண்டே வருகிறார்கள். வெகு சீக்கிரம் வெற்றிபெறுவார்கள்.

அக்லப் மரபு

அக்லப்

(1) இப்ராஹீம் ஹி. 184 கி. பி. 800

(2) அப்துல்லாஹ் I ஹி. 196. கி.பி. 891

(3) ஸியாதத்துல்லாஹ் ஹி. 201. கி.பி. 816

(4) அக்லப் ஹி.223 கி. பி. 837.

(5) முஹம்மத் I ஹி. 226. கி. பி. 840

(6) அஹ்மத் ஹி. 246. கி. பி. 366.

(7) ஸியாதத்துல்லாஹ் II ஹி. 249. கி. பி. 863.

(8) முஹம்மத் II ஹி. 250. கி. பி. 864.

(9) இப்ராஹீம் II ஹி. 261. கி. பி. 874.

(10) அப்துல்லாஹ் II ஹி. 290. கி. பி. 902.

(11) ஸியாதத்துல்லாஹ் III ஹி. 291. கி. பி. 903-909.

இக்ஷீதி மரபு

ஹி. 334—359. கி. பி. 935—969.

துகஜ்

(1) முஹம்மத் இக்ஷீத்
ஹி. 324-335. கி. பி. 935-946.

(2) அபுல் காஸிம் உநுஜூர்
ஹி. 335-349. கி.பி. 946-960

(4) அபுல் மிஸ்க் காஃபூர்
ஹி. 355-358. கி.பி 966-968

(3) அலி
ஹி. 349-355. கி. பி. 960-966

(5) அஹ்மத்
ஹி. 358-359. கி. பி. 968-969.

ஹமதானீ மரபு

(1) ஸைஃபுத் தவ்லாஹ் அபுல் ஹஸன் அலி.
ஹி. 333-357. கி. பி. 944-967.

(2) ஸஅதுத் தவ்லாஹ் அபுல் மஆலி ஷரீஃப்
ஹி. 357-381. கி. பி. 967-991.

(3) ஸயீதுத் தவ்லாஹ் அபுல் ஃபஸாயில் ஸயீத்
ஹி. 381-392. கி. பி. 991-1001.

(4) அபுல் ஹஸன் அலீ
ஹி. 392-394.
கி. பி. 1001-1003.

(5) அபுல் மஆலீ ஷரீஃப்
ஹி. 392-394.
கி. பி. 1001-1003.

முராபித் மரபு,

ஹி. 448–544. கி. பி. 1056—1147.

வர்கூத்

உமர் — இப்ராஹீம்

உமர்: யஹ்யா. — (1) அபூ பக்ர். ஹி. 448. கி. பி. 1056.

இப்ராஹீம்: தாஷ்ஃபீன்

(2) யூஸுஃப் ஹி. 480. கி. பி. 1087.

(3) அலீ ஹி. 500. கி. பி. 1106.

(4) தாஷ்ஃபீன் ஹி. 538. கி. பி. 1143. — (6) இஸ்ஹாக் ஹி. 542. கி. பி. 1147.

(5) இப்ராஹீம் ஹி. 541. கி. பி. 1146.

முவஹ்ஹித் மரபு. ஹி. 437-668. கி. பி. 1145-1269

- அலீ.
  - (1) அப்துல் மூமின் ஹி. 668. கி. பி. 1145.
    - (2) அபூ யாகூப் யூஸுப் ஹி. 559 கி. பி. 1163.
      - (3) அபூ யூஸுப் யாகூப் மன்ஸூர் ஹி. 580. கி. பி. 1184.
        - (4) நாஸிர் ஹி. 596 கி. பி. 1199
          - (5) அபூ யாகூப் யூஸுப் ஹி. 611 கி.பி 1214
          - (8) யஹ்யா முஃதஸிம் ஹி. 627 கி.பி. 1229
        - (7) அப்துல்லாஹ் ஆதில் ஹி. 621 கி.பி. 1224
        - (9) இத்ரீஸ் மாமூன் ஹி. 627 கி. பி. 1229
          - (10) அப்துல் வாஹித் ஹி. 660 கி. பி. 1232
          - (11) அல் ஹஸன் அலி ஸயீத் ஹி. 240 கி.பி. 1242
      - (6) அப்துல் வாஹித் மக்லூ ஹி. 620. கி.பி. 1223
      - இஸ்ஹாக்
        - (12) உமர் முர்தஸா ஹி- 646 கி. பி. 1248
    - அபூ ஹஃப்ஸ் உமர்.
      - முஹம்மத்
        - (13) அபுல் உலா வாஸி ஹி. 66.5-668 கி.பி. 1266

பாத்திமீ கலீபாக்கள்.

(1) அல் மஹ்தி உபைதுல்லாஹ். ஹி. 297, கி. பி. 909.
(2) அல் காயிம். ஹி. 322. கி. பி. 934.
(3) அல் மன்ஸூர். ஹி. 334. கி. பி. 946.
(4) அல் முயிஸ். ஹி. 341. கி. பி. 952.
(5) அல் அஜீஸ். ஹி. 365. கி. பி. 575.
(6) அல் ஹாகிம். ஹி. 386. கி. பி. 996.
(7) அல் ஸாஹிர். 411. கி. பி. 5020.
(8) முஸ்தன்ஸிர். ஹி. 427. கி. பி. 1033.
(9) அல் முஸ்தஃலி. ஹி. 487. கி. பி. 1904.
(10) அல் ஆமிர், ஹி. 495. கி. பி. 1101.
(11) அல் ஹாஃபிஸ். ஹி. 524. கி. பி. 1830.
(12) அஸ் ஸாஃபிர் (Zafir) ஹி. 544. கி. பி. 1149.
(13) அல் ஃபாயிஸ் (Fayiz) ஹி. 549. கி. பி. 1154.
(14) அல் ஆஸித். ஹி. 556. கி. பி. 1160.

அய்யூப் மரபு: ஹி. 565-648. கி.பி. 1169-1259.

1. ஸலாஹுத்தீன் ஹி. 565. கி. பி. 1169.
2. இம்தாதுதீன் உஸ்மான் ஹி. 589. கி. பி. 1193.
3. மன்ஸூர், முஹம்மத். ஹி 595. கி. பி. 1198
4. ஆதில் ஸைஃபுத்தீன் அபூ பக்ர். ஹி. 596.
5. காமில், முஹம்மத். ஹி. 615. கி. பி. 1218. [கி பி. 1199,
6. ஆதில், ஸைஃபுத்தீன் அபூபக்ர் II ஹி. 636 கி. பி. 1238
7. ஸாலிஹ், நஜ்முத்தீன் அய்யூப் ஹி. 638. கி. பி. 1240
8. முஅஸ்ஸம் தூரான். ஷாஹ். ஹி. 647. கி. பி. 1249
9. அக்ரஸ் முஸா. ஹி. 648. கி. பி. 1250.

பஹ்ரி மம்லூக் மரபு.

ஹி. 648 — 793. இ. பி. 1259 — 1390

1. ஷஜருத்துர். ஹி, 648. கி. பி. 1250.
2. முயிஸ், இஸ்ஸுத்தீன் அய்பக் ஹி. 648–655 கி. பி. 1250-1257.
3. மன்ஸூர் நூருத்தீன் அலீ ஹி.655-658 கி.பி. 1257-1258
4. முஸஃப்ஃபர், ஸைஃபுத்தீன் குதுஸ் (Kuduz) ஹி. 658-659. கி. பி. 1259-1260
5. ஸாஹிர் (ருக்னுத்தீன்) ஹி.6 59-676. கி. பி. 1960–1277
6. ஸயீத், நாஸிருத்தீன் வரகா காம். ஹி, 676-678. கி. பி. 1277-1279
7. ஆதில், பக்ருத்தீன் ஸலாமிஸ் ஹி. 678. கி. பி. 1279
8. மன்ஸூர் ஸைஃபுத்தீன் கலாயூன் ஹி. 667-679. கி. பி. 1279–1290
9. அஷ்ரஃப் (ஸலாஹுத்தீன் கலீல்) ஹி. 689-693 கி. பி. 1290-1293
10. நாஸிர் (நாஸிருத்தீன் முஹம்மத்) ஹி.. 693–94 கி. பி. 1293–1294
11. ஆதில் (ஜைனுத்தீன் கித்புகா) ஹி. 694–96 கி பி. 1295–96
12. மன்ஸூர் (ஹீயாமுத்தீன் லாஜீன்) ஹி. 698-693 கி. பி. 1296–1298
13. நாஸிர் முஹம்மத். ஹி. 698–708, கி. பி. 1298–1308
14. முஸஃப்ஃபர் (நுக்னுத்தீன் பைபர்ஸ் ஜாஹன் கிர் பன்தூக் தாரீ) ஹி. 708-710 கி. பி.1308–1310
15. நாஸிர் முஹம்மத். ஹி. 710-742 கி. பி. 1310–1341

16, மன்ஸூர், ஸைஃபுத்தீன் அபூபக்ர்
ஹி. 742, கி. பி. 1141

17. ஹஸ்ரத் அலாவுத்தீன் குஜுக், ஹி. 743 கி. பி. 1342

18. நாஸிர் ஷிஹாபுத்தீன் அஹ்மத்
ஹி. 744–745, கி. பி. 1343–1344

19, ஸாலிஹ் இமாதுந்தீன் இஸ்மாயீல்
ஹி. 745-747, கி. பி. பி. 1344-1316

20. காமில் (ஸைஃபுத்தீன் ஸவான்) ஹி. 747-748
கி, பி.1316–1347

21. முஸஃபர் (ஸைஃபுத்தீன் ஹாஜி.) ஹி. 748-749.
கி. பி. 1347–1348.

22. நாஸிருத்தீன் ஹஸன் ஹி. 749–753. கி. பி. 1348–1352

23. ஸாலிஹி (ஸலாஹுத்தின் ஸாவிஹ்) ஹி. 753–755
கி. பி. 1352-1354

24. நாஸிர் (ஹஸன்) ஹி. 755–763 கி. பி. 1354-1361

25. மன்ஸூர் (ஸலாஹுத்தின் முஹம்மத்) ஹி. 765–769.
கி. பி. 1361–1363.

26. அஷ்ரஃப் (நாஸிருத்தீன் ஷாபான் ஹி. 765–769.

27. மன்ஸூர் (அலாவுத்தீன் அலி) ஹி. 779-783
கி. பி. 1377–1381.

28. ஸாலிஹ் (ஸலாஹுத்தீன் ஹாஜி) ஹ. 783–784
கி. பி. 1381–1382

29. பர்கூக் ஹி. 784–785. கி. பி. 1382–1389

30. ஹாஜி (முஸஃபர்) ஹி. 792–793. கி. பி, 1389–1390

வட ஆப்பிரிக்காவில் ஆட்சி செய்த அரச மரபுகள்.

(1) இத்ரீஸ் மரபு (மொரோக்கோ) ஹி. 172—375
கி. பி. 788—985

(2) அக்லபி மரபு (தூனிஸ்) ஹி. 184–297) கி.பி. 800-909

(3) ஸய்ர் (Zayr) மரபு (தூனிஸ்) ஹி. 362 — 543
கி. பி. 972—1148.

(4) ஹம்மாத் மரபு (அல்ஜீரியா) ஹி. 398—547
கி. பி. 1007—1152.

(5) முராபித் மரபு (மொரோக்கோ, அல்ஜீரியா, ஸ்பெயின்) ஹி. 448—542. கி பி. 1056—1147.

(6) முவஹ்ஹித் மரபு (வட ஆப்பிரிக்கா) ஹி. 525—668
கி. பி. 1130—1269.

(7) ஹஃப்ஸ் மரபு (தூனிஸ்) ஹி. 526 - 941
கி. பி. 1228—1536.

(8) ஸியான் (Zian) மரபு (அல்ஜீரியா) ஹி. 933 796.
கி. பி. 1185—1393

(9) மரீன் மரபு (மொரோக்கோ) ஹி. 592—875.
கி. பி. 1190—1470.

(10) ஷரீஃப் மரபு (மொரோக்கோ) ஹி. 951—1311
கி. பி. 1445—1839.

புர்ஜி மம்லூக் மரபு

ஹி. 784-923. கி. பி. 1382–1517

1. ஜாஹிர் (ஸைஃபுத்தீன் பர்கூக்) ஹி. 784-801. கி. பி. 1382-1398.

2. நாஸிர் (நாஸிருத்தீன் ஃபராஜ்) ஹி. 801-808. கி. பி. 1398-1405

3. மன்ஸூர் (இஸ்ஸுத்தீன் அப்துல் அஜீஸ்) ஹி. 808-809 கி. பி. 1405-1406.

4. நாஸிர் ஃபராஜ் ஹி. 809-815. கி. பி. 1406-1412.

5. ஆதில் முஸ்தயீன் (அப்பாஸி) ஹி 815. கி. பி. 1412

6. முஅய்யத் (ஷெய்க்) ஹி. 815-825. கி. பி. 1412-1421.

7. முஸஃபர் (அஹ்மத்) ஹி. 825. கி பி. 1421.

8. ஜாஹிர் (ஸைஃபுத்தீன் தாதார்) ஹி 825. கி. பி. 421.

9. ஸாலிஹ் (நாஸிருத்தீன் முஹம்மத்) ஹி. 825-826. கி. பி. 1421–1422.

10. அஷ்ரஃப் (ஸைஃபுத்தீன் பர்ஸ்பே) ஹி. 826–842. கி. பி. 1422–1438.

11. அஜீஸ் (ஜமாலுத்தீன் யூஸுஃப்) ஹி. 842. கி. பி. 1438.

12. ஜாஹிர் (ஸைஃபுத்தீன் ஜக்மக்) ஹி. 842–857. கி. பி, 1438–1453.

13. மன்ஸூர் (ஃபக்ருத்தீன் உஸ்மான்) ஹி. 857. கி. பி. 1453.

14. அஷ்ரஃப் (ஸைஃபுத்தீன் இனால்) ஹி. 857–865. கி. பி. 1453–1460.

15 முஅய்யத் (ஷிஹாபுத்தீன் அஹ்மத்) ஹி. 865-866.
கி. பி. 1460-1461.

16 ஜாஹிர் (ஸைஃபுத்தீன்குஷ்கதம்) ஹி. 866-872.
கி. பி. 1461-1467.

17 ஜாஹிர் (ஸைஃபுத்தீன் பில்பே) ஹி. 872. கி. பி.-1407.

18 ஜாஹிர் (தைமூர் புகா) ஹி. 872-873. கி. பி. 1467-1468.

19 அஷ்ரஃப் (ஸைஃபுத்தீன் தாஇத்பே) ஹி. 873-901.

20 நாஸிர் (முஹம்மத்) ஹி. 90-1904. கி. பி. 1468-1495.

21 ஜாஹிர் (கான்ஸூ) ஹி. 904-905. கி. பி. 1498-1499.

22 அஷ்ரஃப் (ஜான் பலத்) ஹி. 905-907. கி. பி. 1499-1501.

23 ஆதில் (தூமான் பே) ஹி. 907. கி. பி. 1501.

24 அஷ்ரஃப் (கான்ஸூ கோரி) ஹி. 907-922.
கி. பி. 1501-1516.

25 அஷ்ரஃப் (தூமான் பே) ஹி. 922-923. கி. பி. 1516-1517.

எகிப்தில் பாஷாக்கள், கதீவ்கள், ஸுல்தான்கள்.

1 பாஷா, முஹம்மத் அலி ஹி. 1226–1265. கி.பி. 1811–1848.
2 ,, இப்ராஹீம் (முஹம்மத் அலியின் மகன்) ஹி. 1265 கி. பி. 1848.
3 ,, அப்பாஸ் (முஹம்மத் அலியின் பேரன்) ஹி. 1265-1271. கி. பி. 1848–1854.
4 ,, ஸயீத் (முஹம்மத் அலியின் மகன்) ஹி. 1271–1280. கி. பி. 1854–1863.
5 கதீவ், இஸ்மாயீல் (இப்ராஹீமின் மகன்) ஹி. 1280–1297. கி. பி. 1863–1879.
6 ,, முஹம்மத் தவ்ஃபீக் (இஸ்மாயிலின் மகன்) ஹி. 1297–1310 கி. பி. 1879–1892.
7 ,, அப்பாஸ் ஹில்மீ (தவ்ஃபீக் மகன்) ஹி. 1310–1333. கி. பி. 1892–1914.
8 ,, ஹுஸைன் கமால் (இஸ்மாயிலின் புத்திரர்) ஹி. 1333–1336 கி. பி. 1914–1917.
9 ஸுல்தான், அஹ்மத் ஃபுஆத் (இஸ்மாயிலின் புத்திரர் ஹி. 1336–1356. கி. பி. 1917–1937.
10 ஸுல்தான், ஃபாரூக். ஹி. 1356–1372. கி.பி. 1937–1953.
11 குடியரசு ஹி. 1373 கி. பி. 1953 முதல்.

எகிப்திலும், ஸிரியாவிலும் ஆட்சி செய்த அரச மரபுகள்

1 தூலுன் மரபு. ஹி. 255–293. கி. பி. 868–905
2 இக்ஷீத் மரபு. ஹி. 324–359 கி. பி. 935–969.
3 ஃபாத்திமீ மரபு. ஹி. 297–-567. கி. பி. 909-1171.
4 அய்யூப் மரபு. ஹி. 568–648. கி. பி. 1169–1250.
5 பஹ்ரீ மம்லூக் மரபு. ஹி. 648–793. கி. பி. 1250–1390.
6 புர்ஜி மம்லூக் மரபு. ஹி. 784–923. கி. பி. 1382–1517.
7 கதீவ் மரபு. ஹி. 1226–1372. கி. பி. 1811–1952.

எகிப்தில் அப்பாஸி மரபு.

முஸ்தன்ஸிர் பில்லாஹ்
ஹி. 660. கி. பி. 1261

(1) ஹாகிம் ஹி. 661. கி. பி. 1262.

(2) முஸ்தக்ஃபீ
ஹி. 702. கி பி. 1302

முஹம்மத்

(3) வாஸிம்
ஹி. 741 கி. பி. 1340

(13) முதவக்கில்
ஹி. 884
கி. பி. 1479

முஸ்தன்ஸிர்

முதவக்கில்

(12) முஸ்தஸித்
ஹி. 860
கி.பி 1485

(11) காயிம்
ஹி. 855
கி.பி. 1451

(10) முஸ்தக்ஃபீ
ஹி. 845
கி. பி. 1441

(9) முதஅதித்
ஹி. 817
கி. பி. 1414

(7) வாஸிக்
ஹி. 785
கி. பி. 1383

ஹாகிம் II
ஹி. 745
கி. பி. 1344

இப்ராஹீம்

(8) முஸ்தஸிம்
ஹி 809
கி.பி. 1406

(5) முஸாஜித்
ஹி. 753
கி. பி. 1352

(6) முதவஃப்பிக்
ஹி. 763
கி. பி. 1361

பின் இணைப்பு–I

அலக்சாந்திரியா நூல் நிலையம்.

இரண்டாம் கலீபா ஹஸ்ரத் உமர் காலத்தில் எகிப்து நாடு முஸ்லிம்களால் வெல்லப்பட்டது. அந்த நாட்டில் அலக்சாந்திரியா என்னும் துறைமுகப்பட்டினம் இருந்தது. அது கிரேக்க ரோம காலத்திலிருந்து பழங்கால நாகரீக முள்ள நகரம். அதில் அக்காலத்தில் புகழ்பெற்ற ஒரு நூல் நிலையம் இருந்தது. அது எத்தனையோ நூற்றுண்டுகளுக்கு முன்னர் முஸ்லிமல்லாதார்களால் அழிக்கப்பட்டு விட்டது. முஸ்லிம்கள் கி. பி. ஏழாம் – ஹிஜ்ரி முதலாம் நூற்றுண்டில் அந்த நாட்டை வென்றபோது அலக்சாந்திரியா நகரில் நூல்நிலையமே கிடையாது. அவ்வாறிருந்தும் மேல்நாட்டுக் கிறிஸ்தவ ஐரோப்பியர்கள் உண்மையை மறைத்துத் தங்கள் மூதாதைகளின் குற்றத்தைத் திரையிட்டு, முஸ்லிம்கள்மீது பொய்ப்பழிகள் சுமத்துகின்றனர். அதாவது, "குர்ஆன் தவிர வேறெந்த நூலும் உலகில் இருக்க நியாயம் இல்லை" என்று கூறி, அந்த நூல் நிலையத்தை அழித்து எரித்துவிடுமாறு கலீபா உமர் கட்டளையிட்டதாகப் பொய்ப் பிரசாரம் செய்யப் பட்டது.

அரபு நாட்டில் இஸ்லாம் தோன்றிய பிறகு, அதற்கும் கிறிஸ்துவத்திற்கு மிடையில் பல மோதல்கள் ஏற்பட்டன. முதலாம் மோதல் ஸிரியா நாட்டில் கிழக்கு ரோம ராஜ்யத் திற்கும் முஸ்லிம்களுக்குமிடையில் கி. பி. ஏழாம் நூற் றுண்டில் உண்டாயிற்று. இரண்டாம் மோதல் கி. பி. எட்டாம் நூற்றுண்டில் ஸ்பெய்ன் நாட்டில் இவ்விரு மதத் தாருக்கு மிடையில் உண்டாயிற்று. மூன்றும் மோதல் சிலுவை யுத்தங்கள் என்னும் வடிவத்தில் உருவெடுத்தது.

கிறிஸ்தவ உலகின் தலைவரான போப் பாதிரியாரி லிருந்து சின்னஞ்சிறு பாதிரிகள்வரை இந்தச் சிலுவைப் போர்களில் முஸ்லிம்களுக்கு விரோதமாகப் பிரச்சாரஞ்

செய்தார்கள். "சீனுவுக்குச் சென்றேனும் அறிவைத் தேடு" எனவும், "ஒவ்வொரு முஸ்லிம் ஆண், பெண்மீதும் கல்வி கற்றல் கடமையாகும்" எனவும் நபிபெருமானுர் போதித்தார்கள். பகுத்தறிவை உபயோகப்படுத்தி இறைவனுடைய படைப்புகளை நன்கு கவனித்துப் பார்த்து, இயற்கையை ஆராய்ந்து அறிவைப் பெருக்குமாறும், வெளிநாடுகளுக்குச் சென்று பழங்காலச் சரித்திரங்களையும், பிறநாட்டு கலாச்சாரங்களையும் பழக்க வழக்கங்களையும் அறியவேண்டுமெனவும் குர்ஆன் வற்புறுத்துகின்றது. ஒரு மணி நேரம் இறைவனுடைய படைப்புகளைக் குறித்து ஆராய்ந்து அவற்றில் நமது சிந்தனையைச் செலுத்தலானது, ஓராண்டு இறைவணக்கம் செய்வதைவிட மேலானது, என்றெல்லாம் இஸ்லாம் போதிக்கின்றது. ஆனுல், போப்பும், அவரது துணைவர்களும் இந்த உண்மைகளையெல்லாம் மறைத்து முஸ்லிம்கள் சபிக்கப்பட்ட ஒரு இனம் எனவும், முஹம்மத் என்னும் ஒரு விக்கிரகத்தை முஸ்லிம்கள் வணங்குகிருர்கள் எனவும், முஹம்மத் நபி பெரும் பொய்யர் எனவும் எத்தனையோ விதங்களில் பொய்ப் பிரச்சாரங்கள் செய்தார்கள்.

நபி பெருமானுரவர்கள் தங்கள் ஆயுள் முழுமையும் ஒருவரையேனும் கொல்லவேயில்லை. அவர்கள் மக்கா நகரை வென்றபொழுது எத்தனையோ ஆண்டுகளாக அவர்களுடைய உயிருக்கு ஆபத்து உண்டாக்கிய கடும்பகைவர்களையும் மன்னித்துவிட்டார்கள். இது உலக சரிதையில் வெற்றியாளர்களின் பட்டியலில் மிக மிக அரிய அற்புதம் என்று மர்கோலியாத் போன்ற இஸ்லாத்தின் விரோதிகளும் ஒப்புக்கொள்ளுகின்ருர்கள்.

மகா பெரிய நெப்போலியன் 1799-ல் எகிப்தின்மீது படையெடுத்து அங்கிருந்து பலஸ்தீனில் நுழைந்தபொழுது தம்மிடமிருந்த ஆயிரத்து இருநூறு அரபிய துருக்கியக் கைதிகளைக் கொன்றுவிட்டார். ஏனென்ருல், அவர் துரிதமாகச் செல்லுவதற்கு அந்தக் கைதிகள் தடையாக இருந்தார்களாம்!

அக்காலத்தில் வெற்றியாளர்கள் யுத்தக் கைதிகளைக் கொன்றுவிடுவதும், அவர்களுடைய பெண்டு பிள்ளைகளை அடிமைகளாக்கிவிடுவதும் சாதாரணமானதொரு செயல். ஆனால், அந்தச் சூழ்நிலையில் பிறந்து வளர்ந்த நபிபெருமானாரோ கடும்பகைவர் அத்தனை பேரையும் மன்னித்து விட்டார்கள்.

இத்தகைய கருணைக்கடலான நபிபெருமானார், ஒரு கையில் குர்ஆனும், மறு கையில் வாளும் ஏந்திக்கொண்டு, மக்களை இஸ்லாம் மார்க்கத்தில் சேரும்படி வற்புறுத்தியதாகவும், அதற்கு இணங்காதோரை வெட்டித்தள்ளியதாகவும் பொய்ப் பிரச்சாரம் செய்யப்பட்டது.

அரபுநாட்டில் இஸ்லாம்தோன்றி நாலா பக்கங்களிலும் பரவியது. முஸ்லிம்கள் ஏகதெய்வக் கொள்கையையும் புதியதொரு கலாச்சாரத்தையும் பரப்பினார்கள். அதே சமயத்தில் ஐரோப்பியர் அநாகரீக இருளில் இருந்தனர். அக்காலத்தை ஐரோப்பியர்களே ஐரோப்பாவின் 'இருண்ட காலங்கள்' என்று அழைக்கின்றனர். அப்பொழுது போப்புக்கும், புனித ரோமராஜ்யச் சக்ரவர்த்திகளுக்குமிடையில் ஒவ்வொருவரும் ஐரோப்பிய நாடுகளைத் தம் வசமே வைத்துக்கொள்வதற்காகப் போராட்டம் நடந்துகொண்டிருந்தது. மதப்பிரச்சினைகளைக் கிளப்பி, பிறமதத்தோரான முஸ்லிம்களைத் தூற்றி, கிறிஸ்தவ மதத்திற்குப் பேராபத்து வந்துவிட்டதென்று விளம்பரப்படுத்தி, கல்வியும், கலாச்சாரமும் இல்லாத அக்கால பாமரக் கிறிஸ்தவ மக்களை ஏமாற்றி, அவர்களுடைய பொருளையும், உயிரையும் பலஸ்தீன் நாட்டுக்குச் செல்லும் வழியில் நாசமாக்கவும், இறுதியில் தங்களுக்கே எல்லாப் புகழும் கிடைக்கவும் போப் பாதிரியார்கள் முயற்சித்தார்கள்.

அக்காலத்தில் மேல்நாட்டுக் கிறிஸ்தவப் பாதிரிகள் செய்த பொய்ப் பிரச்சாரமானது, அந்த கிறிஸ்தவர்களின் மனதில் வேரூன்றித் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து இன்றுவரையும் இருக்கின்றது. அவர்களுடைய

இலக்கியங்களில் இஸ்லாமுக்கும் நபி பெருமானுருக்கும் விரோதமாக எழுதப்பட்டது. எழுதப்படுகின்றது. பத்தொன்பதாம் நூற்ருண்டிலே ஆங்கிலப் பிரதமர் கிலாட்ஸ்டன் என்பவர் முஸ்லிம்களாகிய துருக்கியரை ஐரோப்பாவிலிருந்து மூட்டை முடிச்சுக்களுடன் துரத்திவிடவேண்டுமென்ருர். முதலாம் உலக மகாயுத்தத்தில் (1914—1918) ஆங்கிலப் படைகள் பலஸ்தீன் நாட்டில் எருஸலம் நகரை வென்றபொழுது, அக்கால ஆங்கிலப் பிரதமர் லாயிட் ஜார்ஜ் என்பவர் அதை, "கடைசி சிலுவை யுத்தம்" எனக் கூறினுர்.

ஐரோப்பிய ஆசிரியர்களே இந்த அநீதியைக் கண்டித்து எழுதியுள்ள மேற்கோள்களை நாம் சமர்ப்பிக்கின்ருேம். ஈகால்வர்லி என்னும் ஐரோப்பியர் "இஸ்லாமிய மதம்" என்னும் புத்தகத்தில் எழுதுகிருர்:— (இஸ்லாமின் சுருக்க வரலாறு. பக்கம் 223. ஃபய்யாஸ் மஹ்மூத்)

"இவ்வாருன அரசியல் ராணுவக் குறிக்கோள்களுக்கு ஆதரவு பெறுவதற்காக மதஉணர்ச்சியை உபயோகித்துப் பிரச்சாரம் செய்யப்பட்டது. சேனைகளும், படைகளும் சேகரித்துச் சிலுவை வீரர்கள் மேற்கு ஆசியாவிற்கு வந்தபொழுது முஸ்லிம்களுக்கு விரோதமான உணர்ச்சி உண்டாக்கும் வண்ணம் கொடுமையான பொய்கள் கூறப்பட்டன. கிறிஸ்து மதத்தின் வரலாற்றிலே, சிலுவை யுத்தங்கள் செய்யப்பட்ட நூற்ருண்டுகள் மிக வெட்கமானவையும் அழிவுக்குக் காரணமானவையும் ஆகும். அந்த இழுக்கையும், கீழ்நாடுகளில் சிலுவை வீரர்கள் விட்டுச் சென்ற நம்பிக்கையின்மையையும் ஐநூறு ஆண்டுகள் சென்றபிறகும் அகற்றமுடியவில்லை. சிலுவைப்போர்களுக்காக மனிதர்களையும், யுத்தத் தளவாடங்களையும் அளித்த ஐரோப்பிய மக்களின் மனத்தில் புகுத்தப்பட்ட பொய்ப் பிரச்சாரங்களும் அங்கிருந்து திரும்பிவந்தோர் பரப்பிய பொய்களும் பொதுமக்களுக் கெல்லாம் கல்வி யளிக்கப்படும் இக்காலத்திலும் இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றிய தப்பெண்ணங்கள் நீக்கப்பட முடியவில்லை".

பர்னார்டு லெவிஸ் என்னும் ஐரோப்பிய ஆசிரியர் எழுதிய "வரலாற்றில் அரபுகள்" என்னும் நூலில் அலக்சாந்திரியா நூல்நிலையத்தைப்பற்றி 54-ம் பக்கத்தில் இவ்வாறு கூறுகின்றார்.

"பலபுத்தகங்களில் பொதுவாகக் கூறப்படும் ஒரு கதை என்னவென்றால், அலக்சாந்திரியாவை அரபியர் கைப்பற்றிய பிறகு அந்நகரிலிருந்த பெரிய நூல்நிலையத்தை அழித்து விடுமாறு உமர் கட்டளையிட்டார் எனவும் அந்த நூல்களில் உள்ள விஷயங்கள் குர்ஆனில் இருந்தால் அவை தேவையில்லை. எனவும், அவற்றிலுள்ள விஷயங்கள் குர்ஆனில் இல்லையென்றால் அவை தெய்வ பக்தி யற்றதெனவும் கூறியதாகச் சொல்லப்பட்டது. தற்கால ஆராய்ச்சியானது இந்தக் கட்டுக்கதை முற்றும் ஆதாரமற்றது என்று நிரூபித்துவிட்டது, பழங்கால வரலாற்றுக் குறிப்புகளும், கிறிஸ்தவர்கள் எழுதிய நூல்களும் இதைப்பற்றிக் கூறவே இல்லை. இந்தப் பொய்ச் செய்தி முதன்முதலாக கி பி. பதின்மூன்றும் நூற்றாண்டிலே அதாவது பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு கூறப்பட்டது. அந்தப் பெரிய நூல்நிலையம் அரபியர்கள் வருவதற்கு முன்னரே உள் நாட்டுக் கலகங்களின் காரணமாக அழிக்கப்பட்டுவிட்டது.

"அரபுகளின் வரலாறு" (History of Arabs) என்னும் நூலில் பக்கம் 166ல் ஹிற்றி என்னும் அமெரிக்க சரித்திராசிரியர் கூறுவதாவது:-

"கலீபாவின் கட்டளைக் கிணங்கி அம்ரு பின் ஆஸ் என்னும் முஸ்லிம் கவர்னர் அலக்சாந்திரியா நூல் நிலையத்தின் புத்தகங்களை அந்த நகர அடுப்புகளுக்கு விறகாக ஆறு மாதகாலம் எரித்தார் என்பது நல்லதொரு கட்டுக்கதையாகவும், ஆனால் ஆதாரமற்ற சரித்திரப்பொய்க் கதைகளில் ஒன்றாகவும் அமைந்துள்ளது. இந்த நூலகம் கி.மு. நாற்பத்தெட்டில் ரோம சக்ரவர்த்தி ஜூலியஸ் ஸீஸர் என்பவரால் நெருப்பிலிடப்பட்டது. மகல் நூலகம் எனப்படும் மற்றொரு பிந்திய கால நூலகம் கி. பி. முன்னூற்று

எண்பத்தொன்பதில் தியோடோஸியஸ் என்னும் சக்ரவர்த்தியின் கட்டளையால் அழிக்கப்பட்டது. எனவே அரபு வெற்றிக் காலத்தில் அலக்சாந்திரியா நகரில் நூலகம் ஏதேனும் இருந்ததாகத்தெரியவில்லை. அக்கால எழுத்தாளர் எவரேனும் இவ்வாறு செய்ததாக அம்ரு பின் ஆஸ் மீதோ அல்லது கலீபா உமர்மீதோ குற்றஞ் சாட்டவே இல்லை.''

பின் இணைப்பு–2

ஆப்பிரிக்க நாடுகளில் முஸ்லிம்கள்

1. மொரோக்கோ (*அல் மம்லகதுல் மக்ரிபிய்யா*)

தலைநகர் ரபத். ஆப்பிரிக்காவின் வடமேற்குக் கடற்கரையிலுள்ள மக்கள் அனைவரும் முஸ்லிம்களே. அவர்கள் மாலிகீ பிரிவைச் சேர்ந்தவர்கள். அரசாங்க மதம் இஸ்லாம்.

2. மௌரித்தானியா :

அரசாங்கமதம் இஸ்லாம். எல்லாமக்களும் முஸ்லிம்களே. இந்த நாடு எப்பொழுதும் இஸ்லாமிய உலகில் குர்ஆன் கலையில் சிறந்தது.

3. அல்ஜீரியா :

தலைநகர் அல் ஜஸாயிர். பெரும்பாலான மக்கள் முஸ்லிம்களே. அவர்கள் மாலிகீ பிரிவைச் சேர்ந்தவர்கள். சில ஹனபீகளும் இருக்கிறார்கள். 1962 ஜூலை மூன்றாம் நாள் பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்து இது சுவாதீனம் அடைந்தது. அஹமத் பின் பல்லா என்பவர் முதல் மந்திரியானார்.

4. தூனிஸியா :

தலைநகர் தூனிஸ். மக்கள் முஸ்லிம்களே. மாலிகி, ஹனபீ பிரிவைச் சேர்ந்தவர்கள். அரசாங்க மதம் இஸ்லாம்.

5. லிபியா :

தலைநகர் பின்காஸி (Bin Ghazi) திரிப்போலி (தராபலஸ்). மக்கள் முஸ்லிம்கள். பெரும்பாலார் மாலிகீ பிரிவைச் சேர்ந்தவர்கள். இந்த நாட்டில் இரண்டு நூற்றாண்டுகளாகஸனூஸி

இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு முஸ்லிம்களுக்கு இஸ்லாமியா உணர்ச்சி உண்டாக்குகின்றது. இந்த இயக்கத்தின் (ஜாவியா) பிரார்த்தனை மன்றங்கள் வட ஆப்பிரிக்கா முழுமையும் பரவியுள்ளன. ஸனூஸித் தலைவரே இப்பொழுது ஸுல்தானாக இருக்கிறார். இந்த நாடு இத்தாலியின் ஆதிக்கத்திலிருந்து 1951 டிசம்பர் 24ல் முஹம்மத் இத்ரீஸ் அல் மஹ்தீ அல் ஸனூஸீ என்பவரை ஸுல்தானாக்கிச் சுவாதீனமடைந்தது.

6. ஐக்கிய அரபுக் குடியரசு :

தலைநகர் கெய்ரோ. (அல் காஹிரா). பெரும்பாலான மக்கள் முஸ்லிம்கள். இருபது லட்சம் காப்த் (Copt) பிரிவுக் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள்.

7. ஸூதான் :

தலைநகர் கர்தூம். 1956 ஜனவரி ஒன்றில் இது ஆங்கிலேயரின் ஆதிக்கத்திலிருந்து சுவாதீனமடைந்தது. அரசாங்க மதம் இஸ்லாம். பெரும்பாலான மக்கள் முஸ்லிம்கள்.

8. எதியோபியா : *(அபிஸீனியா)*

தலைநகர் அத்திஸ் அபாபா. இதன் தலைவர் ஒரு கிறிஸ்தவ அரசர். பாதி மக்கள் முஸ்லிம்கள், கிழக்கு, வட மேற்குப் பாகங்களில் வசிக்கிறார்கள். அவர்கள் அண்டை முஸ்லிம் நாடான ஸோமாலியாவுடன் சேர்ந்துகொள்ள விரும்புகிறார்கள்.

9. ஸோமாலியா :

தலைநகர் மஹதிசு. எல்லா மக்களும் ஸுன்னி முஸ்லிம்கள். ஷாஃபியீ பிரிவைச் சேர்ந்தவர்கள். இங்கு காதிரியா, ஸாலிஹீயா, அஹ்மதீயா, ரிபாயீயா முதலான சகோதரத்துவ தரீகாக்கள் உள்ளன. அரசாங்க மதம் இஸ்லாம். இது ஒரு குடியரசு.

10. கெனியா :

தலைநகர் நய்ரோபி. இங்கு அதிகமாக முஸ்லிம்கள் கிடையாது. இந்திய முஸ்லிம்களும் இருக்கிறார்கள்.

11. உகாந்தா : (Uganda)

தலைநகர் கம்பலா. இங்கு கணிசமான முஸ்லிம்கள் இருக்கிறார்கள்.

12 ரவான்தா : (Ravanda)

தலைநகர் கீகாலி. இங்கு முஸ்லிம்கள் அதிகமாகக் கிடையாது.

13. புருன்தி : (Brundi)

தலைநகர் உஸாம்புரா. இங்கு முஸ்லிம்கள் அதிகமாகக் கிடையாது.

14. தாங்கனீகா : (Tanganyika)

தலைநகர் தாருஸ் ஸலாம். கடற்கரையோரத்திலும், உள்நாட்டு நகரங்களிலும் இருபது லட்சம் முஸ்லிம்கள் இருக்கிறார்கள்.

15. மதகாஸ்கர் :

தலைநகர் தனநாரிவீ. கடற்கரையோரங்களில் முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள்.

16. ஜான்ஜிபர் : (Zanzibar)

தலைநகர் ஜான்ஜிபர். நாடு முழுமையும் முஸ்லிம் மக்களே வாழ்கின்றனர். இந்தியாவிலிருந்து இந்துக்களும் முஸ்லிம்களும் குடியேறியுள்ளார்கள்.

17. தென் ஆப்பிரிக்கா யூனியன் :

தலைநகர் : கேப் டவுன், பிரிட்டோரியா, பிலம்பான்டைன் என்னும் மூன்று நகரங்கள். இங்கு இந்தியாவிலிருந்து குடியேறிய முஸ்லிம்கள் பரவலாக வசிக்கிறார்கள்.

18. ரொடீஸியா : (தெற்கு)

தலைநகர் ஸால்ஸ்பெரி. ஒரு சில முஸ்லிம்கள் இந்தியாவிலிருந்து சென்று வசிக்கிறார்கள்.

19. ரொடீஸியா : (வடக்கு)

தலைநகர் லுஸாகா. ஆசியாவிலிருந்து குடியேறிய மக்களில் பெரும்பாலோர் முஸ்லிம்கள்.

20. காங்கோ : (பிராஸாவில்லே)

தலைநகர் பிராஸாவில்லே. இங்குள்ள நகரங்களில் பத்தாயிரம் மாலிகி பிரிவைச் சேர்ந்த முஸ்லிம்கள் வசிக்கிறார்கள்.

21. காங்கோ: (லபோல்டு வில்லே)

தலைநகர் லபோல்டு வில்லே. இரண்டு காங்கோக்களும் குடியரசுகள். ஒன்றரை இலட்சம் முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள்.

22. காமரூன் :

தலைநகர் யவன்தே. வட பாகம் முழுமையிலும் முஸ்லிம்களே வாழ்கிறார்கள்.

23. சாத் : (Chad)

இந்த குடியரசின் தலைநகர் லாமின். பெரும்பாலான மக்கள் முஸ்லிம்கள்.

24. நைஜர் :

குடியரசின் தலைநகர் நியாமி. பெரும்பாலான மக்கள் முஸ்லிம்கள். திஜானியா, காதிரியா. ஸனூஸி ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தவர்கள்.

25. நைஜீரியா :

தலைநகர் லாகோஸ். வடபாகத்தில் பெரும்பாலும் முஸ்லிம்கள் வசிக்கிறார்கள். கிழக்குப்பாகத்தில் முஸ்லிம்கள் பரவலாக இருக்கின்றனர்.

26. தஹோமி :

நைஜீரியாவுக்கு மேற்கிலுள்ள இந்தக் குடியரசின் தலைநகர் போர்ட்டோ நோவோ. இங்கு மூன்று லட்சம் முஸ்லிம்கள் இருக்கிறார்கள்.

27. தோகோ :

இந்தக் குடியரசின் தலைநகர் லோமீன். இங்கு ஐம்பதாயிரம் முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள்.

28. கானு :

தலைநகர் அக்ரா. இது ஒரு குடியரசு. இதில் முஸ்லிம்கள் அதிகமாக இல்லை. 1960இல் ஜூலை ஒன்றும் தேதி சுவாதீனமடைந்து பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகளில் ஒன்றாக இருக்கிறது.

29. வோல்ட்டா :

இந்த குடியரசின் தலைநகர் அவ்கதூகூ. மாலீ, கானு ஆகிய இரண்டு குடியரசுகளுக்கு இடையில் இது இருக்கிறது. பெரும்பாலான மக்கள் முஸ்லிம்கள். 1960 ஆகஸ்ட் ஐந்தாம் தேதி இந்த நாடு சுவாதீன மடைந்தது.

30. ஐவரி கரை :

இந்தக் குடியரசின் தலைநகர் அபிஜான். இங்கு பெரும்பாலான முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள்.

31. லிபரியா :

தலைநகர் மன்ரோவியா. இந்த நாட்டில் முஸ்லிம்கள் அதிகமாக இல்லை. முஸ்லிம்களில் பெரும்பாலோர் வியாபாரிகள்.

32. ஸியரா லியோன் :

தலைநகர் ஃப்ரீ டவுன் (Free Town).

இதன் வடபாகத்தில் முஸ்லிம்கள் வசிக்கிறார்கள்.

33. மாலி :

இந்தக் குடியரசின் தலைநகர் பமாகோ. பெரும்பாலான மக்கள் முஸ்லிம்கள். இங்கு ஹுஸைனியா, காதிரியா, ஸனூஸி, ஹமல்லி, தரீகா-கோட்பாடுகள் உள்ளன. ஆப்பிரிக்காவின் இந்தப் பாகங்களில் தொடக்கத்திலிருந்தே இஸ்லாமியப் பிரச்சாரம் நடந்தது. பல அரசாங்கங்கள் தோன்றி மறைந்தன. ஹிஜ்ரி நான்காம் நூற்றாண்டின் இறுதியில் மராபிதாக்கள் இந்தப் பாகத்தை வென்றார்கள். இந்த நாட்டை ஆண்ட ஸுல்தான்களில் மன்ஸா மூஸா (கி. பி. 1307—1332) என்பவர் புகழ்பெற்றவர். அவருடைய சேனைகள் நைஜர் நதிப்பிரதேசத்தையும், திம்பக்தோவையும்

கைப்பற்றின. அவருடைய தூதர்கள் மொரோக்கோ நாட்டிலிருந்தார்கள். அவர் சரித்திரப் புகழ்பெற்ற ஹஜ் மக்கா தலயாத்திரை செய்தார். இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றுவோரில் சொங்காயி, பியோலா, மார்க்கா, கோஸோ காகோஸோ, முதலிய நீக்ரோ பிரிவுகள் உள்ளன. கி. பி. பன்னிரண்டாம் நூற்றுண்டில் இங்குள்ள பர்பர் தலைவர்கள் முஸ்லிம் ஆனர்கள். கி. பி. பதினைந்தாம் நூற்றுண்டில் சோனி அலி (கி. பி. 1464—1492) என்பவர் ஸுல்தானக இருந்தார். மன்ஸா மூஸாவைப் போன்று இவரும் புகழ் பெற்ற ஹஜ் - மக்கா தலயாத்திரை செய்தார். ஆனல், பதினன்காம் நூற்றுண்டின் இறுதியில் மொரோக்கோ ஸுல்தான்கள் இந்த நாட்டையும், கோவா அரசாங்கத்தையும் கைப்பற்ற முயன்றார்கள்.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் இப்பாகத்திலுள்ள ஆப்பிரிக்க நாடுகள்மீது பிரெஞ்சுராணுவம் படையெடுத்து வந்தது. அதை அல்ஹாஜ் உமர், ஸமோரி என்னும் இரண்டு வீரர்கள் தடுக்க முயன்றார்கள். ஆனல், அந்த நூற்றுண்டின் இறுதியில் பிரெஞ்சுக்காரர்கள் வெற்றியடைந்தார்கள். 1960 ஜூன்மாதம் மாலி என்னும் கூட்டரசு பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுச் சுவாதீனமடைந்து குடியரசாகிவிட்டது.

34. மாலவீ:

நியாஸா லாந்த் (Nyasa Land) என்பது இப்பொழுது மாலவீ என்று மாறிவிட்டது. இதன் தலைநகர் ஜம்பா. ஆப்பிரிக்காவின் கிழக்குக்கரையில் மத்திய பாகத்தில் ரொடீஷியாவுக்குக் கிழக்கில் இருக்கிறது. இதில் பதினைந்து லட்சம் மக்கள் முஸ்லிம்கள், ஆசியாவிலிருந்து வந்து குடியேறியவர்களில் பெரும்பாலார் முஸ்லிம்களே.

35. கெனீயா:

இதன் தலைநகர் நைரோபி. இந்த நாட்டில் கணிசமான முஸ்லிம்கள் பலவிடங்களில் பரவலாக வாழ்கின்றார்கள்.

பின் இணைப்பு–3.

ஆப்பிரிக்கா- ஒரு முஸ்லிம் கண்டம்

ஆப்பிரிக்கா என்னும் பெருநிலப் பகுதி ஒரு முஸ்லிம் கண்டம் என்றால் வியப்பாக இல்லையா? ஆனால், இது முற்றிலும் உண்மை. ஆப்பிரிக்காவின் ஜனத்தொகை இருபத்தேழு கோடியே முப்பது இலட்சம். அதில் பதினேழு கோடி மக்கள் முஸ்லிம்கள். அதாவது ஆப்பிரிக்காவின் மொத்த ஜனத்தொகையில் 62 சதவிகிதம் முஸ்லிம்களே காபிர்கள் 25 சதவிகிதமும், நாட்டுக் கிறிஸ்தவர்கள் 12 சதவிகிதமும் இருக்கிறார்கள். ஐ. நா. வில் அங்கம் வகிக்கும் முப்பத்தெட்டு ஆப்பிரிக்க நாடுகளில் முஸ்லிம் நாடுகள் இருபத்துமூன்று. குடியாட்சிக் கொள்கையுள்ள இக்காலத்திலே முஸ்லிம்களே பெரும்பான்மையாக வாழும் கண்டத்தை முஸ்லிம் கண்டமென்று ஏன் கூறலாகாது?

கி. பி. ஏழாம், ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டிலிருந்து இஸ்லாம் மார்க்கம் ஆப்பிரிக்காவில் ஒரு நாகரீக சக்தியாகச் சென்று பணியாற்றுகின்றது. கிறிஸ்தவர்களைப் போன்று முஸ்லிம்கள் ஆப்பிரிக்காவில் காலனி ஆட்சி செய்யவில்லை. மேலும். மிஷனெரி பிரச்சார ஸ்தாபனங்களும் முஸ்லிம்களிடம் கிடையாது. ஆனால், இஸ்லாத்தின் எளிய, தெளிவான கொள்கைகளும், ஒழுக்க நெறிகளும், ஆப்பிரிக்காவின் பழங்குடி மக்களை இஸ்லாத்தின்பால் ஈர்த்துக்கொண்டேயிருந்தன. இப்பொழுதும் அவர்களை இஸ்லாத்தில் சேரும்படி செய்கின்றன.

ஆனால், இரண்டு நூற்றாண்டுகளாக ஏராளமான பணச் செலவு செய்தபோதிலும், ஐரோப்பியக் காலனி ஆட்சியாளரின் உதவி இருந்தபோதிலும், கிறிஸ்தவப் பிரச்சாரம் நன்கு வெற்றிபெறவில்லையென்று கிறிஸ்தவப் பாதிரிமார்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

ஐரோப்பியக் காலனி ஆட்சியாளர் காலத்தில் கிறிஸ்தவப் பாதிரிமார்களே கல்வித்துறை இயக்குநர்களாக இருந்

தார்கள். அவர்களுடைய பாடசாலைகளில் படித்தோர் கிறிஸ்தவர்களாக்கப்பட்டு, அரசாங்க அலுவல்கள் கொடுக்கப்பட்டார்கள். எனவே இன்று சுவாதீனமடைந்துள்ள ஆப்பிரிக்க நாடுகள் சிலவற்றில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருந்தபோதிலும், மேல்நாட்டுக் கல்வி கற்ற கிறிஸ்தவர்கள் மூலமாக பாதிரிமார்களும், பழைய காலனி ஆட்சியாளர்களும் மறைமுகமாக ஆப்பிரிக்க நாடுகளில் தங்கள் ஆதிக்கத்தை நீடிக்க முயலுகின்றார்கள். உதாரணமாக பிரெஞ்சுக்காலனி ஆட்சியிலிருந்த தஹோமீ, வோல்டா, மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு ஆகிய மூன்று நாடுகளில் முஸ்லிம்களே பெரும்பான்மையாக இருந்தபோதிலும் ஆட்சி பீடத்தை பிரெஞ்சு மொழி பேசும் கிறிஸ்தவர்களே கைப்பற்றியுள்ளார்கள். அங்கு நடப்பது குடியாட்சியன்று. ஆனால், சர்வாதிகாரமும், நாஜி கொள்கையுமே. நைஜீரியாவில் 75 சதவிகிதம் முஸ்லிம்கள். ஆனால், அங்கும் இன்று ஆங்கிலேய அமெரிக்க, இஸ்ராயீல் உதவியால் கிறிஸ்தவர் ஆட்சி நடக்கிறது. அந்த நாடு சுவாதீனமடைந்த பிறகு முதலமைச்சராயிருந்த ஸர் அபூபக்ர் தவ்ஹா, பலேவா, அஹ்மத் பல்லா முதலிய பெருந்தலைவர்கள் நிலைத்திருக்க முடியவில்லை. ஆனால், காலனி ஆட்சி இறுதியில் இத்தகைய சின்னங்கள் அழிந்துவிடும். ஆப்பிரிக்காவில் படிப்படியாகக் குடியாட்சி வெற்றிபெறும் என்பதும், பிறகு அது ஒரு முஸ்லிம் கண்டம் எனக் கூறப்படும் என்பதும் உறுதி. இன்ஷா அல்லாஹ்.

ஸையித் இப்ராஹீம் எம். ஏ., எல். டி. எழுதிய நூல்கள்

1. திருமறையின் தோற்றுவாய் (குர்ஆன் சாரம்) 6-00
2. குர்ஆன் மணிமொழிகள் 1-00
3. அண்ணல் நபி 0-60
4. உத்தம நபி 1-00
5. (ஹதீஸ்) அண்ணல் நபி அருள்மணிகள் 6-00
6. நபிநாயகம் நல்லுரைகள் 0-75
7. பெருமானார் பொன்மொழிகள் 2-00
8 பாலர் ஹதீஸ் [illegible]

ஜீவிதங்கள்

9. அபூ பக்ர் (ரலி) 1-50
10. உமர் ,, 1-50
11. உஸ்மான் ,, 1-50
12. அலீ ,, 1-50
13. கதீஜா ,, 1-00
14. பாத்திமா ,, 1-50
15. ஆயிஷா ,, 1-75
16. பிலால் ,, 0-75
17. ஸல்மான் பார்ஸி ,, 0-75
18. காலித் பின் வலீத் ,, 1-50
19. உவைஸ் கரனீ 0-75
20. உத்தமர் உமர் (பின் அப்துல் அஜீஸ் 0-75
21. தளபதி தாரிக் (ஐரோப்பா வெற்றியாளர்) 0-75
22. ஸுல்தான் ஸலாஹுத்தீன் 1-00
23. ராபியா பஸரீ 0-75
24. மன்ஸூர் ஹல்லாஜ் 1-00
25. இமாம் அபூ ஹனீபா 0-75
26. இமாம் கஸ்ஸாலி 1-00
27. அப்துல் காதிர் ஜீலானி (கவ்துல் அஃலம்) 1-50
28 அலீ இப்னு ஸீனா (மருத்துவ மேதை) 0-75
29. இப்னு கல்தூன் (உலகவரலாற்று ஆசிரியர்) 0-75
30. ஸஹாபா (நாயகத்தோழர்) சிறப்பு 0-50
31. இக்பாலி[illegible] ம[illegible] [illegible]80
32. முஸ்[illegible] [illegible]00
33. இஸ்[illegible] அ[illegible] [illegible]-00

ஒழுக்கக் க[illegible]

34. நீதிக் கதைகள் 0-50
35. சிறு கதைகள் 0-35
36. ஒழுக்கக் கதைகள் 0-40
37. பாலர் கதைகள் 0-50
38. சிறுவர் அறிவுரைகள் 0-25
39. பாலர் அறிவுரைகள் 0-25
40. தியாகம்(ஜுனைத்பக்தாதீ) 0-60
41. இந்தியக் கதைகள் 0-75
42. நகைச்சுவைக் கதைகள் 1-00
43. இன்சுவைக் கதைகள் 1-00

இஸ்லாமிய வரலாற்றுக் கதைகள்

44. அரபு நாட்டுக் கதைகள் 0-75
45. பாரசீகக் கதைகள் 0-75
46. இஸ்லாமியக் கதைவிருந்து 0-75
47. முஸ்லிம் கதைக்கொத்து 0-50
48. இறைநேசர் முதல்பாகம் 0-40
49 ஷை 2-ம் பாகம் 0-40
50 இறைதூதர் 0-40
51. இஸ்லாம் வினவிடை I 0-35
52. ஷை II 0-35

இஸ்லாமிய வரலாறு

53. முஹம்மத் (ஸல்) பரிசு 3-00
மலிவுப் பதிப்பு 2-00
54. நாற்பெரும் கலீபாக்கள் 2-00
55. உமய்யாக்கள் 2-00
56. அப்பாஸிகள் முதற்பகுதி 2-00
57. ஷை இரண்டாம்பகுதி 2-75
58. ஆப்பிரிகாவில்முஸ்லிமாட்சி 3-00
59. ஐரோப்பாவில் முஸ்லிம் ஆட்சி 2-50
60. இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி I 3-50
61. ஷை II 3-50
62. துருக்கி 3-00
63. தென்கிழக்கு ஆசியா 3-00
64. ஈரான் 3-00

இம்பீரியல் அச்சகம், திருச்சி-8.